# போவான்:
# விசுவாசப் பயணம்

புரூஸ்
மெக்கன்சி

# யோவான்: விசுவாசப் பயணம்


1. யோவான் சவிசேஷத்திற்கு ஒரு அறிமுகம்
2. "நாங்களே கேட்டு"
3. "வார்த்தை தேவனாயிருந்தது" (1:1-13)
4. "வார்த்தை மாம்சமானார்" (1:14-18)
5. "இதோ,தேவ ஆட்டுக்குட்டி" (1:19-51)
6. "ஒரு திருமணம் நடைபெற்றது" (2:1-11)
7. "உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம்" (2:12-22)
8. "நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்" (3:1-36)
9. ஜீவனுள்ள தண்ணீர் (4:1-42)
10. சமாரியர்கள் மத்தியில் வாழ்தல் (4:6-18)
11. "உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" (4:46 ? 54)
12. "நீ சோஸ்தமாக வேண்டுமென்று ரும்புகிறாயா?" (5:1-18)
13. "பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருக்கிறார்" (5:19-47)
14. ராஜாவாயிருக்கும்படி வற்புறுத்தப்பட்டவர் (6:1-15)
15. "இந்த அப்பத்தை புசியுங்கள்" (6:16-69)
16. "ஒரு பிரிவினை எழுந்தது" (7:1-53)
17. "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" (8:1-11)
18. "நான் இருக்கிறேன்"
19. "தேவனுடைய கிரியைகள் வெளிப்படும் பொருட்டு" (9:1-5)
20. "இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" (9:6-41)
21. நல்லமேய்ப்பன் (10:1-21)
22. "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (10:22-42)
23. "இயேசு கண்ணீர் விட்டார்" (11:1-44)
24. "நானே உயிர்தெழுதலாய் இருக்கின்றேன்" (11:1-44)
25. "நான் விசுவாசிக்கிறேன்" (11:1-57)
26. "உம்மில் நான் அன்புகூருகிறேன்" என்று தேவனிடத்தில் நீங்கள் எவ்விதம் கூறுகின்றீர்கள்?(12:1-8)
27. சீர்திருத்தும் சிலுவை (12:32)
28. "உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" (12:9-50)
29. இயேசு அவர்களுடைய பாதங்களைத் கழுவினார் (13:1-17)
30. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" (14:1-31)
31. "நானே திராட்சச்செடி" (15:1-16:4)
32. "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்" (16:1-33)
33. "பிதாவே, வேளை வந்தது" (17:1-26)
34. "நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" (18:1-19:16)
35. "அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்" (19:1-42)
36. "நான் கர்த்தரைக் கண்டேன்" (20:1-31)
37. "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" (21:1-25)

# யோவான் சுவிசேஷத்திற்கு ஒரு அறிமுகம்

*டோனால்டு குத்ரீ அவர்கள், தமது புதிய ஏற்பாட்டு அறிமுகம் என்ற நூலில், யோவான் சுவிசேஷத்தின் பின்னணியைப் பற்றிய விஷயங்களுக்குச் சுமார் நூறு பக்கங்களை ஒதுக்கியுள்ளார். குத்ரீயின் முடிவுரைகளுடன் அவ்விஷயங்கள் பற்றிய ஒரு தொகுப்புரை பின்வருமாறு.*

*டாக்டர். எடி குளோர், பதிப்பாசிரியர்*

## யோவான் சுவிசேஷத்தின் தனிச்சிறப்பான பண்புகள்

*பழைய ஏற்பாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ள இடம்.* இயேசுவின் வரலாறானது பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை, பண்புகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே விரித்துரைக்கப் படுகின்றது. நிக்கொதேமு, இயேசுவை ஒரு யூத மத போதகராகக் கண்டார் (3:2), மற்றும் இயேசு தம்முடைய எதிராளிகளுக்குப் பதில் அளிக்கப் பழைய ஏற்பாட்டு வேத வசனங்களைப் பயன்படுத்தினார் (10:34). நல்ல மேய்ப்பர் என்ற பழைய ஏற்பாட்டு உருவகம் போலவே இயேசுவைப்பற்றிய யோவானின் முன்னிருத்தலில் மோசேயும் ஆபிரகாமும் மிக முக்கியமாக உருவகமாகின்றனர்.

> ... பழைய ஏற்பாட்டை நமது கர்த்தர் பயன்படுத்தியதும், சுவிசேஷ ஊழியரின் சுய விளக்கங்களும் ஆகிய இவ்விரண்டுமே வேத வாக்கியங்கள் யாவும் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகின்றன என்று யூகிப்பவைகளாக உள்ளன. அவரே பழையதின் நிறைவேற்றமாக உள்ளார், மற்றும் இந்த உண்மையானது சுவிசேஷக் கருத்துக்களை விளக்கியுரைப்பதில் நம்மை வழி நடத்த வேண்டும்.[1]

*பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய போதனை.* யோவான் சுவிசேஷமானது பரிசுத்த ஆவியானவரைப் பற்றி, மற்ற சுவிசேஷங்களை விட அதிகமாகக் கூறுவதாக உள்ளது. நிக்கொதேமுவுடனான இயேசுவின் கலந்துரையாடலில் பரிசுத்த ஆவியானவர் தனிச் சிறந்த அங்கமாய் உள்ளார், மற்றும் அதிகாரம் 14 முதல் 17 வரையுள்ள இயேசுவின் பிரியாவிடை உரையில் அவர் (ஆவியானவர்) இன்னும் அதிகத் தனிச் சிறப்பான அங்கமாக உள்ளார். இந்த சுவிசேஷத்தில் பதிவு செய்யப்

பட்டுள்ள இயேசுவின் வார்த்தைகள், அவர் பிதாவினிடத்திற்கு ஏறிச் செல்லும் பொழுது அவருடைய சீஷர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளனாக வருவார் என்பதைத் தெளிவாக்கின.

*மாபெரும் ஆய்வுக் கருத்துக்களின் மேலாண்மை.* மாபெரும் ஆய்வுக் கருத்துக்களின் மேம்பாட்டினால் இந்த சுவிசேஷம் பண்பு படுத்தப் படுகின்றது என்பதை உணர்ந்தறிவதற்கு ஒருவர், "வாழ்வு," "ஒளி," "அன்பு," "விசுவாசம்," "நானே" மற்றும் "சத்தியம்" போன்ற வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் மட்டுமே குறிப்பிடலாம். இவைகளில் சில மற்ற சுவிசேஷங்களிலும் இருப்பினும், யோவான் சுவிசேஷத்தில் இவை பெறுகின்ற சிறப்பான கவனிப்புக்கு இணையாக இவைகள் மத்தேயு, மாற்கு அல்லது லூக்கா சுவிசேஷங்களில் கவனிப்புப் பெறுவதில்லை.

*இயக்கத்தின் ஒப்பீடான குறைபாடு.* இந்த சுவிசேஷத்தின் பெரும் பகுதியானது இயேசு என்ன கூறினார் என்பதற்கு ஒப்புக் கொடுக்கப் பட்டிருப்பதால், இயேசு செய்தவைகள் பற்றி மிகக் குறைவான விஷயங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இயக்கம் என்பது முற்றிலும் இல்லாமல் போய் விடவில்லை, மற்றும் யோவான், மற்ற எந்த சுவிசேஷங்களைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கையில் (இயேசுவின்) எருசலேம் பயணங்களைக் குறிப்பிடுகின்றார்.

*இயேசுவைப் பற்றிய சித்தரிப்பு.* சுவிசேஷங்களின் ஒப்புவமையுடன் ஒப்பிடும் பொழுது, யோவான் சுவிசேஷமானது "மனுஷ குமாரன்" என்ற இயற்பெயரைக் குறைவாகவே பயன்படுத்துகின்றது, இது இயேசுவுக்கும் பிதாவுக்கும் உள்ள உறவைப் பற்றி அதிகம் கூறுகின்றது மற்றும் யூதர்களின் மேசியா என்ற வகையில் இயேசுவின் பணிப் பொறுப்பைத் தெளிவாக்கு கின்றது. இயேசுவின் மனிதத்துவம் பற்றியும் யோவான் மிக அதிகம் கூறியுள்ளார். கானாவில் இயேசு குடும்பப் போராட்டத்தில் இருந்தது பற்றிய குறிப்புக்களை நாம் பெறுகின்றோம். நாம் அவரை, சீகாரின் கிணற்றருகில் களைப்படைந்தவராக, பெத்தானியில் ஆழ்ந்த கலக்கமுற்று, அழுதவராக, மற்றும் சிலுவையில் தாகமுற்றவராகக் காண்கின்றோம்.

## எழுதியவர் பற்றிய விபரம்

இந்த சுவிசேஷத்தை எழுதியவர் தாம் பதிவு செய்த நிகழ்ச்சிகளுக்குக் கண்ணால் கண்ட சாட்சியாக இருந்தார் (1:14). இவர் பன்னிருவரில் ஒருவராகவும் "இயேசுவுக்கு அன்பாயிருந்தவரும்" (21:20, 24) ஆவார் என்பது உறுதி.

இதன் எழுத்தாளர் யூதர்களின் முறைமைகள் பற்றிய விரிவான அறிவு கொண்டிருந்தார் (2:6; 7:37; 18:28; 19:31-42). இவர் யூதர்களின் வரலாறு (ஆலயம் கட்டுதல், மக்களின் அரசியல் ரீதியான எண்ணப் போக்கு, பிரதான ஆசாரியரின் பணிமுறை மற்றும் தொடர்நிலை முதலியவை)களுக்கு நன்கு பழக்கப்பட்டவராகவும் இருந்தார். அத்துடன், எருசலேம் மற்றும் கிராமப் புறங்களில் பலஸ்தீனப் புவியியலுக்கும் இவர் பழக்கமானவராயிருந்தார். குத்ரீக் பின்வருமாறு முடிவு செய்தார்:

*இது [யோவான் சுவிசேஷம் அப்போஸ்தலரான யோவானால் எழுதப்பட்டது என்ற நம்பிக்கை] ... உள்ளான ஆதாரங்களில் அதிகம் ஆதரவு பெற்றுள்ள பாராம்பரியக் கண்ணோட்டமாக உள்ளது. இதற்கு எதிர்ப்புகள் அதிகம் இருப்பினும் கூட, இதைத் தீர்மானமாகப் பொய்ப்பிக்கக் கூடிய ஆதாரம் எதுவும் இருப்பதில்லை என்றும் கூடக் கூறப்படலாம். இந்தக் கண்ணோட்டமானது இதன் சிரமங்கள் அனைத்துடனும் கூட வேறு எதைக் காட்டிலும் அதிகமான உண்மைகளுக்குக் காரணமாக உள்ளது.*[2]

## நோக்கம்

வேதாகமத்தில் உள்ள ஒரு நூலின் நோக்கம் என்பது அதனைப் படிப்பவர்களால் விவாதிக்கப்படுகின்ற ஒரு விஷயமாகவே எப்பொழுதும் உள்ளது. யோவான் சுவிசேஷமானது தனது நோக்கத்தை எடுத்துரைப்பதில் தனிச் சிறந்து விளங்குகின்றது. இதன் எழுத்தாளரே பின்வருமாறு எழுதினார்:

*இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (20:30, 31).*

தொடர்புடைய மற்ற பல விஷயங்கள் இந்த சுவிசேஷத்தில் கூறப் பட்டிருப்பினும், விசுவாசத்தை உருவாக்கி, மேம்படச் செய்வதே இந்த எழுத்தாளரின் நோக்கமாக நாம் காண்பது எல்லாவற்றிற்கும் மையமாக நிலைத்திருக்க வேண்டும்.

## தேதி (எழுதப்பட்ட காலம்)

இரண்டாம் நூற்றாண்டின் கடைசிக் கால் பகுதியில் யோவான் சுவிசேஷம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று ஒரு காலத்தில் பல கல்வியாளர்கள் விவாதித்திருந்தனர். இது, அப்போஸ்தலரான யோவானல்ல ஆனால் வேறொருவர்தான் இதை எழுதினார் என்று ஆக்குவதுடன், இதை எழுதியவர் இயேசுவின் ஊழியத்தை கண்ணால் கண்ட சாட்சியாக இருப்பதில்லை என்றும் மறைமுகமாய் உணர்த்து வதாயிருக்கும். இருப்பினும், 1934ல், இங்கிலாந்தின் மான்செஸ்ட்டர் என்ற இடத்தில் உள்ள ஜாண் ரைலன்ட்ஸ் நூலகத்தில் (எகிப்திலிருந்து 1920ல் இங்கிலாந்திற்குக் கொண்டு வரப்பட்ட) யோவான் 18:31-33, 37, 38 வசனங்கள் அடங்கிய பாப்பிரஸ் துணுக்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த எழுத்தானது இரண்டாம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில், அநேகமாக கி.பி. 125ம் ஆண்டு வாக்கில் எழுதப்பட்டது என்று வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். இது, கி.பி. 125ம் ஆண்டிலேயே யோவான் சுவிசேஷமானது தொலைதூரத்தில் நைல் நதியினருகில் இருந்த ஒரு

மாகாணத்தில் அறியப்பட்டிருந்தது என்று அர்த்தப்படுத்துகின்றது. இதன் மூல நூலானது இதற்கு எவ்வளவு காலம் முன்னதாக எழுதப்பட்டது என்பது உறுதியாக அறியப்படாத நிலையில் உள்ளது.

ஏற்கனவே யூகிக்கப்பட்டபடி அப்போஸ்தலரான யோவான் இதை எழுதியிருப்பாரென்றால், அநேகமாக இது கி.பி. 90 மற்றும் 100க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம்.

## யோவான் சுவிசேஷத்திற்கும் கருத்து ஒற்றுமை சுவிசேஷங்களுக்கும் இடையில் உள்ள உறவு

### ஒற்றுமைகள்

கருத்து ஒற்றுமை சுவிசேஷங்களில்[3] உள்ளது போலவே யோவான் சுவிசேஷத்திலும், யோவான் ஸ்நானனுடைய வரலாறு உள்ளது. எல்லா சுவிசேஷங்களும் இயேசு சீஷர்களை அழைத்ததையும், ஐயாயிரம் பேருக்கு உணவளித்ததையும் பதிவு செய்துள்ளன.

மற்ற சுவிசேஷங்களுடன் கூட யோவான் சுவிசேஷமும் எருசலேமில் இயேசுவின் வெற்றிப் பிரவேசம் பற்றிக் கூறுகின்றது. அது போலவே, பேதுருவின் மறுதலிப்பை அனைத்தும் உள்ளடங்குகின்றன. எதிர்பார்க்கப் படுகின்றபடியே, இவை நான்கும் இயேசுவை விசாரணை செய்தல், சிலுவையில் அறைதல் மற்றும் அவரது உயிர்த்தெழுதல் ஆகியவை பற்றிய தகவல்களை அளிக்கின்றன.

### வேற்றுமைகள்

இயேசுவின் வம்ச வரலாறு, கன்னியிடம் பிறப்பு, அவர் ஞானஸ்நானம் பெறுதல் மற்றும் சோதிக்கப்படுதல், மறுரூபமாகுதல், எல்லா உவமைகள், கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்துதல், கெத்சமெனேயில் துன்பம் மற்றும் விண்ணகம் செல்லுதல் என்ற கருத்து ஒற்றுமை சுவிசேஷங்களில் காணப்படும் விபரங்கள் யோவான் சுவிசேஷத்தில் இருப்பதில்லை. முகவுரை, இயேசு தொடக்க காலத்தில் யூதேயாவில் செய்த ஊழியம், நிக்கொதேமுவுடன் மற்றும் சமாரியப் பெண்ணுடன் அவரது கலந்துரையாடல், லாசருவை எழுப்புதல் மற்றும் சீஷர்களின் கால்களைக் கழுவுதல் போன்ற யோவான் சுவிசேஷத்தின் கூறுகள் கருத்து ஒற்றுமை சுவிசேஷங்களில் இருப்பதில்லை. கருத்து ஒற்றுமை சுவிசேஷங்களில் இல்லாத நீண்ட போதனைப் பகுதிகள் பல யோவான் சுவிசேஷத்தில் அடங்கியுள்ளன. இயேசுவுடனான இருபத்தியேழு நேர்முக விவாதங்கள் சுவிசேஷங்களில் எடுத்துரைக்கப்படுகின்றன, அவைகளில் பெரும்பான்மை யானவை யோவான் சுவிசேஷத்திலேயே காணப்படுகின்றன.[4]

யோவான் சுவிசேஷத்திற்கும் மற்ற சுவிசேஷங்களுக்கும் இடையில் நாள் வரிசை முறையில் முக்கிய வேறுபாடுகள் உள்ளன. இயேசுவின் வெளியரங்கமான ஊழியம் கலிலேயாவில் நடப்பதாக விவரித்து, அவர்

சிலுவையில் மரிக்க எருசலேம் சென்ற ஒரு பயணம் மட்டும் கருத்து ஒற்றுமை சுவிசேஷங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது என்பது ஒரு முதன்மையான வேறுபாடாக உள்ளது. இதற்கு நேர்மாறாக, யோவான் சுவிசேஷத்தில் எருசலேமுக்குச் சென்ற பல பயணங்கள் விவரிக்கப் படுகின்றன *(2:13; 5:1; 7:10).*

---

குறிப்புகள்

[1]Donald Guthrie, *New Testament Introduction*, rev. ed. (Downers Grove, Ill.: InterVarsity Press, 1970), 238. [2]Ibid, 264. [3]"மத்தேயு, மாற்கு, லூக்கா என்ற முதல் மூன்று சுவிசேஷங்களும் கருத்து ஒற்றுமை சுவிசேஷங்கள், என்று அழைக்கப்படுகின்றன, ஏனெனில் அவை கிறிஸ்துவின் வாழ்வை ஒரு பொதுவான கண்ணோக்கத்தில் வரையறுத்துக் கூறுகின்றன ..." (W. Graham Scroggie, *A Guide to the Gospels* [Old Tappan, N.J.: Fleming H. Revell Co., 1962], 83). [4]Robert G. Gromacki, *New Testament Survey* (Grand Rapids, Mich.: Baker Book House, 1974), 135.

---

## *வேதாகமத்தைப் படித்தல்*

• பயணிகள் மற்றும் ஆய்வுப் பயணிகள் ஆகியோருக்கிடையில் முக்கியமான அடிப்படை வேறுபாடு உள்ளது. பயணிகள் விரைவாய்ப் பயணம் செய்து, ஆர்வத்திற்குரிய தெளிவான இடங்களை மட்டும் உற்றுக் கவனிக்க நிற்கின்றனர். இதற்கு மாறாக, ஆய்வுப் பயணிகள் தாங்கள் கண்டறிய முடிகின்ற எல்லாவற்றையும் ஆராய்ச்சி செய்ய நேரம் எடுத்துக் கொள்கின்றனர். நம்மில் பலரும் வேதாகமத்தை, பயணிகள் போன்ற வகையில் வாசித்து விட்டு, பிறகு நமது வேத தியான நேரங்கள் பலனற்ற வைகளாய் உள்ளன என்று முறையிடுகின்றோம். நாம் வேதாகமத்தை ஆராய்ச்சி செய்ய நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். மேற்பரப்பிற்கு கீழே நாம் செல்லுகையில் முக்கியமான சத்தியங்கள் தோற்றம் அளிக்கும்.

• வேதாகமத்தை இரண்டு வழிமுறைகளில் மட்டுமே படிக்க முடியும்: (1) உங்கள் மனதில் தீர்மானித்த கருத்துக்களைக் கொண்டு அதைப் படித்தல், அல்லது (2) உங்கள் மனதில் கருத்துக்களை ஏற்படுத்தும்படி அதைப் படித்தல்.

# ‘‘நாங்களே கேட்டு’’

ஸ்டீஃபன் கோவே அவர்கள், “உயர்ந்த செயல் வலிவுள்ள மக்களின் 7 பழக்கங்கள்’’ என்ற தமது நூலில், ‘‘சிந்தையில் முடிவுடன் தொடங்குங்கள்” என்று தமது வாசகர்களை உற்சாகப்படுத்தினார். இந்தக் கருத்தானது வெகுவான எளிமையும் மற்றும் ஆழமான ஆழ்ந்தறிவும் உடையதாகும். கோவே அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> செயல் வலை, வாழ்வின் சுறுசுறுப்புத் தன்மை ஆகியவற்றினால் பிடிக்கப்பட்டு கடினமாக, வெற்றி ஏணியானது தவறான சுவருக்கெதிரே சாய்த்து வைக்கப்பட்டுள்ளது என்பதை மட்டுமே கண்டறியவதற்காக இன்னும் கடினமாக உழைத்து அந்த ஏணியில் ஏறுவது, என்பது மிகவும் நம்புதற்கரிய வகையில் சுலபமானதாக உள்ளது.[1]

அவர் தொடர்ந்து பின்வருமாறு எழுதினார்:

> நாம் மிகவும் சுறுசுறுப்பானவர்களாயிருக்கலாம், நாம் மிகவும் திறமையானவர்களாயிருக்கலாம், ஆனால் நாம் சிந்தையில் முடிவுடன் தொடங்கினால் மட்டுமே நாம் உண்மையிலேயே செயல் விளைவுள்ளவர்களாகவும் இருப்போம்.[2]

தமது வாசகரை அவருடைய அல்லது அவளுடைய சொந்த சவ அடக்கத்தைக் கண்ணோக்கும்படி கேட்பதன் மூலம் கோவே அவர் தமது கருத்தை ஆழமாகப் பதியச் செய்தார். (முழுக்காட்சியும் அவ்வளவாய் சோர்வை உண்டாக்காதபடி மிகச் சமீபத்தில் அதை அவர் ஒரு சாட்சி யளிக்கும் இரவு விருந்துக்கு மாற்றியுள்ளார்!) அந்த சவ அடக்கத்தில் கலந்து கொள்ள வந்திருப்பவர்கள் மத்தியில் நான்கு மனிதர்கள் பேசுவதற்காக நடந்து வருவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். முதலாவது வருபவர் உங்கள் குடும்பத்தின் நெருங்கிய உறுப்பினராய் இருக்கின்றார். இரண்டாமவர் உங்கள் நெருங்கிய நண்பர்களில் ஒருவராக இருக்கின்றார். மூன்றாமவர் உங்கள் உடன் பணியாளராக இருக்கின்றார், மற்றும் கடைசி பேச்சாளர் நீங்கள் ஆராதிக்கும் சபையின் உறுப்பினராயிருக்கின்றார். அவர்கள் உங்களைப் பற்றி என்ன கூற முடியும் என்று நீங்கள் நம்பிக்கையாய் இருக்கின்றீர்கள்? அவர்கள் என்ன கூற வேண்டுமென்று நாம் விரும்புகின்றோமோ அதுவே நாம் வாழும் வழிக்கு நம்மை நெறிப்படுத்தும் கொள்கையாக இருக்க வேண்டும் என்று கோவே அவர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றார். நமது வாழ்வின் முடிவைப் பற்றிக் கற்பனை செய்வதன் மூலம் நாம் இன்று வாழ்வதற்கு மிகச் சிறந்த முறையில் நம்மைத்

*தயார் செய்து கொள்ள முடியும்!*

*யோவான் சுவிசேஷத்தைப் பற்றிய நமது பாடத்தை நாம் தொடங்குகையில், இதே செயலைச் செய்ய நாம் விரும்புகின்றோம்: சிந்தையில் முடிவுடன் தொடங்குதல். அதிர்ஷ்டவசமாக, இந்த சுவிசேஷத்தின் கவனமும் இலக்கும் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது, மற்றும் யோவான் 4:39-42 வசனப் பகுதியானது நாம் இப்பாடத்தில் எதை நோக்கிச் செல்லுகிறோம் என்பதைச் சித்தரிக்கின்றது.*

## இயேசுவும் சமாரியப் பெண்ணும்

*யோவான் 4ல், இயேசுவும் அவரது சீஷர்களும் இஸ்ரவேலின் தெற்குப் பகுதியான யூதேயாவை விட்டு, அதன் வடக்குப் பகுதியான கலிலேயாவை நோக்கிச் சென்றனர். இந்த இரு பகுதிகளையும் சமாரியா என்ற மாகாணமானது இடை நின்று பிரித்தது. அங்கு வாழ்ந்த மக்களை யூதர்கள் சந்தேகத்துடனும் இகழ்ச்சியுடனும் நோக்கினர், எனவே கவனம் நிறைந்த யூதர்கள் அப்பகுதியைத் தவிர்ப்பதற்குச் சாத்தியமான யாவற்றையும் பெரும்பாலும் செய்வது வழக்கமாயிருந்தது. இருப்பினும், இயேசுவும் அவரது சீஷர்களும் சமாரியாவின் வழியாகப் பயணம் செய்தனர். அவர்கள் யாக்கோபின் கிணறு இருந்த இடம் என்று அறியப்பட்ட நிலப்பகுதிக்கு வந்தபொழுது மிகவும் களைப்புடனும் பசியுடனும் இருந்தனர். சீஷர்கள், அருகில் இருந்த சீகார் என்ற ஊரில் உணவு வாங்கி வருவதற்காகச் சென்றிருக்க, இயேசு அவ்விடத்தில் (கிணற்றினருகில்) ஓய்வெடுக்க அமர்ந்தார். அங்கு அவர் தனிமையில் இருக்கையில், அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு போவதற்காக ஒரு பெண் அங்கு வந்தாள். இதைத் தொடர்ந்து இயேசுவுக்கும் இந்தப் பெண்ணுக்கும் இடையில் நடந்த உரையாடலின்போது, விசுவாசப் பயணமானது சமாரியாவில் தொடங்கிற்று!*

*அந்த உரையாடலானது அப்பெண்ணின் தனிப்பட்ட வாழ்க்கைக்குத் திரும்பிய பொழுது, இயேசு அசாதாரணமானவர் என்பதை அந்த சமாரியப் பெண் உணர்ந்தறிந்தாள். அவளிடத்தில் அவர், "நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டு வா" (4:16) என்றார். அந்தப் பெண் தனக்குக் கணவர் இல்லை என்று அவரிடம் கூறினாள். அதற்கு இயேசு, "எனக்குப் புருஷன் இல்லை என்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய்'' என்று பதில் அளித்தார் (4:17, 18). அப்பொழுது அந்தப் பெண், "ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்" என்று அறிக்கையிட்டாள் (4:19).*

*ஆராதனை, வர இருந்த மேசியா, மற்றும் யூதர் - சமாரியர் பிரச்சனை போன்ற தலைப்புக்களில் கலந்தாலோசனை செய்யும் வகையில் இயேசுவும் இந்தப் பெண்ணும் தங்கள் உரையாடலைத் தொடர்ந்தனர். இயேசுவின் சீஷர்கள் திரும்பி வந்த பொழுது, இந்தப் பெண் இயேசவைத் தான் எதிர் கொண்டதைப் பற்றி மக்களுக்கு அறிவிப்பதற்காக (தனது தண்ணீர்க்*

குடத்தைக் கூட கிணற்றண்டையிலேயே வைத்து விட்டு!) நகருக்கு விரைந்தோடினாள். அவள், "நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ? என்றாள்" (யோவா. 4:29). இவ்வாறாக அவள் மற்றவர்களையும் விசுவாசப் பயணத்தைத் தொடங்கச் செய்தாள்.

## இயேசுவும் சமாரியர்களும்

சீகாரின் மனிதர்கள் யாக்கோபின் கிணற்றண்டையில் வந்த பொழுது அந்தப் பெண் அவர்களிடம் கூறியிருந்த யாவற்றினிமித்தமாக, அவர்கள் ஏற்கனவே இயேசுவின்மேல் ஓரளவு விசுவாசம் கொண்டிருந்தார்கள் (4:39). இதன் விளைவாக தங்களிடத்தில் வந்து தங்க வேண்டுமென்று, "அவர்கள் அவரை வேண்டிக் கொண்டார்கள்.'' (இங்குள்ள தொடர்வினைச் சொல்லானது ''வேண்டி'' என்ற வினைச் சொல்லுக்கு அழுத்தமுள்ள செயல்பாட்டை வலியுறுத்துவதைக் கவனியுங்கள்.) இயேசு அதை ஒப்புக் கொண்டு அங்கு இரண்டு நாள் தங்கினார். "அவருடைய உபதேசத்தினி மித்தம் இன்னும் அநேகம் பேர் விசுவாசித்து" (யோவா. 4:41) என்ற விளைவு ஏற்பட்டது. சமாரியர்களிடம் இயேசுவைப் பற்றிக் கூறிய பெண்ணிடத்தில் அந்தச் சமாரிய மனிதர்கள் கூறிய கூற்று இந்நிகழ்ச்சியின் முடிவுரையாக உள்ளது. அவர்களுடைய வார்த்தைகள் நமக்கு விசுவாசப் பயணத்தின் சாலை வரைபடம் ஒன்றை அளிக்கின்றது: "உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்" (4:42). முதலில் அவர்கள் "அந்த ஸ்திரீயினுடைய வார்த்தை யினிமித்தம் ... விசுவாசமுள்ளவர்களானார்கள்'' (4:39), ஆனால் பிறகு அவர்கள் "அவருடைய உபதேசத்தினிமித்தம் ... விசுவாசித்தார்கள்" (4:41)! இரண்டாம் நிலை விசுவாசமாகத் தொடங்கியிருந்ததானது இயேசு என்று அழைக்கப்பட்டவருடனான சொந்த அனுபவத்தின் காரணமாக முதிர்ச்சியடைந்தது!

## இயேசுவும் நாமும்

ஏறக்குறைய நாம் அனைவருமே விசுவாசப் பயணத்தை நாம் தொடங்கிய காலத்தில் நமது (விசுவாச) நிலையைக் காட்டிலும் அதிக பலமும் உறுதியும் கொண்ட விசுவாசமுடையவராயிருந்த யாரோ ஒருவருடைய பின்னால் தான் பயணம் தொடங்கியிருப்போம். பலருக்கு இது நமது பெற்றோரின் விசுவாசமாக உள்ளது. நாம் அவர்களின் உறுதிப்பாட்டையும் அர்ப்பணிப்பையும் கண்டு, அவர்கள்மீது நாம் கொண்டுள்ள மதிப்பின் காரணமாக, அவர்கள் நம்புவது உண்மையாய் இருக்கவேண்டும் என்று யூகிக்கின்றோம். மற்றவர்களுக்கு இது ஒரு நண்பரின் விசுவாசத்தினால் ஏற்பட்டதாக இருக்கலாம். நாம் சந்தேகங்களினால் நிறையப்படும் வேளைகளில், நாம் நமது நண்பர்களின்

தைரியத்தையும் உறுதிப்பாட்டையும் பற்றிக் கொள்ளுகின்றோம். இன்னும் சிலருக்கு, விசுவாசமானது மதிப்பிற்குரிய ஒரு பிரசங்கியார், ஒரு சிறப்பான போதகர் அல்லது ஒரு அன்பார்ந்த இளையோர் ஊழியர் என்பவரின் வாழ்வு மற்றும் வார்த்தைகள் ஆகியவற்றின்மீது கட்டப் பட்டதாக இருக்கலாம்.

இன்னொருவரின் முதுகின் மேல் தனது பயணத்தைத் தொடங்குகின்ற விசுவாசமானது மோசமானதாக இருப்பதில்லை! இது இயல்பானதாகவும் வழக்கமானதாகவும் - எதிர்பார்க்கப்பட வேண்டியதாகவும், விசேஷமாய் அதற்காக பெற்றோரால் ஜெபிக்கப்பட வேண்டியதாகவும் - உள்ளது. இவ்வகையான விசுவாசமானது ஆழமானதாகவும் பலம் பொருந்திய தாகவும் வளர்ந்து முதிர்ச்சியடையத் தவறும்பொழுது மட்டுமே பிரச்சனை எழும்புகின்றது. கடைசியில், மற்ற ஒருவருடைய விசுவாசத்தின்மீது கட்டியெழுப்பப்பட்ட விசுவாசமானது திருப்தியளிக்காததாகி விடுகின்றது மற்றும் இது முதிர்ச்சியடைந்த வாழ்வின் சுமையைத் தாங்க முடியாததாகவும் ஆகி விடுகின்றது.

இவ்வகையில், விசுவாசம் என்பது குழந்தைகளின் ஊஞ்சல் போன்றதாக உள்ளது. எனது மகள்கள் மிகச் சிறுமிகளாய் இருந்த பொழுது, அவர்கள் இருவருமே, ஊஞ்சல் கட்டி அதில் விளையாடுவதில் அதிகம் மகிழ்வடைந்தார்கள். அவர்களின் தாய் சமையலறையில் சமைத்துக் கொண்டிருக்கும் பொழுதோ அல்லது நான் எனது மேஜையில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதோ, அவர்கள் மனநிறைவுடன் ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அந்த வயதில் அவர்களுக்குத் தேவைப்படுமளவுக்கு குழந்தை ஊஞ்சலானது பலமுள்ளதாக இருந்தது. அது அவர்களைப் பாதுகாப்பாகவும், உறுதியான காவலுடனும், வசதியாகவும், கதகதப்பாகவும் மற்றும் மகிழ்ச்சியாகவும் வைத்துக் கொண்டது. இருப்பினும், இப்பொழுது எனது மகள்கள் பதினோரு மற்றும் பதிமூன்று வயதுடையவர்களாய் இருக்கின்றார்கள். இன்றைய நாட்களில் அவர்கள் தங்களுடைய பழைய ஊஞ்சலில் உட்கார முயற்சி செய்தால், அது மிகவும் மாறுபட்ட ஒரு அனுபவமாய் இருக்கும்! அவர்கள் அதில் பொருந்தி வரமாட்டார்கள் மற்றும் அந்தத் ஊஞ்சல் முழுவதும் அநேகமாக அறுந்து போய் விடும். இது அந்தத் ஊஞ்சல் மோசமானது என்றாகின்றதா? நிச்சயமாகவே அப்படியில்லை! அவர்கள் அதில் உட்கார முடியாத அளவுக்கு வளர்ந்து விட்டார்கள், மற்றும் இப்பொழுது அவர்கள் தங்களுடைய (உடலின்) எடையைத் தாங்குவதற்கு இன்னும் அதிக உறுதியான ஒன்று அவர்களுக்குத் தேவைப்படுகின்றது.

விசுவாசமும் இதைப் போன்றதுதான். முதலில் மற்றவர்களின் விசுவாசத்தின்மீது கட்டப்பட்ட ஒரு விசுவாசமானது வாழ்வில் நாம் எதிர் கொள்ளும் எல்லாப் பிரச்சனைகளின் சுமையையும் தாங்குவதற்குப் போதுமானதாக உள்ளது. இருப்பினும், நம்மை வாழ்வு முழுவதிலும் சுமந்து செல்வதற்கு அதிக உறுதியான விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய காலம் ஒன்று வருகின்றது. அப்படிப்பட்ட காலத்தில், இயேசுவை நாம் நேரடியாக எதிர்கொண்டதன் மூலமும், அவரைப் பற்றிய நமது சொந்த

உறுதிப்பாட்டின் மூலமும் கட்டப்பட்ட விசுவாசம் நமக்கு அவசியமாகின்றது. ஒரு கல்லூரியின் சபையில் நான் செய்கின்றது போன்ற ஊழியத்தில், பல இளைஞர்கள் கடுமையான ஒழுக்கச் சோதனைகளுக்கு ஆளாவதை நான் காண்கின்றேன். இன்றைய உலகில் நேர்மையாகவும், தூய்மையாகவும் மற்றும் தெளிந்த புத்தியுடனும் நிலைத்திருத்தல் என்பது ஒரு சவாலாகவே உள்ளது. இளைஞர்கள் இந்த சோதனைகளைத் தங்கள் பெற்றோரிடமிருந்து பெற்ற இரண்டாம்தர விசுவாசத்தைக் கொண்டு மட்டும் எதிர்நோக்கினால், அவர்கள் பெரிய இடர்ப்பாட்டிற்குள்ளா கின்றார்கள். அவர்கள் முதிர்வுள்ள போராட்டங்களைச் சந்திக்கின்ற வேளையில், இயேசுவின்மீது அவர்கள் இன்னும் அதிக முதிர்ச்சியான விசுவாசத்தைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகின்றது.

இளம் வயதின் அலைக்கழிக்கப்பட்ட தண்ணீரைக் கடந்து வந்த பிறகும் கூட கடினமான தீர்மானங்கள் மறைந்து போவதில்லை. பிற்கால ஆண்டுகளில் பலர் தங்கள் திருமணம் பற்றிய கடினமான பிரச்சனைகளை எதிர்கொள்ளுவார்கள். “மரணம் நம்மைப் பிரிக்கும் மட்டும்” என்பது “நடைமுறை இறுக்கமாகும் வரைக்கும்” என்று அர்த்தப்படுகின்ற ஒரு உலகில், திருமணத்தில் நாம் நிலைத்திருக்க சமூகத்தில் உற்சாகப்படுத்துதல் அவசியமாகின்றது. கடினமான வேளைகளில் திருமண(பந்த)த்தைக் காத்துக் கொள்வதற்கு இரண்டாம் தர விசுவாசத்தைக் காட்டிலும் அதிகமான ஒன்று தேவைப்படுகின்றது. சபையானது இதே போன்றதொரு சூழ்நிலையை எதிர் கொள்ளுகின்றது. புதிய ஏற்பாட்டின் நிருபங்களில்கூட நாம், சபைகள் எல்லாவற்றிலும் பிரச்சனைகள் இருந்தன என்பதற்கான குறிப்புகளை நாம் அடிக்கடி காண்கின்றோம். சபையில் உள்ள மக்களைக் குறித்து நாம் சலிப்படைந்து, எல்லாவற்றையும் விட்டு வெளிநடக்க மட்டும் விரும்புகின்றவர்களாய் இருக்கின்றோம். இரண்டாம்தர விசுவாசமானது கடினமான சூழ்நிலைகளில் பிரச்சனைகளைக் கையாளப் போதிய அளவு காலம் வரைக்கும் நம்மை நிலை நிறுத்தாது.

நாம் தோல்வியை எதிர்கொள்ளும்பொழுதும் முதிர்ச்சியான தனிப்பட்ட விசுவாசத்தின் முக்கியத்துவத்தைக் காண்கின்றோம். இந்த ஆண்டில் நான் எனது உயர்நிலைப் பள்ளியில் இருபதாம் ஆண்டு மறு ஒன்றிப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ள நம்பிக்கையாய் இருக்கின்றேன். எங்களது பத்தாம் ஆண்டு மறுஒன்றிப்புக் கூட்டத்தில், நாங்கள் யாவரும் உயர்நிலைப் பள்ளியை விட்டு வெளி வந்திருந்த அந்த முதல் பத்து ஆண்டுகளில் குறிப்பிடத் தக்க தோல்விகளை எதிர்கொண்டிருந்ததாகக் காணப்பட்டது. தோல்வி என்பது நமது வாழ்வின் தவிர்க்க இயலாத ஒரு பாகமாக உள்ளது, மற்றும் தோல்விகளை நாம் எவ்விதம் எதிர்கொள்ளு கிறோம் என்பதுதான் நாம் எவ்வாறாகிறோம் என்பதில் அதிகம் செயல் படுவதாக உள்ளது. இரண்டாந்தர விசுவாசமானது நமது தோல்விகளைக் கையாளுவதற்குச் சிறிதளவே உதவுகின்றது.

சுதந்தரிக்கப்பட்ட ஒரு விசுவாசம் என்பது சற்று காலத்திற்குச் சரிப் பட்டிருக்கலாம். அது நாம் நாடவும் கற்கவும் வளரவும் முக்கியமான பங்களிக்கின்றது. நாம் முதிர்ந்த நிலையிலுள்ள உலகத்தை எதிர்

கொள்ளுகையில், மற்றும் வாழ்க்கையில் புயல்கள் வீசத் தொடங்குகையில், நாம் எங்கு நிற்கிறோம் என்பதையும் அங்கு நாம் ஏன் நிற்கின்றோம் என்பதையும் அறிந்திருத்தல் நலம் அளிக்கும்.

## யோவான் சுவிசேஷமும் நீங்களும்

பலமான, தைரியமான, அதிகம் தனிப்பட்ட முறையிலான விசுவாசத்தை நாம் பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைப் பதற்காக யோவான் சுவிசேஷம் எழுதப்பட்டது. இந்த சுவிசேஷ நூலின் முடிவுப் பகுதிக்கு அண்மையில், இது எழுதப்பட்டதற்கான ஆவியானவரின் நோக்கத்தை இதன் எழுத்தாளர் விளக்கப்படுத்தினார்:

> *இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவா. 20:30, 31).*

நமது படிப்பின் ஓட்டத்தில் நாம் காணப் போகின்றபடி, யோவான் எழுதிய இவ்விசுவாசமானது இயேசு தேவனுடைய குமாரன் என்ற உரிமைகோருதல்களை உண்மை என்று ஏற்றுக் கொள்ளுவதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. இது அவர் தம் வாக்குத்தத்தங்கள் குறித்து உண்மையுள்ளவர் என்று நம்புவதையும், மற்றும் அவர் நம்மைத் தாங்கி மேல் நிறுத்த முடியும் மற்றும் அதைச் செய்வார் என்று அறிந்து நமது வாழ்வின் முழு பாரத்தையும் அவர் மீது வைப்பதையும் உள்ளடக்குவதாக இருக்கின்றது. இந்த சுவிசேஷ நூல் முழுவதிலும், வேதாகம ரீதியான விசுவாசம் எது மற்றும் எது அல்ல என்பதை யோவான் கவனமாய் விளக்கியுரைத்து, போலிகள் எல்லாவற்றையும் தவிர்க்கும்படி நம்மை அழைக்கின்றார். நமது சொந்த விசுவாசத்தை நாடுவதில் நாம் சமாரியர்களைப் பின்பற்றும்படி நம்மை இடித்துரைப்பது போல இந்தப் புத்தகத்தில் விசுவாசத்தைப்பற்றி தொண்ணூற்று எட்டு முறை குறிப்பிடப் பட்டுள்ளது. நாம் விரைவில் காணப் போகிறபடி, விசுவாசப் பயணமானது சுலபமுமல்ல அல்லது சொகுசானதுமல்ல. மனக்கவலை உண்டாக்கும் கேள்விகள் எதிர்கொள்ளப்பட்டாக வேண்டும், மற்றும் விலையேறப் பெற்ற தீர்மானங்கள் ஏற்படுத்தப்பட்டாக வேண்டும். பயணமானது என்ன ஒரு விலைக்கும் தகுதியுடையதாக உள்ளது, ஏனெனில் தேவகுமாரனான இயேசுவை கிறிஸ்து என்று நாம் தனிப்பட்ட முறையில் விசுவாசித்தல் என்பதே இதன் விளைவாக உள்ளது, அவரில் நமக்கு நித்திய ஜீவன் இருக்கின்றது!

## முடிவுரை

C. S. லூயிஸ் அவர்களின் “நார்னியாவின் நாட்குறிப்புகள்” என்ற நூலின்

தொடக்கத்தில், இரண்டாம் உலகப் போரில் குண்டு வீசுதலின் போது இலண்டன் நகரில் இருந்து கிராமப் புறத்தில் இருந்த ஓரளவு பாதுகாப்பான இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பிள்ளைகளின் குழு ஒன்றைப் பற்றிக் கூறுகின்றது. அந்தப் பிள்ளைகள் ஓடியாடுவதற்கும் மற்றும் தூண்டித் துருவுவதற்கும் பல அறைகள் கொண்டிருந்த பெரிய இல்லம் ஒன்றில் வாழச் சென்றனர். ஒரு நாள் அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கையில் லூசி என்ற சிறுமி ஒரு பெரிய சுவர் அலமாரிக்குள் புகுந்தாள். அவள் அதன் பின்புறமாய்ச் சென்ற பொழுது அது காட்டுப் பகுதியை நோக்கித் திறந்திருக்கக் கண்டாள். அவள் தொடர்ந்து அதில் நடந்து சென்ற பொழுது விரைவிலேயே பனியில் தான் நடப்பதை உணர்ந்தறிந்தாள். சுவர் அலமாரிக்குள் நடந்து சென்றதினால் அவள் நார்னியாவின் நிலப் பகுதியினுள் நுழைந்ததை அவள் பிறகுதான் உணர்ந்தறிந்தாள்.

யோவான் சுவிசேஷமும் இதைப் போன்றதேயாகும். முதலில் இது இயேசுவைப் பற்றியும் மற்றும் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு சில மக்களைப் பற்றியும் கூறுகின்ற புத்தகமாகவே தோன்றுகின்றது: கிணற்றினருகே இயேசுவும் சமாரியப் பெண்ணும், இயேசுவும் பிறவியிலேயே பார்வையின்றி இருந்த ஒரு மனிதரும், இயேசுவுடன் கானாவூர்த் திருமணத்திற்கு வந்திருந்த விருந்தினர்களும். இருப்பினும் இந்த வரலாறுகளை நாம் வாசித்து மற்றும் படிக்கையில் பெரும் வியப்புக்குரிய சில விஷயங்கள் நடக்கின்றன: நாம் ''சுவர் அலமாரிக்குள்'' புகுந்து, இயேசுவுடன் முகமுகமாய் நிற்பவர்களாக நம்மை நாமே காண்கின்றோம்! அங்கு அவர் கூறுவதைக் கேட்டு, அவரைக் கவனித்து, மற்றும் அவருடன் உரையாடி, மனிதகுலத்திற்கு அறியப் பட்டுள்ளவைகளிலேயே மிகவும் முக்கியமான மற்றும் உணர்வுப்பூர்வமான பயணத்தை - விசுவாசப் பயணத்தை நாம் மேற்கொள்ளுகின்றோம்!

நாம் ஒன்றாக இப்பாடத்தைப் படிக்கையில், நீங்கள் முதலில் ஒரு உறுதிப்பாட்டினை மேற்கொள்ளும்படியாகவும், பிறகு ஒரு இலக்கை அமைத்துக் கொள்ளும்படியாகவும் உங்களுக்கு நான் அறைகூவல் விடுக்கின்றேன். இயேசுவின் வாழ்வினுள் ஆழமாய் உற்றுநோக்கத் துணிந்து, கலங்க வைக்கும் கேள்வியான "எனது வாழ்வில் நான் அவர் மீது நம்பிக்கை வைக்க முடியுமா?'' என்ற கேள்வியை நீங்கள் உங்களிடமே கேட்டுக் கொள்வதுதான் உறுதிப்பாடாக உள்ளது. இயேசுவைப் பற்றிய மற்றவர் களின் வார்த்தைகளைக் காட்டிலும் உங்கள் நேரடியான எதிர்கொள்ளு தலின் அடிப்படையிலான ஒரு விசுவாசத்தை வளரச் செய்வதென்பது நான் உங்களுக்கு அறைகூவல் விடுவிக்கும் இலக்காக உள்ளது. நீங்கள் பதிமூன்று வயதுடையவராயிருப்பினும் அல்லது தொண்ணித்து மூன்று வயதுடைய வராயிருந்தாலும், நீங்கள் இன்னமும் கிறிஸ்தவராகாதிருப்பினும், அல்லது அறுபது ஆண்டுகளாக கிறிஸ்தவராய் இருந்திருப்பினும், இந்த உறுதிப் பாடும் இலக்கும் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் உள்ளன! உங்கள் வாழ்வின் மிகவும் முக்கியமான பயணமான இந்த விசுவாசப் பயணத்தில் நீங்கள் எஞ்சி நிற்கும் எங்களுடன் இணைந்து கொள்வீர்களா? இந்த அறைகூவலைப் பற்றி நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கையில், பின்வரும்

*பாடலின் ஜெபம் நிறைந்த வார்த்தைகளைப் பற்றித் தியானியுங்கள்:*

> *எங்கள் கண்களைத் திறவும் கர்த்தாவே, இயேசுவை நாங்கள்*
> *காண விழைகிறோம், அவரை அடைந்து,*
> *அவரைத்தொட்டு, அவரில் நாங்கள் அன்புகூருகிறோம் என்று*
> *கூற வேண்டுமே.*
> *எங்கள் செவிகளைத் திறவும், கர்த்தாவே, உற்றுக் கவனிக்க*
> *எங்களுக்கு உதவும்,*
> *எங்கள் கண்களைத் திறவும், கர்த்தாவே, இயேசுவை நாங்கள்*
> *காண விழைகிறோம்.*[3]

---

*குறிப்புகள்*

[1]Stephen Covey, *7 Habits of Highly Effective People* (New York: Simon & Schuster, 1989), 98. [2]Ibid. [3]"Open Our Eyes, Lord," Bob Cull. Copyright 1976 by Maranatha! Music. (Administered by The Copyright Company, Nashville, Tenn.) All rights reserved. International copyright secured. Used by permission.

---

## *நீங்கள் அடித்தளத்தில் வாழ்கின்றீர்களா?*

*ஹோல்மன் ஹன்ட் என்பவரின் புகழ் பெற்ற சித்திரமான "உலகின் ஒளி" என்ற ஓவியத்தில், தாழ்ப்பாளானது கதவின் உட்புறத்தில் இருக்கும். முதன் முதலாக அதைக் கண்ணோக்கிய விமர்சகர் ஒருவர், தவறாயிருந்த தாழ்ப்பாளை நோக்கி ஓவியரின் கவனத்தைத் திருப்பினார். அந்த ஓவியர், கதவானது மனிதனைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும், கிறிஸ்து தட்டும் பொழுது மனிதன் தன்னைத் திறக்க வேண்டும் என்றும் கூறினார்.*

*ஒரு சிறுபையன் அப்படத்தைக் கண்ட போது, தனது தந்தையிடம், "அப்பா, அவர்கள் ஏன் இயேசுவை உள்ளே அனுமதிக்கவில்லை?" என்று கேட்டான். அதற்கு அந்தத் தந்தை "எனக்குத் தெரியவில்லை" என்று பதில் அளித்தார். ஒரு கணப் பொழுதிற்குப் பிறகு, அந்தப் பையன், "அப்பா, அவர்கள் ஏன் இயேசுவை உள்ளே அனுமதிக்கவில்லை என்று எனக்குத் தெரியும். அவர்கள் அடித்தளத்தில் வசிக்கின்றனர், அவர்களால் இயேசு தட்டுவதைக் கேட்க முடிவதில்லை" என்று கூறினான்.*

ஜோசப் A. ஸ்மித்

# “வார்த்தை தேவனாயிருந்தது” (1:1–13)

*அமெரிக்க நாட்டுச் செய்திகள் மற்றும் உலகத்தில் நடைபெற்றவை பற்றிய அறிக்கைகள்* என்ற பத்திரிகையின் சமீபத்திய இதழ் ஒன்றின் மேல் அட்டையானது “இயேசு யார்?” என்ற கேள்வியைக் கேட்டு, அதன் உட்பகுதியில் நாம் “கர்த்தர்” என்று அழைப்பவருடைய அடையாளம் பற்றி அது, கற்றறிந்த யூகங்கள் சிலவற்றை அறிவித்திருந்தது:

> கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், இயேசு ஒரு மந்திரவாதி மற்றும் குணப்படுத்துபவர் என்றும், மத மற்றும் சமூகப் புரட்சியாளர் என்றும், அடிப்படைவாத அமைதி நிலைத் தத்துவ ஞானி என்றும் பல விதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். இயேசு, கும்ரானில் சவக்கடல் சுருள்கள் சமூகத்தின் தலைவராக இருந்தாரென்றும், சிலுவையில் அறையப்பட்ட பிறகு உயிர் பிழைத்த அவர் இருமுறை திருமணம் செய்து கொண்டு மூன்று குழந்தைகளுக்குத் தகப்பனாயிருந்தார் என்றும் கூட ஒரு எழுத்தாளர் கோட்பாட்டை வரையறுத்திருக் கின்றார்.[1]

*வாரச் செய்தி* என்ற பத்திரிகையும் கூட 1994ல் இதே விதத்தில் மேலட்டைக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது, இது “இயேசுவின் மரணம்” பற்றியதாகும். அந்தக் கட்டுரைகளில் ஒன்று, “இயேசு கருத்தரங்கு” என்று அறியப்பட்டுள்ள விடுதலை இறையியலாளர்களான எழுபத்தி ஏழு கல்விமான்களின் குழுவின் மீது கவனம் செலுத்திற்று. இந்த மக்கள், இயேசு யாராயிருந்தார் மற்றும் அவர் உண்மையில் என்ன செய்தார் என்பதைப் பற்றிய தங்கள் கருத்துக்களை உரைப்பதற்காக ஆண்டிற்கு இருமுறை சந்திக்கின்றனர். சுவிசேஷங்களில் உள்ள குறிப்பிட்ட வசனப் பகுதிகளின் அதிகாரத்தன்மை பற்றி ஓட்டளித்தல் என்பது அவர்களின் மிகப் புதிரான நடவடிக்கைகளில் ஒன்று ஆகும். ஒவ்வொரு நபருக்கும் நான்கு பாசிமணிகள் தரப்படும்; ஓட்டுப் போட வேண்டிய வேளையின் பொழுது, அவர்கள் ஏற்புடைய பாசிமணியை இடுதல் என்பது அவர்களின் முடிவைத் தெரிவிப்பதாக உள்ளது. சிவப்பு நிறப் பாசிமணிகள் என்பவை குறிப்பிட்ட வசனப் பகுதி கூறுவதை இயேசு உறுதியாகவே உரைத்தார் அல்லது செய்தார் என்று அர்த்தப்படுத்துகின்றது. இளஞ்சிவப்பு நிறப் பாசிமணிகள்

என்பவை, குறிப்பிட்ட வசனப் பகுதி விவரிப்பதற்குச் சற்று நெருக்கமான ஒன்றை இயேசு உரைத்தார் அல்லது செய்தார் என்று அவர்கள் நினைப்பதைக் குறிக்கின்றன. சாம்பல் நிறப் பாசிமணிகள் என்பவை, குறிப்பிட்ட வசனப் பகுதி எடுத்துரைக்கின்றதை இயேசு உரைத்தார் அல்லது செய்தார் என்பதில் அவர்களுக்கிருக்கும் ஐயத்தைக் குறிக்கின்றன, மற்றும் கருப்பு நிறப் பாசிமணிகள் குறிப்பிட்ட வசனப் பகுதி அறிவிப்பதை இயேசு ஒருபோதும் நினைத்ததில்லை அல்லது அதைப் போன்ற எது ஒன்றையும் அவர் ஒருபோதும் செய்ததில்லை என்பதில் அவர்களின் உறுதிப்பாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. "இயேசு கருத்தரங்கின்" பெரும்பான்மையானவர்களுடைய பின்வரும் முடிவுகள் அதிர்ச்சியளிப் பதாக உள்ளன, நான் இவற்றைத் தேவதூஷணம் என்றே நம்புகின்றேன்!

> "வரலாற்று" இயேசு என்பவர் அற்புதங்கள் எதையும் செய்ததில்லை, ஆனால் ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் அன்பு ஆகியவற்றின் மூலமாக உணர்வுப்பூர்வமான சுகவீனங்களை எடுத்துப் போடுவதற்கான ஒரு வரமான குணமாக்குபவரின் தொடுகை ஒன்றை அவர் கொண்டிருந்தார். அவர் முற்றிலும் சமத்துவம் வாய்ந்துள்ள இறையரசு ஒன்றிற்காக - ஏதோ ஒரு நியாயத்தீர்ப்பு நாளில் இன்றி, இங்கு இப்பொழுதே இதற்காக - அழைப்பு விடுத்தார். ஆலயம் அல்லது அரசின் பதவிப்படிகளினுடைய தடையிடுதல் எதுவுமின்றி மக்கள் தேவனை நேரடியாக அனுபவிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். பஸ்காவின்போது எருசலேமில் அவர் ஒரு கலவரம் உண்டாகக் காரணமாயிருந்தார் என்பதற்காக அதிகாரிகள் ஏறக்குறையத் தற்செயலாகவே அவருக்குக் கொலைத் தண்டனை நிறைவேற்றினார்கள். பழைய மற்றும் புதிய மக்களான இயேசுவின் பின்பற்றாளர்களின் இருதயங்களில் அவர் வாழ்ந்தார், ஆனால் அவர் சரீரப்பிரகாரமாக மரித்தோரில் இருந்து எழுந்திருக்கவில்லை. சிலுவையிலிருந்து எடுக்கப்பட்ட அவருடைய உடலானது அநேக மாக, ஆழம் குறைந்த கல்லறையொன்றில் புதைக்கப்பட்டிருந்தது - அது நாய்களால் தின்னப்பட்டிருக்கலாம்.[2]

கல்வியாளர்களின் வட்டங்களில் மட்டுமின்றி, இல்லங்களிலும், காஃபி விற்பனை நிலையங்களிலும், மற்றும் தெரு முனைகளிலும் உலகம் முழுவதும் இயேசுவின் அடையாளத்துவம் என்பது இன்றைய நாட்களில் கலந்துரையாடலுக்கான ஒரு தலைப்பாக உள்ளது! அவர் "ஒரு மிகச் சிறந்த மனிதராக" இருந்தார் என்று ஒரு சிலர் கருத்துக் கொண்டுள்ளனர். அவர் ஒரு "தலைசிறந்த போதகர்" என்று மற்றவர்கள் நம்புகின்றனர். அவர் "வாழ்ந்தவர்களிலேயே மிக அதிக ஞானமுள்ள மனிதர்" என்பதில் இன்னும் சிலர் திருப்தி கொள்கின்றனர். உலகத்தின் பெரும்பாலான மக்கள் நாசரேத்தூர் இயேசு உண்மையில் யாராயிருந்தார் என்பது பற்றி ஏதேனும் சில கருத்துக் கொண்டுள்ளார்கள்.

பிறகு ஏன் நீங்களும் நானும் இந்தக் கலந்துரையாடல் எல்லாவற்றையும் மேற்கொள்ளுகின்றோம்? மேற்குறிப்பிட்ட செய்திப் பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்ட முடிவுகளுடன் மிகப் பலத்த வகையில் நான் கருத்து

வேறுபாடு கொண்டிருக்கும் வேளையில், மற்றும் இயேசுவைப் பற்றிய கருத்துக்களில் புகழ் பெற்றவையென்று கருதப்படும் பலவற்றைக் குறித்து நான் கவலையுள்ளவனாய் இருக்கையில், இயேசு இந்தப் பூமியில் வாழ்ந்திருந்து சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் கூட "இம்மனிதர் யாராயிருந்தார்?" என்று இன்னமும் அவரைப் பற்றி மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர் என்ற உண்மையினால் நான் கவரப் படுகின்றேன். அந்தக் கேள்விக்கு ஒரு திட்டவட்டமான பதிலைக் கொண்டு யோவான் சுவிசேஷம் தொடங்குகின்றது என்பதே நமக்கு நற்செய்தியாக உள்ளது!

## *வார்த்தை (1:1-5)*

''ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத் திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (1:1). இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம் பற்றி யோவான் ஒன்றும் கூறவில்லை. அதற்குப் பதிலாக, அவர் "ஆதியிலே" என்று தொடங்கினார். பழைய ஏற்பாட்டுடன் பழக்கப்பட்ட வாசகர்களுக்கு, இந்த வார்த்தைகள் ஆதியாகமம் 1:1ன் எதிரொலியாக ஒலிப்பது போல உள்ளன. இயேசுவை அடையாளப்படுத்தி விளக்குவதற்கு யோவான், ''ஆதியிலே" என்ற காலம் வரைக்கும் திரும்பிச் செல்ல வேண்டியதாக இருந்தது. உலகம் உண்டாவதற்கு முன்னமே, இயேசு இருந்தார்.

"வார்த்தை" என்பதே இயேசுவை அறிமுகப்படுத்துவதற்குப் பயன் படுத்தப்பட்ட சொல் விளக்கமாக உள்ளது. இயேசுவை "வார்த்தையாக உள்ளார்" என்பதை யோவான் 14 முதல் 18 வரையுள்ள வசனங்களுக்கு வரும் வரையிலும் கூறுவதில்லையென்றாலும், அவரை விவரிக்க அந்தச் சொல் விளக்கத்தை வசனம் 1 பயன்படுத்துகின்றது. கிரேக்க மொழியில் *logos* என்றுள்ள இந்த ''வார்த்தை'' என்பது யூத மற்றும் புறஜாதி வாசகர்களுக்குப் பலவகைப்பட்ட அர்த்தங்களைக் கொண்டிருந்தது. "வார்த்தை" என்பது உலகத்தை உண்டாக்கி நிலைநிறுத்துகின்ற தேவனு டைய செயல் வலிவான வல்லமை என்பதாக யூதர்கள் நினைத்தனர். இவ்வகையில்தான் "வார்த்தை" என்பது ஆதியாகமம் 1 மற்றும் 2 மற்றும் ஏசாயா 55:3, 11 ஆகிய வசனப்பகுதிகளில் பேசப்பட்டுள்ளது. "தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று'' (ஆதி. 1:3) என்பதை யூதர்கள் நினைவில் வைத்திருந்தார்கள். தேவனுடைய வார்த்தை என்பது வல்லமை நிறைந்ததாகவே இருக்கின்றது!

''வார்த்தை'' என்ற சொல் விளக்கத்தைப் புறஜாதியார் கேட்ட பொழுது, அவர்கள் அச்சொற்றொடரைக் கிரேக்கத் தத்துவ ஞானிகள் பயன்படுத்திய வகையில் சிந்தித்தார்கள். அது இந்த அண்டத்திற்குக் கட்டளையும் அர்த்தமும் கொடுத்த நபர்த்துவமற்ற சக்தி என்பதாக அவர்கள் கண்டனர். விளக்கவுரையாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளது போல, (அந்நாட்களில்) பெரும்பாலான மக்கள் "வார்த்தை" என்பதைப் பற்றி, (இந்நாட்களில்) நம்மில் பலர் "அணு உட்கருப் பிளப்பு" பற்றி சிந்திக்கின்ற

அதே விதமான வழிமுறையிலேயே சிந்தித்திருக்கலாம்.[3] அணுஉட்கருப் பிளப்பு பற்றி நாம் ஒரு விரிவான விளக்கம் அளிக்க முடிந்திராத நிலையில், அதை மதிப்பதற்கும், அதற்குப் பயப்படுவதற்கும் மற்றும் இயன்ற வரையில் அதைப் பற்றிப் பேசுவதற்கும் கூட, போதுமான அளவு அறிந்துள்ளோம்.

இயேசுவை அறிமுகப்படுத்த யோவான், "வார்த்தை" என்பதைப் பயன்படுத்திய பொழுது, அவர் ஏற்படுத்திய உரிமைகோருதல்கள் யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இருசாராருக்கும் திகைப்பூட்டுபவை களாயிருந்தன. இவர் யாரைப் பற்றி எழுதிக் கொண்டிருந்தாரோ, அந்த இயேசுவானவர் தேவனுடைய சித்தத்தின் வெளிப்பாடாக, அண்டத்தைப் படைக்கும் வல்லமைக்குப் பின்பலமாக, மற்றும் வாழ்வு யாவற்றையும் ஒன்றுகூட்டித் தாங்கக் கூடியவராக இருந்தார். கொலோசெயர் 1:15-17 பின்வருமாறு கூறுகின்றது:

> அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத் திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவை களுமாகிய சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத் துவங்களானாலும் துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.

"வார்த்தை" என்று யாரேனும் ஒருவர் குறிப்பிட்டதைக் கேட்ட பொழுது மக்கள் எதை நினைத்திருந்தாலும், யோவான் இவ்வகையில் தமது சுவிசேஷத்தைத் தொடங்கியிருப்பதில், தாம் விவரிக்கின்றவரைப் பற்றித் தைரியமான ஒரு உரிமைகோருதலை ஏற்படுத்தினார் என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. தொடர்ந்து விரைவிலேயே யோவான், "வார்த்தை தேவனிடத்திலிருந்தது," "வார்த்தை தேவனாயிருந்தது," "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று" மற்றும் "அவருக்குள் ஜீவன் இருந்தது" (1:1-4) என்று அறிவித்தார். மக்கள் இயேசுவை ஒரு மாபெரும் போதகர் அல்லது ஒரு ஞானமுள்ள மனிதர் என்று ஏற்றுக்கொள்ளும்படியாக யோவான் முயற்சி செய்து கொண்டிருந்த தில்லை; இயேசு தேவனுடைய இயல்பை உடையவராக, தெய்வீகத்துவ மானவராக இருந்தார் என்றே யோவான் அறிவித்துக் கொண்டிருந்தார்!

## வாழ்வின் ஒளி (1:6-8)

முதல் ஐந்து வசனங்களில் யோவானின் அதிர்ச்சியூட்டும் உரிமை கோருதலைத் தொடர்ந்து அவர் அடுத்த மூன்று வசனங்களை யோவான் ஸ்நானனைக் குறித்த ஒரு விவரித்தலுக்கு அர்ப்பணித்தார். நம்மில் பெரும்பாலோர், யோவான் ஸ்நானன் என்பவர் எலியா அல்லது எரேமியாவைப் போல ஒரு பெரிய தீர்க்கதரிசியாய் இருந்தார் என்று

நினைத்தாலும், முதல் நூற்றாண்டில் இருந்த மக்களில் பலர் அவரைப் பற்றி இன்னும் அதிகமாக நினைத்தனர். சிலர் அவரைக் கிறிஸ்து என்றுகூடத் தவறாக நினைத்தனர்! யோவான் ஸ்நானனே கூட தெளிவாக "நான் கிறிஸ்து அல்ல" (1:20) என்று எடுத்துரைக்குமளவுக்கு அவர் மிகப் புகழ் பெற்றவராகவும், மிகுந்த வல்லமையுடன் பேசுபவராகவும் இருந்தார்!

இப்படிப்பட்ட குழப்பத்தின் காரணமாக, இந்த சுவிசேஷத்தை எழுதியவர், யோவான் ஸ்நானனை ஒரு முக்கியமான சாட்சி என்றும், அவரை இயேசு என்று தவறாக நினைக்கலாகாது என்றும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்: "அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக் குறித்து சாட்சி கொடுக்க வந்தவனாயிருந்தான். உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (1:7, 8). யோவான் ஸ்நானனைக் குறித்து இதைக் கூறியதன் மூலம் எழுத்தாளர், எவரொரு வரும், மாபெரும் யோவான் ஸ்நானனமும் கூட இயேசு என்னவாக இருக்கின்றாரோ, அதன் அருகில் நெருங்கி வருவதில்லை என்று அறிவித்தார்! இயேசு ஒருவரே "வார்த்தையாக" இருக்கின்றார்!

## புறக்கணிக்கப்பட்ட ஒருவர் (1:9-11)

இயேசு தெய்வீக வார்த்தையாக இருக்கின்றார் என்றால், பலர் அவரைப் புறக்கணிக்கிறது ஏன்? "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (1:10, 11) என்று யோவான் எழுதிய பொழுது, அவர் இந்தப் பரிதாபகரமான நிலை பற்றி நேரடியாகப் பேசினார். உலகத்தைப் படைத்தவர், தாம் படைத்திருந்த உலகத்தினால் புறக்கணிக்கப்பட்டார்! யோவான் இயேசுவைக் குறித்துத் தாம் முன்பு ஏற்படுத்தியிருந்த உரிமைகோருதல்களைக் காத்துக்கொள்வதின் மூலம் உலகமானது இயேசுவை இடர்ப்பாட்டுக்குரிய வகையில் புறக்கணிப்பதை அனுமதிக்க மறுத்தார். இயேசுவைப் புறக்கணித்தல் என்பது இயேசுவின் மாபெரும் தன்மையைக் காட்டிலும் இந்த உலகத்தின் நிலைப்பாடு உயர்வானது என்று உரிமைகோருதலாகும் என்று யோவான் கூறினார். இருளான உலகம் அவருக்குத் தனது முதுகைத் திருப்பிக் காட்டியிருந்தாலும் கூட இயேசு "மெய்யான ஒளி"யாக (1:9) நிலைத்திருக்கின்றார்!

தாம் படைத்த உலகத்தால் இயேசு புறக்கணிக்கப்பட்டதானது, வேலையின் கடினமான ஒரு நாளில் இருந்து இல்லம் திரும்பிய ஒரு மனிதனைப் பற்றிய பின்வரும் உவமையைப் போன்றதாக உள்ளது:

> அவன் அந்த நாளின் வேலைகளினால் தொய்வுற்று, தனது வேலை முடிந்திருக்கக் கண்டு மகிழ்வடைந்து, இல்லத்தில் தன் குடும்பத்துடன் இருப்பதை எதிர்நோக்கிச் செல்கிறான். அவனது இல்லத்தை நெருங்குகையில் அவனது நடை விரைவாகிறது. அவன் தனது சட்டைப் பையில் தனது (இல்லத்தின்) சாவி இருக்கின்றதா என்று தொட்டுப் பார்க்கிறான், ஆனால் அது அங்கிருக்கவில்லை;

*எப்படியோ அதைத் தவற விட்டுவிட்டான். ஆனால் அது ஒன்றும் பெரிய விஷயமல்ல; குடும்பமானது இல்லத்தில் இருக்கிறது. எனவே அவன் முன் கதவு வரை சென்று, அழைப்பு மணியை ஒலிக்கின்றான். ஒன்றும் நடக்கவில்லை. ஒருவரும் வந்து அவனுக்காகக் கதவைத் திறக்கவில்லை. அவர்கள் அங்கு இருக்கின்றனர், மற்றும் அவன் அங்கிருப்பதை அவர்கள் அறிகின்றனர். பலகணித் திரையானது சற்றே ஒதுக்கப்பட்டு, அவன் நன்கு அறிந்துள்ள கண்கள் அவன் வெளியே இருப்பதைக் காண்கின்றதை அறிகின்றான். ஆனால் அவர்கள் அவனை வெளியே நிற்கும்படி விட்டு விட்டார்கள்.*[4]

குடும்பத்தலைவன் ஒருவன், தான் நேசித்து பராமரிக்கின்றவர்களால் இவ்விதமாக கண்டுகொள்ளாமல் புறக்கணிக்கப்படுதல் என்பது நினைத்துப் பார்க்க முடியாததாகும். இருப்பினும், இயேசு இவ்வுலகத்திற்கு வந்த பொழுது மிகச் சரியாக இதுபோன்றுதான் நடைபெற்றது.

## *மனிதரின் மீட்பர் (1:12, 13)*

யோவானுடைய நாடக பாணியான அறிமுகமானது புறக்கணிப்பின் வெறுக்கத்தக்க குறிப்புடன் முடிவடைவதில்லை. அதற்குப் பதிலாக, அது இரட்சிப்பின் நம்பிக்கை நிறைந்த குறிப்பொன்றுடன் முடிவடைகின்றது. எல்லாரும் இயேசுவுக்கு தங்கள் முதுகைத் திருப்பிக் கொள்ளவில்லை. யோவானின் வாசகர்கள் உட்படச் சிலர் நாசரேத்திலிருந்து வந்த அப்போதகரைப் பின்பற்றுவதை தேர்ந்து கொண்டிருந்தனர். “அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்” (1:12) என்று யோவான் அறிவித்தார். இதற்காகவே யோவானின் சுவிசேஷம் எழுதப்பட்டது. சிலர் கவனத்தோடு கேட்டு விசுவாசிக்க வருவார்கள் (20:31) மற்றும் விசுவாசித்து இயேசுவின் நாமத்தில் ஜீவனைப் பெறுவார்கள்!

## *முடிவுரை*

ஆதியில் இருந்த “வார்த்தை” பற்றிய இந்த அனைத்துக் கூற்றும் மற்றும் விசுவாசமும் நமது வாழ்வில் இன்னொரு வாரத்தின் வேலைக்காக திங்கள் கிழமையன்று செல்லுகையில் ஏதாவது மாறுதலை ஏற்படுத்துகின்றதா? நிச்சயமாகவே ஏற்படுத்துகின்றது! இது உலகத்தில் எல்லா மாறுபாட்டையும் ஏற்படுத்துகின்றது! இயேசு வெறும் மனிதராக மட்டும் இருப்பதில்லை. அவர் ஒரு மாபெரும் போதகராய், அல்லது ஒரு ஞானமுள்ள தீர்க்க தரிசியாய் அல்லது வல்லமை நிறைந்த நடத்துனராய் மட்டும் இருப்பதில்லை. அவர் தேவனாக இருக்கின்றார்! அவரை விசுவாசித்தல் என்பதை நாம் தேர்ந்து கொண்டால், விரைவிலேயே நாம், இயேசுவைப் போலக் குறிப்பிடத் தக்கவர் இவ்வுலகில் ஒருவரும் இல்லை என்பதையும், அவரைப் பற்றி அறிவது போன்ற முக்கியமான விஷயம் வேறெதுவும்

இவ்வுலகில் இல்லை என்பதையும் கண்டு பிடிப்போம்.

புகழ் பெற்ற கலாச்சாரத்தினால் நீர்த்துப் போகப் பண்ணப்பட்ட இயேசுவல்ல, ஆனால் யோவான் சுவிசேஷத்தின் இயேசுவே நம் இரட்சிப்புக்கென்று நம்மை அவரிடத்தில் வரும்படி அழைக்கின்றார். அவர் வெறும் மனிதராக மட்டுமே இருந்தால், இந்த அழைப்பு சிறு அர்த்தம் கொண்டதாகத் தான் இருக்கும். அவர் உண்மையாகவே மாபெரும் மனிதர் என்பது தவிர வேறொன்றுமில்லையென்றாலும் கூட, இந்த அழைப்பானது நாம் காணாது விடும்படியானதாகவே இருக்கும். அவர் தேவனுடைய தெய்வீக வார்த்தையாக இருப்பதால், அவருடைய இந்த அழைப்பை இலேசானதாக எடுத்துக் கொள்ள நம்மில் யாரும் துணிய முடியுமா?

> அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும், தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள் (1:12, 13).

---

குறிப்புகள்

[1]Jeffery L. Sheler, "Who Was Jesus?" *U.S. News & World Report* (20 December 1993): 62. [2]Russell Watson, "A Lesser Child of God," *Newsweek* (4 April 94): 53. [3]Leon Morris, *The Gospel According to John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 116. [4]Leon Morris, *Expository Reflections of the Gospel of John* (Grand Rapids, Mich.: Baker Book House, 1986), 11.

---

## அன்பு

ஒரு சிறுமி தனது சிறிய வலிய தோள்களில் தன்னுடைய பொம்மைகளை அணைத்துக் கொண்டு, தனது தாயைப் பேராவலுடன் நோக்கி, ''அம்மா, நான் இவைகளை அன்பு செய்கிறேன், அன்பு செய்கிறேன், மற்றும் அன்பு செய்கிறேன், ஆனால் இவைகள் ஒரு பொழுதும் பதிலுக்கு என்னை அன்பு செய்வதில்லை'' என்று கூறினாள். தேவனால் அன்புகூரப்பட்டு, அன்புகூரப்பட்டு மற்றும் அன்புகூரப்பட்டுள்ள மக்கள் அவரைப் பதிலுக்கு அன்புகூராத விஷயத்தில் இது எவ்வளவு உண்மையாக உள்ளது!

# “வார்த்தை மாம்சமானார்” (1:14-18)

முரண் தொடை என்பது ஒன்று மற்றொன்றுடன் முரண்பட்டு நிற்கும் இரு வார்த்தைகளின் சேர்க்கையாகும். “Oxymoron” என்ற வார்த்தையே ‘‘கூர்ந்த/சோர்ந்த’’ என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தைகளின் சேர்க்கையாகவே உள்ளது. இந்த இலக்கிய உபாயத்திற்கு, “கசப்பான இனிப்பு,” “பேருருக் கொண்ட சிற்றுரு” மற்றும் “கொடிய இரக்கம்” ஆகியவை ஒரு சில எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

இந்தத் தனி வகையான கட்டமைப்பே யோவான் 1:14-18ன் அடிப்படையாக உள்ளது. “ஆதியிலிருந்த வார்த்தையானது,” “தேவனிடத்தில் இருந்தது’’ என்றும் ‘‘தேவனாக இருந்தது’’ என்றும் யோவான் சுவிசேஷத்தின் முதல் பதிமூன்று வசனங்கள் அறிமுகப்படுத்துகின்றன. தேவனைப் பற்றிய மகத்துவமான உரிமைகோருதல்களை கேள்விப் படுவதில் நாம் பழக்கப்பட்டுள்ள விதத்தில் உள்ளது போலவே இந்த உரிமை கோருதல்கள் பற்றி நாம் ஏற்றுக் கொள்வதில் சிறிதளவே இடர்ப்பாட்டை நாம் கொண்டுள்ளோம். தெய்வீகம் மாம்ச வடிவெடுத்தது என்பதே யோவான் 1:14ல் அறிமுகப்படுத்தப்படும் “பிரச்சனையாக” உள்ளது. இயேசு யார் என்பதைப் புரிந்து கொள்வதன் தொடக்கமாக உள்ளது இந்த தேவன்/மாம்சம் என்பதே என்று விரைவிலேயே கூறப்படவுள்ளது.

### அவர் மாம்சமானார்

“அந்த வார்த்தை மாம்சமாகி ...” (1:14). இயேசுவை ஆதியிலிருந்தே உள்ள வார்த்தையாக, அவர் மூலமாகவே உலகத்தில் உள்ளவை யாவும் படைக்கப்பட்டதாக அறிமுகப்படுத்திய பிறகு, யோவான் 1:14ல் வார்த்தை மாம்சமாயிற்று என்ற அதிர்ச்சியூட்டும் உரிமைகோருதல் ஏற்படுத்தப் படுகின்றது. ‘‘மாம்சம்’’ என்பது இயேசுவைப் பற்றி விவரிக்கப் பயன் படுத்தப்படும் முனை மழுங்கிய, பூமிக்குரிய, முரட்டுத்தனமான, ஏறக்குறைய செப்பமற்ற மொழிநடையாக உள்ளது. இது, இயேசு 50 சதவிகிதம் மனிதத்துவத்திலும் 50 சதவிகிதம் தெய்வீகத்துவத்திலும் நிலைத்திருந்தார் என்று கூறாமல், 100 சதவிகிதம் மனிதத்துவத்தில் வந்தார் என்பதற்கு யோவான் கூறும் வழிமுறையாக உள்ளது. இயேசு மனிதத் துவத்தை முழுமையாக அனுபவித்தார். அவர் ஒரு குழந்தையாகப் பிறந்து, மனிதனாக வளர்ந்தார் மற்றும் அவர் பசி, தாகம், வேதனை, பாலியல் விருப்பம், கோபம் மற்றும் துக்கம் ஆகிய உணர்வுகளை அறிந்தார். இயேசு

முற்றிலும் மனிதரானார் என்று கூறுவது எப்பொழுதுமே பயபக்தியற்ற தன்மையின் எல்லையாக இருந்துள்ளது. எடுத்துக்காட்டாக, மரியாள் மற்றும் யோசேப்புடன் முன்னணையில் இயேசு (குழந்தையாகக்) கிடத்தப்பட்டுள்ளது போன்ற சித்திரம் ஒன்றை நீங்கள் காணும் பொழுது, குழந்தையைச் சுற்றியிருந்த துணியானது அழுக்காக்கப்பட்டிருக்குமே என்ற எண்ணம் எப்பொழுதாவது உங்கள் சிந்தையில் தோன்றியுள்ளதா? அவ்வாறு ஒரு கருத்தைக் கூறுவது கூட உங்களுக்குக் குற்றமாகத் தோன்றலாம், ஆனால் "மாம்சம்" என்ற சொற்றொடரானது இதைக் காட்டிலும் அதிகம் அதிகமானவற்றை மறைமுகமாக உணர்த்துகின்றது.

எடுத்துக்காட்டாக, இயேசு உண்மையிலேயே சோதிக்கப்பட்டார் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? இயேசு எப்பொழுதாவது தவறான விஷயத்தைச் செய்ய விரும்பினாரா? ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். யாக்கோபு, "அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக். 1:14, 15) என்று எழுதினார். இயேசு எப்பொழுதாவது "தமது சொந்த இச்சையினால் இழுக்கப்பட்டாரா?" நமது பிரதான ஆசாரியரான இயேசு, "எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப் பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்" (எபி. 4:15) என்று எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் கூறினார். பின்வரும் நமது கேள்வி இன்னும் நிலைத்துள்ளது: "பாவமற்ற கிறிஸ்து எப்பொழுதாவது தவறைச் செய்ய விரும்பினாரா?" "ஆம்!" என்பதே வேத வசனங்களில் மீண்டும் ஒலிக்கும் பதிலாக உள்ளது என்று நான் நம்புகின்றேன். எடுத்துக்காட்டாக, இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இரவில் கெத்சமெனே தோட்டத்தில் என்ன செய்ய விரும்பினார்? அவர், "பிதாவே, உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்" (லூக். 22:42). இது, இயேசுவானவர் பிதாவின் சித்தத்தைத் தவிர வேறு எதையோ செய்ய விரும்பினார் என்று எடுத்துரைப்பதில்லையா? அவர் பிதாவின் சித்தத்தை இன்னும் அதிகமாய்ச் செய்ய விரும்பினார் என்பதற்காக நாம் யாவரும் நன்றி நிறைந்தவர்களாய் இருக்க முடியும், ஆனால் இயேசு "மாம்சத்தில்" வந்தார் மற்றும் மாம்சத்தின் எல்லா சோதனைகளுடனும் அவர் போராடினார் என்ற உண்மையை நாம் கண்டு கொள்ளாமல் விட முடியாது.

இயேசு "கர்த்தரும் எஜமானருமாக" இருக்கின்றார் என்பது பற்றி நாம் மிகவும் அதிகமாகக் கேள்விப்பட்டுள்ளபடியால் இதை ஏற்றுக் கொள்வது என்பது நமக்கு மிகவும் கடினமாய் இருக்கலாம். இப்பொழுது அவரை முழுமையாக மனிதத்துவத்தில் காண்பது என்பது இதன் விளைவாக, அந்நியமானதாகவும் தேவ தூஷணமாகவும்கூட காணப்படலாம்! 1970களில் பல ஆண்டுகளாக ஒளிபரப்பப்பட்டு வந்த "வால்ட்டனின்" தொலைகாட்சி நிகழ்ச்சி ஒன்றில் இந்தப் பிரச்சனை பற்றிய விவரித்தல்

ஒன்றை நான் நினைவுக்குக் கொண்டு வருகின்றேன். ஒரு நிகழ்ச்சியில் ஜாண் பாய் வால்ட்டன் என்ற மூத்த மகன் ஒருவன் காதல் வசப்படுகின்றான். அவன் தனது இருதயத்தைக் கொள்ளைகொண்ட ஒரு அழகு மிகு மங்கையைச் சந்தித்திருந்தான். உணர்வெழுச்சி மிகுந்திருந்து, ஆயினும் இவையெல்லாவற்றினாலும் குழப்பமடைந்த ஜாண் பாய் சில ஆலோசனை பெறத் தன் தந்தையிடம் செல்கின்றான். அவன் அவரிடத்தில், “அப்பா, நீங்கள் எப்போதாவது காதல் வயப்பட்டதுண்டா?” என்று கேட்கின்றான். வேலை செய்து கொண்டிருந்த அந்தத் தந்தை தனது மகனைச் சற்று உற்று நோக்கி விட்டு, “இன்னும் அப்படித்தான் இருக்கிறேன்!” என்றார். முன்பு எப்போதைக்காட்டிலும் குழப்பமடைந்த ஜாண் பாய், தனது கேள்வியை மீண்டும் கேட்க முயற்சி செய்கின்றான். “இல்லை, ஒரு பெண்ணை நீங்கள் காதலித்ததுண்டா என்று நான் கேட்கிறேன்” என்றான். அதற்குத் தந்தை, “மகனே, உனது தாய் இந்தக் கேள்வியைப் பாராட்டுவாள் என்று நான் நிச்சயமாய்க் கூற முடியாது” என்று பதிலுரைத்தார்.

பிள்ளைகளுக்குத் தங்கள் தாயை ஒரு பெண் என்றோ அல்லது தங்கள் தந்தையை ஒரு ஆண் என்றோ நினைப்பது கடினமானதாக இருக்கலாம். தங்களின் பிள்ளைகளுக்கு அவர்கள் எப்பொழுதுமே பெற்றோர்களாக, கவனம் எடுப்பவர்களாக, கதாநாயகர்களாக மற்றும் எஜமானர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் காதல் வயப்பட்டார்கள் என்றோ அல்லது எதிர்ப்பாலினருடன் அவ்வகைக் குழப்பத்தினூடே செயல்பட்டார்கள் என்றோ அறிவது கற்பனைக்கு மிகவும் அதிகமானதாகவே இருக்கும்! இதே வகையில், இயேசுவின் மனிதத்துவத்தை ஏற்றுக் கொண்டு, அதே வேளையில் “வார்த்தை மாம்சமானார்” என்ற உண்மையை மதிப்பது என்பது கிறிஸ்தவர்களுக்குப் பெரும்பாலும் கடினமானதாகவே உள்ளது!

## அவர் தம்முடைய கூடாரத்தை நிறுவினார்

மாம்சமான வார்த்தை “நமக்குள்ளே வாசம் பண்ணினார்” (1:14) என்று யோவான் கூறிய பொழுது, அவரது மொழிநடையானது இன்னும் அழுத்தமாயிற்று. “வாசம் பண்ணினார்” என்ற வார்த்தையானது “கூடாரம் அமைக்க” அல்லது “ஒருவர் தம் கூடாரத்தை நிறுவ” என்ற நேரடியான அர்த்தம் கொண்டுள்ளது. இது, யாரோ ஒருவர் நமது அயலகம் வந்து நமக்குள்ளே குடியிருக்கத் தொடங்கினார் என்ற கருத்தைத் தெரிவிக் கின்றது. இயேசு இதையே செய்தார்! அவர் ஒரு சுருக்கமான பார்வை யிடலுக்காக வரவில்லை. அவர் குடிமாறி, தம்முடைய முகவரியை “பூமிக்கு” மாற்றிக் கொண்டு, வாழ்வின் அன்றாட வேலையில் தம்முடைய கரங்கள் கறைப்படக் கண்டார். நமக்குள் ஒருவராக இருத்தல் என்பது அவர் மனித குலத்திற்கு அளித்துள்ள மாபெரும் கொடைகளில் ஒன்றாக உள்ளது.

இயேசு வந்து, “நமக்குள்ளே வாசம் பண்ணினார்” என்ற உண்மையின் தலைச் சிறப்பானது ஒரு பெர்சியச் சக்கரவர்த்தியைப் பற்றிய பழங்கதையொன்றினால் விவரிக்கப்படுகின்றது. ஷா அப்பிஸ் என்பவர் தமது மக்களை அன்புகூர்ந்த ஒரு நல்ல அரசராயிருந்தார். அவர்களை நன்கு

புரிந்துகொள்வதற்காக, அவர் தம்மை ஒரு சாதாரண மனிதன் போல் வேஷம் மாற்றிக் கொண்டு, அடிக்கடி பொது இடங்களுக்குச் செல்வதுண்டு. ஒரு நாளில் அவர் இவ்வாறு ஒரு பொதுக்குளியலறைக்குச் சென்ற பொழுது, அவர் ஒரு கதவைத் திறந்து கொண்டு செல்ல, அது ஒரு நில அறைக்கு அவரைக் கொண்டு சென்றது. அங்கு குளிக்கும் நீரைச் சூடாக்க அடுப்பை எரித்துக் கொண்டிருந்த ஏழை மனிதன் ஒருவனின் அருகில் அவர் சென்று அமர்ந்தார். இவரது தோழமையை வரவேற்ற அந்தக் கீழ்நிலைத் தொழிலாளியுடன் அவர் விரைவிலேயே ஒரு நட்புறவை ஏற்படுத்திக் கொண்டார். அவரை அவன் இன்னமும் அடையாளம் கண்டு கொள்ளாத நிலையில், அந்த அடுப்பெரிப்பவனை அவர் மீண்டும் மீண்டும் சந்தித்தார். உணவு வேளை வரும்பொழுது அந்தக் குடியானவன் தனது எளிய உணவை அரசருடன் பகிர்ந்து கொள்வதுண்டு. கடைசியில் அரசர் தமது உண்மையான அடையாளத்தை அந்த மனிதனுக்கு வெளிப்படுத்தினார். தமது கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில், ஷா அப்பிஸ் தம்மிடத்தில் அந்த விறகு எரிப்பவன் ஏதேனும் விசேஷ வெகுமதி கேட்பான் என்று எதிர்பார்த்தார். அதற்குப் பதிலாக, அந்த மனிதன் அதிர்ச்சியிலிருந்து மீண்ட பொழுது, அரசரிடத்தில் செல்வமோ அல்லது சலுகைகளோ கேட்காதிருந்தான். அவன் பின்வருமாறு மட்டுமே கூறினான்:

> இந்த இருண்ட இடத்தில் என்னுடன் வந்து அமரவும், எனது எளிய உணவை உண்ணவும், எனது இதயம் மகிழ்வாயுள்ளதா அல்லது வருத்தமாயுள்ளதா என்று அக்கறையாய்க் கவனிக்கவும் நீங்கள் உங்கள் அரண்மனையையும் உங்கள் மகிமையையும் விட்டு வந்தீர்கள். மற்றவர்கள் மீது நீங்கள் வளமான பரிசுகளைப் பொழிந் திருக்கலாம், ஆனால் எனக்கோ நீங்கள் உங்களையே கொடுத்திருக் கின்றீர்கள், உங்களுடைய நட்புறவின் இந்த அன்பளிப்பை நீங்கள் ஒரு போதும் என்னை விட்டு எடுத்து விடக்கூடாது என்பதே எனது வேண்டுதலாக உள்ளது.[1]

## நாம் அவருடைய மகிமையைக் கண்டோம்

இயேசு மாம்சத்தில் வந்து நம்முடன் வாசம் பண்ணியது மட்டுமின்றி, நாம் அவரைக் காணவும், அவருடைய வாழ்வை உற்று நோக்கவும் அவர் நம்மை அனுமதித்தார்! இதை யோவான், "... அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது'' என்று 1:14ல் கூறியதன் மூலம் விளக்கப் படுத்தினார். "மகிமை" என்பது வேத வசனங்களில் ஒரு வளமான அர்த்த முடைய ஒரு வார்த்தையாக உள்ளது. பழைய ஏற்பாட்டில் "மகிமை" என்ற வார்த்தை எவ்விதம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்குப் பின்வரும் வசனப் பகுதிகள் இரண்டு எடுத்துக்காட்டுகளாக உள்ளன. இவற்றில் முதலாவது இஸ்ரவேலரின் வனாந்திரப் பயணத்தின் காலத்திலிருந்து வருவதாகும்:

*அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. மேகம் அதின் மேல் தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால், மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக் கூடாமல் இருந்தது (யாத். 40:34, 35).*

இரண்டாவது, சாலொமோனின் தேவாலயம் கட்டப்பட்டு அர்ப்பணிக்கப் பட்ட காலத்திலிருந்து வருவதாகும்:

*அப்பொழுது ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையில், மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ் செய்கிறதற்கு நிற்கக் கூடாமற் போயிற்று; கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று (1 இரா. 8:10, 11).*

"மகிமை" என்பது "தேவனுடைய பிரசன்னத்தை" விளக்கப்படுத்தும் ஒரு வழி வகையென்பதை இவ்விரு வசனப் பகுதிகளும் செயல் விளக்கப்படுத்துகின்றன. தேவனுடைய மகிமை ஓரிடத்தில் இருந்தது என்று கூறுவது தேவன் அங்கு இருந்தார் என்று கூறுவதாகும். "மகிமை என்பது தேவனுடைய இருப்பு, இயல்பு மற்றும் பிரசன்னம் ஆகியவற்றை மனித அனுபவத்தில் கண்டறியும் வழி வகையிலான வெளிப்பாடு ஆகும் …"[2] என்று C. H. டாட் அவர்கள் விளக்கம் அளிக்கின்றார். ஆகையால் இயேசு என்று பெயருடைய இந்த மனிதரில் தேவனுடைய பிரசன்னத்தை மனித குலம் காண முடியும் என்று யோவான் கூறினார்! இந்த சத்தியங்களை யோவான், இயேசுவின் வாழ்வைப் பற்றித் தாம் கூற விரும்பிய (தமது சுவிசேஷ நூலின்) தொடக்கத்தில் எழுதினார். அவர் சாராம்சமாக, "அவரை நெருக்கமாகக் கவனியுங்கள், ஏனென்றால், நீங்கள் காண்கின்றவர் மனிதருடன் செயல்படுகின்ற ஒரு நல்ல மனிதர் என்பதைக் காட்டிலும் மேலானவராக இருக்கின்றார்; நீங்கள் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்!" என்று கூறினார். இந்தப் பூமியில் இயேசு கூறிய மற்றும் செய்த ஒவ்வொன்றும் தேவனுடைய மகிமையைச் செயல் விளக்கப் படுத்தியது. இயேசுவில், "மாம்சமும்" கூட "மகிமையை" ஒளி வீசச் செய்தது.

யோவானின் சுவிசேஷத்தில் உள்ள இம்மகிமையை இன்னும் சிறந்த வகையில் புரிந்து கொள்வதற்கு ஒரு விளக்கவுரையாளர் ஆலோசனை யளித்துள்ள கேள்வியானது நமக்கு உதவுகின்றது என்று நான் நம்புகின் றேன்.[3] மறுரூபமான நிகழ்ச்சியானது மற்ற மூன்று சுவிசேஷ நூல்களிலும்[4] இருக்க, மற்றும் அந்த நிகழ்ச்சியை யோவான் கண்ணால் கண்ட சாட்சியாயிருக்க, அது ஏன் யோவான் சுவிசேஷத்தில் இடம் பெறவில்லை என்று அவர் கேட்டார். "அவர் முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று" (மத். 17:2) என்பதால், அது மகிமைக்கு மிகவும் முழுமையான விவரிப்பாய்க் காணப்படுகின்றதே. பிறகு ஏன், மகிமையைப் பற்றி மற்றெல்லா சுவிசேஷங்களையும் விட அதிகமாக கூறப்பட்டிருக்கிற இந்த

*சுவிசேஷத்தில் யோவான் மறுரூபமாகுதல் நிகழ்ச்சியை உள்ளடக்க வில்லை? ஒருவேளை, தேவனுடைய மகிமை மாம்சத்தில் வெளிப்படுத்தப் பட்ட இயேசுவின் முழு வாழ்விலும் யோவானின் கவனம் இருந்ததால் இப்படி ஏற்பட்டிருக்கலாம். மறுரூபமானதைக் குறித்து யோவான் எழுதியிருந்தால், மற்ற நிகழ்ச்சிகள் விட்டு விடப்பட்டிருக்கலாம். இயேசுவின் மற்ற கூற்றுக்கள் மற்றும் செயல்கள் ஒதுக்கித் தள்ளி விட்டு மறுரூபமாகுதலைப் பற்றி யோவானின் வாசகர்கள், "நாம் காண்போம் என்று யோவான் கூறிய மகிமை இதுதான்" என்று கூறியிருக்கலாம். இந்த சுவிசேஷத்தில் தேவனுடைய மகிமையானது இயேசு நம் மத்தியில் வாழ்ந்தார் என்ற வகையில் அவருடைய மாம்சத்தில் மிகவும் விரிவாகக் காணப்படுகின்றது!*

## அவர் தேவனை வெளிப்படுத்தினார்

*வசனம் 14ன் உரிமைகோருதல்களுடன் யோவான் இயேசுவைப் பற்றி மற்ற பல அறிவித்தல்களையும் சேர்த்தார். அவர், யோவான் ஸ்நானன் "... எனக்குப் பின் வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர், ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர் தான்" (1:15) என்று சத்தமிட்டுக் கூறியதைப் பதிவு செய்தார். மோசேயின் மூலமாகத் தேவன் கொடுத்த நியாயப்பிரமாணமானது அதிசயமானதாயிருந்தது போலவே, இயேசுவில் கிருபையும் சத்தியமும் உணர்ந்து அறியப்பட்டன என்று யோவான் கூறச் சென்றார். பழைய ஏற்பாட்டில் அதிக அளவு மகிமை காணப்படுகின்றது, மற்றும் நியாயப் பிரமாணமானது நிச்சயமாகவே உண்மையாயிருந்தது. இருப்பினும், நியாயப்பிரமாணத்தினால் தொடங்கப்பட்ட அல்லது சுட்டிக்காட்டப் பட்ட விஷயமானது இப்பொழுது இயேசுவுக்குள் நிறைவேற்றப்பட்டும், உணர்ந்தறியப்பட்டும் உள்ளது! நியாயப்பிரமாணத்தை நாம் இடையூறுள்ள தன்மையுள்ள டிரான்சிஸ்டர் ஒன்றுக்கு ஒப்பிட்டால், இயேசுவானவர் எவ்வித இடையூறுமின்றி தேவனுடைய இசையை உண்டாக்குகின்ற தேவனுடைய C D ஒலிக்கருவி என்று கூற முடியும். நாம் நியாயப் பிரமாணத்தை இருண்ட குகை ஒன்றினுள் கரிக்கட்டியால் வரையப்பட்ட ஒரு சித்திரத்திற்கு ஒப்பிட்டால், இயேசுவானவர் தெளிவான அடையாளக் குறியும், அதிகமான ஒளியும், திரிபுகளற்ற நிலையும் கொண்ட தேவனுடைய டிஜிட்டல் தொலைக்காட்சிச் செய்தி என்று கூற முடியும்!*

*தேவனை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை என்ற குறிப்பிடு தலுடன் யோவான் இவ்வசனப் பகுதியை முடிக்கின்றார். தேவனைக் கண்ணால் கண்டோம் என்று நம்பி, தேவனைக் கண்டவர்கள் எவரும் சாக வேண்டும் என்பதினால் பயந்த மக்களைப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கின்றோம். இந்த மக்கள் தேவனுடைய செய்தியாளர்களை(அல்லது தூதர்களை)க் கண்டார்களே தவிர, அவர்கள் உண்மையில் தேவனைக் கண்டிருந்ததில்லை என்று யோவான் சுட்டிக்காட்டினார். இதனால்,*

ஆதியிலிருந்து இருக்கும் ஒருவர், தேவனாக இருக்கும் ஒருவர், "பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரன்" (1:18) என்பவர் நாசரேத்தூர் இயேசு என்ற தம் வாழ்வின் மூலம் தேவனை நமக்கு வெளிப்படுத்த வந்தார் என்று காண்பது மிகவும் அதிகமாக மனதில் பதிவதாக உள்ளது! தேவனை விவரிப்பதற்கு இவர் மேற்கொண்ட வழிமுறைகளைப் போல வேறெவரும் எக்காலத்திலும் வெளிப்படுத்தியதாக நற்சாட்சி பெற்றிருந்ததில்லை.

## முடிவுரை

நாம் தேவனுடைய மகிமையைக் காணும் வாய்ப்பில் உள்ளோம் என்றறிந்து நாம் யோவான் சுவிசேஷத்தினுள் நுழைக்கின்றோம். நாம் இயேசுவை நோக்கிப் பார்த்து, கவனிக்கையில், "மாம்சத்தில்" "மகிமையை" வெளிப்படுத்துவதன் மூலம் அவர் "மகிமை" என்பதற்கு புதிய அர்த்தத்தைக் கொடுப்பார். பிறகு அன்றாட அனுபவத்திற்கும், மக்களுடன் எதிர் கொள்ளுதலுக்கும் இயேசு "மகிமையை" கொண்டு வந்த வகையைக் காண்பதின் மூலம், சாதாரண மக்களால், சாதாரண சூழ்நிலைகளில், சாதாரண இடங்களில் "மகிமையானது" எவ்விதத்தில் செயல் விளக்கப் படுத்தப்பட முடியும் என்பதை நாம் காணத் தொடங்குகின்றோம். பொழுதுபோக்கு யுகத்தில், நாம் "மகிமை" என்பதை மிகப் பயங்கரமான ஆராதனை அனுபவங்கள், மிகவும் ஏவுதல் பெற்ற தியானங்கள், அல்லது மிகவும் இயக்கமுள்ள பிரசங்கித்தல் என்று மட்டுமே எண்ணும்படி சோதிக்கப்படுகின்ற பொழுது, இயேசு தாம் செய்த ஒவ்வொன்றிலும் மகிமையை வெளிப்படுத்தினார் என்பதை யோவான் நமக்கு நினைவூட்டுகின்றார்.

தெய்வீக முரண் தொடையான தேவன்/மாம்சம் என்பது குழப்ப மூட்டுவதாயிருக்கலாம், ஆனால் இயேசுவைப் பற்றிய நமது புரிந்து கொள்ளுதலுக்கு அது மிகவும் இன்றியமையாதது ஆகும். மாம்சத்தில் வந்த வார்த்தையானது நம்மை இரட்சிக்கவும், நமக்குத் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தவும் வந்தது. யோவான் சுவிசேஷத்தை நாம் தொடருகையில், நாம் ஒரு மனிதரைக்காட்டிலும் மிகவும் அதிகமானவரைக் காண்கின்றோம் என்று அறிவோம்; நாம் தேவனுடைய மகிமையைக் காண்கின்றோம்!

---

குறிப்புகள்

[1]Michael P. Green, *Illustrations for Biblical Preaching* (Grand Rapids, Mich.: Baker Book House, 1982), 48-49. [2]C. H. Dodd, *The Interpretation of the Fourth Gospel* (Cambridge: Cambridge University Press, 1958), 206. [3]Leon Morris, *Expository Reflections on the Gospel of John* (Grand Rapids, Mich.: Baker Book House, 1988), 17. [4]Matthew 17:1-8; Mark 9:2-8; Luke 9:28-36.

# "இதோ, தேவ ஆட்டுக்குட்டி" (1:19-51)

"*எளிய மற்றும் உயர்ந்த சாராள்*"என்ற குழந்தைகளுக்கான அற்புதமான புத்தகமானது, அஞ்சல் வழியே ஆணை பெற்ற ஒரு மணப்பெண்ணாக மெய்னீ என்ற கடற்கரையிடத்திலிருந்து புறப்பட்டு பிரெய்ரீ புல்வெளியுள்ள இடத்திற்குச் செல்லத் தீர்மானித்த ஒரு பெண்ணைப் பற்றிய கதையொன்றைக் கூறுகின்றது. பிரெய்ரீயைச் சேர்ந்த, மனைவியை இழந்த விவசாயியின் மனைவியாகும் முன்பு அப்பெண், அவருடனும் அவரது இளம் வயது மகன் மற்றும் மகள் ஆகியோருடனும் கடிதங்கள் பரிமாறிக் கொண்டாள். அவள் தனது பூனை மற்றும் கடல் ஆகியவை பற்றி அவர்களுக்குக் கூறினாள், மற்றும் அந்தப் பிள்ளைகள் அவளால் சிகையை அலங்கரிக்கவும் பாடவும் முடியுமா என்று கேட்க எழுதினார்கள். சாராள் தான் ஒருபோதும் சந்தித்திராத குடும்பத்தின் அங்கமாவதற்காக மேற்கு நோக்கித் தனது பயணத்தைத் தொடங்க வேண்டிய வேளை நெருங்குகையில், அவள் பின்வருமாறு எழுதினாள்:

> அன்புள்ள யாக்கோபு,
> நான் புகை வண்டியில் வருவேன். நான் மஞ்சள் நிறத் தலையணியை அணிந்திருப்பேன். நான் எளிமையானவளாக, மற்றும் உயரமானவளாக இருக்கின்றேன்.
>
> *சாராள்*[1]

சாராள் வந்து சேர்ந்த நாளன்று அந்தப் புகை வண்டியில் அவளைச் சந்திக்கச் செல்லுகையில் அவர்களின் பரபரப்பை உங்களால் கற்பனை செய்ய முடிகின்றதா? அவர்களின் சிந்தையினூடாக என்ன (எண்ணம்) ஓடிக் கொண்டிருந்திருக்கும்? நான்கு நபர்கள் கொண்ட அந்த நாடகமானது எதிர்பார்க்கப்படுவது என்ன என்பது பற்றிச் சிறிதளவே கருத்துக் கொண்டிருந்தது.

நமது வேதபாடப் பகுதியானது யோவான் *1:19-51*, இதே விதமான உறுதிப்பாடின்மை மற்றும் குழப்பத்துடன் தொடங்குகின்றது. இந்த நிகழ்ச்சியில் ஈடுபட்டிருந்த மக்களுக்கு மாபெரும் அற்புதம் நிறைந்த சில செயல்கள் நடைபெற்றன, ஆனால் அவைகளுக்கு எவ்விதத்தில் பதில் செய்வது என்பதில் அவர்கள் நிச்சயமற்று இருந்தார்கள். சிலவற்றிற்காகப் பரபரப்புடன் காத்துக் கொண்டிருந்த உலகத்தினுள் இயேசு பிரவேசித்தார்; அந்தச் சில விஷயங்கள் என்ன என்பதை மக்கள் மிகச் சரியாக அறியாதிருந்ததே ஒரே ஒரு பிரச்சனையாக இருந்தது. இந்த நாசரேத்தூர்

இயேசு உண்மையில் யார் என்பதைக் கண்ணால் கண்ட சாட்சியின் போராட்டத்தினுடைய கண்ணோக்குகளின் மூலமாகக் காண்பிக்கும் படியாக யோவான் சுவிசேஷத்தின் இப்பகுதி தொடங்குகின்றது.

## யோவான் ஸ்நானனின் சாட்சியம் (1:19-34)

இயேசு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெறும்படி வந்த வேளையில், யோவான் ஸ்நானன் யூதேயாவில் ஒரு கலக்கத்தை உண்டாக்கியிருந்தார். அவரது கரடுமுரடான தீர்க்கதரிசி போன்ற தோற்றமும் மற்றும் தேவனுடைய இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்ற அவரது வல்லமை நிறைந்த தீர்க்கதரிசி போன்ற பிரசங்கித்தலும் எருசலேமில் இருந்தும், "யூதேயா மற்றும் யோர்தானுக்கு அடுத்த சுற்றுப் புறத்திலிருந்தும்" (மத். 3:5) மக்களை யோவான் ஞானஸ்நானம் கொடுத்த இடத்திற்கு இழுத்திருந்தன. ஒருவேளை பலர், மேசியா தமது பின்பற்றாளர்களைப் பாலைவனத்தில் ஒன்று கூட்டும்படி எதிர்பார்த்திருந்த காரணத்தினால்,[2] யோவான் ஸ்நானன் உண்மையில் யாராயிருந்தார் என்பது பற்றி மக்கள் யூகிக்கத் தொடங்கினர். உணர்வெழுச்சியானது போதிய அளவுக்குப் பெரிதானபோது யூதர்கள்[3] பெரும் திகைப்பு அடைந்த பொழுது, யோவான் தம்மைக் குறித்துக் கூறிக் கொண்டது என்ன என்பதைக் கண்டறிவதற்காகச் சில ஆசாரியர்களையும் லேவியர்களையும் அவரிடத்திற்கு அனுப்பினார்கள் (1:19).

யோவான் ஸ்நானன் தமது பிரசங்கித்தல் மற்றும் மனமாற்றம் அடையச் செய்தல் ஆகிய இரண்டிலும் ஒரு நேரடியான போக்குள்ளவராகவும், தாம் அர்த்தப்படுத்துவது என்ன என்பதில் சந்தேகம் எதையும் விட்டு வைக்காத வராகவும் இருந்தார். எருசலேமில் இருந்து வந்த மனிதர்களிடத்தில் அவர், "நான் கிறிஸ்து அல்ல" (1:20) என்று கூறினார். மற்றும் தாம் எலியாவோ[4] அல்லது மோசேயினால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசியானவரோ அல்ல (1:21; உபா. 18:15ஐக் காணவும்) என்றும் அவர் அறிவித்தார். சுருக்கமாய்க் கூறினால், அவர்கள் யாருக்காகக் காத்திருந்தார்களோ, அவர் தாம் அல்ல என்பதை யோவான் கூறினார். மாறாக அவர் ஏசாயா 40:3லிருந்து மேற்கோள் காண்பித்து, தம்மை "கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று ... வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமா யிருக்கிறேன்" (1:23) என்று அடையாளப்படுத்திக் கொண்டார். அவர் ஒரு செய்தியாளராகவும் மற்றும் ஒரு முன்னோடியாகவும் மட்டுமே இருந்தார். யோவான் வந்த பிறகு, அவர் யாருடைய மிதியடி வாரை அவிழ்க்கக் கூடத் தான் தகுதியற்றவன் என்று குறிப்பிட்டாரோ, அவர் (இயேசு) வந்தார்.

யோவான் ஸ்நானன் தமது வார்த்தையிலும் தமது ஊழியத்திலும் உண்மையுள்ளவராய் இருந்தார். அடுத்த நாளில் இயேசு வந்து கொண்டிருந் ததை அவர் கண்ட பொழுது, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (1:29) என்று யோவான் அறிவித்தார். இந்த சுவிசேஷத்தில் இயேசுவின் ஞானஸ்நானமானது பதிவு செய்யப் பட்டிராதிருப்பினும், இயேசுவின் மீது தேவ ஆவியானவர் புறாவைப்

போல் பரலோகத்திலிருந்து இறங்கி வந்ததைத் (1:32) தாம் கண்டிருந்ததாக யோவான் ஸ்நானன் எடுத்துரைத்த பொழுது அவர் அந்நிகழ்ச்சியை மறைமுகமாய்ச் சுட்டிக் காண்பித்தார். பிறகு அவர், "... இவரே தேவனுடைய குமாரன்" (1:34) என்று அறிக்கையிட்டார். யோவான் ஸ்நானனுடைய கண்களில் இயேசு தேவனுடைய ஒரு குமாரன் என்பதாக இல்லை; அவர் தேவனுடைய ஒரே குமாரனாக இருந்தார். அவர் தேவனுடைய ஒரு ஆட்டுக்குட்டியாக இல்லை; அவர் தேவனுடைய ஒரே ஆட்டுக்குட்டியாக இருந்தார்.

## அந்திரேயாவின் சாட்சியம் (1:35-42)

அடுத்த நாளில் யோவான் தமது சீஷர்களுக்கு இயேசுவை "தேவ ஆட்டுக்குட்டி" (1:36) என்று மீண்டும் சுட்டிக்காட்டினார், எனவே அவர்கள் யோவானை விட்டு, இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள். அவர்களில் ஒருவரான அந்திரேயா[5] என்பவர் இயேசுவை "ரபீ" (1:38) என்று அழைக்கத் தொடங்கினார், இது அவர் இயேசுவை ஒரு மாணவர் - ஆசிரியர் உறவுமுறையில் பின்பற்றத் தயாரானார் என்பதைச் சுட்டிக்காட்டியது. இருப்பினும், அவர் பின்பற்றுவதற்கான காரணமானது இயேசுவின் ஞானத்தினால் ஈர்க்கப்பட்டது என்பதை விட இன்னும் அதிக ஆழமானதாக இருந்தது. அவர் உடனடியாகத் தமது சகோதரர் சீமோன் பேதுருவைக் கண்டு, "நாங்கள் மேசியாவைக் கண்டோம்" (1:41) என்று கூறினார். வசனப் பகுதியின் இந்தக் கருத்தின் மூலம், இயேசு தேவ ஆட்டுக்குட்டியென்றும், தேவனுடைய குமாரன் என்றும், ரபீ என்றும் மற்றும் மேசியா என்றும் அறிவிக்கப்பட்டார்.

## பிலிப்பு மற்றும் நாத்தான்வேல் ஆகியோரின் சாட்சியம் (1:43-49)

இயேசு "நீ எனக்குப் பின்சென்று வா" (1:43) என்ற வாழ்வை மாற்றும் வார்த்தைகளினால் அழைத்தார். பிறகு பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு, மோசேயினாலும் தீர்க்கதரிசிகளினாலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தவரும், யோசேப்பின் குமாரனுமானவரைத் தாங்கள் கண்டதாக அவருக்குக் கூறினார் (1:45). நாத்தான்வேல் வெறுப்பு மனப்பான்மையுடன், "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மையும் உண்டாகக் கூடுமோ?" (1:46) என்று கேட்கையில், அவரது பதில்செயலானது ஆர்வம் குன்றியதாக இருந்தது. நாத்தான்வேல் ஈர்க்கப்படாதிருந்தாலும், அவர் பிலிப்புடன் இயேசுவைக் காணச் சென்றார். நாத்தான்வேல் இயேசுவை நெருங்கி வருகையில், அவரைக் குறித்து இயேசு, "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" (1:47) என்று உரைத்தார். நாத்தான்வேல் தம்மை இயேசு எப்படி அறிந்தார் என்று வியப்படையந்து அதைப் பற்றி இயேசுவிடம் கேட்டார். இயேசுவின் பதிலானது நாத்தான்வேலின் இருப்பின் அடிப்படையையே மாற்றியது. "பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு

முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும் போது, உன்னைக் கண்டேன் என்றார்" (1:48). ஒருவேளை நாத்தான்வேல் அத்திமரத்தின் கீழ் ஜெபமோ அல்லது தியானமோ செய்து கொண்டிருந்திருப்பார், மற்றும் இயேசுவின் வார்த்தைகள், அவர் நாத்தான்வேலின் இருதயத்தினுடைய உள்ளான எண்ணங்களை அறிந்திருந்ததைச் சுட்டிக்காட்டின. நாத்தான்வேலின் மாற்றத்திற்குக் காரணம் எதுவாயிருந்தாலும், அவர் ஒரு மனக் கடினமான வெறுப்புணர்விலிருந்து உற்சாகம் நிறைந்த சீஷராக உடனடியாக மாற்றம் பெற்றார், இன்னும் அதிகப் பகுத்தறிவுள்ள அறிக்கையானது குமிழியிட்டுக் கொண்டு வெளிவந்தது: "ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா" (1:49).

இயேசு மற்றும் (அவரைக்) கண்ணால் கண்ட சாட்சிகளுக் கிடையிலான இந்த முதல் சந்திப்புகள் முழுவதிலும், இந்த மனிதரைப் பற்றி விசுவாசம் கொள்வதற்கான விவரிப்பின் வார்த்தைகளை மக்கள் தேடிக் கொண்டிருப்பதாகக் காணப்படுகின்றனர். இது அவர்கள் ஐந்து வண்ணப் பென்சில்களை மட்டும் ("ஆட்டுக்குட்டி," "தேவனுடைய குமாரன்," "ரபீ," "மேசியா," "அரசர்") வைத்துக் கொண்டு ஒரு அழகிய சூரிய மறைவின் சித்திரத்திற்கு வண்ணந் தீட்ட முயற்சிப்பது போல இருக்கின்றது. அவர்கள் கண்ட ஒளிவெள்ளத்திற்கு இவைகளில் எதுவும் நியாயமானதைச் செய்ய முடியாது! மிக முக்கியமான அறிக்கையானது இன்னும் வர வேண்டிய தாயிருந்தது, ஏனெனில் இயேசு தாம் யார் என்பதைப் பிற்பாடு தமது சொந்த வார்த்தைகளினாலேயே சுட்டிக்காட்டினார் (4:26).

## இயேசுவின் சாட்சியம் (1:50, 51)

நாத்தான்வேலைப் பிலிப்பு அழைப்பதற்கு முன்பே அவரை இயேசு அத்திமரத்தின் கீழ் கண்டதாகக் கூறிய அந்தச் சிறிய விஷயத்திற்கே நாத்தான்வேலின் தடையற்ற பதில்செயலைக் கண்டு இயேசு வியப்படைந்த தாகக் காணப்படுகின்றது. அதைக் காட்டிலும் அதிகமான ஈர்ப்புடைய விஷயங்களை நாத்தான்வேல் பிற்பாடு காண்பார் என்று அவருக்கு இயேசு அறிவித்தார்: ''வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷ குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும், இறங்குகிறதையும் நீங்கள் இது முதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (1:51). வானம் திறக்கப்பட்டிருக்கும் என்று அவர் உரைத்தார். இவ்விடத்தில் உள்ள கிரேக்க வார்த்தைக் கட்டமைப்பானது (நிகழ்கால வினை எச்சமானது) வானம் திறக்கப்பட வேண்டியதாயிருந்தது, மற்றும் அது திறக்கப்பட்டதாகவே நிலைத்திருக்க வேண்டியதாகவும் இருந்தது என்று சுட்டிக்காட்டுகின்றது. அது திறக்கப்பட்ட நிலையிலேயே நிற்க வேண்டியதாயிருந்தது. நாசரேத்திலிருந்து வந்த ஒருவரான இயேசு, வானத்திற்கும் பூமிக்கும் உள்ள உறவுமுறையைத் தாம் என்றென்றைக்கு மாக மாற்ற இருப்பதாக உரிமோகோரினார்! பரலோகத்தின் ஒரு கண நேரக் கண்ணோட்டத்தை நாத்தான்வேலுக்கு அவர் வாக்களிக்கவில்லை. மாறாக, பரலோகத்தின் மகிமையானது அவருரில் என்றென்றைக்கும் வெளிப்

படுத்தப்படும் என்று அவர் கூறினார். பிறகு இயேசு "மனுஷ குமாரன்" என்று தம்மைப் பற்றிக் குறிப்பிட்டார், இது சுவிசேஷங்களில் அவருடைய பிரியமான சுய - விளக்கமாக உள்ளது. ஆர்வமிக்க இவ்விளக்கமானது பழைய ஏற்பாட்டில் ஒரு வளமையான பின்னணியைக் கொண்டுள்ளது. இயேசுவின் நாட்களில் பொதுவான தவறான பயன்பாட்டினால் கறைப்படுத்தப்பட்டிராத ஒரு தீர்க்கதரிசன மொழிநடையாக இது இருந்த காரணத்தினால், இயேசு இதை அடிப்படையாகப் பயன்படுத்தினார் என்று தோன்றுகின்றது. "மேசியா" மற்றும் "இஸ்ரவேலின் அரசர்" ஆகிய இரு சொற்றொடர்களும் இராணுவ உய்த்துணரும் அர்த்தம் கொண்டிருந் தவைகள், அவர் இவைகளைத் தமக்குப் பயன்படுத்த விரும்பாதிருந்தார், மற்றும் பிற இயற்பெயர்கள் யாவும் நாசரேத்தூர் இயேசு யார், அவர் என்னவாக வந்தார் என்பதை ஒரு பகுதி மட்டுமே விளக்கப்படுத்தின. ஆகையால் இயேசு "மனுஷ குமாரன்" என்று தம்மை அழைத்தார். இந்தச் சொற்றொடரானது ஒரே வேளையில் அவருடைய தெய்வீகத்துவத்தையும், மனிதத்துவத்தையும் சுட்டிக் காண்பித்தது. இவ்விதமாக, தீர்க்கதரிசிகள் இயேசுவைப் பற்றிய கருத்தை விளக்கப்படுத்துவதற்குப் பயன்படுத்திய கருத்தையும் அதே வேளையில் இயேசு தம்முடைய சொந்த வார்த்தை களினாலேயே தம்மை அடையாளப்படுத்தவும் இச்சொற்றொடர் இயேசுவை அனுமதித்தது.

## முடிவுரை

யோவான் சுவிசேஷத்தின் தொடக்கத்திலேயே நாம் நின்று கொண்டிருக்கையில், "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்" என்ற வார்த்தைகள் நமக்கும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. நாம் பல ஆண்டுகளாக இயேசுவை அறிந்திருந்தாலும், இவைகளைக் காட்டிலும் பெரியவற்றைக் காண்போம். நாம் ஆறுவாரக் குழந்தையாக இருந்ததில் இருந்து வேதாகம வகுப்புகளுக்குச் சென்றிருந்தாலும், இவைகளைக் காட்டிலும் பெரியவற்றை நாம் காண்போம். கிறிஸ்தவப் பயிலகங்களில் இருந்து நாம் பட்டங்களைப் பெற்றிருந்தாலும், இவைகளைக் காட்டிலும் பெரியவற்றை நாம் காண்போம். நாசரேத்தூர் இயேசுவை நாம் மீண்டும் நோக்கிப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் பரலோகம் திறந்து நிற்கிறதை நாம் காண்கின்றோம்.

எந்த ஒரு உறவு முறையிலும், ஒருவர் மற்றவரைப் பற்றி அறிவதை நிறுத்திக் கொள்ளுதல் என்பது மாபெரும் அபாயங்களில் ஒன்றாக உள்ளது. இன்னொரு நபரைப் பற்றி நீங்கள் "உள்ளும் புறம்பும்" முற்றிலுமாய் அறிந்துள்ளதாக நினைத்துக்கொள்ளுதல் என்பது ஒரு பாங்கற்ற விழிப்புணர்வுக்கு உங்களைத் தகவமைத்துக் கொள்வதாக உள்ளது! எந்த உறவுமுறைகளின் உயிருள்ள தன்மையும் தொடர்ந்த மற்றும் பரஸ்பரமான கண்டறிதல்களிலேயே அஸ்திபாரப்படுத்தப்பட்டுள்ளது. தங்கள் வாழ்வு முழுவதிலும் ஒருவர் மற்றவரை அறிந்துள்ளவர்கள் அல்லது ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் திருமண வாழ்வை வாழ்ந்திருக்கும் தம்பதியரும்

*கூட ஒருவர் மற்றவரைப் பற்றி இன்னும் அதிகமாக அறிய வேண்டியவர்களாக உள்ளனர். இயேசுவைப் பற்றி நீங்கள் இவ்விதமாக உணருகின்றீர்களா?*

*நாம் படித்துக் கொண்டுள்ள வசனப்பகுதியானது, நமது வண்ணப் பென்சில்கள் உள்ள பெட்டி மிகவும் சிறியதாக உள்ளதென்று நமக்கு நினைவூட்டுகின்றது: இயேசுவை விவரிக்க நாம் கொண்டுள்ள வகைகள் எப்பொழுதுமே போதுமற்றவைகளாகவே இருக்கும். இதை உணர்ந்தறிந்த நிலையில், நீங்கள் தொடர்ந்து அவரைத் தேடுவீர்களா? நீங்கள் தொடர்ந்து உங்களை அவர் வியப்படையச் செய்ய அனுமதிப்பீர்களா? சில வேளைகளில் அவர் உங்களைக் கடிந்துகொண்டு மற்றும் உங்கள் வசதியான யூகங்களைக் குறித்து அறைகூவல் விடுப்பார் என்பதை அறிந்து, நீங்கள் தொடர்ந்து அவரைப்பற்றி வாசிப்பீர்களா? இயேசு யாராயிருக்க வேண்டும் என்ற உங்கள் உருவகத்திற்கு அவர் பொருந்திவர வேண்டுமென்று வற்புறுத்துவதை விட்டு, அவர் தம்முடைய வார்த்தையினாலும் செயலினாலும் உங்களுக்குத் தம்மை விளக்கப்படுத்த அனுமதிப்பீர்களா? இன்றைய நாளில் நீங்கள் வாழ்வில் எங்கிருந்தாலும், இந்த சுவிசேஷத்தில் இயேசுவைத் தொடர்ந்து தேடினால், "நீங்கள் இவைகளைக்காட்டிலும் பெரியவற்றைக் காண்பீர்கள்."*

*இயேசு பிலிப்புவை அழைத்த பொழுது, அவர் (இயேசு) "எனக்குப் பின் சென்று வா" என்று மட்டுமே கூறினார். பிலிப்புவின் வாழ்வில் அந்த வேளையில், அவர் இயேசுவைப் பற்றிப் புரிந்து கொள்ளாதது அதிக மாயிருந்தது, மற்றும் அவர் சிறிதளவே புரிந்து கொண்டிருந்தார். இருந்த போதிலும் அவர் பின்பற்றினார் - மற்றும் பின்பற்றுதலில் அவர் இயேசு யாராக இருந்தார் என்பதைப் படிப்படியாகக் காண வந்தார். நாம் இயேசுவைப் புரிந்துகொள்ள விரும்பினால், நாம் அவரைப் பின்பற்ற விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; ஏனெனில் பின்பற்றுதலில்தான் நாம் அவரைப் புரிந்து கொள்ள முடியும்.*

---

*குறிப்புகள்*

[1]Patricia MacLachlan, *Sarah, Plain and Tall* (New York: Harper Trophy, 1985), 15. [2]*அப். 21:38ஐக் காணவும்.* [3]*இந்த சுவிசேஷத்திலிருந்து பிரசங்கிக்கும்பொழுது, "யூதர்கள்" என்ற சொல் விளக்கமானது மிகக் கவனமாக விவரிக்கப்பட வேண்டும். இயேசுவும் அவருடைய சீஷர்களும் யூதர்களாயிருந்ததால், இது ஒரு முழு இனத்திற்கான குறிப்பாயிருப்பதில்லை என்பது தெளிவு. இதை ''யூதர்கள்'' என்பதைக்காட்டிலும் ''எருசலேமில் இருந்த யூதத் தலைவர்கள்'' என்று விளக்கப்படுத்துவது மிகச் சிறந்தது, ஏனெனில் சில தீர்க்கதரிசிகள் மக்களை புரட்சி செய்ய எழுப்பி விட்டால் இவர்களே அதிகம் இழப்புக்குள்ளாகுபவர்களாய் இருந்தார்கள்.* [4]*மல். 4:5ஐக் காணவும், மத். 11:14ல் இயேசு, மல்கியாவில் பேசப்பட்ட எலியா யோவான் ஸ்நானனே என்று எடுத்துரைத்தார். யோவா. 1:21ல் யோவான் ஸ்நானன் தம்மைக் குறித்து இயேசு கூறியவற்றிலிருந்து முரண்படவில்லை, ஆனால் அதற்குப் பதிலாக பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியான எலியா மரித்தோரிலிருந்து*

எழுந்தார் என்ற நேரடி அர்த்தமான கருத்தையை அவர் புறக்கணித்தார். [5]சுவிசேஷங்களில் அந்திரேயா அமைதியான பண்புடையவராகச் சித்தரிக்கப் படுகின்றார்; இருப்பினும் யோவான் சுவிசேஷத்தில் இவர் தோற்றமளிக்கும் மூன்று இடங்களிலும், இவர் யாரேனும் ஒருவரை இயேசுவிடம் அழைத்துக் கொண்டு வருகின்றார். முதலாவது பேதுருவாக இருந்தார் (1:41, 42); பிறகு அப்பங்கள் மற்றும் மீன்களுடன் இருந்த ஒரு சிறு பையன் இருந்தான் (6:8, 9); கடைசியாக, கிரேக்கர்கள் இருந்தனர் (12:20-22).

## தேவன்/மாம்சம்

தேவன்/மாம்சம் என்ற முரண் தொடையானது புரிந்து கொள்ள மிகவும் கடினமானதாக உள்ளது. முதல் நூற்றாண்டின் முடிவில், ''டொஸீட்டிஸ்ட்ஸ்'' (''காணப்படுவதற்கு'' என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது) என்று அறியப்பட்ட ஒரு குழுவானது இயேசு மாம்சத்தில் வாழ்ந்ததாக மட்டுமே காணப்பட்டார் என்று நம்பியது. இயேசு இந்த உலகினாலும் மனிதத்துவத்தின் எல்லா பலவீனங்களினாலும் தொடப்படாதவராக நிலைத்திருந்தார் என்ற கருத்து அவர்கள் சிந்தையில் இருந்தது. அதற்குச் சற்றுப் பிறகு, “Gnostics” என்பவர்கள் (இவர்கள் “அறிவு” என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து இப்பெயரை எடுத்துக் கொண்டார்கள்) எழும்பினார்கள். இம்மக்கள், ஆவி ஆவியாகவே உள்ளது, மாம்சம் மாம்சமாகவே உள்ளது, இவ்விரண்டும் ஒருபோதும் கலக்க முடியாது என்று நம்பினார்கள். இவ்விதமாக, அவர்களைப் பொறுத்தமட்டில், தேவன்/மாம்சம் என்பது இயலாத ஒன்றாக இருந்தது. அப்பொல்லினரியுஸ் (கி.பி. 310-385) என்பவரைப் பின்பற்றியவர்கள் இக்கருத்துப் பற்றி பிரச்சனைகள் கொண்டிருந்த மூன்றாவது குழுவினராவார்கள். சீரியாவில் இருந்த சபையின் இந்த முன்னோடி இயேசு தெய்வீகமானவராயிருந்தார் என்று பலமாக வாதிட்டார், ஆனால் இயேசு முற்றிலும் மனிதராயிருந்தார் என்ற கருத்தை அவர் மறுத்தார். இயேசு பாவம் செய்யத் தம்மை அனுமதிக்கும் முழுமையான சுயாதீனமுள்ள சித்தத்தைக் கொண்டிருந்தார் என்பதை இவர் நம்பவில்லை. “வார்த்தை மாம்சமானார்'' என்ற கருத்து எப்போதும் கடினமாதாகவும், சில வேளைகளில் விவாதத்திற்குரியதாகவும் இருப்பினும், இது இயேசுவின் இயல்பைப் புரிந்து கொள்வதற்கு அவசியமானதாக உள்ளது.

# "ஒரு திருமணம் நடைபெற்றது" (2:1-11)

*பிதாவே, நாங்கள் அனைவரும் இந்த வேதவசனப் பகுதியில், இயேசு கிறிஸ்துவின் மகிமையைக் காணுகையில் உம்முடைய மகிமையை அனுபவித்து உணர்வோமாக. அவருடைய மகிமையுள்ள நாமத்தில் நாங்கள் ஜெபிக்கின்றோம். ஆமென்.*

காலம் மற்றும் இடத்திற்குத் தக்கவாறு பழக்கங்கள் மாறுகின்றன, ஆனால் திருமணங்கள் என்பவை அவைகளைப் பற்றிய குறிப்பிட்ட அழுத்தத்தை எப்பொழுதுமே கொண்டிருந்திருக்கின்றன. சில காரணத்திற்காக, அவைகள் நல்ல குணமுடைய மனிதர்களைக் கூடச் சங்கடமான சூழ்நிலைகளுக்கு ஆளாக்கி விடுகின்றனவாகக் காணப்படுகின்றன. நமது வேத வசனப் பகுதியாகிய யோவான் *2:1-11*, ஒரு திருமணத்தில் கலந்து கொண்ட இயேசுவும் கூட இறுக்கத்தை அனுபவித்து உணர்ந்தார் என்று கூறுகின்றது. இந்த நிகழ்ச்சியில் அவர் என்ன செய்தார் என்பதைக் கவனித்தலானது மனுஷகுமாரன் *(1:51)* என்பவர் உண்மையில் யாராக இருக்கின்றார் என்பதைப் பற்றி அதிகமானவற்றை நமக்குக் கூறுகின்றது.

## இயேசு ஒரு திருமணத்தில் கலந்து கொண்டார் *(2:1, 2)*

இயேசுவின் தாய் ஒரு திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். இயேசுவும் அவருடைய சீஷர்களும் மரியாளுக்கு வந்த அழைப்பின் அடிப்படையிலோ அல்லது அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் வந்த அழைப்பின்படியோ அந்தத் திருமணத்தில் கலந்து கொண்டனர். அது கலிலேயாவின் கானா என்ற ஊரில் நடைபெற்றது, இது உறுதிப்படுத்தப் படாத ஒரு இடத்தில் இருந்த ஒரு கிராமம் ஆகும். வேதாகமத்தின் மாபெரும் மொழிபெயர்ப்பாளரான ஜெரோம் (கி.பி. *345-420*) அவர்கள், கானாவூரின் விளக்குகள் இயேசுவின் பிள்ளைப் பருவத்து இல்லம் இருந்த நாசரேத்தில் இருந்து காணப்பட முடிந்தது என்று உரிமைகோரினார், இது அவ்வூர் நாசரேத்திற்கு அருகில் இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

முதல் நூற்றாண்டில் யூதர்களின் திருமணங்கள் பற்றிப் பல விஷயங்கள்

அறியப்பட்டுள்ளது என்றாலும், அவர்களின் திருமணங்கள் பற்றிய குறிப்பான விபரங்கள் சிறிதளவே அறியப்பட்டுள்ளன. திருமண நிகழ்ச்சியானது மணப் பெண் இன்றியே, மணமகனின் வீட்டில் தொடங்கியது என்று நாம் எண்ணுகின்றோம். அவரது (மணமகனின்) நண்பர்களும் குடும்பமும் ஆனந்தம் நிறைந்த மக்கள் கூட்டமாக ஒன்று கூடி, மணமகளின் வீட்டிற்குப் பெரும்பாலும் ஒரு நீண்ட மற்றும் சுற்று வழியே செல்வார்கள். அங்கு திருமணச் சடங்கு நடைபெறும். மணமகளின் இல்லத்தில் கொண்டாட்ட வேளையொன்றிற்குப் பிறகு, புதுமணத் தம்பதிகளும், மற்றும் கூட்டம் முழுவதும் நகரத்தின் தெருக்களில் இன்னொரு முறை ஊர்வலமாகச் செல்வார்கள். இந்த வேளையில், அவர்கள் மணமகனின் இல்லத்திற்குச் செல்வார்கள். அங்கு ஒரு வாரகாலம் கூட இந்த விழா நீடிக்கும். யோவான் 2ல் இயேசு கலந்து கொண்ட திருமணத்தில் அநேகமாக இவை யாவும் உள்ளடங்கி இருந்திருக்கும்.

இந்தக் கொண்டாட்டத்தில் இயேசு முழுமையாகப் பங்கேற்றவராக இருந்தார். அது ஆனந்தக் களிப்பின் சமயமாய், சிரிப்பின் சமயமாய், அது ஒரு சந்தோஷ சமயமாய் இருந்தது. இயேசு திருமணத்தில் கலந்து கொள்வதைத் தேர்ந்து கொண்டார் என்ற சத்தியத்தைத் தவற விடாதீர்கள்! அவரை அங்கு நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா? அவர் மற்ற விருந்தினர்களுடன் பேசுகையில் அவருடைய ஒய்வான புன்னகையை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா? உங்கள் சிந்தையில் நீங்கள் சித்தரிக்கும் இயேசு மகிழ்ச்சியை அனுபவித்து உணருகின்றாரா? திருமணக் கொண்டாடத்தில் தன்னையே மறந்த நிலையில் இருந்திருப்பாரா? இந்த வேத வசனப் பகுதியில் இயேசு நிச்சயமாகவே (அப்படி) இருந்தார்! பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆங்கிலேயப் பிரசங்கியாரான C. H. ஸ்பர்ஜன் அவர்கள், தேவனுக்கேற்ற சந்தோஷம் பற்றிப் பின்வருமாறு கூறினார்:

> ஆத்துமா ஆதாயம் செய்கின்ற யாவருக்கும் சந்தோஷ நிறைவை நான் புகழாகக் கூறுகின்றேன்; இதை கருத்தின்றியோ அல்லது பொருளற்ற உளரலாகவோ கூறாமல், சந்தோஷமான, மகிழ்வு நிறைந்த ஒரு ஆவியுடன் கூறுகின்றேன். காடியைக் காட்டிலும் தேனில் அதிகமான ஈக்கள் மொய்க்கும், மற்றும் தனது தோற்றத்தில் வேதனையைச் சுமக்கின்ற மனிதரை விட, தனது முகத்தில் பரலோகத்தை அணிந்து கொண்டுள்ள மனிதரால் அதிகமான மக்கள் பரலோகத்திற்கு வழி நடத்தப்படுவார்கள்.[1]

வில்லியம் பார்க்ளே, “மகிழ்ச்சியாய் இருப்பது ஒரு குற்றம் என்று இயேசு ஒருக்காலும் எண்ணியதில்லை, அவரது பின்பற்றாளர்கள் ஏன் அப்படி நினைக்க வேண்டும்?”[2] என்று விளக்கம் அளித்தார்.

அந்தத் திருமண வீட்டின் பலகணி வழியே நாம் எட்டிப் பார்த்து, இயேசு மகிழ்வை அனுபவித்துக் கொண்டிருந்ததை நாம் கவனிக்க வேண்டும் என்று யோவான் விரும்பினார் என்று நான் நம்புகின்றேன். அவர் அதிகமானவற்றைச் செய்ய வேண்டியிருந்தது, தீமை இந்த உலகில்

*இருந்தது, ஒரு சிலுவை அவருக்காகச் சாலையில் காத்திருந்தது. இந்தச் சிந்தனைகள் யாவையும் இயேசுவை நிலையான கடினத் தன்மையும், பாரமான இதயமும் கொண்டவராகச் செய்திருக்க முடியும்; ஆனால் ஒரு விழாவை மகிழ்வுடன் அனுபவிக்கவும், நண்பர்களிடத்தில் செல்லவும், ஒரு மணமகளையும் மணமகனையும் மதிக்கவும், மற்றும் கானாவூரில் திருமணத்தைக் கொண்டாடவும் மனுஷ குமாரன் நேரம் எடுத்துக் கொண்டார். இயேசுவைப் பற்றிய எந்தக் கருத்தும் மகிழ்வு நிறைவற்றது என்பதை அனுமதிப்பதில்லை.*

## குடும்பத்துடன் இயேசு செயல்பட்டார் *(2:3-5)*

*கொண்டாட்டம் தொடருகையில், "திராட்ச ரசம் குறைவுபட்டது" (2:3). இயேசுவின் தாய், இந்தச் சங்கடமான சூழ்நிலைக்கு பரிகாரம் காண வேண்டும் என்ற பொறுப்புணர்வைக் கொண்டிருந்தார்கள், எனவே இதைப் பற்றி ஏதாவது செய்யும்படி அப்பெண்மணி தமது மகனை அழைத்தார். அப்பெண்மணி, இயேசு செய்ய வேண்டும் என்று தாம் விரும்பியது என்ன என்று கூறவில்லை; அவர்கள் (அப்பெண்மணி) அவரிடத்தில் "அவர்களுக்குத் திராட்ச ரசம் இல்லை" (2:3) என்று மட்டும் கூறினார்கள். ''ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை" (2:4) என்பதே அவருடைய பதிலாக இருந்தது. இந்தக் கூற்றின் நேரடியான கிரேக்க மொழிபெயர்ப்பானது "எனக்கும் உனக்கும் என்ன?'' என்பதாகவே உள்ளது. இயேசுவின் வார்த்தைகளில் உள்ள முரட்டுத் தன்மை நம்மைக் கவலையடையச் செய்யலாம். அவர் நமது ஆறுதலுக்கு ஏறக்குறைய அதிகம் மனிதத்துவமானவராகத் தோன்று கின்றார். அவர் தமது தாயிடம் மரியாதையற்ற வகையிலோ அல்லது கடுமையாகவோ இருந்திருப்பார் என்று நான் நம்பாதிருக்கையில், தமது மாபெரும் ஊழியத்தைச் சிக்கலாக்கி விடக்கூடியதான ஒரு சூழ்நிலையில் தாம் ஈடுபட வேண்டும் என்று தமது தாயின் வற்புறுத்துதலின் மீது தமக்குள் சலிப்பை இயேசு விளக்கப்படுத்தினார் என்று நான் நினைக்கின்றேன்.*

*ஒரு மனித குடும்பத்தைச் சேர்ந்தவராயிருப்பதில் உள்ள இறுக்கம் மற்றும் நெருக்கமான சூழ்நிலைகளை இயேசு சமாளிக்க வேண்டியிருந்தது என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அவர் ஒரு மகனாகவும், ஒரு சகோதரனாகவும் வாழ்வை அனுபவித்தார் என்பது அவர் "மாம்சத்தில்" இருந்ததின் ஒரு பகுதியாக இருந்தது. பிற்பாடு அதிகாரம் 7ல் நாம், உடன்பிறந்தோரின் கலகத்தைக் காண முடியும், ஏனெனில் பரவி வந்த இயேசுவின் புகழுக்கு அவரது சகோதரர்கள், பொறாமையுடனும் விரோதத்துடனும் பதில்செயல் செய்தார்கள். இயேசு தமது தாயுடன் சேர்ந்து ஒரு பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் விதத்தையும், அவர் தமது சகோதரர்களின் மோசமான எண்ணப்போக்கைக் கவனித்ததையும் நாம் பார்க்கும் பொழுது, அது நாம் வேறெந்த வழியிலும் ஒருக்காலும் பெற்றிருக்க முடியாத ஒரு மிக மேன்மையான சித்தரிப்பைப் பெற நம்மை*

அனுமதிக்கின்றது.

இயேசுவுக்கும் நமக்கும், குடும்பம் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. அதே வேளையில், குடும்பமானது நமது வாழ்வைச் சிக்கலாக்கு கின்றது. குடும்ப உறவுகள் சிக்கலானவைகளாகவும், பெரும்பாலும் நாம் தேர்ந்து கொள்ளாத சூழ்நிலைகளுடன் நம்மை எதிர்கொள்வதாகவும் உள்ளன. நமது குடும்பங்களுக்குள் நாம் நமது சில மாபெரும் மகிழ்ச்சி களையும் மற்றும் மிக ஆழமான வேதனைகளையும் அறிகின்றோம். உறவு முறைகள் வலிவார்ந்த வகையில் நெருக்கமாகவும், தொடர்ந்து மாறுவதா கவும், மற்றும் அடிக்கடி குழப்பமூட்டுவதாகவும் உள்ளன. ஒவ்வொன்றை யும் அறிந்த தேவனைப் போன்றவர்கள் என்ற வகையில் நமது பெற்றோரை நோக்கிப் பார்த்து, நமது வாழ்வைத் தொடங்குகின்றோம், பிறகு அவர்கள் எதையேனும் அறிந்துள்ளனரென்றால், நாம் வியப்படையும் ஒரு காலத்திற்குச் சென்று, அவர்களின் ஞானத்தைக் குறித்து ஆச்சரியப்படும் காலத்திற்கே திரும்புகின்றோம். ஏனெனில் நமது வாழ்வின் பெரும் பகுதியில் நாம் தலைமுறைகளுக்கிடையில் நின்று, மற்றவர்கள் நம்மீது எவ்வளவு கட்டுப்பாடு செலுத்த அனுமதிக்க முடியும் என்று விவாதிக்கை யில், இன்னொருவர் மீது நாம் எவ்வளவு கட்டுப்பாடு செலுத்த முடியும் என்று வியப்படைகின்றோம்!

ஒரு குடும்பத்தின் குழப்பமான அலைகளினால் இந்தத் திருமணத்தில் இயேசு மாறுபட்ட இலக்குகளுக்கு இழுக்கப்பட்டார். அவர் தமது தாய் மீது கொண்டுள்ள மரியாதை மற்றும் அன்பு ஆகியவை ஒரு பக்கத்திலும், மற்றவர்க்குத் தமது கடமையின் அர்ப்பணிப்பு இன்னொரு பக்கத்திலும் இருக்க இவையிரண்டுக்கும் நடுவில் இயேசு நின்று கொண்டிருந்ததை நாம் காண்கின்றோம். அவருடையது ''நல்ல'' மற்றும் ''மிகச் சிறந்த'' என்பவற்றிற்கிடையிலான பயங்கரமான முரண்பாடாக இருந்தது. அவர் தமது தாயின் விருப்பங்களையும் தமது தகப்பனின் சித்தத்தையும் சமானப் படுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். நாம் இயேசுவை ஒரு கணவராகவோ அல்லது ஒரு பெற்றோராகவோ காணும் வாய்ப்பை ஒருக்காலும் பெறாதவர்களாயிருக்கையில், நாம் அவரை ஒரு வயது முதிர்ந்த மகனாக, ஒரு குடும்பத்தின் அங்கமாய் இருப்பதால் அக்குடும்பத்தால் கொண்டு வரப்பட்ட சிக்கலான சூழ்நிலையைக் கையாளுபவராகக் காண்கின்றோம். அதற்காக, ஒரு குடும்பத்தில் வாழும் நாம் யாவரும் நன்றி நிறைந்தவர்களாய் இருக்க முடியும்!

## இயேசு தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தினார் (2:6-11)

இயேசு, தாம் அற்புதங்கள் செய்பவர் என்று பரவலாக அறியப்பட வேண்டிய வேளை இன்னும் வரவில்லை என்று தமது தாயிடம் கூறினாலும், விருந்திற்கு வந்திருந்த வேலையாட்களிடம் அவர் திரும்பி, அருகில் இருந்த ஆறு கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பும்படி கேட்டுக் கொண்டார். அவர்கள் தங்களுக்குக் கூறப்பட்டபடியே அவைகளின் விளிம்பு வரையிலும் நீரை

நிரப்பினார்கள். பிறகு அவர் அந்தத் தண்ணீரில் இருந்து சிறிது முகர்ந்து எடுத்து பந்தி விசாரிப்புக்காரரிடம் கொண்டு போகும்படி அவர்களுக்குக் கூறினார். மீண்டும் அவர்கள் உண்மையுடன் கீழ்ப்படிந்தார்கள். பந்தி விசாரிப்புக்காரர் அந்தத் தண்ணீரைச் சுவைத்த பொழுது, அது திராட்ச ரசமாகியிருந்ததைக் கண்டார். உண்மையில் அது அந்தத் திருமண விழாவின் மிகச் சிறந்த திராட்ச ரசமாகி இருந்தது! மிகச் சிறந்த திராட்ச ரசத்தைக் கடைசி வரைக்கும் சேர்த்து வைக்கும் வினோதமான பழக்கம் பற்றி அவர் மணமகனை வரவழைத்துக்கூடக் கேட்டார்.

"இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" (2:11) என்று எழுதியதன் மூலம் யோவான் இந்த நிகழ்ச்சி பற்றிய விவரத்தை முடித்தார். "அற்புதம்" என்பது யோவானுக்கு மிக முக்கியமான ஒரு வார்த்தையாக இருந்தது. அதிகாரம் 2 முதல் 12 வரையிலும் பிரதானமான ஏழு அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வார்த்தையானது இயேசு செய்த பலத்த செயல்கள் அல்லது அற்புதங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும் ஒரு அடையாளம் என்பது அற்புதத்தைவிட அதிகமானதாக உள்ளது; அற்புதம் என்பது மக்களுக்கு அற்புதத்தின் மூல ஆதாரத்தை - தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவின் மூலம் செயல்படுவதை - சுட்டிக்காட்டுகின்றது. தண்ணீரைத் திராட்ச ரசமாக மாற்றிய அடையாளத்தில் இயேசு, "அவருடைய மகிமையை வெளிப்படுத்தி" (2:11), தேவன் தம்முடனே இருக்கின்றார் என்பதைச் செயல் விளக்கப்படுத்தினார். அடையாளத்திற்குச் சாட்சியளிக்கும் தக்க பதில்செயலை இயேசுவின் சீஷர்கள் மிகச் சரியாகச் செய்தனர்: அவர்கள் விசுவாசித்தனர். இந்த சுவிசேஷத்திற்கான யோவானின் நோக்கக்கூற்றில் "அடையாளங்கள்" மற்றும் "விசுவாசம்" ஆகிய திறவுகோல் வார்த்தைகள் இரண்டும் ஒன்றிணைந்து தோன்றுகின்றன:

> இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (20:30, 31).

## முடிவுரை

இந்த இரகசியமான நிகழ்ச்சியானது விசுவாசிப்பதற்குத் தெளிவான அழைப்பை நமக்கு விட்டுச் செல்கிறது. இந்த அடையாளமானது இயேசு தாம் யார் என்று உரிமைகோரினாரோ, அதைச் செயல்விளக்கப்படுத்தியது. மேலும் இது, இயேசு பொருட்களை மாற்ற வல்லமை கொண்டிருந்தார் என்பதையும் செயல்விளக்கப்படுத்தியது. இந்த வரலாற்றில் தண்ணீர் திராட்ச ரசமாயிற்று; பிற்பாடு இருளில் இழக்கப்பட்டிருந்த மக்கள் ஒளியைச் சுமக்கும் தேவனுடைய பிள்ளைகளாக மாற்றப்பட்டார்கள்.

இருப்பினும், இந்த வேத பாடப் பகுதியானது யோவான் சுவிசேஷம் முழுவதிலும் இதன் சந்தர்ப்பப் பொருளில் நிலைத்திருக்க வேண்டும் என்பதை நினைவில் வையுங்கள். இது இயேசு நிகழ்த்திய அடையாளங் களில் முதலாவது - மற்றும் அநேகமாக மிகவும் குறைவான - அடையாளம் ஆகும். பிற்பாடு நாம், மாபெரும் விசுவாசத்திற்கு அழைக்கும் மாபெரும் அடையாளங்களைக் காண்போம். இந்த இடத்தில், "நீங்கள் அடையாளத் தைக் கண்டீர்களா? நீங்கள் இயேசுவைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? நீங்கள் விசுவாசத்தில் வளர்ந்து கொண்டிருக்கின்றீர்களா? நீங்கள் தொடர்ந்து தேடவும், கவனிக்கவும், கேட்கவும் மற்றும் பின்பற்றவும் செய்வீர்களா?" என்று கேட்பது போதுமானதாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]C. H. Spurgeon, *Lectures to My Students* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1970), 170. [2]William Barclay, *The Gospel of John*, vol. 1, The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1975), 85.

---

## *யோவான் சுவிசேஷத்தின் நாள் வரிசை அட்டவணை*

"யோவான் சுவிசேஷம் இயேசுவின் வாழ்வு பற்றிய நமது நாள் வரிசை அட்டவணையின் அடிப்படையாக உள்ளது."

"இயேசுவின் ஊழியமானது ஒப்பீட்டு சுவிசேஷ எடுத்துரைப்புகளில் ஓராண்டுக் காலத்திலேயே முடிந்ததாகத் தோன்றும், ஆனால் யோவானின் எடுத்துரைப்பில் அதற்கு மூன்று அல்லது மூன்றுக்கு அதிகமான ஆண்டுகள் குறிக்கப்பட்டுள்ளது. இந்த சுவிசேஷத்தினால் மற்றும் இதனால் மட்டுமே இயேசுவின் ஊழியக்காலங்களை நாம் நிலைநாட்டவும் அதன் புறவடிவமைப்பை மறுகட்டுமானம் செய்யவும் முடியும்."

*A Guide to the Gospels*
W. கிரஹாம் ஸ்க்ரோகி

# "உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம்"

# (2:12-22)

பரிதாபமான செய்திக் கதைகள் நம்மை ஆழமாகக் கவலையுறச் செய்து, நமது வாழ்வின் மற்ற பகுதிகளுக்குச் சிந்திச் சிதறுகின்றன. பிரியமான பிரபலமானவர்கள் அல்லது மதிப்பிற்குரிய தலைவர்கள் போதைப் பொருளைப் பயன்படுத்துதல், ஒழுக்கமற்ற வியாபார நடவடிக்கைகள், ஒழுங்கற்ற நடத்தை அல்லது வீட்டில் வன்முறை போன்ற செயல்களைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்படும் போது நாம் அதிர்ச்சிக்குள்ளா கின்றோம். நாம் பின்வரும் யாரையாவது உண்மையாகவே அறிந்திருக் கின்றோமா என்று ஆச்சரியப்படுகின்றோம். நமது துணைவர்கள், நமது பிள்ளைகள், நமது சகோதரர்கள் அல்லது சகோதரிகள், அல்லது நம்மையே கூட! இந்தக் காரணத்தினால், நாம் நன்கு அறிய விரும்பும் மக்களுடன் மாறுபட்ட சூழ்நிலைகளில் அனுபவம் பெறுவது மிகவும் முக்கியமானதாக உள்ளது. பல்கலைக் கழக மாணவர்கள் எதிர்ப்பாலாருடன் பழகுதல் என்ற செயலைச் (dating) செய்கின்ற நிலையில் அவர்களுக்குப் போதித்தல் என்ற பணியைச் செய்கின்ற நான் அவர்களுக்கு, வாழ்வின் மிகப் பல வகையான சூழ்நிலைகளில் அவர்களின் எதிர்காலக் கணவர்/மனைவி எவ்விதம் செயல்படுகின்றார்/ள் என்பதைக் காணப் போதிய அளவு நீண்ட நாட்கள் அவர்களுடன் பழகுவது (dating) எவ்விதத்தில் மிக முக்கியமானது என்று நான் அடிக்கடி நினைவூட்டுவதுண்டு. வாழ்வு நன்றாயிருக்கும் பொழுதும் அவ்வாறு இல்லாதிருக்கும் பொழுது அவர்கள் ஒருவர் மற்றவரைக் காணுவது அவசியம் ஆகும். அவர்கள் ஒருவர் மற்றவரை ஓய்ந்திருக்கை யிலும், மற்றும் அவர்கள் வேலை செய்து முடித்து களைப்படைந்திருக்கை யிலும் காண்பது அவசியமாகும். அவர்கள் ஒருவர் மற்றவரை வெற்றிய டைந்த நிலையிலும் மற்றும் சில விஷயங்களில் தோல்வியடைந்த நிலையிலும் காண்பது அவசியம், ஏனென்றால் ஒரு நபரைப் பல மாறுபட்ட அமைவுகளில் காண்பதிலிருந்து மட்டுமே உண்மையில் அந்த நபர் யார் என்பதை நாம் அறிய வருகின்றோம்.

இந்தப் பாடத்தின் வேத வசனப்பகுதியான யோவான் 2:12-22,

இயேசுவை நாம் இன்னும் மற்றொரு சூழ்நிலையில் காண அனுமதிக்கின்றது. இந்த வேளையில் இது கானாவூர்த் திருமணக் காட்சியை விட மிகப் பெரிய, அதிகம் பயம் மிகுந்த, மற்றும் நபருடன் சம்பந்தப்படாததாக உள்ளது. இவ்வசனப் பகுதியானது நம்மை யூதர்களின் விசுவாசத்தினுடைய மைய இடமும், பின்னாளில் சிலுவையில் அறையப்படும்படி இயேசுவுக்குத் தண்டனை தரவிருந்த இடமுமான எருசலேம் தேவாலயத்திற்கு அழைத்துச் செல்கின்றது. இந்த விரோதமிக்க சூழ்நிலையில் இயேசு கூறுவதைக் கேட்டு, அவரைக் கவனித்தல் என்பது தேவனுடைய குமாரன் என்று உரிமைகோரிக் கொண்டவரின் இன்னொரு பக்கத்தை நாம் காண அனுமதிக்கின்றது. இந்த வசனப் பகுதியில் நாம் காண்பது, இயேசுவை நாம் இதற்கு முன் அறிந்திருந்ததைக் காட்டிலும் இன்னும் சிறப்பாக அறிய அனுமதிக்கின்றது.

## நாம் அவருடைய கோபத்தைக் காண்கின்றோம் *(2:12-16அ)*

இந்த நிகழ்ச்சிகள் பஸ்கா காலத்தில் நடைபெற்றன (2:13). இந்தப் பண்டிகையானது, ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு யூத மனிதரும் கலந்து கொள்ளும்படி எதிர்பார்க்கப்பட்ட மூன்று பண்டிகைகளில் ஒன்றாக இருந்தது. இது மோசேயின் காலத்தில் எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் விடுதலையானதை நினைவுகூர்ந்தது, மற்றும் யூத மக்கள் எப்படி (யூத மக்களாக) இருக்க வந்தனர் என்பதை அவர்களுக்கு நினைவூட்டவும் இது பணியாற்றியது. பஸ்கா விருந்தினர்கள் நகருக்கு வருகையில் எருசலேம் நகரில் அதன் சாதாரண மக்கள் தொகையை விடப் பல மடங்கு அதிகமாகப் பெருகியிருக்கும். கும்பல்கள் மக்களை உணர்வெழுச்சி பெற முனைப்புக் காட்டும்; மற்றும் ஆண்டுகள் கடந்த பொழுது, பஸ்காவும் கூட, வரவிருந்த மேசியா பற்றிய எதிர்பார்ப்புகள் எழுப்பப்படும் காலமாக ஆயிற்று.[1] "மேசியா இந்த ஆண்டில் வருவாரா?" என்று மக்கள் ஒருவருக்கொருவர் கேட்பதுண்டு. சில காரணத்திற்காக, அவர் வருவார் என்று பஸ்கா காலத்தில் கற்பனை செய்வது மிகவும் சுலபமாய் இருந்தது!

இயேசு எருசலேமைச் சென்றடைந்த பொழுது அவர் கண்ட தேவாலயம் இஸ்ரவேலரின் வரலாற்றில் மூன்றாவது தேவாலயமாக இருந்தது. சாலொமோன் மற்றும் செருபாபேல் ஆகியோரினால் கட்டப்பட்ட தேவாலயங்களைத் தொடர்ந்து, இந்த ஆலயமானது அதன் கட்டுமானத்திற்குப் பொறுப்பாளராயிருந்த ஏரோதின் பெயரைக் கொண்டு, ஏரோதின் தேவாலயம் என்று அறியப்பட்டிருந்தது. இந்த வேளையில் இயேசு தேவாலயத்தில் பிரவேசித்த பொழுது, அது ஏற்கனவே நாற்பத்தி ஆறு ஆண்டுகள் அளவாகக் கட்டப்பட்டதாயிருந்தது (2:20), மற்றும் கி.பி. 64 வரையான மற்ற முப்பத்தியாறு வருடங்களுக்கும் அதன் கட்டுமானப் பணி முற்றுப் பெறாததாக இருந்தது. தேவாலயத்தின் நிலங்கள் விசாலமான மண்டபங்களைக் கொண்ட, உண்மையில் மிகப் பெரும் பகுதியாகவும், மதில்கள் ஆலயத்தினுள் வழிகாட்டிச் செல்லும் படியானதாகவும் இருந்தது.[2] தேவாலய நிலங்களில் பிரவேசிக்கையில்,

முதலாவது மண்டபம் புறஜாதியாரின் மண்டபமாக இருந்தது. இந்தப் பகுதியில் எவரொருவரும் பிரவேசிக்க முடிந்தது. இதற்கு அப்பால் பெண்களின் மண்டபம் இருந்தது, இதனுள் யூதர்கள் மட்டுமே பிரவேசிக்க முடிந்தது. அடுத்து இஸ்ரவேலரின் மண்டபத்திற்குள் வழி நடத்தும் வாசல் இருந்தது, இதனுள் யூத ஆண்கள் மட்டுமே பிரவேசிக்க முடிந்தது. கடைசியாக, யூத மத ஆசாரியர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்ட மண்டபம் ஒன்றிருந்தது. “தேவாலயம்” என்ற வார்த்தையை நாம் கூறும் பொழுது, நம்மில் பெரும்பாலோர் நினைத்துப் பார்க்கின்ற கட்டிட அமைப்பு இதுவாகவே இருந்தது.

புறஜாதியாரின் மண்டபம் என்பது தேவாலயத்தில் ஒவ்வொருவரும் செல்ல முடிந்த இடமாக இருந்ததால், அது வர்த்தகர்களும், காசுக் காரர்களும் தங்கள் கடைகளை வைக்கும் இடமாக இருந்தது. தொலை தூரத்திலிருந்து இங்கு ஆராதிக்க வருபவர்கள் பலி செலுத்துவதற்கு விலங்கு ஒன்றை வாங்க வேண்டிய அவசியம் இருந்ததால், ஆடுகள், புறாக்கள் மற்றும் பசுக்கள் விற்கும் மும்முரமான வியாபாரம் அங்கு நடைபெற்றது. இருபது வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு யூத ஆணும் தேவாலய வரி செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டதால், தேவாலயத்தின் நிலங்களில் காசுக்காரர்களுக்கு வர்த்தக வாய்ப்பு உருவாக்கப்பட்டிருந்தது. இந்தச் செயல்கள் யாவும் அநேகமாக, தேவாலயத்து மண்டபத்தில் அதிகமான இரைச்சலையும், பெருமளவு கூச்சலையும் உண்டாக்கிற்று, ஆனால் காலங்கள் செல்லச் செல்ல இவை எல்லாவற்றையும், மக்கள் சாதாரணமானது என்று ஏற்றுக் கொண்டனர். பிறகு இயேசு வந்தார்.

இயேசு தேவாலயத்தினுள் வந்த பொழுது, அங்கு நடந்து கொண்டிருந்தவற்றை மற்ற ஒவ்வொருவரும் கண்டதிலிருந்து வித்தியாசமான முறையில் அவர் கண்டார். யோவான் பின்வருமாறு எழுதினார்:

> கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி, அவர்கள் யாவரையும் ஆடு மாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்தி விட்டு, காசுக் காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப் போட்டார். புறா விற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்தி லிருந்து எடுத்துக் கொண்டு போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார் (2:15, 16).

தேவாலயத்தைச் சுத்திகரித்த இவ்வரலாற்றை மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகியோர் எடுத்துரைத்த பொழுது அவர்கள், வர்த்தகர்கள் ஆலயத்தை “கள்வர்”[3] குகையாக்கியிருந்த வகையை இயேசு எதிர்த்தார் என்று சுட்டிக்காட்டினார், இது அவர்களின் நேர்மையற்ற வியாபாரத்தைக் கண்டு இயேசு கோபமுற்றதாகச் சுட்டிக்காட்டுகின்றது, இருப்பினும் தேவாலயத்தில் எவ்வித வியாபாரமும் இருப்பதை இயேசு எதிர்த்தார் என்பதை யோவான் சுட்டிக்காட்டினார். தேவாலயமானது ஜெப வீடாக, எல்லா நாடுகளில் இருந்தும் மக்கள் வந்து தேவனை ஆராதிக்கும் இடமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. இயேசு கண்டதோ, ஆவிக்குரிய தியான இடம் என்பதைக் காட்டிலும் அதிகமாக வணிக மண்டபமாக அல்லது

சந்தையிடமாக இருந்த நிலையாகும். அவர் சூழ்நிலையைக் கட்டுப்படுத்தி, வர்த்தகர்களையும், விலங்குகளையும் தேவாலயத்தை விட்டு வெளியே துரத்தியபொழுது மனதில் ஆழப்பதியக் கூடியவராக, பயமுறுத்தக் கூடியவராகக்கூட இருந்திருக்க வேண்டும்.

கோபித்தல் என்பது வாழ்வின் ஒரு வழிமுறையாக இருப்பது இயேசு மற்றும் பவுல் ஆகிய இருவராலும் கண்டனம் செய்யப்பட்டுள்ளது;[4] ஆனால் சில வேளைகளில் இயேசு கோபமடைந்தார் - மற்றும் பாவம் செய்யாமல் அவர் அவ்வாறு செயல்பட முடிந்தது.[5] கோபத்தின் இவ்விரண்டு வகைகளுக்குமிடையே உள்ள வேறுபாடு என்ன? மனிதரின் இழிநிலை, பாதுகாப்பின்மை அல்லது சலிப்பு ஆகியவற்றிலிருந்து கோபம் கிளம்புகின்றது என்பது உறுதி. இதற்கு மறுபுறம், தேவனுக்கேற்ற கோபம் என்பது மக்கள் துன்புறுத்தப்பட்டோ அல்லது மற்றவர்களின் செயல்பாடுகளினால் தேவனிடமிருந்து விலக்கப்பட்டோ இருக்கையில் எழுகின்ற கோபமாக உள்ளது. தேவாலயத்தில் நடைபெற்ற வர்த்தக நடவடிக்கைகள் மக்களைத் தேவனிடத்திலிருந்து விலக்கி வைத்திருந்ததை இயேசு கண்டார், மற்றும் அது சகித்துக் கொள்ள முடியாததாயிருந்தது!

இந்தக் காட்சியானது, நாம் ஆராதனைக்கு ஒன்றுகூடுகையில் நமது சகோதர, சகோதரிகளை எவ்விதத்தில் நடத்துகின்றோம் என்பதற்கு எளிய வகையில் நடைமுறைப்படுத்தும் உதாரணமாக உள்ளது. பல மக்கள், குறிப்பாக மருத்துவர்கள் மற்றும் வியாபாரிகள் ஆகியோர் அவர்களிடத்தில் மக்கள் ஆராதனைக்கு முன்னும் பின்னும் வியாபார ரீதியான கேள்விகள் கேட்பதால் தொந்தரவு செய்யப்படுவதை நான் அறிந்துள்ளேன். அவர்கள் "ஜெப வீட்டிற்கு" வர விரும்புகின்றனர், ஆனால் "வியாபார வீட்டை"யே அவர்கள் காண்கின்றனர். ஒவ்வொருவரும் தடைப்படுத்தப்படாமல் ஆராதிக்க முடியும்படியாக நாம் வியாபார விஷயங்களைச் சபை கூடுதலுக்குப் புறம்பே விட்டு வர வேண்டும் என்று அவ்வப்போது நமக்கு நினைவூட்டப்படுதல் அவசியமாயிருக்கின்றது.

தேவாலயத்தில் இயேசுவின் நடக்கையை நமது வாழ்வில் பிரதானமாய் நடைமுறைப்படுத்துதல் என்பது "இயேசுவைக் கோபப்படுத்தும் சூழ்நிலைகளில் நான் கோபம் அடைகின்றேனா?" என்று நம்மையே கேட்பதிலிருந்து வருகின்றது. இயேசுவைக் கோபப்படுத்தாத விஷயங்களின் மீது நாம் கோபம் கொள்வதும், மற்றும் தேவாலயத்தைச் சுத்திகரிக்க இயேசுவை வழி நடத்திய விஷயம் போன்ற பிரச்சனைகளில் அமைதியாய் இருப்பதும் நமக்குள்ள சோதனையாக இருக்கின்றது. இயேசுவின் கோபம் தகுதியானதும்,நேர்மறையானதும், மற்றும் கவனம் குவிக்கப்பட்டதுமாய் இருந்தது. இது எப்பொழுதுமே அவரது அன்பின் புறவளர்ச்சியாயிருந்து, மற்றவர்கள்மீது அவர் கொண்டிருந்த ஆர்வத்தினால் செயல்படும்படி அவரை வழி நடத்தியது.

நம்மில் பெரும்பாலோர் ஒரு கோபப் பிரச்சனையைக் கொண்டவர்களாய் இருக்கின்றோம். நம்மில் சிலருக்கு இது கோபத்தின் தவறான வகை நமது வாழ்வில் மிகவும் அதிகமாய் இருக்கின்ற பிரச்சனையாக உள்ளது. மற்றவர்களுக்கு இது தேவனுக்கேற்ற கோபம் இல்லாமையின் பிரச்சனை

*யாக உள்ளது. எடுத்துக்காட்டாக, நமது நாட்டில் வாக்களித்தலில் ஏற்பட்டுள்ள ஒழுக்கச் சரிவைப் பற்றி நீங்கள் போதுமான அளவு கோபம் கொள்கின்றீர்களா? தேர்தல்களில் கள்ள ஓட்டுப் போடுவதும், வாக்களிக்க இலஞ்சம் கொடுப்பதும், வாக்குச் சாவடிகளை அராஜகமாய்க் கைப்பற்று வதும் சமீப காலங்களில் நமது நாட்டில் அதிகமாய்ப் பெருகியிருக்கின்றது. அமெரிக்காவிலும் கூட, 1990ன் தேசீயத் தேர்தலின் போது, தங்களை ஓரினச் சேர்க்கையாளர்கள் என்று வெளிப்படையாய் அறிக்கையிட்டுக் கொண்ட வர்களில் 90 சதவிகிதத்தினர் வாக்களித்திருக்கையில், இயேசுவைப் பின்பற்றுகிறதாக அறிக்கையிட்டவர்கள் 35 சதவிகிதம் மட்டுமே வாக்களித் திருந்தனர். இப்படிப்பட்ட அக்கறையின்மையானது தேவனுக்கேற்ற கோபத்தின் அவசியத்தைப் பிரதிபலிக்கின்றது.*

*பிள்ளைகளைப் புறக்கணிக்கும் விஷயம் பற்றி என்ன கூறலாம்? அவர்களின் நெருக்கடியான நிலைமையானது உங்கள் இருதயத்தை உடைந்து போகச் செய்து, அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப் போதுமான அளவுக்கு உங்களைக் கோபப்படுத்துகின்றதா? நமது கலாச்சாரத்தில் உள்ள நம்பிக்கை நிறைந்த சில போக்குகளைப் பற்றி ஜேம்ஸ் டோப்ஸன் அவர்கள் சமீபத்தில் பேசினார். அவர், பல இளம் மக்கள் தங்கள் முந்திய தலைமுறையினரைக் காட்டிலும் மிக அதிகமாக விவாகரத்திற்கு எதிராக இருப்பதற்குக் காரணம் தங்கள் சுயநலமிக்க பெற்றோர்களால் தாங்கள் புறக்கணிக்கப்பட்டதால் துன்புற்றதில் ஏற்பட்ட கோபமாகவே உள்ளது என்பதைக் காணத் தொடங்கியதாகக் கூறினார்! அவர்களுக்கு, கோபம் என்பது ஒரு நேர்மறையான நோக்கத்திற்காகச் செயல்பட்டுள்ளது.*

*நாடுகளின் மீது சாத்தான் கொண்டுள்ள அதிகாரத்தைப்பற்றி என்ன கூறலாம்? யுத்தம், வியாதி, பட்டினி மற்றும் தேவை ஆகியவை பற்றி நீங்கள் கேள்விப்படும் பொழுது, உதவும்படி அங்கு செல்லவோ அல்லது அங்கு செல்லக்கூடியவர்களை ஆதரிக்கவோ போதுமானவராக உங்கள் கோபம் உங்களை மாற்றுகின்றதா? சாத்தான் தனது சொந்த வழியை இவ்வுலகில் கொண்டிருப்பதை நீங்கள் வெறுமனே உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்க முடியுமா?*

*தேவன் நம்மை அதிக கோபமுள்ள மக்களாக்குவாராக - இது அதிகம் அற்பமானதல்ல, அதிகம் சுயநலமுள்ளதல்ல, அல்லது அதிகம் சலிப்பான தல்ல, ஆனால் உலகத்தின் துன்பம் பற்றிய கோபமாக இருக்கட்டும். நாம் அன்பு காட்டப் போதுமான அளவு கோபமுள்ளவராக்குவாராக!*

## *நாம் அவருடைய அடையாளப்படுத்துதலின் உணர்வைக் காண்கின்றோம் (2:16ஆ, 17)*

*நான் ஒரு கார் நிறுத்துமிடத்திற்குச் சென்று, அங்கு ஒரு காரானது விற்பனை வண்டியொன்றினால் வடுப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்பது என்பது ஒரு விஷயமாக உள்ளது; வடுப்படுத்தப்பட்ட காரானது என்னு டையதாயிருக்கும் பொழுது, அது முற்றிலும் மாறுபட்ட ஒரு விஷயமாகி விடுகின்றது! இன்னொருவருடைய வீட்டின் முற்றத்தில் பீர் கேன்கள்*

வீசப்பட்டிருப்பதை நான் காண்பது என்பது ஒரு விஷயம்: அந்த முற்றம் என்னுடையதாயிருக்கும் பொழுது, அது முற்றிலும் மாறுபட்ட ஒரு விஷயமாய் இருக்கின்றது! ஒரு பூங்காவில் அமரும் இருக்கையானது பாழக்கப்பட்டிருப்பதை நான் காணும் பொழுது அது என்னைச் சினமூட்டுகின்றது; அவ்வாறு பாழாக்கப்பட்ட வீட்டுப் பொருள் என்னுடையதாயிருக்கையில் அது இன்னும் அதிகம் சினமூட்டுவதாயிருக்கின்றது! சில பொருட்கள் நம்முடையவைகளாய் இராதபொழுது நாம் அதில் சிறிதளவே ஆர்வம் எடுத்துக் கொள்ளுகின்றோம். இருப்பினும், நமது சொந்த உடமைகளுக்கு நடக்கின்றவைகளை நாம் தீவிரமாய் எடுத்துக் கொள்ளுகின்றோம்.

தேவனுடைய ஆலயமானது தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததை இயேசு கண்ட பொழுது, அவர் அதை மிகவும் சொந்தமான விஷயமாகக் கையாண்டார். இயேசு அதை "என் பிதாவின் வீடு" (2:16) என்று கூறினார். அவருக்கு அது, யூதர்களின் தேவாலயம் அல்லது எருசலேமிலிருந்த இன்னொரு பொதுக்கட்டிடம் என்பதைக்காட்டிலும் அதிகமானதாக இருந்தது; அது அவருடைய பிதாவின் வீடாக இருந்தது. இயேசுவின் சீஷர்கள் சங்கீதம் 69ல் இருந்து ஒரு வசனப் பகுதியை நினைவுகூருமளவுக்கு அங்கு நடந்தவைகள் பற்றி இயேசு கவலையுற்றார்: "உம்முடைய வீட்டைக் குறித்து பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது" (சங். 69:9). "பட்சித்தல்" என்ற வார்த்தையானது "அழித்தல்" அல்லது "தின்றது" என்ற கருத்தைச் சுமக்கின்றது. தேவாலயத்தின் பரிசுத்தத்தைக் கெடுத்தல் என்பது அமெரிக்காவில் புகழ்பெற்ற மரபுச் சொற்றொடரான "இயேசுவை உயிரோடு தின்னுதல்" என்பதைப் பயன்படுத்தக் கூறப்படலாம். இயேசுவுக்கு இது ஒரு பொது இடத்தைக் காட்டிலும் மேலானதாக இருந்தது; இது அவருடைய பிதாவின் வீடாக இருந்தது!

தேவாலயத்திற்கு நடந்திருந்ததை இயேசு தம் சொந்தமானதாக எடுத்துக் கொண்டிருந்தார் என்ற உண்மையானது, இயேசு தம்மை யாரென்று புரிந்து கொண்டிருந்ததற்கான இன்னொரு சுட்டிக்காட்டுதலாக உள்ளது. அவர் வர்த்தகர்களிடத்தில் "என் பிதாவின் வீடு" என்று சத்தமிட்ட பொழுது, "நான் தேவனுடைய குமாரானாக இருக்கின்றேன்" என்ற வார்த்தைகளையும் அவர் கூறிக் கொண்டிருந்தார். யோவான் தமது சுவிசேஷத்தின் முடிவுப் பகுதியில் (20:31) இந்த உரிமைகோருதலையே நாம் விசுவாசிக்க வேண்டும் என்று விரும்பினார்.

பின்வரும் கேள்விகளை நீங்கள் உங்களிடத்திலேயே கேட்டுக் கொள்ளுங்கள்: "தேவனுடையவைகளை நான் எவ்வளவாக அடையாளம் கண்டு கொள்கின்றேன்?"; "நான் இந்த உலகத்தை 'என் பிதாவின் உலகம்' என்பதாகக் கண்ணோக்குகின்றேனா?"; "சபையை நான் 'என் பிதாவின் சபை' என்ற வகையில் தற்காக்கின்றேனா?"; "சுவிசேஷத்தைப் பரப்பும் பணியை நான் 'எனது பிதாவின் பணி' என்று நினைக்கின்றேனா?" தம்முடைய பிதாவுக்குக் குறிப்பிடத்தக்கதாய் உள்ள ஏதொன்றையும் தேவனுடைய பிள்ளை அக்கறையற்ற வகையில் நடத்த முடியாது என்பதை தேவாலயத்தில் இயேசு செயல் விளக்கப்படுத்தினார்.

## நாம் அவருடைய ஊழிய உணர்வைக் காண்கின்றோம் (2:18-22)

தேவாலயத்தின் மீதுள்ள பக்தி வைராக்கியத்தைப் பற்றிய இயேசுவின் செயல்விளக்கத்தின் மீது ஒவ்வொருவரும் பிரியத்துடன் இருக்கவில்லை. அவர்களின் வழக்கமான செயல்முறைகளுக்கு இடையூறு செய்யவும் அவர்களின் வியாபாரத்தை நொறுக்கவும் அவர் கொண்டிருந்த அதிகாரம் என்ன என்று அவர்கள் வியப்படைந்தார்கள். அந்தக் காரணத்தினாலேயே அவர்கள், "நீர் இவைகளைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்?" (2:18) என்று இயேசுவிடம் கேட்டார்கள். அவர்கள் வேண்டிக்கொண்டபடி ஒரு அற்புதத்தை நிகழ்த்துவதற்குப் பதிலாக, இயேசு, அவர்கள் அந்த ஆலயத்தை இடித்துப் போட்டால், தாம் மூன்று நாளைக்குள்ளே அதை மீண்டும் கட்டுவதாகக் கூறினார் (2:19). பல டன்கள் எடை கொண்ட கற்களைக் கொண்டு கட்டப்பட்ட நெடிய மதில் களுக்கிடையில் நின்றிருந்த அவர்களுக்கு இப்படிப்பட்ட உரிமை கோருதலானது ஒரு பைத்தியம் பிடித்த மனிதரின் பிதற்றல் போல ஒலித்தது. இயேசு, சிலுவையில் "அழிக்கப்பட்டு" மற்றும் மூன்று நாட்களுக்குப்பின் தேவனுடைய வல்லமையால் ''எழுப்பப்பட'' இருந்த தம்முடைய சரீரத்தைக் குறித்து இதைச் சொன்னார் என்று யோவான் விளக்கப் படுத்தினார் (2:21).

சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுதல் நடைபெற்ற பிறகு அவருடைய வார்த்தைகளைச் சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள். உயிர்த் தெழுதல் என்பது எல்லாவற்றிலும் பெரிய அடையாளமாயிற்று. அடையாளம் என்ற வகையில், அது வேத வசனங்களிலும் மற்றும் இயேசுவின் வார்த்தைகளிலும் சீஷர்கள் "விசுவாசித்தனர்" (2:22) என்று தனது நோக்கத்தின்படியான விளைவைக் கொண்டிருந்தது. அந்த வேளையில், இயேசுவின் வாழ்வில் பல நிகழ்ச்சிகள் அவர்களுக்கு அர்த்தம் ஏற்படுத்துபவைகளாயின.

## முடிவுரை

நாம் யோவானின் சுவிசேஷத்தை வாசிக்கையில், நாம் வரலாற்றைத் தொடங்கும் முன்பே அது உயிர்த்தெழுதலில் முடிகின்றதை அறிகின்றோம். இதன் விளைவாக, சீஷர்கள் இயேசு மரித்தோரிலிருந்து எழுந்த பிறகு மட்டுமே கொண்டிருந்த வகையிலான கண்ணோட்டத்துடன் நாம் முழு சுவிசேஷத்தையும் வாசிக்கின்றோம். இன்றைய நாளில் இதை நாம் வாசிக் கும் பொழுது, முதல் நூற்றாண்டு சீஷர்கள் செய்த அதே வகையிலேயே நாமும் பதில்செயல் செய்வோம் என்று ஆவியானவர் நோக்கம் கொள்கின்றார்; இயேசுவே கிறிஸ்துவாய் இருக்கிறார், தேவனுடைய குமாரனாய் இருக்கிறார் என்றும் நாம் விசுவாசிப்போம்; மற்றும் விசுவாசிப்பதினால் நாம் அவருடைய நாமத்திலே ஜீவனைப் பெறுவோம்!

குறிப்புகள்

[1]ஐந்தாயிரம் பேருக்கு அற்புதமாக உணவளித்தல் (யோவா. *6:1-15*) மற்றும் கிறிஸ்து சிலுவையில் அறையப்படுதல் ஆகிய இரு நிகழ்ச்சிகளுமே பஸ்கா காலத்தின் உணர்வெழுச்சி மிக்க வேளையிலேயே நடந்தன. [2]தேவாலயத்தின் வரைபடத்தைக் காணவும். [3]மத். *21:13*; மாற். *11:17*; லூக். *19:46*. [4]மத். *5:21-24*; எபே. *4:25-32*. [5]மாற். *3:5*; எபி. *4:15*.

## *புத்தகத்தைப் பற்றிய ஒரு விரைவுப் பார்வை*

I. *அடையாளங்களின் புத்தகம், 1-12*
II. *மகிமையின் புத்தகம், 13-21*
*அல்லது*
I. *அடையாளங்களின் புத்தகம், 1-12*
II. *அடையாளத்தின் புத்தகம், 13-21*
*(சிலுவையும் உயிர்த்தெழுதலும்)*

## *யோவான் புத்தகத்தின் சுருக்கப் புறக்குறிப்பு*

I. *முகவுரை (1:1-18)*
II. *இயேசுவின் ஊழியத் தொடக்கங்கள் (1:19-51)*
III. *கிறிஸ்துவின் அடையாளங்களும் வெளிப்படையான விரிவுரைகளும் (2:1-12:50)*
IV. *பிரிவு உபச்சார விரிவுரைகள் (13:1-17:26)*
V. *சிலுவையில் அறையப்படுதல் (18:1-19:42)*
VI. *உயிர்த்தெழுதல் (20:1-29)*
VII. *சுவிசேஷத்தின் நோக்கம் (20:30, 31)*
VIII. *பின்னுரை (21:1-25)*[1]

குறிப்பு

[1]Leon Morris, *The Gospel According to John,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 65-69.

# “நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்” (3:1-36)

உண்மையில் முற்றிலும் மாறுபட்டவைகளாய் இருக்கின்ற விஷயங்களுக்கிடையில் நாம் சில வேளைகளில் சிறிதளவே வேறுபாட்டைக் காண்கின்றோம். நானும் என் மனைவியும் புதிதாய்த் திருமணமானவர்களாய் இருந்த பொழுது எங்களது நண்பர் வீட்டிற்குச் சென்றதை நான் மீண்டும் நினைத்துப் பார்க்கின்றேன். கல்லூரியில் என் மனைவியின் மிகச் சிறந்த தோழிகளில் ஒருத்தியாயிருந்த இந்தப் பெண்மணியும் சமீபத்தில் தான் திருமணம் முடித்திருந்தார், மற்றும் நாங்கள் அப்பெண்மணியின் கணவரைப் பற்றிக் கேள்விப்பட மிகவும் ஆவலுள்ளவர்களாய் இருந்தோம். நாங்கள் ஒருபோதும் சந்தித்திராத அந்த மனிதரைப் பற்றி அறிய நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தாலும், அவரது மனைவி அவரைப் பற்றிச் சிறிதளவே கூறினார்கள். கடைசியில் எனது மனைவி, “அவரைப் பற்றி எங்களுக்குக் கூறு! அவர் எப்படியிருப்பார்?” என்று வற்புறுத்தினாள். எங்களது தோழி என் மனைவியிடம் திரும்பி, “நீ அறிந்திருக்க வேண்டுமே. நீ ஒருவரைப் பெற்றுள்ளாயே!” என்று கூறினார்கள். ஒரு கணவர் என்ற வகையில் நான், சில பெண்கள் நினைப்பதாகக் காணப்படுவதைக் காட்டிலும் அதிகமான வேறுபாடுகள் ஆண்கள் மத்தியில் உள்ளன என்று நிச்சயமாக நம்புகின்றேன்!

விசுவாசத்திற்கு இதே விதமான அணுகுமுறையைக் கையாளுவது பற்றி யோவான் 3 எச்சரிக்கின்றது. “விசுவாசம் விசுவாசம் தான்” அல்லது “எல்லா விசுவாசமும் ஒன்றுபோலத் தான் உள்ளது!” என்று கூறும்படியாக நாம் சோதிக்கப்படலாம். நிக்கொதேமு என்னும் பெயருடைய ஒரு மனிதருடனான இயேசுவின் சந்திப்பானது உண்மையான விசுவாசத்திற்கும் மற்றும் தாழ்வான அல்லது போலியான விசுவாசத்திற்கும் இடையில் வேறுபாட்டைக் காணத்தவறுதல் பற்றி அறைகூவல் விடுக்கின்றது. விசுவாசத்தை உண்டாக்குவதற்காகவே யோவான் சுவிசேஷம் எழுதப்பட்டது (20:31), எனவே தாம் உண்டாக்க விரும்பிய விசுவாசம் பற்றிக் கவனமாக விளக்கம் தருவது என்பது யோவானுக்கு மிகவும் முக்கியமானதாயிருந்தது.

யோவான் 3ன் படிப்பானது உண்மையில் 2:23ல் தொடங்குகின்றது, அது இயேசு பஸ்காவுக்காக எருசலேமில் இருந்தார் என்று கூறுகின்றது.

இந்தப் பண்டிகையில் அவர் அடையாளங்களை நிகழ்த்தினார், மற்றும் மக்கள் அவர்மீது நம்பிக்கை கொண்டனர். இந்த விவரத்தின் வேளையில், இயேசு எதை நிறைவேற்ற வந்தாரோ அதை அவர் நிறைவேற்றிக் கொண்டிருந்தார் என்று காணப்படுகின்றது. இருப்பினும், இயேசு "எல்லாவற்றையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை" (2:24) என்று யோவான் எழுதினார்.

## விசுவாசமாய் இராத விசுவாசம்

இந்தத் தொடக்க கால விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிறைவில் எவ்விடத்தில் இருக்கும்படி இயேசு விரும்பினாரோ, அவ்விடத்தில் இருந்ததில்லை. அவர்கள் விசுவாசம் கொண்டிருந்தார்கள், ஆனால் அது இயேசு உண்மையில் யார் என்பதை அவர்கள் முழுமையாகப் புரிந்து கொள்ள அனுமதிக்கின்ற விசுவாசமாய் இருந்ததில்லை. இயேசு தம்மைப் பற்றியும், தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றியும் அதிகமாய் உரையாற்ற விரும்பினார், ஆனால் அப்படிப்பட்ட கருத்துக்கள் மக்களின் பெரிய குழுவினருடன் கலந்துரையாடுவதற்கு மிகவும் கடினமானவைகளாய் இருந்தன. இதன் விளைவாக, இயேசுவுக்கும் நிக்கொதேமுவுக்கும் இடையில் தனிமையாக இரவு வேளைச் சந்திப்பில் நடைபெற்ற உண்மையான கிறிஸ்த விசுவாசம் பற்றிய உரையாடலை யோவான் எடுத்துரைத்தார்.

யோவான் சுவிசேஷத்தில் மட்டுமே காணப்படுகின்ற இந்த நிக்கொதேமு, "யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்" (3:1) என்று அறிமுகப் படுத்தப்படுகின்றார். "அதிகாரி" என்ற சொற்றொடரானது அவர், அந்த வேளையில் யூதர்கள் மீது ஆட்சி செலுத்திய எழுபது மனிதர்களைக் கொண்ட புகழ்ற்ற ஆலோசனைக் குழுவான யூத சனதெரீன் சங்கத்தின் உறுப்பினராய் இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இப்படிப்பட்ட ஒரு பதவியுடன் அதிகாரம், செல்வம் மற்றும் கௌரவம் ஆகியவை வந்தன, இவ்விதமாக அது நிக்கொதேமுவை யூத சமூகத்தின் உயர் குடி உறுப்பினராக்கியிருந்தது. பிற்பாடு, இயேசுவும் கூட இவரை "இஸ்ரவேலுக்குப் போதகன்" (3:10) என்று குறிப்பிட்டார். நிக்கொதேமுவைப் போன்ற பதவியில் இருந்தவர்கள் இயேசுவுக்குத் தீவிரமான விரோதிகளாய் இருந்தனர். இருப்பினும், நிக்கொதேமு தேடும் இருதயத்தைக் கொண்டிருந்தார்; எனவே அவர் இயேசு யார் என்பதை விசாரிப்பதற்காக அவரிடத்தில் இரவு வேளையில் வந்தார்.

விசுவாசத்தைப் பற்றிய ஒரு விளக்கத்துடன் நிக்கொதேமு தமது உரையாடலை இயேசுவிடம் தொடங்கினார். அவர், "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால், நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்" (3:2) என்று கூறினார். குறைந்தபட்சம் அவர், இயேசு அற்புத அடையாளங்களைச் செய்தார் என்றும், இயேசு

தம்முடைய வல்லமையைத் தேவனிடத்திலிருந்து பெற்றார் என்றும் விசுவாசிப்பதாக உரிமைகோரினார். இவ்வசனப் பகுதியை முதல் முதலாக வாசிக்கும் வாசகர் இயேசு நிக்கொதேமுக்குப் பதில் அளித்த வகையைக் கண்டு அதிர்ச்சி அடையக் கூடும். யாரேனும் ஒருவர், "நிக்கொதேமு அவர்களே, நன்றி. உங்கள் மதிப்புரையை நான் பாராட்டுகின்றேன், உங்கள் உற்சாக மூட்டும் வார்த்தைகளையும் நான் பாராட்டுகின்றேன், விசேஷமாக இப்படிப்பட்டதொரு ஒப்புக் கொள்ளுதலானது சனதெரீனில் உள்ள உங்கள் நண்பர்களிடம் மிகப் புகழ் பெறாது என்பதை அறிந்துள்ளதால் நான் உங்களை பாராட்டுகின்றேன்'' என்று கூறுவாரென்றே நாம் சாதாரணமாக எதிர்பார்ப்போம். இருப்பினும் இயேசு, எதிர்பாராத வகையில் ''ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' (3:3) என்று பதில் அளிக்கையில் அவர் நிக்கொதேமுவை உண்மையில் தாக்கிப் பேசினார்.[1]

"மறுபடியும்" அல்லது "மேலிருந்து" என்று அர்த்தப்படக் கூடிய anothen என்ற கிரேக்க வார்த்தையை இயேசு பயன்படுத்தியது நிக்கொதேமுவை விசேஷமாகக் குழப்பம் கொள்ளச் செய்தது.[2] தொடர்ந்து நடந்த உரையாடலானது ஏறக்குறைய இரண்டு மாறுபட்ட மொழிகளினால் ஆன உரையாடல் போலவே இருந்தது. இயேசு "உன்னதத்திலிருந்து வந்த'' மொழியைப் பயன்படுத்த, நிக்கொதேமு ''பூமியின்'' மொழியைப் பயன்படுத்தினார் (3:31). தேவனுடைய வல்லமையினாலான ஆவிக்குரிய மறுபிறப்பின் அவசியத்தை இயேசு அறிவித்துக் கொண்டிருக்க, ஒரு மனிதர் தமது தாயின் கர்ப்பத்தில் மீண்டும் புகுந்து பிறக்க முடியுமா என்பதைப் புரிந்து கொள்ள நிக்கொதேமு முயற்சி செய்து கொண்டிருந்தார்! இயேசுவின் இரவு நேரப் பார்வையாளர், நாசரேத்திலிருந்து வந்த அந்தப் போதகரைப் பற்றிக் கணிசமான அளவு ஆர்வம் உடையவராய் இருந்தும், அவர் இன்னமும் முற்றிலும் மனித வழக்கத்தின்படியே சிந்தித்துக் கொண்டிருந்தவராகவும் தேவனுடைய இராஜ்யத்தினுள் இன்னமும் பிரவேசியாதவராகவும் காணப்பட்டார். நிக்கொதேமுவை இயேசு எதிர்த்து நின்று, குத்திக்காட்டி, அறைகூவல் விடுக்கையில் அவர் (இயேசு) உண்மையான விசுவாசத்தை விளக்கப்படுத்தினார். முதலாவதாக, தேவனுடைய இராஜ்யம் எதுவாயிருப்பதில்லை என்பதற்கான இரு விஷயங்களைத் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்.

## மதத்தின் மத நடவடிக்கைகள் அல்ல

''மதம்'' என்ற வார்த்தையானது மிகவும் பெரிய அளவில் வித்தியாசமான அர்த்தங்களைக் கொண்டதாக உள்ளது. நேர்மறையான பகுதியில் அது "தேவனுக்கு ஊழியம் மற்றும் ஆராதனை"[3] என்று அர்த்தப்பட முடியும். எதிர்மறையான பகுதியில் அது, "மத எண்ணப்போக்குகள், நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் நிறுவனமாக்கப்பட்ட அமைப்பு"[4] என்று அர்த்தப்பட முடியும். இந்தப் பிந்திய அர்த்தம்தான் மேலிருந்து வருகின்ற ஒரு புதிய பிறப்பினாலேயே தேவனுடைய

இராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் என்ற இயேசுவின் வலியுறுத்துதலினால் கடுமையாகத் தாக்கப்பட்டது. நிக்கொதேமு தமது பதவியின் காரணமாக உண்மையிலேயே ஒரு தீவிரமான பிரமாணக் கடைப்பிடிப்பாளராக இருந்தார். நியாயப் பிரமாணத்தைக் கடைப்பிடித்தல் என்பது தேவனுடைய இராஜ்யத்திற்குள் நுழையப் போதுமானதல்ல என்று இயேசு கூறிக் கொண்டிருந்தாரா? ஆம், முற்றிலும் சரியே! பூமிக்குரிய சிந்தையினால் கட்டப்பட்ட மனம் கொண்டிருந்த நிக்கொதேமு அவரிடத்தில் கூறப்பட்டதைப் புரிந்து கொள்ள முடியாதவராய் இருந்தார்.

மறுபடியும் பிறத்தல்/மேலிருந்து பிறத்தல் பற்றிய இயேசுவின் அறிவித்தலுக்கு நிக்கொதேமு குழப்பத்துடன் பதில் அளித்த பொழுது, இயேசு தாம் கூறியதை இந்த வேளையில் ''மறுபடியும் பிறத்தல்'' என்பதற்குப் பதிலாக "ஜலத்தினாலும் ஆவியினாலும்" (3:5) என்பதைக் கொண்டு மீண்டும் எடுத்துரைத்தார். "தண்ணீர் மற்றும் ஆவி" என்பது இந்த உரையாடலில் ஞானஸ்நானத்தின் கருத்தை அறிமுகப்படுத்தியது.[5] "தண்ணீர்'' என்பது அவர் சுத்திகரிக்கப்படுதல் தேவை என்று அர்த்தப் படுத்தியது, "ஆவி" என்பது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைத்தவிர குறைவான வல்லமை எதுவும் நிக்கொதேமுவை மாற்ற முடியாது என்று அர்த்தப்படுத்தியது. இப்படிப்பட்டதொரு கருத்தானது நிக்கொதேமுக்கு குறைந்தபட்சம், குழப்பமூட்டுவதாகவும் மற்றும் ஒருவேளை அவமானப்படுத்துவதாகவும் இருந்தது.

இயேசுவின் ஊழிய காலத்திற்கு முன்பு, ஒரு புறஜாதியார் யூதராக முடிவு மேற்கொள்ளும் பொழுது ஞானஸ்நானம் என்பது யூதத்துவத்தால் பொதுவாக நடைமுறைப் படுத்தப்பட்டது. விருத்தசேதனம், பலி மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை ஒரு யூதராவதற்கு (ஒரு யூதமார்க்கத்தமைந்தவர்) அவசியமான மூன்று செயல்களாய் இருந்தன. யூதர்களுடைய சனதெரீன் சங்கத்தின் முன்னோடி உறுப்பினர் ஒருவருக்கு அவர் ஞானஸ்நானப் படுத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை தெரிவிப்பதென்பது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது. எல்லாச் சட்டங்களையும் கடைப்பிடித்தல் என்பது தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கான வழியல்ல என்று இயேசு வலியுறுத்தினார்; தேவனுக்கு முன்பாக தன்னையே தாழ்த்துகின்ற இருதயமும் தேவனுடைய கண்களில் அந்த இருதயத்தைப் புதிதாக மாற்றும்படி பரிசுத்த ஆவியானவரை அனுமதிப்பதுமே இதற்கு முக்கியமானவைகளாகும்.

இடர்ப்படுத்துதலை விட்டு நீங்கியிருந்து, மற்றவர்களைத் துன்புறுத்தாமல் இருந்தால் அதுவே தேவனைத் திருப்திப்படுத்தப் போதுமானது என்று இன்றைய நாட்களில் புகழ் பெற்றுள்ள ஒரு கருத்தை மக்கள் கொண்டுள்ளனர். நமது வேத பாடப் பகுதியானது இப்படிப்பட்டதொரு கண்ணோட்டத்திற்குத் தைரியமாய் எதிர் நிற்கின்றது. இயேசு நிக்கொதேமுவிடம் செய்தது போலவே நம் முன்பாக நின்று, "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்!" என்று கூறுகின்றார்.

## தனிப்பட்ட உறுதிப்பாட்டின் விஷயம் மட்டுமல்ல

*நிக்கொதேமு ஏன் இரவு வேளையில் இயேசுவிடம் வந்தார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? அது அவ்விருவருக்கும் வசதியான நேரமாக மட்டும் இருந்ததினாலா? போதகர்கள் அடிக்கடி போதித்தபடி, அது படிப்பதற்கு உன்னதமான நேரமாயிருந்ததா? நல்ல பகல் வேளையில் இயேசுவிடம் வருவதற்கு நிக்கொதேமு பயப்பட்டாரா?* யோவானின் எழுத்துக்களில் இருள் என்பது ஒரு திறவுகோல் கருத்தாக உள்ளது, மற்றும் இரவு வேளைகளில் சந்திப்பது என்பது இன்னமும் ஆவிக்குரிய இருளில் இருந்த ஒருவருக்கு ஏற்புடையதாகவே இருந்தது (யோவா. *3:19-21).* அவர் *(நிக்கொதேமு)* இன்னமும் இயேசுவினிடத்தில் தமக்குள்ள பற்றைப் பற்றி வெளிப்படையாய் அறிவிக்கத் தடை செய்த வல்லமையின் பதவி யொன்றைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தார். இயேசு நிக்கொதே முவை நீரினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறக்கும்படி அழைத்த பொழுது, அவர் (இயேசு) மற்ற விஷயங்களுக்கு மத்தியில், அவரை (நிக்கொதேமுவை) விசுவாசம் கொள்ளும்படியும், தமது விசுவாசத்தை ஞானஸ்நானம் என்ற வெளிப்படையான செயல் மூலம் விளக்கப்படுத்தும் படியும் அழைத்தார். இப்படிப்பட்ட கருத்தானது தாயின் கர்ப்பத்தினுள் மீண்டும் செல்வது என்ற கருத்தைப் போலவே நிக்கொதேமுவுக்கு நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்திருக்கும் என்பது உறுதி!

யோவான் சுவிசேஷத்தில் நிக்கொதேமு மற்றும் இரண்டு முறைகள் தோன்றுகின்றார். அடுத்த முறை நாம் அவரை, கூடாரப் பண்டிகையின் போது சனதெரீன் சங்கத்தார் இயேசுவைக் கைது செய்து கொல்ல முயற்சி செய்த வேளையில் *(7:50-52)* சந்திக்கின்றோம். அந்த வேளையில் அவர் இயேசுவின் மீது தமக்குள்ள ஆர்வம் பற்றி இன்னமும் அமைதியாய் இருந்தார், ஆனால் ஆலோசனைச் சங்கமானது இயேசுவுக்கு "உரிய அவகாசம்" தர வேண்டும் என்று வாதிடப் போதுமான தைரியம் கொண்டிருந்தார். சனதெரீன் சங்கத்தில் இருந்த மற்றவர்களின் பதில் செயலானது விரைவானதாகவும் கோபம் மிகுந்ததாகவும் இருந்தது. "நீரும் கலிலேயனோ?" *(7:52)* அவர்கள் அவரை விளாசித் தள்ளிவிட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு தவறான பதில்செயலினால், நிக்கொதேமு இன்னமும், பெரும்பாலும், ஒரு இரகசிய சீஷராகவே இருந்தார் என்பதில் சிறிதளவே வியப்புள்ளது. இயேசுவின் (சரீர) அடக்கத்தின் பொழுது நாம் நிக்கொதேமுவைக் கடைசியாகக் காண்கின்றோம் (யோவா. *19:39, 40).* அந்த வேளையில் அவர் அரிமத்தியா யோசேப்பு என்ற இன்னொரு இரகசிய சீஷருடன் சேர்ந்து, இயேசுவின் சரீரத்தைக் கல்லறையில் வைக்க ஆயத்தம் செய்தனர். இந்த வரலாற்றின் முடிவில், ஒரு நாளிரவில் புதிய பிறப்பைப் பற்றி இயேசு கலந்துரையாடி செய்யச் சொல்லி அழைத்திருந்ததை, தம்முடைய விசுவாசத்தை "வெளிப்படையாகக் காட்டியதன்" மூலம் நிக்கொதேமு சிலவற்றைச் செய்தார்.

யோவான் சுவிசேஷத்தில் நிக்கொதேமு தோன்றும் மூன்று இடங்களில் நாம் காண்கின்ற படிப்படியான வளர்ச்சியின் காரணமாக, அவர், தங்களின்

விசுவாசத்தை வெளிப்படையாக அறிவிக்கத் தைரியத்தைக் காண்பதில் இடர்ப்பாடு கொண்டுள்ளவர்களுக்கு ஆர்வமுள்ள முன்மாதிரியாக இருக்கின்றார். புதுப்பிறப்பான ஞானஸ்நானமானது அதன் இயல் பினாலேயே ஒரு வெளியரங்கமான செயலாக உள்ளது. அது நாம் இயேசுவுக்குரியவர்கள் என்பதன் தீர்மானமான அறிவித்தலாக உள்ளது.

இன்றைய நாட்களில் நாம், நமது கலாச்சாரத்துடன் ஒன்றுகலந்து விடும்படியும், வித்தியாசமாய் கவனிக்கப்படாதிருக்கும்படியும் அதிகமாக கட்டாயப் படுத்தப்படுகின்றோம். கிறிஸ்தவர்கள் "ஏற்றுக் கொள்ளப் பட்ட'' நிலையில் இருக்க விரும்பி, ''சாதாரணமானவர்கள்'' என்று காணப்படுவதையும் விரும்பி, சில வேளைகளில் நாம் யாராயிருக்கிறோம் என்பதுடன் உடன்பாடு செய்து கொள்கின்றவர்களாய் உள்ளனர். அவ்வாறு செய்வதில் நாம், ஞானஸ்நானம் பெறுதலின் மூலம் தைரியமாய் அறிவித்த உறுதிப்பாட்டையே மறுக்கின்றோம். கெட்ட வார்த்தை பேசுதல், மதுபானம் அருந்துதல், வாழ்க்கையில் சுயமையம் கொண்ட அணுகுமுறை போன்ற கருத்துகள் எதுவாயிருப்பினும் அதை விட்டு வெளியேறி நின்று நமது விசுவாசத்தில் வெளிப்படையாய்ச் செல்ல வேண்டுமென்று இயேசு நம்மை அழைக்கின்றார்!

## புதிய பிறப்புக்கு வழி நடத்துகின்ற விசுவாசம்

பழைமை வாதப் பத்திரிகையாளரான கால் தாமஸ் என்பவர் செய்திப் பணியில் உள்ள தம் நண்பர்களின் மத்தியில் ஆழமான கிறிஸ்தவ உறுதிப்பாடுகள் கொண்ட மனிதர் என்று அறியப்படுகின்றார். கிறிஸ்தவர் என்று அறியப்பட்ட ஒரு மனிதர் ஈடுபட்டிருந்த நிகழ்ச்சி பற்றிய செய்தியொன்று ஒருமுறை வெளியான போது, தாமஸுடன் பணியாற்றும் ஒருவர் அவரிடத்தில், "கால், நீங்கள் மீண்டும் பிறந்த கிறிஸ்தவரா?" என்று கேட்டார். பதிலுக்கு இவர், "அதன் மூலம் நீங்கள் அர்த்தப்படுத்துவது என்ன?'' என்று கேட்டார். அந்த நண்பருக்குத் தமது வினா எதனை அர்த்தப்படுத்தியது என்பது பற்றிய கருத்து எதுவும் இல்லை, எனவே தாமஸ், "ஆம், நான் மீண்டும் பிறந்தவன் தான், ஆனால் 'மீண்டும் பிறத்தல்' என்பதின் மூலம் நான் எதனை அர்த்தப்படுத்துகிறேன் என்று உங்களுக்குக் கூற அனுமதியுங்கள்' என்றார்."[6]

### தேவனுடைய வல்லமை

புதிய பிறப்பென்பது, தேவனுடைய வல்லமையுடன் தொடங்கி முடிகின்றது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் காரணமாக புதிய பிறப்பு சாத்தியமாகிறது மற்றும் கிடைக்கிறது என்று நிக்கொதேமுவுக்கு இயேசு அறிவித்தார் (3:6-8). தேவனுடைய ஆவியானவர் நமக்கு முதலிடத்தில் கிடைக்கின்றார் என்பது எவ்வளவாய் நம்புதற்கரியதாக உள்ளது என்பதை நாம் மறந்து விடுமளவுக்கு, தேவனுடைய ஆவியானவரைப் பெறுவது எப்படி என்பதில் நாம் பிடிப்பட்டுப் போக முடியாது!

மீண்டும் பிறத்தல் என்பது தேவனுடைய வல்லமையில் வேரூன்றி யிருப்பதால், அது நமக்கு நமது வாழ்வில் உண்மையான மற்றும் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான நம்பிக்கையையும் கொடுக்கின்றது. பல ஆண்டுகளாகப் பார்த்திராத நமது பழைய நண்பர்களைக் காண நாம் திட்டமிடும் பொழுது, அவர்கள் எவ்வளவாய் மாறியிருப்பார்கள் என்று நாம் எப்பொழுதுமே வியப்படைவதுண்டு. பல ஆண்டுகளுக்கு முன் அவர்களை அறிந்திருந்தது, மற்றும் அவர்களின் அடிப்படை ஆளுமைத் தன்மைகளுடன் பழக்கப்பட்டிருந்துள்ள நமக்கு, அவர்கள் இன்னமும் இருபது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன் நாம் அறிந்திருந்த அதே மக்களாகவே இருப்பார்கள் என்று யூகித்துக் கொள்வது சுலபமானதாக உள்ளது. அவர்கள் தங்கள் வாழ்வில் தீவிரமான மாற்றங்களை அனு பவித்திருக்க முடியுமா? கிறிஸ்தவர்களுக்கு "ஆம்!" என்பதே மீண்டும் ஒலிக்கும் பதிலாக உள்ளது. தேவனுடைய வல்லமையினால் நாம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

## இயேசுவில் விசுவாசம்

விசுவாசம் என்பது புதிய பிறப்பின் இன்றிமையாத அம்சமாக உள்ளது. இந்த விசுவாசம் என்பது இயேசுவைப் பற்றிய ஏதோ ஒரு தீர்மானம் அல்ல (3:2), ஆனால் இது அவரைத் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நம்புவதற்கான தீர்மானமாகும் (20:31). இந்த விசுவாசத்தை, வனாந்தரத்தில் மோசே வெண்கலச் சர்ப்பத்தை உயர்த்திய பொழுது இஸ்ரவேலர்கள் கொண்டிருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட விசுவாசத்துடன் இயேசு ஒப்பிட்டார் (3:14; எண். 21:4-9). அந்த வேளையில் இஸ்ரவேலர்கள் தங்களை வனாந்திரத்திற்குக் கொண்டு வந்ததனால் மோசேக்கும் தேவனுக்கும் எதிராக முறுமுறுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் குற்றச்சாட்டுகளினால் சலிப்புற்ற தேவன், கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அவர்களின் பாளையத்திற்குள் அனுப்பினார், மற்றும் மக்களில் பலர் அவைகளினால் கடிக்கப்பட்டு இறந்தார்கள். மக்கள் அதிலிருந்து விடுபடுவதற்காகத் தேவனை நோக்கிக் கதறினார்கள், மற்றும் வெண்கலச் சர்ப்பம் ஒன்றை ஒரு கோலில் உயர்த்தும்படி மோசே அறிவுறுத்தப்பட்டார். பாம்பினால் கடிபட்டவர்கள் வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தால், அவர்கள் சாக மாட்டார்கள். இந்தச் செயலுக்குப் போதிய அளவு விசுவாசம் தேவைப்பட்டது; ஆனால் அவர்கள் (அதை) நோக்கிப் பார்த்த பொழுது, தேவனுடைய வல்லமையினால் குணமாக்கப்பட்டனர். இயேசு சிலுவை யில் "உயர்த்தப்பட்டார்" (யோவா. 12:32, 34) மற்றும், விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் அவரை உற்றுப் பார்க்கின்றவர்களும், தேவனுடைய வல்லமையினால் இரட்சிக்கப்படுகின்றார்கள்!

## அறிவிக்கப்பட்ட ஒரு தீர்மானம்

தேவனுடைய வல்லமையினால் புதிய பிறப்பு சாத்தியமாகின்றது. அது இயேசுவின் மீது ஒருவர் கொள்ளும் விசுவாசத்தினால் தூண்டப்பட்டு

முன்னேற உதவுகின்றது (3:16). இருப்பினும், விசுவாசிக்கும்படியான தீர்மானமானது ஞானஸ்நானத்தில் வெளிப்படையாக அறிக்கையிடப்படும் பொழுதும், ஒருவர் “நீரினாலும் ஆவியினாலும் பிறக்கும்” (3:5) பொழுதும் மட்டுமே அது உணர்ந்தறியப்படுகின்றது. இந்தத் தீர்மானமான செயல்பாடானது ஒரு நபருக்கும் தேவனுக்கும் உள்ள புதிய உறவின் தொடக்கமாகவும், அந்த நபருக்கும் சபை என்ற இயேசுவில் விசுவாசமுள்ள மற்ற விசுவாசிகளின் சமூகத்திற்கும் இடையில் உள்ள புதிய உறவின் தொடக்கமாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. புதிய பிறப்பு என்பதில் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தனிப்பட்ட விசுவாசம் அடங்கி யுள்ளது, ஆனாலும் அந்தத் தனிப்பட்ட விசுவாசத்தை ஞானஸ்நானம் என்ற வெளியரங்கமான செயலினால் வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும் (மாற். 16:15, 16; அப். 2:38; 22:16).

## முடிவுரை

நாம் இப்பொழுது படித்துள்ள வேத பாடப் பகுதியில் இருந்து அடிக்கடி பிரசங்கம் செய்த ஜார்ஜ் ஒயிட்ஃபீல்ட் (1714-70) பற்றிய நிகழ்ச்சியொன்று கூறப்படுகின்றது. ஒரு நாள், அவருடைய நண்பர் ஒருவர் அவரிடம், “ஜார்ஜ், நீங்கள் ஏன் மிகவும் அடிக்கடி ‘நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்’ என்ற வேத வசனத்தின் மீதே பிரசங்கம் செய்கின்றீர்கள்?” என்று கேட்டார். அதற்கு ஒயிட்ஃபீல்ட் மிக உறுதியாக, “ஏனென்றால், நீங்கள் *கட்டாயம்* மறுபடியும் பிறக்க வேண்டும்” என்று பதில் அளித்தார்.

இயேசு மிகச் சிறந்த மனிதர், மாபெரும் போதகர், ஆனால் தேவகுமாரன் எனப்படுவதைக் காட்டிலும் சிறியவர் என்று நம்பும் யாவருக்கும் இயேசு, “நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்” என்று கூறுகின்றார்.

அடிப்படையான நற்பண்புகள் கொண்டிருத்தல் தேவனுக்கு முன்பாகப் போதுமானது என்று நினைக்கும் யாவருக்கும் இயேசு, “நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்” என்று கூறுகின்றார்.

தங்கள் கலாச்சார மதங்களுடன் ஆறுதலாய் இருக்கின்ற யாவருக்கும் இயேசு, “நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்” என்று கூறுகின்றார்.

சுயமான, தனிப்பட்ட மதத்தை மட்டுமே நாடும் யாவருக்கும் இயேசு, “நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்” என்று கூறுகின்றார்.

ஞானஸ்நானத்தை அர்த்தமற்ற, ஏற்புடையதல்லாத வரலாற்று நினைவுச் சின்னமாக நோக்கும் யாவருக்கும் இயேசு, “நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்” என்று கூறுகின்றார்.

---

குறிப்புகள்

[1]யோவான் சுவிசேஷத்தில் இவ்விடத்தில் மட்டுமே நாம் “தேவனுடைய இராஜ்யம்” என்பதைக் காண்கின்றோம். அவர் இதே கருத்தை விளக்குவதற்கு

*‘‘ஜீவன்’’ அல்லது ‘‘நித்திய ஜீவன்’’ என்பதைப் பயன்படுத்தினார். [2]“உன்னதத்திலிருந்து” என்று அர்த்தப்படுகின்ற 3:31ஐக் காணவும். [3]Webster's Ninth New Collegiate Dictionary* (1988), s.v. “Religion.” [4]Ibid. [5]*“நீரினால் பிறத்தல்” என்ற சொற்றொடரானது ஞானஸ்நானத்தைத் தெரிவித்தது, இது ஏற்கனவே யூதர்களுக்கு பழக்கப்பட்ட ஒரு நடைமுறையாகவும், யோவான் ஸ்நானனின் நிமித்தமாக அப்போது கலந்துரையாடலில் காணப்பட்ட ஒரு தலைப்பாகவும் இருந்தது, 1:25; 3:22-26; 4:1-3ஐக் காணவும்.* [6]“Shepherding, Servanthood and Success,” *Pastor to Pastor*, vol. 13 (Colorado Springs, Colo.: Focus on the Family, 1994), sound cassette.

## யோவான் சுவிசேஷத்திற்கு ஒரு மூன்று வசனப் புறக்குறிப்பு

*பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால், பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (7:37-39).*

*1. ‘‘பானம்பண்ணுதல்’’ (7:37) என்பது சமாரியப் பெண்ணையும் (4:4-42), ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கத்தையும் (6:25-59) மற்றும் இயேசுவில் விசுவாசம் கொள்ளும்படியான வேண்டுகோளையும் நமக்கு நினைவூட்டுகின்றது.*

*2. ‘‘விசுவாசித்தல்’’ (7:38) என்பது, விசுவாசத்தைக் கட்டியெழுப்புதலாய் இருப்பதே இந்த சுவிசேஷத்தின் நோக்கம் என்பதை மீண்டும் நமக்கு நினைவூட்டுகின்றது (20:31).*

*3. “ஜீவத் தண்ணீர்” (7:38) என்பது, இயேசு சமாரியப் பெண்ணுக்குக் கூறியதும் (4:13, 14) மற்றும் ‘‘ஜீவன்’’ அளிப்பதுமான விஷயத்தின் நினைவூட்டுதலாக உள்ளது.*

*4. ‘‘ஆவி’’ (7:39) என்பது இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் வருவதாயிருந்த பரிசுத்த ஆவியானவரின் மேலான வலியுறுத்தத்தின் ஒரு முன் நிழலைத் தருகின்றது (14:15-26; 16:5-15).*

*5. ‘‘மகிமைப்படுதல்’’ (7:39) - யோவான் சுவிசேஷம் முழுவதுமே இயேசுவில் தேவனுடைய மகிமையைக் காணுதல் பற்றியதாகவே உள்ளது. மகிமையின் நிறைவான தரிசனமானது சிலுவையில் காணப்படுகின்றது.*

# ஜீவனுள்ள தண்ணீர்
# (4:1-42)

*அவளுடைய வாழ்வின் பல்வேறு அம்சங்கள் என்னை ஆச்சரியப்படச் செய்கின்றன! அவள் தனது சொந்த ஊரில் விரும்பப்பட்டாளா? அல்லது மேன்மையான மக்கள் தவிர்க்க முயற்சி செய்தவளாய் இருந்தாளா? குழந்தையாயிருந்த பொழுது அவளுடைய வாழ்க்கை எப்படி இருந்தது? அவளது சிறு வயதில் அவளது பெற்றோர் அவளிடத்தில் அன்பாய் இருந்தார்களா? அவளது முதல் கணவன் எப்படிப்பட்டவனாய் இருந்தான்? அவளது திருமணங்களின் எண்ணிக்கை (ஐந்து!) சீகாரில் ஒரு சாதனையாக இருந்ததா? இயேசுவைக் கிணற்றினருகில் சந்தித்த நாளன்று அவளது எண்ணப்போக்கு எப்படியிருந்தது? அவள் தனது இறுமாப்புள்ள கண்களுக்குப் பொருத்தமாக, இறுமாப்புள்ள ஆவியைக் கொண்டிருந் தாளா? அல்லது அந்த நாளில் அவள் குனிந்த தோள்களுடனும் நறுங்குண்ட இருதயத்துடனும் வந்தாளா?*

*சமாரியப் பெண்ணைப் பற்றிய பல உண்மைகள் ஒருக்காலும் அறியப்படாதிருக்கும், மற்றும் அவளது வாழ்வில் என்ன நடந்திருக்கலாம் என்ற உணர்வுப் பூர்வமான விபரங்களில் தங்கியிருக்க நான் விரும்பவில்ல. இன்னமும் அவளது வரலாறானது இயேசுவுக்கும் இழந்து போகப்பட்ட ஆத்துமாவுக்கும் இடையில் நிகழ்வதாகச் சுவிசேஷங்களில் எந்த இடத்திலும் காணப்படும் சந்திப்புக்களிலேயே மிகவும் வியப்படையக் கூடுமானதாக உள்ளது. அவள் ஒரு நாள் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவதற்காகக் கிணறு ஒன்றிற்குச் சென்றாள், மற்றும் இவள், தங்களை கீழே இழுக்கின்றதான மூழ்கடிப்பதாய்க் காணப்படும் சக்திகளுக்கு மேலாக எழும்ப ஏங்குகின்ற எங்குமுள்ள மக்கள் யாவருக்கும் ஒரு அடையாள மானாள். அவளுடைய வரலாறானது "சமாரியப் பெண்ணின்" வரலாறு என்று அறியப்படுகின்றது, இது "ஊதாரி மகனின்" கதை போன்றதாகவே, பெயரைத் தனது முக்கியமான மனிதப் பாத்திரத்தில் இருந்து பெற்றுக் கொண்டதாக உள்ளது. உண்மை நிலையில் இவ்விரண்டுமே தேவனைப் பற்றிய, தம்முடைய அன்பான பிள்ளைகள் தம்மிடம் திரும்பி வரும்போது அவர்களை வரவேற்று, மிகவும் தகுதியற்ற மக்கள் மீதும் கூட தம்முடைய அன்பைப் பொழிகின்ற தேவனைப் பற்றிய அடிப்படையான வரலாறாக உள்ளன. "சமாரியப் பெண்ணின்" வரலாறானது ஒரு விசுவாசத்தின் பாடமாகவும் உள்ளது, மற்றும் இயேசுவுக்கும் இந்தப் பெண்ணுக்கும் இடையில் நடந்த சந்திப்பானது யோவான் தமது சுவிசேஷத்தில் மக்களை விசுவாசம் கொள்ளும்படி அழைத்தது பற்றிய (அவ்விசுவாசம் பற்றிய)*

மூன்று முக்கியமான சத்தியங்களை அறிவிக்க யோவானால் பயன் படுத்தப்பட்டது.

## விசுவாசம் என்பது சூழ்நிலைகளுக்கு மேலானதாக உள்ளது

இயேசுவும் அவருடைய சீஷர்களும் யூதேயாவில் இருந்து கலிலேயா வுக்குத் திரும்பிய தங்கள் பயணத்தில், யாக்கோபின் கிணற்றருகில் நின்ற பொழுது ஏறக்குறைய நண்பகல் வேளையாக இருந்தது. இந்தப் பழங்கால இடமானது சீகார் என்ற சமாரியர்களின் நகரின் அருகே அமைந்திருந்தது. அங்கு உணவு வாங்க முடியும் என்பதை அறிந்த அவர்கள் இளைப்பாற நின்றார்கள். இயேசு பயணத்தினால் இளைப்படைந்திருந்தார், ஆகையால் அவர் கிணற்றின் அருகில் அமர்ந்தார், சீஷர்கள் உண்பதற்காகச் சிலவற்றை வாங்கச் சென்றார்கள். இயேசு அங்கு தனியாக அமர்ந்திருக்கையில், ஒரு சமாரியப் பெண் நீர் மொள்வதற்காக வந்தாள். இப்படிப்பட்டதொரு நிகழ்ச்சியானது கவனிக்கப்படாமல் கடந்து செல்லும்; அந்தப் பெண் தனக்குத் தண்ணீரை எடுத்துக் கொண்டு, அருகில் அமர்ந்திருந்த களைப்பான யூதரைக் கவனியாமலே நகருக்குத் திரும்பியிருப்பாள். இருப்பினும் இந்த வேளையில் அந்தப் பெண்ணைத் திகைப்பூட்டும் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது; அந்த யூதர் அவளிடத்தில் பேசினார்! அவர் அவளிடத்தில் தாகத்துக்குத் தரும்படி மட்டும் கேட்டார், ஆனால் அந்த எளிய வேண்டுகோளானது அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கிற்று, மற்றும் அவள் அவரிடத்தில், *"நீர் யூதனாயிருக்க, சமாரிய ஸ்திரீயாகிய என்னிடத்தில் தாகத்துக்கு தா என்று எப்படிக் கேட்கலாம்?" (4:9)* என்று கேட்டாள். இவ்விதமாக அந்த நகருக்கு அண்மையில், இயேசுவுக்கும் இந்தப் பெண்ணுக்கும் இடையில் வாழ்வை மாற்றும் உரையாடல் ஒன்று தொடங்கியது.

அடுத்த பல நிமிடங்களில், அவளிடத்தில் அவர், அவளது மிக ஆழமான தேவைகள், அவளது மாபெரும் துயரங்கள் மற்றும் மேசியா என்ற வகையில் தம்முடைய அடையாளம் ஆகியவை பற்றிப் பேசினார்! கடைசியில், அவள் இயேசுவின் மீது விசுவாசம் கொண்டது மட்டுமின்றி, அவளது நகரில் இருந்த மற்ற பலரும் கூட, இயேசுவினிடத்தில் விசுவாசம் கொண்டனர். மனித நோக்கில் இருந்து காண்கையில், இந்தப் பெண் இயேசு சுவிசேஷத்தைப் பற்றிப் பேசுவதற்கு இந்த உலகிலேயே மிக அதிகம் பொருத்த மற்றவளாகக் காணப்பட்டாள் என்பது தான் இதில் நம்புவதற்கு அரியதாக உள்ளது. விசுவாசம் என்பது ஒருவரின் சூழ்நிலைகளுடன் பிணைக்கப் பட்டிருப்பதில்லை என்ற உண்மையை அவர் தைரியமாக அறிவித்தார். அப்படி அது பிணைக்கப்பட்டிருந்தால், இந்தப் பெண் ஒருக்காலும் விசுவாசி ஆகியிருக்க மாட்டாள். ஏனென்றால் அந்த நாளில் அவள் தனக்கெதிராகக் குறைந்தபட்சம் மூன்று மோதல்களைக் (strikes[1]) கொண்டிருந்தாள்.

## மோதல் 1: அவள் ஒரு சமாரிய இனத்தவளாக இருந்தாள்

*யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையில் நிலவி வந்த நட்பற்ற சிந்தையானது அன்றைக்குச் சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரவேலர்கள் சிறை இருப்பிற்கு சென்ற காலம் முதலே இருந்து வந்தது. அந்த நாட்டில் எஞ்சி இருந்தவர்கள் மற்ற இனத்தவர்களுடன் கலப்புத் திருமணம் செய்து கொண்டு, இஸ்ரவேலின் பிள்ளைகள் என்ற தங்களின் ஆவிக்குரிய மற்றும் கலாச்சார ரீதியான அடையாளத்தை நீர்த்துப் போகச் செய்திருந்தனர். தேவாலயத்தைக் கட்டும்படியாகப் பாபிலோனிலிருந்து யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்த பொழுது, ஏற்கனவே நாட்டில் இருந்த தங்கள் உறவினர்களுடன் சம்பந்தம் கலவாதிருந்தார்கள்.[2]*

*காலங்கள் ஆன பொழுது, விலக்கப்பட்ட சமாரியர்கள் பழைய ஏற்பாட்டின் ஆசீர்வாத மலையாகிய கெரீசிம் மலையின் மீது தங்கள் சொந்த ஆலயத்தைக் கட்டிக் கொண்டார்கள். இவ்விரு குழுக்களும் ஒன்று மற்றொன்றைப் பற்றி ஆழமான சந்தேகம் கொண்டிருந்தன, மற்றும் கி.மு. 128ல் யூதர்களின் ஒரு குழுவினர் சமாரியர்களின் ஆலயத்தைத் தீ வைத்து வீழ்த்தினார்கள். வருத்தத்திற்குரிய இந்த நிகழ்ச்சியானது யூத போதகர்கள் சமாரியர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பினால் ஏற்பட்டது என்பதில் வியப்பெதுவும் இருக்கவில்லை. மிஷ்னா என்ற நூலில், ''சமாரியக் குமாரத்திகள் தங்கள் தொட்டிலில் இருந்தே [சுத்தமற்றவர்கள் என்று நிர்ணயிக்கப்படும்] வீட்டு விலக்கானவர்களாய்/மாதவிடாய் ஆனவர்களாய் இருக்கின்றனர்'' என்று கூறுகின்றது.[3] வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், சமாரியப் பெண்கள் தங்களது இயல்பிலேயே அசுத்தமானவர்கள் என்ற வகையில் கண்ணோக்கப்பட்டார்கள்! மேலும் மிஷ்னாவானது, "சமாரியர்களின் அப்பத்தைப் புசிக்கின்ற எவரும், பன்றியின் மாம்சத்தைப் புசிக்கின்றவர் போலிருக்கின்றார்"[4] என்ற ரபீ எலியேசரின் எழுத்துக்களையும் உள்ளடக்குகின்றது. NIV வேதாகமத்தில், "யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங் கலவாதவர்களானபடியால்'' என்றுள்ள கூற்றானது, அநேகமாக, ''யூதர்கள் சமாரியர்களின் பாத்திரங்களைப் பயன்படுத்துவதில்லை'' என்று அர்த்தப்படுத்தலாம் அல்லது NRSVயில் உள்ளது போல, "யூதர்கள் சமாரியர்களுடன் பொருட்களைப் பொதுவில் பகிர்ந்து கொள்வதில்லை'' என்றும் இருக்கலாம். இவை எல்லாவற்றின் பின்னணியில், இயேசு சமாரியப் பெண்ணுடன் பேசியதே திகைப்பிற்குரியதாக உள்ளது. அவளது இடத்தில் இருந்து அவர் அருந்துவதற்குக் கேட்டது அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது. ஆனால் அவளுக்கு அவர் தேவனுடைய ''ஜீவனுள்ள தண்ணீரை''க் கொடுத்தார் என்பது நம்ப முடியாததாக உள்ளது!*

## மோதல் 2: அவள் ஒரு பெண்ணாக இருந்தாள்

*நகரத்தில் அப்பம் வாங்கச் சென்றிருந்த சீஷர்கள் திரும்பி வந்த பொழுது, "அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப் பற்றி ஆச்சரியப்பட்டார்கள்" (4:27). இந்தக் குறிப்பிட்ட பெண்ணைப் பற்றி அவர்கள் ஆச்சரியப்பட*

*வில்லை; அவர் ஒரு பெண்ணுடன் பேசுவதைப் பற்றித்தான் அவர்கள் திகைப்படைந்தனர்! இயேசு ஒரு சமாரியருடன் அமர்ந்திருப்பதைக் காண்பது அந்த சீஷர்களுக்கு எவ்வளவாய்ச் சுவையற்றதாக இருக்குமோ, அது போல அவர் ஒரு சமாரியப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருப்பதைக் காணத் தாங்கள் திரும்பி வந்தோம் என்பது அவர்களுடைய கற்பனைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.*

*மீண்டும் ஒருமுறை, ரபீக்களின் போதனைகள் சமாரியப் பெண்ணுக்கு எதிரானவைகளாய் இருந்தன. தமது உரையைக் கேட்பவர்கள் பெண்களிடம், அதுவும் ஒருவர் தம் சொந்த மனைவியிடம் கூட அதிகம் பேசாதிருக்கும்படி ஊக்குவித்த ஒரு ரபீயைப் பற்றி தல்மூத்[5] என்ற நூலில் மேற்கோள் காட்டப்படுகின்றது! நியாயப்பிரமாணத்தின் சில போதகர்களால், பெண் என்பவள் ஒழுக்க ரீதியாகத் தாழ்ந்தவளாகக் கண்ணோக்கப் பட்டாள், மற்றும் ஒரு பழங்கால ஜெபமானது, "கர்த்தாவே! என்னை நீர் பெண்ணாகப் படைக்காமல் இருந்ததற்கு உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று அறிவித்தது. ஒரு பெண்ணாக இருந்ததென்பது இந்தப் பெண்ணுக்கெதிரான இரண்டாவது மோதல் ஆகும்.*

## மோதல் *3:* அவள் களங்கமுற்ற கடந்த காலம் ஒன்றைக் கொண்டிருந்தாள்

*அவர்களின் உரையாடலின் ஓட்டத்தின் பொழுது, அந்த சமாரியப் பெண்ணின் கடந்த காலத்தினுடைய வேதனை நிறைந்த இரகசியங்களைத் தாம் அறிந்திருந்ததாக இயேசு சுட்டிக்காண்பித்தார். அவள் ஐந்து முறைகள் திருமணம் செய்து கொண்டிருந்தாள், மற்றும் அந்தச் சமயத்தில் அவள் தனது கணவரல்லாத ஒரு மனிதனுடன் வாழ்ந்து கொண்டிருந்தாள் (4:18). தோல்வியுற்ற அவளது உறவுமுறைகளில் அவள் அறிந்திருந்த போராட்டம், புறக்கணிப்பு, பாதுகாப்பின்மை, வெட்கக்கேடு மற்றும் துக்கம் ஆகியவற்றைக் கற்பனை செய்து கொள்ளும்படியாக நாம் விடப்படுகின்றோம். அவள் கிணற்றருகில் வந்த வேளையில், ஒரு வேளை அவள் திருமணம் செய்யும் எண்ணத்தையே விட்டுவிட்ட நிலையில் இருந்திருக்கலாம், அல்லது ஒருவேளை, எந்த ஒரு மனிதனும் தனது பெயரால் அவளைக் கனப்படுத்தக் கூடிய நிலையில் இருந்து அப்பொழுதுதான் கடந்து வந்தவளாய் இருந்திருக்கலாம்.*

*விவாக ரத்து என்ற பெருந்துன்பத்தை அனுபவித்துள்ள பல கிறிஸ்தவ நண்பர்கள் எனக்கு இருக்கின்றனர். அவர்களில் யாருமே விவாகரத்துப் பெற விரும்பியதில்லை, மற்றும் பெரும்பாலோர் தோல்வியுற்றுப்போன தங்கள் திருமணத்தைக் காத்துக் கொள்ள ஆன மட்டும் போராடினார்கள். அவர்கள் யாவருமே, ''ஒரே மாம்சமானது'' திடீரென்று மீண்டும் இரண்டான பொழுது, தனியே பிய்த்தெறியப்பட்டதால் உண்டான பெரும் துன்பத்தைச் சகித்திருந்தார்கள், மற்றும் 1990களில் கூட விவாக ரத்தானது கொண்டு வந்துள்ள நற்பெயருக்குக் களங்கத்தை அனுபவித்துள்ளனர். என்னுடைய கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளில்*

விவாக ரத்தான பெரும்பாலோர் விவாக ரத்தாகாத மற்ற மக்களைக் காட்டிலும் அதிக உணர்வுப்பூர்வமாக விவாக ரத்தை வெறுப்பதை நான் கண்டிருக்கின்றேன். தேவன் ஏன் மணமுறிவை வெறுக்கிறார் (மல். 2:16) என்பதை அவர்கள் முதன்மையாக அறிந்துள்ளனர், ஏனென்றால் அதன் நாசச் செயலை அவர்கள் தங்களுடைய சொந்த வாழ்வில் அனுபவித்துள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் ஆண்டுகள் பல கடந்தும் கூட விவாக ரத்தின் உணர்வுப் பூர்வமான தழும்புகளைச் சுமந்து திரிகின்றார்கள். அந்த சமாரியப் பெண் தனது ஐந்து மணமுறிவுகளால் பெற்றிருக்க வேண்டியிருந்த தழும்புகளைக் கற்பனை செய்து பாருங்கள்![6]

பேஸ்பால் (baseball) என்ற விளையாட்டில் கூறப்படுவது போல், ‘‘மூன்று முறை தவறாக அடித்தால், நீங்கள் விளையாட்டில் இருந்து வெளியேற வேண்டியிருக்கும்!’’ விசுவாசம் கொள்வதற்கு இதைக் காட்டிலும் பொருத்தமற்ற நபர் ஒருவரை இயேசு எங்கு சுற்றியும் கண்டு பிடிக்க முடியுமா? அவள் சமாரியாவில் இருந்த ஒழுக்க உயர்வுள்ள ஒரு பெண்ணாக அங்கு வந்திருந்தால், சூழ்நிலையானது போதுமான அளவு கடினமான தாயிருக்கும். அவளுடைய வேதனை நிறைந்த கடந்த காலமும், இழிவான நிகழ் காலமும் அவளை சுவிசேஷம் பெற்றுக் கொள்ள ஏற்றவள் என்று இயேசு தெரிந்து கொண்டதை மிகவும் குறிப்பிடத் தக்கதாக்குகின்றது.

இயேசுவுக்கும் இந்த சமாரியப் பெண்ணுக்கும் இடையில் நடந்த முழு சந்திப்பும், விசுவாசமானது ஒருவருடைய சூழ்நிலைகளுடன் பிணைக்கப் பட்டிருப்பதில்லை என்பதை வல்லமை நிறைந்த வகையில் செயல்விளக்கப் படுத்துகின்றது. தேவனுடைய கண்களில் ஒருவருடைய இனம், நாடு, பால் மற்றும் கடந்த காலம் ஆகியவை பிரச்சனையற்றவைகளாக உள்ளன. அதனை கிணற்றருகில் நடந்த உரையாடலானது எப்பொழுதும் பிரசங்கிக்கப்படக் கூடிய எந்த ஒரு பிரசங்கத்தைக் காட்டிலும் நன்கு கூறுகின்றது.

## விசுவாசம் என்பது நடத்தையுடன் பிணைக்கப்பட்டுள்ளது

இயேசு, சமாரியப் பெண்ணுடனான தம்முடைய உரையாடலின் ஒரு இக்கட்டான தருணத்தில், அவள் சென்று தன் கணவனை அழைத்து வருமாறு கூறினார். அவள் தனக்குக் கணவன் இல்லை என்று கூறிய பொழுது, இயேசு “எனக்குப் புருஷன் இல்லை என்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷன் அல்ல, இதை உள்ளபடி சொன்னாய்” (4:17, 18) என்று அவளிடம் கூறினார். முதலில் இது, ஆழமான ஒரு ஆவிக் குரிய உரையாடலில் ஒரு வினோதமான இடையூறாகக் காணப்படுகின்றது. இயேசு “ஜீவனுள்ள தண்ணீரைப்” பற்றிப் பேசுவதிலிருந்து ஏன் திடீரென்று மாறி, அவளைத் தன் கணவனை அழைத்து வரும்படி கேட்க வேண்டும்? அந்தப் பெண்ணின் பதிலும், அந்தப் பதிலுக்கு இயேசுவின் பதில்செயலும்

அவள் கர்த்தரிடத்திற்குத் தன் ஆர்வத்தை மட்டுமின்றி தனது முழு வாழ்வையுமே கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே, கர்த்தர் அந்த உரையாடலின் பாடப் பொருளை மாற்றினார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. அவள் தனது கடந்த கால வாழ்வை மறுமதிப்பீடு செய்யாத வரையிலும் அவளது விசுவாசம் வஞ்சனையானதாகவே இருக்கும்.

விசுவாசம் என்பது சூழ்நிலைகளுடன் பிணைக்கப்படாததாக இருக்கையில், நாம் நமது விசுவாசத்தை நமது நடத்தையுடன் இணைக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. ஒருவர் இயேசுவின் மீது தாம் கொண்டுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தியும், இயேசு தம் வாழ்வில் பிரவேசிப்பதை மறுத்து விடுவதற்குச் சாத்தியம் உண்டு. விசுவாசத்தின் வழியை நாடும்படியாக ஒருவர் வருகின்ற பொழுது, அவர் தம் வாழ்வு முழுவதையும் கர்த்தரிடம் கொண்டு வருதல் இன்றியமை யாததாக உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பு "கிறிஸ்தவர்" எனப்பட்ட படையில் போர் புரிந்த வீரர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அந்த வீரர்கள் ஞானஸ்நானப்படுத்தப்பட்ட பொழுது, அவர்கள் தங்கள் வலது கைகளைத் தண்ணீரை விட்டு வெளியே இருக்கும்படி பார்த்துக் கொள்வதுண்டு. இந்த வகையில் அவர்கள், "இந்தக் கை ஞானஸ்நானம் பெறவில்லை!" என்று அறிவித்து, யுத்தத்தில் தங்கள் வலது கைகளைத் தாங்கள் விரும்பியபடி பயன்படுத்த முடிந்தது. அந்தப் பெண்ணிடத்தில் இயேசு கேட்ட கேள்வி என்பது, அவள் தனது முழு வாழ்வையும் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும் அல்லது ஏதொன்றையும் கொடுக்க முடியாது என்று கூறுவதற்கான அவருடைய வழியாக இருந்தது.

உண்மையான விசுவாசத்துடன் கீழ்ப்படிதலுக்குள் இணைவானது புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் விளக்கப்படுகின்றது. மத். 7:21ல் இயேசு, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்றுரைத்தார். இதற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு யாக்கோபு, "அப்படியே, விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில் தானே செத்ததாயிருக்கும்" (யாக். 2:17) என்று எழுதினார். விசுவாசமும் கீழ்ப்படிதலும் பிரிக்கப்பட முடியாதவைகளாகவே உள்ளன. சமாரியப் பெண் தனது வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் பிரவேசிக்கும்படி இயேசுவை அனுமதிக்க விரும்பாதிருக்கும் வரையிலும் அவள் உண்மை யான விசுவாசத்திற்குள் வர முடியாதவளாய் இருந்தாள்.

அந்தப் பெண்ணினுடைய கணவனை அழைத்து வரும்படி இயேசு கூறியதானது அவர் இன்று உங்களையும் என்னையும் நமது காசோலைப் புத்தகங்களையும், நமது வரிக்கணக்குகளையும், நமது தினசரித் திட்டங் களையும் அல்லது நமது நாட்குறிப்புகளையும் கொண்டு வரும்படி கூறுவது போன்றதாக உள்ளது. விசுவாசம் என்பது நமது வாழ்வின் ஒரு அம்சம் அல்ல; அது நமது முழு வாழ்விலும் ஈடுபாடு கொண்டுள்ளது. அந்தப் பெண்ணின் கடந்த காலத்தினால் இயேசு அவளை இராஜ்யத்திலிருக்கத்

தகுதியற்றவள் என்று ஆக்கி விடாமல், அவள் தன் வாழ்வு முழுவதையும் அவரிடத்தில் கொண்டு வரும்படி அவளை அவர் வற்புறுத்தினார். அவள் தனது பாவம் நிறைந்த கடந்த காலத்தை முறித்துப் போடும்படி அவர் கேட்டுக் கொண்டார். விசுவாசம் என்பது நாம் வாழும் வழியில் இருந்து தனிப்படுத்தப்பட்டதாக இருந்தால், அது விசுவாசமே அல்ல!

## விசுவாசம் என்பது உண்மையான ஆராதனையில் விளக்கப்படுகின்றது

அந்தப் பெண்ணின் கணவனை அழைத்து வரும்படி அவளிடத்தில் இயேசு கேட்டுக் கொண்ட பொழுது, அந்த உரையாடலானது பிரதான மான ஒரு சுற்று வழியை மேற்கொண்டது போலக் காணப்படுகின்றது; இருந்தாலும், நாம் கண்டுள்ளபடி, அது அவ்விதமான வழியை மேற் கொள்ளவில்லை. அடுத்து, அந்தப் பெண், "எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுது கொண்டு வந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுது கொள்ள வேண்டும் என்கிறீர்களே என்றாள்" (4:20). இது, அவள் தனது சொந்த சூழ்நிலையிலிருந்து இயேசுவை வழி விலக்கி, மத முரண்பாடு ஒன்றினால் அவரைக் குழப்பமூட்டுவதற்கு முயற்சி செய்ததாகத் தோன்றுகின்றது. இருப்பினும், இயேசு அவளுடைய கேள்வியை, தேவனுக்குள் அவளைத் தொடர்ந்து வழி நடத்துவதற்குப் பயன்படுத்திக் கொண்டார்.

முதலாவது, அவர் அவளிடத்தில் உண்மையான ஆராதனை என்பது எருசலேம் மற்றும் கெரீசிம் மலை உட்பட எந்த ஒரு குறிப்பிட்ட இடத்துடனும் பிணைக்கப்பட்டிருந்ததில்லை என்று கூறினார். இதைக் கூறியதில் அவர், கெரீசிம் மலையும் எருசலேமைப் போன்றே நல்லதாக இருந்தது என்று அர்த்தப்படுத்தவில்லை, ஏனெனில் அவர், "இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" (4:22) என்பதைத் தெளிவானதாக்கியிருந்தார். அவர், "உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" (4:23) என்று அறிவித்தார்.

ஆராதனை என்பது இடத்தைப் பற்றிய விஷயம் அல்ல என்று அவளுக்கு இயேசு போதித்தார். எருசலேம் மற்றும் கெரீசிம் மலை ஆகிய இரண்டுமே விரைவில் பொருத்தமற்றவைகளாக இருந்தன. உண்மையான ஆராதனையானது (பழைய ஏற்பாட்டு/உடன்படிக்கையின் திட்ட வட்டமான, சரீரப்பிரகாரமான ஒழுங்கு முறைகளுக்கு நேர்மாறான விதத்தில்) ஆவியிலும் மற்றும் (பழைய உடன்படிக்கையின் நிழலுக்கு நேர்மாறான விதத்தில்) உண்மையிலும் ஏறெடுக்கப்பட வேண்டியதாக உள்ளது.[7] இந்தக் கேள்வியில் அந்தச் சமாரியப் பெண் அநேகமாக, பன்னிருவரால் பற்றிக்கொள்ளப்பட்டிருந்த அதே வகையான தவறான கருத்துக்களினால் குற்ற உணர்வு அடைந்திருக்க வேண்டும். அவளுக்கு

இயேசு, ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆராதனையைக் கட்டவிழ்த்துக் கொண்டும், உண்மையான ஆராதனையின் இலக்கைச் சுட்டிக்காட்டிக் கொண்டும் இருந்தார். தேவனுடைய ஆவிக்குரிய இயல்பின் காரணமாக, உண்மையான ஆராதனை என்பது ஆவிக்குரிய விஷயமாக உள்ளது.

ஜாண் கில்லிங்கர் என்பவர், ஓய்வை நெருங்கிக் கொண்டிருந்த வயதான ஒரு ஊழியருடனான தமது உரையாடலைப் பற்றிக் கூறினார். அந்த வயதான மனிதர் பிரசங்கித்த மிகப்பெரும் சபைக்கட்டிடத்தினுள் இவ்விரு மனிதர்களும் நுழைகையில், அம்மனிதரின் வாழ்வின் அந்தக் கட்டத்தில் அவரது அன்றாடச் சிந்தனைகளைப் பற்றி அவரிடத்தில் கில்லிங்கர் கேட்டார். அன்பைப் பற்றியதே அவரது அடிக்கடியான சிந்தனைகளில் ஒன்றாய் இருந்தது என்று பதிலளித்தார்.

> "அன்பு என்பதன் மூலம் நான் இதை அர்த்தப்படுத்துகின்றேன்" என்று அவர் கூறினார். அந்தப் பெரிய சபைக் கட்டிடம் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் அவர் தமது கைகளை வீசிக் காண்பித்தார். "இந்த கட்டிடத்தைக் கட்டுவதே என் நிறைவான நோக்கம் என்று நான் நினைத்ததுண்டு. இந்தப் பழைய நினைவுச் சின்ன வளாகத்தை நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது இது அன்பினாலேயே கட்டப்பட்டது என்று நான் நினைக்கின்றேன். மக்கள் மாறாதிருந்தார்கள் என்றால், இந்தக் கட்டிடத்தின் நன்மை என்ன? நான் எனது ஊழியத்தின் எஞ்சியுள்ள நாட்களை அன்பு செய்வது எப்படி என்று மக்களுக்குப் போதிக்கச் செலவழிக்கலாம் என்று விரும்புகின்றேன். அவர்கள் கற்றுக் கொள்ளா விட்டால் …" அவரது வார்த்தைகள் இன்னொரு செய்கைக்குத் தடம் மாறின, அது ஒரு பகுதி நம்பிக்கையின்மையின் செய்கையாக, அதைத் தாம் நிறைவேற்ற முடியுமா என்று அவர் அறியாத செய்கை போல, அன்புதான் ஒவ்வொன்றின் இலக்காக உள்ளது என்பதைத் தாமதமாக அவர் கண்டு பிடித்ததால் ஒரு கட்டிடம் கட்டியவர் என்ற வகையில் அவரது மகிமையுள்ள வெற்றியானது ஒரு வகையில் பேராபத்தான தவறாயிற்று என்று உணர்த்தும் செய்கையாக இருந்தது.[8]

பல விஷயங்கள் தங்களை மதத்துடன் இணைத்துக் கொள்கின்றன; அவற்றில் சில மற்றவற்றை விட அதிகம் முக்கியமானவைகளாக உள்ளன. மற்ற எல்லா விஷயங்களைக் காட்டிலும், விசுவாசம், ஆராதனை, அன்பு ஆகியவை பெரியவைகளாய் உள்ளன. தேவை மற்றும் குழப்பத்தில் இருந்த சமாரியப் பெண்ணுக்கு உண்மையான, ஆவிக்குரிய ஆராதனையின் இலக்கை இயேசு சுட்டிக்காட்டிய பொழுது, வாழ்வில் குறிப்பிடத் தக்க இலக்கு என்ன என்பதை அவர் காண்பித்தார். அதனுடன் ஒப்பிடும் பொழுது தேவாலயங்கள் மற்றும் பரிசுத்த மலைகள் உள்ளிட்ட பெரும் பான்மையான மற்ற விஷயங்களுக்கு அர்த்தம் ஒன்றும் இருப்பதில்லை.

## முடிவுரை

ஆராதனை பற்றிய இயேசுவின் வார்த்தைகளைத் தொடர்ந்து, சமாரியப் பெண் பேச்சை மாற்ற மீண்டும் முயற்சி செய்தாள். "கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்" (4:25). பிறகு இயேசு திகைப்பூட்டும் ஒரு செயலை - சுவிசேஷங்களில் மிக மிக அரிதாக இருக்கின்ற ஒரு செயலை - செய்தார்; அவர் தாம் உண்மையில் யாராயிருந்தார் என்பதை அவளுக்குக் கூறினார்! "உன்னுடனே பேசுகிற நானே அவர்" (4:26). ஆசாரியர்களுக்கோ அல்லது அரசர்களுக்கோ அவர் இப்படிப்பட்ட ஒரு வெளிப்படுத்துதலை ஏற்படுத்தவில்லை; ஒரு ஒழுக்கமற்ற சமாரியப் பெண்ணுக்கு அது வெளிப்படுத்தப்பட்டது! இயேசு அவளது இருதயத்தை இராஜ்யத்தின் விதைக்கான வளம் நிறைந்த நிலமாகக் கண்டார், எனவே அவளுடன் அவர் தேவனுடைய செய்தியைப் பகிர்ந்து கொண்டார்.

முடிவில், நீங்களும் நானும் கிணற்றண்டையில் இயேசுவுடன் நின்று கொண்டிருக்கின்றோம். நமது குழப்பம், நமது நம்பிக்கைகள், நமது கடந்த காலம், மற்றும் நமது வேதனை ஆகியவற்றைக் கொண்டு வந்து நாம் தேவனுடைய குமாரனை எதிர்கொள்ளுகின்றோம். பின்வரும் சத்தியங்களை அவர் நமக்குப் போதிக்கையில், நாம் கவனித்துப் புரிந்துகொள்ள முயற்சி செய்கின்றோம்: (1) விசுவாசம் என்பது சூழ்நிலைகளுக்கு மேலானதாக உள்ளது, (2) விசுவாசம் என்பது நடத்தையுடன் பிணைக்கப்பட்டுள்ளது, மற்றும் (3) விசுவாசம் என்பது உண்மையான ஆராதனையில் விளக்கப்படுகின்றது.

விசுவாசத்தின் சாலையில் பயணப்படும்படி சமாரியப் பெண்ணை இயேசு அழைத்தார் என்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக அவர் இன்று உங்களையும் என்னையும் அழைக்கின்றார்!

---

குறிப்புகள்

[1]பேஸ்பால் என்ற விளையாட்டில், விளையாடுபவர் ஒருவர் மூன்று முறை அடித்தால் (பந்தை அடிக்க முயற்சி செய்தும் வெற்றி பெறாமை) அவர் "வெளியேறி" விட வேண்டும்; அதாவது அவரது வாய்ப்பு இழந்து போகப்பட்டது. [2]எஸ்றா 4:2-5. [3]M. Nidd. 4:1. தல்மூத்தின் ஒரு பாகமாகிய மிஷ்னா என்பது யூத பாரம்பரிய வாய்மொழிச் சட்டத்தின் எழுத்து வடிவமாகும். யூத பாரம்பரியத்தின்படி, இது மோசேயின் காலத்தில் தோன்றிய (கி.மு. 1200) மற்றும் இது ஒரு தலைமுறைக்குக் கொடுக்கப்படும்படியாக மனப்பாடம் செய்யப்பட்டது. இது கி.பி. 70-200 ஆண்டு காலத்தில் எழுத்து வடிவில் அமைக்கப்பட்டது. [4]M. Shebi. 8:10. [5]TB Ab. 1:5. தல்மூத் என்பது யூதருடைய மத மற்றும் குடிமைச் சட்டங்களின் எழுதப்பட்ட தொகுப்பாக உள்ளது. இது இரு பாகங்களைக் கொண் டுள்ளது: மிஷ்னா என்ற பாரம்பரியமான யூத வாய்மொழிச் சட்டங்கள், மற்றும் கெமாரா என்ற கல்வித்துவமான விளக்கவுரைகளின் இடைச்செருகல்களுடன் மற்றும் சட்டங்கள் பற்றிய விவாதங்களும் ஆகும். [6]அவளுடைய கணவர்களில் சிலர் இறந்திருக்கக் கூடிய சாத்தியக் கூறு உள்ளது. இருப்பினும், சந்தர்ப்பப் பொருளானது அந்தத்

திருமணங்கள் மணமுறிவில் முடிந்தன என்றே சுட்டிக்காட்டுவதாகக் காணப்படுகின்றது. [7]See James D. Bales, *Instrumental Music and New Testament Worship* (Searcy, Ark.: James D. Bales, 1973), 15-30. [8]John Killinger, *Christ in the Seasons of Ministry* (Waco, Tex.: Word Books, 1983), 67.




**தேவாலயத்தின் வரைபடம்**

# சமாரியர்கள் மத்தியில் வாழ்தல் [4:16–18]

*கிணற்றண்டையில் சமாரியப் பெண்ணுடன் இயேசுவின் கலந்துரையாடலின் ஒரு இடர்ப்பாடான தருணத்தில், அவர் அவளிடத்தில் அவளது கணவனை அழைத்து வரும்படி கூறினார். அவள் தனக்குக் கணவன் இல்லை என்று பதில் அளித்த பொழுது, இயேசு, "எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான்; எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய்" (4:17, 18) என்று கூறினார். சிதைக்கப்பட்ட திருமணங்களும், நொறுக்கப்பட்ட உறுதிப்பாடுகளும் அவளது கடந்த காலத்தை சிதறடித்து, அவளது எதிர்காலத்தை நாசப்படுத்தியிருந்தன.[1] ஒரு உண்மை நிச்சயமானதாக இருந்தது: அவளது வாழ்வு கட்டுப்பாடு இன்றி இருந்தது.*

*கிணற்றினருகில் இருந்த இந்தப் பெண் சீகார் நகர மக்களிலிருந்து வித்தியாசப்பட்டவளாய் இருந்தாளா இல்லையா என்பதை நம்மால் யூகிக்க மட்டுமே முடியும். அவளது சூழ்நிலையானது அந்த நகரத்தின் மக்கள் தங்கள் புருவங்களை உயர்த்தச் செய்ததா? அல்லது அவளது வாழ்வு முறையானது அவளை ஒரு சராசரிக் குடிமகளாக்கியதா? அநேகமாக நாம் இதைப் பற்றி ஒருபோதும் அறிய மாட்டோம். இருப்பினும் இந்தப் பாடத்தில் நாம், சமாரியப் பெண்ணின் அனுபவமானது பொதுவானதாக ஆகியுள்ள இன்றைய சமுதாயத்தின் வாழ்வில் இது கொண்டுள்ள மறைமுகக் கருத்துக்களைப் பிரதிபலிக்க விரும்புகின்றோம். அமெரிக்காவில் நடைபெறும் புதிய திருமணங்கள் எல்லாவற்றிலும் 50 சதவிகிதம் மணமுறிவில் முடிவடையும் என்பதைத் தற்போதய போக்குகள் சுட்டிக் காட்டுகின்றன. பலதாரத் திருமணம் என்பது அமெரிக்காவில் சட்டத்திற்குப் புறம்பானதாக்கப்பட்டிருந்தாலும், நாம் "தொடர்ச்சியான பலதார மணங்களால்" சூழப்பட்டிருக்கின்றோம், இது ஒரு வேளையில் ஒரு துணையாக பல துணைகளைப் பெற்றிருக்கும் நடைமுறையாக உள்ளது. சபையானது நாம் வாழும் கலாச்சாரத்தைப் போன்றே ஆகிக் கொண்டிருக்கிறது என்பதுதான் மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. இந்தக் காரணத்திற்காகவே, நாம் சமாரியாவின் கிணற்றருகே தாமதித்து, "சமாரியர்களின் மத்தியில் வாழும்" மக்கள் என்ற வகையில் நமக்காக வேத வசனங்களின் செய்தியை நாடுவது முக்கியமானதாக உள்ளது.*

*நமது நாட்களில் "சமாரியர்கள்" மத்தியில் வெற்றிகரமாய் வாழ்வதற்கு, முதலாவது நமக்கு உறுதியான சில தகவல்கள் தேவைப்படுகின்றன. இது நமது இன்றைய நாளின் பயணத்தினுடைய அடைவிடம் அல்ல, ஆனால்*

இது இன்றியமையாத முதல் நிறுத்தமாக உள்ளது.

## ஒரு இரட்டை உறுதிப்பாடு

தங்கள் திருமணத்தில் ஒரு முறிவை ஏற்படுத்தக் கருதிக் கொண்டிருக்கும் தம்பதிகளுடன் சில வேளைகளில் நான் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, அவர்கள் பின்வருவது போன்ற கூற்றுகளை ஏற்படுத்துவதை நான் கேட்பேன்: “இந்த உறவில் நாங்கள் மிகவும் பரிதாபமான நிலையில் உள்ளோம், இதற்குப் புறம்பே நாங்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்போம். இவ்வளவு கடினமான ஒரு திருமண வாழ்வில் நாங்கள் ஏன் நிலைத்திருக்க வேண்டும்? எப்படியும், இந்தக் காலத்தில் யார் ஒன்று கூடி நிலைத்திருக்கின்றார்கள்?” இந்த வார்த்தைகளில், நாம் இந்த உலகத்தாரிடமிருந்து எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமான எதையும் கிறிஸ்தவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்ற நம்பிக்கையே மறைவான கருத்தாக உள்ளது. இப்படிப்பட்ட ஒரு கருத்தானது பிசாசின் பொய்யாக உள்ளது, ஏனெனில் வேத வசனங்கள் கிறிஸ்தவர்களுக்கு ஒரு உயர்தரமான பண்பை வருத்தம் தெரிவிக்காத வகையில் போதிக்கின்றன.

விசுவாசிகளுக்கான தேவனுடைய அளவீட்டுத் தரத்தைப் பற்றிப் பவுல் பின்வருமாறு அறிவித்தார்,

> விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன். ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப் போக வேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரானாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக் கூடாது அப்படிப்பட்டவனோடே கூடப் புசிக்கவுங் கூடாது. புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தீர்ப்புச் செய்கிறது என் காரியமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச் செய்கிறீர்கள்? புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தேவனே தீர்ப்புச் செய்வார். ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப் போடுங்கள் (1 கொரி. 5:9-13).

தெளிவான ஒரு “இரட்டை அளவீட்டுத்தரம்” இந்த வசனங்களில் காணப்படுகின்றது. கிறிஸ்தவர்கள் ஒழுக்கமற்ற கிறிஸ்தவர்களுடன் இசைந்திருக்கக் கூடாது, ஆனால் அவர்கள் ஒழுக்கமற்ற கிறிஸ்தவரல்லாதவர்களுடன் இசைந்திருக்க அனுமதிக்கப்படுகின்றனர். ஏன்? ஏனென்றால் கிறிஸ்தவர்களிடம் மிகவும் அதிகமானவைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஒரு கிறிஸ்தவர் “மற்ற ஒவ்வொருவரும் இதைச் செய்கின்றார்களே” என்று கூறித் தமது நடக்கையை நியாயப்படுத்த நாடும் பொழுது, நாம், “ஆம், ஆனால்

தேவன் அவர்களிடம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை நம்மிடம் எதிர்பார்க்கின்றார், ஏனெனில் நாம் கிறிஸ்தவர்களாய் இருக்கின்றோம்" என்று பதில் அளிக்க வேண்டும்.

ரோமருக்குப் பவுல் தமது நிருபத்தை எழுதிய பொழுது, அவர் முதல் பதினோரு அதிகாரங்களை உபதேச போதனைகள் மற்றும் விஷயங்கள் ஆகியவற்றிற்கு அர்ப்பணித்தார். அதன் பிறகு அவர் பின்வரும் வார்த்தைகளின் மூலம் நடக்கை பற்றிய பிரச்சனைகளை எடுத்துரைக்கத் தொடங்கினார்:

> அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:1, 2).

J. B. பிலிப்ஸ் அவர்களின் நன்கறியப்பட்ட மொழிபெயர்ப்பில், இவ்வசனமானது, "உங்கள் வார்ப்படத்தில் உலகமானது அழுத்தும்படி அனுமதித்து விடாதீர்கள்" என்றுள்ளது. உலகம் ஒரு வழியில் இருக்கின்றது, கிறிஸ்தவர்கள் வேறு வகையினராய் இருக்க வேண்டியுள்ளது. உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுதல் என்பதல்ல, ஆனால் தேவனுக்கு ஒப்புக் கொடுக்கப் படுதல் என்பதே நமது வாழ்வின் முயற்சியாக இருக்க வேண்டியுள்ளது.

பவுல், "மாம்சத்தின் செயல்கள்" மற்றும் "ஆவியின் கனிகள்" ஆகியவற்றைப் பற்றி எழுதிய பொழுது, உலகத்தின் வழியையும் கிறிஸ்தவரின் வழியையும் அவர் மீண்டும் ஒப்பீடு அடிப்படையில் வேறுபடுத்தினார்:

> மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டங்கள் முதலான வைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை (கலா. 5:19-23).

தேவனுடைய பிள்ளை வாழ்கின்ற வழிக்கும், இந்த உலகத்தின் பிள்ளை வாழ்கின்ற வழிக்கும் இடையில் உள்ள வேறுபாடானது முற்றானதாக உள்ளது; இவர்கள் முற்றிலும் மாறுபட்ட இரு சாலைகளில் பின்பற்றிச் செல்ல வேண்டியவர்களாய் இருக்கின்றனர். நாம் நமது

கலாச்சாரத்திலிருந்து மாறுபட்டவர்களாக, வெளி நடந்து வந்தவர்களாக இருக்கின்றோம் என்பது நம்மை வியப்படையச் செய்யக்கூடாது; நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரையும் போலவே நாமும் இருப்பதாகக் காணுவதே நம்மை வியப்படையச் செய்ய வேண்டும்! "மாம்சத்தின் செயல்களும்" மற்றும் "ஆவியின் கனிகளும்" திருமணத்திற்கு எவ்வளவாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்பதை நீங்கள் கவனித்தீர்களா? ஆகையால் திருமணம் பற்றிய கிறிஸ்தவ அணுகுமுறை, திருமணம் பற்றிய கிறிஸ்தவ மற்ற அணுகுமுறை பொதுவில் கொண்டுள்ளது மிகச் சிறிதளவே என்று நாம் எதிர்பார்க்கலாம்.

## ஒரு வாழ்வுக்கால உறுதிப்பாடு

விவாக ரத்தைத் தேவன் வெறுப்பது பற்றி மல்கியா எழுதினார்: "தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்; அப்படிப்பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஆகையால் நீங்கள் துரோகம் பண்ணாமல் உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (மல். 2:16). அந்த வசனத்தை நீங்கள் தவறாக வாசிக்காதபடி கவனமாய் இருங்கள். அது, தேவன் மணமுறிவு செய்து கொண்ட மக்களை வெறுக்கின்றார் என்று கூறுவதில்லை; அது, தேவன் மணமுறிவை வெறுக்கின்றார் என்றுதான் கூறுகின்றது! மணமுறிவு என்பது தேவனுடைய பார்வையில் ஒரு உடன்படிக்கையை முறித்துப் போடுவதாக உள்ளது; அது ஒரு உறுதிப்பாட்டை விட்டுவிடுதலாக இருக்கிறது. அத்துடன், அது தேவன் தாமே இணைத்து வைத்திருந்தவர்களைக் கிழித்துப் பிரிக்கின்றதாக உள்ளது. இயேசு, "ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" (மாற். 10:9) என்று உரைத்தார். வாழ்வு முழுவதிலும் ஒரு ஆணுக்கு ஒரு பெண் இருக்க வேண்டும் என்பதே காலத்தின் தொடக்கத்தில் இருந்தே மனிதருக்கான தேவனுடைய திட்டமாக இருந்து வருகின்றது. அது சுலபமானது அல்ல மற்றும் அது அரிதாகவே உலகத்தின் வழியாக உள்ளது என்பதை அவர் அறிகின்றார், ஆனால் அதுவே மிகச் சிறந்தது என்பதையும் அவர் அறிகின்றார். இதன் விளைவாக, அவர் தம்முடைய மக்களை அந்த உயர்வான தர அளவீட்டின்படி வாழ்வதற்கு அழைக்கின்றார்.

முதல் நூற்றாண்டு கொரிந்து நகரின் ஒழுக்கமற்ற அமைப்பில் பவுல் இதே அளவீட்டுத் தரத்தை அறிவித்தார் (1 கொரி. 7:10-16). அவர், கிறிஸ்தவராகியிராத துணைகளைப் பெற்றுள்ள கொரிந்து நகரத்துச் சீஷர்கள் தங்கள் திருமண வாழ்வில் நிலைத்திருக்கும்படி அழைத்தார். இப்படிப்பட்ட உறவுமுறைகள் நிச்சயமாகவே கடினமானவைகளாய் இருந்தன, மற்றும் பலர் அநேகமாக, புறதெய்வக்காரர்களான தங்கள் துணைகளை விட்டு, அவர்களின் செல்வாக்கை விட்டு கிறிஸ்தவர்கள் விலகியிருத்தல் எவ்வளவோ நன்றாயிருக்கும் என்று கூறியிருந்திருக்கலாம். சோதனையான சூழ்நிலைகளிலும் கூட, இந்தக் கிறிஸ்தவர்கள் தங்கள்

திருமணத்தில் நிலைத்திருந்து, தாங்கள் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையைக் கனப்படுத்துதலே அவர்களுக்குச் சரியான செயலாகும் என்று பவுல் வலியுறுத்தினார். மீண்டுமாக, தேவன் தம்முடைய பிள்ளைகள் கடினமான உயர்தரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கொள்கையை உறுதியாகப் பற்றிக் கொண்டுள்ளார். உலகம் என்ன செய்தாலும் அது ஒரு பொருட்டல்ல, தேவன் தம்முடைய பிள்ளைகள் தங்கள் திருமண வாக்குறுதிகளில் உண்மையாய் நிலைத்திருக்கும்படி எதிர்பார்க்கின்றார்.

## ஒரு சமூக உறுதிப்பாடு

டென்மார்க் நாட்டுத் தத்துவ ஞானியான சோரென் கிர்க்கார்டு என்பவர் ஒருமுறை, "ஒரு கிறிஸ்தவ நாட்டில் தகவல் குறைபாடு எதுவும் இருப்பதில்லை; வேறு ஏதோ குறைவாய் உள்ளது, மற்றும் இது, ஒரு மனிதர் இன்னொருவரிடத்தில் நேரடியாகத் தகவல் அறிவிக்க முடியாது என்பதேயாகும்" என்று எழுதினார்.[2] சரியான தகவலைப் பெறுவது என்பது சமாரியர்கள் மத்தியில் நாம் வாழ்வதைச் சமாளிப்பது எப்படி என்பதன் தொடக்கமாய் இருக்கையில், "ஏதோ ஒன்று குறைவு படுகின்றது." நான் அறிந்துள்ள வரையிலும், திருமணம் முடிக்கும் எவரொருவரும் விவாகரத்தைப் பெறுவதை எதிர்பார்த்து திருமணம் முடிப்பதில்லை. வானொலியில் வருகின்ற உலகப்பிரகாரமான காதல் பாடல்களும் கூட, ''என்றென்றும்'' மற்றும் ''எப்பொழுதும்'' போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றன. கல்லூரி வயதில் உள்ள (எதிர்காலத்) தம்பதியருக்கு நான் அடிக்கடி முன் திருமண ஆலோசனை அளிப்பதுண்டு. திருமண முறிவைப் பற்றி நாங்கள் பேசிய பொழுது, அவர்கள் தங்கள் வாய்களைத் திறக்கு முன்பே, அவர்கள் என்னிடத்தில் என்ன கூறுவார்கள் என்பதை நான் அறிகின்றேன். "நாங்கள் மணமுறிவில் நம்பிக்கை கொண்டிருப்பதில்லை" என்று அவர்கள் தன்னம்பிக்கையுடன் உறுதிப்படுத்துவார்கள். "மண முறிவு என்பது எங்களுக்கு (நாங்கள்) தேர்ந்து கொள்ளும் விஷயம் அல்ல'' என்பார்கள். இவ்வளவு அதிகமான தம்பதிகள் தங்கள் திருமண வாழ்வைத் தொடங்கும் பொழுதே இது பற்றி நன்கு அறிந்திருந்தால் பிறகு ஏன் மணமுறிவில் முடிகின்றார்கள்? தகவலைக்காட்டிலும் அதிகமான ஏதோ ஒன்று குறைவு படுகின்றது என்பது தெளிவு.

தடுமாறும் திருமணங்களில் சேர்க்கத் தவறுகின்ற கூட்டுப் பொருள் சபை என்றே நான் நம்புகின்றேன். முதலாவது, இது ஒரு சமுதாயத்தில் மக்கள் ஒன்றுகூடி நிலைத்திருக்க நேர்மறை வகையான அழுத்தத்தை இணையான நண்பர்கள் மூலம் அளிக்கின்றது. நாம் ஒன்றுகூடிவரும் ஒவ்வொரு முறையும் மக்கள் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளாக (தம்பதிகளாய்க்) கூடி வாழ்ந்திருப்பதைக் காண்கின்றோம், அவர்களைக் காண்பது, நமக்கு தைரியத்தைக் கொடுக்கின்றது. போராடுகின்ற திருமணங்கள்கூட நம்மை ஊக்கப்படுத்துகின்றன, ஏனெனில் மக்கள் கடினமாய் உழைத்து தங்கள் திருமணத்தைப் பலப்படுத்த விரும்புவதை அவை நமக்குக் காண்பிக்கின்றன.

சபை என்பது திருமண உறுதிப்பாட்டிற்கு இன்றிமையாததாகவும் உள்ளது, ஏனென்றால் அது, நமது குடும்பங்கள் வாழ்வதற்கும், போராடுவதற்கும், போஷிக்கப்படுத்தப்படுவதற்கும் மற்றும் பிழைப் பதற்கும் முடியக்கூடிய பெரிய குடும்பம் ஒன்றை நமக்கு அளிக்கின்றது. அமெரிக்கக் கிறிஸ்தவர்கள் சபையைத் திருமணத்திற்கான ஒரு தகவல் நிலையம் என்பதற்கும் சிறிது அதிகமாக மட்டுமே நோக்குகின்றனர் என்பது பற்றி நான் மிகவும் அடிக்கடி அச்சமடைகின்றேன். அந்த மனப்பான்மை யானது சபையைப் போதனைக்காக, கருத்தரங்குகள் மற்றும் பணிமனை களுக்காக நோக்குகின்றது, அவைகளில் இருந்து நாம் தகவல்களைப் பெற்று, அத்தகவல்களைப் பிறகு நமது வீட்டிற்கு எடுத்துச் சென்று சபையின் எஞ்சியவர்களை விட்டு, தனிமையில் அவற்றை செயல்படுத்த முயற்சிக்க லாம் என்ற வகையில் கண்ணோக்குகின்றது. நமது திருமணங்களை பெரிய சமூகம் ஒன்றின் (சபையின்) அங்கமாயிருக்கும்படி அனுமதிப்பதே இன்னும் அதிகமாக வேதாகமத்தின்படியான முன்மாதிரியாக உள்ளது.

தீத்துவுக்கு (நிருபம்) எழுதியதில் பவுல், இளம் பெண்கள் கிறிஸ்தவ மனைவிகளாகவும் தாய்மார்களாகவும் இருப்பது எப்படி என்று முதிர் வயதுள்ள பெண்கள் போதிப்பதுடன், சபையானது குடும்பத்தின் மையமாகத் திகழ வேண்டிய வழிமுறை பற்றி விவரித்தார் (தீத்து 2:1-5). அந்த வழிமுறையில் ஒரு சபையானது ஊழியம் செய்யும் பொழுது, இளைய அல்லது பக்குவமற்றவர்கள் தங்களுக்கு அதிகம் தேவைப்படுகின்ற முதிர்ந்த, அனுபவமிக்க மற்றும் ஆதரவளிக்கின்ற மூல ஆதாரங்களைப் பெறும் வழியை அடைவார்கள். இடர்ப்பாடு வருகின்ற பொழுது, தேவையில் இருப்பவர் களுக்கு உதவியாக ஒவ்வொருவரும் வேதனைகளையும் கூட்டு முயற்சிகளையும் பகிர்ந்து கொள்கின்றனர். புறக்கணித்தல் அல்லது தவறான பயன் பாடு ஏற்படும் பொழுது, “குடும்ப அங்கத்தினர்கள்” முன் வந்து, தனி நபர்களை அவர்களின் நடக்கைக்குப் பொறுப்பாளிகளாக்கி, அந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் வகையில் பணி செய்கின்றார்கள். யாரேனும் ஒருவர் ஒரு சபையைப் பற்றி, “அவர்கள் எங்களது இருள் நிறைந்த வேளையில் எங்களுடன் நின்று, போராட்டம் முழுவதிலும் எங்களுடன் நடந்தார்கள். அவர்கள் எங்களுக்குக் குடும்பமாக இருந்தார்கள்!” என்று கூறுவதைக் கேட்கும் பொழுது நான் எப்பொழுதுமே உற்சாகப்படுத்தப்படுகின்றேன்.

இப்படிப்பட்ட இன்றியமையாத உறவுகள் சபையில் மலர வேண்டு மென்றால், தம்பதிகள் தங்களுக்குத் தேவைப்படப் போகின்ற ஆதரவுடன் தங்களை இணைத்துக் கொள்ளும் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு விஷயத்திற்கு அவர்கள் தாங்கள் பாராட்டுகின்றபடியாகத் திருமண வாழ்வை வாழுகின்ற முதிய, அதிக அனுபவமிக்க தம்பதிகளை நாடுவது அவசியமாகும். தங்கள் பயிற்சியாளர்களை அவர்கள் தங்கள் இல்லங்களுக்கு உணவு உண்ண அழைக்க வேண்டும், மற்றும் தங்களுக்கு ஞானமும் மென்மையுமான ஆலோசனை மற்றும் ஊக்கப்படுத்தும் ஆதரவு ஆகியவற்றை அளிக்கக்கூடிய மக்களுடன் நேரம் செலவழிக்க வழிகளைக் காண வேண்டும். நானும் எனது மனைவியும் திருமணமான புதிதில்,

மிஸிஸிப்பியில் உள்ள ஒரு சிறு நகருக்குச் சென்று வசித்தோம், அங்கு நான் ஒரு சபையில் ஊழியம் செய்தேன், எனது மனைவி அங்கிருந்த உள்ளூர் மருத்துவ மனை ஒன்றில் பணியாற்றினாள். அங்கு யாரையும் அறியாத நிலையில் குடியேறிய நாங்கள், விரைவிலேயே எங்களை விட முப்பது ஆண்டுகள் முதியவர்களாயிருந்த ஒரு அற்புதமான கிறிஸ்தவத் தம்பதி களைக் கண்டோம். லேரி மற்றும் வின்னிமுர்ரே என்ற பெயர் கொண்டிருந்த அவர்கள் எங்கள் திருமண வாழ்வின் முதல் இரு ஆண்டு களில் எங்களுக்கு உணவளித்து, உற்சாகமூட்டி, எங்களுடன் பொழுது போக்கி, சபைக்கு எங்களுடன் வந்தார்கள். எங்களது முதல் இல்லத்தை அற்புதமான அனுபவமாக்கியதற்காக நாங்கள் அவர்களுக்கு இன்னும் நன்றி நிறைந்தவர்களாக இருக்கின்றோம், மற்றும் நான், சபையானது தனது எல்லாக் குடும்பங்களையும் ஊக்கமூட்ட வேண்டிய வழிவகை பற்றி ஆலோசிக்கும் பொழுதெல்லாம் நான் அடிக்கடி அவர்களை நினைப்பதுண்டு.

இடர்ப்பாடு தொடங்குமுன்பே தம்பதிகள் ஒரு பலமான கிறிஸ்தவ நண்பர்களின் வலைப் பணியைக் கட்டியெழுப்பப் பணி புரிய வேண்டும். திருமணம் இடர்ப்பாட்டிற்காளானவுடன், ஒவ்வொரு திருமணத்திற்கும் தேவையாக உள்ள பரஸ்பர நட்புறவுகளை வளர்ச்சியடையச் செய்தல் என்பது உண்மையில் இயலாத ஒன்றாக உள்ளது. பிரசங்கியின் புத்தகத்தில் பிரசங்கியார், “நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும், ... அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை” (பிர. 12:1-7) என்று இளம் மக்களுக்கு அறிவுரை கூறினார். இடர்ப்பாடுக்கு நாம் அது வருமுன்பே தயார் செய்து கொள்ள வேண்டும், மற்றும் சிரமங்கள் எழும்பாததற்கு முன்னே உங்கள் திருமணத்திற்கு ஆதரவு தரும் வலைப்பணியொன்றை கட்டியெழுப்பப் பணிபுரிய வேண்டும்.

## முடிவுரை

இந்த வேளையில், நீங்கள் சற்று நின்று, உங்கள் வாக்குறுதிகளுக்கு உங்களையே மறு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் தேவனுக்கு முன்பாக உங்கள் துணைவரின்/துணைவியின் மற்றும் அல்லது உங்கள் பிள்ளைகளின் கைகளைப் பற்றிக் கொண்டு அவர்களை உங்கள் வாழ்நாள் முழுவதும் அன்புகூரும்படி உங்களையே அர்ப்பணிக்கலாம்.

---

குறிப்புகள்

[1]இந்தப் பாடமானது, யோவான் சுவிசேஷத்தின் விளக்கவுரைத் தொடரின் மத்தியில் பிரசங்கிக்கப்பட்ட தலைப்பு ரீதியான ஒரு பிரசங்கத்தின் எடுத்துக் காட்டாக உள்ளது. ஐந்து திருமணங்களைச் செய்திருந்த சமாரியப் பெண், திருமணத் தின் ஆயுட் கால உடன்படிக்கை என்ற தலைப்பு ரீதியான பிரசங்கத்திற்கு வழி

நடத்தும் அற்புதமான எடுத்துக்காட்டாகத் திகழுகின்றாள். இதன் விளைவாக, நாம் கிணற்றினருகில் இன்னும் ஒரு வாரம் தாமதித்து கிணற்றண்டையில் இருந்த பெண்ணின் வரலாற்றில் மேலிட்டிருந்த பிரச்சனையை ஆராய்வோம் என்று நான் சபையாருக்குக் கூறினேன். [2]Fred B. Craddock, *Overhearing the Gospel* (Nashville, Tenn.: Abingdon Press, 1978), 9.

---

## நீங்கள் அறிந்துள்ள "ஒன்றுதான்" எது?

பெரும் கூட்டமுகாம்களில் அடைத்து வைக்கப்பட்டு வாழ்ந்த மக்கள் மேல் ஏதோ சில காரணங்களினால் நாம் கரிசனையுள்ளவர்களாய் இருக்கின்றோம். அவர்கள் தங்களின் பயங்கரமான அனுபவங்களில், தங்கள் குடும்பங்கள், தங்கள் இல்லங்கள், தங்கள் வேலைகள், தங்கள் பதவிகள் மற்றும் தங்கள் உடைகள் ஆகியவற்றிலிருந்தும் கூட அகற்றி விலக்கப் பட்டார்கள். இந்தத் துன்பங்களிலிருந்து அவர்கள், நமது தொல்லை கொடுக் கும் கேள்விக்குப் பதில் அளிக்கத் திரும்பி வந்தனர்: "இவை யாவும் எடுக்கப் பட்ட பொழுது, வாழ்வில் ஏதேனும் எஞ்சியிருந்ததா?" உலகப் பொருட் களின் எண்ணிறந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ள மக்கள், வாழ்வின் ஆவிக்குரிய அஸ்திபாரத்தைப் பற்றிய மாபெரும் பாதுகாப்பின்மை என்பதையே விலையாக செலுத்தியுள்ளனர். அவர்கள், "என்னிடத்தில் ஒன்றுமில்லாதிருந்தால், அப்பொழுதும் விசுவாசம் கொண்டிருப்பேனா? நான் பயங்கரமாகத் துன்புற நேர்ந்தால், நான் அப்பொழுதும்கூட இயேசுவில் விசுவாசம் கொள்வேனா? எனது வாழ்வு திடமானதொரு அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டுள்ளதா?" என்று வியப்படையலாம். பெரும் கூட்ட முகாம்களில் பிழைத்திருந்தவர்கள் கடினமான அனுபவத் திலிருந்து இந்தக் கேள்விகளுக்கான பதில்களை அறிந்திருக்கின்றனர்.

பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த மனிதர், யூதர்களிடம் "... நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" (9:25) என்று கூறினார். உங்களுக்குத் தெரிந்த "ஒன்றுதான்" எது? உங்கள் விசுவாசத்தின் அடிப்படை எது? உங்களிடம் உள்ள உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்கள் எல்லாம் திடீரென்று எடுக்கப்பட்டுவிட்டால், அப்பொழுதும் நீங்கள் நிச்சயமாய் அறிந்திருக்கக் கூடிய "ஒன்றுதான்" என்ன? இந்தக் கேள்வியானது மாறுபட்ட மக்களுக்கு அநேகமாக மாறுபட்ட பதிலையுடையதாயிருக்கும். "ஒன்றுதான் எனக்குத் தெரியும்: நான் ஒரு ஜீவனுள்ள ஆத்துமா" என்று சிலர் சொல்லக் கூடும். சிலர், "ஒன்று தான் எனக்குத் தெரியும்: இந்த பூமியானது படைப்பவர் ஒருவரைப் பற்றிய திட்டவட்டமான அடையாளங்களைக் காண்பிக்கின்றது" என்று கூறலாம்; "ஒன்றுதான் எனக்குத் தெரியும்; எனது குழந்தையின் பிறப்பில் நான் தேவனு டைய கரத்தைக் கண்டேன்"; "ஒன்றுதான் எனக்குத் தெரியும்: அன்புதான் உலகில் மிக முக்கியமான மற்றும் வல்லமை நிறைந்த சக்தியாக உள்ளது"; நிச்சயமாக உங்களுக்குத் தெரிந்த "ஒன்றுதான்" எது?

# "உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" (4:46-54)

ஹார்டிங் கல்லூரியில் எனது கடைசி ஆண்டுப் படிப்பின் தொடக்கமான 1977ன் பனிக்காலத்தில் ஒரு வாரக் கடைசியில் பல கார்கள் நிறைய மாணவர்கள், ஆத்தும ஆதாயக் கருத்தரங்கிற்கு அர்க்கன்சாஸின் ஸர்ஸியில் இருந்து அலபாமாவின் ஃபிளாரென்ஸ்ஸுக்குச் சென்றோம். அந்த வாரக் கடைசியில் நான் கேள்வியுற்ற மற்றும் அனுபவித்திருந்த ஆச்சரியம் நிறைந்த விஷயங்கள் யாவற்றிலும், வயதான ஒரு ஊழியக் காரரும், அங்கு கூடியிருந்த எங்களில் பலருக்கு நாயகருமான ஓட்டிஸ் கேட்வுட் அவர்களால் தரப்பட்ட விளக்கவுரையைக் காட்டிலும் வல்லமை நிறைந்தது வேறெதுவும் இருந்ததில்லை. அவர், முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஊழியக் களத்தில் கடினமான வேளைகளையும் சோதனைகளை யும் தாங்கிப் பிழைத்திருத்தல் பற்றிப் பேசும்படி கேட்டுக் கொள்ளப் பட்டார். அந்த இரவில் அவர், தனிமை, சகோதரர்களால் எதிர்ப்பு, அரசு களினால் துன்புறுத்தல், பிரியமானவர்கள் மற்றும் உடன் ஊழியர்களின் மரணம், மற்றும் சுவிசேஷம் பரப்புதலின் அன்பின் ஊழியத்திற்காக அவர் சகித்திருந்த மற்ற சோதனைகள் ஆகியவை பற்றிப் பேசினார்.

சகோதரர் கேட்வுட் அவர்கள் ஐரோப்பாவில் தமது ஊழியத்தின் வாழ்நாள் முழுவதற்குமான நினைவுகளைப் பகிர்ந்து கொண்டதை நாங்கள் கவனிக்கையில் பேச்சற்றுப் போனோம், ஆனால் அவர் அன்று மாலை பயன்படுத்திய வேத பாட வசனம்தான், நான் அதிகம் நினைவில் கொள்ளும் விஷயமாக உள்ளது: யோவான் 4:46-54. அனைத்துலக வேதாகமக் கல்லூரியின் தலைவரும், பிரசங்க முகாமின் இயக்குனருமான சார்லஸ் காயில் அவர்கள், சகோதரர் கேட்வுட்டைப் பேசும்படி அழைத்திருந்தார், மற்றும் அவர் பேசப் போகின்ற விஷயத்திற்கு இவ்வசனப் பகுதி ஏற்புடையதாயிருக்கும் என்று ஆலோசனை கூறியிருந்தார். "இரவினூடே நடத்தல்" என்று அழைக்கப்பட்ட அந்தப் பிரசங்கமானது அவ்வேளை முதல் நான் கண்டிருக்கிற பல கடினமான விஷயங்களுக்கான வழி வகையில் அடிப்படையை அமைத்துக் கொடுத்துள்ளது. இந்த பாடப் பகுதியை நான் மக்களுடன் தனிப்பட்ட வேதாகமப் பாடங்களில் பகிர்ந்து கொண்டு, குடும்பங்கள் தங்கள் வாழ்வின் மிகக் கடினமான நாட்களை எதிர்கொள்ளும் வேளையான கல்லறைகளில் இதை நான் வாசித்திருக்

கின்றேன். இது ஒரு அழகான, வல்லமை நிறைந்த, அறைகூவல் விடுக்கும் மற்றும் ஆறுதல் தரும் வசனப் பகுதியாகும்; மற்றும் இவ்வசனப் பகுதியே இந்தப்பாடத்தின் அடிப்படையாகவும் உள்ளது.

## நம்பிக்கை இழந்திருந்த தந்தை (4:46, 47)

இயேசு, சமாரியர்களுடனான தம்முடைய சந்திப்பைத் தொடர்ந்து கலிலேயாவுக்குத் திரும்பினார், அங்கு அவர் அதிகம் புகழ் பெற்ற ஒரு நபராக ஆகிக் கொண்டிருந்தார். அவர் தமது முதல் அடையாளத்தை நிகழ்த்தியிருந்த இடமான கானாவூருக்குத் திரும்பிய பொழுது, தனது மகனின் உயிரைக் காக்கும்படி கெஞ்சிக்கேட்டுக் கொண்ட அரண்மனை அதிகாரி ஒருவரால் இயேசு சந்திக்கப்பட்டார். இவ்விரு மனிதர்களுக் கிடையே நடந்த கருத்துப் பரிமாற்றமானது விசுவாசப் பயணத்தில் நமக்கு இன்னொரு முன்மாதிரியாகப் பணி செய்கின்றது.

அந்த அரண்மனை அதிகாரியின் பதவி அல்லது அரசியல் நிலை பற்றி நாம் சிறிதளவே அறிகின்றோம். அவர், யோவான் ஸ்நானனின் தலையை வெட்டும்படிக் கட்டளையிட்டிருந்த பொல்லாத ஆளுநரான, ஏரோது அந்திப்பா என்று நன்கு அறியப்பட்ட காற்பங்கு தேசாதிபதியான ஏரோதுவின் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டிருந்திருக்க வேண்டும் என்று நாம் அறிகின்றோம். அந்த அதிகாரத்துடன் அவர் கொண்டிருந்த சிறப்புத் தொடர்புகளின் காரணமாக, அவர் குறிப்பிடத் தக்க செல்வாக்குள்ள மனிதராகவும் இருந்திருக்க வேண்டும் என்று நாம் யூகிக்க முடியும்.

இந்த அதிகாரி இயேசுவைச் சந்தித்த இடமான கானாவூரானது கப்பர் நகூமில் இருந்து சுமார் இருபது மைல்கள் தொலைவில் இருந்திருக்கலாம்,[1] அங்குதான் அவரது மகன் வியாதியாய்ப் படுத்திருந்தான். இயேசு கானாவூரில் இருக்கிறார் என்று அந்த மனிதர் கேள்விப்பட்ட பொழுது, அவர் அங்கு சென்று, "மரண அவஸ்தையாய்க் கிடந்த" (4:47) தனது மகனைக் குணமாக்கும்படி தம்முடன் கப்பர்நகூமுக்கு வருமாறு அவரை வேண்டிக் கொள்வதற்காக அங்கு (கானாவூருக்கு) சென்றார். இந்த மனிதரைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது, ஆனால் பின்வருவதை நான் அறிவேன்: மிகத் தீவிரமாக நோய்வாய்ப்பட்டுள்ள மகனைக் கொண்டிருக் கும்பொழுது ஒரு தந்தைக்கு உலகின் மற்ற எந்த விஷயமும் ஒரு பொருட்டாகத் தோன்றாது!

பல ஆண்டுகளுக்கு முன்பு, எனது பிள்ளைகளில் ஒருத்திக்கு, சுகமாகாத வகையிலான இரத்தத் தொற்று ஒன்று ஏற்பட்டிருந்தது. மீண்டும் மீண்டும் கொடுக்கப்பட்டிருந்த நோய்த் தடுப்பு மருந்துகள் பலன் அளிக்காதிருந் ததால், குழந்தை மருத்துவர் எங்களை ஒரு நாள் காலையில் மீண்டும் இரத்தப் பரிசோதனை செய்யும்படி மருத்துவமனைக்கு அனுப்பினார். எவரொருவரும் எங்களுக்குக் கூறாதிருந்தாலும், அவர்கள் இரத்த சோகைக்காகப் பரிசோதனை செய்தார்கள் என்பதை நாங்கள் அறிந்தோம். அது என் வாழ்வில் நீண்டதொரு நாளாக இருந்தது. அந்த நாளுக்கு முன்னதாக பிரச்சனையாகக் காணப்பட்ட எதுவும் அன்று அற்பமான

விஷயங்களாகி விட்டன. எனது சிறு பெண்ணின் உடல் நலமே பெரும் பொருட்டான விஷயமாக இருந்தது. அவள் சரியாகி விடுவாள் என்பதைச் சோதனை முடிவுகள் வெளிப்படுத்தியதற்காக நன்றி நிறைந்தவனாயிருக் கின்றேன். ஆனால் அவளது வாழ்விற்காக நான் பயந்திருந்த வேளையில் இந்த முழு உலகமும் எனது கவனத்தை "விட்டுப் புறம்பே சென்று விட்டதை" நான் ஒருபொழுதும் மறக்க மாட்டேன்.

ஏரோதின் பணியாளராக இவ்வேத பாடப்பகுதியில் வரும் தந்தையும் கூட, இவ்விதமாகத் தன்னை ஒரு அரசியல் பணியாளின் வகைப்பாடாகவே ஏற்படுத்திக் கொண்டிருந்தார். இயேசுவைக் கொலை செய்யும் திட்டத்தில் ஏரோதியர்களும் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு மாற்கு சுவிசேஷம் ஒரு ஆர்வமுள்ள துணை வசனக்குறிப்பாக உள்ளது. சூம்பின கையுடைய ஒரு மனிதனை ஓய்வுநாளில் இயேசு குணமாக்கிய ஒரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து, நாம் "உடனே பரிசேயர் புறப்பட்டுப் போய், அவரைக் கொலை செய்யும்படிக்கு, அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடே கூட ஆலோசனை பண்ணினார்கள்" (மாற். 3:6) என்று வாசிக்கின்றோம். சில வேளைகளில் இவ்வரலாற்றில் தகப்பனாயிருந்தவர் இயேசுவின் மரணத்தை நாடியிருந்திருக்கச் சாத்தியக் கூறுள்ளது. இருப்பினும், அது அரசியலாக இருந்தது; ஒரு குழந்தை இறக்கின்ற பொழுது அரசியல் ஒரு பொருட்டாக இருப்பதில்லை.

இதே போன்றதொரு சூழ்நிலை அமெரிக்காவில் 1981ம் ஆண்டில் ஏற்பட்டது. ஜனாதிபதி ரீகன் சுடப்பட்டு, விரைவாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அறுவைச் சிகிச்சைக்காக அவருக்கு விரைவாக முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு, அறுவைச் சிகிச்சையரங்கினுள் எடுத்துச் செல்லப்பட்டார். ஜனாதிபதி தன் அறுவைச் சிகிச்சையாளரைக் கண்டு, தம் உயிர்வளி முகமூடியை எடுத்துவிட்டு, தனது புகழ் பெற்ற நகைச்சுவை யுடன், "நீங்கள் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவரா?" என்று கேட்டார். அதற்கு மருத்துவர் உயிர்வளி முகமூடியை மீண்டும் பொருத்தி விட்டு, "திருவாளர் ஜனாதிபதி அவர்களே, இன்றைக்கு நாங்கள் யாவரும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே" என்று கூறினார். உயிரானது இடர்ப் பாட்டிற்குள்ளாகும் போது, கட்சி வேறுபாடுகள் என்பவை ஒருவரது கவனத்தில் இருந்து மறைகின்றன.

நாம் அடுத்த வசனப் பகுதிக்குக் கடந்து செல்வதற்கு முன்பாக, தகப்பனின் வேண்டுகோள் பற்றிய கூடுதல் குறிப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அவர் இயேசுவிடத்தில் வந்த பொழுது, இயேசு வந்து தம் மகனைக் குணப்படுத்தும்படி "அவரை வேண்டிக் கொண்டார்." இவ்விடத்தில் கிரேக்க வினைச் சொல்லின் வடிவம் எச்சவினையாக உள்ளது. இது ஒரு தொடர் செயலைச் சுட்டிக்காட்டுகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், மக்களின் பார்வையில் அநேகமாய் ஒரு முக்கிய மனிதராய் இருந்திருக்கக் கூடிய இந்த அதிகாரி தன் மகனு டைய உயிரைக் காக்கும்படி இயேசுவிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்! இது அவரது கடைசி நம்பிக்கையாய் இருந்தது, எனவே அவர் தமது கௌரவத்தையெல்லாம் தமக்குத்தாமே உரிந்து போட்டு விட்டு,

முரண்பாட்டிற்குரிய, மற்றும் பணமேதுமற்ற இரபீயினிடத்தில் தம் பிள்ளைக்காக கெஞ்சினார்.

## அக்கறையுள்ள இரட்சகர் (4:48-50)

பையனின் தகப்பனுடைய வேண்டுகோளை இயேசு கேட்ட பொழுது, முதலில் அங்கிருந்த மக்களைக் கடிந்து கொண்டதே இயேசுவின் பதில்செயலாக இருந்தது. அவர், "நீங்கள் அடையாளங்களையும் அற்புதங் களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள் என்றார்" (4:48). இயேசுவினுடைய திடீர் பதிலுரையினால் நாம் மீண்டும் ஒருமுறை அதிர்ச்சிக்குள்ளாகின்றோம். நாம் மென்மையான தன்மை, உறுதிப்படுத்து தல் மற்றும் நம்பிக்கை ஆகியவை கர்த்தரிடமிருந்து வருவதற்கு எதிர்பார்த்திருப்போம். அதற்குப் பதிலாக நாம் கடிந்து கொள்ளுதலைக் காண்கின்றோம். மீண்டும் ஒருமுறை, இயேசு மக்களை விசுவாசத்தை நோக்கி நகர்த்திச் செல்வதையும் மற்றும் மிகப் பொதுவாக உள்ள போலித்தனமான தாழ்வான விசுவாசத்தில் அவர்கள் நிலைத்து விடாதபடி வலியுறுத்துவதையும் நாம் காண்கின்றோம்.[2]

இயேசுவின் கடிந்து கொள்ளுதலானது, நாம் மற்றவர்களுக்கு உதவி செய்கின்றோம் என்ற பெயரில் நாம் என்ன செய்கின்றோம் என்பதை நாம் நினைத்துப் பார்க்கக் காரணமாய் இருக்க வேண்டும். நாம் சத்தியத்திற்காக முயற்சி செய்வதில் அதிகம் ஒப்புக் கொடுத்தல் உள்ளவர்களாய் இருக்கின்றோமா? அல்லது ஆறுதலுக்காக முயற்சி செய்கின்றோமா? நாம் மக்கள் விசுவாசிப்பது பற்றி அதிக அக்கறை கொண்டுள்ளோமா? அல்லது அவர்கள் தங்கள் உணர்வுப் பூர்வமான ஆறுதலின்மையிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்பதில் அதிக அக்கறை கொண்டுள்ளோமா? ஹென்றி நௌவென்னின் பின்வரும் வார்த்தைகளினால் நான் அடிக்கடி எச்சரிக்கப் பட்டு கடிந்துகொள்ளப்படுவதுண்டு:

> ஒரு ஊழியக்காரர் என்பவர், வேதனையை நீக்குதலை முக்கிய பணிப்பொறுப்பாகக் கொண்ட ஒரு மருத்துவரல்ல ...
>
> ஒருவேளை, தவறான, காரணங்களுக்காக மக்கள் வேதனை அடைவதைத் தவிர்த்தல் என்பது ஊழியக்காரருடைய முக்கிய பணிப் பொறுப்பாக இருக்கலாம். பல மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு அடிப்படையாகக் கொண்டுள்ள தவறான யூகங்களின் காரணமாகத் துன்புறுகின்றனர். பயமோ அல்லது தனிமையோ, குழப்பமோ அல்லது சந்தேகமோ இருக்கக் கூடாது என்பதே அந்த யூகமாக உள்ளது. ஆனால் இந்த துன்பங்கள் நமது மனித சூழ்நிலையில் ஒன்றிணைந் துள்ள காயங்களாகும் என்று புரிந்து கொள்ளப்படும் பொழுது மட்டுமே படைப்பாக்கத்துடன் கையாளப்பட முடியும். ஆகையால் ஊழியம் என்பது மிகவும் எதிர்த்து நிற்கும் பணியாக உள்ளது. இது மக்களை ஒழுக்கவீனம் மற்றும் முழுமைத்தன்மை என்ற மாயத் தோற்றத்துடன் வாழ்வதற்கு அனுமதிப்பதில்லை. மற்றவர்களை அழிந்து போகிற மற்றும் உடைந்து போகிற தன்மையில் இருக்கின்றவர்கள் என்று நினைவுபடுத்துதலுடன் இது இந்த

நிலைமையைப் புரிந்து கொண்டு, விடுதலையைத் தொடங்குதலையும் நடத்துகின்றது.[3]

துன்புற்ற அந்தத் தந்தை மீதும் மரித்துக் கொண்டிருந்த பிள்ளை மீதும் இயேசு ஆழமாகக் கவலையுற்றார் என்று நான் நம்புகின்றேன், ஆனால் தேவனுடனான அவர்களது உறவுமுறை மீது அவர் இன்னும் அதிகமாகக் கவலையுற்றார் என்றும் நான் நம்புகின்றேன். அந்தக் குழந்தை குணமடைய வேண்டும், மற்றும் அந்தத் தந்தையின் இருதயம் உடைந்து போய் விடக் கூடாது என்று இயேசு விரும்பினார், ஆனால் இழந்து போகப்பட்ட மக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதை அவர் இன்னும் அதிகமாக விரும்பினார். அந்த அரண்மனை அதிகாரியின் வாழ்வில் மாபெரும் தேவை என்பது சரீரப் பிரகாரமான மரணத்திலிருந்து விடுதலை என்பதல்ல; அந்தத் தேவை தேவன் என்பதாகவே இருந்தது! மேலும், ஒரு மகனின் சாத்தியமுள்ள சாவானது இந்த மனிதனின் மனதை அவரது மாபெரும் தேவைக்குத் திறந்து வைத்திருந்ததையும் இயேசு கண்டார்.

இந்த வரலாற்றைத் தொடருமுன்பு, நாம் யாவரும் இந்தக் கணத்தில் நமது மிக முக்கியமான அக்கறை என்னவாக உள்ளது என்று நம்மையே கேட்டுக் கொள்ள வேண்டியதாக உள்ளது. இப்பொழுது உங்கள் சிந்தையில் அதிகம் அழுத்துகின்ற பிரச்சனை என்ன? அது உங்களுக்கு மிக முக்கியமானதாக இருந்தாலும், அநேகமாக அது உங்கள் மாபெரும் தேவையாக இருக்காது. இருப்பினும், அந்த விஷயமே உங்கள் மாபெரும் தேவையை - உங்கள் இருதயத்தைத் தேவனுக்குத் திறக்க வேண்டியதை - நீங்கள் உணர உதவி செய்கின்றது!

தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களை இயேசு கடிந்து கொண்டதானது அந்தத் தந்தையின் தொடர்ந்த வேண்டுகோளான "ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வர வேண்டும்" (4:49) என்ற வேண்டுகோளினால் இடைமறிக்கப்பட்டது. இந்த வேளையில் அந்த மனிதர் தம் மகனைப் பற்றிப் பேசிய வழிமுறையில் ஏதேனும் தனிச் சிறப்பு இருந்திருக்கலாம். இவ்விடத்தில் அவர் "என் மகன்" என்பதற்கான அதிகம் பொதுவான வார்த்தையாகிய huios (இது வசனம் 46. 47ல் உள்ளது) என்பதற்குப் பதிலாக ''என் பிள்ளை'' என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையாகிய paidion என்பதைப் பயன்படுத்தினார். இவ்விடத்தில் தகுதி நிலை இயற்பெயர்கள் - எதுவும் பயன்படுத்தப்படவில்லை. இது தனது ''பிள்ளையின்'' உயிருக்காக உடைந்து போன மனிதர் ஒருவரின் கெஞ்சுதலை இருதயம் உடைந்த நிலையில் சித்தரிப்பதாக உள்ளது.

கடைசியில், குணமாக்கும் வார்த்தைகள் வந்த பொழுது, அவைகள் எளிமையாகவும் நேர்முன் போக்குடையவைகளாகவும் இருந்தன. இயேசு, "நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" (4:50) என்று உரைத்தார். கப்பர்நகூமுக்குச் செல்லும் இருபது மைல்கள் பிரயாணம் அவரது ஊழியத்தை நிறைவேற்றத் தேவைப்படாதிருந்தது. அவர் வார்த்தை மட்டும் பேசினார், அந்தப் பையன் குணமடைந்தான்.

## *விசுவாசத்தின் இரவு (4:50-54)*

*இயேசுவிடமிருந்து வந்த ஒரு வார்த்தையினால் அந்தத் தந்தையின் பெரும் மனக்கிலேசம் முடித்து வைக்கப்பட்டது - அல்லது முடித்து வைக்கப்பட்டதா? அந்தச் சிறு பையன் குணமடைந்ததை அவர் தமது சொந்தக் கண்களால் காண்பதற்கு இருபது மைல்கள் இன்னும் அவரைப் பிரித்து வைத்திருந்தது. சில காரணங்களினால் (ஒருவேளை அது மிகவும் தாமதமாகி விட்டதால்[4] அல்லது அம்மனிதர் களைப்பாய் இருந்ததால்) அந்த இரவில் அவர் வீடு திரும்ப இயலாமல் போய் விட்டது. அவரது மகன் நலமாகி விட்டான் என்று கூற வந்த அவரது வேலைக்காரர்களை அவரால் அடுத்த நாள் வரையிலும் சந்திக்க முடியாது போயிற்று. அவன் குணமான நேரத்தைப் பற்றி அவர் கேட்ட பொழுது, "நேற்று ஏழாமணி நேரத்தில் ஜுரம் அவனை விட்டது" (4:52) என்று அவருக்குக் கூறப்பட்டது. அவர் உடனடியாக இயேசு அவரிடத்தில் "உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று கூறியது மிகச் சரியாக அந்த வேளைதான் என்பதை அறிந்தார்.*

*இந்த வரலாற்றில் என்னை வசீகரித்த விஷயமும் மற்றும் இதைப் பற்றி 1977ல் ஓட்டிஸ் கேட்ஸ்வுட் தமது வல்லமை நிறைந்த பிரசங்கத்தில் பேசிய விஷயமும் என்னவென்றால், அந்த மனிதர் தம் மகன் குணமடைதல் பற்றிய வாக்குத்தத்தத்திற்கும், அந்த அற்புதத்தின் நிச்சயத்தைக் கேட்பதற்கும் இடையில் ஒரு இரவைச் செலவிட்டார் என்பதேயாகும். அவர், "இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனார்" (4:50). NIVயில் "அம்மனிதர் இயேசுவின் வார்த்தையை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்" என்று கூறப்படுகின்றது. அந்தத் தந்தையின் வாழ்வில் அந்த இரவின் சித்தரிப்பானது நம் யாவருக்கும் வாழ்வை வாழுமிடத்தில் வல்லமை நிறைந்த உருவகமாக உள்ளது; நம் வாக்குத்தத்திற்கும் நிறைவேற்றத்திற்கும் இடையிலுள்ள இரவைச் சகித்திருக்கின்றோம்.*

*இரவைப் பற்றிய சில விஷயங்கள் அவைகள் பகல் வெளிச்சத்தில் உள்ளவற்றைப் பார்க்கிலும் கலக்கங்களையும் பயங்களையும் உண்டாக்கு பவைகளாகக் காணப்பட்டு, மிகக் கெடுதியானவைகளாக உள்ளன. பயங்கரத் திரைப்படங்கள் எப்பொழுதுமே இரவிலேயே அமைக்கப் படுகின்றன, ஏனென்றால் அவை இருளில் மிகவும் பயப்படுத்துவனவாக இருக்கும். நான் எப்பொழுதுமே இருளில், என்னைக் கனத்த பிரச்சனை களில் தங்கியிருக்க அனுமதிப்பதில்லை. நான் தூங்க முடியாவிட்டால், அல்லது இரவில் எழுந்து குறிப்பிட்ட ஒரு பிரச்சனையைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், நான் எழுந்து சமையலறைக்குச் சென்று அங்கு விளக்கைப் போட்டுக் கொண்டு, எனது கண்கள் திறந்திருக்க எனது போராட்டத்தைப் பற்றிச் சிந்திப்பதுண்டு!*

*அவர் தம் வீட்டில் இருந்து இருபது மைல்கள் தூரத்தில் இருந்ததால், இந்த அதிகாரி அந்த இரவை நம்பிக்கைக்கு எதிரான நம்பிக்கையிலும், தம் பயங்களுடன் போராடுவதில் செலவிட்டிருப்பார் என்று நாம் யூகிக்க முடியும். அவர் வெளிச்சத்தை நோக்கும் நம்பிக்கையிலிருந்து ஒரு கணத்தில் சந்தேக இருளுக்குள் ஊசலாடியிருந்திருப்பாரா என்று நான் வியக்கின்றேன்.*

நாம் அவரது பெயரைக் கூட அறிவதில்லை, ஆனால் நாம் அனைவரும் நம்மை இந்த மனிதருடன் அடையாளப்படுத்த முடியும்; ஏனெனில் நம்மில் யாவருமே வாக்குத்தத்தம் மற்றும் நிறைவேற்றம் ஆகியவைகளுக் கிடையிலான இரவு வேளையின் போராட்டங்களை அறிந்துள்ளோம்.

கிளாவுடெட் ஜோன்ஸ் என்ற ஒரு மிக நல்ல கிறிஸ்தவப் பெண்மணி புற்று நோயுடனான நீண்டதொரு போராட்டத்தைத் தொடர்ந்து நவம்பர் 10, 1994ல் இறந்து போனார்கள். அப்பெண்மணி தனது வியாதியையும் வேதனையையும் அபூர்வமான கிருபையுடனும் ஆச்சரியமான நம்பிக்கை யுடனும் தாங்கிக் கொண்டார்கள். அவரது கணவர் ஜெர்ரி மற்றும் அவரது பிள்ளைகள் - தங்கள் நண்பர்களுடனும், உண்மையில் அவரை ஒருபோதும் சந்தித்திராத ஆயிரக்கணக்கான மக்களோடும் கூட - அப்பெண்மணி தனது வியாதியையும் மரணத்தையும் எதிர்கொண்ட பெரும் வியப்பான வழிமுறையினால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அப்பெண்மணி தாம் மரிப்பதற்கு முந்திய வாரத்தில் தொலைபேசி மூலமாகத் தனது தாயான ஜியார்ஜியா டியுபோயிஸுடன் பேசினார்கள். விரைவிலேயே தாம் இறக்கப்போவதை அறிந்திருந்த நிலையில் கிளாவுடெட் தனது தாயிடம், “நானும் அப்பாவும் உங்களுக்காகக் காத்திருப்போம்” என்று கூறினார். தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக ஏற்படுத்தியுள்ள வாக்குத்தத்தம் இவ்வகையானதாகவே உள்ளது. கிளாவுடெட்டுக்கு விசுவாசமானது இப்பொழுது காணக்கூடியதாயிருக்கின்றது, இது வாக்குத்தத்தத்திற்கும் பரலோகத்தில் அந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்திற்கும் இடையில் இரவில் விடப்பட்டுள்ள நமக்கு அந்த இரவைச் சகித்துக் கொள்ளும் படியாக விடப்பட்டுள்ளது.

அக்கறையாயிருந்த அந்தத் தந்தையின் அனுபவமானது நாம் யாவரும் இயேசுவில் உள்ள நம் விசுவாசத்தில் வளர ஒரு முன்மாதிரியாகப் பணியாற்றுகின்றது. இவ்வரலாற்றின் தொடக்கத்தில் இந்தத் தந்தை இயேசுவிடம் வரவும், தம் மகனின் உயிருக்காக மன்றாடவும் போதிய அளவுக்கு விசுவாசம் கொண்டிருந்தார். அநேமாக அவரது விசுவாசம் “இழப்பதெற்கென்று நான் எதையும் பெற்றிருக்கவில்லை” என்ற வகையைச் சேர்ந்ததாகவே இருந்திருக்கும். பின்பு, இயேசுவுடன் பேசிய பிறகு, அவர் “இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனார்” (4:50). கடைசியில் தன் மகன் உயிரோடிருப்பதைக் கண்ணால் கண்ட சாட்சியங்களிடம் இருந்து கேட்டதன் பேரில், “அவனும், அவன் வீட்டார் அனைவரும் விசுவாசித்தார் கள்” (4:53). மிகக் கீழான நம்பிக்கையில் இருந்து உறுதிமிக்க நம்பிக்கைக்குப் படிப்படியாகச் சென்ற அவரது விசுவாசத்தைக் கவனியுங்கள். அவர் செயல்விளக்கப் படுத்தியபடி, விசுவாசமானது நம்பிக்கையின்மேல் நம்பிக்கையைக் கட்டி எழுப்புகின்ற கடினமான செயல்முறையாகவே பெரும்பாலும் உள்ளது.

## முடிவுரை

அரண்மனை அதிகாரி மற்றும் இயேசு ஆகியோரின் வரலாற்றை நாம்

படித்து முடிக்குமுன்னர், கடைசியாக ஒரு சத்தியம் வலியுறுத்தப்பட வேண்டியதாக உள்ளது. நீங்கள் இயேசுவின் முகத்தை ஆழ்ந்து நோக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அதில் நீங்கள் காண்பது உங்கள் சொந்த விசுவாசத்திற்குச் சக்தியூட்டி, நம்பிக்கையின் திசையில் உங்களை இயக்கும்.

முதலாவதாக, சத்தியத்தின் முகத்தை நோக்குங்கள். இந்த சந்திப்பில் இயேசு, நம்மில் எவரையும் ஆறுதலான ஒரு பொய்யுடன் வாழ அனுமதிக்க மறுக்கின்றார். வேதனையிலிருந்து நமது விடுதலையைக் காட்டிலும், வேறு ஏதோ ஒன்று மிக முக்கியமானதாக உள்ளது: தேவனுடனான நமது உறவு. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் வேதனையிலிருந்து விடுதலையான வாழ்வுடன் நமது சமூகத்தின் ஆசை காட்டுதலானது சத்தியத்திற்கான நமது உறுதிப்பாட்டை மறைக்கும்படி அனுமதிக்கக்கூடாது. எல்லா மக்களுக்கும் அவர்களின் ஆத்துமாக்களின் இரட்சிப்புதான் வாழ்வில் மாபெரும் விஷயமாக உள்ளது. இயேசு எல்லா வேளைகளிலும் இதைத் தம்முடைய கண்ணோட்டத்தில் காத்திருந்தார். இதைவிடக் குறைந்ததை நீங்களும் நானும் செய்ய முடியாது.

இரண்டாவதாக, பரிவிரக்கத்தின் முகத்தை நோக்குங்கள். “வார்த்தை மாம்சமான’’ காரணத்தினால், இயேசு தாம் மனித சூழ்நிலையை அடையாளம் காண முடியும் என்பதைச் சீராகச் செயல்விளக்கப் படுத்தினார். நித்தியத்தின் சந்தர்ப்பப் பொருளில் அந்தச் சிறுபையனின் குணமாக்குதல் தாமதித்தது என்பது தவிர்க்க முடியாததாக இருந்ததை இயேசு அறிந்தார். பிற்பாடு ஒரு நாளில் அந்தப் பையன் மரிப்பான். நித்தியத்தின் சந்தர்ப்பப்பொருளில், அது மாபெரும் வேறுபாட்டை ஏற்படுத்தியதா என்பதில் நான் சந்தேகப்படுகின்றேன்; ஆனால் அன்பு செய்யப்படும் ஒருவர் மரிக்கும் பொழுது, மனிதர்கள் ஆழ்ந்த துக்கம் அடைகின்றார்கள். அந்தப் பையனின் தந்தையினுடைய கசப்பான துக்கத்தைப் புரிந்து கொண்ட இயேசு, அம்மகனைக் குணமாக்கப் பரிவிரக்கத்துடன் செயல்பட்டார்.

கடைசியாக, நம்பிக்கையின் முகத்தை நோக்குங்கள். நமது எல்லா வியாதிகளையும் குணமாக்குவதாக இயேசு ஒருபொழுதும் வாக்குறுதி யளிப்பதில்லை, ஆனால் நமக்கென்று ஒரு இடத்தைத் தயார் செய்வதற்குத் தாம் செல்வதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார் (யோவா. 14:2). நமக்கு ஒவ்வொன்றையும் சுலபமாக்குவதாக அவர் ஒருபொழுதும் வாக்குறுதி யளிப்பதில்லை, ஆனால் எப்போதும் நம்முடன் இருப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார் (மத். 28:20). அவருக்குள் நாம் நம்பிக்கை வைத்து, சில வேளைகளில் பயமுறுத்தும் வாழ்வின் இருளினூடே அவரைப் பின்பற்றும்படி அவர் நம்மை அழைத்துள்ளார். இயேசு நமது நம்பிக்கைக் குப் பாத்திரமானவர் என்று யோவான் அறிவித்தார், மற்றும் நாமும் அதை விசுவாசிக்கின்றோம்!

குறிப்புகள்

[1]ப. 97ல் வரைபடத்தைக் காணவும். [2]2:23, 24; 6:26ஐக் காணவும். [3]Henri J. M. Nouwen, *The Wounded Healer* (Garden City, N.Y.: Image Books, 1972), 92-93. [4]"ஏழாம் மணி வேளை'' என்பது யூதர்களின் நேரப்படி பிற்பகல் ஒரு மணி அல்லது ரோமானியர்களின் நேரப்படி பிற்பகல் 7.00 மணியாக இருக்கும்.

## புதிதான சிலவற்றைக் காணுதல்

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நான் உறுப்பினராயிருந்த ஒரு உள்ளூர் சபையின் வேதவாசிப்புக்கென்று ஒரு குறிப்பிட்ட அட்டவணையைப் பயன்படுத்தி நாங்கள் வேதாகமம் முழுவதையும் படித்துக் கொண்டிருந்தோம். ஒவ்வொரு வாரத்திலும் நாங்கள் வேத வசனப் பகுதியில் சுமார் 28 பக்கங்களைப் படிப்பதுண்டு, மற்றும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் அந்த வார வேத வாசிப்பில் இருந்து ஒரு பகுதியை எடுத்து நான் பிரசங்கம் செய்வதுண்டு. வாரா வாரம் நாங்கள் தினசரி வேத வாசிப்புக்கென்று ஒழுங்கு படுத்தப்பட்ட நடைமுறையைக் கைக் கொள்ளும்படி ஒருவர் மற்றவரை உற்சாகப்படுத்திய வகையில் இது எங்களுக்கு ஒரு நல்ல அனுபவமாக இருந்தது. அந்த அனுபவத்தைப் பற்றி நான் திரும்ப நினைக்கும் பொழுதெல்லாம், குறிப்பிட்ட ஒரு மனிதரை நான் நினைவுகூருகின்றேன், இவர் ஒரு முன்னாள் மூப்பரும் உள்ளூர் சபையில் தேவபக்தியுள்ள ஒரு முதிய கிறிஸ்தவருமாயிருந்தார். இவர் அந்த வாரத்தில் அவர் வாசித்த வசனப் பகுதிகளில் இதற்குமுன் தாம் கவனித்திராதவைகளைப் பற்றிய சில விஷயத்தை அடிக்கடி என்னிடத்தில் கூறுவதுண்டு. அவர் வேதாகமத்தை முன் அட்டை முதல் பின் அட்டை வரைப் பலமுறை வாசித்திருந்தார், ஆனால் இன்னமும் அவர், தாம் கற்றுக் கொள்ள வேண்டியது அதிகமாக இருப்பதாக உணர்ந்தறிந்தார். "நான் இதற்குமுன் ஒருக்காலும் இதைக் கண்டதில்லை!" என்று அவர் கூறுகையில் அவரது குரலில் இருந்த உணர் வெழுச்சிமிக்க ஒலியை நான் எப்பொழுதும் நினைவுகூர்ந்து, பாதுகாப்பேன். வேதாகமத்தை மேலும் படிக்க மறுத்து, வேதாகம வகுப்புகளின் வசன ரீதியான பாடங்களைப் புறக்கணித்து, ''அதைப் பற்றியெல்லாம் நாங்கள் ஏற்கனவே அறிந்துள்ளோம். நடைமுறைப்படுத்துதலைப் பற்றி மட்டுமே நாம் பேசுதல் அவசியம்" என்று கூறுபவர்களின் எண்ணப்போக்கில் இருந்து இந்த சகோதரரின் ஆவியானது வெகு தொலைவில் உள்ளது.

# “நீ சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?” [5:1–18]

ஒரு அமெரிக்கரிடத்தில் “பெதஸ்தா” என்ற பெயரைக் குறிப்பிடுங்கள், அவர் அநேகமாக, பெதஸ்தா கடற்படை மருத்துவமனை மற்றும் தேசீய உடல் நல மையத்தைப் பற்றி நினைப்பார். ஒரு காலத்தில் ஒரு சிறிய மேரிலாண்ட் நகரமாய் இருந்த அந்தப் பெயரானது, தனது பெயரினாலேயே பிற்பாடு உலகப் புகழ் பெற்ற மருத்துவ மையமாக ஆனது உற்சாகமிக்கதாகும்! அமெரிக்காவின் முன்னாள் அதிபரான ஃபிராங்க்ளீன் D. ரூஸ்வெல்ட் அவர்கள் தமது நம்பிக்கைக்குரிய ஆலோசகரான ஹாரி ஹாப்கின்ஸுடன் ஒரு நாள் அந்த நகரின் வழியே பயணம் சென்ற பொழுது, ஹாப்கின்ஸ் அந்நகரின் வினோதமான பெயரையும் அந்தப் பெயரின் பின்னணியையும் குறிப்பிட்டார். அதைக் கேட்ட அதிபர் ரூஸ்வெல்ட், புதிய தேசீய உடல் நல நிறுவனம் அமைய அதுவே தகுதியான இடம் என்று முடிவு செய்தார்.[1] பெதஸ்தா என்பது குணப்படுத்தும் ஒரு இடத்திற்கான தகுதியான பெயராகக் காணப்படுகின்றது.

## குணப்படுத்துதல் (5:1-8)

எருசலேமின் ஆட்டு வாசல் அருகே “இரக்கத்தின் இல்லம்” என்று அர்த்தப்படும் “பெதஸ்தா”[2] என்ற பெயரினால் அறியப்பட்ட ஒரு குளம் இருந்தது. அது குணப்படுத்தும் ஒரு இடம் என்று அறியப்பட்டது, எனவே அந்தக் குளத்தைச் சுற்றியிருந்த ஐந்து மண்டபங்களில் “நோயாளிகள், பார்வையற்றவர்கள், நடக்க முடியாதவர்கள் மற்றும் வாடிப் போன உறுப்புடையவர்கள்” தங்கியிருந்தனர். எருசலேம் நகரின் வேதனை மற்றும் துன்பம் ஆகியவற்றில் மிக அதிகமானவை அந்த இடத்தில் ஒன்று கூடியிருந்ததால், அது நிச்சயமாகவே பரிதாபத்திற்குரிய ஒரு காட்சியாக இருந்திருக்க வேண்டும். தங்கள் குடும்பத்தாரால் கைவிடப்பட்டதால் அநேகர் அங்கிருந்தார்கள். உலகில் இன்றைய நாட்களிலும் கூட சில இடங்களில், குடும்ப உறுப்பினர் ஒருவர் தம் உடல்நலத்தை இழந்து “தனது

பாரத்தைச் சுமக்க” முடியாதிருக்கையில், அவர் அருகில் உள்ள நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒரு பிச்சைக்காரராக வாழும்படி விட்டு விடப்படுகின்றார். முதல் நூற்றாண்டு எருசலேமில் இப்படிப்பட்ட நடைமுறையானது சாதாரணமானதாக இருந்தது.

பெதஸ்தா குளத்தினருகில் நம்பிக்கைக் கீற்று ஒன்றைக் கண்டதாலும் துன்புற்றவர்கள் அங்கு கூடியிருந்தனர். அவர்கள் தங்களைக் குணப்படுத்திக் கொள்ள மற்ற முறைகள் எல்லாவற்றையும் முயற்சி செய்து பார்த்தனர், அவை யாவும் தோல்வியடைந்திருந்தன. இருப்பினும் அவர்கள், இந்தக் குளத்தில் குணமடைதல்கள் பற்றிக் கேள்விப்பட்டிருந்தனர், எனவே அதன் அற்புத வல்லமைகளை முயற்சித்துப் பார்க்க அவர்கள் ஏங்கினர். இந்தக் காலத்தில் மருத்துவ ரீதியாகக் குணப்படுத்த முடியாத வியாதிகளுக்குப் பாரம்பரியமற்ற சிகிச்சைகள் பற்றி அமெரிக்க மருத்துவ வட்டாரங்களில் மாபெரும் விவாதம் நடந்து கொண்டிருக்கின்றது. நம்மில் பெரும்பாலோர் - அப்படிப்பட்ட சிகிச்சை முறைகள் பற்றி நமது கருத்து எதுவாயிருப் பினும் - நாம் இறந்து கொண்டிருந்தால், நம்மைக் குணப்படுத்த மிகவும் சிறிதளவே சாத்தியக் கூறுள்ள ஏதொன்றும் நமக்குமுன் வைக்கப் பட்டாலும்கூட அதையும் முயற்சி செய்து பார்க்கவே அநேகமாய் விரும்புவோம். பெதஸ்தா குளத்தினருகில் கைவிடப்பட்டிருந்த ஆத்துமாக்களின் இருதயங்களிலும் இவ்விதமான கலக்கங்கள்தான் இருந்தன.

ஒரு யூதப் பண்டிகையின் போது, எருசலேம் நகரானது பார்வையாளர் களில் நிறைந்து, உணர்வெழுச்சிகளினால் கொப்பளித்துக் கொண்டிருக்க, இயேசு பெதஸ்தா குளத்தருகே நடந்து சென்று, முப்பத்தெட்டு ஆண்டுகளாக வாத நோய் கொண்டு அவ்விடத்தில் கிடந்த ஒருவரைக் கண்டார் (5:5). கடந்த ஆண்டில் நான் இந்த வசனப் பகுதி முழுவதையும் வாசித்த பொழுது, இந்த மனிதரின் துன்பத்தின் கால அளவு பற்றிய சிறு விபரமானது முன் எப்போதும் இல்லாத வகையில் என்னைத் தாக்கியது. மே மாதத்தில் எனக்கு முப்பத்தி எட்டு வயது தொடங்கியது. இந்த மனிதர், நான் உயிரோடு இருந்துள்ள காலம் அளவுக்கு வியாதியாய் கிடந்துள்ளார்! அந்த முப்பத்தெட்டு ஆண்டுகள் காலமும் அவருக்கு எப்படியிருந்திருக்கும் என்று நான் புரிந்து கொள்ளத் தொடங்கக் கூட முடியவில்லை.

குளத்தினருகில் இந்த மனிதரைக் கண்டு, இவரது வரலாற்றை அறிந்த இயேசு, இவரிடத்தில் மிகவும் விநோதமான கேள்வியொன்றைக் கேட்டார்: “சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?” (5:6). அவர் ஏன் இதைக் கேட்டார்? நோயுற்ற நபர் ஒவ்வொருவரும் நலமடைய வேண்டும் என்று விரும்புகின்றார் என்பது முன்பே உள்ள முடிவு அல்லவா? நடக்க முடியாத ஒரு நபரிடத்தில் அவர் நடக்க விரும்புகின்றாரா என்று கேட்பது உணர்வற்ற நிலையின் உச்சகட்டமாகவும் அவமானகரமானதாகவும் இருப்பதில்லையா?

மேலும் இதைப் பற்றிச் சிந்திக்கையில், இது உண்மையிலேயே ஒரு நல்ல கேள்வியாக - ஒருவேளை இயேசு கேட்டிருக்கக்கூடிய மிக முக்கியமான கேள்வியாக இருந்தது என்பதை நாம் காண முடிகின்றது.

ஒவ்வொருவருமே குணமடைய விரும்புவதில்லை என்பதால் இது முக்கியமான கேள்வியாயிருந்தது. நமது வாழ்வில் சில விஷயங்கள் மாறுகின்ற பொழுது, அது பொதுவாக நமது உலகம் முழுவதிலும் அலையாய்ப் பரவி மற்ற ஒவ்வொன்றையும் மாற்றுகின்றது. அந்த நடக்க முடியாத மனிதர் அம்மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள விருப்பமாய் இருந்தாரா? அவர் தமக்குத் தாமே பொறுப்பேற்றுக் கொள்வதை விரும்பினாரா? அவர் முறையான வேலை ஒன்றைப் பெறுவதற்கும் ஒவ்வொரு நாளும் வேலை செய்ய செல்வதற்கும் விரும்பினாரா? அவர் பாதிக்கப்பட்டவர் என்ற தமது அடையாளத்தை இழந்த நிலையில் பிழைத்திருக்க முடியுமா? நாம் உடல் ரீதியாக, உணர்வு ரீதியாக அல்லது ஆவிக்குரிய வகையில் எவ்வித துன்பத்தினால் துயருற்றாலும், இயேசுவின் கேள்வியான, "நீங்கள் சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறீர்களா?" என்பது உண்மையிலேயே மிகவும் நல்ல கேள்வியாகவே உள்ளது.

தண்ணீர் கலக்கப்பட்டு, குணமாகுதல் சாத்தியமாகும் பொழுது, இன்னொரு துன்புறுபவர் தண்ணீருக்குள் அடியெடுத்து வைக்கும் முன் தாம் குளத்தை அடைய முடியாமல் இன்னமும் துன்புறுவதாகக் கூறியதே இயேசுவுக்கு அந்த மனிதரின் பதிலாயிருந்தது (5:7). பிறகு இயேசு அந்த மனிதருக்கு, "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" (5:8) என்று அறிவுறுத்தினார். அந்த மனிதர் தாமும் தம்மை அறிந்திருந்தவர்களும் திகைப்படையும்படியாக இயேசு கூறியதை அப்படியே செய்தார்: அவர் நடக்கத் தொடங்கினார்! இந்த சுவிசேஷத்தில் விசுவாசத்தின் மீது யோவானின் வலியுறுத்தலின் காரணமாக, இந்த மனிதரின் விசுவாசம் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை என்பது கவனிக்கத் தக்கதாக உள்ளது. உண்மையில், அந்த மனிதர் தனக்கு என்ன நடந்து கொண்டிருந்தது என்பது பற்றியும், தனது அற்புத குணமடைதலால் உண்டான முரண்பாடு பற்றியும் குழப்பமுற்றவராகவே காணப்பட்டார்.

## விவாதம் (5:9-15)

நீங்கள் முப்பத்தெட்டு ஆண்டுகளாக நடக்க முடியாமல் இருந்து, நீங்கள் குணமாக்கப்பட்ட நாளில் உங்கள் படுக்கையைத் தூக்கிச் சென்றதற்காக மக்கள் உங்களைக் குறை கூறத் தொடங்கியதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? குளத்தினருகே இருந்த மனிதருக்கு மிகச் சரியாக இதே விஷயம் தான் நடந்தது. யூதத் தலைவர்கள் அவர் இதைச் செய்தமைக்காக அவரைக் கடிந்து கொண்டனர், ஏனென்றால் அது ஓய்வுநாளை மீறுதல் என்ற நினைவே அவர்களின் சிந்தைகளில் இருந்தது (5:10). முன்பு நடக்க இயலாத மனிதராய் இருந்தவர் அதற்கு மாபெரும் பதில் ஒன்றைக் கொண்டிருந்தார்: தன்னைக் குணமாக்கியவர் தனது படுக்கையை எடுத்துக் கொண்டு நடக்கும்படி கூறினார், தன்னைக் குணமாக்கிய மனிதர் ஒருவரின் விருப்பங்களை யார் மறுக்க முடியும்?

யூதத் தலைவர்கள் ஆழமாகப் புண்பட்டனர், ஏனென்றால் ஓய்வு நாளானது இரு வகைகளில் முறிக்கப்பட்டது என்று அவர்கள் நினைத்தனர்.

ஓய்வுநாளில் அம்மனிதர் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்த காட்சியினால் அவர்கள் முதலாவது புண்பட்டனர்; மற்றும் இயேசு அம்மனிதரை ஓய்வுநாளில் குணப்படுத்தியிருந்தார் என்று அறிந்ததால் அவர்கள் புண்பட்டனர். முப்பத்தெட்டு ஆண்டுகள் வியாதிக்குப் பிறகு அம்மனிதர் விடுதலையாகியிருந்ததால் அவர்கள் மெய்சிலிர்த்திருந்ததாய்க் காணப்பட்டது! இருப்பினும் ஓய்வுநாளை மீறுதல் என்பது அந்த மனிதராலும், அவரைக் குணப்படுத்தியவர் யாராயிருப்பினும் அவராலும் செய்யப்பட்டது என்பதை மட்டுமே நினைக்குமளவுக்கு அவர்கள் பாரம்பரியத்தில் ஊறிப் போய் இருந்தனர்.

ரபீக்களின் பாரம்பரியங்களைப் பொறுத்தமட்டில் ஓய்வுநாள் என்பது இயேசுவின் மிகப் பிரியமான பரிசோதனை விஷயமாய் இருந்தது. பழைய ஏற்பாட்டில் ஓய்வுநாள் பிரமாணம் என்பது நேராகக் கூறப்பட்டதாகவும் மற்றும் எளிமையானதாகவும் இருந்தது; ஏழாம் நாளில் எந்த வேலையும் செய்யப்படலாகாது.[3] இயேசுவின் நாட்களில், ஓய்வுநாளில் என்ன செய்வதற்கு மற்றும் என்ன செய்யாமல் இருப்பதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளது என்பது பற்றி ரபீக்கள் ஒரு மிகப் பெரும் பொருள் கொண்ட கலந்துரையாடலை உருவாக்கியிருந்தார்கள். முதல் நூற்றாண்டில் நடைமுறையில் இருந்த போதகங்களில் பலவற்றைப் பதிவு செய்திருந்த மிஷ்னா என்ற நூலானது ஓய்வுநாளுக்கென்று ஒரு முழுப் பகுதியையே அர்ப்பணித்திருந்தது. மொத்தத்தில், விதைத்தல், அரைத்தல், தூற்றுதல், சமைத்தல், நெய்தல், வேட்டையாடுதல், இருகடிதங்கள் எழுதுதல், தீ மூட்டுதல் மற்றும் சுத்தியலால் அடித்தல் போன்றவை உட்பட முப்பத்து ஒன்பது வகையான வேலைகள் ஓய்வுநாளில் தடை செய்யப்பட்டிருந்தன.[4]

ஓய்வுநாளைப் பற்றிய பிரமாணமானது முற்றிலும் கட்டுப்பாட்டிற்கு வெளியே உள்ளதாகி, ஒருக்காலும் நோக்கங்கொண்டிராத ஒன்றாக அது ஆகியிருந்தது என்பது தெளிவு. இன்னொரு வேளையில் இயேசு தம்முடைய எதிர்ப்பாளர்களிடம், ‘‘மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது; ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார்’’ (மாற். 2:27, 28) என்று நினைவூட்டினார். இவ்வசனப் பகுதி மறைமுகமாய் உணர்த்துகின்றபடி, ஓய்வுநாளைப் பற்றி இயேசுவுக்கும் யூதத் தலைவர்களுக்கும் நடுவில் எழுந்த சச்சரவுகள் இயேசுவின் உண்மை அடையாளத்தைப் பற்றி வெளிப்படுத்திய குணமாக்குதலுக்குச் செய்ததைக்காட்டிலும் ஓய்வுநாளை மீறுதல் என்பதற்குக் குறைவாகவே செய்ய வேண்டியதாய் இருந்தன.

## விளைவு (5:16-18)

குளத்தின் அருகே இருந்த மனிதர் குணமாக்கப்பட்ட வேளையில், “எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட” என்று அவருக்குக் கூறியது யார் என்பதைப் பற்றிய கருத்து எதுவும் அவருக்குத் தரப்படாதிருந்தது. அப்பொழுது இயேசு விழாக் கூட்டத்தில் விரைவாய்க் கலந்து

மறைந்து போயிருந்தார். இருப்பினும், இந்தச் சச்சரவைத் தொடர்ந்து, இயேசு அந்த மனிதரைத் தேவாலயத்தில் கண்டு, வாதநோயைக் காட்டிலும் அதிகக் கேடானதொன்றும் வராதபடிக்கு, இனிமேல் பாவம் செய்யாதிருக்கும்படி உணர்த்தினார் (5:14). இயேசுவுடனான இந்த இரண்டாம் சந்திப்புக்குப் பிறகு, அந்த மனிதர் யூதத்தலைவர்களிடம் சென்று, தன்னைக் குணமாக்கியவர் இயேசுவே என்று கூறினார்.

யூதத்தலைவர்களின் பதில்செயலானது அமைதியாகவோ பகுத்தறிவுள்ளதாகவே இருக்கவில்லை; அவர்கள் இப்புதிய தகவலைக் கருத்தில் கொள்ளாது, மற்றும் மேலும் அறிவதற்காகத் தங்கள் முடிவைத் தள்ளிப்போடாது இருந்தார்கள். அதற்குப் பதிலாக, யூதர்கள் இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடியால், ''இயேசுவை அவர்கள் துன்புறுத்தினார்கள்'' (5:16). பிறகு இயேசு அவரது எதிர்ப்பாளர்கள் இரகசியமாய்ச் சிந்தித்துக் கொண்டிருந்தது என்ன என்பதைத் தைரியமாய் விளக்கப்படுத்தினார். அவர், "என் பிதா இது வரைக்கும் கிரியை செய்து வருகிறார்; நானும் கிரியை செய்து வருகிறேன்" (5:17) என்று உரைத்தார். இது அவர்களின் மிக மோசமான சந்தேகங்களை உறுதிப்படுத்தியது. ஓய்வுநாளில் வேலை செய்தது என்பது உண்மையான பிரச்சனையல்ல; அது இயேசு யாராயிருந்தார் மற்றும் அவர் எங்கு தம் அதிகாரத்தைப் பெற்றார் என்பதே பிரச்சனையாய் இருந்தது. ஓய்வுநாளில் குணமாக்குதல் என்பது இயேசு ஓய்வுநாளைக் காட்டிலும் பெரியவராகயிருப்பதாய்ச் சுட்டிக் காட்டுவதாயிருந்தது. அந்தச் சாத்தியக் கூற்றினை ஆலோசித்துப் பார்ப்பதற்குப் பதிலாக, யூதத்தலைவர்கள் இயேசுவைக் கொலை செய்ய வகை தேடினார்கள் (5:18). தேவனை இயேசு தம்முடைய பிதா என்று கூறியதன் மூலம் இயேசு "தம்மைத் தேவனுக்குச் சமமாக்கியிருந்தார்" (5:18) என்று அவர்கள் அறிந்திருந்தனர். அகுஸ்தீன் அவர்கள் உற்று நோக்கியபடி, ''அவர்கள் அற்புதத்திலிருந்து வரும் ஒளியைக் காட்டிலும், ஓய்வு நாளிலிருந்து வரும் இருளை அதிகமாய் விரும்பினார்கள்.''

இம்முழு வசனப் பகுதியிலும் "அடையாளம்'' என்ற முக்கியமான வார்த்தை காணப்படுவதில்லை. இந்த சுவிசேஷத்தில், "அடையாளங்கள்'' என்பவை அவைகளுக்கப்பால் இயேசுவின் அற்புத வல்லமையினுடைய ஆதார மூலத்தைச் சுட்டிக்காட்டுவதற்காக அவரால் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களாக உள்ளன. இந்த நிகழ்ச்சியில் ஒரு அற்புதமானது திட்டவட்டமாகவே நிகழ்த்தப்பட்டது. இருப்பினும், இந்த மக்கள் அற்புதத்திற்கு அப்பால், அதன் மூல ஆதாரத்தைக் காண முடியாத அளவுக்குக் கடின இருதயம் கொண்டவர்களாய் இருந்தனர். இதன் விளைவாக, யோவான் இதனை ''அடையாளம்'' என்று ஒருக்காலும் குறிப்பிடாதிருந்தார்.

குளத்தினருகில் இருந்த மனிதரைக் குணப்படுத்திய நிகழ்ச்சியானது மனமாற்றமின்மையின் ஒரு நிகழ்ச்சி என்று பெயரிடப்பட முடியும். மனமாற்றமின்மையின் நிகழ்ச்சிகளை மறுபடியும் மறுபடியும் நாம் நடபடிகளில் காண்பது போலவே, இந்த மக்கள் சத்தியத்திற்கு எதிர் கொண்டிருந்தும் அதை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள்.

இது, “அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை” (1:5) என்பதான விஷயமாக உள்ளது. இயேசுவில் விசுவாசம் கொள்ள யூதத்தலைவர்கள் மறுதலித்ததன் விளைவாக, யோவான் சுவிசேஷத்தில் இவ்விடத்தில் இயேசுவுக்கு அவர்களின் உக்கிரமான எதிர்ப்பு தொடங்கியது.

## முடிவுரை

அதிகாரங்கள் 4 மற்றும் 5 ஆகியவற்றிற்கிடையேயான துரதிருஷ்ட வசமான ஒரு பிரிவானது 4:46-54ல் உள்ள அரண்மனை அதிகாரியின் வரலாற்றிற்கும் மற்றும் 5:1-18ல் காணப்படும் எருசலேமின் யூதத் தலைவர்கள் பற்றிய விபரங்களுக்கும் இடையில் உள்ள ஒரு தொடர்பை நாம் ஏற்படுத்தாமல் தடை செய்கின்றது. இவ்விரு சாராருமே ஒரு அற்புதத்திற்குச் சாட்சிகளாய் இருந்தார்கள். இவ்விரு சாராருமே தேவனு டைய வல்லமையானது யாரோ ஒருவரைக் குணமாக்கியதைக் கண்டனர். இவ்விரு சாராருமே இயேசுவின் அடையாளம் பற்றி கேள்விகளை தேடிப்பிடிக்கும்படி வற்புறுத்தப்பட்டனர். அவர்களுடைய சூழ்நிலைகள் பல வகைகளில், ஒரே மாதிரியானதாக உள்ளன; இருப்பினும் அவர்களின் முடிவுகள் முற்றிலும் எதிரானவைகளாக இருந்தன. அதிகாரம் 4ல் “அடையாளம்” என்பது நோய்வாய்ப்பட்ட பையனின் தந்தைக்குள் விசுவாசத்தை உண்டாக்கியிருக்க, அதிகாரம் 5ன் அற்புதமானது யூதத்தலைவர்களின் இருதயங்களைக் கடினப்படுத்த மட்டுமே செய்தது.

இன்றைய நாட்களில் இவ்வரலாறு மீண்டும் கூறப்படுகின்ற பொழுது, கேட்கின்ற எல்லார் மத்தியிலும் இதே வகையான இரண்டு பதில்செயல்கள் அனுபவிக்கப்படுகின்றன. இவ்வசனப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள வைகளின் காரணமாகச் சிலர் ஆழமான விசுவாசத்தினுள் கடந்து செல்லுகையில், மற்றவர்கள் இதே வார்த்தைகளைக் கேட்டு தேவனிடத்திலிருந்து தூரமாய் விலகிச் செல்லுகின்றனர். மீண்டுமாக நாம், இந்த சுவிசேஷத்தை எழுதியதன் நோக்கக் கூற்றாக யோவான் உரைத்ததை நினைவு கொள்கின்றோம்:

> இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (20:30, 31).

நீங்கள் கேட்கின்றீர்களா? நீங்கள் கவனிக்கின்றீர்களா? நீங்கள் நாடுகின்றீர்களா? உங்கள் இருதயம் திறந்திருக்கின்றதா? இன்று இந்த வசனமானது உங்களை எந்த வழியில் திருப்பியுள்ளது?

குறிப்புகள்

[1]Gerard Sloyan, *John*, Interpretation: A Bible Commentary for Teaching and Preaching (Atlanta, Ga.: John Knox Press, 1988), 78. [2]Also Bethzatha or Bethsaida. [3]*யாத். 20:8-11; உபா. 5:12-15.* [4]M. Shabb. 7:2.



# "பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருக்கிறார்" (5:19-47)

கி.மு. 49ம் ஆண்டளவில், யூலியு ராயர் (ஜூலியஸ் சீஸர்) என்பவர் ரோமாபுரியில் வல்லமை நிறைந்த மனிதராகியிருந்தார். இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு அவர் நகரத்தை விட்டு வெளியே இருந்து, இனக்குழுக்களுக் கெதிராக யுத்தம் செய்து, ஒரு படைத்தலைவர் மற்றும் நிர்வாகி என்ற வகையில் தமது மாபெரும் திறமைகளைச் செயல்விளக்கப் படுத்தியிருந்தார். அவரது எதிர்ப்பாளர்கள் அதிகம் கலக்கமுறும் வகையில், அவர் கால் (பிரான்ஸ்) நாட்டில் இருந்த காலம் அது ரோமாபுரியில் அவரது வல்லமையை அதிகரிக்க மட்டுமே செய்தது.

ரோம அரசவையானது சீஸரை நாடு திரும்பக் கட்டளையிட்ட பொழுது, அவர் தமது எதிரிகள் தம்மைக் கொன்று அழிக்க முயற்சி செய்து கொண்டிருந்ததை அறிந்தார். நாடு திரும்புவதற்கு அவர் ரூபிகான் ஆற்றைக் கடந்து, தனக்கு பின் தனது விசுவாசமுள்ள படையினரை விட்டு வர வேண்டியிருந்தது. பல ஆண்டுகளாக அந்த ஆறானது ஒரு முற்றான எல்லையாக இருந்தது, அதற்கும் அப்பால் ஒரு படைத்தளபதி தனது படையைக் கொண்டு வரக் கூடாதிருந்தது. அவருடைய எதிரிகள் தங்கள் படைகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதால், ரோமாபுரிக்குள் நுழைவதே மரண தண்டனைக்குள் நடப்பதற்கு ஒப்பாயிருக்கும் என்பதை சீஸர் அறிந்திருந்தார். இதன் விளைவாக, அவர் ரூபிகான் ஆற்றைக் கடந்து ரோமாபுரிக்குத் தனது படையினரையும் அழைத்து வரும்படி தைரியமாக முடிவு செய்தார்! சீஸர் "ரூபிகான் ஆற்றைக் கடந்து விட்டார்" என்ற செய்தி நகருக்குள் வந்து சேர்ந்த பொழுது, உள்நாட்டுப் போர் தொடங்கியது என்பதை ஒவ்வொருவரும் அறிந்தனர். அவர் ரோம அரசவைக்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார், மற்றும் அவரது எதிரிகள் நகரை விட்டு விரைவில் ஓடிப் போயினர். இரண்டு மாதங்களுக்குள்ளாகவே, ஜூலியஸ் சீஸர் எல்லா எதிர்ப்புகளையும் நசுக்கிப் போட்டு, இத்தாலி முழுவதையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தார். இந்த வரலாற்றின் காரணமாக, "ரூபிகானைக் கடத்தல்"

என்பது இன்றைய நாட்களிலும் கூட மாற்றப்பட முடியாத ஒரு தீர்மானத்தை அல்லது மாற்றக் கூடாதிருக்கும் ஒரு திட்டவட்டமான செயல்பாட்டைக் குறிப்பிடப் பயன்படும் விளக்கச் சொற்றொடராக உள்ளது.

யோவான் சுவிசேஷத்தில் இது வரையிலும் நாம் இயேசுவைப் பற்றியும் மக்களுடன் அவருடைய செயல்பாடுகளைப் பற்றியும் பார்த்துக் கொண்டிருந்தோம். அவர்களுடைய வியாதிகளை அவர் குணமாக்குதல், அவர்களின் முறிந்து போன ஆவிகளை அவர் ஆறுதல்படுத்துதல் மற்றும் அவர்களை ஜீவனுக்குள் அவர் வழிநடத்துதல் ஆகியவற்றின் வரலாற்றினை நாம் காண விரும்புகின்றோம். அதிகாரம் 5ன் தொடக்கத்தில், இயேசு நடக்க முடியாத ஒரு மனிதரைக் குணமாக்கினார், மற்றும் யூதத் தலைவர்களால் உக்கிரமான எதிர்ப்பு ஒன்று ஏற்படுத்தத் தொடங்கப் பட்டது. நமது வேத பாடப் பகுதியாகிய 5:19-47ல் ஒரு வரலாறு எதுவும் அடங்கியிருப்பதில்லை. அதற்குப் பதிலாக, இயேசுவே முழுமையும் உரையாற்றுகின்ற ஒரு போதனைப் பகுதியாக இது உள்ளது. நமது அவசரத்தில் நாம் இன்னொரு எடுத்துரைப்புப் பகுதியைக் கண்டறிவதற் காக இதைத் தாண்டிச் செல்லக் கூடாது, ஏனென்றால் மிகத் தீவிரமான முக்கியத்துவம் வாய்ந்த சில விஷயங்கள் இங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தன: இயேசு "ரூபிகானைக் கடந்து கொண்டிருந்தார்"!

இந்த வேத பாடப் பகுதியில் இயேசு, "இது தான் யுத்தமாக உள்ளது!" என்று எல்லாருக்கும் அறிவிக்கின்ற கூற்றுக்களை ஏற்படுத்திக் கொண்டிருந் தார். இந்த அதிகாரத்தின் முதற் பகுதியில் அவர் செய்திருந்தவற்றிற்கு எதிராக எழுந்த உக்கிரமான ஆவேசத்தைக் கண்டு, அவர் சுலபமாய்ப் பின்வாங்கியிருக்கவோ அல்லது யூதர்களின் கோபத்தை அமைதிப் படுத்தவோ முயற்சி செய்திருக்கலாம். அதற்குப் பதிலாக அவர் மறுபுறத்தில் சிலுவையில் அறையப்படுதல் தமக்காகக் காத்திருந்ததை அறிந்தவராக, "ரூபிகானைக் கடந்தார்." இவ்வசனப் பகுதியானது இயல்பாகவே மூன்று பிரிவுகளாகப் பிரிந்துள்ளது, இவை யாவற்றிலும் அதிகாரிகளுக்கு ஆவேச மூட்டியவைகளும், கடைசியில் இயேசுவைச் சிலுவைக்கு வழிநடத்திச் சென்றவைகளுமான தைரியமான உரிமைகோருதல்களை இயேசு ஏற்படுத்தினார்.

## பிதாவுடன் ஒன்றாயிருக்கின்றாரென்ற உரிமைகோருதல் (5:19-23)

நான் மிக அதிகமாக எனது தந்தையைப் போன்றே இருக்கின்றேன், சிறப்பாக எனது குரலின் ஒலியானது எனது தந்தையினுடையதைப் போன்றதாகவே உள்ளது. நன்றி செலுத்தும் நாள் ஒன்றில், எனது பெற்றோர்கள் வந்திருப்பார்கள் என்று எதிர்பார்த்து சில நல்ல நண்பர்கள் எனது இல்லத்திற்குத் தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்தார்கள். நான் தொலைபேசியில் பதில் அளித்தபோது, மறுமுனையில் இருந்த நபர், "டியூர்லியா?" (எனது தந்தையின் பெயர்) என்று கேட்டார். அதற்கு நான்,

"இல்லை, இது புரூஸ்" என்று கூறினேன். அனுமானிக்கப்பட்டபடியே, அவர்கள் "புரூஸ், நீங்கள் உங்கள் தந்தையைப் போலவே பேசுகின்றீர்கள்" என்று பதில் கூறினார்கள்.

நமது குரல்கள் ஒரே விதமாக ஒலிப்பது மட்டுமின்றி, நாம் உண்மையில் இன்னும் ஒரே மாதிரியாகவே கூறுவதாகக் காணப்படுகின்றோம். சமீபத்தில் எனது தந்தை வேட்டைக்குச் சென்றிருந்த பொழுது, எனது தாய் எங்களுடன் ஒரு வாரம் தங்கியிருந்தார். அந்த வாரத்தில் நான் சில காரியங்களைப் பற்றி விமர்சித்த போது என் மனைவியும் என் தாயாரும் ஒருவர் மற்றவரைப் பார்த்து "இவர் தனது தந்தையைப் போலவே பேசுகின்றாரே!" என்று கூறினது யாரேனும் ஒருவர் எத்தனை முறை விமர்சித்தார் என்பதை என்னால் எண்ண முடியாததாக இருந்தது. "இது பயமூட்டுவதாக உள்ளது அல்லவா?" என்பதே அவர்களுடைய வழக்கமான பதிலாக இருக்கும்.

எனது தந்தையும் நானும் எந்த அளவுக்கு ஒன்று போல் இருக்கின் றோமோ, அந்த அளவுக்கு மாறுபட்டவர்களாகவும் இருக்கின்றோம். எனது தந்தை ஒரு பொறியாளராக இருக்கின்றார், நான் ஒரு பிரசங்கியாராக இருக்கின்றேன். எங்கள் இருவருக்கும் ஒரு பிற்பகலை விடுமுறையாகக் கொடுத்தீர்களென்றால், நீங்கள் எனது தந்தையை ஏதாவது சரிசெய்து கொண்டிருப்பவராக அல்லது எதையாவது கட்டியெழுப்பிக் கொண்டிருப் பவராகக் காண்பீர்கள் மற்றும் நான் எங்காவது அமர்ந்து ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள். நாங்கள் ஒன்று போலவே இருக்கின்றோம், ஆனால் நாங்கள் மாறுபட்டவர்களாகவும் இருக்கின் றோம். இயேசு தமக்கும் தம்முடைய தந்தைக்கும் இடையில் உள்ளதாகப் பேசுகின்ற உறவானது நெருக்கமான உறவுள்ள ஒரு தகப்பன் மற்றும் மகனுக்கிடையில் உள்ள உறவின் ஒற்றுமைத்தன்மைகள் யாவற்றையும் கொண்டுள்ளதாகவும், நாம் இயல்பாக எதிர்பார்க்கின்ற வேறுபாடுகள் எதுவும் அற்றதாகவும் உள்ளது.

தேவனைத் தம்முடைய பிதா என்று இயேசு பேசிய பொழுது அவர் (இயேசு) யூதத்தலைவர்களை ஆவேச மூட்டிய ஒரு உரிமைகோருதலைத் தம்மைப் பற்றி ஏற்படுத்தினார். நடக்க முடியாத மனிதர் குணமாக்கப் பட்டதைத் தொடர்ந்து, இயேசுவின் எதிராளிகள் அவரைக் கொல்ல விரும்பிய பொழுது, "அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப்பிதா என்றுஞ் சொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே" (5:18) என்பதே அவர்களின் கோபமாய் இருந்தது. அது ஒரு ஆவேச மூட்டும் கூற்றாக இருக்கலாம், ஆனால் அதுவே இயேசுவின் செய்திக்கு மையமாகவும் அவரது நோக்கமாகவும் இருந்தது.

யோவான் சுவிசேஷத்தில் 122க்குக் குறையாத இடங்களில் தேவன் "தந்தை (பிதா)" என்று கூறப்படுகின்றார். இயேசுவைப் பொறுத்தமட்டில் "தேவனுடைய மகனாக இருப்பது என்பது அவர் (பிதா) எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" (5:19) என்று அர்த்தப்படுத்தியது. இயேசு இந்தப் பூமியில் இருந்த பொழுது,

தேவனுடனான அவருடைய உறவானது அன்பின் அடிப்படையில் மிகவும் நெருக்கமானதாகவும் முழுமையான செய்தித் தொடர்பை ஈடுபடுத்துவதாகவும் இருந்தது. நானும் எனது தந்தையும் கவனிக்கக்கூடிய சில மாறுபாடுகளைக் கொண்டிருக்கையில், பிதாவும் குமாரனும் அப்படிப் பட்டவைகள் எதையும் கொண்டிருப்பதில்லை. திரித்துவத்திற்குள்ளாக அவர்கள் மாறுபட்ட பணிப் பொறுப்புக்களைக் கொண்டிருப்பினும், பண்பு, உறுதிப்பாடு, ஊழியம் மற்றும் இருதயம் ஆகியவற்றில் அவர்கள் ஒன்றாகவே இருக்கின்றனர். வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையில் தலைமுறை இடைவெளி எதுவும் இருப்பதில்லை!

பிதாவும் குமாரனும் தாங்கள் செய்கின்றவைகளில் ஒன்றாகவே இருப்பதாக இயேசு உரைத்தார் (5:19, 20) அவர்கள் ஜீவனைக் கொடுப்பதற்கான தங்கள் திறனிலும் (5:21) மற்றும் கனம் பெறுவதற்கான தங்களது தகுதிப்பாட்டிலும் ஒன்றாகவே இருக்கின்றனர் (5:23) என்று இயேசு உரைத்தார். இப்படிப்பட்ட உரிமைகோருதல்கள் தேவதூஷணம் என்று யூதத் தலைவர்களால் கருதப்பட்டது, மற்றும் அந்த உரிமைகோருதல்களே இயேசுவைக் கடைசியில் சிலுவையில் அறையக் காரணமாயின. இந்தக் கூற்றுக்களை ஏற்படுத்தியதில், இயேசு தமது எதிராளிகளுக்கு எதிராக ஒரு ஆவிக்குரிய யுத்தத்தைத் தாம் அறிவித்திருந்ததை அறிந்தார்.

## அவருடைய தெய்வீக ஊழியத்தின் உரிமைகோருதல் (5:24-29)

5:24-29ல் இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று வித்தியாசப் படுத்திக் காட்டுகின்ற திகைப்பூட்டும் இரு உரிமைகோருதல்களை ஏற்படுத்தினார். முதலாவது, அவர் தாம் ஜீவனைக் கொண்டிருப்பதாகவும், அதைக் கொடுப்பதாகவும் உரிமைகோரினார்:

> என் வசனத்தைக்கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக் கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட் படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனு டையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனு டையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார் (5:24-26).

பிதாவானவர் மாபெரும் ஜீவனைக் கொடுக்கின்றவர் என்று கண்ணோக்கப் பட்டதால், இந்த உரிமைகோருதலை ஏற்படுத்துதல் என்பது மீண்டும் "தம்மைத் தேவனுக்குச் சமமாக்குதலாக" (5:18) இருந்தது.

இரண்டாவது, அவர் காலத்தின் முடிவில் தாமே நியாயத்தீர்ப்புச்

செய்யப் போவதாக உரிமைகோரினார்:

> அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும் படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் (5:27-29).

அவருடைய குரலானது ஒரு நாளிலே, மரித்தோரை ''ஜீவனுக்கு உயிர்த்தெழுதலுக்கு'' அல்லது "நியாயத்தீர்ப்புக்கு உயிர்த்தெழுதலுக்கு" உயிர்ப்பிக்கும் என்று அவர் உரிமைகோரினார் (வ. 29).

நியாயத்தீர்ப்பைப் பற்றிய இயேசுவின் குறிப்பிடுதலானது முதல் நூற்றாண்டில் அவரது உரையைக் கேட்டவர்களுக்கு பிரியமாய் இருந்ததைக் காட்டிலும் அதிகமானதாக தற்காலத்தில் கேள்விப்படுபவர் களுக்கு இருப்பதில்லை. கடைசி நியாயத்தீர்ப்பின் கருத்தானது அதன் மகிழ்ச்சியற்ற தன்மையின் காரணமாக சமூகத்தால் இகழப்பட்டும், பெரும்பான்மையான கிறிஸ்தவர்களால் கண்டு கொள்ளாது விடப்பட்டும் இருக்கின்றது. இயேசு நியாயத்தீர்ப்பைப் பற்றித் தாராளமாய்ப் பேசினார் என்பதை இவ்வசனப் பகுதி நமக்கு நினைவூட்டுகின்றது. உண்மையில், புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட எதொன்றைக் காட்டிலும் நியாயத் தீர்ப்பு பற்றி அதிகம் கூற வேண்டியிருந்தவற்றை இயேசு கொண்டிருந்தார். அவருடைய போதனையில் இந்தப் பாகத்தை தவிர்த்தல் என்பது வலிவான சத்தியத்தை மறுப்பதாகவும், பரிசுத்தான வாழ்விற்கான வல்லமை நிறைந்த தூண்டுதலில் இருந்து நம்மைப் பிரித்துக் கொள்வதாகவும் உள்ளது. மேலும், கடைசிக் காலம் பற்றிய ஒரு சீரான உபதேசமின்றி சபையில் ஊழியங்களுக்கான வைராக்கியமானது இருப்பதில்லை. நியாயத்தீர்ப்பு நாளன்று நமது நிலை பற்றி நாம் அக்கறை கொள்ளாதிருந்தால், கடல் கடந்து அல்ல, ஆனால் தெருவைக் கடந்து கூட சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஊக்குவித்தல் கூடச் சிறிதளவே நாம் கொண்டிருப்போம்!

இயேசுவின் தெய்வீக ஊழியம் பற்றிய அவருடைய உரிமை கோருதலானது அவரது உரையைக் கேட்டவர்களை அவர் யார் என்ற வலியுறுத்தத்தில் இருந்து அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்ற வலியுறுத்தத்திற்கு வழிநடத்திச் சென்றது. அவர் தேவகுமாரனாயிருக்கிறார் என்ற உரிமைகோருதலானது தேவனுக்கு ஊழியம் செய்யும் அவருடைய அர்ப்பணிப்பை யூகப்படுத்தியது. இயேசு, பிதாவின் ஊழியத்தைச் செய்வதாக அவர் (இயேசு) உரிமைகோரிய பொழுது, இயேசு தொடர்ந்து யூதத்தலைவர்களை எதிர்த்து நின்றார். இதன் பிறகு, பின்வாங்கிச் செல்லுதல் இருந்ததில்லை!

## அவருடைய சாட்சியங்களின் உரிமைகோருதல் (5:30-47)

இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் எந்த அடிப்படையில் விசுவாசிக்கின்றீர்கள்? சட்டத்தின் நீதிமன்றம் முன்பாக உங்கள் விசுவாசத்தைப் பற்றிச் சாட்சி கூற நீங்கள் அழைக்கப்பட்டால், “நீங்கள் ஏன் விசுவாசிக்கின்றீர்கள்?” என்ற கேள்விக்கு நீங்கள் எப்படிப் பதில் அளிப்பீர்கள்? தற்கால வாதிடுபவர்களில் ஒருவரான ரவி சகரியா அவர்கள் சமீபத்தில், “பட்டதாரியளவிலான தேவ சந்தேக தன்மையுள்ள உலகில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். பட்டதாரிக்குக் கீழ் நிலையில் உள்ள பதிலானது எடுபடாது. உலகின் மிகக் கடினமான கேள்விகளுக்குப் பதில் அளிக்க நம்மை தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்”[1] என்று கூறினார். புகழ் பெற்றிருக்கும் சில நாத்திகர்களின் கீழ் படிப்பதற்காக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வந்து போகும் கல்வியாளராகப் பணியேற்றல் குறித்த அவரது முடிவு பற்றி அவரிடத்தில் கேட்கப்பட்ட பொழுது, சகரியா பின்வருமாறு பதில் அளித்தார்:

> பெரும்பான்மையான சுவிசேஷ ஊழியத்துவமானது இடர்ப்பாட்டில் உள்ள மக்களை நோக்கியே இயக்கப்படுகின்றது. ஆனால் தேவன் தேவையில்லை என்ற உணர்வுடன் கிடக்கும் எண்ணிக்கையற்ற மக்களை நாம் எப்படி அடைய முடியும்? இதுவே என்னை, நமது காலத்தில் உள்ள மிகச் சிறந்த நாத்திக சிந்தனையாளர்களின் கேள்விகளுக்கு சமாளிக்கும் வகையிலும் வலிவார்ந்த வகையிலும் வாதங்களை பதிலாக முன் வைப்பதற்காக அவர்களின்கீழ் படிக்க விரும்பச் செய்யக் காரணமாயிற்று. நான் சிந்திப்பவர்களின் சுவிசேஷ ஊழியக்காரனாக - நேர்மையான சந்தேகவாதியாக, மகிழ்ச்சியாய் உள்ள புறதெய்வ வணக்கத்தார் என்று நான் அழைப்பவர்களுக்கு ஊழியக்காரனாக - விரும்பினேன்.[2]

நமது வேதபாடப் பகுதியில், இயேசு தேவகுமாரன் என்ற வகையில் தம்முடைய அடையாளத்திற்கான சாட்சியங்களை ஒரு நேர்த்தியான விசாரணை வழக்கறிஞர் செய்கின்றது போலவே முன் வைத்தார். முதலாவது, அவர் பிதாவானவரின் சாட்சியத்தைச் சுட்டிக் காண்பித்தார் (5:32, 37). பிறகு, யோவான் ஸ்நானனின் சாட்சியம் இருந்தது (5:33). யோவானின் சாட்சியமானது இன்றைய நாட்களில் குறிப்பிடத்தக்கதாக இல்லாதிருக்கலாம், ஆனால் முதல் நூற்றாண்டில் அது அந்நாட்களின் முன்னோடிப் பிரபலங்களில் ஒருவரின் சாட்சியமாக இருந்தது. இயேசு தம்முடைய குமாரத்துவத்திற்குச் சாட்சியாகத் தமது சொந்த அற்புதமான செயல்களையும் முன்வைத்தார் (5:36). வேத வசனங்களே இயேசுவின் நான்காவது சாட்சியமாய் இருந்தன (5:39). இந்த சாட்சியங்கள் ஒன்றிணைந்து, இயேசுவின் உரிமைகோருதல்களுக்கு ஆதரவாகப் பலம் நிறைந்த சக்தியை வடிவமைத்தன.

வேத வசனங்களின் நிறைவான இலக்கைத் தவற விடுவதற்கென்று

மட்டுமே வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்த யூதத் தலைவர்களின் வழிமுறையினுடைய முரண்பாட்டை இயேசு குறிப்பிட்டார்: இயேசு கிறிஸ்துவே தமக்கு சாட்சியம் அளித்தல்! ஜியார்ஜியாவின் அட்லாண்டா வில் உள்ள சபைக் கட்டிடத்தின் நுழைவாயிலுக்கு அருகே சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு படம் பற்றி நான் சமீபத்தில் வாசித்தேன். இயேசு கிறிஸ்துவின் உருவச் சித்திரம் கொண்ட இப்படமானது கொரியப் படை அலுவலர்கள் சிலரால் நன்கொடையாக அளிக்கப்பட்டிருந்தது. நல்ல மேய்ப்பர் என்ற வகையில், இயேசு தம்முடைய மந்தையைக் கவனிக்கும் அவ்வுருவத்தை அறியச் சாதாரணமாகப் பார்த்தாலே போதுமானதாக இருந்தது. ஒருவர் அந்தச் சித்திரத்தை நெருங்கி நோக்குகையில், ஓவியர் அந்தச் சித்திரம் முழுவதையும் புதிய ஏற்பாட்டின் வார்த்தைகளைப் பயன்படுத்தியே வரைந்திருப்பதை உணர்ந்தறிகின்றார்! அந்தச் சிறு வார்த்தைகள் யாவற்றையும் உற்று நோக்கப் போதுமான அளவு காண்பவர் நெருங்கும் பொழுது, எப்படியும் அந்தச் சித்திரத்தைக் காணும் திறமையை இழந்து விடுகின்றார். யூதத்தலைவர்கள் இதையே செய்திருந்தனர்! அவர்கள் தனிப்பட்ட கூற்றுக்களைப் பெரிதாக்கி, அந்த முழுமையான பணி எதை வெளிப்படுத்துவதற்காக தொகுக்கப்பட்டது என்பதை மறந்து விட்டனர்!

இயேசு தமது சார்பாக அழைத்த கடைசி சாட்சி மோசேயாக (5:46) இருந்தார். இயேசுவின் எதிராளிகள் அவரை, மாபெரும் நியாயப் பிரமாணம் கொடுத்தவருக்கு எதிரியாகக் கண்டனர், ஆனால் இயேசுவோ, "நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர் கள்; அவன் என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே" (5:46) என்று உரைத்தார். இதற்கு முன் எந்த சந்தேகமும் இருந்திருந்தாலும், இயேசு இந்த உரிமைகோருதல்களை ஏற்படுத்திய பொழுது அவர் முடிவாக, "ரூபிகானைக் கடந்தார்." பிதாவாகிய தேவன், யோவன்ஸ்நானன், தம்முடைய சொந்த செயல்கள், வேதவசனங்கள் மற்றும் மோசே பற்றிய இந்தக் கூற்றுக்களை ஏற்படுத்திய பிறகு இயேசுவால் பின்வாங்கிப்போக முடியாதிருந்தது!

## முடிவுரை

இன்றைய நாட்களில் பெரும்பான்மையான மக்கள் சத்தியத்திற் கென்று பலத்த நிலைப்பாட்டினை மேற்கொள்வதில்லை. பன்மை வாதம் - முழுமையான சத்தியத்தின் கருத்திலிருந்து விலகி ஒவ்வொன்றிலும் சார்பு நிலை நோக்கி இழுத்துச் செல்லும் ஒரு இயக்கம் - என்பது முக்கியமாக கலாச்சார சக்தியாக உள்ளது. எல்லா மக்களும் எல்லா மதங்களும் தங்கள் சொந்த வழியில் சரியானவர்களே என்று கண்ணோக்கப்படுகின்றனர். வாழ்வை நாம் மற்றவர்களின் நோக்கிலிருந்து புரிந்து கொள்வதும், மற்றவர்களின் கண்ணோட்டங்களை ஒப்புக் கொள்வதும் நமது பொறுப்பென்று நமக்குக் கூறப்படுகின்றது. நாம் படித்துள்ள வேத பாடப் பகுதியில், நமது உலகினுள் இயேசு அடியெடுத்து வைத்து, "என் மக்கள் எல்லா மக்களையும் மதிக்க வேண்டும், எல்லா மக்களையும் அன்புகூர

வேண்டும், எல்லா மக்களையும் புரிந்து கொள்வதை நாடவேண்டும். இருந்தாலும், சில கொள்கைகள் விட்டுக் கொடுக்கப்பட முடியாது. சில விஷயங்கள் சத்தியமாய் உள்ளன மற்றும் அவை மற்ற எவரொருவரும் என்ன நினைப்பாரோ என்பதைப் பொருட்படுத்தாமல் முழுமையான சத்தியம் என்ற வகையில் அறிவிக்கப்பட வேண்டும்" என்று சாராம்சத்தில் கூறுகின்றார்.

"வேதாகம விளக்கவுரையாளர்களின் இளவரசரான" G. கேம்ப்பெல் மார்கன் அவர்கள் இந்த வேத பாடப்பகுதியைப் பற்றி ஒரு சமயத்தில், "அந்த நாளில் இயேசு செய்ததும் அந்த நாளில் அவர் கூறியதும் மனிதரின் பார்வையில் அவருக்கு அவருடைய உயிரை விலையாகப் பெற்றது. அவர்கள் ஒருபொழுதும் அவரை மன்னிக்கவில்லை"[3] என்று கூறினார். இது, இயேசு அதிகாரம் 5ல் "ரூபிகானைக் கடந்தார்" என்று கூறுவதற்கான இன்னொரு வழிமுறையாக உள்ளது. சிலுவை அவருக்குச் செய்ததைக் காட்டிலும் குறைவான ஏதொன்றையும் நாம் அவருக்குச் செய்ய முடியாது.

---

குறிப்புகள்

[1]Ravi Zacharias, "Reaching the Happy Pagans," *Christianity Today* (14 November 1994), 18. [2]Ibid. [3]Leon Morris, *Expository Reflections on the Gospel of John* (Grand Rapids, Mich.: Baker Book House, 1988), 193.

---

## *இயேசுவின் மாபெரும் பிரசங்கங்களும் உரையாடல்களும்*

| | |
|---|---|
| புதிய பிறப்பு | *3:1-13* |
| ஜீவ தண்ணீர் | *4:6-29* |
| தம் தெய்வீகம் பற்றித் தற்காப்பு வாதம் | *5:19-47* |
| ஜீவ அப்பம் | *6:22-71* |
| உலகின் ஒளி | *8:12-59* |
| நல்ல மேய்ப்பர் | *10:1-30* |
| மேல்வீட்டு உரையாடல் | *13:1-16:33* |
| கிறிஸ்துவின் ஜெபம் | *17:1-26* |

# ராஜாவாயிருக்கும்படி வற்புறுத்தப்பட்டவர் (6:1–15)

உகாண்டா நாட்டில் பசோகா மக்கள் மத்தியில் ஊழியம் செய்கின்ற ஜான் பர்ட்டன் என்ற ஊழியர், ஒரு கிராமத்தில் இரு மாறுபட்ட வேதாகமங்களிலிருந்து வாசிக்க மிகவும் கடினமாக முயற்சி செய்து கொண்டிருந்த ஒரு வயது முதிர்ந்த மனிதரைச் சந்தித்தார். அவ்விரு வேதாகமங்களில் எதுவும் அவருடைய மொழியில் எழுதப்பட்டிருக்க வில்லை, எனவே அந்த வயது முதிர்ந்த மனிதர் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். ஜான், லசோகா மொழியை அதிகம் பேச முடியாதிருப்பினும், மற்றும் அந்த வயது முதிர்ந்த மனிதர் ஆங்கிலத்தில் அதிகம் பேச முடியாதிருப்பினும், அம்மனிதர் என்ன வாசிக்க முயற்சி செய்து கொண்டிருந்தார் என்பது பற்றி அவ்விருவரும் சற்று நேரம் பேசினார்கள். பசோகா மக்கள் வேதாகம ரீதியிலான செய்தியைப் பெறுவதற்காகக் கொண்டிருந்த பிரச்சனை என்னவென்றால், பசோகா "உங்கள் மொழியை (விலை கொடுத்து) வாங்க வேண்டும்" என்பதேயாகும் என்று அந்த மனிதர், ஜானிடம் கூறினார். முதலில் ஜான் தாம் கேட்டுக் கொண்டிருந்தது என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியாதிருந்தார். இருப்பினும், கடைசியில் அவர், அந்த வயது முதிர்ந்த மனிதர் தனது மக்கள் ஆங்கிலத்தில் உள்ள வேதாகமத்தை வாசித்து கலந்துரையாடல் செய்வதற்காக, பள்ளிக் கட்டணம் செலுத்தி ஆங்கிலம் பேசும் பள்ளிகளில் படிக்க வேண்டியிருந்தது என்று கூறுவதை உணர்ந்தறிந்தார்.

ஜான் தமது பதிலை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்தார்:

> நான் அந்த வயது முதிர்ந்த மனிதரிடத்தில், பசோகாவுக்குச் செய்தியை "இலவசமாய்" கொண்டு வருவதற்காக நான் அவருடைய மொழியைக் கற்றுக் கொண்டிருந்ததாகக் கூறினேன். அவர் மெய்சிலிர்த்துப் போய், நான் அவரை காண்பதற்கு மீண்டும் வர வேண்டும் என்று விரும்பினார்.

> "அந்த வார்த்தை மாம்சமாகி … நமக்குள்ளே வாசம்பண்ணினார்" வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இயேசு நம்மிடத்திற்கு வந்தார். அவர் நமது மொழியை பேசினார். அவர் நமது உலகத்தில் வாழ்ந்தார். அவர் நம்மில் ஒருவரானார். அவர் இடைவெளிக்குப்

பாலமிட்டு இணைத்தார்; நாம் அதைச் செய்யும்படி அவர் ஏற்படுத்தவில்லை. மற்றும் இதன் விளைவாக அவர் தம்முடைய மகிமையை நமக்குக் காண்பித்தார். "அது பிதாவினிடத்திலிருந்து வந்த ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது, அது கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்திருந்தது"[1]

ஜான் பர்ட்டன் போன்ற மக்கள் இயேசுவின் வரலாற்றை மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் பொழுதெல்லாம் தேவனுடைய மகிமையானது வெளிப்படுத்தப்படுகின்றது. யோவான் 6:1-15ல், இந்தத் தடவை இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த வரலாற்றில் தேவனுடைய மகிமை மீண்டும் காணப்படுகின்றது.

## வரலாறு (6:1-15)

யூதர்களின் பண்டிகையொன்றின் போது, இயேசு எருசலேமில் போதித்தது பற்றி அதிகாரம் 5ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிகாரம் 6, இயேசு தமது சீடர்களுடன் கலிலேயாக் கடலைக் கடந்து சென்ற கலிலேயாவின் பகுதிக்கு இயேசு திரும்பச் சென்றதிலிருந்து தொடங்குகின்றது. அந்த வேளையில் அவருடைய புகழானது உயரப் பரவிக் கொண்டிருந்தது. அவர் நிகழ்த்திக் கொண்டிருந்த அற்புத "அடையாளங்களை"ப் பற்றி மக்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். வசனம் 2, தொடர் செயலைச் சுட்டிக்காட்டும் கிரேக்க எச்ச வினைகள் மூன்றைக் கொண்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "இயேசு *செய்யத் தொடர்ந்தவற்றைக் காணத் தொடர்ந்திருந்த* காரணத்தினால் திரளான மக்கள் அவரைத் *தொடர்ந்து* பின்சென்றனர்" என்பதே இவ்வசனத்தின் அர்த்தமாக உள்ளது.

"அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது" (6:4) என்பதே யோவானால் உள்ளடக்கப்பட்ட அடுத்த விபரமாக இருக்கின்றது. "யூதருடைய பஸ்கா பண்டிகை சமீபமாயிருந்த" (2:13அ) போதுதான் தேவாலயத்தைச் சுத்திகரித்தலும் நடைபெற்றிருந்தது. காண்பதற்கு மிகச் சிறியதாயிருக்கக் கூடிய இந்த விபரமானது அந்த நாளில் இயேசுவைக் காணவும் அவரது போதனையைக் கேட்கவும் ஏராளமான மக்கள் வந்தது ஏன் என்பதை அநேகமாய் விளக்கப்படுத்துகின்றது. முதல் நூற்றாண்டு இஸ்ரவேலில் பஸ்கா காலம் என்பது நாட்டுப் பற்றுணர்வு உயர்ந்து ஓடும் காலமாய் இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் யூதர்கள் எருசலேமில் ஒன்றுகூடி, தங்களின் ரோம அதிகாரிகளைத் தள்ளிவிடவும், விடுதலையான சுயாதீனமான இஸ்ரவேல் அரசை அமைப்பதற்கும் அந்த ஆண்டில் மேசியா வருவாரா என்று காணக் காத்திருப்பார்கள்.

இதன் விளைவாக, அற்புதங்களை நிகழ்த்தியதால் இயேசு கலிலேயாவின் மக்களை உணர்வெழுச்சியடையச் செய்த பொழுதும், மற்றும் பஸ்காவானது சமீபத்தில் இருந்த பொழுதும், யூதர்கள் தாங்கள் பல ஆண்டுகளாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த யூதர்களின் அரசர் இயேசுவாய் இருக்கலாம் என்ற பலத்த எதிர்பார்ப்பினால் நிறைக்கப்பட்டிருந்தனர்!

*அந்த நாளில் ஐயாயிரம் ஆண்கள் (6:10) இயேசுவைப் பின்பற்றிய பொழுது, அவர்கள் ஆர்வத்தின் காரணமாக வந்த சாதாரண கூட்டமாக மட்டும் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் யுத்தம் செய்ய மேசியாவைப் பின்பற்றத் தயாராக இருந்த சூடான இரத்தம் கொண்ட யூத வீரர்களாகவும் இருந்தனர். இயேசு கூறுவதைக் கேட்பதற்காக கலிலேயாவின் கடலுக்கு அப்பாலிருந்த பகுதிக்குச் செல்லும்படியாக, விவசாயிகள் தங்கள் மண் வெட்டிகளைப் போட்டு விட்டு, கடைக்காரர்கள் தங்கள் கடைகளை மூடி விட்டு வந்திருந்தனர்.*

*மலையினருகில் திரளான கூட்டத்தார் இயேசுவினிடம் வந்ததை அவர் கண்டபொழுது, அந்தப் பகுதியைச் சேர்ந்தவரான பிலிப்புவினிடத்தில் (1:44) அவர், ''இவர்கள் சாப்பிடத் தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்?'' (6:5ஆ) என்று கேட்டார். இயேசு நிகழ்த்தியிருந்த மற்ற அடையாளங்களைப் பிலிப்பு அறிந்திருப்பினும், அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் சிறிது உணவளிப்பதாயிருந்தாலும் கூட எட்டு மாதக் கூலிப் பணம் கூட அதை வாங்கப் போதுமானதாக இராது என்று அவர் (பிலிப்பு) பதில் அளித்த பொழுது இயேசுவிடம் சிறிதளவு விசுவாசத்தையே காட்சிப் படுத்தினார் (6:7). இந்த வேளை யாவற்றிலும், இயேசு திரளான கூட்டத்திற்குத் தாம் செய்யப் போவது பற்றி அறிந்திருந்தார்.*

*அந்த வேளையில், கூட்டத்தில் ''ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்'' வைத்துக் கொண்டிருந்த ஒரு சிறுபையனைப் பற்றி[2] அந்திரேயா இயேசுவிடம் கூறி, பின்பு ''அவைகள் இத்தனை ஜனத்துக்கு எம்மாத்திரம்?'' (6:9) என்று கேட்டார். மற்றவர்களை இயேசுவினிடம் கொண்டு வருபவராகவே அந்திரேயா யோவானின் புத்தகத்தில் தோன்றுகின்றார்.[3] ''அப்பங்கள்'' மற்றும் ''மீன்கள்'' என்பவற்றை இன்றைய நாட்களில் சில வேளைகளில் கடையில் காணப்படும் ஒன்றாக விளக்கியுரைக்காதபடி நவீன வாசகர் கவனமாய் இருக்க வேண்டும். அப்பங்கள் என்பது அநேகமாக அந்த நாட்களில் ஏழை மனிதரின் எளிய உணவாயிருந்த சிறிய, வட்டவடிவான பார்லி அப்பங்களாக (சற்றுப் பெரிய அளவிலான இரவு உணவுச் சுருள்) இருந்திருக்க வேண்டும். மீன்கள் என்பது உணவுக்குச் சுவையைப் பங்களிக்கின்ற கடிக்கும் அளவுள்ள சிறு துண்டுகளாகவே இருந்திருக்கும். இருப்பினும், தேவனுடைய குமாரனுக்கு அது போதுமானதைக் காட்டிலும் அதிகமானதாகவே இருந்தது!*

*மக்களைப் புல் தரையில் அமரச் செய்யும்படி இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் கூறினார், அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அடுத்து நடந்த நிகழ்ச்சியானது, ஐந்து அப்பங்கள் மற்றும் இரண்டு மீன்களைக் கொண்டு ஐயாயிரம் மக்களுக்கு உணவளிக்க முடிந்தது எப்படி என்பதற்கு மனித ரீதியான சில விளக்கங்களைக் காண மக்கள் காலங்கள் தோறும் முயற்சிக்கின்ற அளவுக்கு நம்ப முடியாததாக இருந்தது. இருப்பினும், இயேசு அப்பத்தை எடுத்து, நன்றி செலுத்தி, அப்பங்களையும் மீன்களையும் பலுகச் செய்த இந்த நிகழ்ச்சி மறுக்க முடியாத ஒரு அற்புதம் என்று யோவான் அறிவித்தார். மக்கள் ''அவர்களுக்கு வேண்டியமட்டும்'' (6:11) பெற்றனர் மற்றும் ''அவர்கள் திருப்தியடைந்தபின்பு'' (6:12) மீதியான*

துணிக்கைகளினாலே பன்னிரெண்டு கூடைகளை நிரப்பினார்கள். அந்தக் கூட்டத்தில் யுத்தத்திற்குச் செல்லப் போதிய பலம் பெற்ற - மற்றும் ஏராளமான அளவு உணவை உண்ணப் போதிய அளவு பசியுள்ள ஐயாயிரம் ஆண்கள் இருந்தனர் என்பதை நினைவில் வையுங்கள்!

மக்கள் "அடையாளத்தைக்" (6:14) கண்ட பொழுது, தேவனுடைய கரமானது ஒரு விசேஷித்த வழிமுறையில் இயேசுவுடன் இருந்தது என்பதை அவர்கள் உணர்ந்தனர். இவர் தான் "உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி" என்று அவர்கள் முடிவு செய்தனர் (6:14). வருகிறவரான தீர்க்கதரிசியைக் குறித்து இந்த எதிர்பார்ப்பானது மோசே ஏற்படுத்தியிருந்த பின்வரும் கூற்றைக் கொண்டிருந்த நியாயப்பிரமாணத்தின் போதனையினுடைய அடிப்படையில் அமைந்திருந்தது: "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவி கொடுப்பீர்களாக" (உபா. 18:15).

ஒரு சில வசனங்களுக்குப் பின் மோசே, "உன்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்" (உபா. 18:18) என்று கர்த்தரைக் குறிப்பிட்டார். அந்த ஐயாயிரம் பேர்களுக்கும், இந்த வார்த்தைகள் அவர்களின் செவிகளில் எதிரொலிக்க, நாட்டுப் பற்றுக் கனவுகள் அவர்களின் இருதயங்களில் கனன்று கொண்டிருக்க, மற்றும் அவர்களின் உணவுத் துணுக்குகள் அவர்களின் தாடிகளில் ஒட்டிக் கொண்டிருக்க, அவர்கள் "வந்து தம்மை (இயேசுவை) ராஜாவாக்கும்படி பிடித்துக் கொண்டு போக மனதாயி"ருந்த (6:15) எதிர்காலப் புரட்சியாளர் களாக இருந்திருப்பார்கள். இப்படிப்பட்ட நோக்கமானது இலேசாக எடுத்துக்கொள்ளப்படக் கூடாததாக இருந்தது. அவர்கள் இயேசுவை ராஜாவாக்கியிருந்தால், அவர்களின் செயல்பாடுகளை ஒரு யுத்த அறிவிப்பாக ரோமாபுரி அதிகாரங்கள் கண்டிருக்கும். ஒரு ராஜா முடி சூட்டப்படுவதற்கு இன்னொரு ராஜா நீக்கப்பட வேண்டும். அப்படியிருப்பினும், அதுவே அவர்களின் நோக்கமாயிருந்தது!

## வரலாற்றின் எஞ்சிய பகுதி

இந்த வேத வசனப் பகுதியில் இன்னும் அதிகமாய்ச் செல்லுமுன், அந்த நாளில் ஐயாயிரம் பேர் என்ன நினைத்துக் கொண்டிருந்தார்கள் என்று நாம் கற்பனை செய்து பார்ப்போம். இயேசுவை அவர்கள் தங்களுடைய ராஜா என்று அறிவித்தவுடன் என்ன நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்க முடிந்தது? இயேசுவின் அற்புத உணவினை அவர்கள் வயிறாற உண்ட பிறகு, அவர்கள் அநேகமாக, இயேசு எங்காவது ஒரு பட்டயத்தைக் கண்டு அதைப் பலுகச் செய்து விவசாயிகள் மற்றும் கடைக்காரர்கள் கொண்ட அந்தக் கீழ்த்தனமான படைக்கு வேண்டிய ஆயுதங்களை அளிப்பார் என்று எதிர்பார்த்திருக்கலாம். பிறகு, சூரிய ஒளியில் அவர்களது பட்டயங்கள் பிரகாசிக்க, அவர்கள் கலிலேயாக் கடலைக் கடந்து திபேரியாவுக்கு எதிராக

அணிவகுத்துச் செல்லலாம். ஒரு சிறிய கட்டளையில், அவர்கள் அந்த நகரை மேற்கொண்டு, பிறகு தங்கள் கடைசி இலக்கான எருசலேமை நோக்கி அணிவகுத்துச் செல்லலாம். அது பஸ்கா காலமாய் இருந்ததால், ரோமப் படையினர் அங்கு தங்கியிருப்பதை அவர்கள் காண்பார்கள். போரானது உக்கிரமாயிருக்கும், ஆனால் கடைசியில் ரோமர்கள்மேல் வெற்றி கொள்வார்கள்.

இயேசுவும், சாதாரண மனிதர்களைக் கொண்ட அவரது படையும் தேவாலயத்தின் எல்லா அசுத்தங்களையும் தவறான பயன்பாடுகளையும் சுத்திகரித்து விடுவார்கள் மற்றும் சதுசேயர்கள் அவர்களின் அதிகாரமுள்ள பதவிகளிலிருந்து தள்ளப்படுவார்கள். எருசலேமைக் கைப்பற்றியது பற்றிய வார்த்தையானது ரோமாபுரி சென்றடையும் பொழுது, ரோமாபுரியின் வல்லமை மிகுந்த படையணிகள் இயேசுவுக்கும் அவருடைய படைக்கும் எதிராகக் கொண்டு வரப்படும். காணக்கூடிய மற்றும் தீர்மானமான ஒரு போராட்டத்தில் ஒரு புது உலகப் பேரரசினை ஆக்குவதற்காக யூதர்கள் ரோமர்களை நசுக்குவார்கள். ஐயாயிரம் மனிதர்களைக் கொண்ட இயேசுவின் எதிர்காலப் படையில் இருந்த சராசரி மனிதர் என்ன நடக்கும் என்று யூகித்திருந்தது இதுவாகவே இருக்கும்! இருப்பினும், இயேசு தம்முடைய சிந்தையில் வேறு சில விஷயங்களைக் கொண்டிருந்தார்.

## அவர்களுடைய மற்றும் நம்முடைய தவறு

எதிர்பார்ப்புகள் உயர்ந்து ஓடிய மற்றும் உணர்வெழுச்சிகள் கட்டுக்கடங்காதிருந்த அந்த நிலையில், மிகவும் எதிர்பார்க்கப்படாத ஒரு விஷயத்தை இயேசு செய்தார். அவர், "மறுபடியும் விலகி, தனியே மலையின் மேல் ஏறினார்" (6:15). அந்த நாளில் அநேகமாக அவர் மட்டுமே அந்த மலை முழுவதிலும் இருந்த ஒரே ஒருவராகத் தாம் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதைப் புரிந்து கொண்டிருந்தவராக இருக்க வேண்டும். பன்னிருவருக்கும், மற்றும் இருந்த பின்பற்றாளர்கள் ஐயாயிரம் பேருக்கும், இயேசு தாம் நிறைவேற்றுவதற்காகக் கடினமாய் உழைத்திருந்த இலக்கை விட்டே அவர் விலகிச் சென்றிருந்தார் என்றே காணப்பட்டது.

தமது நாட்டின் தலைவராவதற்காகத் தம் வாழ்வின் நான்கு ஆண்டுகளை அர்ப்பணித்துள்ள ஒரு நபரைப்பற்றிய விஷயமே இங்கு நான் ஒப்புவமையாகச் சிந்திக்கக் கூடியதாக உள்ளது. அவர் நீண்ட நேரங்கள் முகாம்களிட்டு, ஒவ்வொரு ஆண்டின் ஐம்பத்தியிரண்டு வாரங்களிலும் தனது பணிக்கான வேட்பை மேம்படுத்துகின்றார். பிறகு, அந்தக் கடினமான உழைப்பு யாவும் கடைசியில் அவருக்குப் பலன் அளிக்கின்றது: முதன்மைத் தேர்தல்களில், அவர் தம் கட்சியின் சார்பில் வேட்பாளராவதற்குப் போதிய அளவு ஆதரவுள்ள வாக்குகளைப் பெறுகின்றார். இருப்பினும், மாநாடு நடத்தப்பட்டு வேட்பு ஓட்டுகள் போடப்பட்ட பொழுது நினைத்துப் பார்க்க முடியாத சில விஷயங்கள் நடக்கின்றன. ஆயிரக்கணக்கானவர்கள் ஆதரவாகக் கூக்குரலிட்டு, வேட்பாளரின் பெயர் தாங்கிய அடையாளங்களை உயர்த்தி ஆட்டிக் கொண்டிருக்கையில், அந்த மனிதர்

தம் நாற்காலியிலிருந்து திடீரென்று எழுந்து, மாநாட்டு மையத்தை விட்டு வெளியே நடந்து செல்லுகின்றார். இப்படிப்பட்ட ஒரு செயலானது நினைத்துப் பார்க்க முடியாததாக உள்ளது - ஆனால் ஐயாயிரம் பேர் இயேசுவைத் தங்கள் ராஜாவாக்க தயாராயிருந்த பொழுது இயேசு செய்ததைக் காட்டிலும் இச்செயல் அதிகம் நினைத்துப் பார்க்க முடியாததாக இருப்பதில்லை.

இயேசு தம்முடைய நிறைவான இலக்கின் மேல் கவனமாயிருக்கும் தம்முடைய இணையற்ற வல்லமையை மீண்டும் செயல்விளக்கப் படுத்தினார். அந்தக் கூட்டத்தாரின் அதிகப் புகழ்ச்சியான நோக்கங்கள் தேவனுடைய நிறைவான நோக்கத்தை நிறைவேற்றச் செய்யாது என்பதை அவர் அறிந்தார்; (மக்கள்) கடலில் இருந்து எழும் ஒரு புரட்சி என்பது பாவத்திலிருந்து இந்த உலகை மீட்காது. மேலும், அவர்களின் அப்போதய சிந்தை அமைவில் அவர்களுடன் வாதிடுவதற்குக் காரணம் எதுவும் இல்லை என்பதையும் அவர் அறிந்தார். ஆகையால் அவர் எளிமையாகப் புறம்பே நடந்து சென்றார்.

இந்த வேதபாடப் பகுதியின் "கண்ணாடியில்" நான் காணும் இரண்டு காட்சிகள் என்னைக் கவலையடையச் செய்கின்றன. இயேசுவை நமது வார்ப்படத்தினுள் வலிந்து தள்ள முயற்சிக்கும் நமது மனித ரீதியான விருப்பம் என்பது எனது முதல் கவலையாக உள்ளது. நாம், இயேசு யாராக இருக்கின்றார் என்று அவரே நம்மிடத்தில் காண்பிக்க அனுமதிப்பதற்கு மாறாக நமது எதிர்பார்ப்புகளை இயேசுவின் மீது வைக்க விரும்புகின்றோம். இயேசு நம்மைப் போன்றவராகவே இருக்கின்றார் என்று சில வேளைகளில் நாம் யூகிப்பதில்லையா? அமெரிக்கர்கள் அவரை அமெரிக்கர் என்று நினைக்கத் தலைப்படுகையில், இத்தாலியர்கள் அவரை ஒரு இத்தாலியர் என்று நினைக்கத் தலைப்படுகின்றனர். ஆங்கிலம் பேசும் மக்கள் இயேசு ஆங்கிலம் பேசினார் என்று யூகிக்கையில், ஸ்பானிஷ் பேசும் மக்கள் இயேசு ஸ்பானிஷ் மொழியை விரும்பினார் என்பதாக உறுதிபடக் காண்கின்றனர். பணக்காரர்கள் அவரைப் பணக்காரராகவும், ஏழைகள் அவரை ஏழையாகவும் காண்கின்றனர். கல்வி கற்றவர்கள் இயேசுவைக் கல்வியறிவு பெற்றவரென்று சித்தரிக்கின்றனர், மற்றும் கல்வியறிவு பெறாதவர்கள் பள்ளிப் படிப்பின் மீது தங்களின் நம்பிக்கையின்மையை அவர் பகிர்ந்து கொண்டதாக நம்பியிருக்கின்றனர். உணர்வுப்பூர்வமான மக்கள் இயேசுவை உணர்வுப் பூர்வமானவராகக் கண்ணோக்குகையில், அமைதியான மக்கள் தங்கள் அமைதியான நடக்கையை இயேசு பகிர்ந்து கொண்டார் என்று உரிமைகோருகின்றனர். ஐயாயிரம் பேர்களிடமிருந்து இயேசு விலகிச் சென்ற காட்சியானது, நாம் இயேசுவின் மீது நமது எதிர்பார்ப்புகளை வைக்கும் பொழுது எவ்விதம் தவறானவர்களாய் இருக்க முடியும் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றது. முழு உலகமும் தவறாகப் புரிந்து கொண்டிருப்பினும், அவர் தம்முடைய பிதாவின் சித்தத்தைச் செய்வதை வலியுறுத்தினார்.

நாமும் கூட நீண்டகாலத் தீர்வுகளைக் கண்ணோக்காமல் விடும்படி குறுகிய காலப் பிரச்சனைகளினால் பற்றிக் கொள்ளப்பட்டவர்களாகக்

கூடும் என்பது இந்தக் குறுகிய வசனப் பகுதி நமக்கு அளிக்கின்ற இன்னொரு எச்சரிக்கையாக உள்ளது. இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்கள், ரோமானியர்களின் ஆதிக்கத்தின் கீழ் பதராய் அடிக்கப்பட்டார்கள். யாரேனும் ஒருவர் இஸ்ரவேலுக்கு அரசியல் விடுதலையைக் கொண்டு வரும் காலத்திற்கான ஏங்குதலுடன் அவர்கள் "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" (1:29) கவனியாது விட்டனர். நாம் அதை எப்பொழுதாவது செய்கின்றோமா? வாழ்வின் மிகப்பெரும் விஷயங்களின் காட்சியை இழந்து விடுமளவுக்கு நாம் உடனடியான பிரச்சனைகள் பற்றி எப்பொழுதாவது அதிகமாய்க் கவலைப் பட்டுள்ளோமா? பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக ஏங்குவதைக் காட்டிலும் அதிகமாக, வரிகள், வேதனை, போராட்டம், அழுத்தம் அல்லது பணி ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்காக நாம் எப்பொழுதாவது, அதிகமாய் ஏங்கியுள்ளோமா? இயேசு நமது எதிர்பார்ப்புகளுக்குப் பொருந்தி வந்து, நமது செயல் அட்டவணையைப் பின்பற்ற வேண்டும் என்று நாம் வலியுறுத்தும் பொழுது, அந்த நாளில் மலைப்பகுதியில் அந்த ஐயாயிரம் பேர் செய்ததையே நாமும் செய்கின்றோம் ... மற்றும் இயேசு அவர்களை விட்டு விலகி நடந்து சென்றார்!

## முடிவுரை

சுமார் இரு ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஒரு நாற்பரிமாணப் படத்தை[4] முதன் முறையாகப் பார்த்தேன். நான் எனது குடும்பத்துடன் ஒரு கடையில் இருந்தேன், அங்கு முக்காலித் தாங்கிகளின் மேல் வைக்கப்பட்டிருந்த சுவரொட்டிகளின் தொகுப்பொன்றைச் சுற்றி மக்கள் கூட்டம் ஒன்று நின்றிருந்தது. இந்தச் சுவரொட்டிகளில் கண்கவர் சித்திரங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த வண்ணம் நிறைந்த வடிவமைப்புகள் அடங்கியிருந்தன. நாங்கள் யாவரும் சுற்றி நின்று உற்று நோக்கினோம். அந்த வடிவமைப்புகளினுள் மறைந்திருந்த அழகுமிக்க உருவங்களைச் சிலர் கண்டறிந்தனர், ஆனால் மற்றவர்கள் ஒருக்காலும் "அவைகளைக்" காண முடியவில்லை.

யோவான் 6:1-15 ஒரு நாற்பரிமாணச் சித்திரம் போன்றதாக உள்ளது. அந்தச் சித்திரத்தின் அடியில் "வெற்றி!" என்ற ஒரே வார்த்தை மட்டுமே உள்ளது. நாம் யாவரும் சுற்றி நின்று மறைந்துள்ள உருவத்தைக் காண ஆவலாயிருக்கின்றோம். என்ன காணும்படி நாம் எதிர்பார்க்கின்றோம்? அநேகமாகச் சிலர் அதில் ரூபாய் நோட்டின் அடையாளத்தைக் காணும்படி எதிர்பார்க்கலாம், மற்றவர்கள் தங்கள் நாட்டின் தலைநகரக் கட்டிடத்தைக் காணும்படி எதிர்பார்க்கலாம். ஒரு சிலர் தாங்கள் அதில் ஒரு கட்டிடத்தைக் காணலாம் என்று உறுதியாய் உள்ளனர், மற்றும் பிறர் டாங்கிகள் மற்றும் குண்டுகளுடனான படையின் காட்சியொன்றை அதில் நோக்கும்படி எதிர்பார்க்கின்றனர். பிறகு, யாரோ ஒருவர் மறைந்துள்ள உருவத்தைக் காணத் தொடங்குகின்றார், மற்றும் அவர் "ஓ! நான் அதைக் காண்கின்றேன்!" என்று மெல்லிதாகக் கூறுகின்றார். ஒவ்வொருவராக,

அனைவரும் அந்தச் சித்திரத்தைக் காணத்தொடங்குகின்றனர், மற்றும் அது எவரொருவரும் எதிர்பார்த்திருந்த மாதிரியில் இருப்பதில்லை. அதற்குப் பதில், "வெற்றி!" என்பது சிலுவையாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]John Barton, Work Report, December 1994. [2]இவ்வார்த்தை "ஒரு சின்னஞ்சிறு பையன்'' என்று அர்த்தப்படுகின்றது. [3]யோவான் 1:40, 41; 12:20-22. [4]"நாற்பரிமாணப்படம்" என்பது ஒரு மட்டத்திற்கும் அதிகமாக இருந்து காணப்பட வேண்டிய படமாக உள்ளது. முதல் பார்வையில் இது வண்ணங்களின் குழப்பலாகவே வழக்கமாய்த் தோன்றும். சரியான வழிமுறையில் ஒருவர் வடிவமைப்பினுள் உற்று நோக்கினால், இரண்டாவது உருவொன்று - ஒரு முப்பரிமாணப் படமானது - கவனத்திற்குள் வருகின்றது.

---

## "நான் இருக்கிறேன்" என்ற வகையில் இயேசு

சுவிசேஷ எழுத்தாளர்கள் நால்வரிலும், யோவான் அவர்கள், இயேசு தம்மைப் பற்றிக் கூறிய உண்மையான உரிமைகோருதல்களைப் பதிவு செய்ததின் மூலம் கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு அதிகமான வலியுறுத்தத்தை அளிக்கின்றார். கிறிஸ்து, "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" (8:58) என்று உரைத்த பொழுது, அவர், எரியும் முட்புதரில் மோசேக்கு வெளியாக்கப்பட்ட தேவனுடைய பெயரையே தமக்கு உரிமை கோரினார் என்பதை மக்கள் அறிந்தனர் (யாத். 3:14). இதனால் தான் மக்கள் அவரை நிரூபணமற்ற தேவதூஷணம் கூறியதாகக் கல்லெறிய முயற்சி செய்தனர். கிறிஸ்து நித்தியத்திற்கும் நான் இருக்கிறேன் என்பவராயிருந்தார் மற்றும் இருக்கிறார். உறுதிப்பாடுகளின் ஒரு வரிசையில் அவர் அந்த உரிமைகோருதலைப் பெருக்கப்படுத்தினார்:

1. ஜீவ அப்பம் நானே (6:35).
2. நான் உலகத்திக்கு ஒளியாயிருக்கிறேன் (8:12; 9:5).
3. நானே ... வாசல் (10:7).
4. நானே நல்ல மேய்ப்பன் (10:11, 14).
5. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் (11:25).
6. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (14:6).
7. நான் மெய்யான திராட்சச் செடி (15:1).

யோவான் சுவிசேஷத்தில் உள்ள ஆதரவான மற்ற கூற்றுக்களில் ''நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'' (10:30) மற்றும் ''என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்'' (14:9) ஆகியவையும் உள்ளடங்கு கின்றன.

# "இந்த அப்பத்தைப் புசியுங்கள்" [6:16–69]

ஒரு சிறுபையன் ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று சபையிலிருந்து வீடு திரும்பி, வேதாகம வகுப்பில் தான் கற்றுக் கொண்டிருந்த பாடத்தைப் பற்றித் தனது தாய்க்குக் கூறத் தொடங்கினான். "மோசே என்று பெயர் கொண்ட மனிதர் இருந்தார். அவர் மக்களை எகிப்தை விட்டு வெளியே வழி நடத்திக்கொண்டு வந்தார். அவர்கள் கடலுக்கும் தங்கள் எதிரிகளுக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டார்கள்" என்று அவன் தொடங்கினான். அவன் தொடர்ந்து அதைக் கூறும்படி உற்சாகமூட்டுவதற்காக, அவனது தாய் அவனிடத்தில் "அப்புறம் அவர் என்ன செய்தார்?" என்று கேட்டாள். "அவர் பொறியாளர்களை அழைத்து கடலின் குறுக்கே அவர்கள் ஒரு தற்காலிகப் பாலம் கட்டும்படி செய்து, மக்கள் தப்பும்படியாக உபாயம் செய்தார். பிறகு மக்கள் கடந்து சென்று, மறுகரையில் பாதுகாப்பாக இருக்கையில் எகிப்தியரின் படையானது பாலத்தைக் கடக்கத் தொடங்கிற்று. அப்பொழுது மோசே ஆகாய விமானங்கள் பாலத்தைத் தாக்கும்படி கட்டளையிட்டான். அவைகள் அந்தப் பாலத்தை நொறுக்கி விட்டது!" என்று அந்தப் பையன் கூறினான். வேதாகமத்தில் அதிக புலமையில்லாவிட்டாலும், தான் நினைவில் வைத்திருந்த வரலாறு அத்தகையானது அல்ல என்று தாய் அறிந்தாள். அவள், "இது உண்மையில் இவ்வகையில்தான் நடைபெற்றது என்று உங்கள் ஆசிரியர் கூறினாரா?" என்று கேட்டாள். அவளது மகன், "இல்லை, ஆனால் எனது ஆசிரியர் எனக்குக் கூறியதை நான் உங்களுக்குக் கூறினால், நீங்கள் அதை ஒரு போதும் நம்ப மாட்டீர்கள்" என்று பதில் அளித்தான்.[1]

ஐயாயிரம் பேருக்கு உணவளித்ததும் கூட இப்படிப்பட்ட ஒரு வரலாறாக மட்டுமே உள்ளது. இயேசு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் மட்டும் கொண்டு ஐயாயிரம் மனிதர்களைக் கொண்ட ஒரு பசிப் படைக்கு உணவு அளித்தார். இந்த மனிதர்கள் யாவரும் திருப்தி யடைந்து, மீதியான உணவுத் துணிக்கைகள் பன்னிரெண்டு கூடைகள் நிறைய சேகரிக்கப்பட்டிருந்த பொழுது, "அவர்கள் வந்து, தம்மை (இயேசுவை) இராஜாவாக்கும்படிப் பிடித்துக் கொண்டு போக மனதாயிருக் கிறார்கள்" (6:15) என்பதில் சிறிதளவே வியப்புக் காணப்படுகின்றது. அப்பொழுது தான் அவர்கள் கண்டிருந்து (மற்றும் ருசித்திருந்த) வல்லமையானது அவர்களால் புரிந்து கொள்ளக் கூடியதைக் காட்டிலும் அதிகமானதாக இருந்தது.

இயேசு தம்மை அந்தக் கூட்டத்தார் இராஜாவாயிருக்கும்படி

வற்புறுத்தப் போகின்றார்கள் என்பதைக் கண்ட பொழுது, அவர் "மறுபடியும் விலகி, தனியே மலையின் மீது ஏறினார்" (6:15). முதலில் இயேசு பன்னிருவரையும் ஒரு படகில் அனுப்பி விட்டு பிறகு கூட்டத்தை அனுப்பி விட்டதாக (மத். 14:22; மாற். 6:45) மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய இருவரும் பதிவு செய்தனர். யோவான், "இயேசு ... மறுபடியும் விலகி, தனியே மலையின் மேல் ஏறினார்" (6:15) என்று மட்டும் எடுத்துரைத்தார். பின்பு, மாலை வேளை வந்த பொழுது, அவருடைய சீஷர்கள் ஒரு படகில் ஏறிக் கப்பர்நகூமை நோக்கித் திரும்பிச் சென்றார்கள். இந்த இடத்தில், இவ்வரலாற்றில் உள்ள ஒவ்வொருவரும், இயேசுவைத் தவிர, பயங்கரமாகக் குழப்பம் அடைந்திருக்க வேண்டும். அவர்களின் கண்களில், அவர் கண்கண்ட வெற்றிக்குத் தமது முதுகைக் காண்பித்தார் என்றே காணப் பட்டது. "அவர் என்ன நினைத்துக் கொண்டிருந்தார்?" என்று அவர்கள் நிச்சயமாகவே வியப்படைந்தார்கள்.

அந்த இரவில், பன்னிருவரும் இன்னும் அதிகமாய்க் குழப்பம் அடைந்தார்கள். இருளில் அவர்கள் அந்தக் கடலைக் கடந்து கொண்டிருக்கையில், ஒரு கடுமையான புயல் எழும்பி, அவர்களின் படகை அமிழ்த்தி விடுவதாகப் பயமுறுத்தியது (6:16-18). அப்போதுதான் அவர்கள், தண்ணீரின் மேற்பரப்பில் இயேசு நடந்து வருவதைக் கண்டார்கள். அவர்களின் பயத்தைக் கண்டு, அவர்களிடத்தில் அவர், ''நான்தான் பயப்படாதிருங்கள்'' (6:20) என்றார். அவர்களுடைய படகில் அவர் ஏறியதும், அது கப்பர்நகூமை அடைந்தது. உணர்வெழுச்சி, திகைப்பு, வலிவான மகிழ்ச்சி, இன்னும் அதிகம் வலுவான ஏமாற்றம், குழப்பம், பய உணர்வு, பயப்படுதல் மற்றும் மிக அதிகமான விடுதலை: இவை எல்லாவற்றையும் ஒரே நாளில் சீஷர்கள் அனுபவித்திருந்தனர்!

அடுத்த நாளில், அவரை முன்பு பின்தொடர்ந்திருந்து அப்பங்களையும் மீன்களையும் உண்டிருந்த குழுவானது இயேசுவை தேடத் துவங்கினார்கள். அவர் (தம்முடைய வயது வந்த ஊழியத்தின் போது குடியிருந்த இடமாகிய) கப்பர்நகூமில் இருந்து வந்தவர் என்பதை அறிந்த அவர்கள், அவரைக் காண்பதற்காகப் படகுகளில் சென்றார்கள். அந்த நாளில் எத்தனைபேர் அவ்வாறு பயணம் செய்தார்கள் என்பதை யோவான் பதிவு செய்யவில்லை, ஆனால் அம்மக்களில் பெரும்பான்மையோர் இயேசுவைத் தங்களுடைய ராஜாவாக்க வேண்டும் என்று இன்னமும் விரும்பியிருந்தார்கள் என்று காணப்படுகின்றது. கப்பர்நகூமுக்கு வந்து சேர்ந்த பொழுது, இயேசுவை ஜெப ஆலயத்தில் அவர்கள் கண்டார்கள் (6:59). இயேசு பிரசங்கித்த வற்றிலேயே மிகக் கடினமான மற்றும் வற்புறுத்தல் அதிகமுள்ள பிரசங்கங் களில் ஒன்றைத் தாங்கள் கேட்க இருந்தனர் என்பது பற்றி அவர்கள் சிறிதளவே அறிந்திருந்தனர்; இயேசு வாழ்வு தரும் அப்பமாக உள்ளார் என்பதை அவர்கள் கேட்க இருந்தனர்.

## உபதேசம் (6:25-59)

### சுலபமான சீஷத்துவம் (6:25-34)

யோவான் சுவிசேஷத்தில் நமது படிப்பின் இப்பகுதி வரையிலும், அடுத்த நாளில் இயேசு அந்தக் கூட்டத்தை பாராட்டின் மென்மையான வார்த்தைகளினாலும், ஏற்றுக் கொள்ளுதலினாலும் வாழ்த்தாது இருந்தது பற்றி நீங்கள் அநேகமாக வியப்புற்றிருக்க மாட்டீர்கள். நிக்கொதேமுக்கு அவர் பதில் அளித்த வகையானது சிந்தைக்குக் கொண்டு வந்த எதிர்பாராத தாக்குதல் போலவே (3:3), இயேசு அக்கூட்டத்தை உடனடியாகக் கடிந்து கொண்டார்:

> *நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலை நிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷ குமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் (6:26, 27).*

மக்கள் தேவனிடத்திலிருந்து ஒரு அடையாளத்தைப் பெற்றிருந்ததாக இயேசு வலியுறுத்தினார். இயேசுவின் வாழ்வு மீது தேவனுடைய கரம் இருந்ததை அவர்கள் உணர்ந்தனர், ஆனால் அவர்கள், இயேசுவுடன் கொண்டிருக்கும்படி தேவன் விரும்பியிருந்த ஒரு உறவின் வகையைக் காணத்தவறியிருந்தனர். பிதாவைக் காண்பிப்பதற்கு அவர் மேல் நம்பிக்கை கொள்வதற்குப் பதிலாக, அந்தக் கூட்டமானது, அந்த அற்புத உணவு அர்த்தப்படுத்தியிருந்தது என்ன என்பது பற்றித் தங்கள் சொந்த முடிவுகளைச் செய்யத் தாவியது. அவர்கள் (இவ்வார்த்தையின் ஒரு கருத்தின்படி) விசுவாசித்திருக்கையில், உண்மையில் (யோவான் சுவிசேஷத்தில் வார்த்தையை இயேசு விளக்கப்படுத்தியிருந்த கருத்தில்) அவர்கள் விசுவாசியாமல் இருந்தார்கள்.

இயேசுவை அந்தக் கூட்டமானது தங்கள் உலகப்படியான தேவைகளைச் சந்திக்க ஒரு வழிமுறையாய்ப் பெறக் கண்டது என்பதையும் இயேசு உணர்ந்தறிந்தார். அவர்கள் "அப்பம் புசித்து திருப்தியானார்கள்" (6:26). இந்த வாழ்வில் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக மட்டும் ஒரு சிலர் எந்த வேளையிலும் இயேசுவைப் பின்தொடர விரும்புவதில் இதே தவறுதல் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, ஒருவர் தம்மை இயேசு தமது வியாபாரம், திருமணம் அல்லது உடல்நலம் ஆகியவற்றில் மேம்படுத்தி, பாதுகாப்பார் என்று நம்புகின்ற காரணத்தினால் இயேசுவைப் பின்பற்றலாம். இவை யாவும் உண்மையாக இருக்கையில், இயேசுவின் மூலமாக பிதாவை அறிய வேண்டும் என்பதே எல்லா மக்களையும் பற்றி இயேசுவின் அக்கறையாக உள்ளது. இதிலிருந்து சற்றேனும் குறைவுடைய ஏதொன்றும் போலியான மதமாகி விடுகின்றது! இயேசு நமக்குக்

கொடுக்கின்றவைகளினிமித்தமாக மட்டும் அவரைப் பின்பற்றும் ''சுலபமான சீஷத்துவம்'' என்ற கருத்தானது இயேசு புறக்கணிக்கும் கருத்தாக உள்ளது.

"தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கூட்டமானது இயேசுவைக் கேட்கத் தொடங்கியது (6:28). அதற்கு இயேசு, "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" (6:29) என்று பதில் உரைத்தார். யோவான் சுவிசேஷம் முழுவதிலும் "விசுவாசித்தல்" என்பது பற்றியே கூறுகின்றது என்பது நமக்கு மீண்டும் நினைவூட்டப்படுகின்றது (20:31), மற்றும் இது சிலவற்றை உண்மை என்று ஒப்புக் கொள்ளுவதை விட மிக அதிகமானதாகும் என்று அர்த்தப்படுத்துவதாக உள்ளது. பிறகு மக்கள் மோசேயின் காலத்தில் "வானத்திலிருந்து வந்த உணவு" என்பதாக இருந்த மன்னாவைப் பற்றிக் குறிப்பிட்டனர். தேவன் இப்பொழுது அவர்களுக்கு, மோசேயின் மன்னாவைக் காட்டிலும் மேன்மையான, ''மெய்யான உணவை'' தருவதாக இயேசு பதில் அளித்தார். இவ்வரலாற்றின் இந்த இடத்தில், சமாரியப் பெண் இயேசுவுடனான தன் உரையாடலில் இதே போன்ற ஒரு இடத்தில் பதில் அளித்திருந்தது போலவே பதில் அளித்தனர்: இயேசு கூறிய அந்த உணவைத் தரும்படி அவர்கள் அவரைக் கேட்டுக் கொண்டனர். பிறகு இயேசு அவர்களின் வேண்டுகோளை, தம்மைப் பின்பற்றுவது குறித்து ஆழமாய்ப் போதிக்கும் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தினார்.

### கடினமான சீஷத்துவம் (6:35-52)

''ஜீவ அப்பம் நானே'' (6:35) என்ற வார்த்தைகள் கூட்டத்துடன் இயேசுவின் எதிர்கொள்ளுதலின் நடுவில் ஒரு குண்டு போல வெடித்திருக்க வேண்டும். "நானே" என்ற சொற்றொடரானது எரியும் புதரில் மோசேக்குத் தேவன் கூறிய வார்த்தைகளைப் போலவே ஒலித்திருக்க வேண்டும்: ''இருக்கிறவராக இருக்கிறேன்'' (யாத். 3:14ஆ). இது நிச்சயமாகத் தற்செயலானதாக இருந்ததில்லை; யோவான் சுவிசேஷத்தில் இயேசு தமது தெய்வீகத்துடன் மக்களைத் தொடர்ந்து எதிர்கொண்டிருந்தார். பிறகு இயேசு தம்மை, அவர்களின் மிக ஆழமான தேவைகளை திருப்திப்படுத்தக் கூடிய ஒரே ஒருவர் என்று முன்னிறுத்தச் செயல்பட்டார். தேவன் நமது ஆத்துமாக்களின் ஆழமான தேவைகளைச் சந்திக்க வேண்டியதாயிருக்கும் பொழுது, நாம் மிகவும் அடிக்கடி நமது இரண்டாம் நிலைத் தேவைகளைத் திருப்திப் படுத்திக் கொள்வதற்காகவே தேவனிடத்தில் வருகின்றவர்களாய் இருக்கின்றோம். அவர்களின் வயிறு நிறைவதல்ல ஆனால் ஆத்துமாக்கள் நிறைவடைவதே அவர்களின் மாபெரும் தேவை என்பதை இயேசு உணர்ந்தறிந்தார். அவர்களின் ஆத்துமாக்களை நிறைவடையச் செய்யும் உணவாக அவர் தம்மையே ஒப்புக் கொடுத்தார். உணவு மற்றும் அரசியல் விடுதலை ஆகியவற்றினால் அவர்கள் தங்களின் குறைவான தேவைகளை நிறைவு செய்ய நாடுவதை இயேசு அறிந்தார். தேவனே அவர்களின் முக்கியமான தேவை என்பதை அவர் அறிந்தார்!

*முறுமுறுத்தல் என்பதே மக்களின் பதில்செயலாக இருந்தது. இஸ்ரவேலர்கள், தேவன் தங்களைக் குறித்துப் போதுமான அளவு அக்கறை கொள்ளவில்லை என்பது போல இஸ்ரவேல் மக்கள் தொடர்ந்து முறுமுறுத்தனர் என்ற யாத்திராகமத்தின் வரலாறு மீண்டும் நமக்கு நினைவூட்டப்படுகின்றது. இந்த முறை, இயேசு தம்மைக் குறித்து மாபெரும் உரிமைகோருதல்களை ஏற்படுத்தியதால் யூதர்கள் முறுமுறுத்தனர். சிலர் இயேசுவின் மனித ரீதியான குடும்பத்தைப் பற்றிப் பேசி, அவரது சாதாரண தொடக்கங்கள் என்று தாங்கள் கண்ணோக்கியிருந்தவற்றைக் கூறினார்கள். அவரை "தீர்க்கதரிசியானவர்" (6:14) என்று அவர்கள் ஒப்புக் கொள்ள முடிந்து, அவரைத் தங்கள் ராஜாவாக்கப் பெருவிருப்பம் கொண்டிருந்த தாகக் காணப்படுகின்றது, ஆனால் அவரது நிறைவை அவர் பரலோகத் திலிருந்து வந்த தேவகுமாரன் என்ற வகையில் அவர்களால் ஒப்புக்கொள்ள முடியாதிருந்தது! இயேசுவின் போதனையினால் இவ்வளவாய்க் குழப்பமடைந்து கலவரமுற்றிருந்த அந்தக் கூட்டத்திற்கு இயேசு அடுத்து என்ன செய்தார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? எனது நோக்கமானது கூட்டத்தின் முரண்பாட்டைக் குறைத்து, கேட்பவர்களுக்கு ஆறுதலூட்டு வதாய் இருக்கும் என்றாலும், இயேசுவின் முடிவானது வேதாகமத்தில் எங்கும் காணப்படும் பகுத்தறிவுள்ள மற்றும் கடுமையான போதனைகளை வலியுறுத்துவதாகவே இருந்தது!*

### *முழுமையான சீஷத்துவம் (6:53-56)*

*இயேசு, "நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக் குள்ளே ஜீவனில்லையென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (6:53) என்று உரைத்தார். கிறிஸ்தவ விசுவாசத்தின் தொடக்க கால ஆண்டுகளின் போது, மனித மாம்சத்தை உண்ணுபவர்கள் என்ற குற்றச்சாட்டானது கிறிஸ்தவர்களுக்கெதிராக அடிக்கடி எழுப்பப் பட்டது. கிறிஸ்தவர்களின் மொழிநடையைக் குறித்து, குறிப்பாக இயேசுவின் சரீரத்தை உண்டு அவரது இரத்தத்தைக் குடித்தல் என்ற அவருடைய வார்த்தைகளைக் கிறிஸ்தவர்கள் மீண்டும் மீண்டும் பயன் படுத்தியதைக் குறித்துப் புறம்பே இருந்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர்! அப்படிப்பட்ட மட்டுமிஞ்சிய கூற்றினால் அவர் அர்த்தப் படுத்தியிருந்தது என்ன?*

*கூட்டத்திலிருந்த பலருக்கு, அவரது வார்த்தைகள் வெறி கொண்ட ஒரு சித்தம் கலங்கிய மனிதனின் வார்த்தைகள் போல ஒலித்திருக்க வேண்டும், ஆனால் இயேசுவோ, மனித குமாரனுடன் ஒரு தகுதியான உறவுமுறை என்பது பயன்படுத்தும் ஒரு உறவுமுறையாக உள்ளது என்பதையே வலியுறுத்தினார். வெறும் நண்பர்கள், பழக்கமானவர்கள், வீரர்கள் அல்லது குடிமக்கள் என்பதைக்காட்டிலும் அதிகமான ஒன்றை இயேசு விரும்பினார். உண்மையான பின்பற்றாளர் ஒவ்வொருவரும், "என்னிலே நிலைத்திருக் கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்" (6:56) என்பதையே இயேசு வலியுறுத்தினார். ஒரு அரசர் தம் மக்களுடன், ஒரு படைத் தலைவர் தமது*

படையுடன், அல்லது ஒரு ரபீ தனது மாணவர்களுடன் கொண்டுள்ளதை விட அவர் தமது பின்பற்றாளர்களுடன் நெருங்கிய உறவு கொண்டிருக்க விரும்பினார். உணவானது அவர்களின் உடலில் செரிக்கப்பட்டு, அவர்களின் உடலின் ஒவ்வொரு செல்லினாலும் உறிஞ்சப்பட்டுள்ளது போன்ற நிலையில் தாம் இருக்கும்படி இயேசு வலியுறுத்தினார். வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், இயேசு, "நீங்கள் உங்கள் உள்ளான மனிதனுக்குள் என்னை அனுமதிக்க வேண்டும்'' என்று கூறிக் கொண்டிருந்தார்.

இயேசுவின் இந்தச் செய்தியானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தது போலவே இன்றைக்கும் அதிர்ச்சியூட்டுவதாகவும் பயமுறுத்து வதாகவும் உள்ளது. இன்னமும் அவர் தம்முடைய பின்பற்றாளர்களாக இருக்க விரும்புபவர்களுடன் ஒரு சாதாரணமான உறவு கொண்டிருப்ப தென்பதைப் புறக்கணிக்கின்றார். இன்னமும் அவர் நம்முடன், நமது நாளங்களில் இரத்தம் போல, நமது நுரையீரல்களில் காற்று போல, அல்லது நமது எலும்புகளில் ஊனைப் போல நெருக்கமாயிருக்க விரும்புகின்றார். நமது வங்கிக் கணக்குகள், நமது திருமணங்கள் அல்லது நமது பேராவல்கள் போன்ற எவையாயிருப்பினும் நமது வாழ்வின் இரகசியமான இடங்களில் கூட தாம் அனுமதிக்கப்பட வேண்டும் என்று அவர் வேண்டிக் கேட்கின்றார். ஜீவனுள்ள உணவு என்ற வகையில், அவர் நம்முடன் 100 சதவிகிதத்திற்கும் குறையாத நெருங்கிய உறவுமுறையை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றார்.

## பதில் (6:60-69)

### கூட்டம் (6:60-66)

இயேசுவின் செய்தியைக் கேட்ட கூட்டமானது தொடர்ந்து முறுமுறுத்தது. இந்த போதனைகள் "கடினமானவை" (6:60) என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டனர். அந்த உபதேசங்கள் கடினமானவை களாயிருந்த காரணத்தினால், அவர்கள் இருதயங்கள் கடினமாயின. பிறகு வேதாகமத்தில் அதிகம் கவலைக்குரிய வசனங்களில் ஒன்றில் யோவான், "அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடன் கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (6:66) என்று பதிவு செய்தார். கலிலேயாவில் நடைபெற்ற இயேசுவின் வெளியரங்கமான ஊழியத்தில் இது திருப்பு முனையாக இருந்தது. அவர் ஐயாயிரம் பேருக்கு உணவளித்த நாளில் மகிழ்வுடன் அனுபவித்த புகழ்ச்சியையும் ஆதரவையும் மீண்டும் ஒருபோதும் அவர் மகிழ்வுடன் அனுபவித்ததில்லை. மக்கள் கூட்டம் வந்திருந்தது, அவர்கள் வானத்திலிருந்து வந்த உணவை உண்டனர், அவர்கள் உணர்வெழுச்சியுள்ளவர்கள் ஆகியிருந்தனர், அவர்கள் இயேசுவின் கடினமான போதனையைக் கேட்டிருந்தனர், மற்றும் கடைசியில் அவர்கள் அப்புறமாய் நடந்து போயிருந்தனர். அவர்கள் இயேசுவைத் தங்கள் ராஜாவாக ஏற்றுக் கொள்ள விருப்பமாயிருந்தனர்,

ஆனால் அவரை அவர்கள் தங்கள் கர்த்தராக ஏற்றுக் கொள்ள விருப்பமற்றிருந்தனர்.

### *பன்னிருவர் (6:67-69)*

ஏமாற்றமும் கோபமும் அடைந்த மக்கள் தொடர்ந்து இயேசுவை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கையில் அவர் பன்னிருவர் பக்கம் திரும்பி, அவர்களும் போய்விடப் போகின்றார்களா என்று கேட்டார். பேதுரு, தாம் சில வேளைகளில் செய்தது போல தாமே உணர்ந்திருந்ததை விட மிக அதிகம் அறிவுக் கூர்மையுடன் பதில் கூறினார். அவர், "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" (6:68) என்று கூறினார். எஞ்சியிருந்த மற்றவர்கள் போலவே பேதுருவும் மற்ற பதினொருவரும் அநேகமாகக் குழப்பம் அடைந்தும் ஏமாற்றமடைந்தும் இருந்திருக்கலாம், ஆனால் இயேசுவே தங்களின் மிகச் சிறந்த நம்பிக்கையாக நிலைத்திருந்தார் என்பதை அவர்கள் உணர்ந்தறிந்தனர். அவர் தங்களைக் கை விட்டு விட்டார் என்று அவர்கள் நினைத்தாலும், இன்னமும் அவரையே நம்பினார்கள். மற்றவர்கள் விட்டுச் செல்ல, அவர்கள் அங்கேயே இருந்த நிலையில், அந்தப் பன்னிருவரும் உண்மையான, வேதாகம ரீதியான விசுவாசத்தை நோக்கி இன்னொரு அடியெடுத்து வைப்பதை நாம் காண்கின்றோம்.

ஃபிரான்சீஸ் ஸ்கேஃபர்[2] என்பவர், இவ்வசனத்தில் பேதுரு கூறிய விஷயமானது மக்களை தேவனுக்குள் விசுவாசத்திற்குக் கொண்டு வருவதற்கான திறவுகோலாக உள்ளது என்று நம்பினார். ஸ்கேஃபர் தேவனைப் பற்றி அவிசுவாசிகளிடம் பேசும் பொழுது, விசுவாசத்திற்கு மாற்றுகளை நோக்கும்படி அவர்களை அவர் வலியுறுத்துவார். அவர்கள் முழுமையான சரி அல்லது தவறு இல்லாத, நம்பிக்கையில்லாத மற்றும் மனித மாண்புக்கு அடிப்படை எதுவும் இல்லாத உலகத்தில் வாழத் தயாராயிருக்கின்றார்களா? என்று அவர் கேட்டார். இப்படிப்பட்ட அர்த்தமற்ற தன்மைகளுடன் மனிதர்கள் வாழ முடியாது என்பதில் அவர் நம்பிக்கையாய் இருந்தார். மக்களைப் பேதுருவின் உணர்ந்தறிதலுக்குத் திருப்பிக் கொண்டு வருவதற்காக அவர்களை ஸ்கேஃபர், நம்பிக்கையின்மையின் விளிம்புக்கு வழி நடத்துவார்: "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே."

## *முடிவுரை*

இந்தப் பாடத்தை முடிப்பதற்கு முன் நாம் இன்னும் ஒரு பதில்செயலைக் கவனிப்பது அவசியமாக உள்ளது: கூட்டத்தாருக்கு இயேசுவின் பதில்செயல். தேவனுடைய நித்திய வார்த்தையானது வந்து "நம்மிடையே குடி கொள்வதற்காக" எவ்விதத்தில் வீரார்ந்த பயணம் செய்தது என்பதை யோவான் சுவிசேஷமானது முதல் அத்தியாயத்தில் இருந்தே விளக்குகின்றது. அவர் மனித குலத்தைத் தேடி வந்தார். தம்முடைய உபதேசத்தை விட்டு கூட்டத்தார் விலகிச் சென்ற பொழுது

அவர் எவ்விதம் பதில்செயல் செய்தார்? இயேசுவைக்காட்டிலும் அதிகமாக எவரொருவரும் மக்கள் மீட்கப்பட வேண்டும் என்று ஒருபொழுதும் விரும்பியதில்லை, இருப்பினும், அவர் நின்று அவர்கள் செல்லுவதைக் கவனிக்கச் சித்தமாயிருந்தார். அவருடைய இருதயம் உடைந்து போயிருக்கும் என்று நான் உறுதியாய்க் கூறுவேன், ஆனால் அவர், அவர்களின் பின்னே ஓடவில்லை, திரும்பி வரும்படி அவர்களிடம் கெஞ்சவில்லை, அவர்கள் தம்முடன் இருந்தால் தமது செய்தியை இன்னும் மென்மையாக அளிப்பதாகக் கூறவில்லை! அவர் உயிருள்ள உணவாக இருந்தார், இருக்கின்றார், மற்றும் நாம் ஒவ்வொருவரும் "மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுதல்" (6:53) என்பதைச் செய்வதைக் காட்டிலும் குறைவான ஒன்றை அவர் ஏற்றுக் கொள்வதில்லை. இது ஒரு கடினமான செய்தியாகவே உள்ளது, ஆனால் இது ஒன்றுதான் வாழ்வு தரும் செய்தியாக உள்ளது!

இயேசு தம்மைப் பின்பற்ற இந்தத் தொடக்க காலப் பின்பற்றாளர்கள் கடினமான தேர்வு செய்தலை ஏற்படுத்தும்படி அழைத்ததைப் போலவே, இன்றும் அவர் நம்மை அழைக்கின்றார். அவரின்றி நாம் முற்றிலும் இழந்து போகப்படுகின்றோம் என்ற கடினமான செய்தியை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும், மற்றும் நமது விசுவாசப் பயணமானது அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி நம்மை வழிநடத்த வேண்டும். இந்தப் பயணமானது விசுவாசம் (நமது வாழ்வில் இயேசுவை நம்புதல்), மனந்திரும்புதல் (நமது பாவம் நிறைந்த வழிகளில் இருந்து திரும்புதல்), மற்றும் ஞானஸ்நானம் ("நீரினாலும் ஆவியினாலும் [மீண்டும்] பிறத்தல்"; யோவா. 3:5) ஆகியவற்றுடன் தொடங்குகின்றது. பிறகு, யோவான் சுவிசேஷத்தின் வார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால், அவர் நம்மில் நிலைத்திருப்பது போல நாம் அவரில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும் (யோவா. 6:56; 15:4-7).

---

குறிப்புகள்

[1]Told in Leon Morris, *Expository Reflections on the Gospel of John* (Grand Rapids, Mich.: Baker Book House, 1988), 175. [2]Francis A. Schaeffer, *The God Who Is There* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1968), 126-31.

# ''ஒரு பிரிவினை எழுந்தது''
# (7:1–53)

இயேசு, மாறுபட்ட பல இயற்பெயர்களினால் அறியப்பட்டுள்ளார். அவற்றில் பெரும்பான்மையானவைகள், "பெரும் சிறப்பு வாய்ந்த கிறிஸ்து," "ஒப்புயர்வற்ற கிறிஸ்து" என்பது போன்ற அழகு நிறைந்த, வசீகரிக்கும் பெயர்களாகவோ அல்லது வில்லியம் பார்க்ளேயின் சொல் கூற்றை பயன்படுத்தினால், "எல்லா நிறைவுமுள்ள கிறிஸ்து" என்பதாகவே உள்ளது. இருப்பினும், இயேசுவைப் பற்றிய மற்ற சித்தரிப்புகளும் இதே போன்று உண்மையும் முக்கியத்துவமும் உள்ளவைகளாய் இருக்கின்றன. அவர், "தர்க்கத்திற்குரிய கிறிஸ்து,'' ''பிரிக்கின்ற கிறிஸ்து'' அல்லது "எதிரெதிர் கொள்கையிலான கிறிஸ்து" என்றும் அழைக்கப்பட முடியும், ஏனென்றால் அவர் சென்ற இடங்களில் எல்லாம் அவர், வலிவான பதில்செயல்களுக்கும் மாபெரும் விவாதத்திற்கும் மூல காரணமாக இருந்தார்.

யோவான் 7ஐ நாம் அடைகின்ற வேளையில், இயேசுவின் அடையாளத் தன்மை பற்றிக் குறிப்பிடத் தக்க ஆதாரத்தை நாம் எதிர்கொள்ளுகின்றோம். நாம் ஏற்கனவே யோவான் ஸ்நானனின் சாட்சியம், தண்ணீரைத் திராட்ச இரசமாக்குதல், தேவாலயத்தைச் சுத்திகரித்தல், சமாரியாவில் எழுச்சி, ராஜாவின் மனுஷனுடைய மகன் மற்றும் நடக்க முடியாதிருந்த மனிதன் ஆகிய இருவரும் குணமாக்கப் படுதல், ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல், மற்றும் ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கம் ஆகியவற்றைக் கண்டுள்ளோம். இந்தத் தகவல்களை வைத்துக் கொண்டு நாம் என்ன செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம்? அவருடைய உரிமைகோருதல்களைக் கேட்ட கூட்டத்தார் எவ்விதம் பதில் செயல் செய்தனர் என்பதை நாம் கவனிக்க அனுமதிப்பதன் மூலம் "இயேசு யாராயிருக்கின்றார்?'' என்ற கேள்வியைப் பற்றிக் கொள்வதற்கு அதிகாரம் 7 மற்றும் 8 ஆகியவை உதவுகின்றன. சிலர் அவரில் விசுவாசம் கொண்டனர், சிலர் விசுவாசம் கொள்ளாது இருந்தனர், மற்றும் சிலர் அவரைக் கொல்ல விரும்பினர்.

கூடாரப் பண்டிகைக் காலமானது சமீபித்துக் கொண்டிருக்கையில் இயேசு கலிலேயாவில் இருந்த நிகழ்ச்சியுடன் அதிகாரம் 7 தொடங்கு கின்றது. இந்தப் பண்டிகையானது பஸ்கா பண்டிகையைப் போல அவ்வளவாய்க் கிறிஸ்தவர்களுக்குப் பழக்கமற்றதாக இருப்பினும், இயேசுவின் நாட்களில், இது யூதர்களுக்கு மாபெரும் முக்கியத்துவம் கொண்டதாக இருந்தது. ''ஒன்றுகூடுதலின் பண்டிகை'' அல்லது ''கூடாரங்களின் பண்டிகை'' என்றும் அழைக்கப்பட்டிருந்த இந்தப்

பண்டிகையானது யூதர்களின் மாபெரும் மூன்று வருடாந்தரப் பண்டிகைகளில் ஒன்றாக இருந்தது. இது பஸ்காவுக்குச் சுமார் ஆறு மாதங்களுக்குப் பின் அக்டோபர் மாத மத்தியில் நடைபெற்றது. இந்தப் பண்டிகையின் போது மக்கள், கிளைகளால் பின்னப்பட்ட (தற்காலிக) வசிப்பிடங்களைக் கட்டி, ஒரு வாரமளவும் ஒவ்வொரு இரவிலும் அவ்வெளியிருப்பிடத்தில் உறங்குவார்கள். இது, அவர்களின் முன்னோர்கள் வனாந்தரத்தில் அலைந்த பொழுது, நட்சத்திரங்களுக்கடியில் உறங்கினர் என்பதை அவர்களுக்கு நினைவூட்ட உதவிற்று. இது அறுவடையைத் தொடர்ந்து வந்ததால், பயிர்கள் நன்கு விளைந்ததற்காக நன்றி செலுத்துதலுடனும் இது இணைக்கப்பட்டிருந்தது. கூடாரங்களின் பண்டிகை என்பது, கொண்டாட்டத்தின் காலமாயிருந்தது, மற்றும் யூதச் சிறுவர் சிறுமியருக்கு இது அநேகமாக மிகவும் பிரியமான வேளையாக இருந்தது. இதை குட்ஸ்பீட் அவர்கள், "யூதரின் முகாமிடும் பண்டிகை"[1] என்று மொழி பெயர்த்தார்.

அந்தப் பண்டிகை வேளை சமீபித்திருக்கையில் நாடெங்கிலும் இருந்து மக்கள் எருசலேமை நோக்கிப் பயணம் தொடங்கினர். இயேசுவின் சகோதரர்கள் அவரிடம், "... உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும்" (7:4) என்று வற்புறுத்தியதன் மூலம் அவரை அப்பண்டிகையில் கலந்து கொள்ளும்படி ஏவினார்கள். "அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால்" (7:5) இவ்விதமாகப் பழித்துரைத்தார்கள் என்றே தோன்றுகிறது. அவர்கள், "உம்மை இந்த நாட்டுப்புறத்து மக்கள் பின்பற்றிச் சுற்றித் திரிகின்றதால் நீர் உம்மையே ஒரு சிறப்பான மனிதர் என்று நினைக்கின்றீர். நீர் ஏன் இன்னும் அறிவுத் திறன் மிகுந்த மக்களுள்ள இடமாகிய எருசலேம் என்ற பெரிய நகருக்குச் செல்லாதிருக்கின்றீர்? அப்பொழுது (அங்கு) உம்மை யாராவது பின்பற்றுவார்களா என்று பாரும்" என்றே அர்த்தப்படுத்தினார்கள். அவர்கள் இன்னும் பூமிக்குரிய வகையிலேயே சிந்தித்துக் கொண்டு, இயேசுவை அடிப்படையில் ஒரு அரசியல்வாதியாகவே கண்ணோக்கினர். இதற்கு இயேசுவின் முதல் பதில்செயலானது கலிலேயாவிலேயே தங்கியிருந்து, பண்டிக்கைக்குச் செல்லாமல் இருந்து விடுவதாகவே இருந்தது. அவர் எருசலேமில் தம்முடைய வாழ்வு அபாயத்தில் இருந்ததை அறிந்திருந்தார் (5:18; 7:1) மற்றும் பிதாவினுடைய கால அட்டவணை தவிர வேறு எதையும் இயக்க மறுத்தார் (7:6, 8, 30). இதன் விளைவாக, அவர் கலிலேயாவிலேயே தங்கியிருந்து, தம்முடைய சகோதரர்களைப் பண்டிகைக்கு முன்னதாகச் செல்லும்படி அனுமதித்தார்.

இயேசுவின் சகோதரர்கள் புறப்பட்டுச் சென்ற பிறகு, இயேசு தாமே பண்டிகைக்குச் சென்றார், ஆனால் அவருடைய சகோதரர்கள் ஆலோசனை கூறியிருந்த வழி வகையில் அவர் செல்லவில்லை. அவர் அமைதியாக எருசலேம் சென்று, தம் அடையாளத்தை இரகசியமாய் வைத்துக் கொண்டார்.

## “எனது போதனைகள் மேலிருந்து வருகின்றவைகளாய் உள்ளன”

யோவான் தமது சுவிசேஷத்தின் இவ்விடத்தில், கூடாரங்களின் பண்டிகையின் போது இயேசுவின் போதனைகளுக்குக் கூட்டத்தார் எவ்விதத்தில் பதில்செயல் செய்தார்கள் என்பதன் மீது கவனம் செலுத்தத் தொடங்கினார். இயேசு அடையாளம் காணப்படாதவராக எருசலேம் நகரில் சுற்றி வந்து, நாசரேத்தூர் இயேசுவைப் பற்றிய சூடான விவாதங்களைக் கவனிப்பதற்காக நின்றிருந்ததை நாம் சித்தரிக்க முடியும். அதே வேளையில், அவருடன் இன்னொரு வாக்குவாதம் எழுந்து விடுமோ என்ற எதிர்பார்ப்புடன் யூதத் தலைவர்கள், அவருடைய வருகைக்காகப் பயம் நிறைந்த வகையில் காத்துக் கொண்டிருந்தார்கள். இயேசுவைப் பற்றிய கருத்தினால் கூட்டம் தங்களுக்குள்ளே பிரிவு பட்டிருந்தது. மக்களில் சிலர், “அவர் நல்லவர்” என்று கூற, மற்றவர்கள் “அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன்” (7:12) என்று வலியுறுத்தினார்கள். இந்த விவாதமானது பயம் நிறைந்த வகையில் கிசுகிசுக்கப்பட்டது, ஏனென்றால் மக்கள், அதிகாரமிக்க தங்களின் தலைவர்களால் பயமுறுத்தப்பட்டிருந்தார்கள். இயேசு மரிக்க வேண்டும் என்றும், அவரை ஆதரிப்பவர்களுக்கும் அதே முடிவுதான் ஏற்படும் என்றும் அதிகாரம் நிறைந்த மக்கள் விரும்பியதாக வார்த்தையானது நகரம் முழுவதிலும் பரவியிருந்தது!

பாதிப் பண்டிகையான போது, ஒரு கூட்டத்தார் கூடியிருந்த தேவாலய இடத்திற்கு இயேசு சென்று, போதிக்கத் தொடங்கினார். அவரது ஞானத்தைக் கண்டு திகைப்படைந்த யூதத் தலைவர்கள், “இவர் கல்லாதவராயிருந்தும்” (7:15) இவ்வளவு ஞானமுடையவராயிருக்கிறாரே என்று வியப்படைந்தார்கள்.[2] போதனைக்கு ஆதார மூலம் தாமல்ல, ஆனால் அது தம்மை அனுப்பியவரிடமிருந்துதான் வருகின்றது என்று இயேசு வலியுறுத்தினார். மேலும் இயேசு தம்முடைய உரையைக் கேட்டவர்களிடத்தில், பிதாவின் சித்தத்தின்படி செய்ய விரும்புகின்றவர் எவரும், தம்முடைய உபதேசம் உண்மையானதா அல்லவா என்று தீர்மானிக்கக் கூடியவர்களாயிருப்பார்கள் என்றும் உறுதிப்படுத்தினார் (7:16-19): “இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான் ...”

கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசம் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள உறவானது ஒரு இன்றியமையாத தொடர்பு முறையாக உள்ளது. ஒரு எழுத்தாளர் பின்வருமாறு கூறினார்: “விசுவாசிக்கிறவரே கீழ்ப்படிகின்றார், கீழ்ப்படிகின்றவரே விசுவாசிக்கின்றார்.”[3] இந்த சத்தியமானது “நம்பி கீழ்ப்படியுங்கள்” என்ற பாடலில் அழகு மிக்க வகையில் விளக்கப் படுகின்றது:

நம்பி கீழ்ப்படிந்தே,
திருப்பாதத்திலே,
நம்மை முற்றிலும் ஒப்புவிப்போம்,
பெரு நன்மை ஈவார்,
அபிஷேகஞ் செய்வார்,
தேவ ஆவியைப் பெற்றுக்
கொள்வோம்.[4]

தாழ்மையும் கீழ்ப்படிதலும் உள்ள ஆவியானது நம்மை விசுவாசத்திற்கு வழி நடத்துவது போலவே, கர்வமும் முரட்டுத்தனமும் உள்ள ஆவியானது தேவனை நாம் புறக்கணிக்கவோ அல்லது கண்டு கொள்ளாதிருக்கவோ காரணமாகி விடுகின்றது என்று இயேசு அறிவித்தார்.

கூட்டத்திலிருந்த சிலர் இயேசுவைக் கொலை செய்யக் காத்திருந்ததால் அவர்களை அவர் கடிந்து கொண்ட போது, அவர்கள், அப்படிப்பட்ட நோக்கம் கொண்டிருந்ததை மறுத்து, இயேசு ஒரு அசுத்த ஆவியைக் கொண்டிருந்தார் என்று அறிவித்தனர் (7:20). அவர்கள் தங்களின் சொந்த வழிமுறையில், "உனக்குப் பைத்தியம் பிடித்துள்ளது!" என்று கூறினார்கள். இருந்த போதிலும் இயேசு அவர்களுக்கெதிரான தம்முடைய குற்றச் சாட்டில் தொடர்ந்து நிலை நின்று, தாம் ஒரு நடக்க முடியாதிருந்த மனிதனைக் குணமாக்கியதைக் குறித்துக் குறிப்பிடச் சென்றார்.[5] இந்த நிகழ்ச்சியே எருசலேமில் இருந்த யூதத் தலைவர்கள் அவரைக் கொல்லும்படி விரும்பச் செய்தது (7:21-24).

## "நான் வானத்திலிருந்து வந்திருக்கின்றேன்"

நேரிடையான எதிர்ப்பு தொடர்ந்த வேளையில் கூட்டத்தாரின் குழப்பம் அதிகமாய் வளர்ந்தது. இவ்வளவு அதிகமாய்க் கூறப்பட்ட இயேசுவானவர் தேவாலயத்தில் வெளியரங்கமாய்ப் போதிக்க அனு மதிக்கப்பட்டது பற்றி மக்களில் சிலர் பெரும் திகைப்புக்குள்ளாயினர் (7:25, 26). இயேசுவை நிறுத்த யூதத்தலைவர்கள் தவறியிருந்த செயலானது, இத்தலைவர்கள் அநேகமாக இயேசுவே தீர்க்கதரிசியானவராக அல்லது மேசியாவாக இருப்பார் என்று முடிவு செய்து விட்டார்களோ என்று சிலர் வியப்படையக் காரணமாயிற்று. மற்றவர்களோ, இயேசு நாசரேத்தூரில் இருந்து வந்தவர் (7:27) என்ற உண்மையினால் கவலைப்பட்டனர். மேசியா எங்கிருந்து வந்தார் என்பதை ஒருவரும் அறியமாட்டார்கள் என்று அவர்கள் கருத்துக் கொண்டிருந்தனர். இயேசு பிதாவினிடத்திலிருந்து வந்தவரா அல்லது பிசாசினிடத்திலிருந்து வந்தவரா என்பதை மக்கள் முடிவு செய்ய முயற்சித்த பொழுது மீண்டும், மக்கள் கூட்டத்திடையே குழப்பமும் போராட்டமும் ஏற்பட்டதை நாம் காண்கின்றோம்.

அடுத்து பதிவு செய்யப்பட்ட கூற்றானது தேவாலயத்தில் இருந்த கூட்டத்தாரால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலாக இருந்தது. இயேசு தாம் பரலோகத்திலிருக்கும் பிதாவினால் அனுப்பப்பட்டிருந்தவரென்று தம்மைச் சுற்றிலும் இருந்தவர்களிடம் "சத்தமிட்டு" கூறினார் (7:28, 29):

“... நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேனென்றும் அறிவீர்கள்; நான் என் சுயமாய் வரவில்லை, என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர், அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள் ...”

மீண்டும் ஒருமுறை இயேசு பலரைக் குற்ற உணர்வடையச் செய்து, மற்றும் தாம் உரைப்பது உண்மையா அல்லவா என்று ஒவ்வொருவரையும் முடிவு செய்யும்படி பலவந்தப்படுத்தி, மக்களை அதிர்ச்சியடையச் செய்தார். இயேசு யார் என்பது பற்றிய இவ்விதமான தைரியமான கூற்றுக்களைக் கேட்டிருந்த எவரொருவரும் இயேசு என்ற இம்மனிதரைக் குறித்து ஒன்றும் நினையாதிருக்கக் கூடாதிருந்தது!

## “என்னிடத்தில் வந்து பானம் பண்ணுங்கள்”

தேவாலயத்தில் இயேசுவின் இந்த வார்த்தைகள் யூதத்தலைவர்களைப் பொறுத்தமட்டில் அபாயமான தேவதூஷணம் என்பதற்கு ஏதொன்றும் குறைந்ததாக இருக்கவில்லை. இயேசு தம்மைத் தேவகுமாரன் என்று தெளிவாய் உரிமைகோரியதை இந்த மனிதர்கள் புரிந்து கொண்டனர். இதன் விளைவாக, அவர்கள் அவரைக் கைது செய்ய முயன்றனர். இருப்பினும், அவர்கள் அவ்வாறு செய்ய முடியாது போயிற்று, மற்றும் இயேசு, பிதாவினுடைய கால அட்டவணை தவிர வேறு எதையும் பின்பற்ற மறுத்தார் என்பதை யோவானின் கூற்று மீண்டும் நமக்கு நினைவூட்டுகின்றது (7:30). அதிகம் அதிகமாக மக்கள் இயேசுவில் விசுவாசம் கொள்ளத் தொடங்கிய பொழுது, தலைவர்களின் மிக மோசமான பயமானது உய்த்துரைக்கப்பட்டது (7:31). மக்கள் தங்களின் வளர்ச்சி பெறும் விசுவாசத்தை முணுமுணுத்ததைப் பரிசேயர்கள் கேட்ட பொழுது, இயேசுவைக் கைது செய்ய சேவகர்களை அனுப்பினார்கள் (7:32). மீண்டும், இயேசு தயாராகும் வரையிலும், அவரை அவர்களால் கைது செய்ய முடியாமல் போயிற்று - மற்றும், இன்னும் கொஞ்சக் காலம் இருந்தது (7:33-36).

பண்டிகையின் கடைசி நாளில், இயேசு மீண்டும் எழுந்து நின்று, தாம் மேசியாவாக இருப்பதாக உரிமைகோருதல்களை வெளியரங்கமாக ஏற்படுத்தினார். இந்த வேளையில் அவர் தம்மைப் பற்றி, ஜீவதண்ணீரின் மூல ஆதாரம் என்ற வகையில் பேசினார். கூடாரப்பண்டிகையின் ஒரு பகுதியாக நடைபெற்ற புகழ் மிக்க சடங்காச்சாரம் ஒன்றின் போது அவர் இந்த உரிமைகோருதலை ஏற்படுத்தியிருக்கலாம். ஒவ்வொரு நாளும் ஒரு ஆசாரியர் சீலோவாம் குளத்திற்குச் சென்று, பொற்குடம் ஒன்றை தண்ணீரினால் நிரப்பி, அதை எடுத்துக் கொண்டு, அணி வகுப்பு போன்ற ஊர்வலமாக ஆலயத்திற்குத் திரும்புவார். அங்கு அந்தத் தண்ணீரானது தேவனுக்கு ஸ்தோத்திரபலியாக ஊற்றப்படும்.[6]

இந்த மகிழ்ச்சி மிகுந்த கொண்டாட்டம் வளர்ச்சியுற்றிருக்கையில், இயேசு “ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக் கடவன். வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள

*நதிகள் ஓடும்" (7:37, 38) என்று உரைத்தார். இந்த இடத்தில் இயேசுவைப் பற்றி யோவான் எழுதிய விஷயமும் சம அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது: "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்த படியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" (7:39).*

*பண்டிகையின் போது, இயேசு தம்முடைய போதனையை வலிவு படுத்தியிருந்தபடியால், அதைக் கேட்டவர்களின் பதில்செயலும் அதிகம் வலுவானதாயிற்று. பண்டிகையின் கடைசியில், மக்களில் பலர் "மெய்யாகவே இவர் தீர்க்கதரிசியானவர்" என்றார்கள், மற்றவர்கள் "இவர் கிறிஸ்து'' என்றார்கள் (7:40, 41). அந்த வேளையில் அவர்களின் உள்ளார்வமானது, கலிலேயாவில் அப்பங்களையும் மீன்களையும் வயிறாற உண்டிருந்த ஐயாயிரம் பேரின் வைராக்கியத்திற்கு இணையானதாக இருந்தது (6:14). இயேசு தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டவர் என்பதை ஏற்றுக் கொள்ள இம்மக்கள் தயாராக இருந்தார்கள். இயேசு கூறியவற்றை மற்றவர்கள் மறுத்தார்கள், மற்றும் சிலர் அவர் கைதாவதைத் தொடர்ந்து நாடுமளவுக்குப் பெரும் கோபம் கொண்டார்கள். இந்த முழு அதிகாரத்தை யும் தொகுத்துரைப்பதாகக் காணப்படுகின்ற ஒரு ஆய்வுக் கூற்றில், யோவான் "இவ்விதமாக அவரைக் குறித்து ஜனங்களுக்குள்ளே பிரிவினை யுண்டாயிற்று" (7:43) என்று எழுதினார்.*

*தேவாலயத்து சேவகர்கள் வெறுங்கையராய் பிரதான ஆசாரியர்களிடம் திரும்பி வந்தார்கள். அவர்களும் கூட அப்பொழுது இயேசுவைப் பற்றியும் அவர் ஏற்படுத்தியிருந்த பெருவியப்புக்குரிய ஞானமான கூற்றுக்கள் பற்றியும் ஆழ்ந்த மரியாதை கொண்டிருந்தார்கள். அவர்கள், "அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" (7:46) என்று அறிக்கை தந்தார்கள். தலைவர்கள் இதைக் கேட்ட பொழுது, அவர்கள் பெரும் கோபத்தில் வெடித்தார்கள். பிரதான ஆசாரியர்களும் பரிசேயர் களும் அந்தச் சேவர்களைக் கடிந்து கொண்டு, அறியாமையும் முட்டாள் தனமும் கொண்ட மக்கள் மட்டுமே இயேசுவால் வஞ்சிக்கப்பட்டிருந்ததாக அவர்களிடத்தில் கூறினார்கள். ''இல்லை!'' என்பதை ஒரு பதிலாக எதிர்பார்த்த தலைவர்கள் அந்த சேவர்களிடம், "நீங்களும் வஞ்சிக்கப் பட்டீர்களா? அதிகாரிகளிலாவது, பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?" (7:47, 48) என்று கேட்டார்கள். இதன் பிறகு, யோவான் சுவிசேஷத்தில் நிக்கொதேமு தமது இரண்டாவது தோற்றத்தை ஏற்படுத்துவதை நாம் காண்கின்றோம்.*

*யூதர்களின் ஆலோசனைச் சங்க உறுப்பினர் என்ற வகையில் நிக்கொதேமு முன்வந்து, ஒரு மனிதன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட் படுத்துவதை நியாயப்பிரமாணம் கண்டனம் செய்கின்றது என்பதைத் தமது தோழர்களுக்கு நினைவூட்டினார் (7:50, 51). இதனை இயேசுவின் மீது கொண்ட விசுவாச அறிக்கை என்று தகுதிப்படுத்த முடியாது, ஆனால் இது முன்பு இரவு வேளையில் இயேசுவைக் காண வந்த, பயத்துடன் தேவனைத் தேடுபவராகிய இவருக்கு ஒரு தைரியமான அடிவைப்பாக இருந்தது.*

நிக்கொதேமு இயேசுவில் கொண்டிருந்த விசுவாசத்தில் வளர்ச்சி யொன்றைப் பெற்றிருந்தார் என்பது தெளிவு; ஆனால் இன்னமும் அவர் ஒரு இரகசிய சீஷராகவே இருந்தார், ஏனென்றால் அவர் யூதத் தலைவர்களுக்குப் பயப்பட்டார். நிக்கொதேமுவின் விமர்சனத்திற்கு அவர்களின் பதிலானது விரைவானதாகவும் உக்கிரமானதாகவும் இருந்தது: "நீரும் கலிலேயனோ? ..." (7:52). அவர்கள் தர்க்கம் செய்யவில்லை, அவர்கள் பதில்செயல் செய்தார்கள். அவர்கள் சத்தியத்தைக் கண்டறிய விரும்ப வில்லை; இயேசுவின் சார்பாக வாதாடத் தைரியமாய் வருகின்ற எவரொருவரையும் அவர்கள் வாயை அடைக்க விரும்பினார்கள். அவர்களுடைய கேள்வியானது, "நீர் ஒரு மூடனா, ஒரு முட்டாளா, மத எதிர்ப்பாளரா?'' என்று கேட்பதன் ஒரு வழிமுறையாக இருந்தது. நிக்கொதேமுவின் மறுதோற்றமானது, முரண்பாடுள்ள மற்றும் பிரிவினை உண்டாக்கும் உருவகமாக இயேசு முன் வைக்கப்பட்டிருக்கும் அதிகாரத் திற்கு ஏற்புடைய ஒரு முடிவாகச் செயல்படுகின்றது. சிறுமை அல்லது பெருமையின் காரணமாக, பெரும்பான்மையான பிரிவினைவாதிகள் அப்படிப்பட்ட வழிமுறையைக் கொண்டவர்களாகவே உள்ளனர், ஆனால் இயேசுவைப் பொறுத்தமட்டில் விஷயம் அதுவல்ல. இந்த சுவிசேஷத்தின் தொடக்கத்திலிருந்தே, சத்தியத்தின் அடிப்படையிலான ஒரு கடினமான தேர்வு செய்தலுக்கு மக்களை இயேசு நிர்ப்பந்தம் செய்து கொண்டிருந்தார் (1:11, 12) என்று யோவான் அறிவித்தார். கடைசியில், மக்கள் அவரை அன்புகூருகின்றனர் அல்லது அவரை வெறுக்கின்றனர் (7:7). தீர்மான மின்மை என்ற நாசகரமான வசதி வாய்ப்பில் நாம் இருக்கும்படி அனுமதிக்க இயேசு மறுக்கின்றார்.

## முடிவுரை

அமெரிக்க வரலாற்றில், தைரியமான முடிவெடுக்கும் தன்மைக்கு முக்கியமான எடுத்துக்காட்டாக நிலை நிற்பது அலோமோவின் போர் ஆகும். 1836ல், சான்ட்டா அன்னா என்ற தளபதியினால் வழி நடத்தப்பட்ட ஆறாயிரம் போர் வீரர்களைக் கொண்ட மெக்சிக்கப் படைகளுக்கு எதிராக இருநூறுக்கும் குறைவான மனிதர்களைக் கொண்ட ஒரு சிறு குழுவானது டெக்ஸாஸின் சான் அன்டோனியே என்ற இடத்தில் ஒரு சிறு கொள்கைத் திட்டத்தைத் தற்காத்து நின்றது. அவர்கள் சாத்தியமற்ற வாய்ப்புக்களுக்கு எதிராக இரு வாரங்கள் அலோமோவில் இருந்தனர். பின்பு, நிச்சயமான கடைசித் தாக்குதல் நடப்பதற்கு முந்திய மார்ச் 5ம் தேதி இரவன்று டெக்ஸாஸ்காரர்களின் தளபதியான வில்லியம் பேரட் ட்ரேவியஸ் என்பவர் தம் மனிதர்களை ஒரு கூட்டத்திற்கு அழைத்தார். அடுத்த நாளில், ஊடுருவுபவர்கள் உள் நுழைவார்கள் என்பதைத் தாம் அறிந்ததாகக் கூறிய அவர் தனது வாளை எடுத்து மண்ணின்மீது ஒரு கோடு வரைந்தார். அலோமோவை காக்க விரும்பி, உறுதியாய் நிலைத்திருப்பவர்கள் ஒவ்வொருவரும் அந்தக் கோட்டைத் தாண்டி வருமாறு அழைத்தார். ஒவ்வொருவராக அதைச் செய்தார்கள். வைக்கோல் மெத்தையில்

வியாதியாய்ப் படுத்திருந்த ஜிம் போவியும் அந்தக் கோட்டைத் தாண்டி நிற்குமாறு தன்னைத் தூக்கி செல்லுமாறு கேட்டுக் கொண்டார். 184 மனிதர்களில் ஒரே ஒருவர் மட்டும் கோட்டைத் தாண்டி வர மறுத்து விட்டார். அடுத்த நாளில் அலோமோவைப் பாதுகாக்க நின்ற அனைவரும் போரில் இறந்து போனார்கள். அந்த நாளில் கோட்டின் மீது நின்று கொண்டிருத்தல் என்று ஒன்றும் இல்லை! ஒரு முடிவானது எடுக்கப்பட வேண்டியதாய் இருந்தது.

கடந்த ஆண்டில், ஒரு சுவிசேஷக் கூட்டத்தில், கல்லூரியில் படிக்கும் இளம் மாணவர் ஒருவர், சுவிசேஷ அழைப்புக்குப் பதில்செயல் செய்தார். அவர் ஏற்படுத்திய கூற்றானது யோவான் 7ல் இருந்து வந்திருக்க முடியும். அவர் ஒரு அட்டையில், “நீண்ட காலமாக நான் வேலியிலேயே அமர்ந் திருக்கும்படி முயற்சி செய்து கொண்டிருந்தேன், கடைசியில் வேலியே இல்லை என்பதைக் கண்டறிந்தேன்” என்று எழுதினார். இயேசுவிடம் வருதல் என்ற விஷயத்தில் தீர்மானமின்றி வேலியின் மீது அமர்ந்திருத்தல் என்பதற்கு இடமே இல்லை. நீங்கள் முடிவு செய்துள்ளது அவர் சார்பாகவா அல்லது அவருக்கு எதிராகவா?

---

குறிப்புகள்

[1]*The Bible, an American Translation*, ed. J. M. Powis Smith and Edgar J. Goodspeed (Chicago: University of Chicago Press, 1939). [2]அப். 4:13ல், பேதுருவும் யோவானும் சனதெரீன் சங்கத்தின் முன்பாக நின்று பேசிய தைரியம் மற்றும் நம்பிக்கை குறித்து இதே விதமான விமர்சனம் ஏற்படுத்தப்பட்டது. [3]Dietrich Bonhoeffer, *The Cost of Discipleship* (New York: Macmillan Co., 1937), 69. [4]“Trust and Obey” by D. B. Towner, Music by J. H. Sammis. [5]யோவான் 5:1-18ஐக் காணவும். [6]R. K. Harrison, “Feast of Booths,” in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:535.

# “நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை” (8:1–11)

யோவான் சுவிசேஷம் முழுவதிலேயே, பல மக்களுக்குப் பிரியமான ஒரு வரலாறு அதிகாரம் 8ல் அடங்கியிருக்கலாம். இவ்வேதப் பாடப் பகுதியானது இயேசுவின் ஊழியத்தினுடைய இருதயத்தையும் ஆன்மாவை யும் பதினோரு சிறு வசனங்களில் சேர்க்கின்றதாக உள்ளது. ஒருவேளை, இது யோவான் சுவிசேஷத்தில் மூலப்பிரதியில் இராத ஒரு பாகமாய் இருப்பினும் கூட,[1] இயேசுவைப் பற்றிய மறக்க இயலாத ஒரு சித்தரிப்பை நமக்கு விட்டுச் செல்லக் கூடிய வல்லமை நிறைந்த வசனப் பகுதியாக இது உள்ளது.

## சிக்கலான சூழ்நிலையை இயேசு எவ்விதம் கையாண்டார் (8:1-9)

சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய கடைசி வாரத்தின்போது இயேசுவின் வழக்கமான செயலாகி விட்டிருந்த, அவர் ஒலிவ மலைக்குப் போன நிகழ்ச்சியுடன் இவ்வரலாறு தொடங்குகின்றது.[2] அடுத்த நாள் அதிகாலையில் அவர் எருசலேமுக்கு வந்து, தேவாலயத்தினுள் சென்றார். மக்கள் அவரைச் சூழ்ந்திருக்க, அவர் அமர்ந்து போதிக்கத் தொடங்கினார். இது நடந்து கொண்டிருந்த வேளையில், வேதபாரகர்களும் பரிசேயர் களும்,[3] விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்தனர். அந்தப் பெண்ணுக்குப் பரிவிரக்கமோ அல்லது அக்கறையோ காண்பிக்காமல் அவர்கள், “அவளை நடுவே நிறுத்தி”னார்கள் (8:3), அவள் வெளிப்படையான பழிச் சொல்லுக்கு உட்படும்படி அவளை நிறுத்தினார் கள். அந்தப் பெண்ணைக் கையாளுவதல்ல ஆனால் இயேசுவை வலையில் அகப்படுத்துவதே அவர்களின் முக்கிய எண்ணமாய் இருந்தது என்பது விரைவிலேயே தெளிவாயிற்று.

அவர்கள், “போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிபட்டாள். இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டு மென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக் கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர்?” (8:4, 5) என்று கேட்டார்கள். அவர்கள் மிகச் சரியான வலையை அமைத்து வைத்ததாக ஒரு கணம் நினைத்தார்கள்.

யூத ஆலோசனைச் சங்கமானது சாட்சியம் பற்றிக் கேட்பதில் மிகவும் கண்டிப்பானதாக இருந்தது. சந்தேகம் அல்லது வதந்தி அல்லது ஒரு ஆணும் பெண்ணும் ஒரு வீட்டினுள் நுழைதலைக் காணுதல் கூடப் போதுமானதாக இருந்ததில்லை. வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் கொண்டு வந்த, ஒரு நபருக்கெதிராக அவரை வீழ்த்தக் கூடிய இவ்வகையான குற்றச் சாட்டுகளுக்கு இவை ஏற்படுத்தப்பட்டு முன்பு, உண்மையில் விபசாரம் நடந்ததைக் கண்ணால் கண்ட சாட்சிகள் இருத்தல் என்பது இன்றியமையாததாக இருந்தது.

இயேசுவின் எதிராளிகள் தங்களுடைய காரியங்களை நன்றாய்ச் செய்திருந்தனர் மற்றும் அவர்கள் அவரை வலையில் அகப்படுத்தியிருந்ததில் நிச்சயமானவர்களாய் இருந்தனர். அந்தப் பெண்ணைக் கல்லெறிய வேண்டாம் என்று அவர் கூறினால், அவர் மோசேயின் நியாயப் பிரமாணத்தை மீறினவராகி விடமாட்டாரா?[4] மிக முக்கியமாக, இப்படிப் பட்ட ஒரு பதிலானது இயேசுவை பலவீனமானவர் மற்றும் நியாயப் பிரமாணத்திற்கு உண்மையற்றவர் என்று சித்தரிக்க வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் அனுமதிக்கும். இருப்பினும், அவர் இதற்கெதிரான முடிவை எடுத்து, "அவளைக் கல்லெறியுங்கள்!" என்று கூறியிருந்தால், இயேசு ஒரு புரட்சிக்காரர் என்ற குற்றச்சாட்டிற்கும், யூதர்கள் தண்டனை நிறைவேற்றுவதைத் தடை செய்யும் ரோமாபுரிச் சட்டத்திற்கு எதிர்ப்பைத் தூண்டுதல் என்ற குற்றச்சாட்டிற்கும் தம்மையே ஆளாக்கிக் கொண்டவராவார்.[5] இயேசு எவ்வகையில் பதில் அளித்தாலும் தாங்கள் அவரை அகப்படுத்தி விட்டதாக யூதத் தலைவர்கள் நினைத்தார்கள். இந்தத் திட்டமானது எவ்வளவு கூர்மதியுடையது என்பதை நாம் புரிந்து கொள்ளும் பொழுது மட்டுமே, இயேசு எவ்வளவு மதிநுட்பத்துடன் பதில் அளித்தார் என்று நாம் பாராட்டத் தொடங்க முடியும்.

அவர்களுடைய நோக்கங்கள் பொல்லாததாக இருந்தன என்பதை இயேசு அறிந்தார் (8:6). அவளுடன் விபசாரம் செய்த ஆண் எங்கே? விபசாரம் என்பது ஒரு நபர் மட்டும் தனியே செய்யக் கூடிய பாவம் அல்ல, இருப்பினும், ஒரு பெண் மட்டுமே இயேசுவிடம் கொண்டு வரப்பட்டாள். மோசேயின் சட்டம் கீழ்ப்படியப்படுகிறது என்று காண்பதை விட இயேசுவைச் சங்கடத்தில் ஆழ்த்துவதையே அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் செயல்படுத்தினார்கள். நீதியல்ல, அதிகாரம் என்பதே அவர்களின் பெரும் அக்கறையாய் இருந்தது.

### அவர் பதில் கூறவில்லை (வ. 6)

இயேசு தம்முடைய எதிர்ப்பாளர்களின் "பதில் அளிக்க முடியாத கேள்வியை" எதிர்கொண்ட பொழுது, முற்றிலும் ஒன்றும் கூறாததே அவருடைய முதலாவது பதில்செயலாய் இருந்தது! எல்லாருடைய கண்களும் இயேசுவை உற்று நோக்கிக் கொண்டிருக்க, அவர் கீழே குனிந்து, தம்முடைய விரலைப் பயன்படுத்தி, தரையிலே எழுதத் தொடங்கினார் (8:6). நீண்ட நொடிகளாக, முடக்கப்பட்ட அமைதியானது இயேசுவைச் சூழ்ந்திருக்க வேண்டும். அவர்களின் கேள்விக்கு அவர் பதில் அளிக்க மறுத்து

விட்டார். அவர் என்ன செய்து கொண்டிருந்தார்? அவர் மறுபடியும் எப்பொழுது மீண்டும் பேசுவார்? யூதத்தலைவர்களின் அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும்?

ஒன்றும் கூறாதிருப்பது என்பது சில வேளைகளில் மிகச் சிறந்த செயல்பாடாக உள்ளது. ஒன்றும் பதிலளிக்காதிருப்பது என்பது சில வேளைகளில், மிகச் சிறந்த சாத்தியமான பதிலாக உள்ளது. நீதிமொழிகள் 26:4, 5 பின்வருமாறு கூறுகின்றது:

> மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறு உத்தரவு கொடாதே;
> கொடுத்தால் நீயும் அவனைப் போலாவாய்.
> மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறு உத்தரவு கொடு;
> கொடாவிட்டால் அவன் தன் பார்வைக்கு ஞானியாயிருப்பான்.

முதலில் பார்க்கையில், இவ்விரு கூற்றுக்களும் ஒன்றுக்கொன்று முரண் பாட்டுள்ளது போலக் காணப்படுகின்றன. இருப்பினும், சற்று ஆழ்ந்து சிந்திக்கையில், மூடனுக்கு அவனது மதியீனத்தின்படி பதில் கொடுக்க வேண்டிய வேளை ஒன்றும், மற்றும் பதிலானது ஞானமற்றுப் போகக் கூடிய வேளை ஒன்றும் உள்ளது என்பதை நாம் உணர்ந்தறிகின்றோம். யோவான் 8ல் ஒரு பதில் என்பது ஞானமற்றதாக இருந்தது. இயேசுவின் வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவைகளாயிருப்பினும் அது ஒரு பொருட்டல்ல, உண்மையானது கேட்கப்பட முடியாததாக இருந்தது. கேள்வியானது திரிக்கப்பட்டது, அரசியல் உணர்வுகள் மிகவும் உயர்வாக ஓடின, மற்றும் எந்தப் பதிலினாலும் சத்தியம் என்பது அளிக்கப்பட்டிருக்க முடியாதிருந்தது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், இயேசு ஒன்றும் கூறாதிருந்தார்.

## பொதுக்கவனத்தை அவர்கள் மீது அவர் திருப்பினார் (வ. 7-9)

வேதபாரகரும் பரிசேயரும் தங்கள் கேள்விக்குப் பதில் அளிக்கும்படி தொடர்ந்து இயேசுவை வலியுறுத்தவே, கடைசியில் அவர் எழுந்து நின்று சில வார்த்தைகளைப் பேசினார், அந்த வார்த்தைகள் கடந்த ஈராயிரம் ஆண்டுகள் அளவாகக் கிறிஸ்தவர்களால் மீண்டும் கூறப்பட்டு வருகின்றன: “உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக் கடவன்” (8:7). பிறகு அவர் மீண்டும் குனிந்து தரையில் எழுதலானார். இயேசு அப்பொழுது பேசியிருந்த வார்த்தைகளின் வல்லமையை உணர்ந்தறியத் தொடங்கிய அக்கூட்டத்தார் மீது மீண்டும் ஒருமுறை வேதனை நிறைந்த அமைதி விழுந்திருக்க வேண்டும்.

இயேசு மணலின் மீது எழுதியது என்ன? இதைப் பற்றி இவ்வரலாறு நமக்கு உறுதியாய் எதையும் கூறுவது இல்லை. அவர் ஒன்றும் எழுதவில்லை, ஆனால் தம்முடைய எதிராளிகளுக்கு நழுவிச் செல்வதற்கு நேரத்தைக் கொடுத்தார் என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். அந்த நாளில் வேதபாரகர்களும் பரிசேயர்களும் செய்தவற்றைக் கண்டனம் செய்யும் வேத வசனப் பகுதிகளை அவர் எழுதினார் என்று மற்ற சிலர்

யூகித்துள்ளனர். இன்னும் மற்ற சிலர், அந்தப் பெண்ணின் மீது குற்றம் சாட்டியவர்கள் குற்றப்பட்டிருந்த பாவங்கள் எவை என்று இயேசு அட்டவணைப் படுத்திக் கொண்டிருந்ததாக நினைத்துள்ளனர். அவர் எதை எழுதியிருப்பினும் அல்லது எழுதாது இருப்பினும், பேசப்பட்ட அவருடைய கட்டளையானது அந்தப் பெண்ணின் மீதிருந்த கவனத்தை, இயேசுவிடம் அவளைக் கொண்டு வந்தவர்கள் மீது திருப்பியிருந்தது.

கூட்டத்தின் நடுவில் இன்னமும் இருந்த அந்தப் பெண்ணை யூதத் தலைவர்கள் எந்த அளவுக்கு சங்கடமடையச் செய்தார்களோ, அந்த அளவுக்கு அவர்களை இயேசுவின் வார்த்தைகளான ‘‘உங்களில் பாவமில்லாதவன்’’ என்பவை சங்கடமடையச் செய்தன. நமது சொந்தப் பாவத்தின் மீது கவனம் செலுத்துவதைக் காட்டிலும் இன்னொரு நபருடைய பாவத்தின் மீது கவனம் செலுத்துவது என்பது எப்பொழுதுமே மிகவும் வசதியானதாக உள்ளது. முதியவரிலிருந்து இளையவர் வரையிலும் ஒவ்வொருவராக அவ்விடம் விட்டு அகலும் வரையிலும் அமைதியற்ற நிலை தொடர்ந்திருந்தது. கூட்டமானது மதியீனமான சில விஷயங்களைச் செய்து விட்டால், தாங்கள் பொறுப்பாளிகளாகி விடுவோமோ என்ற அச்சத்தில் முதிர்வயதான மனிதர்கள் முதலில் அவ்விடம் விட்டுச் சென்றிருக்கலாம். ஒருவேளை, இயேசுவின் பதிலில் இருந்த ஞானத்தைப் பாராட்டக் கூடிய மிகுந்த ஞானிகளாகவும், விரைவில் செயல்படுபவர்களாகவும் அந்த முதிர்வயதான மனிதர்கள் இருந்திருக்கலாம். அவர்களின் சிந்தனைகள் எதுவாக இருப்பினும், அவர்களுடைய பதில் அளிக்க முடியாத கேள்வியை அவர் ஒரு சாத்தியமற்ற கட்டளையாக மாற்றினார் என்பதை உணர்ந்தார்கள்.

## இயேசு ஒரு நபரை எவ்வாறு கையாண்டார் (8:10, 11)

தமக்கேற்ற சிக்கலான சூழ்நிலையை மதிநுட்பத்துடன் கையாண்ட இயேசு, ஒரு நபரை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதை அடுத்ததாகச் செயல்விளக்கப்படுத்தினார். அந்த மனிதர்கள் சென்ற பிறகு, இயேசு நிமிர்ந்து, சுற்றிலும் நோக்கினார். குற்றம் சாட்டப்பட்டிருந்தவளை நோக்கி, அவர் “ஸ்திரீயே, உன் மேல் குற்றம் சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா?” (8:10) என்று கேட்டார். இந்த இடத்தில், நாம் இப்பெண்ணைப் பற்றி எவ்வளவு குறைவாக அறிகின்றோம் என்பதை உணருகின்றோம். மிகப் பயங்கரமான அநியாயத்தினால் பாதிக்கப்பட்ட நல் இருதயம் கொண்டவளாக அடிக்கடி இவள் மாதிரிப்படுத்தப்பட்டாலும்கூட, இவளது பாவத்தைத் தவிர வேறெதுவும் நமக்குக் கூறப்பட்டிருப்பதில்லை! அவள் சாந்த குணமும், விரும்பப்படத்தக்க தன்மையும் கொண்டிருந்தாளா அல்லது கடுமையும் அருவருப்பான குணமும் உடையவளாக இருந்தாளா? தன்னைக் குற்றம் சாட்டியவர்களின் மத்தியில் அவள் நின்று கொண்டிருக்கையில் (8:3, 9) தனது வெட்கத்தினால் நொறுக்கப்பட்டவளாக உள்ள நபரின் பரிதாபம்

நிறைந்த கண்ணீர்த் துளிகளினால் மென்மையாய் அழுது துயரப்பட்டாளா? அல்லது தன்னைத் தேவலாயத்திற்கு இழுத்துச் செல்லத் துணிந்தவர்களை அவள் வெறுப்புடன் முறைத்துப் பார்த்தாளா? அவள் விபசாரம் செய்கையில் பிடிபட்டாள் என்றும் அவளுடைய பாவமானது தேவாலய மைதானங்களில் வெளியரங்கமாகப் பவனி வந்தது என்றும் மட்டுமே நாம் அறிகின்றோம். அந்தப் பெண்ணல்ல ஆனால் அவளுக்கு இயேசு பதில் அளித்த வகை முறைதான் இந்த வரலாற்றை ஆச்சரியம் நிறைந்த தாக்குகின்றது.

## அவர் அவளை மதிப்புடன் நடத்தினார்

எப்பொழுதாவது உங்களைப் பற்றி மக்கள் பேசிக்கொண்டிருந்த வேளையில் நீங்கள் அங்கு இருந்துள்ளீர்களா? ஒருவேளை, ஒரு குழந்தை யாகவோ அல்லது மருத்துவமனையில் ஒரு நோயாளியாகவோ இருக்கை யில், உங்களைப் பற்றி மற்றவர்கள், நீங்கள் அங்கு இல்லாதது போல் பேசியதைக் கேட்பது என்ற மோசமான அனுபவத்தைப் பெற்றிருந் திருக்கலாம். அது மனிதத் தன்மையற்ற ஒரு அனுபவமாக உள்ளது. இப்படிப்பட்ட ஒரு அனுபவத்தையே வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள் கைகளில் அகப்பட்டிருந்த அந்தப் பெண் கொண்டிருந்தாள். அவள் ஒரு பொருள் அல்லது பிரச்சனை என்பதைக் காட்டிலும் அதிகமாக எண்ணப்படவில்லை. அவளைக் குற்றம் சாட்டியவர்கள் எல்லோரையும் இயேசு முகங்கவிழச் செய்த பொழுது, அவள் பக்கமாய்த் திரும்பிப் பேசினார். அவளைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக அவளிடத்தில் அவர் பேசினார் என்ற உண்மையானது ஒருவேளை அந்தப் பெண்ணுக்கு எப்பொழுதும் தரப்பட்டவைகளிலேயே மிகவும் விலையுயர்ந்த பரிசாக இருந்திருக்கலாம்.

இயேசு அவளை சங்கடமூட்டும் ஒரு தோல்வியாகவோ அல்லது எரிச்சலூட்டும் ஒரு கடினமான விஷயமாகவோ கண்ணோக்கவில்லை; அவளை ஒரு நபராக, தேவனால் தரப்பட்ட மாபெரும் தகுதிகளையுடைய தேவனுடைய ஒரு படைப்பாகவே அவர் கண்டார். மக்களிடத்தில் பேசுதல் என்பது சுவிசேஷங்களில் இயேசுவுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மையாக உள்ளது. மேலும், இந்த நாட்களில் நம்மையும் இயேசு இதே வழி முறையான மாதிரியில்தான் கண்ணோக்குகின்றார். அவர் நம் ஒவ்வொரு வரையும் உயர்வாக மதிக்கின்றார் மற்றும் நம்மை ஆழமாக நேசிக்கின்றார். நாம் தகுதியற்றவர்கள் என்பதாக அடிக்கடி உணரும் ஒரு உலகில், இயேசு நம்மை மதிப்புடன் நடத்துகின்றார். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணுடனான அவருடைய இந்த சந்திப்பு அந்த சத்தியத்திற்கு ஒரு வல்லமை நிறைந்த நினைவூட்டுதலாக உள்ளது.

## அவர் அவளை மன இரக்கத்துடன் நடத்தினார்

இயேசு அந்தப் பெண்ணை மதிப்புடன் நடத்தியது மட்டுமின்றி, அவளிடத்தில் அவருடைய நடக்கையானது, ஆச்சரியமான மன

இரக்கத்தைச் செயல்விளக்கப்படுத்திற்று. தரையில் எழுதியது என்பது அவருடைய பரிவிரக்கத்தின் முதல் செயலாக இருந்தது. இது வினோதமாய் ஒலிக்கின்றதா? காட்சியை மீண்டும் கற்பனை செய்து பாருங்கள். இயேசு போதித்துக் கொண்டிருந்த ஆலய முற்றங்களின் வழியே அந்தப் பெண் இழுத்துச் செல்லப்பட்டாள். அவள் விபசாரம் செய்கையில் பிடிபட்டதாக வேதபாரகர்களும் பரிசேயர்களும் இயேசு மற்றும் அங்கிருந்த ஒவ்வொரு வரிடத்திலும் உரத்த குரலில் அறிவித்தார்கள். ஒவ்வொருவருடைய கண்ணும் அவமானப்படுத்தப்பட்ட அந்தப் பெண்ணின் மீதே இருந்திருக்க வேண்டும். இதைக்காட்டிலும் வேறு ஏதாவது அதிகம் சிறுமைப் படுத்துவதாக இருக்குமா? அவளை என்ன செய்ய வேண்டும் என்று இயேசுவிடம் கேட்கப்பட்ட போது, அவர் குனிந்து தரையிலே எழுதத் தொடங்கினார். அந்த வேளையில், இயேசுவின் வினோதமான செயல்களை ஒவ்வொருவரும் கவனிக்கத் தொடங்கினார்கள். அவர் என்ன எழுதினார்? அது எதையாவது அர்த்தப்படுத்தியதா? அவர் எப்பொழுது பேசுவார்? அவரது போதனையில் சீரற்ற தன்மை சில இருந்ததாக யூதத் தலைவர்கள் வெளிப்படுத்தினார்களா? திடீரென்று, பெரும்பாலும் ஒருவர் கூட அந்தப் பெண்ணை நோக்காதிருந்தனர். கூட்டத்தினரின் பார்வைகளை அந்தப் பெண்ணிடமிருந்து தம்மிடத்திற்குத் திருப்பியதென்பது இயேசு அவளுக்களித்த பரிவிரக்கத்தின் விலையேறப் பெற்ற முதல் பரிசாகும்.

அடுத்ததாக, அந்தப் பெண்ணைக் குற்றம் சாட்டியவர்கள் அங்கிருந்து சென்ற பிறகு இயேசு அவளுக்குச் சொன்ன வார்த்தைகளை நாம் கேட்கின்றோம்: ‘‘நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை ...’’ (8:11). இது ‘‘நானும் உன்னை மரணத்திற்குத் தீர்வையிடுகிறதில்லை” என்று அர்த்தப்படும் ஒரு சட்ட விளக்கக் கூற்றாக உள்ளது. கூட்டத்தாரின் மத்தியில் இயேசு தமது புகழைக் காத்துக் கொள்வதற்காக இந்தப் பெண்ணின் வாழ்வைப் பலியாக்கியிருக்க முடியும் என்றாலும், அவர் அவ்வாறு செய்ய மறுத்து விட்டார். “நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதில்லை’’ என்று சொன்னவர் தாம் அவ்விடத்தில் அன்றைய நாளில் முதல் கல்லெறிய எல்லா வகையிலும் உரிமை பெற்றவராய் இருந்தார். இது பரிவிரக்கத்தின் மாபெரும் சாத்தியமான பரிசாக இருந்தது.

### அவர் அவளை உள்ளத் தெளிவுடன் நடத்தினார்

இந்த வரலாற்றை உணர்வுப் பூர்வமானதாக, பாவத்தை சுலபமானதாய் எடுத்துக்கொள்ளும் நிகழ்ச்சியாக ஏற்படுத்திக் கொள்ளும்படி சோதிக்கப் படுகின்றவர்கள் இவ்வரலாற்றின் பின்வரும் முக்கிய பகுதியைக் கவனிக்காமல் விட்டுவிடுகின்றனர்: இயேசு அந்தப் பெண்ணை அனுப்பி வைத்த பொழுது, “இனிப் பாவஞ் செய்யாதே” (8:11இ) என்றுரைத்தார். அவர் இரக்கமுள்ளவராக இருந்தார், ஆனாலும் அவளது பாவத்தைக் குறிப்பிடுவதில் உள்ளத் தெளிவுடனும் இருந்தார். அவளது பாவம் எதிர் கொள்ளப்பட வேண்டியதாக இருந்தது. இன்றைய நாட்களில் நமது பாவத்தை எதிர்கொள்வதைத் தவிர்க்க முயற்சிப்பதற்கு நாம் பல வழி

வகைகளைக் கொண்டுள்ளோம். நாம் பாவத்தைக் கண்டு கொள்ளாதிருக்க முயற்சி செய்கின்றோம் ("நான் அதைப் பற்றி நினைக்க மாட்டேன்"), பாவத்தை மறுக்க முயற்சி செய்கின்றோம் ("நான் தவறொன்றும் செய்யவில்லையே"), அல்லது பாவத்தை நியாயப்படுத்தக் கூட முயற்சி செய்கின்றோம் ("என் பெற்றோர் நிமித்தம், என் வேலையினிமித்தம், அல்லது என் கலாச்சாரத்தினிமித்தம் நான் அதை செய்தேன்"). இதற்கு நேர் எதிரிடையாக, இயேசு அந்தப் பெண் அவளது பாவத்தை எதிர்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். பாவத்தை அவர் "பாவம்" என்றே அழைத்தார். இன்றைய நாட்களில் இதே விதமான நடத்துதல் தொடர்ந்து தேவைப்படும் நிலையில் நாம் இருக்கின்றோம். நமது பாவத்தைப் பற்றி, "நீங்கள் அதைக் குறித்துக் கவலைப்படாதீர்கள். அது ஒன்றும் பெரிய விஷயமல்ல!" என்று கூறுவதன் மூலம் இயேசு நமது பாவத்திற்குப் பதில் அளிப்பதில்லை. அதற்குப் பதிலாக, பாவம் என்பது அவரது மாபெரும் கவலையாக, சிலுவையைப் போன்றே அவ்வளவு பெரிய கவலையாக இருப்பதாகவே அவர் கூறுகின்றார்! மீட்பு நடைபெற வேண்டும் என்பதற்காக, நாம் முதலில் நமது பாவங்களின் உண்மை நிலையையும் மற்றும் குற்றத் தன்மையையும் எதிர்கொள்ள வேண்டும். நமது பாவங்களுக் கான விலையை நம்மால் ஒருக்காலும் செலுத்த முடியாதென்றாலும், நமது பாவம் நிறைந்த தன்மையைப் பற்றி நாம் நேர்மையாய் இருக்க வேண்டும். இல்லையென்றால், மனந்திரும்புதல் என்பது ஒருபொழுதும் ஏற்பட முடியாது. நமது பாவம் பற்றிய கெட்ட செய்தி எவ்வளவு மோசமானதாக உள்ளது என்பதை நாம் உணராத வரையில், சுவிசேஷத்தின் நற்செய்தி யானது எவ்வளவு நல்லதாக உள்ளது என்பதை நம்மால் பாராட்ட முடியாது! இயேசுவின் மக்கள் தங்கள் சொந்தப் பாவத்தை எதிர் கொள்வதிலும் மற்றும் தங்கள் சொந்த செயல்களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வதிலும் நேர்மையாய் இருக்க வேண்டுமென்று அவர் இன்னும் வலியுறுத்துகின்றார்.

### அவர் அவளைக் கிருபையுடனும் நம்பிக்கையுடனும் நடத்தினார்

இயேசு இந்தப் பெண்ணின் பாவங்களை இவளுக்கு மன்னித்தார் என்று சுட்டிக்காட்டுகின்ற எதுவும் இவ்வசனப் பகுதியில் இல்லை, ஆனால் அவளை மரணத்திற்குள்ளாகத் தீர்ப்பிட அவர் மறுத்து விட்டார். அவளிடத்தில் அவர் கூறிய பிரிவு வார்த்தைகள், பெதஸ்தா குளத்தருகில் குணமாக்கப்பட்டிருந்த நடக்க முடியாத மனிதருக்கு அவர் கூறியிருந்த வற்றை நமக்கு நினைவூட்டுகின்றன: "... இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே" (5:14). இயேசு அப்பெண்ணுக்குச் செய்தவற்றினால் அவள் எவ்விதம் ஆட்கொள்ளப்பட்டாள் என்று இவ்வரலாற்றில் நமக்குக் கூறப்படுவ தில்லை. அவள் விசுவாசித்தாளா? அவள் தனது பாவத்திலிருந்து மனந் திரும்பும்படி அசைக்கப்பட்டாளா? இந்தக் கேள்விகளுக்கான உறுதியான

பதில்களை நாம் கூற முடியாது.

இருப்பினும், எதிர்காலத்திற்கான நம்பிக்கையை இயேசு அவளுக்கு அளித்தார் என்று நாம் உறுதியாகக் கூற முடியும். "இனி" ("இப்பொழுதி லிருந்து'' என்ற நேரடி அர்த்தம் கொண்டது) என்பது முன்னோக்கிக் காண்பதாக உள்ளது. நாம் அறிந்துள்ள யாராவது குறிப்பிட்ட ஒரு பாவத்துடன் அடையாளப்படுத்தப்படும் பொழுது (இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் கூட இவளைப் பற்றி நாம் "விபச்சாரப் பெண்" என்று இன்னும் பேசிக் கொண்டிருப்பதில்லையா?), முன்னோக்கிக் காண்பதற்குப் பதிலாகப் பின்னோக்கி காண்பதே நமது இயல்பாக உள்ளது. பாவம் என்பது அவரைச் சுலபமாய் அடையாளப் படுத்தக் கூடியதாகி விடுகின்றது. அந்தப் பெண்ணிற்கு இயேசு கூறிய வார்த்தைகள், "உனது பாவத்தைக் காட்டிலும் மேலானது உன் வாழ்வுக்கென்றுள்ளது. நீ பாவத்திலிருந்து திரும்ப முடியும்'' என்ற செய்தியை உரக்கக் கூறிற்று. விபசாரத்தில் ஈடுபட்டிருந்த அப்பெண்ணுக்கு இந்தச் செய்திதான் மிகவும் அதிகமாகத் தேவைப்பட்டது; காலங்கள் தோறும் இருக்கின்ற அவளது சகமனிதர்கள் யாவருக்கும் இந்தச் செய்திதான் மிகவும் அதிகமாகத் தேவைப்படுகின்றது. "கிருபையும் சத்தியமும் நிறைந்தவரான'' இயேசு, நம்மில் ஒவ்வொருவருக்கும் புதியதொரு தொடக்கத்திற்கான வாய்ப்பைத் தருகின்றார்.

## முடிவுரை

8:1-11ல் உள்ள வரலாறானது, அப்பெண்ணுக்கு என்னவாயிற்று என்று நாம் வியப்படையும்படி நம்மை விட்டு வைக்கின்றது. அவள் இயேசுவைப் பின்பற்றினாளா? அல்லது உடனடியாகத் தனது விபசாரப் படுக்கைக்குத் திரும்பினாளா? இயேசு அவளுக்கு அளித்திருந்த அற்புதமான பரிசை அவள் மதித்தாள் என்று கற்பனை செய்ய நாம் விரும்புவோம், ஆனால் அதைப் பற்றி வேதாகமம் நமக்குக் கூறுவதில்லை. ஒருவேளை அப்படி இருப்பதே மிகவும் நன்று. ஏனெனில் இந்த வரலாறானது நம் ஒவ்வொருவரையும் பற்றிய வரலாறாக உள்ளது. இயேசுவின் செய்தியைக் கேட்கும் பொழுது நாமும் கூட நமது பாவத்தில் "பிடிக்கப்'' படுகின்றோம். தேவன் நமது பாவத்தை அறிந்துள்ளார் மற்றும் நாம் குற்ற உணர்வுடையவர்களாய் இருக்கின்றோம் என்று நாம் கண்டறிந்துள்ளோம் என்பதை நாம் உணருகின்றோம்.

அந்தப் பெண் இயேசுவுக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கை யில், பாவத்தில் அவளுடைய பங்காளியாக இருந்தவன் அவ்வாறு கொண்டு வரப்படவில்லை என்பது பற்றி மக்கள் சில வேளைகளில் கோபம் அடைகின்றனர். உண்மையில், அந்த நாளில் அப்பெண் ஆசீர்வதிக்கப்பட்ட வளாய் இருந்தாள். அவளுடைய பங்காளி, வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களுடைய பார்வையிலிருந்து தப்பியிருக்கலாம், ஆனால் அவன் தேவனுடைய கவனத்திலிருந்து தப்பவில்லை. அவன் வெற்றிகரமாய்த் தப்பியதென்பது, அவன் தனது பாவத்திலிருந்து மீண்டதாக நினைக்கும்படி

அவனை ஏமாற்றியிருக்கலாம். இதற்கு நேர்மாறான வகையில், அந்தப் பெண் தனது பாவத்தின் உண்மை நிலையில் இருந்து தப்பிக்க வழியற்றுப் போயிற்று. அவனல்ல, ஆனால் அவள்தான், தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளினால் அதிகமாய்ப் பயனடைந்தாள். நாம் நமது பாவம் நிறைந்துள்ள தன்மையையே மறுத்துக் கொண்டிருக்கும் வரையிலும், நமது பாவங்களை மன்னிப்பதற்கான தேவனுடைய விருப்பத்தை வெறுப்படையச் செய்கின்றோம்.

அந்தப் பெண்ணைப் போலவே நாமும் கூட்டத்தினால் ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்பட்ட நிலையில் நிற்கின்றோம். நாம் செய்துள்ள மற்றும் சிந்தித்துள்ள யாவற்றையும் மக்கள் அறிந்தார்களென்றால், நிச்சயமாகவே அவர்கள் நம்மை ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்குவார்கள். நம்மை நாம் அறிந்துள்ளதைப் பார்க்கிலும் அதிகமாக இயேசு நம்மை நன்கு அறிந்துள்ளார். இருப்பினும் அந்தப் பெண்ணுக்குச் செய்தது போலவே அவர் நமக்கு ஆதரவாக நிற்கின்றார் (சில வேளைகளில் கீழே குனிந்த நிலையில் இருக்கின்றார்), அவர் நமக்கும் மற்றும் குற்றம் சாட்டுகிறவர்களின் கூட்டத்திற்கும் இடையில், நமக்கும் ஆக்கினைத் தீர்ப்புக்கும் இடையில், நமக்கும் ஒரு சிலுவைக்கும் இடையில் அடியெடுத்து வைக்கின்றார்!

அன்றிரவு தேவாலயத்திலிருந்து தங்கள் இல்லத்திற்குச் சென்றிருந்த மக்களில் சிலர், இயேசு செய்திருந்தவற்றினால் நியாயம் நிறைவேற்றப் படவில்லை என்று முறுமுறுத்திருக்கலாம். "பாவத்திற்குத் தக்க தண்டனை தர வேண்டும்'' என்று சிலர் நிச்சயமாகக் கூறினார்கள். யோவான் சுவிசேஷத்தின் பிற்பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பாவத்திற்கான விலை செலுத்தப்பட்டுள்ளது என்பதை இவர்கள் உணர்வதில்லை. "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" என்று கூறியவர் ''உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக" இருந்தார் (1:29). சிலுவையில் அவர் நமது பாவங்களுக்கு விலை செலுத்தினார், மற்றும் இப்பொழுது ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட பாவிகளான நம் யாவருக்கும் அவர், "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" என்று கூறுகின்றார்.

---

குறிப்புகள்

[1]பெரும்பாலான நவீன மொழிபெயர்ப்புகளைப் போலவே, NASBயும் 7:53-8:11ஐ பழங்காலக் கைப்பிரதிகள் பெரும்பாலானவற்றில் இது காணப் படுவதில்லை என்ற குறிப்புடன் அடைப்புக் குறிகளுக்குள் அமைத்துள்ளது. இவ்வசனப் பகுதி பின்னாளைய கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் சிலவற்றில் மட்டுமே காணப்படுகின்றது, அதுவும் கூட மாறுபட்ட இடங்களில் உள்ளது: யோவான் 7:36; 7:44; 7:52; 21:25 மற்றும் லூக். 21:38 ஆகிய வசனங்களைத் தொடர்ந்து வருவதாக உள்ளது. இருப்பினும், இது இவ்வசனம் ஏவுதல் பெற்றதல்ல எனவே காணாது விடப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டுவதில்லை. மெட்ஜெர்

*அவர்கள், "இவ்விபரமானது வரலாற்று உண்மையின் எல்லா அடையாளங்களையும் கொண்டுள்ளது" என்று கருத்தளித்தார்* (Bruce Metzger, *A Textual Commentary on the Greek New Testament* [Stuttgart, Germany: United Bible Societies, 1975], 200). *ஒருவேளை, 7:53-8:11 வசனப் பகுதியானது யோவான் சுவிசேஷத்தின் மூலப் பிரதியினுடைய ஒரு பாகமாக இல்லாதிருப்பினும் கூட, அது முதல் நூற்றாண்டுக் கைப்பிரதியாகும் காலம் வரைக்கும் பாதுகாக்கப்பட்டு வாய்மொழி வார்த்தையினால் தலைமுறைகளுக்குக் கூறப்பட்டிருந்த வரலாறாக இருக்க வேண்டும். தன்னில் தானே நிலைத்து நிற்க இது மிகவும் சிறியதாகக் காணப்படுகையில், யோவான் 8ம் அதிகாரம் இதற்கு ஏற்றதொரு இடமாக உள்ளது. [2]இயேசு, பகல் பொழுதில் எருசலேமில் போதித்து, இரவுப் பொழுதில் ஒலிவமலையில் ஓய்வெடுத்ததாக லூக். 21:37 சுட்டிக் காட்டுகின்றது. இது அநேகமாக, ஒலிவ மலையின் கிழக்குச் சரிவில் இருந்த பெத்தானியில் இருந்த மார்த்தா மற்றும் மரியாள் ஆகியோரின் வீடாக இருந்திருக்கலாம். [3]''வேதபாரகரும் பரிசேயரும்'' என்று கருத்தொற்றுமை சுவிசேஷங்களில் அடிக்கடி காணப்படுகின்ற இந்தச் சொற்றொடரானது யோவான் சுவிசேஷத்தில் இவ்விடத்தில் மட்டுமே காணப்படுகின்றது. [4]லேவி. 20:10; உபா. 22:21-24 ஆகிய வசனங்களைக் காணவும். [5]யோவா. 18:31ஐக் காணவும். இதற்கு விதிவிலக்காகக் காணப்படும் அப். 7ல் ஸ்தேவானைக் கல்லெறிந்த நிகழ்ச்சியானது சட்டப்படியான தண்டனை நிறைவேற்றம் என்பதற்கு மாறாக, கலகக்காரக் கும்பல் ஒன்று உணர்ச்சி மிக்க நிலையில் செயல்பட்டதாகவே உண்மையில் இருந்தது.*

---

## *எருசலேமுக்கு இயேசுவின் பயணங்கள்*

| | | |
|---|---|---|
| *1.* | *முதல் பஸ்கா* | *2:23* |
| *2.* | *பெயர் கூறப்படாத பண்டிகை* | *5:1* |
| *3.* | *கூடாரப் பண்டிகை* | *7:2, 10* |
| *4.* | *தேவாலயப் பிரதிஷ்டைப் பண்டிகை* | *10:22* |
| *5.* | *கடைசி பஸ்கா* | *13:1* |

*A Guide to the Gospels*
W. கிரஹாம் ஸ்க்ரோகி

# “நான் இருக்கிறேன்”

# [8:12-59]

இந்த நாட்களில் தொடர்ந்து எழும்பிக் கொண்டுள்ள ஒரு வார்த்தையை நான் சமீபத்தில் கவனிக்கத் தொடங்கினேன். இந்த வார்த்தையானது பல அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியுமென்று நான் யூகிக்கின்றேன், ஆனால் இது அடிப்படையாகக் கலந்துரையாடல்களை முடிக்கப் பயன்படுத்தப்படுவதாகக் காணப்படுகின்றது. முதலில், நான் இது வாலிப வயதுடையவர்களால் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாக நினைத்தேன், ஆனால் எல்லாத் தலைமுறையினரிடத்திலும் உள்ள எல்லா மக்களுடைய உதடுகளிலும் இருந்து இதை நான் கேட்டிருக்கின்றேன். “இதைப் பற்றி இன்னும் போதிய அளவுக்கு பேசுவது பரவாயில்லை” என்று கூறுவதற்கு இது பயன்படுத்தப்படுவது வளர்ந்து கொண்டுள்ளது. “என்னவாக இருந்தாலும்” என்பதே அவ்வார்த்தையாக உள்ளது.

பெற்றோர் ஒருவர், ஒரு பிள்ளையிடம், “நீ இதைச் செய்ய வேண்டும்!” என்று கூறுகின்றார், பிள்ளை உடனே, “என்னவாக இருந்தாலும்” என்று பதில் அளிக்கின்றான்/ள். வயது வந்த பெண்ணொருத்தி தனது தோழியை ஒரு சூழ்நிலையில் “சரியானதைச் செய்” என்று உற்சாகப்படுத்துகின்றாள், “என்னவாக இருந்தாலும்” என்பது பதிலாக உள்ளது. வயது முதிர்ந்த இருவர் அரசியலைப் பற்றி விவாதிக்கின்றனர், அவர்களில் ஒருவருக்குப் போதும் போதும் என்றாகி விடும் போது அவர் தம் தோள்களைக் குலுக்கி, “என்னவாக இருந்தாலும்” என்று கூறுகின்றார்.

இன்னும் அதிகம் தனிச் சிறப்பான ஒரு மட்டத்தில், “என்னவாக இருந்தாலும்” என்பது, உண்மை ஒரு பொருட்டல்ல என்று மக்களுக்கு அர்த்தப்படக்கூடும். உண்மையைப் பற்றிய உங்கள் கண்ணோட்டத்திற்கு நீங்கள் தகுதியானவர் என்றும், எனது கண்ணோட்டத்திற்கு நான் தகுதியானவன் என்றும் அது தெரியப்படுத்தக் கூடும், மற்றும் நாம் இருவருமே சம அளவில் சரியானவர்களே என்று நாம் யூகிக்கக்கூடும். 1990களில் அமெரிக்க நாட்டில் “என்னவாக இருந்தாலும்” என்பது கலாச்சாரத்தில் பொருளற்ற ஆர்வத்தை விட அதிகமானதாகவே இருந்தது; ஒரு நாடு சிந்திக்கும் வழிமுறையைச் சுட்டிக்காட்டும் ஒற்றை வார்த்தையாக அது இருந்தது. ஆர்வமிக்க இவ்வார்த்தை பற்றிய என்னுடைய மதிப்பீட்டைக் குறித்து நீங்கள் நினைப்பதென்ன? “என்னவாக இருந்தாலும்” என்று நீங்கள் கூறுவதை நான் கேள்விப்பட்டேனா?

நமது வேத பாடப் பகுதியாகிய 8:12-59ல் இயேசு, “என்னவாக இருந்தாலும்” என்ற ஆவிக்கு அறைகூவல் விடுத்தார். அவரது செய்தியானது

தைரியமானதாகவும், அவரது உரிமைகோருதல்கள் புறக்கணிக்கப்பட முடியாதவைகளாகவும் இருந்தன, முடிவில் மகிழ்ச்சி நிறைந்த "ஆம்!" என்ற வார்த்தையாலோ அல்லது எதிர்ப்பு நிறைந்த "இல்லை!" என்ற வார்த்தை யாலோ அவருக்கு நீங்கள் பதில் அளிக்கலாம் - ஆனால் "என்னவாக இருந்தாலும்" என்று நீங்கள் பதில் அளிக்க அவர் உங்களை அனுமதிக்க மாட்டார்.

## "நான் இருக்கிறேன்" என்ற சொற்றொடர்

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்று 8:12ல் இயேசு அறிவித்தார். நவீன வாசகர்கள் அவருடைய கூற்றில், "உலகத்திற்கு ஒளி" என்ற பகுதியின்மேல் கவனம் செலுத்தும்படி சாய்ந்தாலும் இயேசு கூறியதன் மிக முக்கியமான அம்சமானது "நான் இருக்கிறேன்" என்ற இரு வார்த்தைகளில் காணப்படுகின்றது. அந்தச் சிறிய சொற்றொடரானது ஒரு வளம் மிக்க பழைய ஏற்பாட்டுப் பின்னணியைக் கொண்டுள்ளது; மற்றும் முதல் நூற்றாண்டில் இயேசுவின் உரையைக் கேட்ட யூதர்களுக்கு இது அவர் கூறியவற்றிலேயே மிகவும் முரண்பாடுள்ள கூற்றாக இருந்திருக்க லாம். அவர், "நானே தேவனாக இருக்கிறேன்" என்று கூறுவது போல அவர்களுக்கு ஒலித்தது. யோவான் சுவிசேஷத்தின் சந்தர்ப்பப் பொருளில், அவர் அதைத் தான் மிகச் சரியாகக் கூறினார்!

"நான் இருக்கிறேன்" என்பது பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மைப் பற்றிப் பேசிய வழிமுறையாக உள்ளது. எரியும் முட்புதரில் தேவன் மோசேயைச் சந்தித்த பொழுது, மோசே, அவருடைய பெயரைக் கேட்டார். அவருக்கு, "இருக்கிறவராக இருக்கிறேன்" (யாத். 3:14) என்று கூறப்பட்டது. பிற்பாடு, மோசேயின் பாடலில், தேவன் பின்வருமாறு அறிவித்தார்:

> நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை
> என்பதை
> இப்பொழுதே பாருங்கள்;
> நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன் ...
> (உபாகமம் 32:39).

சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு, தீர்க்கதரிசியான ஏசாயா பின்வருமாறு எழுதினார்:

> நானே அவரென்று நீங்கள் உணர்ந்து,
> என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு,
> நீங்களும் நான் தெரிந்து கொண்ட என் தாசனும்
> எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்;
> எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை;
> எனக்குப் பின் இருப்பதும் இல்லை
> (ஏசாயா 43:10).

*இதன் விளைவாக, "நான் இருக்கிறேன்" என்பது பரிசுத்த மொழியா யிருந்தது மற்றும் தேவனைத் தவிர வேறு யாரையாவது குறிக்கப் பயன் படுத்துதல் என்பது தேவ தூஷணமாக இருந்தது!*

## "நான் இருக்கிறேன்" என்று இயேசு கூறுகின்றார்

*யோவான் 8ல் இவ்வரலாறு தொடருகையில், இயேசு தம்மைத் தாமே குறிப்பிடுவதற்கு ''நான் இருக்கிறேன்'' (கிரேக்கம்: ego eimi) என்ற இருவார்த்தைகளை பயன்படுத்தத் தொடங்கினார்:*

> *நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் (8:12).*
>
> *நான் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன் (8:18).*
>
> *நான் உயர்விலிருந்துண்டானவன் (8:23).*
>
> *நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல (8:23).*

*இந்த மொழிநடையை அவர் பயன்படுத்திய ஒவ்வொரு வேளையிலும், அவர் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் மன உளைச்சல் அடைந்திருக்க வேண்டும். இயேசு, தாம் தெய்வீகமானவர் என்று கூறாமல், தெய்வீகத்திற்குரிய மொழிநடையைப் பயன்படுத்தினார். இயேசு இதைக் காட்டிலும் அதிகமாய் எதையும் ஒருபோதும் கூறாதிருந்தால், அவர் இப்படிப்பட்ட மொழிநடையைப் பயன்படுத்தியதன் மூலம் எதனை அர்த்தப்படுத்தினார் என்று நாம் வியப்படைந்திருப்போம். இயேசு தம்முடைய உரிமைகோருதல்களைத் தெளிவாக்கியிருப்பதால், நிச்சயமாகவே, நாம் வியப்படைய வேண்டியதில்லை.*

*அதிகாரம் 8ல் யூதத் தலைவர்களுடனான தமது உரையாடலில் இயேசு, கோபத்தைக் கிளறிவிடக் கூடிய ''நான் இருக்கிறேன்'' என்ற இரு வார்த்தைகளை மும்முறை பயன்படுத்தினார். இயேசு தாம் தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று இப்பொழுது நாம் அறிவது போலவே அப்பொழுதும் மக்கள் அறிந்தார்கள்: ''ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் [ego eimi] என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்" (8:24).*

*குழப்பம் தொடர்ந்தது, மற்றும் யூதர்கள் இயேசுவை, "நீர் யார்?" (8:25) என்று மீண்டும் கேட்டார்கள். அவர், "நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும் [ego eimi], நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்" (8:28) என்று பதில் அளித்தார்.*

*இந்த உரையாடலின் பதிவை யோவான் தொடருகையில், இயேசு "தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி" (8:31) பேசினார் என்று யோவான் சுட்டிக்காட்டினார்! அவர்கள், தாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருந்ததாக வலியுறுத்தினர், மற்றும் அவர்கள் ஒருக்காலும் அடிமைத்*

தனத்திற்குட்படாதவர்களாய் இருந்ததால், இயேசுவின் விடுதலையளிப்பு அவர்களுக்குத் தேவைப்பட்டிருக்கவில்லை என்றார்கள். இயேசு, தம்மைக் கொலை செய்ய அவர்கள் முயற்சி செய்தார்கள் என்று குற்றம் சாட்டிய பொழுது, அவர்கள், இயேசு ஒரு அசுத்த ஆவியைக் கொண்டிருப்பதாகக் கூறினர் (8:48). அவர்கள் இன்னும் அதிகமாய் வெறுப்படைகையில், தாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று மீண்டும் உரிமைகோரினார்கள். இயேசுவின் நாட்களைக் கண்டிருந்த வேளையில் ஆபிரகாம் களிகூர்ந்திருந்தார் என்று இயேசு பதில் அளித்தார். ஆபிரகாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மரித்திருந்தார் என்பதால், இது எப்படி நடந்திருக்க முடியும் என்று அவர்கள் திகைப்படைந்தார்கள். இயேசு, “ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் [*ego eimi*] என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (8:58) என்று பதில் அளித்தார்.

இது அவர்கள் தாங்கக் கூடுவதற்கும் அதிகமானதாயிருந்தது! அவர்கள் கற்களை எடுத்துக் கொண்டு, லேவியராகமம் 24:16ன்படி அவரைக் கல்லெறியத் திட்டமிட்டனர். இருப்பினும் இயேசு அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப் போனார். அவர் கூறியிருந்தவற்றின் தனிச்சிறப்பை ஒவ்வொருவரும் உணர்ந்தறிந்தனர்; அவர் தேவனுடன் ஒன்றாயிருப்பதாக, தேவகுமாரனாயிருப்பதாக, தெய்வீகமானவரா யிருப்பதாக தைரியமாக உரிமைகோரியிருந்தார்!

## இன்றைய நாட்களில் இயேசுவின் உரிமைகோருதல்கள்

இன்றைய நாட்களில் நாம் இயேசுவைப் பற்றி என்ன நினைக்கின் றோம்? இயேசு வாழ்ந்தார், மற்றும் அவர் ஒரு நல்ல மனிதராயிருந்தார் என்பதை ஏற்றுக் கொள்ள பெரும்பாலான மனிதர்கள் மனதாயிருக் கின்றனர், ஆனால் அவர் தேவகுமாரனாயிருக்கின்றார் என்பதைப் பல மக்கள் ஏற்றுக்கொள்ள மனதின்றியிருக்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு கண்ணோட்டத்தை இயேசு அபத்தமாக்குகின்றார். அவர் ஒரு நல்ல மனிதர் என்ற உரிமைகோருதலை மட்டும் ஏற்படுத்தாமல், “நான் இருக்கிறேன்” என்றும் அவர் உரிமைகோரினார். அவர் தம்மை ஒரு மாபெரும் தத்துவஞானியாக முன்னிறுத்தவில்லை; அவர் தம்மைப் பிதாவிடத்திற்குச் செல்லும் ஒரே வழியாக முன்னிலைப்படுத்தினார். அவர், தாம் தேவனுக்குள் ஒரு சிறப்பான உட்கண்ணோட்டம் கொண்டிருந்ததாகப் போதிக்கவில்லை; அவர் பிதாவுடன் ஒன்றாயிருந்ததாக உரிமைகோரினார். அவரது தைரியமான உரிமைகோருதல்கள் நம்மை அவரது உண்மை அடையாளத்தை விசுவாசிக்கும்படியாக அல்லது புறக்கணிக்கும்படியாக தெரிவு செய்து கொள்ளுதலை ஏற்படுத்தும்படி வற்புறுத்துகின்றன. இயேசுவிடம் வரும்பொழுது, “என்னவாக இருந்தாலும்” என்ற செயலானது ஒரு தெரிவாக இருப்பதில்லை. இந்த விஷயத்தில், தங்கள் கைகளில் கற்களுடன், தீவிரமான கோபத்திலிருந்த யூதத் தலைவர்கள், இயேசு என்ன

கூறினார் என்பதை, இயேசு எவ்விதம் "ஒரு நல்ல மனிதராய்" இருந்தார் என்பது பற்றி, இன்றைய நாட்களில் பேசும் அவிசுவாசிகளைக் காட்டிலும் மிக நன்றாகப் புரிந்து கொண்டிருந்தனர்.

இதைக் குறித்து, ஜோஷ் மெக்டோவல் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> *இயேசுவுக்கு, ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர், அவர் யாராய் இருந்தார் என்று விசுவாசிப்பது அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்தது. இயேசு கூறியதைக் கூறி, அவர் உரிமை கோரியதை உரிமைகோரும் ஒருவர், இயேசு ஒரு நல்லொழுக்கமுள்ள மனிதராக மட்டும் அல்லது தீர்க்கதரிசியாக மட்டும் இருந்தார் என்று முடிவு செய்ய முடியாது. மாற்றக் கருத்தென்பது தனிநபருக்குத் திறந்திருப்பதில்லை, மற்றும் அவ்வாறு இருக்கும்படி இயேசு ஒருக்காலும் விரும்பியதில்லை.*[1]

பல ஆண்டுகளுக்கு முன்பு, C. S. லூயிஸ் அவர்கள் இதே போன்றதொரு முடிவுக்கு வந்தார்:

> *அவரைப் பற்றி மக்கள் அடிக்கடி கூறுகின்றதான உண்மையில் மதியீனமாயுள்ள கருத்தை இவ்விடத்தில் நான் தடை செய்ய விரும்புகின்றேன்: "இயேசு ஒரு மாபெரும் நல்லொழுக்க போதகர் என்று ஏற்றுக்கொள்ள நான் தயாராயிருக்கின்றேன், ஆனால் தாம் தேவனாயிருக்கின்றதாக அவர் உரிமைகோருவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்." இந்த ஒரு காரியத்தை நாம் சொல்லக் கூடாது. வெறும் மனிதராக மட்டுமே இருந்து ஒருவர், இயேசு கூறிய வகையிலான விஷயங்களைக் கூறினால் அவர் ஒரு மாபெரும் நல்லொழுக்க போதகராயிருக்க முடியாது. அவர், ஒன்று பைத்தியம் பிடித்தவராக - அவிந்து போன முட்டை என்றுள்ள அளவுக்கு ஒரு மனிதனைப் பற்றிக் கூறுதலுக்கு ஏற்றவராக - இருக்க வேண்டும், அல்லது அவர் நரகத்தின் பிசாசாக இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் தெரிவு செய்தலை ஏற்படுத்தியாக வேண்டும். ஒன்று இம்மனிதர் தேவனுடைய குமாரனாய் இருந்தார் மற்றும் இருக்கின்றார்; அல்லது ஒரு பைத்தியக்காரனாக அல்லது அதிலும் மோசமான மனிதராய் இருந்தார். அவரை முட்டாள் என்று உங்களால் மூட முடியும், நீங்கள் அவர் மீது துப்பவும், பிசாசு பிடித்தவர் என்று அவரைக் கொல்லவும் கூடும்; அல்லது நீங்கள் அவருடைய பாதங்களில் விழுந்து, அவரை ஆண்டவரே, தேவனே என்று அழைக்கவும் முடியும். ஆனால், அவர் மாபெரும் மனித போதகர் என்பது போன்ற மதியீனமான ஆதரவை அவரது இருப்பிற்கு நாம் அளிக்காதிருப்போமாக. அதை அவர் நமக்குத் திறந்து வைத்திருக்கவில்லை. அவ்வாறு இருக்கும்படி அவர் விரும்பவுமில்லை.*[2]

இயேசு தம்மைப்பற்றி ஏற்படுத்திய தைரியமான உரிமைகோருதல் களை ஒருவேளை, ஹோமர் ஹெய்லி அவர்கள் மிகச் சிறப்பாகத் தொகுத்துரைத்திருந்திருக்கலாம்: "அவர் தாம் உரிமைகோரியதன்படி யில்லாதவராய் இருந்தால், அவர் ஒரு வஞ்சகராக, தேவதூஷணம்

கூறுபவராக, ஒரு மாயக்காரராக, ஒரு மோசம் போக்குபவராக, ஒரு பொய்யராக இருந்தார் என்றே ஆகின்றது."[3]

## முடிவுரை

இவை யாவும் இன்றைய நாட்களில் நமக்கு எதை அர்த்தப் படுத்துகின்றது? முதலாவது, இது கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ந்திருப்ப வர்களை "இயேசு ஒரு மேன்மையான மனிதராய் இருந்தார்" என்று நம்பும் நிலைக்கு அப்பால், நமது சொந்த ஆவிக்குரிய மேம்பாட்டு நிலைக்குக் கடந்து செல்லும்படி நம்மை வற்புறுத்துகின்றது. எனது பிள்ளைகள் வளருகின்ற வேளையில், தொடக்க வயதில் அவர்கள், பிள்ளைகளிடத்தி லும் மற்றும் துன்புறும் மக்களிடத்திலும் இயேசு கொண்டிருந்த இரக்கம் மற்றும் கனிவினால் ஈர்க்கப்படும்படி விரும்புகின்றேன். இயேசுவைப் பற்றிய இவ்விதமான சித்தரிப்பைக் கொண்டுள்ளது நல்லதேயாகும். இருப்பினும் இயேசுவின் அந்தச் சித்தரிப்புக்கு அப்பால் எனது குழந்தைகள் வளராதிருந்தால், இயேசு மென்மையானவர் மட்டுமல்ல ஆனால் தைரியமானவரும், வற்புறுத்துபவருமாகவும் இருக்கின்றார் என்பதை அவர்கள் ஒருக்காலும் உணராதிருந்தால், அவர்களின் விசுவாசமானது முதிர்ச்சியடையத் தவறி விடும். இயேசு "நான் இருக்கிறேன்" என்பதாக உரிமைகோரினார். பழைய கூற்றொன்று உண்மையானதாக உள்ளது: "ஒன்று, இயேசு எல்லோருக்கும் கர்த்தராக இருக்கின்றார், அல்லது அவர் கர்த்தராகவே இல்லாமல் இருக்கின்றார்!"

யோவான் 8ல் இயேசுவுடனான சந்திப்பானது உறங்குகின்ற, பரிதாபமான கிறிஸ்தவர்களின் முகத்தில் அறைவது போல உள்ளது. அவர் தாம் கூறியவாறே இருக்கின்றாரா? அவர் அவ்வாறு இல்லையென்றால் நாம் எதற்காக இன்னமும் "சபை" என்ற செயல்பாட்டைக் கொண்டுள்ளோம்? அவர் அவ்வாறு இருக்கிறார் என்றால், கர்த்தராகிய இயேசுவைப் போல எனது வாழ்வில் பொருட் படுத்தப்பட வேண்டியது வேறெதுவும் இல்லை என்பது போல நாம் ஏன் இன்னும் வாழாமலும் ஊழியம் செய்யாமலும் இருக்கின்றோம்?

ஆராதனையில் கலந்து கொண்டிருந்தும், திங்கள் முதல் சனி வரையிலும் கிறிஸ்தவராக வாழாத ஆண் அல்லது பெண் ஒவ்வொரு வருக்கும் இயேசுவுடனான இந்த சந்திப்பானது முடிவெடுக்கும்படியான ஒரு அழைப்பாக உள்ளது. நாம் ஒவ்வொருவரும் விசுவாசத்தின் பக்கமோ அல்லது அவிசுவாசத்தின் பக்கமோ நின்றாக வேண்டும்.

இயேசுவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? அவர் ஒரு தேவதூஷணம் கூறுபவராயிருந்தாரா? அவர் ஒரு பொய்யராயிருந்தாரா? அவர் ஒரு பைத்தியம் பிடித்தவராயிருந்தாரா? அவர் கர்த்தராக இருக்கின் றாரா? நீங்கள் முடிவு செய்ய வேண்டும்! "என்னவாக இருந்தாலும்" என்பது ஒரு தெரிவு அல்ல!

குறிப்புகள்

[1]Josh McDowell, *More Than a Carpenter* (Wheaton, Ill.: Living Books, 1977), 25. [2]C. S. Lewis, *Mere Christianity* (New York: Macmillan Co., 1943), 55-56. [3]Homer Hailey, *That You May Believe* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 25.

---

## "உவமை" (10:6)

"உவமை" (Parable) என்ற வார்த்தையானது ஒப்பிடுவதற்கு "அருகாக வைத்தல்" என்ற நேரடியான அர்த்தம் கொண்ட *parabole* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகின்றது. இவ்வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் ஐம்பது முறைகள் காணப்படுகின்றது - அவைகளில் இரண்டைத் தவிர மற்ற யாவையும் கருத்தொற்றுமை சுவிசேஷங்களிலேயே உள்ளன (மற்ற இரண்டும் எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் உள்ளன).

அவ்வார்த்தையானது யோவான் சுவிசேஷத்தில் இருப்பதில்லை, எனவே "parable" என்பது ஆங்கிலத்தில் உள்ளதாயிராது. 10:6ல் கிரேக்க வார்த்தை *paroimia* என்பதாகும். 2 பேதுரு 2:22ல் இது "proverb" என்று அர்த்தப்படுகின்றது, இது பழங்காலக் கிரேக்க இலக்கியத்தில் இதன் பொதுவான மரபுச் சொற்றொடரைக் கொண்டுள்ளது. அவ்வசனப் பகுதி தவிர, இது யோவான் சுவிசேஷத்தில் (புதிய ஏற்பாட்டில்) மட்டுமே காணப்படுகின்றது (10:6; 16:25, 29). இவ்விடத்தில் இது "விளக்கம் தேவைப்படுகிற 'மறைவான, தெளிவற்ற பேச்சு' " என்று அர்த்தப் படுகின்றது.[1] யோவான் 10:1-5ல் நாம் பெறுவது ஒரு "உவமை" (parable) அல்ல, ஆனால் அது ஒரு "உருவகம்" (allegory) ஆகும். *Paroimia* என்பது "பேச்சின் உருவகம்" என்று சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (NASB, NIV). யோவான் சுவிசேஷத்தில் உவமைகள் எதுவும் இல்லை என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகின்றது.

*Word Meanings in the New Testament,* vol. 2
ரால்ஃப் ஏர்ல்

குறிப்பு

[1]Friedrich Hauck, *"paroimia,"* in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Friedrich, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 5:856.

# "தேவனுடைய கிரியைகள் வெளிப்படும் பொருட்டு" (9:1–5)

*வாழ்க்கை என்பது ஒரு மாபெரும் திடீர் நிகழ்வாக, தற்செயலாய் ஏற்பட்ட ஒரு பெரிய விளையாட்டாக மட்டுமே இருக்கின்றதா? நமது வாழ்வில் நிகழ்ச்சிகள் ஏற்படுவது ஏன் என்ற கேள்வி மீண்டும் மீண்டும் முன் வைக்கப்படுகின்றது. இது மிகச் சிறந்த திரைப்படங்கள் மற்றும் இலக்கியங்களின் கருப்பொருளாக இருந்து வருகின்றது, மற்றும் துன்பம் இழப்பு ஆகியவற்றின் நேரங்களில் மக்களால் இக்கேள்வி கேட்கப் படுகின்றது. "ஏன்?" என்ற கேள்விக்கு இயேசு நமது வேதபாடப் பகுதியான 9:1-5ல் தனிச்சிறந்த வகையில் பதில் எடுத்துரைத்தார்.*

## கேள்வி *(9:1, 2)*

ஒரு நாள் இயேசு, தமது சீஷர்களுடன் தேவாலயத்தினருகில் நடந்து சென்று கொண்டிருந்தார், அப்பொழுது பிறவியிலிருந்து பார்வையற்றிருந்த ஒரு மனிதரை அவர் கடந்து சென்றார் *(9:1)*. அம்மனிதர் ஒரு பிச்சைக் காரராயிருந்ததால், அநேகமாய் அவர் அழுக்காகவும், அவரது உடை கந்தலாகவும் இருந்திருக்கும் மற்றும் அவர் மிகவும் நம்பிக்கையிழந்த நிலையில் இருந்தார். இயேசுவும் அவரது சீஷர்களும் எருசலேமில் இருந்த ஒவ்வொரு நாளிலும் பிச்சைக்காரர்களைக் கண்டார்கள்; ஆனால் பிறவியிலிருந்தே பார்வையற்றவராயிருந்த இந்த மனிதனைக் கண்ட நிகழ்ச்சியானது ஏதோ ஒரு காரணத்தினால் அவர்கள் இயேசுவிடம் ஒரு கேள்வி கேட்கக் காரணமாயிற்று.

அம்மனிதர் ஏன் பார்வையற்றவராகப் பிறந்தார் என்று இயேசு நினைத்தார் என்பதைப் பற்றி அவர்கள் அறிய விரும்பினார்கள் *(9:2)*. அது அம்மனிதரின் பாவத்தினாலா அல்லது அவரது பெற்றோரின் பாவத்தினாலா? பாவத்தின் காரணமாகவே துன்புறுதல் ஏற்படுகிறதென்பது எப்பொழுதும் அவர்கள் சிந்தையில் இருந்தது. இதன் விளைவாக, யாரோ ஒருவரின் பாவமானது அம்மனிதரின் பார்வையற்றுப் போனதற்குக் காரணமாயிருந்திருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். அது அம்மனிதரின் பாவமா? அப்படியென்றால் அவர் ஏன் பார்வையற்றவராகப் பிறந்தார்? புதிதாய்ப் பிறக்கின்ற ஒரு குழந்தையிடம் பார்வையற்ற

தன்மையை விளைவிக்கின்ற பாவம் எதுவும் நிச்சயமாய் இருக்க முடியாது. அம்மனிதரின் பெற்றோர் பாவம் செய்திருந்தார்களா? ஒருவேளை இருக்கலாம், ஆனால் அது அவரது பெற்றோரின் பாவமாயிருந்தால், அவர்களின் மகனான இவர் ஏன் அதனால் துன்புற வேண்டும்?

சீஷர்களின் கேள்வியானது, பாவம் துன்பத்திற்குக் காரணமாகின்றது என்ற அவர்களின் நம்பிக்கையில் வேர் பிடித்திருந்தது, அதாவது பாவத்திற்கும் துன்பத்திற்கும் ஒரு காரண - காரிய விளைவுத் தொடர்பு இருப்பதாக அவர்கள் நம்பியிருந்தனர். கடந்த காலத்தில் இந்தக் கண்ணோட்டமானது பொதுவானதாயிருந்தது. யோபு தமது பிள்ளைகள், தமது சொத்துக்கள் மற்றும் தமது உடல் நலம் ஆகியவற்றை இழந்த பொழுது அவரிடத்திற்கு வந்த அவரது நண்பர்களில் ஒருவர் அவருடன் துக்கப்பட்டார்,

> குற்றமில்லாமல் அழிந்தவன் உண்டோ?
> சன்மார்க்கர் அதம் பண்ணப்பட்டது எப்போ? இதை நினைத்துப்
> பாரும்.
> நான் கண்டிருக்கிறபடி, அநியாயத்தை உழுது, தீவினையை
> விதைத்தவர்கள் அதையே அறுக்கிறார்கள்.
> தேவனுடைய சுவாசத்தினாலே அவர்கள் அழிந்து,
> அவருடைய நாசியின் காற்றினாலே நிர்மூலமாகின்றார்கள்.
> சிங்கத்தின் கெர்ச்சிப்பும், துஷ்ட சிங்கத்தின் முழக்கமும் அடங்கும்;
> பால சிங்கங்களின் பற்களும் தகர்ந்துபோம்.
> கிழச் சிங்கம் இரையில்லாமையால் மாண்டுபோம்,
> பால சிங்கங்கள் சிதறுண்டுபோம் (யோபு 4:7-11).

துன்புறுதல் பற்றிய இதே விதமான கண்ணோட்டமொன்று, இயேசுவிடம் சிலர் "பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர் களுடைய பலிகளோடே கலந்திருந்தான்" (லூக். 13:1) என்பது பற்றிக் கேட்ட பொழுது வெளிப்படுத்தப்பட்டது. கலிலேயரை (பிலாத்து) கொலை செய்தது பற்றி இயேசு என்ன நினைத்தார் என்று கேட்பதற்கு அவர்கள் விரும்பினார்கள். கேள்வி கேட்டவர்களுடைய நோக்கம் எதுவாயிருந்தாலும், துன்புறுதலும் பாவமும் எப்பொழுதுமே காரண - காரிய விளைவைக் கொண்டிருப்பதில்லை என்பதைப் போதிப்பதற்கு இயேசு அந்தக் கேள்வியை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்; குறிப்பிட்ட துன்பமானது எப்பொழுதுமே தனது வேர்களைக் குறிப்பிட்ட பாவத்தில் கொண்டிருப்பதில்லை. பிறகு இயேசு இதே பிரச்சனையை எழுப்பிய இன்னொரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார். சீலோவாமிலே கோபுரம் இடிந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். அவர்களின் மரணத்திற்கு அவர்களின் பாவம் காரணமாயிருந்ததா? பிறகு இயேசு தமது கேள்விக்குத் தாமே பதில் அளித்தார்: "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக். 13:5).

இந்தக் கேள்வியைப் பற்றி யூத குருக்கள் தங்களுக்குள் பல ஆண்டுகளாக விவாதம் செய்திருந்தனர். அம்மி என்ற ரபீ, “பாவமற்ற மரணம் இல்லை, அக்கிரமமற்ற துன்புறுதல் இல்லை”[1] என்று கூறியிருந்தார். துன்புறுதல் என்பதைப் பாவத்தைக் கொண்டு விளக்கப்படுத்த முடியும் என்று அவரும் நம்பினார் என்பது தெளிவு.

இன்றைய நாட்களில் நமக்கு இந்தக் கண்ணோட்டமானது முதலில் விநோதமாகவும் அந்நியமாகவும் காணப்படலாம், ஆனால் ஆய்வு செய்து பார்க்கையில் நமது நம்பிக்கைகள் நாம் உணர்ந்தறிவதை விடவும் அதிகமாகவே அச்சீஷர்களின் நம்பிக்கைக்கு நெருக்கமாயிருப்பதை நாம் கண்டறிகின்றோம். சாவுக்கேதுவான வியாதி அல்லது பரிதாபமான விபத்துக்கள் ஆகியவற்றினால் தங்கள் சிறுபிள்ளைகளைப் பரிதாபமாகப் பறி கொடுத்த பெற்றோர்களை நான் அறிந்துள்ளேன். தொடக்க அதிர்ச்சிக்குப் பிறகு, இவர்கள் யாவருமே, தங்கள் பிள்ளைகளுக்கு இவ்விதமான துன்பங்கள் நடக்கக் காரணமாயிருக்கும்படி தாங்கள் என்ன செய்திருந்தோம் என்பதைக் கண்டறிய முயற்சி செய்யும்படி ஒரு நீண்ட காலமாக ஆராய்வதுண்டு. ஒருவேளை அது தங்களுடைய இளம் வயதின் போது செய்த பாவமாய் இருக்கலாம் என்று சிலர் நினைத்துள்ளனர். ஒருவேளை அவர்கள் அறியாமல் தேவனுக்கெதிராகப் பயங்கரமான சில வழிமுறையில் பாவம் செய்திருக்கலாம் என்று நினைத்தார்கள். சில பெற்றோர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இந்த எண்ணங்களினால் பல ஆண்டுகளாகத் தங்களையே சித்திரவதைக்குள்ளாக்கிக் கொள்கின்றனர் என்பது கவலைக் குறியதாக உள்ளது. பிறவியிலேயே பார்வையற்றிருந்த மனிதரைப் பற்றிச் சீஷர்கள் கேட்ட கேள்வியானது நமக்கு ஒருவேளை அந்நியமானதாய் இராது கூட இருக்கலாம்!

பேரழிவு தரும் துன்பங்களை நாம் எதிர்கொள்ளாதிருந்தாலும், நாம் இன்னமும் பாவம் துன்புறுதல் பற்றி ஒரு காரண - காரிய நம்பிக்கையைப் பற்றிக் கொண்டுள்ளோம் என்பதை சிலவேளைகளில் நமது பேச்சானது காட்டிக் கொடுக்கின்றது. சோதனைகள் அல்லது இடர்ப்பாடுகளை நாம் எதிர்கொள்ளுகையில், “இதைப் பெற நான் செய்தது என்ன?” என்று சில வேளைகளில் நாம் கேட்பதில்லையா? மகிழ்ச்சியற்ற சில விஷயங்கள் நமக்கு நடக்கும் பொழுது நாம் “இது சரியல்ல!” என்று உரக்கக் கூறும் ஒவ்வொரு முறையும் இதே சிந்தனையே சுட்டிக்காட்டப்படுகின்றது. நாம், வாழ்வில் ஒவ்வொரு விஷயமும் சரியானதாக/மனநிறைவானதாக இருக்கும்படி எதிர்பார்க்கின்றோமா? நல்ல நடத்தையின் விளைவாக எப்பொழுதுமே மகிழ்ச்சி உண்டாகின்றது மற்றும் பாவத்தின் விளைவாகவே எப்பொழுதும் வேதனை உண்டாகின்றது என்று நாம் நம்புகின்றோமா?

சீஷர்களின் கேள்வியை நாம் யாவருமே சில வேளைகளில் கேட்கின்றோம். நம்முடைய அல்லது பிறருடைய துன்பங்களை எதிர்கொள்ளும் பொழுது, நாம் இது ஏன் நடக்கின்றது என்று அறிய விரும்புகின்றோம். “ஏன்?” என்ற கேள்விக்கு வேத வசனங்களில் ஒருக்காலும் முழுமையாகப் பதில் அளிக்கப்படுவதில்லை. பலமுறை அக்கேள்வி கேட்கப்பட்டிருக்க,

எவரொருவருக்கும் முழுமையானதொரு விளக்கம் தரப்படவில்லை. யோபு அதைக் கேட்டார், மற்றும் தேவன் அவரிடத்தில், அந்தப் பதிலானது மனிதர் என்ற வகையில் அவருடைய புரிந்து கொள்ளும் திறனுக்கு அப்பாற்பட்டது என்று கூறியதன் மூலம் பதில் அளித்தார் (யோபு 40; 41). "என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான்'' (யோபு 42:5, 6). ஆபகூக் கேட்டார், ஆனால் அவருக்கு பதிலொன்று ஒருக்காலும் கொடுக்கப்பட வில்லை. கடைசியில், அவர் தாம் முழுமையாகப் புரிந்து கொள்ளா விட்டாலும் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருக்கத் தீர்மானித்தார்:

> அத்தி மரம் துளிர் விடாமற் போனாலும்,
> திராட்சச் செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும்,
> ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும்,
> வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும்,
> கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப் போனாலும்,
> தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும்,
> நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்,
> என் இரட்சிப்பின் தேவனுக்குள் களி கூருவேன்.
> ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்;
> அவர் என் கால்களை மான்கால்களைப் போலாக்கி,
> உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்
> (ஆபகூக் 3:17-19).

''ஏன்?'' என்ற கேள்விக்கு இம்மக்கள் ஒரு முழுமையான பதிலைப் பெறவில்லை, மற்றும் யோவான் 9ல் இயேசுவின் சீஷர்களும் அதைப் பெறவில்லை!

## பதில் (9:3)

அந்தப் பிச்சைக்காரர் பார்வையற்றவராய்ப் பிறந்தது ஏன் என்று கேட்கப்பட்ட பொழுது, இயேசு, "அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" (9:3) என்று பதில் அளித்தார். மனித துன்பத்திற்கான காரணம் பற்றி இயேசுவிடம் கேட்கப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட கேள்விக்குப் பதில் அளிக்க அவர் மறுத்து விட்டார். இந்தப் பாடக்கருத்து பற்றி தேவன் கூறுவதை நாம் முழுமையாய் புரிந்து கொள்ளச் சக்தியற்றவர்களாய் இருப்பதால் இவ்வாறு இருந்திருக்கலாம். காரணம் எதுவாயிருப்பினும், மனித துன்பத்திற்கான நோக்கத்தைக் கூறுவதை இயேசு தேர்ந்து கொண்டார். அந்த மனிதர் பார்வையற்றவராகப் பிறந்தது ஏன் என்பதை இயேசு அவருடைய சீஷர்களுக்குக் கூறாவிட்டாலும், அந்தப் பார்வையற்ற மனிதருடைய வாழ்வின் நோக்கம் பற்றி அவர்களுக்கு அவர் கூறினார்: "தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்."

இந்த விஷயத்தில் இயேசுவின் வார்த்தைகள் வாழ்வில் நமது முன்னுரிமைகளை அமைக்க நாம் சாய்கின்ற வழிமுறையுடன் மோதுகின்றன. அமெரிக்கர்களுக்கு அவர்களது நாட்டின் சட்டப் பிரகடனத்தில் அவர்கள், "வாழ்வு, உரிமை மற்றும் இன்பம் தேடுதல்" ஆகியவற்றிற்கு உரிமை கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. தனி நபரின் மகிழ்ச்சியை அடைதலே வாழ்வின் நோக்கம் என்று இது அர்த்தப்படுத்துவதாக மக்கள் பெரும்பாலும் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். நாம் இப்படிப்பட்ட கண்ணோட்டத்தை மேற்கொள்ளும் பொழுது, எல்லாத் துன்பங்களும் நமது மகிழ்ச்சிக்குத் தடையாகின்றன, மற்றும் அப்படிப்பட்ட விஷயமானது மிகவும் பயங்கரமானதாக உள்ளது. இருப்பினும், நாம் வாழ்வின் நோக்கத்தை "தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்துதல்" என்பதாகக் கண்ணோக்கினால், நமது துன்பங்களையும் நாம் நமது ஆசீர்வாதங்களைக் கண்ணோக்குவது போலவே கண்ணோக்குவோம்; அது தேவனை மகிமைப்படுத்துகின்ற ஒரு வழிமுறையாகும். அதுவே இயேசுவின் சீஷர்களுக்கு அவரது செய்தியாக இருந்தது. அந்தப் பார்வையற்ற மனிதர் பார்வையற்றவராகப் பிறந்தது ஏன் என்பதை அவர்களுக்கு அவர் கூறாதிருந்தாலும் கூட, அந்தப் பார்வையற்ற மனிதருடைய வாழ்வின் நோக்கத்தை அவர்களுக்கு அவர் கூறினார்: தேவனை மகிமைப்படுத்துதல்!

துன்பத்தில் "தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்தி"யிருக்கின்றவர்களைப் பற்றி நான் நினைக்கும் பொழுது, பல மக்கள் சிந்தையில் வருகின்றனர். ஒரு இளம் மனிதர் வரையறைக்குட்பட்ட மனவளம் உடையவராயிருந்தார். அவரது பெற்றோர் தங்கள் மகன் ஏன் இப்படிப் பிறந்தான் என்று தங்களுக்குத் தாங்களேயும், தேவனிடத்திலேயும் இலட்சக்கணக்கான முறைகள் கேட்டிருந்திருக்க வேண்டும் என்பது உறுதி. அவர்களின் மகன் ஒரு பிரசங்கத்தின் முடிவில் அழைப்புக்குப் பதில் செயல் செய்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட இரவை நான் எப்பொழுதும் நினைவில் வைத்திருப்பேன். அவர் இயேசுவில் கொண்டிருந்த தமது விசுவாசத்தை "நான் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகின்றாரோ, அதைச் செய்ய விரும்புகின்றேன்" என்ற அழகிய எளிமையுடன் அறிக்கையிட்டுக் கூறிய பொழுது அங்கு கூடியிருந்த சபையினரின் கண்கள் யாவும் பனித்தன. அந்தக் கணத்தில் தேவனுடைய கிரியையானது அந்த இளைஞரின் வாழ்வில் வெளிப்படுத்தப்பட்டது.

ஒரு பிரசங்கியாருக்கு வலிவைக் குறைக்கும் தீவிர நோய் ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்ட பிறகு அவரது பிரசங்கத்தை நான் ஒருமுறை கேட்டதையும் நினைத்துப் பார்க்கின்றேன். அவர் தேவனிடத்தில் தாம் குணமாக வேண்டும் என்று ஜெபித்ததாகச் சபையாரிடம் கூறினார்; ஆனால் அவர் குணமடைய முடியாது போகுமென்றால், எப்படி மரிப்பது என்பதைச் சபையாருக்குக் காண்பிக்க தேவன் அவருக்கு உதவ வேண்டும் என்பதே அவரது ஜெபமாயிருக்கும் என்று அறிவித்தார். ஒரு சில மாதங்களுக்குப் பிறகு அவர் அதையே செய்தார்; அவரது மரணத்தில் தேவனுடைய கிரியையானது வெளிப்படுத்தப்பட்டது!

பல ஆண்டுகளாகப் புற்று நோயினால் வேதனைப்பட்டு தற்சமயம்

கர்த்தரிடம் சென்றுள்ள ஒரு கிறிஸ்தவப் பெண்மணி, துன்பத்தில் தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்திய இன்னொரு எடுத்துக்காட்டாக இருக்கின்றார். மக்கள் ''ஏன்?'' என்று கேட்பதை நான் பலமுறை கேள்விப்பட்டுள்ளேன். அநேக ஆண்டுகளாக அவளது சுகவீனத்தை நான் திரும்பி பார்க்கும் போது, தங்கள் நல்ல ஆரோக்கியத்தில் ஒரு சில மக்களே செயல்படுத்தியுள்ள வழிமுறையில் அவள் தனது வியாதியில் தேவனுடைய கிரியையைச் செயல்விளக்கப்படுத்தினாள் என்று நான் நம்புகின்றேன்.

சிலுவையில் தொங்கிய இயேசுவே நோக்கத்துடன் வாழ்வதற்கான நிறைவான எடுத்துக்காட்டாக உள்ளார். அது நியாயமற்றதாக, மற்றும் கொடூரமானதாக இருந்தது. பல வகையில் அது துன்பமானதாக இருந்தது; இருப்பினும் தமது வாழ்விலும் மரணத்திலும் "தேவனுடைய கிரியைகள் வெளிப்படும்படியாக'' இயேசு சிலுவையிலே தொங்கினார். இயேசு சிலுவையில் துன்புற வேண்டியிருந்தது ஏன் என்பதை விளக்கக் கூடிய எவரையும் நான் ஒருக்காலும் சந்தித்ததில்லை. நாம் பரலோகத்தைச் சென்றடையும் வரை அதை முழுமையாகப் புரிந்து கொள்வோம் என்று நான் நம்பவில்லை. இருப்பினும், இயேசு சிலுவையில் மரிக்கச் சென்ற காரணத்தினால் தேவனுடைய கிரியையானது ஒரு அற்புதமான வழி முறையில் வெளிப்படுத்தப்பட்டது என்ற உண்மையை ஒரு சிறு குழந்தையும் கூட மதிக்க முடியும். அவர் தேவனுடைய நோக்கத்திற்காகவே வாழ்ந்து மரித்தார்.

தேவன் நம்மை விட்டுத் திரும்பிக் கொள்வதற்கும் மற்றும் தேவனுடைய மகிமைக்கென்று நாம் நேர்மறையாகப் பயன்படுத்த முடியாமைக்கும் காரணமாயிருக்கக் கூடிய சில விஷயங்கள் என்று நாம் நம்புபவற்றை நாம் யாவருமே எதிர்கொள்ளுகின்றோம். சிலர், ''ஆனால் நான் விவாகரத்துப் பெற்றுள்ளேனே''; ''நான் எனது திருமண வாழ்வில் போராடுகின்றேனே''; ''எனது பிள்ளைகளுடன் எனக்குப் பிரச்சனை உண்டே"; "நான் சுகவீனமாய் இருக்கின்றேனே" அல்லது "நான் மிகவும் முதியவனாக/இளைஞனாக இருக்கின்றேனே'' என்று கூறலாம். நமது உலகினுள் நடந்து வரும் இயேசு நம்மிடம், ''நீ இப்பொழுது எதிர்கொண்டுள்ள சிரமங்களை ஏன் எதிர்கொண்டுள்ளாய் என்று நான் உனக்குக் கூறப்போவதில்லை, ஆனால் நான் இதை உனக்குக் கூறுவேன்: உனது பிரச்சனைகள் எதுவாய் இருந்தாலும் உனது வாழ்வில் - ஒருவேளை உனது பிரச்சனைகளின் நிமித்தமாகவே - தேவனுடைய கிரியையானது வெளிப்படுத்தப்படக் கூடும்!" என்று கூறுகின்றார்.

இதற்குப் பவுல் ஒரு எடுத்துக்காட்டாக உள்ளார், அவர் தமது ''மாம்சத்தில் இருந்த முள்'' *(2 கொரி. 12:7)* ஒன்றினால் வாதிக்கப் பட்டிருந்தார். அதை நீக்கும்படி கர்த்தரிடத்தில் மூன்று முறை அவர் வேண்டிக் கேட்டார். அவர் தமது துன்பத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டால் தேவனுக்கென்று இன்னும் எவ்வளவு அதிகமாய் ஊழியத்தை நிறைவேற்ற முடியும் என்று பவுல் கற்பனை செய்திருப்பார் என்று நான் உறுதியாய்க் கூறுவேன், இருப்பினும் பவுலின் மாம்சத்தில் இருந்த முள்ளை நீக்கிப் போடக் கர்த்தர் மறுத்து விட்டார். அதற்குப் பதில், தேவன்

பின்வரும் செய்தியை அவருக்குக் கொடுத்தார்: "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரி. 12:9). கடைசியில் பவுல், பலம் மற்றும் நல்ல உடல் நலம் ஆகியவற்றின் மூலமாகத் தாம் செய்வதைக் காட்டிலும், பலவீனத்தின் மூலமாகத் தேவனுடைய வல்லமையைச் சிறந்த முறையில் செயல்விளக்கப்படுத்த முடியும் என்ற தேவனுடைய தீர்மானத்தை ஏற்றுக் கொண்டார். துன்பத்தை சமாளிப்பதற்கு, நாம் பின்பற்றும்படியாக ஒரு முன்மாதிரியை பவுல் இதில் நமக்குக் கொடுத்திருக்கிறார். முதலில், நாம் நமது வேதனையிலிருந்து விடுவிக்கும்படி தேவனைக் கேட்கின்றோம். இதுவே வேதனைக்கான நமது இயல்பான மனித எதிர்ச் செயலாக உள்ளது, மற்றும் விடுதலைக்காகக் கதறுவது சரியானதாகவே உள்ளது. இருப்பினும், தேவனிடத்தில், "எது வந்தாலும் சரி, நீர் என் வாழ்வில் மகிமைப்பட வேண்டும்" என்று கூறுவதே கிறிஸ்தவர்களுக்கு இரண்டாவது படியாக உள்ளது. நமது சூழ்நிலைகள் எதுவாயிருந்தாலும், நாம் யாவரும் தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட முடியும்!

டேவ் டிராவெக்கி அவர்கள் புற்று நோய்க்கெதிராக போராடிய பிறகு பேஸ்பால் விளையாட்டில் திரும்பவும் பிரபலமாக வந்த பிறகு சான்பிரான்சிஸ்கோவின் மாபெரும் பேஸ்பால் விளையாட்டுக் குழுவிற்காக அவர் மிகச் சிறந்த விளையாட்டு வீரராக விளையாடிப் பணியாற்றியதை முடிக்குமளவுக்கு ஒரு காயத்தினால் துன்புற்றார். பிற்பாடு அவர் பின்வருமாறு எழுதினார்:

> துன்பம் நம்மை ஒரு - வழிக் கதவின் வழியே தள்ளுகின்றது, மற்றும் நாம் அதனுள் ஒருமுறை கடந்து சென்ற பிறகு, அந்தத் துன்பத்திற்கு முன்பிருந்த வாழ்க்கை வழிமுறைக்கு ஒருபோதும் நாம் திரும்ப முடிவதில்லை ... அவ்விதம் செய்ய நாம் எவ்வளவு கடின முயற்சி மேற்கொண்டாலும், நாம் திரும்பிச் செல்ல முடிவதில்லை. நாம் செய்ய முடிவதெல்லாம், ஒரு காலத்தில் இருந்த நன்மை, நாம் பெற்றிருந்த மகிழ்வான வேளைகள், சிரிப்பு, அன்பு, நாம் பகிர்ந்து கொண்ட இனிய நினைவுகள் ஆகியவற்றிற்காக நன்றி செலுத்துவது மட்டுமேயாகும். பிறகு, அவ்வேளைகள் மற்றும் நம்மேல் அன்பு கொண்டவர்கள் யாவருக்கும் பிரியாவிடை கூறி, சூரியனுக்கும் சந்திரனுக்கும் விண்மீன்களுக்கும் சுற்று வட்டப்பாதைகளைக் கொடுத்தவருடைய கரத்துடன் நமது கரத்தை இணைத்துக் கொண்டு, நமது வாழ்விற்கு அவர் ஒரு ஓட்டத்தைக் கொண்டுள்ளார் என்று நம்பிக்கையாய் இருப்பதே நாம் செய்யக் கூடியதாகும்.[2]

## முடிவுரை

உலகில் பின்வரும் கேள்வி நிலைநிற்கின்றது: "வாழ்வு என்பது அர்த்தம் கொண்டுள்ளதா? அல்லது இது யாவும் தற்செயலான ஒரு விளையாட்டுத் தானா?" இந்தக் கேள்விக்கு உலகத்தாரிடம் பதில் இல்லாதிருக்கலாம், ஆனால் இயேசுவின் பின்பற்றாளர்களிடம் பதில் உண்டு. இவ்வுலகில் நமக்கு என்னதான் நடந்தாலும் தேவனுடைய மகிமைக்கு நாம்

பயன்படும்படியாக இருக்கவே நடக்கின்றன என்று நாம் அறிகின்றோம். நமது சூழ்நிலைகள் எதுவாயிருப்பினும் "தேவனுடைய கிரியைகள் நம்மில் வெளிப்படும்படி" வாழ்வோம்!

---

குறிப்புகள்

[1]Leon Morris, *The Gospel According to John*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 478.

[2]Dave Dravecky, *When You Can't Come Back* (Grand Rapids, Mich.: Zondervan, 1992), 159.

# “இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்” [9:6–41]

*“பதில் அளிக்கப்பட்ட ஜெபங்கள்”* சில வேளைகளில் நமது வாழ்வைச் சிக்கலாக்கி விடக் கூடும். நமது வாழ்வைச் சிறப்படையச் செய்யும் என்று நாம் நம்பியுள்ள சில விஷயங்கள் உண்மையில் நமது வாழ்வை அதிகம் கடினமானதாக்கி விடுபவைகளாய் இருக்கும். எடுத்துக்காட்டாக, லாட்டரியில் பரிசு வெல்லும் மக்களைப் பற்றிய விஷயத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, *நியூயார்க் டைம்ஸ் ஞாயிறு பத்திரிக்கையானது*[1] லாட்டரியில் பரிசு வெல்லுபவர்களைப் பற்றிய வரலாறு ஒன்றை வெளியிட்டு, லாட்டரியில் பரிசு வென்றது அவர்களுடைய வாழ்வை எவ்விதம் பாதித்தது என்று விளக்கப்படுத்திற்று. லாட்டரியில் பரிசு வெல்வது என்பது கலப்பானதொரு ஆசீர்வாதம் என்று இம்மக்கள் கருதியதாக அவர்கள் கண்டறிந்தனர். நல்ல வீடுகளையும் கார்களையும் வாங்குவதற்கு இப்பணம் அவர்களை அனுமதித்தது, ஆனால் இது எதிர்பாராத பிரச்சனைகளையும் அவர்களுக்குக் கொண்டு வந்தது.

லாட்டரியில் பரிசு வென்ற பலர், கடன்கள் தேவைப்பட்ட நீண்ட நாள் உறவினர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பைத் தவிர்ப்பதற்காகத் தாங்கள் கொண்டிருந்த தொலைபேசி எண்கள் அட்டவணையிலிருந்து பல எண்களை நீக்க வேண்டியதாயிற்று, தங்களுக்குச் சாதகமான நிலைகளை வாக்களித்த “முழுநிறைவான” முதலீட்டு ஆலோசனைகளைத் தரும் நிதி ஆலோசர்களை தவிர்க்க வேண்டியதாயிற்று, மற்றும் பணம் தேவைப்பட்ட மக்கள் தங்களின் துர்அதிர்ஷ்டவசமான கதைகளைக் கூறுவதைக் கேட்பதையும் அவர்கள் தவிர்க்க வேண்டியதாயிற்று. குறிப்பாக, மின் பொறியாளராயிருந்த டொனால்டு பிளேக்கிலி என்பவர் 1982ல் சுமார் 19 கோடி ரூபாய் லாட்டரி பரிசு பெற்றார். அவர் அந்த செல்வத்தை மகிழ்வுடன் அனுபவித்தாலும், பணமானது தனது உறவுமுறைகளை மாற்றிவிட்டது குறித்து அவர் புலம்பினார். பிளேக்கிலிக்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய் கடன் பட்டிருந்த நண்பர் ஒருவரிடத்தில் இவர் கடனைத் திருப்பித் தரும்படி கேட்ட பொழுது, அவர் இவர் மீது வெறுப்புணர்வு கொண்டார். அந்த நண்பர், “19 கோடி ரூபாய் வைத்துள்ள நீங்கள் ஏன் அற்பத் தொகையான ஒரு லட்ச ரூபாய்க் கடனைத் திருப்பிக் கேட்கின்றீர்கள்?” என்றார். பிளேக்கிலி, “பணத்தை இழப்பது எனது மனதிற்கு மிக கவலையாய் இருந்தாலும், ஒரு நண்பரை இழப்பது என்பது அதைவிட மிகவும் கவலையாக உள்ளது” என்று கூறினார். மேலும் அவர், தன்னுடன் பணியாற்றியவர்கள் தாம் லாட்டரியில் பரிசு வென்றதைக்

குறித்து முதலில் மகிழ்ச்சியடைந்தனர் ஆனால் ஆறு மாதங்களுக்குப் பின் அவர்கள் மகிழ்ச்சி பொறாமையாக மாறிற்று என்றும் இதன் விளைவாக அவர் தமது வேலையை விட்டு விட வேண்டியதாயிற்று என்றும் கூறினார். ''பதில் அளிக்கப்பட்ட ஜெபமானது'' சில வேளைகளில் வாழ்வைச் சிக்கலாக்கக் கூடும்.

பிறவியிலேயே பார்வையற்றவராயிருந்த மனிதரை இயேசு எதிர் கொண்ட அந்த நாள் அம்மனிதரின் வாழ்வில் மிகவும் அற்புதம் நிறைந்த நாளாய் இருந்தது. பார்வையற்ற ஒவ்வொரு மனிதரும் பார்வை பெறும் படியாகவே ஜெபித்திருக்கின்றனர். இந்த மனிதர் தாம் பார்வையுள்ள வராயிருந்தால் என்ன செய்வார் என்பது பற்றி அடிக்கடி கனவு கண்டிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. பிறகு ஒரு நாள், எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒரு மனிதர் (இயேசு) அவரிடம் வந்து எல்லா வற்றையும் மாற்றினார். இயேசு தரையிலே உமிழ்ந்து சேறுண்டாக்கி அந்தச் சேற்றை அம்மனிதரின் கண்களில் பூசி, சீலோவாம் குளத்தில் சென்று கழுவும்படி கூறினார் (9:6). ''அப்படியே அவன் போய் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்'' (9:7ஆ) என்று யோவான் அறிக்கை தந்தார். பார்வையற்றிருந்த அந்த மனிதரின் மாபெரும் ஜெபங்கள் பதில் அளிக்கப்பட்டிருந்தன! அம்மனிதர் தம் வாழ்வில் மிகக் கடினமான காலத்தின் தொடக்க நாள் அது தான் என்பதைப் பற்றி மிகவும் சிறிதளவே உணர்ந்திருந்தார்!

இந்தப் பாடத்திற்கான நமது வேத வசனப் பகுதியான 9:6-41, விசுவாசச் சாலையில் இருந்த ஒரு மனிதரின் வரலாற்றை எடுத்துரைக்கின்றது. இயேசு இவ்வரலாற்றை இயங்கச் செய்து, முடிவில் அதற்கு நிறைவாக கட்டளையும் விளக்கமும் தரத் திரும்பிய வேளையில், இவ்விபரமானது ஒரு காலத்தில் பார்வையற்றிருந்த மனிதர் மீதும், இயேசுவின் மீது அவர் கொண்ட விசுவாசப் பயணத்தின் மீதும் குறிப்பாய்க் கவனம் செலுத்திற்று. இவ்வசனப் பகுதியானது படிப்படியாய் விசுவாச வளர்ச்சி பெற்ற அம்மனிதரின் கூற்றுக்களினால் வசீகரிக்கத்தக்க ஒரு வகையில் சிறப்பிக்கப்படுகின்றது.

## "நான்தான் அவன்" (9:6-9)

அம்மனிதர் தமது பார்வையற்ற நிலையிலிருந்து குணப்படுத்தப்பட்ட உடன், நம்ப முடியாத அந்த நிகழ்ச்சி பற்றி அவரது அயலகத்தார் விவாதிக்கத்தொடங்கினர். சிலர், "இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தவன் அல்லவா?" (9:8) என்று கேட்டார்கள். அதற்குச் சில மக்கள், "அவன் தான்" என்றார்கள், வேறு சிலர் "அவனுடைய சாயலா யிருக்கிறான்" என்றார்கள் (9:9). அவர்களின் விவாதமானது, ஒரு குடும்பத் தார் தங்களுக்கு மிகவும் அன்பாயிருக்கும் ஒருவர் மருத்துவமனையில் இருக்கையில் அந்நோயாளியின் முன்னிலையிலேயே அவரைப் பற்றிப் பேசி ஆனால் அவரைக் காணாது விட்டது போல உள்ளது! "அவர் எப்படி யிருக்கிறார் என்று நீங்கள் நினைக்கின்றார்கள்?" "அவர் இன்று சற்றுத் தேறியிருக்கிறார் என்று நான் நினைக்கின்றேன்." "ஓ! அதைப் பற்றி நான்

நிச்சயமாய் எதுவும் கூற முடியாது. இன்று அவர் அவ்வளவு சுகமாய்க் காணப்படவில்லை!" "மருத்துவர் என்ன கூறினார்?" "இவர் பிழைப்பார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?"

கடைசியில், குணமாக்கப்பட்ட மனிதர் தனக்காகத் தானே பேசி, "நான்தான் அவன்" (9:9) என்றார். அவர் தாம் புறக்கணிக்கப்படும்படி அனுமதிக்கவில்லை. பல ஆண்டுகளாய் அவர் பார்வையற்ற ஒரு பிச்சைக்காரராய் இருந்தாலும், ஒரு சில விஷயங்களில் அவர் நிபுணராய் இருந்தார், அவற்றில் ஒன்று தம்மைப் பற்றியதாகும்! அவர் தாம் பார்வையற்றிருந்தது உறுதி என்றும் இப்பொழுது தாம் பார்வை பெற்றுள்ளதையும் உறுதி என்றும் கருதினார், எனவே அவர், தாம் உண்மையென்று அறிந்ததைக் கூறினார்: "நானே அந்த மனிதன்!"

நம் ஒவ்வொருவருக்கும் கூட விசுவாசப் பயணமானது தனி நபர்கள் என்ற வகையில் நம்மைப் பற்றி நமக்கு ஏற்படுகின்ற விழிப்புணர்வுடன் தொடங்கலாம். நீங்கள் உங்கள் மேல் அதிகாரமுடையவராய் இருக்கின்றீர்கள். நீங்கள் ஒரு தனிநபர் என்பதிலும், உயிர் வாழும் ஒரு ஆத்துமா என்பதிலும் நிச்சயமாய் இருக்க முடியும். அறிவியல் அறிஞர்கள் உங்களைப் பற்றி ஒன்றும், உங்கள் முதலாளி உங்களைப் பற்றி மற்றொன்றும், மற்றும் உங்கள் குடும்பத்தினர் இன்னும் மற்றொன்றும் உங்களைப் பற்றிக் கூறலாம். இருந்த போதிலும், நீங்கள் வாழ்கின்றீர்கள், நீங்கள் ஒரு ஆவிக்குரிய ஜீவியாய் இருக்கின்றீர்கள், மற்றும் நீங்கள் இன்னும் முழுமையாய்ப் பெற்றிராத சிலவற்றை நீங்கள் தேடிக் கொண்டுள்ளீர்கள் என்று நீங்கள் அறிவீர்கள். விசுவாசச் சாலையில் நாம் பயணத்தைத் தொடங்குகையில், "நான் ஒரு மனிதன்!" என்று அறிவிக்கின்றோம்.

## "இயேசு சேறுண்டாக்கினார்" (9:10-12)

அம்மனிதனைத் தேவாலயத்தினருகில் பார்வையற்ற பிச்சைக்காரராய்க் கண்டிருந்தவர்களுக்கு, அம்மனிதரின் கூற்றானது அற்புதத்தினால் தொடக்கம் பெற்ற குழப்பத்தைத் தெளிவாக்கவில்லை. இந்தப் புதிரின் பகுதிகள் அவர்களின் சிந்தைகளில் ஏற்ற வகையில் பொருந்தி வரவில்லை. இப்படிப்பட்ட அற்புதங்கள் தினந்தோறும் - அல்லது என்றைக்காவது ஒரு நாளில் - நடைபெற்றதை அவர்கள் இதற்கு முன் கண்டதில்லை! வியக்கத்தக்க இந்நிகழ்ச்சி எவ்வாறு நடைபெற்றது என்று அவர்கள் அம்மனிதரைக் கேட்டனர். அவர் தம் கதையை எளிமையான, நேரடியான முறையில் கூறினார்: "இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன்" (9:11).

சமூகத்தில் பதவியோ அல்லது செல்வமோ இல்லாத இம்மனிதர், குறிப்பிட்ட சில கருத்துக்களில் உலகத்தின் மாபெரும் நிபுணராக இருந்தார் என்பதைச் செயல் விளக்கப்படுத்தினார். அவர் தாம் யார் என்பதில் மற்றும் தாம் அனுபவித்திருந்தது என்ன என்பதில் மிகுந்த நம்பிக்கையுடைவராயிருந்தார். அதே வழிமுறையில், விசுவாசப் பயணத்தில் உள்ள

எல்லா மக்களும் தங்கள் சொந்த வாழ்வில் நிபுணர்களாய் உள்ளனர். சிலர், "நான் இயேசுவைச் சந்திக்கும் முன்பு கசப்புணர்வுள்ளவனாயிருந்தேன்" என்று கூறக்கூடும். மற்றவர்கள், "இயேசு என்னை விடுவிக்கும்முன்பு நான் கட்டுப்பாடின்றி (அல்லது மாபெரும் வருத்தத்தில் அல்லது குடிகாரனாய்) இருந்தேன்'' என்று அறிவிக்கலாம். இப்படிப்பட்ட விஷயங்கள் பற்றி நீங்கள் மாபெரும் உறுதிப்பாட்டுடன் பேச முடியும், ஏனெனில் உங்கள் மேல் அதிகாரம் கொண்டவரும் மற்றும் உங்கள் வாழ்வில் இயேசு என்ன செய்துள்ளார் என்பதை அனுபவித்துள்ள யாவரும் நீங்கள் ஒருவரே ஆவீர்கள். இதை ஒருவரும் உங்களிடமிருந்து எடுத்துப் போட முடியாது!

## *"அவர் தீர்க்கதரிசி" (9:13-17)*

பிறவியிலேயே பார்வையற்றிருந்த மனிதருக்கு நடந்த விஷயமானது அவருடன் பழக்கமாயிருந்தவர்களுக்கு இன்னும் அறிவுப்பூர்வமானதாகக் காணப்படவில்லை, எனவே அவர்கள் அம்மனிதரை, மதக் கருத்துக்களில் நிபுணர்களான பரிசேயர்களிடம் கொண்டு சென்றனர். இயேசு அம்மனிதரைக் குணப்படுத்தியிருந்த நாள் ஓய்வுநாளாய் இருந்தது, அது யூதர்களுக்கு இளைப்பாறுதலுக்கான பரிசுத்த நாளாகும். இது அவர்களுக்கு ஒரு மாபெரும் சிரமத்தை முன் வைத்தது. ஓய்வுநாளில் குணமாக்குதல் எதையும் பற்றிச் சந்தேகம் கொண்டவர்களாக, அவர்கள் அம்மனிதரிடம் அவருக்கு நடந்தவற்றை மீண்டும் கூறும்படி கேட்டார்கள். அவர் அவ்வாறே கூறிய பொழுது, ''அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக் கொள்ளாததால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல" *(9:16)* என்று முடிவு செய்தார்கள். குணமாக்கும் நிகழ்ச்சியை ஆர்வத்திற்குரியதாகக் கண்ட பரிசேயர்களின் சிந்தையில் இது பிரச்சனையை அமர்த்தியிருந் திருக்கலாம். இருப்பினும், அம்மனிதருடன் பழக்கம் கொண்டிருந்த மக்கள், பரிசேயர்களின் பதிலால் திருப்தியடையவில்லை. யாராவது ஒருவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் இப்படிப்பட்ட ஆச்சரியமான ஒரு அற்புதத்தை எப்படிச் செய்ய முடியும் என்று அவர்கள் வியப்படைந்தனர்.

மக்கள் இச்சூழ்நிலையைத் தொடர்ந்து விவாதிக்கையில், "அவர்களுக் குள்ளே பிரிவினை உண்டாயிற்று" *(9:16)*. யோவான் சுவிசேஷம் முழுவதி லும் இயேசு தம்மைக் குறித்த ஒரு முடிவை நோக்கி மக்களை நிலையாகத் தள்ளிக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். மக்கள் தம்மைக் கண்டு கொள்ளாது விடுவதில் இயேசு திருப்தி கொள்ளாமல், அவர்கள் ஆதாரத்தைக் கவனித்து, தாம் தேவனிடத்திலிருந்து வந்தவரா அல்லது சாத்தானிடத்திலிருந்து வந்தவரா என்பதை முடிவு செய்யும்படி இயேசு வலியுறுத்தினார். இயேசு மற்றும் யோவான் ஆகியோரைப் பொறுத்த மட்டில் இரண்டுக்கும் பொதுவான நிலை என்று ஒன்றும் இருந்ததில்லை.

சலிப்புற்ற மக்கள், பிறவியிலிருந்தே பார்வையற்றவராய் இருந்திருந்த மனிதரிடம் மீண்டும் திரும்பி, அவர் இதைப் பற்றி நினைப்பதென்ன என்று கேட்டனர். விசுவாசத்தை நோக்கிக் குறிப்பிடத் தக்க இன்னொரு அடி எடுத்து வைத்த நிலையில் அம்மனிதர், "அவர் தீர்க்கதரிசி" *(9:17)* என்று

பதிலுரைத்தார். இதைக் கூறியதில் அந்த முன்னாள் பிச்சைக்காரர் - தம்மைப் பற்றியல்ல, ஆனால் தம்மைக் குணப்படுத்தியிருந்த மனிதரைப் பற்றி - ஒரு உறுதிப்பாட்டை ஏற்படுத்தினார். இம்மனிதர் (இயேசு) தேவனிடமிருந்து வல்லமையைப் பெற்றிருந்தார் என்பதே இவரது முடிவாயிருந்தது. இயேசு பொல்லாதவராயிருந்தார் என்று பரிசேயர்கள் எவ்வளவுதான் கூறினாலும், பார்வையற்றவராய்ப் பிறந்த இம்மனிதர், அவர் (இயேசு) நல்லவர் என்றும் அவரது வல்லமை தேவனிடமிருந்து வந்தது என்றும் உறுதியாக நம்பியிருந்தார்.

## *"ஒன்றுதான் எனக்குத் தெரியும்" (9:18-25)*

பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த மனிதரின் ஒவ்வொரு கூற்றுடனும் குழப்பமான நிலை வளர்ந்தது. இயேசு தேவனிடத்திலிருந்து வந்த தீர்க்கதரிசி என்ற (பார்வையற்ற மனிதராகிய) அவரின் விசுவாசத்தைப் பரிசேயர்கள் முற்றிலுமாகப் புறக்கணித்தனர். சிலர், இம்மனிதர்தான் உட்கார்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தவரா என்று கூடச் சந்தேகப்பட்டனர். ஆகையால் அவர்கள் அவரது பெற்றோரை அழைத்து அவர்களை விசாரித்தனர். "உங்கள் குமாரன் குருடனாய்ப் பிறந்தான் என்று சொல்லுகிறீர்களே, அவன் இவன்தானா? இவனானால், இப்பொழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான்?" (9:19). அம்மனிதரின் பெற்றோர் பயம் அடைந்தனர். எல்லாரும் அவர்களைக் கவனிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை, மற்றும் சம்பவங்கள் முழுவதுமே அவர்களைப் பயமுறுத்தின. இயேசுவை ஆதரித்து எவராது சிலவற்றைப் பேசினால் கூட அப்படிப் பேசியவர் ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்கப்படுவார் என்று கூட அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர் (9:22). தங்கள் நண்பர்கள், குடும்பத்தார் ஆகியோரையும், தங்கள் பிழைப்புக்கான வழியையும் இழந்து விடுவோம் என்ற பயத்தில் (நீண்ட காலத்திற்கு முன்பே தங்கள் மகனைப் பிச்சையெடுத்து வாழும்படிக் கை விட்டுவிட்ட இந்தத்) தாயும் தகப்பனும் மீண்டும் ஒருமுறை தங்கள் மகனை இம்மோதலில் கை விட்டு விட்டனர்: "இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான்" (9:21) என்று அவர்கள் கூறினார்கள். அவர்களின் மகனுக்குப் பார்வை என்ற கொடை அளிக்கப்பட்டிருந்ததால் அந்த நாள் அவர்களின் வாழ்விலேயே மிகவும் மகிழ்ச்சியான நாளாய் இருந்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக அது பயம் மற்றும் வெட்கத்தின் நாளாயிற்று.

கேள்வி கேட்டவர்கள் மீண்டுமாக அம்மனிதரிடம் திரும்பி, அவர் எப்படிப் பார்வையடைய முடிந்தது என்பதை விளக்கும்படிக் கேட்டனர். "தேவனை மகிமைப்படுத்து" என்று அவர்கள் வற்புறுத்தினர். இந்தச் சொல்விளக்கத்திற்கும் தேவனை ஆராதித்தல் அல்லது துதித்தல் என்பதற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது, "உண்மையைச் சொல்" என்று கூறுவதற்கான யூதருடைய ஒரு வழிமுறையாக இது இருந்தது.[2] இது ஒரு குற்றவாளி தான் குற்றம் செய்திருந்ததை ஒவ்வொருவரும் உறுதியாக அறிந்திருந்தும், இன்னமும் அக்குற்றத்தை ஒப்புக் கொள்ளாத நிலையில்

இருக்கையில் அவனிடத்தில் பேசும் வழிமுறையாயிருந்தது. பார்வையற்றுப் பிறந்த அம்மனிதன் மீது சலிப்பு, கோபம் மற்றும் பொறுமையற்ற தன்மை வளர்ந்ததை அவர்களது வார்த்தைகள், சுட்டிக்காட்டுகின்றன.

நாம் முன்பே கண்டுள்ளபடி, இம்மனிதர் தம்மிடம் கேள்வி கேட்டவர்களுக்குப் பதில் அளித்த பொழுது, அமைதியுடனும் நிச்சயமான நம்பிக்கையுடனும் பதில் அளித்தார். அவர்களிடத்தில் அவர், "அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" (9:25). மதரீதியான விவாதத்தின் பல பகுதிகளில் இம்மனிதரால் நிலைநிற்க முடியாதிருந்திருக்க வேண்டும். அவர் பயமுறுத்தப்பட்ட பொழுது, உண்மைகளின் பக்கமாய்ப் பின்வாங்கி விழுந்தார்: "… நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்."

## "அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர்" (9:26-34)

பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த மனிதரின் பிடிவாதமான உறுதியினால் சலிப்படைந்த பரிசேயர்கள் கேள்வி கேட்கும் செயல்முறையைப் புதிதாய் (மீண்டும்) தொடங்கினர் (9:26). சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாட்டுப் பயணம் ஒன்றில் நான் சந்தித்திருந்த வன்முறையாளர்களுக்குக்கெதிரான செயல்முறைகளை அவர்களின் தந்திரங்கள், எனக்கு நினைவூட்டுகின்றன. விமானப் போக்குவரத்துப் பணியாளர்கள் ஒவ்வொரு பயணியையும் தனியே அழைத்துக் கேள்விகள் பலவற்றைக் கேட்டார்கள். பிறகு, ஒரு சில நிமிடங்கள் கழித்து இன்னொரு பணியாளர் எங்களிடத்தில் அதே கேள்விகளைக் கேட்டார். கடைசியில், மூன்றாவது பணியாளர் ஒருவர் மீண்டும் ஒருமுறை அதே கேள்விகளைக் கேட்டார்! பிற்பாடு அந்த மூன்று பணியாளர்களும் ஒன்று கூடி நின்று தங்களின் குறிப்புகளை ஒப்பிட்டுப் பார்த்து நாங்கள் அம்மூவருக்கும் ஒரே விதமான பதிலை அளித்துள்ளோமா என்று சரி பார்த்தார்கள். அந்த நாளில் நாங்கள் கொண்டிருந்த அதே உணர்வை இந்தப் பார்வையற்றிருந்த மனிதர் கொண்டிருந்திருக்க வேண்டும்.

அதே கேள்வியை மீண்டும் எதிர்கொண்ட அம்மனிதர் அச்சூழ்நிலையில் சற்றுச் சுடு சொல்லை உட்புகுத்தத் தொடங்கினார். யூதத் தலைவர்கள் இயேசுவின் மீது ஆர்வம் கொண்டு அவருடைய சீஷர்களாக விரும்பியதால் தம்மிடத்தில் கேள்வி கேட்டார்களா என்று அவர்களிடத்தில் அவர் கேட்டார் (9:27). யூகித்தபடியே அவர்கள் மிகவும் கோபமடைந்தனர். பிறகு அவர்களிடத்தில் பேசுவதற்கான கடைசி வாய்ப்பில், பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த அம்மனிதர், இஸ்ரவேலில் மிகவும் அறிவுக்கூர்மையும் மிகச் சிறந்த பயிற்சியும் பெற்றிருந்த சிந்தனையாளர்களின் சிந்தனையிலிருந்த சீரற்ற தன்மையைச் சுட்டிக்காட்டினார். பிறவியிலிருந்தே பார்வையற்றிருந்த ஒரு மனிதரைக் குணமாக்கியது போன்ற அவ்வளவு பெரிய அற்புதத்தை ஒருவரும் ஒருக்காலும் கேள்விப்பட்டதில்லையென்று அவர் உரிமைகோரினார். அது உண்மையிலேயே

மிகவும் அற்புதமான ஒரு செயலாய் இருந்தது. நிச்சயமாகவே அந்த அற்புதம் தேவனிடமிருந்து வந்ததாயிருந்தது; இருப்பினும் தாங்கள் தேவனிடத்தில் நெருக்கமாய் இருந்ததாக நம்பியிருந்த பரிசேயர்கள், இயேசு எங்கிருந்து வந்தவர் என்பது பற்றியோ அல்லது அவர் செய்திருந்தது என்ன என்பதை பற்றியோ கருத்து எதுவும் கொண்டிருக்கவில்லை. இயேசு தேவனிடத் திலிருந்து வராதவராயிருந்தால் இப்படிப்பட்ட செயலைச் செய்ய முடியாது என்பதே அம்மனிதரின் தைரியமான முடிவாயிருந்தது. அவர் "தேவனிடத் திலிருந்து வந்தவர்" (9:33) என்பதே அம்மனிதர் கூறியதன் சாராம்சமாக இருந்தது.

பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த அம்மனிதரால் சங்கடமுற்றிருந்த பரிசேயர்கள் வார்த்தைத் தடையொன்றை முன் வைத்தனர். அவர்களுக்கு அறிவுறுத்தும் தைரியம் அம்மனிதருக்கு எப்படிவந்தது? அவர் நியாயப் பிரமாணத்தை அறியாதவராகவும் பொறுப்புள்ள வகையில் சிந்திக்கக் கூடியவர் என்று நம்ப முடியாதவராகவும் இருந்தார். மற்றும், அம்மனிதர் முழுவதும் பாவத்தில் பிறந்திருந்ததாக அவர்கள் அறிவித்தனர். (வசனம் 2ல் பாவம் மற்றும் துன்புறுதல் பற்றிய சீஷர்களின் கேள்வியை நினைவில் வையுங்கள்.) அவர்கள் தங்களின் வார்த்தை வசவை முடித்த பின்பு "அவனைப் புறம்பே தள்ளி விட்டார்கள்" (9:34). அவரது பெற்றோர்கள் தங்களுக்கு என்ன நடக்கும் என்று பயந்தார்களோ, அதையே அவர்கள் (பரிசேயர்கள்) அம்மனிதருக்குச் செய்தார்கள் என்பது உறுதி; அவர்கள் அவரை ஜெப ஆலயத்திலிருந்து வெளியேற்றி விட்டனர்.

பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த இம்மனிதரின் அனுபவமானது நமக்கு, இயேசுவின் மீதுள்ள விசுவாசமானது சில வேளைகளில் நமது வாழ்வைச் சிக்கலாக்கக் கூடும் என்பதை நினைவூட்டுகின்றது. இயேசு எப்பொழுதுமே வாழ்வை எளிமையானதாக்குகின்றார் என்ற கருத்தை நாம் எங்கிருந்து பெறுகின்றோம்? ஒளியும் இருளும் ஒரு சேர இருக்க முடியாது. விசுவாசம் என்பது எப்பொழுதுமே குடும்பங்களை அதிகம் அமைதி பெறச் செய்வதில்லை; சில வேளைகளில் இது அதிக போராட்டத்தை/மோதலை உண்டாக்குகின்றது. விசுவாசம் எப்பொழுதுமே திருமணங்களை அமைதி யாக்கி விடுவதில்லை; சில வேளைகளில் அது போராட்டத்தில் பெரிய ஆதார மூலமாகி விடுகின்றது. விசுவாசமானது வேலையின் விஷயங்களை எப்பொழுதுமே சுலபமாக்கி விடுவதில்லை; சில வேளைகளில் அது ஒரு நபரை வேலையிழக்கச் செய்து விடுகின்றது. ஒருமுறை இயேசு பின்வருமாறு கூறினார்:

> நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களா? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்க வந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். எப்படியெனில், இது முதல் ஒரே வீட்டிலே ஐந்து பேர் பிரிந்திருப்பார்கள், இரண்டு பேருக்கு விரோதமாய் மூன்று பேரும், மூன்று பேருக்கு விரோதமாய் இரண்டு பேரும் பிரிந்திருப்பார்கள். தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள் என்றார் (லூக். 12:51-53).

சில வேளைகளில் விசுவாசம் கொண்டு வரக்கூடிய எல்லா வித இடர்ப்பாட்டின் காரணமாக, நாம் பின்வாங்கித் திரும்பும்படியாகச் சோதிக்கப்படலாம். இருப்பினும் பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த அம்மனிதர் (ஒன்றுக்கு மேற்பட்ட வழிமுறைகளில்) ஒளியைக் கண்டிருந் தார், அவரைப் பொறுத்தமட்டில் பின் வாங்கித் திரும்புதல் என்பது இல்லாதிருந்தது. அவர், தாம் விசுவாசித்தது என்ன என்பது பற்றி உறுதியாய் இருந்தார், மற்றும் தாம் உண்மை என்று அறிந்த விஷயத்திலிருந்து பின் வாங்கிச் செல்லும்படி எவரொருவரும் அவரைப் பயமுறுத்தப் போவதில்லை.

## *"நான் விசுவாசிக்கிறேன்" (9:35-41)*

இந்த மனிதருக்கு இவ்வளவு அதிகமானது இவ்வளவு விரைவாக நடந்திருந்தது! அவரது வாழ்வில் மாபெரும் நாளானது மிகவும் போராட்டமான மற்றும் மிகவும் விலையேறப்பெற்ற நாளாகவும் ஆயிற்று. அவர் தமது பார்வையைப் பெற்றிருந்தார், ஆனால் ஜெப ஆலயத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டிருந்தார். கடைசியில், அவர் தம் அயலகத்தார்களின் முகங்களைக் காண முடிந்திருந்தது, ஆனால் அவர் கண்ட அந்த முகங்களோ கோபத்தினாலும் குழப்பத்தினாலும் நிறைந்திருந்தன. அவர் தமது சமூகத்தினர் மத்தியில் தமது இடத்தைப் பெற முடியாதிருந்தது, ஏனெனில் அவர் தாம் ஒரு பாகமாயிருக்க ஏங்கியிருந்த அந்தப் பொது மக்களால் திட்டப்பட்டும் தீர்வையிடப்பட்டும் இருந்தார். இந்த இக்கட்டான சூழ்நிலை அவரது தலைப்பில் சுழன்ற வேளையில், அவருக்குப் பழக்கமான குரலுடையவரால் ஆனால் இதற்கு முன் அவர் ஒருக்காலும் (தம் கண்களால்) கண்டிராத ஒருவருடைய - இயேசுவினுடைய - குரலினால் வாழ்த்தப்பட்டார்!

அவர் தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கின்றாரா என்று இயேசு அவரிடத்தில் கேட்டார். இந்தக் கேள்வியினால் குழப்பம் அடைந்தாலும், இதைக் கேட்டவர் மீது பற்றுறுதி கொண்ட அம்மனிதர், "ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார்?" (9:36) என்று கேட்டார். இயேசு தாமே தேவனுடைய குமாரன் என்று அவரிடத்தில் கூறினார். அதைக் கேட்ட அம்மனிதர் ''ஆண்டவரே, விசுவாசிக்கிறேன்'' (9:38) என்று அறிக்கையிட்டு அவரைப் பணிந்து கொண்டார். அம்மனிதரின் விசுவாசத்தை நோக்கிய பயணமானது ஒரு மைல் கல்லை அடைந்திருந்தது. இப்பொழுது அவர் ''நான் விசுவாசிக்கிறேன்" என்று கூற முடிந்திருந்தது.

இவ்வரலாறு விரித்துரைக்கப்படுகையில், இம்மனிதரின் விசுவாசத்தில் படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டதைக் கவனியுங்கள். அவர், "நான்தான் அவன்'' என்பதிலிருந்து, "இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக் கினார்" என்பதற்கும், பின் "அவர் தீர்க்கதரிசி" என்பதற்கும் பின், "இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" என்பதற்கும் பின், "விசுவாசிக்கிறேன்" என்பதற்கும் சென்றார். இவை ஒவ்வொன்றுமே, அவர் அவ்வேளையில்

புரிந்து கொண்டிருந்தவற்றின் அடிப்படையில் எடுத்து வைக்கப்பட்ட கவனம் நிறைந்த அடிவைப்பாக இருந்தது. அறியாத ஒன்றினுள் அவர் ''விசுவாசத்தின் அவசரத் தாவுதலை'' ஏற்படுத்தாமல், விசுவாசத்தை நோக்கிய உறுதியான, நிச்சயமான அடிவைப்புப் பயணத்தையே அவர் மேற்கொண்டார்.

## முடிவுரை

இயேசு, ''நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்'' (9:5) என்று தம்முடைய சீஷர்களிடம் கூறினார். நமது உலகம் பாவம் என்ற கனத்த இருளினால் போர்த்தப்பட்டுள்ளது. இருளானது ஒளியைச் சகித்துக் கொள்ள முடியாது, ஏனென்றால் இவ்விரண்டும் முரணானவைகளாய் உள்ளன. நீங்கள் வெளிச்சத்தின் நபரானால், இருளின் சக்திகளுக்கெதிரான ஒரு உக்கிரமான யுத்தத்தில் நீங்கள் இருப்பதைக் காண்பீர்கள். நீங்கள் அவைகளுக்கு எதிராக நிற்க முடியும்! நீங்கள் உங்களைப் பற்றியும், வாழ்வைப் பற்றியும், மற்றும் இயேசுவைப் பற்றியும் அறிந்துள்ளவை களைப் பற்றிக் கொண்டிருக்க முடியும். இதைச் செய்வதில், சூரியன் காலையில் தோன்றாவிட்டாலும் கூட நீங்கள் யார் என்பதிலும் மற்றும் நீங்கள் நம்புவது என்ன என்பதிலும் நீங்கள் உறுதியாயிருப்பீர்கள்.

பார்வையற்றவராய்ப் பிறந்திருந்த அம்மனிதர் தாம் குணமான நாளில் எதிர்கொள்ள வேண்டியிருந்த போராட்டங்கள் எல்லாவற்றையும் கற்பனை செய்திருக்க முடியாது. இருப்பினும், தாம் பார்வை பெறுவதால் எதிர்கொள்ளப்போகும் இடர்ப்பாடுகள் யாவற்றையும் அவர் அறிந்திருந் தாலும், தாம் பார்வையற்று இருப்பதை விட பார்வையோடு இருப்பதையே அவர் தேர்ந்து கொண்டிருப்பார் என்று நாம் நம்புகின்றேன். இயேசு உண்மையாகவே ''உலகின் ஒளியாயிருக்கின்றார்.'' இன்றைய நாளில் ஒளியிடம் வரும்படிக்கே அழைப்பு விடுக்கப்படுகின்றது.

---

குறிப்புகள்

[1]*New York Times Sunday Magazine*, 31 January 1993, xiii-NJ-4:6. [2]யோசுவா *7:19*ஐக் காணவும்.

# நல்ல மேய்ப்பன்

# (10:1–21)

தேவன் நமது மேய்ப்பராயிருக்கிறார் என்பதே ஒருவேளை நம்மில் பலர், தேவனைப் பற்றி நமது சிந்தைகளில் சுமந்து திரிகின்ற வளமூட்டும் சிந்தனைச் சித்தரிப்பாயிருக்கலாம். இது, பாதுகாப்பு, அக்கறை, பேணுதல் மற்றும் தியாகம் ஆகியவற்றைப் பேசுகின்ற ஒரு உருவகமாயுள்ளது. தேவனை ஒரு மேய்ப்பனோடும், நம்மை ஆடுகளோடும் ஒப்பிடுதல் என்பது பற்றி சிறப்புடைய வகையில் ஏற்புடைமை ஏதோ உள்ளது. எடுத்துக் காட்டாக, ஆடுகள் குறைந்த அளவான கண்பார்வையும், திசைகள் பற்றிய சிறிதளவே அறிவும்தான் கொண்டுள்ளன. விரோதிகளால் தாக்கப் படுகையில் அவைகள் உண்மையில் பாதுகாப்பற்றவைகளாய் உள்ளன. பயமுறுத்தப்படுகையில் அவை தங்கள் கால்களைத் தங்களுக்குக் கீழே மடித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுகின்றன. ஆடுகள் நடந்து கொள்ளும் விதத்தில் பெரும்பாலும் அவைகள் அற்ப புத்தியுள்ளவை களாகத் தோற்றம் அளிக்கின்றன. ஆடுகள் ஒரு வயலில் இருக்கும் பொழுது, கற்பனையான ஒரு தடையின் மீது ஒரு ஆடு தாண்டிச் சென்றால், இல்லாத கோல் அல்லது வேலி மீது மற்ற ஒவ்வொரு ஆடும் அவ்வாறே தாண்டிச் செல்லும். பல வேளைகளில் அவைகள் தாகத்தினால் இறந்து போய் விடாதபடிக் காப்பற்றுவதற்காக மேய்ப்பர்கள் ஆட்டுப்பட்டிக்குள் சென்று அவைகளைத் தண்ணீர்த் தொட்டியை நோக்கி விரட்ட வேண்டியிருக்கும். ஆடுகளுக்கு உதவி தேவைப்படுகின்றது, மற்றும் நமக்கும் அப்படியே தான்!

இருந்தாலும் கூட, ''மேய்ப்பன்'' என்பது எப்பொழுதுமே ஒரு நேர்மறையான கருத்தாக இருப்பதில்லை. சில கலாச்சாரங்களில் மேய்ப்பர்கள் சோம்பேறிக் குடிகாரர்கள் என்றும் பொறுப்பற்ற பண்ணையாட்கள் என்றும் கெட்ட பெயரெடுத்தவர்களாக உள்ளனர். “தகப்பன்” என்ற வார்த்தை மிகச் சிறந்த நல்லொழுக்கமுள்ளவரை அல்லது மிகத் தீய குற்றமுள்ளவர் என்பதை அர்த்தப்படுத்த முடிவது போலவே “மேய்ப்பன்” என்ற வார்த்தையும் கூட, மாண்பு அல்லது வெட்கக் கேடு என்பதை அர்த்தப்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக, சங்கீதம் 23ல், பராமரிக்கும் ஒரு மேய்ப்பன் என்ற வகையில் தேவனைப் பற்றிய அழகிய சித்தரிப்பொன்று முன் வைக்கப்படுகின்றது. இதற்கு நேர் எதிரிடையாக, துன்மார்க்கமான மேய்ப்பர்களைப் பற்றிப் பழைய ஏற்பாட்டின் இரண்டு தீர்க்கதரிசிகளினால் பின்வரும் விளக்கங்கள் கூறப்படுகின்றன:

வெளியில் சஞ்சரிக்கிற சகல மிருகங்களே,

*காட்டிலுள்ள சகல மிருகங்களே,*
*பட்சிக்க வாருங்கள்.*
*அவனுடைய காவற்காரர் எல்லாரும்*
*ஒன்றும் அறியாத குருடர்;*
*அவர்களெல்லாரும் குலைக்க மாட்டாத ஊமையான நாய்கள்,*
*தூக்க மயக்கமாய்ப் புலம்புகிறவர்கள்,*
*படுத்துக் கொள்ளுகிறவர்கள், நித்திரையப் பிரியர்;*
*திருப்தியடையாமலிருக்கும் பெருவயிற்று நாய்கள்;*
*பகுத்தறிவில்லாத மேய்ப்பர்; அவர்களில் ஒவ்வொருவனும்*
*தன்தன் வழியையும், அவனவன் தன் தன் மூலையிலிருந்து*
*பொழிவையும் நோக்கிக் கொண்டிருக்கிறான்.*
*வாருங்கள், திராட்ச ரசத்தைக் கொண்டு வருவேன்,*
*மதுவைக் குடிப்போம், நாளையத்தினம் இன்றையத்தினம்*
*போலவும்,*
*இதற்கு அதிகமாகவும் இருக்கும் என்பார்கள் (ஏசாயா 56:9-12).*

*என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர் களுக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் என் ஆடுகளைப் பராமரியாமல், அவைகளைச் சிதறடித்து அவைகளைத் துரத்தி விட்டீர்கள்; இதோ, நான் உங்கள்பேரில் உங்கள் செய்கை களின் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை உங்கள்மேல் வருவிப் பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் என் ஆடுகளில் மீதியா யிருப்பவைகளைத் துரத்தியிருந்த எல்லாத் தேசங்களிலுமிருந்து சேர்த்து, அவைகளைத் திரும்ப அவைகளின் தொழுவங்களுக்குக் கொண்டு வருவேன்; அப்பொழுது அவைகள் பலுகிப் பெருகும். அவைகளை மேய்க்கத்தக்கவர்களையும் அவைகள்மேல் ஏற்படுத்து வேன்; இனி அவைகள் பயப்படுவதுமில்லை, கலங்குவதுமில்லை, காணாமற் போவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 23:1-4).*

யோவான் 10ம் அதிகாரமானது “நல்ல மேய்ப்பன் அதிகாரம்” என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது. இது, பார்வையற்றுப் பிறந்திருந்த மனிதரைக் குணமாக்குதல் மற்றும் இயேசுவின் எதிராளிகளுடைய ஆவிக்குரிய பார்வையற்ற தன்மை பற்றிய விவாதம் ஆகியவற்றைத் தொடர்ந்து உடனடியாக வருகின்றது. பிறகு, இயேசுவைப் பற்றிய யோவானின் எடுத்துரைப்புகள் இந்த சுவிசேஷத்தில் பதிவு செய்யப் பட்டுள்ள இயேசுவின் கடைசி உரையில் தொடருகின்றது. கலந்துரை யாடலின் கவனமானது பார்வையற்ற தன்மையில் இருந்து ஆடுகள் என்ற கருத்துக்கு மாறுகின்றது, ஆனால் செய்தியானது பெரும்பாலும் ஒரே விதமாகவே உள்ளது: இயேசு உண்மையாகவே தேவனுடைய குமாரனா யிருக்கின்றார், மற்றும் நேர்மையும் இணக்கமும் கொண்ட இருதயமுடைய வர்கள் அதை ஏற்றுக் கொள்ள வருவார்கள். இந்தப் பாடத்திற்கான நமது வேத வசனப் பகுதியானது “நானே” என்று இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட

இன்னும் இரண்டு உரிமைகோருதல்களை மையப்படுத்துகின்றது.

## *“நானே வாசல்” (10:1-10)*

இந்தப் பிரசங்கமானது ஆடுகள் மற்றும் அவைகளின் மேய்ப்பர்கள் பற்றிய உவமையுடன் தொடங்குகின்றது, இயேசு இதில் ஆட்டு மந்தை என்ற (10:1-5) நன்கு பழக்கப்பட்ட உருவகத்தைப் பயன்படுத்துகின்றார். சில வேளைகளில் ஆடுகள் பாறை அல்லது முட்களால் ஏற்படுத்தப்பட்ட தொழுவத்திற்குள் தங்கும்படி இரவு வேளைகளில் கொண்டு வரப்படுவதுண்டு. இவ்வாறு ஆடுகளை ஒன்று கூட்டிக் காத்தலானது காட்டு மிருகங்கள் மற்றும் கள்வர்களிடமிருந்து அவற்றைப் பாதுகாக்கும். உண்மையான மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை அழைக்க எவ்விதம் வாசல் வழியே வருவார்கள் என்பதை இயேசு தம் உரையைக் கேட்டவர்களுக்கு நினைவூட்டினார். அவர்கள் ஆடுகளைப் பெயர் சொல்லி அழைப்பார்கள், மற்றும் அவர்களின் ஆடுகள் அவர்களைப் பின்தொடரும். இதற்கு மாறாக, திருடன் ஆடுகளைத் திருடிக் கொண்டு செல்வதற்காக எப்பொழுதுமே சுவரேறி மறைவாக வருவான். தேவனுடைய மக்களை வஞ்சிக்கவோ அல்லது சூழ்ச்சியில் வீழ்த்தவோ தாம் வரவில்லை என்று இயேசு உரைத்தார். மாறாக, அவர் வாசல் வழியே வந்து, வெளிப்படையாகத் தெளிவாய்ப் பேசினார், அவர் தம்மைப் பின்பற்றுபவர்களைக் கூட்டிச் சேர்க்க இரகசியமாய் வரவில்லை. இருப்பினும் அந்த வேளையில் அவருடைய உரையைக் கேட்டவர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை (10:6).

இயேசு மீண்டும் பேசத் தொடங்கி, “நானே ஆடுகளுக்கு வாசல்” (10:7) என்று உரைத்தார். மற்றவர்கள் தேவனுடைய மேய்ப்பர்களாய்த் தாங்கள் இருந்ததாக உரிமைகோரியிருக்கலாம், ஆனால் அவர்கள் திருடராகவும் கொள்ளைக்காரராகவும் மட்டுமே இருந்தனர். தேவனுடைய உண்மை யான ஆடுகள் கள்ள மேய்ப்பர்களின் குரல்களுக்குப் பதில் அளிக்கவில்லை, மற்றும் இயேசு தாமே தேவனிடத்திற்குச் செல்லும் உண்மையான வாசல் என்பதை உறுதிப்படுத்தினார். இது, “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமா யிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” (14:6) என்ற அவருடைய பிந்தைய கூற்றைப் போலவே ஒலிக்கின்றது. “நானே வாசல்” என்பது பிதாவினிடத்திற்குச் செல்லும் ஒரே ஒரு வழியாக (அவர்) இருக்கிறார் என்ற உரிமைகோருதலாக உள்ளது. வேறு வழியாய் வர முயற்சி செய்தவர்கள் திருடரும் கொள்ளைக்காரருமாய் மட்டுமே இருந்தனர். ஒரு இளைஞன் முடி திருத்தகம் ஒன்றில் காலணிகளை பளபளப்பாக்கியும், தரையைக் கூட்டிக் கொண்டும் வேலை செய்து கொண்டிருந்ததை நான் ஒருமுறை அறிந்தேன். சிறிது நாட்களுக்குப் பிறகு, அவன் அங்கிருந்த மென் பானங்கள் விற்கும் இயந்திரத்தில் எவ்வளவாய்ப் பணம் செலவிடப்படுகின்றது என்பதை அறிந்து, அந்தப் பணத்தை எவ்வாறு திருடலாம் என்று திட்டமிட்டான். ஒரு இரவு அவன், முடி திருத்தகத்திற்கு நள்ளிரவுக்குப் பின் திரும்பி வந்து கூரையினடியில் இருந்த காற்றோட்டத்

துவாரத்தின் வழியாக நுழைய முயற்சி செய்தான். ஆனால் அவன் அந்தத் துளையினுள் மாட்டிக் கொண்டதே பிரச்சனையாயிற்று. காவலர்கள் அவனைக் கண்டுபிடித்தபொழுது, உதவிக்காகக் கெஞ்சினான் மற்றும் தான் தவறு எதுவும் செய்யவில்லை என்று விளக்க முயற்சி செய்தான்! இருப்பினும் யாருமே அவனது கதையை நம்பவில்லை! நேர்மையான மக்களுக்கு மறைவாகச் செய்யவோ அல்லது கூரையின் வழியே உள்நுழையவோ அவசியம் எதுவும் இல்லையே; அவர்கள் வாசல் வழியாகத் தான் உள்ளே நுழைவார்கள். கள்ள போதகர்களைப் பற்றி இயேசுவும் இதையேதான் சொல்லிக் கொண்டிருந்தார்.

மதத் தலைவர்களில் சிலர் தேவனைப் பற்றிய விஷயங்களில் உண்மையாகவே ஆர்வமுள்ளவர்களாய் இருப்பதில்லை என்பது மதத்தின் “அழுக்கான சிறு இரகசியங்களில்” ஒன்று ஆகும். பணம், பதவி அல்லது அதிகாரம் என்ற தங்களது இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவே சிலர் சபையின் தொடர்பான விஷயங்களில் ஈடுபடுகின்றனர். ஒரு புதிய தவறான செயலொன்று நடந்ததாக அறிவிக்கப்படும் ஒவ்வொரு வேளையிலும், சபை முன்னோடியொருவர் அவ்வகையில் செயல்படுவாரா என்று நாம் திகைத்து நிற்கின்றோம். திருடரும் கொள்ளைக்காரரும் மந்தையில் இருந்து களவு செய்ய முயற்சித்த பொழுது இயேசு எப்பொழு தாவது வியப்படைந்தார் என்று நான் நம்புவது இல்லை. மந்தையை விரும்பியது தாம் ஒருவர் மட்டுமல்ல, என்று அவர் அறிந்தார், தாம் ஒருவரே உண்மையான மேய்ப்பர் என்றும் மந்தையின் மிகச் சிறந்த விருப்பத்தின் மீது அக்கறை கொண்டுள்ளது தாம் ஒருவர் மட்டுமே என்பதையும் அவர் அறிந்திருந்தார். “நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” என்று அவர் சொன்னார் (10:10ஆ).

யோவான் சுவிசேஷம் முழுவதிலும், இயேசு வாசல் வழியாய்ப் பிரவேசிப்பவராகக் காண்பிக்கப்படுகின்றார். அவருடைய ஊழியத்தில் சாதுரியமோ, சூழ்ச்சியோ, வஞ்சகமோ அல்லது சுய ஆர்வமோ உள்ளடக்கி யிருக்கவில்லை. அவருடைய வார்த்தைகள் மாபெரும் முரண்பாட்டிற்கும் கடைசியில் அவரது உயிரையே விலையாகக் கொடுப்பதற்கும் காரணமா யிருந்தாலும், இயேசு “வாசல்” வழியாகப் பிரவேசிப்பதை வலியுறுத்தினார். தேவனிடத்தில் திருப்பப்பட்ட இருதயமுள்ளவர்கள் இவ்வுலகத்தார் என்ன செய்தாலும் அதை பொருட்படுத்தாமல், தம்முடைய குரலைக் கேட்டு அதற்குப் பதில்செயல் செய்வார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார்.

முதலாம் உலகப் போரின் போது, இஸ்ரவேலில் முகாமிட்டிருந்த துருக்கியப் படையில் பசியால் வாடிய போர்வீரர்களின் குழுவொன்று ஆட்டு மந்தையொன்றைக் கண்டது. அவர்கள் ஆடுகளைத் தங்கள் முகாமை நோக்கித் துரத்திக் கொண்டு வந்து, அன்று ஒருநேர்த்தியான விருந்தாக இருக்கும் என்று நினைத்தார்கள். ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த அந்த ஏழை மேய்ப்பனோ அந்தப் படை வீரர்களுக்கு எதிராகப் போரிட ஆயுதம் எதுவும் இல்லாத நிலையில், எதிர்த் திசையில் தன்னால் இயன்ற மட்டும் ஓடிச் சென்று, மலையிடுக்கு ஒன்றைத் தாண்டிச் சென்று, அருகில் இருந்த குன்று ஒன்றின் உச்சியில் ஏறிப் போய் நின்றான். பிறகு அவன் திரும்பி,

தனது வாயின் மேல் கைகளைக் குவித்துக் கொண்டு, தனது ஆடுகளுக்கு அடிக்கடி அவன் கொடுக்கும் குரலில் அழைக்கத் தொடங்கினான். உடனடியாக, அந்த ஆடுகள் படை வீரர்களுடன் செல்வதை நிறுத்தி விட்டு தங்கள் மேய்ப்பன் இருந்த திசையை நோக்கி ஓடின. படைவீரர்கள், தங்கள் "விருந்தானது" இருளில் சென்று மறைவதைத் தடுப்பதற்கு ஒன்றும் செய்ய இயலாத அளவுக்குத் திகைப்படைந்தனர்.[1]

இன்றைய நாட்களில் இயேசு தம்முடைய ஆடுகளுடன் கொண்டுள்ள உறவு இவ்வாறே உள்ளது! அவருடைய ஆடுகள் இன்னமும் அவர் குரலைக் கேட்கின்றன. தேவனை உண்மையாகவே தேடுகின்றவர்கள் அவரது குரலை உணர்ந்தறிந்து அவரைக் கண்டடைவார்கள். அவர்களுக்கு அவர் பரிபூரண ஜீவனைக் கொடுப்பார். "ஜீவன்" என்பது யோவான் சுவிசேஷத்தில் மையக் கருத்தாக உள்ளது (20:31). இது நாம் தொடர்ந்து தேடுகின்ற "நல்வாழ்வு" அல்லது "சுலப வாழ்வு" என்பதல்ல; இது, இயேசு தம்முடைய சத்தத்திற்குச் செவி கொடுக்கின்றவர்களுக்குக் கொடுக்கின்ற "பரிபூரண ஜீவனாக" உள்ளது.

## "நானே நல்ல மேய்ப்பன்" (10:11-18)

"நானே நல்ல மேய்ப்பன்" (10:11அ) என்ற இயேசுவின் அறிவித்தலானது, வாசலாயிருப்பதாக இயேசு உரைத்த உரிமைகோருதலுடன் தொடர்புடையதாக, ஆனால் அதிலிருந்து மாறுபட்டதாக இருந்தது. முன்பே குறிப்பிட்டபடி, "மேய்ப்பன்" என்பது மாறுபட்ட அர்த்தங்களைக் கொண்டதாக இருக்க முடியும். இந்தச் சூழ்நிலையில் இந்த நிகழ்ச்சியில் இது இயேசுவின் சிந்தையில் குறிப்பிட்ட ஒரு அர்த்தத்தைக் கொண்டிருந்தது: "நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" (10:11ஆ). யோவான் சுவிசேஷத்தின் அடுத்த ஒன்பது அதிகாரங்கள் வரையிலும் கூட, சிலுவையின் மீது இயேசு அடைந்த மரணம் பற்றிப் பதிவு செய்யப்படாதிருந்தாலும், சிலுவை எதை அர்த்தப்படுத்தும் என்பதை இயேசு ஏற்கனவே தம்முடைய சீஷர்களுக்குக் கூறிக் கொண்டிருந்தார். நல்ல மேய்ப்பன் என்ற வகையில் அவர் தம் ஆடுகளுக்காகத் தம்முடைய உயிரையே கையளிக்கத் தயாராயிருந்தார். இந்தச் சுருக்கமான பகுதியில் அவர் தம்முடைய மரணமானது தமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாயிராது என்பதை அவர் ஐந்து முறைகள் வலியுறுத்தினார். அவர் மரித்தது என்பது, அவரே தம் உயிரைக் கையளிக்கத் தேர்ந்து கொண்டதாலேயே நிகழ்ந்தது!

> ... நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான் (10:11ஆ).
>
> ... ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன் (10:15).
>
> ... நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் (10:17).

*ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள மாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன் (10:18அ).*

*அதை கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு (10:18ஆ).*

ஒருவர் தம் உயிரையே கையளிப்பதென்பது நல்ல மேய்ப்பனின் நிறைவான செயல்விளக்கமாய் உள்ளது. கூலியாட்கள் இந்த விசுவாசத்தையும் தியாகத்தையும் காண்பிப்பதில்லை. தொல்லை வரும் பொழுது அவர்கள் ஆடுகளை மறந்து, ஒளிந்து கொள்கிறார்கள்.

(பின்னாளில் இஸ்ரவேலின் அரசரான) தாவீது தம் இளம் பருவத்தில் ஒரு மேய்ப்பனாய் இருந்தார். அந்த நிலையில் அவர் வாழ்வு, தலைமைத்துவம், மற்றும் தேவனைப் பற்றியும் அதிகமாய்க் கற்றறிந்தார். விசேஷமாக அவர், ஒரு நல்ல மேய்ப்பராய் இருந்ததலின் அர்த்தம் என்ன என்று கற்றறிந்தார். பெலிஸ்தியனான கோலியாத் என்ற அரக்கனை எதிர்த்துப் போரிட தாவீது சென்ற பொழுது, சவுலிடத்தில் அவர் (தாவீது) பின்வருமாறு கூறினார்:

*உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது. ஒருவிசை ஒரு சிங்கமும், ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக் கொண்டது. நான் அதைத் தொடர்ந்து போய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்த போது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன். அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன். விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான்; ... (1 சாமுவேல் 17:34-36).*

இஸ்ரவேலின் எதிர்கால அரசர், தம்முடைய ஆடுகளுக்குத் தாம் உண்மையுள்ளவராகவும், நல்ல மேய்ப்பராகவும் இருந்ததைத் தாமே நிரூபித்தார்; பின்னாளில் அவர் தேவனுடைய மக்களுக்குத் தாம் ஒரு உண்மையுள்ள மேய்ப்பராக இருந்ததை நிரூபிப்பவராய் இருந்தார்.

சுவிசேஷங்களில் "தாவீதின் குமாரன்" என்று அடிக்கடி அழைக்கப் பட்ட இயேசு நல்ல மேய்ப்பராக இருந்தார் மற்றும் இருக்கின்றார். அவர் தம்முடைய பாதுகாப்பில் ஒப்புவிக்கப்பட்ட ஆடுகளுக்காக (உங்களுக் காகவும் மற்றும் எனக்காகவும்) தமது ஜீவனையே ஒப்புக் கொடுக்கு மளவுக்கு, தாவீது தம் மந்தைகளின் பராமரிப்பு மற்றும் நல்வாழ்வு மீது கொண்டிருந்த அதே ஒப்புக் கொடுத்தல் உள்ளவராயிருக்கின்றார். நல்ல மேய்ப்பன் என்று கூறுகையில் இயேசு தமது "சுய விருப்பத்தின்படியே" (10:18) தாம் சிலுவையினிடம் செல்வதைத் தெளிவு படுத்தினார். யூதாஸ், பிரதான ஆசாரியர்கள், பிலாத்து மற்றும் ஜனக் கூட்டத்தார் ஆகியோர் இயேசுவின் சிலுவை மரணத்தில் தங்கள் பங்குப்பணியைச் செய்திருந் தாலும், இயேசு தமது ஆடுகளுக்காகத் தம் சுயவிருப்பத்தின்படியே தம்முடைய ஜீவனைக் கொடுக்கத் தயாராய் இருந்த காரணத்தினால் தான்

*அப்படிப்பட்ட அக்கிரமம் நடந்தது என்பதை உணராதிருந்தனர். அவர் ஒரு நல்ல மேய்ப்பராகவே இருக்கின்றார்!*

*யோவான் சுவிசேஷத்தின் பிற்பகுதியில் உள்ள இரண்டு கூற்றுகள், இயேசு நல்ல மேய்ப்பன் பற்றிய தமது உரையில் கூறியது என்ன என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. இயேசு விசாரிக்கப்பட்ட பொழுது, ரோம ஆளுநரான பிலாத்து இயேசுவிடம் ஒரு கேள்வி கேட்டார். அவர் பதில் அளிக்க மறுத்த பொழுது, பிலாத்து "நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலை பண்ண எனக்கு அதிகாரம் உண்டென்றும் உனக்குத் தெரியாதா?" (19:10) என்று கேட்டார். நல்ல மேய்ப்பரான இயேசு, "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என் மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ..." (19:11) என்று பதில் அளித்தார். அவ்வேளையில் அதை ஒருவரும் புரிந்து கொள்ளாதிருப்பினும், இயேசு அனுமதிக்காதிருந்தால் பிலாத்து அவரை ஒருபோதும் சிலுவையில் அறையக் கட்டளையிட்டிருக்க முடியாது. சிலுவையில் அறையப்படுதல் என்பது உண்மையில், நல்ல மேய்ப்பருடைய அன்பின் தியாகமாய் இருந்தது! கடைசியில், இயேசு சிலுவையில் தொங்கிய பொழுது, "தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக் கொடுத்தார்'' (19:30). அவ்விடத்தில் யோவானின் வார்த்தைகள் தற்செயலானவைகளாய் இருந்ததில்லை. இயேசுவின் ஜீவனை எவரொருவரும் அவரிடமிருந்து பறித்துக் கொள்ளவில்லை. எவரொருவரும் அவரைக் கொலை செய்யவில்லை. எவரொருவரும் சூழ்ச்சி செய்து அவரைச் சிலுவையில் அகப்படுத்தவில்லை. அவர் தம் ஆவியைத் தாமே கையளித்தார்.*

## *முடிவுரை (10:19, 20)*

*இயேசுவின் அற்புதமான வார்த்தைகள் மக்கள் மத்தியில் பிரிவினையைக் கொண்டு வந்ததை நாம் மீண்டும் காண்கின்றோம். சிலர், அவர் ஒரு பிசாசு பிடித்தவர் என்றனர், இது அவருடைய மதிப்பைக் குறைக்கும்படி அர்த்தப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டாகும், இது இன்றைய நாட்களில் "பயித்தியம் பிடித்தவன்" "சித்தம் கலங்கியவன்" என்பது போலக் கூறப்படுகின்ற கூற்றுப் போன்றதாகும். இருப்பினும், மற்றவர்கள், பிறவியிலிருந்தே பார்வையற்றிருந்த மனிதரின் கண்களைத் திறந்திருந்த அவருடைய வல்லமையான அற்புதத்தைப் பற்றிப் பெரும் வியப்பில் ஆழ்ந்திருந்தனர். ஒரு பிசாசானது இப்படிப்பட்டதொரு நம்புதற்கு அரிதான அற்புதம் நிறைந்த செயலைச் செய்ய முடியும் என்று அவர்களால் நம்ப முடியாதிருந்தது. இயேசு தம்முடைய ஆடுகள் எல்லாவற்றின் மீதும் அன்புகூர்ந்திருப்பினும், அவைகளில் சில மட்டுமே அவருக்குப் பதிலன்பு காண்பித்தன, மற்றவைகளோ அவரை வெறுத்தன. இயேசு தம்மைப் பின்பற்றும்படி நம்மை அழைக்கின்றார், ஆனால் முடிவு செய்தலை அவர் நம்மிடமே விட்டு விடுகிறார் என்பதை அவர்களின் பதில்செயலானது நமக்கு நினைவூட்டுகின்றது.*

*இயேசு நல்ல மேய்ப்பராய் இருக்கின்றார். அவரது ஆடுகள் அவருடைய சத்தத்தை அறிந்து அவரைப் பின்பற்றுகின்றன. இன்று அவர் அருகில் உள்ள ஒரு குன்றின் உச்சியிலிருந்து உங்களைப் பெயர் சொல்லி அழைக்கின்றார். அவரது குரலை நீங்கள் கேட்கின்றீர்களா? அவரது குரலை நீங்கள் அடையாளம் கண்டு கொள்கின்றீர்களா? அவரை நீங்கள் பின்பற்றுவீர்களா? அவர் உங்களுக்காகத் தம் ஜீவனையே கையளித்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!*

---

*குறிப்பு*

[1]Michael Green, *Illustrations for Biblical Preaching* (Grand Rapids, Mich.: Baker Book House, 1982), 420.

# "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (10:22-42)

மகா அலெக்சாந்தர் தனது குறுகிய ஆனால் கிளர்ச்சியூட்டும் வாழ்வில், அறியப்பட்டிருந்த உலகின் பெரும்பகுதியை வெற்றி கொண்டார். அவர் கி.மு. 323ல் தம் முப்பத்து மூன்றாவது வயதில் இறந்த பொழுது, தனது பேரரசைத் தனது நம்பிக்கைக்குரிய தளபதிகளிடம் விட்டுச் சென்றார். அவர்களில் ஒருவரான முதலாம் செல்யூக்கஸ் என்பவர் சீரியாவை ஆட்சி செய்பவராகி, செல்யூக்கஸின் அரச பரம்பரையைத் தோற்றுவித்தார். பல ஆண்டுகளுக்குப் பின்பு, அவரது சந்ததிகளில் ஒருவரான அந்தியோகஸ் எபிபெனேஸ் என்பவர் அதிகாரத்திற்கு வந்து, எகிப்தின் மீது படையெடுத்ததன் மூலம் தனது ஆட்சிப் பகுதியை விரிவாக்கத் தொடங்கினார். எகிப்தில் அவர் வெற்றிகரமாக ஆட்சியை நிறுவிய பிறகு, கி.மு. 169ல் அவர் எருசலேமுக்கு எதிராகப் படையெடுத்துச் சென்றார். அங்கு அவர் வந்து சேர்ந்த பொழுது, பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்து, மதிப்புள்ள பொருள் ஒவ்வொன்றையும் அங்கிருந்து எடுத்துச் சென்றார்.[1]

இருப்பினும் யூதருடைய ஆலயத்தைக் கொள்ளையிட்டது மட்டும் அந்தியோகஸ் எபிபெனேஸைத் திருப்திப்படுத்தவில்லை. அவர் தமது பேரரசில் இருந்த மக்கள் யாவரும் தங்கள் தனிப்பட்ட பழக்கவழக்கங்கள் மற்றும் மதங்கள் ஆகியவற்றை விட்டுவிட்டு, கிரேக்க மொழிபேசி, கிரேக்கப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்து, கிரேக்க மதத்தை நடைமுறைப்படுத்தி இவைகளினால் ஒன்றுபட்ட மக்களாக வேண்டும் என்று வலியுறுத்துவதைச் செயல்முறையாக்கினார்.[2] இதை நிறைவேற்றுவதற்காக, அவர் யூதர்கள் தங்கள் தேவனுக்குப் பலியிடுதலை, தங்கள் மகன்களுக்கு விருத்தசேதனம் செய்தலை மற்றும் ஓய்வுநாளை ஆசரிப்பதை நிறுத்த வேண்டும் என்று கட்டளையிட்டார். தேவாலயத்தில் இருந்த பலிபீடத்தில் பன்றியைப் பலியிட்டதன் மூலம் அந்தப் பலிபீடம் தீட்டுப்படுத்தப்பட்டது (அசுத்தமான விலங்குகளை யூதர்கள் ஒருக்காலும் தேவனுக்குப் பலி செலுத்தியதில்லை), மற்றும் கண்டறியப்பட்ட நியாயப் பிரமாணப் புத்தகங்கள் எரிக்கப்பட்டன.[3] இது இஸ்ரவேலின் வரலாற்றில் நிச்சயமாகவே இருளான நேரங்களில் ஒன்றாயிருந்தது:

> அந்தக் கட்டளையின்படியாக, தங்கள் பிள்ளைகளுக்கு விருத்த

சேதனம் செய்வித்திருந்த தாய்மார்களையும், அவர்களின் குடும்பங்களையும் மற்றும் அப்பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்தவர்களையும் அவர்கள் மரணத்திற்குட்படுத்தினார்கள்; குழந்தைகளை அவர்களின் தாய்மார்களின் கழுத்திலேயே தூக்கிலிட்டனர். ஆனால் இஸ்ரவேலில் பலர் உறுதியாக நின்று, அசுத்தமான உணவைப் புசிப்பதில்லை என்று தங்கள் இருதயங்களில் தீர்மானம் செய்து கொண்டனர். உணவினால் அசுத்தப்படுதல் அல்லது பரிசுத்த உடன்படிக்கையைத் தீட்டாக்குதல் என்பதைக்காட்டிலும் மரிப்பதை அவர்கள் தேர்ந்து கொள்ளத் தயாராய் இருந்தனர்; மற்றும் அவர்கள் மரித்தனர். இஸ்ரவேலின் மீது மாபெரும் கோபம் வந்தது.[4]

"உறுதியாய் நின்ற" யூதர்களின் மத்தத்தியாஸ் என்ற பெயர் கொண்ட ஒரு ஆசாரியரும் இருந்தார். அவரும் அவரது ஐந்து மகன்களும் அந்தியோகஸ் எபிபெனேஸின் கட்டளைகளுக்கு எதிர்த்து நின்று, மலைகளுக்கு ஓடிப் போகும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். விரைவிலேயே, நாடெங்கிலும் இருந்து மக்கள் இவர்களுடன் சேர்ந்து கொண்டு சீரியர்களுடன் போரிடத் தயாராயினர். கி.மு. 167ல் மத்தத்தியாஸ் மரித்த பொழுது, அவரது மகனான யூதாஸ் மகாபேயுஸ் என்பவர் அந்தப் புரட்சியின் தலைவரானார். அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் யூதர்கள் சில ஆரம்பப் பின் அமைப்புகளை வெற்றி கொண்டு, சீரியர்களை நிலைகுலையச் செய்து தங்கள் நாட்டையும் தங்கள் தேவாலயத்தையும் மீண்டும் உரிமையாக்கிக் கொண்டனர். சீரியர்களை எருசலேமில் இருந்து துரத்தியதில் அவர்கள் கடைசியாக வெற்றியடைந்த பொழுது, அந்தியோகஸ் எபிபெனேஸினால் தீட்டுப்படுத்தப்பட்டிருந்த தேவாலயத்தைச் சுத்திகரித்தல் என்பதுதான் அவர்களுடைய முதல் நிலைப் பணியாய் இருந்தது. "யூதாவும் அவருடைய சகோதரர்களும், 'நம் பகைவர்கள் முறியடிக்கப்பட்டார்கள்; இப்போது நாம் புறப்பட்டுப் போய்த் திருஉறைவிடத்தைத் தூய்மைப்படுத்தி மீண்டும் தேவனுக்கு அர்ப்பணிப்போம்' என்றார்கள்."[5] தேவாலயத்தைச் சுத்திகரித்தலும், மறுஅர்ப்பணிப்பும் முடிவடைந்த பொழுது, யூதாவும் அவருடைய சகோதரர்களும், மக்கள் எட்டு நாட்கள் அளவாக ஒவ்வொரு ஆண்டிலும் ஆலய அர்ப்பணிப்பு பற்றிய கொண்டாட்டத்தை நடத்த வேண்டும் என்று முடிவு செய்தனர். இந்த அர்ப்பணிப்புப் பண்டிகையானது இஸ்ரவேலர்கள் அவர்களின் விடுதலையை கொண்டாடவும், மற்றும் தேவனுடைய ஆலயமும் பலிபீடமும் அர்ப்பணிக்கப்பட்டதை நினைவுகூரவும் ஏற்ற காலமாக ஆயிற்று. இன்றைய நாட்களில் யூத மக்களிடத்தில் இந்தப் பண்டிகையானது ஹானுக்கா என்று அறியப்பட்டுள்ளது.

அர்ப்பணிப்பின் முதல் பண்டிகைக்குச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குப் பின்பு, இந்தப் பண்டிகையில் கலந்துகொள்வதற்காக இயேசு எருசலேம் தேவாலயத்திற்கு வந்தார். அந்த வேளையில் அவர் தாம் யார் என்பதைப் பற்றியும் தாம் எதற்காக வந்தார் என்பதைப் பற்றியும் தைரியமாய்ப் பேசினார். யோவான் 10ன் முதலாம் பாகத்தில் உண்மையாயிருந்தது போலவே, இயேசு அதிகமாகப் பேச பேச, சூழ்நிலையும் மோசமாக மாறிக்

கொண்டு வந்தது. அவர் தம் உரையைக் கேட்டவர்கள் தம்மைப் பற்றி ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தார். சிலர் அவரில் விசுவாசமாய் இருந்தனர், மற்றவர்களோ - முக்கியமாக யூதத் தலைவர்கள் - விசுவாசம் கொள்ளவில்லை, ஆனால் அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தைக்காகவும் அவர்கள் இன்னும் அதிகம் அதிகமாய்க் கோபமடைந்தனர். 10:22-42 என்ற இந்த வசனப் பகுதியில் யோவான் பதிவு செய்துள்ள நேரடி மோதல்களில், இயேசுவின் எதிராளிகளால் மேற்கொள்ளப்பட்ட மூன்று பயமுறுத்தும் செயல்பாடுகளும் மற்றும் அவர்களுக்கு அவருடைய பதில்செயலும் உள்ளடங்கியிருந்தன.

## அவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர் (10:22-30)

சாலொமோனின் மண்டபம் என்று அறியப்பட்ட தேவாலயப் பகுதியில் இயேசு உலாவிக் கொண்டிருக்கையில், "யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர்" (10:24). இது தமிழில் சிறந்த முறையில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் "gathered around" என்றுள்ளதற்கான கிரேக்க வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் நான்கு முறை மட்டுமே காணப்படுகின்றது.[6] அவற்றில் இருமுறைகள், அவ்வார்த்தையானது மதில்களுள்ள ஒரு நகரை படையொன்று ஊடுருவி, கைப்பற்றுவதை விவரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இயேசுவின் யூத எதிர்ப்பாளர்கள் அவரது எலும்பிலிருந்து சதையைக் கொத்தியெடுக்கத் திட்டமிட்ட கழுகுகளைப் போல் அவரைச் சூழ்ந்து கொண்டு நின்றனர். இது நண்பர்களின் மகிழ்ச்சி தரும் கூட்டமாயிருந்ததில்லை; இது அவருடைய மிக மோசமான எதிரிகளின் பயமூட்டும் கூட்டமாயிருந்தது!

விசுவாசமற்ற யூதத் தலைவர்கள் இயேசுவிடம் அவர் கிறிஸ்துவா அல்லவா என்று கூறும்படி வலியுறுத்தினார்கள். அவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு, "எது வரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர்? நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும்" என்றார்கள்[7] (10:24). இயேசுவுக்கும் அவரை அழிக்க விரும்பியவர்களுக்கும் இடையில் இருந்த இந்த நெருக்கடியானது தொடர்ந்து வளர்ந்தது.

அவர்களது கேள்விக்கு இயேசு நேரடியாக பதில் அளித்திருக்க வேண்டும் என்பது போல முதல் பார்வையில் இக்கேள்வி காணப்படலாம். இருப்பினும் சில கேள்விகளுக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்று மட்டும் பதில் அளித்து விட முடியாது. அவர்களின் கேள்வியானது, "நீங்கள் பொய் கூறுவதை நிறுத்தி விட்டீர்களா?" என்று யாரிடமாவது கேட்பதைப் போன்றதாகவே இருந்தது. நீங்கள் இதற்கு "ஆம்" என்று பதில் அளித்தால், இதற்கு முன்பு நீங்கள் பொய் கூறிக் கொண்டிருந்ததாக ஒத்துக் கொள்கின்றீர்கள் என்று அர்த்தமாகி விடும். நீங்கள் இதற்கு "இல்லை" என்று பதில் அளித்தால், நீங்கள் தொடர்ந்து பொய் கூறிக் கொண்டிருப்பதாகத் தோன்றும்! இப்படிப்பட்ட கேள்விக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்பதைக்

காட்டிலும் முழுமையான விளக்கத்துடன் பதில் அளிக்கப்பட வேண்டும். இயேசுவின் நாட்களில் மக்கள், "கிறிஸ்து" எப்படியிருப்பார் என்பதற்கு வித்தியாசப்பட்ட புரிந்து கொள்ளுதலைக் கொண்டிருந்தனர். இயேசு, "ஆம், நானே கிறிஸ்துவாயிருக்கிறேன்" என்று கூறியிருந்தால், கிறிஸ்து என்பவர் தாவீது அல்லது சாலொமோன் போல வல்லமை நிறைந்த, பூமிக்குரிய அரசராக இருப்பார் என்று எதிர்பார்த்திருந்த அம்மக்களால் மிகப் பயங்கரமான வகையில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பார். அவர் "இல்லை" என்று கூறியிருந்தால், அவர் தம்மைப் பற்றிய சத்தியத்தைத் தாமே மறுத்தவர் ஆகி விடுவார். இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலை தமக்கு முன் வைக்கப்பட்ட சூழ்நிலையில் இயேசு, தமது எதிராளிகள் தமக்கு எதிராய்ப் பயன்படுத்த எவ்விஷயத்தையும் தராமல் உண்மையாகவே தேவனைத் தேடுபவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு கூற்றினால் பதில் அளித்தார். இதற்கு முன்பு யோவான் 10ல் இயேசு மேய்ப்பன் மற்றும் அவனது ஆடுகள் என்ற உருவகத்தைப் பயன்படுத்தியது போல, இவ்விடத்திலும் அவர், "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது" (10:27) என்று உரைத்தார்.

வேறொரு இடத்தில் இயேசு, மக்கள் உண்மையாகவே "கேட்டு, தேடி மற்றும் தட்டி"னால் அவர்கள் "பெறுவார்கள், காண்பார்கள் மற்றும் விசுவாசத்திற்கான கதவு திறக்கப்படும்" (மத்தேயு 7:7, 8) என்று கூறியிருந்தார். விசுவாசத்திற்குப் புத்தி கூர்மை அவசியமாகின்றது, ஆனால் புத்தி கூர்மையைக் காட்டிலும் அதிகமானவைகளும் அதற்கு அவசியமாகின்றது. விசுவாச மேம்பாட்டிற்குத் திறந்த இருதயமும் கீழ்ப்படிதலுக்கான விருப்பமும் மிகவும் இன்றியமையாதவைகளாக உள்ளன.

அடுத்ததாக, விமர்சிக்கின்ற மற்றும் கோபம் கொண்ட யூதத் தலைவர்களால் சூழப்பட்டிருந்த இயேசு, அவர்களை இன்னும் அதிக கோபமூட்டும் வகையில் சிலவற்றைக் கூறினார். அவர், "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (10:30) என்று அறிவித்தார். இவ்வசனத்தில் "ஒன்று" என்பது நேரடியாவே "ஒன்றான விஷயம்" என்ற அர்த்தம் தருவதாகவே உள்ளது,[8] இது இயேசுவும் பிதாவும் ஒருமைப்பாட்டுடன் இருந்தனர் என்று சுட்டிக்காட்டுகின்றது. இயேசு தாம் தேவகுமாரனாகவே இருப்பதாக உரிமைகோரி, தம்முடைய தெய்வீகத்துவத்தைக் குறித்து ஒரு தைரியமான கூற்றை மீண்டும் கூறினார். இயேசு தம்முடைய எதிரிகளால் சூழப்பட்டிருந்தாலும், தம்முடைய அடையாளம் பற்றிய இந்த முக்கியமான சத்தியத்தினின்று பின்வாங்கிச் செல்ல மறுத்து விட்டார்.

## அவர்கள் கற்களை எடுத்துக் கொண்டனர் (10:31-38)

இயேசு, தாமும் பிதாவும் ஒன்றாயிருப்பதாகக் கூறிய அவருடைய உரிமைகோருதலானது யூதத்தலைவர்களால் தாங்கக் கூடாததாக இருந்தது. அவர்கள் கற்களை எடுத்துக் கொண்டனர் (10:31), ஏனெனில் அவரை

தேவாலயத்திலேயே கல்லெறியப் போதுமான அளவு அவர்கள் தீவிர கோபம் கொண்டனர்! இயேசுவின் வார்த்தைகளில் தேவதூஷணம் இருந்தது என்று நம்பிய அவர்கள், தாங்கள் செய்யவிருந்த செயலினால் தங்களை நியாயப்படுத்த முடியும் என்று நம்பினார்கள். இயேசுவோ, தம்மீது குற்றம் சாட்டுபவர்களின் கைகளில் கற்கள் இருந்த சூழ்நிலையிலும், தாம் தேவனுடைய குமாரன் என்ற தம்முடைய உரிமைகோருதல்களின் சத்தியத்தை நிலைநாட்டத் தொடர்ந்தார்.

போராட்டம் உச்சத்திற்கு வந்த வேளையில், இயேசு தம்முடைய எதிராளிகளிடத்தில், "நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என் மேல் கல்லெறிகிறீர்கள்?" (10:32) என்று கேட்டார். அவரது செயல்களினிமித்தம் அல்ல, ஆனால் தேவ தூஷணத்தினிமித்தமே அவரைக் கொல்லப் போவதாக அவர்கள் பதில் அளித்தார்கள். இயேசு கூறியதன் செயல் தாக்கத்தையாவது யூதத் தலைவர்கள் புரிந்து கொண்டிருந்தனர். அவர்கள், "... நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி ..." (10:33) என்றனர். இயேசு வெறும் மனிதராக மட்டுமே இருந்திருந்தால், அவர்கள் கூறியது உண்மையாய் இருந்திருக்கும். இருப்பினும், தேவனுடைய குமாரன் என்ற வகையில் அவர் இந்த உரிமைகோருதல்களை ஏற்படுத்த சகல உரிமையும் காரணமும் கொண்டிருந்தார்.

இயேசு, "நீங்கள் தேவர்களாயிருக்கிறீர்கள்" என்று சங்கீதக்காரர் எழுதியுள்ள சங்கீதம் 82:6 வசனத்தைக் கொண்டு அறைகூவல் விட்டதின் மூலம் தம்முடைய எதிர்ப்பாளர்களை எதிர்கொண்டார். வேத வசனங்கள் முன்பு இருந்தவர்களைப் பற்றிக் கூறியது என்றால், அதே மொழிநடையைப் பயன்படுத்துவதற்காகத் தம்மீது குற்றம் சுமத்த முடியாதென்று அவர் வாதிட்டார். அவர் தாம் "பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டு, உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிறவர்" (10:36) என்று தானே அறிவித்தார்!

இயேசு தம்மைப் பற்றிய சத்தியத்தை அறிவிப்பதில் சற்றும் தணியாத தாகமுள்ளவராயிருந்தார் என்று யோவான் முன்னிலைப்படுத்தினார். மக்கள் ஏற்கனவே தீவிரமான கோபமுற்று, தங்கள் கைகளில் கற்களுடன் இன்னமும் நின்று கொண்டிருந்தாலும், இயேசு தொடர்ந்து தம்முடைய கருத்தை வலியுறுத்திக் கொண்டிருந்தார். அவர்கள் அவருடைய செயல்களை காண வேண்டுமென்றும், அவைகள் அவருடைய பிதாவின் செயல்களைப் போன்று இருந்தனவா அல்லவா என்று நோக்குமாறும் அவர்களிடத்தில் கூறினார். அவர் தமது பிதாவின் செயல்களைச் செய்து கொண்டிருந்ததால், "பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி" (10:38) என்று கூறிய பொழுது அவர்கள் தம்மை விசுவாசிக்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினார். அந்த நாளில் தேவாலயத்தின் அருகில் நின்று கொண்டிருந்த யாவருக்கும் இதன் அர்த்தமானது தெளிவானதாகவே இருந்தது; மீண்டுமாக இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று உரிமைகோரினார்! கூட்டத்தினரால் தாம் கல்லெறியப்படுவோம் என்ற அச்சுறுத்தல் கூட அவர், தம்மைப் பற்றிய சத்தியத்தைப் போதிப்பதைத் தடை செய்ய முடியாததாயிருந்தது.

## அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள் (10:39-42)

இயேசுவின் எதிராளிகள் அவரைப் பிடிக்க முயற்சி செய்தனர், ஆனால் அவர்களின் கைக்குத் தப்பிய அவர் யூதத் தலைவர்களுடன் நடந்த இன்னொரு போராட்டத்தில் ''வெற்றியாளராக'' ஆனார். இயேசு தம்முடைய ஜீவனைத் தமது எதிராளிகள் தம்மிடமிருந்து பறித்துக் கொள்ள முடியும் என்றெண்ணிய வேளையில் அல்ல ஆனால் தமது சொந்த வேளையிலேயே ஒப்புக் கொடுப்பார் என்பதை அவர் செயல் விளக்கப் படுத்தத் தொடர்ந்தார் (10:17, 18). அவர் எப்படித் தப்பிச் சென்றார் என்று நமக்குக் கூறப்படுவதில்லை, ஆனால் எவ்வாறோ அவர் "அவர்கள் கைக்குத் தப்பி"ச் (10:39) சென்றார்.

தேவாலயத்தில் இவ்விதமான எதிர் நிற்றலுக்குப் பிறகு, இயேசு யோர்தான் நதியைக் கடந்து, இதற்கு முன்பு யோவான் தனது வல்லமை நிறைந்த பிரசங்க ஊழியத்தை நிகழ்த்தியிருந்த பகுதியினுள் சென்றார். இந்த வேளையில் எருசலேமில் இயேசுவின் வெளியரங்கமான ஊழியமானது பெரும்பாலும் நிறைவுற்றிருந்தது. அவரது உரிமைகோருதல்கள் முன் வைக்கப்பட்டு, யுத்தக்கோடுகள் வரையப்பட்டிருந்தன. இயேசுவைக் குறித்து மக்கள் ஆழமாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். சிலருக்கு அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார், மற்றும் சிலருக்கு அவர் நரகத்திலிருந்து வந்த பிசாசாகக் காணப்பட்டார்.

யோர்தானில் மக்கள் பலர் அவரிடம் வந்தார்கள். இது அவர்களின் பகுதியில் விசுவாசத்தின் செயல்பாடாக இருந்தது. அவர்கள், "யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை; ஆகிலும் இவரைக் குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது" (10:41) என்றார்கள். பல அற்புத அடையாளங்கள் செய்திருந்த இயேசுவுக்கு நேரெதிரான வகையில் யோவான் எந்த அடையாளத்தையும் செய்திருந்ததில்லை என்பதை அவர்களின் வார்த்தைகள் மறைமுகமாய் உணர்த்தின. "அடையாளம்" என்பதற்கு யோவான் பயன்படுத்தும் விசேஷித்த வார்த்தையானது முதன்முறையாக அதிகாரம் 10ல் வசனம் 41ல் குறிப்பிடத்தக்க வகையில் தோன்றுகின்றது. இவ்வதிகாரத்தின் முற்பகுதியில் இயேசுவின் அற்புதங்கள், ''கிரியைகள்'' என்று மட்டுமே அழைக்கப்பட்டிருந்தன, ஏனென்றால் அவைகளைக் கண்டிருந்தவர்களின் இருதயங்களில் அவை விசுவாசத்தை உண்டாக்கியிருந்ததில்லை. இருப்பினும், இயேசுவின் மீதுள்ள விசுவாசமானது விவரிக்கப்படும் வசனம் 41ல் "அற்புதம்" என்ற வார்த்தை மீண்டும் தோற்றமளிக்கின்றது.

''அவ்விடத்திலே அநேகர் விசுவாசமுள்ளவர்களானார்கள்'' (10:42) என்பதே அதிகாரம் 10ன் அனைத்து நிகழ்ச்சிகளினுடைய முடிவுரையாக உள்ளது. திருமணமாகி ஐம்பதாண்டு காலம் வாழ்ந்திருக்கின்ற மணமக்கள் தங்கள் வாழ்வுக் காலத்தைப் பின்னோக்கிப் பார்த்து "நான் உன்னை நேசிக்கிறேன்'' என்ற வார்த்தைகளின் மாறுபட்ட அர்த்தத்தை ஒன்றிணைந்து நினைவுகூருவது போலவே, யோவான் சுவிசேஷத்தை

வாசிக்கின்றவரும், இயேசுவின் வரலாறு விரித்துரைக்கப்படுகையில் "அநேகர் விசுவாசித்து" என்ற வார்த்தையானது மாறுபட்ட அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும் என்று உணர்ந்தறிகின்றார்.

யோவான் சுவிசேஷத்தின் இந்தப் பகுதி வரையிலும், இயேசுவில் விசுவாசம் கொண்டிருந்தவர்கள், இயேசுதான் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்பதே உண்மையான விசுவாசத்தின் பொருள் என்பதைப் புரிந்து கொண்டிருந்தனர். மேலும் அவர்கள், அவ்விசுவாசத்திற்கு, போராட்டம், பிரிவினை மற்றும் மரணம் உண்டாகும் பயம் ஆகியவை கூட விலையாக உள்ளன என்பதையும் புரிந்து கொண்டார்கள். இந்த அதிகாரத்தின் கடைசியில் அவர்கள் இவ்விதமாய் ஒதுக்கப்பட்டவர்களின் கூட்டத்துடன் தாங்கள் விசுவாசித்திருந்த அவரைப் பின்பற்றும்படி வனாந்தரப் பகுதிக்குக் கூட்டமாய்ச் சென்றிருந்தார்கள் என்பதை நாம் காண்கிறோம்.

விசுவாசமானது எவ்வளவு விலை உயர்ந்ததாக இருக்கக் கூடும் என்பதைப் பற்றி யோவான் ஒரு கடினமான செய்தியை முன் வைத்திருந்தாலும், அதே வேளையில் அவருடைய செய்தியானது ஊக்குவிக்கின்ற செய்தியாகவும் உள்ளது. நாம் கிறிஸ்துவில் விசுவாசிகள் என்ற வகையில் எதிர்க்கப்படுவோம் என்று புரிந்து கொள்ள வேண்டும் என அவர் விரும்பினார். இருப்பினும் எதிர்ப்பு என்பது நம்மைத் திகைப்படையச் செய்யவோ அல்லது நமது ஆவிகளை முறித்து போடச் செய்யவோ கூடாது. மேலும், இயேசுவின் எடுத்துக்காட்டானது - நாம் துன்புறுத்தப்பட்டாலும் கூட - நாம் விசுவாசிக்கும் சத்தியத்தில் உறுதியாக நிலைநிற்பதற்கானதாக உள்ளது. சத்தியத்தைப் பேசுதல் என்பதே வன்மையான எதிர்ப்புக்கு அவருடைய சீரான பதிலாயிருந்தது, மற்றும் நாமும் அதையே செய்ய வேண்டும்.

## முடிவுரை

இந்த நிகழ்ச்சி முழுவதும் அர்ப்பணிப்பு விழாவின் போது நடைபெற்றது. தேவன் தம்முடைய மக்களை விடுவித்ததை ஆசரிக்கும் இந்த விழாவில் இயேசு தோன்றிய பொழுது, மக்கள் அவரை முரண்பாடான வகையில், பொல்லாங்குள்ள தேவதூஷணம் கூறுபவர் என்ற வகையில் நடத்தினார்கள். யூதத் தலைவர்கள் அவரை அபாயமான மனிதர் என்றும் கொடிய மத எதிர்ப்பாளர் என்றும் கண்ணோக்கினார்கள். இயேசு உண்மையான விடுதலையை (மக்களுக்கு) அளிப்பதற்காக விரைவிலேயே சிலுவையினிடத்தில் செல்லவிருந்ததை அவர்கள் அறிந்துணரவில்லை. தமது மக்களின் சுத்திகரிப்பிற்காக - மிருகங்களின் இரத்தத்தை அல்ல ஆனால் - தம்முடைய சொந்த இரத்தத்தையே அவர் சிந்தப் போகிறார் என்பதை அவர்கள் உணர்ந்தறியாமல் இருந்தார்கள். பாவமற்ற, மாசற்ற தேவஆட்டுக்குட்டியையே தாங்கள் அந்த நாளில் கொல்ல முயற்சி செய்த உண்மையை அவர்கள் மதித்துணரவில்லை. இன்றைய நாட்களில், நாம் நிற்குமிடத்திலிருந்து நாம் இந்த உண்மைகளைக் காண முடியும், மற்றும் இவைகளே சுவிசேஷத்தின் முக்கிய பகுதியாக உள்ளன என்பதை அறியவும் முடியும்!

குறிப்புகள்

*[1]1 மகாபேயர் 1:21. மகாபேயரின் புத்தகங்கள் என்ற இரு நூல்கள் தள்ளுபடி ஆகமங்களின் அட்டவணையில் உள்ளவையாகும். இவை கி.மு. சுமார் 100ம் ஆண்டின் போது எழுதப்பட்டன, இவற்றில் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நடந்த வரலாற்று நிகழ்வுகள் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன. இவ்விரு நூல்களுமே, கி.மு. 166-40ல் பலஸ்தீனத்தில் யூதத் துவத்தை அடக்குவதற்கு செய்யப்பட்ட முயற்சிகளையும், விடுதலைக்காக யூதர்கள் செய்த போராட்டத்தையும் பற்றிய முக்கிய கவனம் கொண்டவைகளாய் உள்ளன. [2]1 மகாபேயர் 1:41. [3]1 மகாபேயர் 1:56. [4]1 மகாபேயர் 1:60-64. [5]1 மகாபேயர் 4:36. [6]லூக்கா 21:20; யோவா. 10:24; அப். 14:20; எபி. 11:30. [7]மூல மொழியிலும், ஆங்கிலத்தில் "kept asking" என்ற மொழிபெயர்ப்பிலும் இவ்விடத்தில் எச்சவினையின் கருத்து காணப்படுகின்றது. [8]கிரேக்க வசனத்தில் இவ்விடத்தில் பால்பண்பு நடுவுநிலையானதாக உள்ளது. [9]10:25, 32, 38ல் கிரேக்க மொழியில் ergon என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. "யோவான், 1" இதழில் "அடையாளங்கள்" என்பதன் மீதான கலந்துரையாடலைக் காணவும்.*

# "இயேசு கண்ணீர் விட்டார்"
# (11:1-44)

*1993ம் ஆண்டில் வெளிவந்த "நிழல் நிலங்கள்" என்ற திரைப்படமானது மாபெரும் எழுத்தாளரான C. S. லூயிஸுக்கும் ஜாய் கிரெஷாமுக்கும் இடையிலான கசப்பும் இனிப்பும் கலந்த காதல் கதையைக் கூறுகின்றது. இந்தத் திரைப்படத்தின் தொடக்கத்தில், லூயிஸ், வேதனை என்ற கருத்தைப் பற்றி அறை முழுவதும் நிரம்பியிருந்த மக்களிடம் விரிவுரையாற்றிக் கொண்டிருந்தார். அவர்களிடம் அவர் பின்வருமாறு கூறினார்:*

> வேதனை என்பது கேட்குந் திறனற்ற உலகத்தை எழுப்பத் தேவன் கொண்டுள்ள ஒலிப் பெருக்கியாக உள்ளது ... நாம் கற்பாளங்கள் போன்றவர்களாய் உள்ளோம், சிற்பி இவற்றினின்று மனிதர்களின் வடிவங்களைச் செதுக்குகின்றான். நம்மைத் துன்புறுத்தும் அவனது உளியின் வெட்டுகள் தாம் நம்மை நிறைவுடையவர்களாக்குகின்றன.

தொடர்ந்து திரைப்படத்தின் ஓட்டத்தில், லூயிஸ், ஜாய் கிரெஷ்ஹாமைச் சந்தித்து, அவள் இவரைக் காதலிக்க ஆரம்பிக்கிறாள். உறுதியான பிரம்மச்சாரியாக இருந்த லூயிஸ் முதலில் ஜாயுடன் நட்புறவில் மட்டுமே ஆர்வம் கொண்டிருந்தார். ஒருநாள், அவரது அறையில் அவர்கள் இருவரும் பிற்பகல் தேனீருக்காக அமர்ந்திருந்த வேளையில், லூயிஸின் மீது தனக்குள்ள சலிப்பை ஜாய் வெளிப்படுத்தினாள், அவள் பின்வருமாறு சத்தமிட்டாள்:

> *நீங்கள் உங்கள் வாழ்வை எவரொருவரும் தொட்டுவிடாதபடிக்கு அவ்வளவாக அமைத்து வைத்துள்ளீர்கள் என்பதை இப்பொழுது தான் நான் காண்கின்றேன். உங்களுக்கு நெருக்கமாய் இருக்கின்றவர்கள் எல்லாரும் உங்களை விட இளையவராகவோ அல்லது உங்களைக் காட்டிலும் பலவீனமானவராகவோ அல்லது உங்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவராகவோ இருக்கின்றனர்.*

உணர்வுகள் மற்றும் வேதனை ஆகிவற்றிலிருந்து தனது வாழ்வைத்தான் உறையிட்டுக் காத்துக் கொண்டிருந்த வழிமுறை பற்றி ஜாய் கூறியது சரியானதே என்று லூயிஸ் மெதுவாக உணர்ந்தறியலானார். பிற்பாடு, புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஜாய் மருத்துவமனையில் இருந்த பொழுது, லூயிஸ் அவளை மணம் செய்து கொள்ளும் முடிவை முன் வைத்தார்;

மற்றும் 1956ல் அவர்கள் கணவன் மனைவியானார்கள். அடுத்த நான்கு ஆண்டுகள் அவர்களுக்கு அற்புதமான ஆண்டுகளாய் இருந்தன. அவர்கள் மகிழ்ச்சியின் மேல் புற்றுநோய் என்ற மேகமானது எப்பொழுதும் நின்றிருந்தாலும் அந்த நான்கு ஆண்டுகளும் அவர்கள் மகிழ்ச்சியுடனே இருந்தனர். இந்த வேளையின் போது, அவர்கள் தங்கள் அறையின் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த படம் ஒன்றில் சித்தரிக்கப்பட்டிருந்த அழகான சமவெளிப் பகுதியைக் காண்பதற்காகத் தாமதமான தேன்நிலவுப் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். வயலில் நடந்து கொண்டிருந்த வேளையில், மழை பொழியத் தொடங்கிற்று, எனவே அவர்கள் வைக்கோல் சேமிக்கப்பட்டிருந்த அறையொன்றில் தங்கும்படி நாடினார்கள். அங்கு அவர்கள் அமர்ந்திருக்கையில், ஜாய், வருகின்ற தனது மரணத்தைப் பற்றிக் கலந்துரையாடும்படி வலியுறுத்தினாள். சீரான ஒரு குரலில் அவள் பின்வருமாறு கூறினாள்:

> மழை நின்று, நாம் போவதற்கு முன் நான் இதை மட்டும் கூறி விடுகின்றேன் ... நான் இறக்கப் போகின்றேன், அப்பொழுதும் கூட நான் உங்களுடனேயே இருக்க விரும்புகிறேன். அதை நான் செய்யக் கூடிய ஒரே வழி என்னவென்றால், நான் இப்பொழுது உங்களுடன் பேசக் கூடுமென்றால் ... அது வெறுமனே கையாளுவதைக் காட்டிலும் மேலானதாயிருக்க முடியுமென்று நான் நினைக்கின்றேன். நான் கூற முயற்சிப்பது என்னவென்றால், இப்பொழுது மகிழ்ச்சியின் பாகமாயிருப்பதே அப்பொழுது வேதனையாக இருக்கும். இதுவே இது பற்றிய விஷயமாகும்.

பிற்பாடு, ஜாய் இறந்த பொழுது, அந்த இழப்பினால் ஜாயின் எட்டு வயதான மகன் டக்ளஸைப் போன்றே லூயிஸூம் சீரழிந்து போனார். இருவருமே அமைதியால் அல்லல்பட்டார்கள், ஒருநாள் லூயிஸ் அந்தப் பையன் தனித்திருக்க விரும்பும் பரண் மேல் ஏறிச் சென்று, அவனைக் கண்டார். தாம் என்ன கூற வேண்டுமென்ற நிச்சயமற்றவராக லூயிஸ், அவனருகில் அமர்ந்தார். தொடர்ந்து நடந்த வார்த்தைப் பரிமாறுதல் என்பது அந்தத் திரைப்படத்தில் மிகவும் வலிவு நிறைந்த பகுதியாக இருந்தது. டக்ளஸ் தனது இளம் வயதில் தனது தாயை இழந்து விட்டான் என்று லூயிஸ் கூறினார், மற்றும் மரணம் பற்றி அவர்கள் கலந்துரையாடத் தொடங்கினார்கள்:

> டக்ளஸ்: பரலோகத்தில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?
> லூயிஸ்: ஆம், நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.
> டக்ளஸ்: எனக்குப் பரலோகத்தில் நம்பிக்கையில்லை.
> லூயிஸ்: அது பரவாயில்லை.
> டக்ளஸ்: நான் மீண்டும் அவளைக் காண விரும்புவேன் என்பது உறுதி.
> லூயிஸ்: நானும் கூடத்தான்!

பிறகு, அவ்விருவரும் அழத் தொடங்கினார்கள். லூயிஸ் அந்தப் பையனைக் கட்டிப்பிடித்துக் கொண்டார், அவர்கள் மீண்டும் தொடர்ந்து ஒன்று கூடி

அழுதனர். திரைப்படத்தின் முடிவில், லூயிஸ் கிராமப் பகுதியில் நடந்து செல்ல, டக்ஸஸ், அருகில் உள்ள வயலுக்குள் தனது நாயுடன் ஓடிக் கொண்டிருந்தான். வளர்ந்து கொண்டிருந்த ஒரு நட்புறவும் அன்பும் அவர்கள் பெற்றனர் என்பது தெளிவு. அவர்கள் ஒன்று கூடி அனு பவித்திருந்த வேதனையின் காரணமாக அவர்களின் உறவுமுறையானது என்றென்றைக்குமாக மாற்றப்பட்டிருந்தது.

இந்தப் பாடத்தின் கருப்பொருளாயுள்ள மிகச் சிறந்த வேத வசனப் பகுதியில் 11:1-44, இயேசு தமக்கு மிகவும் அன்பான நண்பராயிருந்த லாசருவின் கல்லறையருகே இருந்த வரலாறு பற்றிக் கூறப்படுகின்றது. இது "வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (1:14) என்பதன் வழிமுறையை நமக்குச் செயல்விளக்கப்படுத்துகின்ற வரலாறாக உள்ளது. வேதனை நிறைந்த உலகினுள் வந்து, நமது இருளான வேளைகளில் நம்மருகில் வந்து, நமது துக்க வேளையில் நம்முடன் அமர இயேசு சித்தமாகிறார் என்பதை இது நமக்குக் காண்பிக்கின்றது. துன்பத்தின் காரணம் பற்றியோ அல்லது வேதனையின் அர்த்தம் பற்றியோ அவர் நமக்கு விரிவுரையாற்றுவதில்லை; அவர் நம்முடைய கண்ணீர்களுடன் தம்முடைய கண்ணீரை இணையச் செய்கின்றார். இதில் நாம், எதிர்பாராத ஒரு ஆறுதலையும், தேவனுடன் ஒரு ஆழம் மிக்க ஐக்கியத்தையும் காண்கின்றோம்.

யோவான் 11ம் அதிகாரமானது எண்ணற்ற வழிமுறைகளில் படிக்கப்பட முடியும், மற்றும் இந்த அற்புதமான வசனப் பகுதிக்கென்று இந்தத் தொடரில் மேலும் இரு பாடங்கள் அர்ப்பணிக்கப்படும். இவ்வதிகாரத்தில் இந்த முதலாவது பயணத்தில் நாம் உணர்வுகள் மற்றும் உணர்வெழுச்சிகள் ஆகியவற்றின் குறிப்புகள் மீது கவனம் செலுத்த விரும்புகின்றோம்.

## அன்பு

பெத்தானியா என்ற கிராமத்தில் இருந்த லாசரு வியாதிப்பட்டார், மற்றும் அதைப் பற்றிய செய்தியானது வியாதிப்பட்ட அம்மனிதரின் சகோதரிகளான மரியாள் மற்றும் மார்த்தாளின் மூலம் இயேசுவுக்கு அனுப்பப்பட்டது (வ. 1). அவர்கள், "ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்" (வ. 3) என்று கூறினார்கள். முதல் பார்வையில் இது வினோதமான மொழிநடையாகத் தோன்றலாம். இயேசு ஒவ்வொருவர் மீதும் அன்புகூர்ந்திருக்கவில்லையா? எந்த ஒரு மனிதரைப் பற்றியும் "நீர் சிநேகிக்கிறவன்" என்று விவரிக்க முடிவது எவ்விதமாகும்? இயேசு உலகில் உள்ள ஒவ்வொருவர் மீதும் அன்புகூர்ந்தார் மற்றும் அன்புகூருகின்றார், ஆனால் இது அவர் விசேஷித்த நண்பர்களைக் கொண்டிராதிருந்தார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. லாசரு, மரியாள், மார்த்தாள் ஆகியோருடன் இயேசு கொண்டிருந்த நட்புறவைப் புரிந்து கொள்ள, நீங்கள் உங்களையே எளிய கேள்வியொன்றைக் கேட்டுக் கொள்ளுங்கள். அதிகாலை 2.00 மணியளவில் உங்களுக்கு அவசரத் தேவையொன்று ஏற்பட்டால், யாரை

நீங்கள் அழைப்பீர்கள்? இயேசு இம்மூன்று நெருங்கிய நண்பர்களையே அழைத்திருப்பார்.

இயேசு அவர்களின் செய்தியைப் பெற்றுக் கொண்ட பொழுது, அவர் தம்முடைய சீஷர்களின் பக்கம் திரும்பி, "இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல், தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது" (வ. 4) என்று உரைத்தார். யோவானின் அடுத்த விளக்கமானது இம்மூவரைப் பற்றிய இயேசுவின் விசேஷித்த உணர்வுகளை நமக்கு நினைவூட்டுகின்றது: "இயேசு மார்த்தாளிடத்திலும், அவளுடைய சகோதரியினிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்" (வ. 5).

இரு நாட்களுக்குப் பிறகு இயேசு தம் சீஷர்களிடத்தில், அவர்கள் லாசருவைக் காண யூதேயாவுக்குப் பயணப்பட வேண்டும் என்று கூறினார். யூதத் தலைவர்கள் இயேசுவை எவ்வளவாய் வெறுத்து, மற்றும் அவரைக் கொலை செய்ய விரும்பினர் என்பதை அறிந்திருந்த சீஷர்கள் அவர் அங்கு செல்லாதிருக்கும்படி இணங்கச் செய்ய முயற்சி செய்தனர். இருப்பினும் இயேசு, "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" (வ. 11ஆ) என்று கூறி அங்கு செல்வதை வலியுறுத்தினார். இயேசுவின் மொழிநடையானது அவர் லாசரு மற்றும் அவர் தம் சகோதரிகளிடம் மகிழ்வுடன் அனுபவித்திருந்த விசேஷித்த உறவுமுறையை மீண்டும் சுட்டிக்காட்டுகின்றது. நித்திரை என்று அவர் கூறியது உண்மையான மரணமாய் இருந்தது, மற்றும் பிற்பாடு அவர் திட்டவட்டமாக, "லாசரு மரித்துப்போனான்" (வ. 14) என்று அவர்களிடம் கூறினார். யூதேயாவுக்குச் செல்வதென்பது தங்கள் யாவருக்கும் மரணத்தைக் கொடுக்கும் என்று அறிந்திருந்த தோமா, "அவரோடே கூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள்" (வ. 16) என்றார். இவரது வார்த்தைகளில் பயமும் பற்றுறுதியும் கலந்திருந்ததை நாம் கேட்க முடிகின்றது.

## ஏமாற்றம்

இயேசு பெத்தானியாவை அடைந்த பொழுது, லாசரு கல்லறையில் வைக்கப்பட்டு ஏற்கனவே நான்கு நாட்களாகியிருந்தன. இயேசு நகருக்குள் வருவதற்கு முன்பே, அவர் வருவதைக் கேள்விப்பட்ட மார்த்தாள் அவரைக் காண்பதற்காகப் புறப்பட்டுச் சென்றாள். அவரைக் கண்ட பொழுது அவள், "ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால், என் சகோதரன் மரிக்க மாட்டான்" (வ. 21) என்று கூறினாள். இதை இன்றைய நாளில் வாசிப்பவரும் கூட அவளது வார்த்தைகளில் இருந்த ஏமாற்றத்தின் பயங்கரமான வேதனையைக் "கேட்க" முடிகின்றது. "இருந்தீரானால்" என்பது எந்த மொழியிலும் மிகவும் கவலைக்குரிய உணர்வு நிலையாக இருக்கலாம். லாசரு வியாதிப்பட்டிருந்ததைப் பற்றிய செய்தியுடன் செய்தியாளர்கள் இயேசுவை அடைந்த வேளையில் லாசரு ஏற்கனவே இறந்திருக்கலாம் என்றிருந்தாலும், இயேசு அவர்களிடத்தில் வரத் தாமதம் செய்தது பற்றி மார்த்தாளின் மனம் புண்பட்டிருக்க வேண்டும். இயேசு வெறுமனே நின்று கொண்டு "அதை எடுத்துக் கொண்டார்." அவளது

வேதனை, அவளது குழப்பம் மற்றும் அவளது ஏமாற்றம் ஆகியவற்றை அவள் வெளிப்படுத்த அவர் அனுமதித்தார்.

## கண்ணீர்

இயேசுவுடன் சுருக்கமாக உரைகள் பரிமாறிக் கொண்ட பிறகு மார்த்தாள் தன் வீட்டிற்குத் திரும்பி தனது சகோதரியிடம், "போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார்" (வ. 28) என்று இரகசியமாய்க் கூறினாள். மரியாள் தான் செய்வது என்னவென்று விளக்கப் படுத்தாமலேயே, சீக்கிரமாய் எழுந்து இயேசுவைச் சந்திக்க வந்தாள். அச்சகோதரிகளுடன் துக்கம் கொண்டாடுவதற்காக எருசலேமிலிருந்து பெத்தானியாவுக்கு வந்திருந்த யூதர்களோ, அவள் அழுவதற்காக லாசருவின் கல்லறைக்குச் செல்லுகிறாள் என்று நினைத்து, அவளைத் தொடர்ந்து வீட்டிற்கு வெளியே வந்தனர்.

மரியாள் இயேசுவிடம் சென்று சேர்ந்த பொழுது, "அவருடைய பாதத்தில் விழுந்தாள்" (வ. 32), அவள் இதற்குமுன் அவரிடத்தில் பேசியிருந்த தனது சகோதரி தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தியிருந்த நிலைக்கு நேர்மாறானவளாயிருந்தாள். இயேசுவின் பாதத்தில் விழுந்த மரியாளின் உணர்வுகள் அவள் தன் கௌரவம் அல்லது தோற்றம் பற்றிக் கவலையற்றிருந்ததைக் காண்பிக்கின்றன. அவளது இருதயத்தில் இருந்த வேதனையானது அவளது மற்ற உணர்வெழுச்சி ஒவ்வொன்றையும் மூழ்கச் செய்தது. பிறகு மரியாள் தனது சகோதரியின் வார்த்தைகளையே அறிக்கை தந்தாள்: "ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால், என் சகோதரன் மரிக்க மாட்டான்" (வ. 32).

அடுத்து நடந்தது, இவ்வரலாற்றின் "இருதயம்" போன்ற மையப்பகுதி என்று அழைக்கப்பட முடியும். யோவான் பின்வருமாறு எழுதினார்:

> அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதை யும் இயேசு கண்ட போது, ஆவியிலே கலங்கித் துயரமடைந்து: அவனை எங்கே வைத்தீர்கள்? என்றார், ஆண்டவரே வந்து பாரும் என்றார்கள், இயேசு கண்ணீர் விட்டார் (வ. 33-35).

யோவான் ஒரு சில வார்த்தைகளில் - ஆனால் மறக்க முடியாத வகையில் - அச்சகோதரிகளின் வேதனையானது இயேசுவின் மீது கொண்டிருந்த செயல் விளைவை விவரித்தார். அவர் "ஆவியிலே கலங்கித் துயரமடைந்தார்." இன்றைய நாட்களில் நாம், அவர்களின் வேதனை "அவரைப் பற்றிக் கொண்டது" என்று கூறலாம். அவர்களின் உணர்வானது தம்முடைய இருதயத்தினுள் பிரவேசிக்கும்படி அவர் அனுமதித்தார். இயேசுவின் அழுகையானது அந்த சகோதரிகளின் உரத்த அழுகை போன்றோ அல்லது அவர்களுடன் வந்திருந்தவர்களின் புலம்புதல் போன்றோ இருக்கவில்லை. அது அநேகமாக, ஒரு நபர் கூறியுள்ளபடி "கண்ணீரின் மிதமான மழையாய்" ஒரு மெல்லிய புலம்பலாய் இருந்திருக்கும். நிசாவின் கிரகொரி அவர்கள், "கண்ணீர் என்பது ஆத்துமாவின் காயங்களில் இருந்து வருகின்ற இரத்தம்

போன்றது"[1] என்று எழுதினார். இயேசுவின் இருதயமானது துக்கப்பட்ட குடும்பத்திற்காகக் காயப்பட்டது, மற்றும் அவர்களுடன் அவர் அழுதார்.

அதைக் கண்டவர்கள், "இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்!" (வ. 36) என்றார்கள். இந்த வேளையில் அந்தக் கூட்டத்தார் இயேசுவை எவ்வளவு தவறாகப் புரிந்து கொண்டிருந்தனர் என்பதை யோவான் காண்பித்தார் என்று சிலர் நினைக்கிறார்கள். நான் இதை ஒப்புக் கொள்ளவில்லை. அங்கு என்ன நடந்தது என்பதை விவரிக்க யோவான் அந்தக் கூட்டத்தாரின் வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்றே நான் நம்புகின்றேன். அவர்கள் அவருக்கு மிகவும் அன்பார்ந்த நண்பர்களா யிருந்தனர், மற்றும் அவர்களின் இழப்பு அவருடைய இழப்பாக இருந்தது.

லாசருவின் உடல் எங்கு வைக்கப்பட்டதென்று இயேசு கேட்டு, கல்லறைக்குச் சென்றார். இயேசு "மறுபடியும் தமக்குள்ளே கலங்கினார்"[2] (வ. 38) என்று யோவான் எடுத்துரைத்தார். "இயேசுவின் கண்ணீர் எதனை அர்த்தப்படுத்தின?" என்பதே நாம் கேட்க வேண்டிய கேள்வியாக உள்ளது. லாசரு இறந்து போனதினால் அவர் அழுதாரா? இன்னும் சில நிமிடங்களில் தாம் லாசருவை உயிருடன் திரும்ப வரச் செய்யப் போவதை அவர் நிச்சயமாகவே அறிந்திருந்தார். மற்றவர்களிடத்தில் அவர் கண்டிருந்த வேதனையின் காரணமாகவே அந்தக் கண்ணீர் வந்திருக்கக் கூடுமா? ஒருவேளை அப்படியிருக்கலாம். மீண்டுமாக, அவர்களின் புலம்பலானது விரைவிலேயே அவர்கள் அனுபவித்திருந்தவற்றிலேயே மாபெரும் மகிழ்ச்சியாக மாறும் என்றும் அவர் அறிந்திருக்க வேண்டும். அவர் தம்முடைய நண்பர்களிடத்தில் இருந்த விசுவாசக் குறைவுக்காக அழுதார் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும், இயேசு தம்முடைய ஊழியத்தில் அதிகமான அவிசுவாசத்தைக் கண்டிருந்தார், அழுதல் என்பது அவருடைய குறிப்பான பதில்செயலாயிருந்ததில்லை என்பது உறுதி.

இயேசுவின் முகத்தில் வழிந்தோடிய கண்ணீர், மனிதத்துவத்தில் இருப்பது எப்படி என்பதை அவர் முழுமையாக அனுபவித்தார் என்பதைச் செயல் விளக்கப்படுத்தின. C. S. லூயிஸின் கதையை நினைவு படுத்திக் கொண்ட நிலையில், நீங்கள் இயேசு நமது உலகிற்கு வந்து, நம்முடன் அமர்ந்து, அழுதார் என்று கூறலாம்!

## முடிவுரை

டேமியன் டிவெஸ்டெர் (1840-89) அவர்கள் டைஃபஸ் காய்ச்சலினால் வியாதிப்பட்ட தனது சகோதரருக்குப் பதிலாக ஒரு ஊழியக்காரராக ஹவாய் தீவுக்குச் சென்றார். அந்தத் தீவில் ஒன்பது ஆண்டுகள் கடினமான ஊழியத்திற்குப் பின்பு அவர், தொழு நோயாளிகள் வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த தீவான மொலக்காய் என்ற இடத்திற்குச் செல்லத் தன்னார்வத்துடன் வந்தார். அங்கு அவர் ஒரு தாதியாக, கட்டுபவராக, கட்டிடக் கலைஞராக, மருத்துவராக, காப்பாளராக, சவப்பெட்டி செய்பவராக, கல்லறைக்குழி தோண்டுபவராக வேலை செய்தார். அந்தத் தீவில் இரு அனாதை இல்லங்கள் கட்டும் பணியைக் கூட அவர்

ஒருங்கமைத்தார். ஒவ்வொரு ஞாயிறன்றும் அவர் பிரசங்கித்தார், தமது பிரசங்கத்தை அவர் எப்பொழுதுமே “தொழுநோயாளர்களே, தேவன் உங்களில் அன்புகூருகிறார் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள்” என்ற வார்த்தைகளைக் கொண்டே தொடங்குவார். ஒருநாள், டேமியன் தானும் தொழுநோயால் பீடிக்கப்பட்டதைக் கண்டறிந்தார். அடுத்த ஞாயிறன்று அவர் சபையாரின் முன்பாக நின்ற பொழுது, “தொழு நோயாளர்களாகிய நாம், தேவன் நம்மில் அன்புகூருகின்றார் என்று அறிந்துள்ளோம்” என்று தொடங்கிப் பிரசங்கித்தார்.

லாசருவின் கல்லறையருகிலிருந்த இயேசுவின் சித்தரிப்பானது, இயேசு மனிதனாய் இருப்பதன் முழுமையை அனுபவித்தார் என்பதன் தெளிவான நினைவூட்டுதலாக உள்ளது. அவர் 50 சதவிகிதம் மனிதராகவும் 50 சதவிகிதம் தேவனாகவும் இருந்ததில்லை; அவர் 100 சதவிகிதம் தேவனாயிருக்கையிலேயே 100 சதவிகிதம் மனிதராகவும் இருந்தார். இயேசு நம் உலகத்தில் பிரவேசிக்கின்றார், நமது வேதனையை உணருகின்றார், மற்றும் நமது கண்ணீரைக் கொண்டு கதறுகின்றார், “தேவன் நம்மில் அன்புகூருகின்றார் என்று நாம் அறிந்துள்ளோம்” என்ற செய்தியை நமக்கு அளிப்பதற்காகவே அவர் இவை யாவற்றையும் செய்கின்றார்.

---

குறிப்புகள்

[1]Quoted in Richard Foster, *Prayer* (San Francisco: Harper, 1992), 37. [2]வசனங்கள் 33 மற்றும் 38 ஆகியவற்றில், embrimaomai என்ற அதே கிரேக்க வார்த்தையே “கலங்கி” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

# “நானே உயிர்த்தெழுதலாய் இருக்கின்றேன்” [11:1-44]

*எரேமியா அதை எப்படிச் செய்தார் என்று நான் அறியவில்லை! பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி பிரசங்கிக்க எழுந்து நின்ற ஒவ்வொரு வேளையிலும் அவரது சபையானது அளவில் சிறியதாகியது. அவர் வாழ்ந்திருந்த காலத்தின் காரணமாக, அவர் பிரசங்கிக்கும்படி அழைக்கப்பட்டிருந்த சத்தியமானது ஏறக்குறைய (அம்மனிதர்களுக்குக்) கெட்ட செய்தியாகவே இருந்தது. இஸ்ரவேலர்கள் பொல்லாங்குகளில் வெகு தூரம் ஆழ்ந்து போயிருந்தனர், மற்றும் அவர்களைப் பாபிலோனிய அடிமைத்தனத்தில் அனுப்புவதென்று தேவன் முடிவு செய்திருந்தார். இஸ்ரவேலர்கள் “தங்கள் மருந்தினை எடுத்துக் கொண்டு” தங்கள் நியாயத்தீர்ப்பை சமாதான நிறைவுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே எரேமியா அவர்களுக்கு விடுத்த செய்தியாக இருந்தது. இதன் விளைவாக, மக்கள் அவரை வெறுத்து அவர் மரித்தால் நன்றாயிருக்குமே என்று விரும்பினர்!*

## ஒரு கெட்ட செய்தி

யோவான் 11ல் இருந்து இந்தப் பாடத்தைத் தொடங்குதலானது இன்றைய நாளில் பிரசங்கியாரை எரேமியாவைப் போலச் சற்று உணரச் செய்கின்றது. இவ்வசனப் பகுதியானது அற்புதம் நிறைந்த சில நற்செய்தி அடங்கப் பெற்றதாக இருக்கையில், முதலில் நாம் எதிர்கொள்ள விரும்பாத சிலவற்றை எதிர்கொள்ளும்படி இது கேட்கின்றது. *நாம் யாவரும் மரிப்போம்* என்பது வேதனை நிறைந்த சத்தியமாக உள்ளது! வாழ்வு என்பது உயிருக்குத் துன்பத்தைக் கொண்டதாக உள்ளது. இந்தக் கணத்தில் நாம் எவ்வளவுதான் இளமையும், பலமும் மற்றும் உடல்நலமும் கொண்டிருந்தாலும் ஒரு நாளில் நாம் மரித்து விடுவோம்! அது இன்றோ அல்லது நாளையோ அல்லது எண்பது ஆண்டுகள் கழித்தோ நடைபெறலாம், ஆனால் நாம் யாவருமே மரிப்போம்.

இந்தப் பயங்கரமான உண்மையை எதிர்கொள்வதை நாம் பல வழிமுறைகளில் தவிர்க்கும்படியாக முயற்சி செய்கின்றோம். நாம் போதிய அளவு உடற்பயிற்சி செய்தால், சரியான உணவுகளை உட்கொண்டால், நமது இருக்கைக் கச்சைகளை அணிந்து கொண்டால், சுத்திகரிக்கப்பட்ட நீரைக் குடித்தால், மற்றும் வெளியே செல்லும் பொழுது சூரிய ஒளியை வடிகட்டும் திரை போன்ற மருந்தைத் தடவிக் கொண்டால், மரணத்திலிருந்து நாம் பாதுகாக்கப்பட்டவர்களாய் இருப்போம் என்று

நம்மை நாமே இணங்கச் செய்ய முயற்சிக்கின்றோம். கடைசியில், இவ்வுலகில் மரண விகிதமானது 100 சதவிகிதமாக உள்ளது என்ற உண்மையிலிருந்து எதுவும் நம்மைப் பாதுகாக்க முடிவதில்லை.

அநேகமாக நீங்கள், "இன்று இதைக் கேட்க நான் விரும்பவில்லை! இந்த வாரம் முழுவதும் எனக்கு மிகக் கடினமான வேலைகள் இருந்தன, இப்பொழுது நான் இறந்து விடுவேன் என்று நினைவூட்டப்படுகின்றேன்!" என்று நினைக்கலாம். இப்படிப்பட்ட வேதனை நிறைந்த, மன அழுத்தம் தரும் பாடக் கருத்துக்கு சுவிசேஷமானது பதில் அளிக்காதிருந்தால் நான் இப்படிப்பட்ட பாடக் கருத்தை கொண்டு வந்திருக்க மாட்டேன். யோவான் 11ல் உள்ள இந்த அற்புதமான வரலாற்றில் இயேசு, எக்காலத்திலும் உள்ள மக்களுக்கு, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று அறிவிக்கின்றார். இது அற்புதம் நிறைந்த செய்தியாக உள்ளது, ஆனால் இதை மதிப்பதற்கு, முதலாவது கெட்ட செய்தியைப் பற்றி நினைவூட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

யூதேயாவில் எழுந்த போராட்டத்திலிருந்து இயேசுவும் அவருடைய சீஷர்களும் விலகிச் சென்று யோர்தான் நதியைக் கடந்து யோவான் ஸ்நானன் பிரசங்கித்திருந்த இடத்திற்குச் சென்றிருந்தனர் (10:40). பெத்தானியாவின் லாசரு வியாதிப்பட்டிருந்தாரென்று செய்தி அங்கு வந்தது (11:1). லாசருவும் அவருடைய சகோதரிகளான மரியாள் மற்றும் மார்த்தாள் ஆகியோரும் இயேசுவுக்கு அன்பார்ந்த நண்பர்களாயிருந்த காரணத்தினால் இயேசு அநேகமாக உடனடியாய் பெத்தானியா செல்வார் என்றே ஒவ்வொருவரும் யூகித்திருப்பார்கள். இருப்பினும் அவ்வேளையில் இயேசு மட்டுமே அறிந்திருந்த காரணங்களினிமித்தமாக அவர் அங்கேயே மேலும் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். கடைசியில், லாசரு மரித்துப் போனார் என்பதை அறிந்த இயேசு, வியாதியாயிருந்த தம்முடைய நண்பரைக் காணச் செல்ல வேண்டிய வேளை வந்தது என்று தம்முடைய சீஷர்களிடம் கூறினார். முதலில் அவர்கள் இக்கருத்தை மறுத்தனர் ஏனென்றால், எருசலேமுக்கு அருகில் அவர்கள் இருப்பதாகக் காணப்பட்டால், தங்களுக்குத் துன்பமும், மரணமும் கூட நேரிடும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், மற்றும் பெத்தானியா எருசலேமில் இருந்து இரண்டு மைல் தூரத்திலேயே இருந்தது (11:18). இருப்பினும், லாசரு இறந்து போனார் என்று அவர்களிடத்தில் இயேசு கூறிய பொழுது - "அவருடன் மரிக்கும்படியாக" (11:16) என்ற தோமா கூறியபடி அவர்கள் அங்கு செல்லத் தயக்கத்துடன் ஒப்புக் கொண்டார்கள்.

இயேசு கிராமத்திற்குச் சமீபித்திருக்கையில், ஆனால் அங்கு அவர் பிரவேசிப்பதற்கு முன்பே (11:30) அவர் வருவதைக் கேள்விப்பட்ட மார்த்தாள் அவரைச் சந்திக்க விரைவாய் எழுந்து சென்றாள். அவள், "ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்க மாட்டான்" (11:21) என்று கூறினாள். மரணத்தை எதிர்கொண்டிருக்கையில் உதவியற்றுள்ள நிலை பற்றி மனிதகுலம் முழுவதும் அவளுடைய இந்த உணர்வுகளுடன் தொடர்பு படுத்தப்பட முடியும். மரணத்தின் நசுக்கும் வல்லமையிலிருந்து நமது மிகச் சிறந்த முயற்சிகளும் கூட நம்மைப்

*பாதுகாக்க முடியாது என்பதைச் சவ அடக்கங்கள் நமக்கு நினைவு படுத்தும் ஒரு வழிமுறையாக உள்ளது.*

*அவளிடத்தில் இயேசு, "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" (11:23) என்று பதிலுரைத்தார். இந்தக் கூற்றானது அவளுக்கு எவ்விதம் ஒலித்தது என்பதை அறிய நமக்கு வழியில்லை. அது வேதனை நிறைந்த தாயிருந்ததா? அது சவ அடக்கத்தின் போது கேட்கின்ற அநேக வெறுமையான, வீணான வார்த்தைகளைப் போல ஒலித்ததா? அது அவளுடைய விசுவாசக் குறைவைக் கடிந்து கொள்வது போல ஒலித்திருக்க முடியுமா? இயேசுவின் வார்த்தைகளுக்கு அவளது முதலாவது பதில்செயல் எதுவாயிருப்பினும், அவைகளை அவள் ஆவிக்குரியவைகளாக்கி, "உயிர்த் தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன்" என்றாள் (11:24).*

## நற்செய்தி

*இந்த அமைவில் இயேசு தம்முடைய முழு ஊழியத்திலும் கூறியவை களிலேயே மிகவும் அதிகமாக உலகத்தை மாற்றக் கூடிய வார்த்தைகளை உரைத்தார். மார்த்தாளிடம் அவர், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமா யிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" (11:25, 26அ) என்று உரைத்தார். இந்த இடத்தில் இயேசு என்ன கூறாதிருந்தார் என்பதைக் கவனிப்பது முக்கியமானதாக உள்ளது. அவர், "நான் லாசருவை உயிர்த்தெழும்பச் செய்வேன்" என்று கூறவில்லை. அவர், "நான் எனது உயிர்த்தெழுதலை அனுபவிப்பேன்" என்று கூறவில்லை. "நான் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று அவர் அறிவித்த பொழுது அவர் இவைகளைக் காட்டிலும் மேலான கருத்தை வெளிப்படுத்தினார். இங்கு நாம் யோவான் சுவிசேஷத்திலுள்ள "நான் இருக்கிறேன்" என்ற மற்றுமொரு கூற்றினை எதிர்கொள்ளுகின்றோம். இயேசு தெய்வீகத்திற்கான இன்னொரு உரிமைகோருதலை ஏற்படுத்து வதுடன், மரணம் என்ற அந்த மாபெரும் எதிரியுடன் தம்முடைய உறவையும் அதே வேளையில் விளக்கப்படுத்தினார்.*

*தம்மையே உயிர்த்தெழுதல் என்று அறிவித்ததன் மூலமாக இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் உடல் ரீதியான மரணம் அடைய மாட்டார்கள் என்று வாக்களிக்கவுமில்லை, அல்லது தாம் ஒருக்காலும் மரணத்தை எதிர்கொள்வதில்லை என்றும் அவர் வாக்களிக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர் தாம் மரித்து மீண்டும் உயிரோடு எழுவதினாலும், மரணத்தின் வல்லமையை முறிப்பதினாலும் தம்மைப் பின்பற்றுபவர்கள் மரணத்துடன் மீண்டும் ஒருபொழுதும் அப்படிப்பட்ட உறவு கொண்டிருக்க மாட்டார்கள் என்றே உரிமைகோரினார். அவர்களைப் பொறுத்தமட்டில், உயிர்த்தெழுதல் என்பது அற்புத செயலைக் காட்டிலும் உயர்ந்ததாக, ஒரு - ஒரு தரம் நடக்கும் நிகழ்வைக் காட்டிலும் மேலானதாக இருக்கும்; அது வாழ்வைப் பற்றிய ஒரு புதிய உண்மை நிலையாக இருக்கும்!*

*மார்த்தாளின் அடுத்த வார்த்தைகள் ஒரு மாபெரும் அளவிலான விசுவாசத்தையும், ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றிய ஒரு ஆழமான புரிந்து கொள்ளுதலையும் பிரதிபலிக்கின்றன. இயேசு, அவள் தம்மை விசுவாசிக்கின்றாளா என்று கேட்ட பொழுது, அவள் "ஆம் ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்" (11:27) என்று பதில் அளித்தாள். நடக்க விருந்த ஆச்சரியமிக்க அற்புதத்தைக் காணும் முன்பாகவே மார்த்தாள், யோவான் சுவிசேஷமானது எந்த வகையான விசுவாசத்தை உண்டாக்குவதற்காக எழுதப்பட்டதோ அந்த வகையான விசுவாசத்தைச் செயல்விளக்கப் படுத்தினாள்![1]*

*மார்த்தாள் இயேசுவைச் சந்தித்ததைத் தொடர்ந்து, கர்த்தருடைய வருகையைத் தன் சகோதரிக்குக் கூறுவதற்காக தனது வீட்டிற்குத் திரும்பினாள். இயேசு அருகிலிருந்தார் என்று கேள்விப்பட்ட மரியாள் அவரைச் சந்திப்பதற்காக விரைவாய்ச் சென்றாள். அவள் இயேசுவைச் சந்தித்த பொழுது, அவரது பாதத்தில் வீழ்ந்து, தனது சகோதரியின் வேதனை நிறைந்த வார்த்தைகளை மீண்டும் கூறினாள்: "ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால், என் சகோதரன் மரிக்க மாட்டான்" (11:32). அந்தக் கணத்தில் மரியாள் அனுபவித்திருக்க வேண்டிய வேதனை, புலம்பல், வருத்தம் மற்றும் ஏமாற்றம் ஆகியவற்றைப் போன்ற உணர்வுகளை நாம் அனைவருமே அனுபவித்துள்ளோம். இதன் விளைவாக, நாம் யாவரும் இயேசுவுடன் லாசருவின் கல்லறைக்குச் செல்லத் தயாராக உள்ளோம்.*

*அந்த நாளிலே தாம் கண்டிருந்த யாவற்றினாலும் இயேசு "ஆவியிலே கலங்கித் துயரமடைந்தார்" (11:33). லாசரு எங்கே புதைக்கப்பட்டார் என்று அவர் கேட்டார். அவர்கள் கல்லறைக்குச் செல்லும் வழியிலே, புலம்பிய மற்றவர்களின் கண்ணீரோடு இயேசு தம்முடைய கண்ணீரையும் கலந்து, வெளிப்படையாக அழுதார் (11:35). அருகில் நின்றவர்கள், "இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்!" (11:36) என்று வியப்படைந்தார்கள்.*

*லாசருவின் கல்லறை என்பது உண்மையில் ஒரு பெரிய கல்லை வைத்து மூடப்பட்டிருந்த குகையாய் இருந்தது (11:38). கல்லை எடுத்துப் போடும் படி இயேசு அவர்களிடம் கூறிய பொழுது, லாசரு புதைக்கப்பட்டு நான்கு நாட்கள் ஆயிற்று என்றும் அவரது அழுகிக் கொண்டுள்ள சரீரத்திலிருந்து துர்நாற்றம் வீசும் என்றும் மார்த்தாள் மறுப்புக் கூறினாள். இயேசு தம்மை விசுவாசிக்கும்படி அவளுக்குக் கூறினார், மற்றும் கல் எடுத்துப் போடப்பட்டது (11:39-41).*

*யோவான் சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வேறு எந்த "அடையாளங்களும்" லாசருவின் கல்லறையில் நடந்ததை விடப் பெரியது அல்ல. இந்த நிகழ்ச்சிகள் "தேவனுடைய மகிமையை" மக்கள் காண்பதற் காகவே நடைபெறுகின்றன என்று அதிகாரம் 11ல் இயேசு மும்முறை உரிமைகோரினார் (11:4, 15, 40). இயேசுவின் போதனைகள் மற்றும் அற்புதங்களின் வழிமுறையின் ஒவ்வொரு படியிலும் நாம் தேவனுடைய மகிமையைக் கண்டுள்ளோம்; ஆனால் யோவான் சுவிசேஷத்தின் இப்பகுதியில், தேவனுடைய மகிமை லாசரு எழுப்பப்பட்டதில் -*

கிறிஸ்துவில் தேவன் பிரசன்னமாகியுள்ளார் என்ற விஷயம் வெளிப்படுத்தப் பட்டதில் - அது மிகவும் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதாயுள்ளது. இது, நாம் ஒளிமிக்கதாகவோ அல்லது ஒளி குறைவாகவோ செய்யக் கூடிய ஸ்விட்ச் ஒன்றைக் கொண்ட ஒரு விளக்கைக் கொண்டு நாம் இந்த சுவிசேஷத்தை வாசிப்பது போன்றுள்ளது. நாம் யோவான் சுவிசேஷத்தில் அதிகம் கடந்து செல்லச் செல்ல, ஒளியின் பிரகாசிப்பு அதிகம் ஆகின்றது. நாம் அதிகாரம் 11ஐ அடையும் பொழுது, ஒளியானது ஏறக்குறைய கண்களைக் கூசச் செய்வதாக உள்ளது. தேவனுடைய மகிமையை ஏற்கனவே நாம் பல வழிகளில் கண்டிருக்கின்றோம்; அடுத்த சில வசனங்களில் நாம் அதை மிகவும் வல்லமை நிறைந்ததாகக் காண்கின்றோம்.

அதிர்ச்சியடைந்து இருந்த அந்தத் துக்கம் கொண்டாடியவர்கள் லாசருவின் கல்லறைக்கு வெளியே நின்று கொண்டு, அதன் நுழைவாயிலில் இருந்து கல் எடுத்துப் போடப்படுவதைக் கவனித்துக் கொண்டிருக்கையில், இயேசு தம் கண்களைப் பரலோகத்திற்கு ஏறெடுத்து ஜெபித்ததைக் கண்டனர் (11:41, 42). இயேசு தம்முடைய ஜெபத்தை முடித்த பிறகு, "லாசருவே, வெளியே வா" என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார் (11:43). குகையின் வாசலை ஒவ்வொருவரும் கவனித்துக் கொண்டிருக்கையில், கற்பாறை போன்ற அமைதி தொடர்ந்திருக்க வேண்டும். ஒன்றும் நடைபெறாமல் இருந்திருந்தால் அவர்கள், ஒரு பைத்தியம் பிடித்த மனிதன் முன்னிலையில் தாங்கள் நின்றிருந்ததாக அறிந்திருப்பார்கள்; ஆனால் லாசரு குகையை விட்டு வெளியே வந்தால், அவர்கள் இதுவரை கண்டவர்களி லேயே மிக அதிகமான வல்லமை கொண்ட ஒருவரின் முன்னிலையில் தாங்கள் நின்றிருந்ததாகப் புரிந்து கொண்டிருப்பார்கள்.

"மரித்தவனாயிருந்த" லாசரு (11:44) தனது சவஅடக்கத்தின் போது தன்னைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த துணிகளுடன் குகையை விட்டு வெளியே நடந்து வந்தார். அருகில் இருந்தவர்களிடம் இயேசு, "இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள்" என்று அறிவுறுத்தினார் (11:44). லாசரு உயிரோடு இருந்தார், இயேசு தம்மைப் பற்றி உரிமைகோரியிருந்த யாவற்றையும் மீண்டும் செயல்விளக்கப்படுத்தினார், மற்றும் தேவனுடைய மகிமையானது மிகுந்த ஒளியுடன் சுடர் விட்டது! இதன் விளைவாக, - நாம் எதிர்பார்க்கின்றபடியாகவே, இயேசு செய்தவைகளைக் கண்ட பலர் அந்த நாளில் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள் (11:45).

## நற்செய்தியும் நாமும்

லாசருவின் கல்லறையில் இயேசுவின் செயலானது, மரணத்தைப் பற்றிய நமது சொந்த பயங்களை எதிர்கொள்ள நமக்கு உதவுகின்றது. இயேசு அன்று செய்த, மற்றும் அவர் இன்றும் செய்கின்ற செயல்களின் காரணமாக, இந்த வாழ்வில் மகிழ்வுடன் இருப்பதற்கு நாம் மரணத்தின் உண்மை நிலையை மறுக்க வேண்டியதில்லை. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் மரணத்திலிருந்து (விலகி) ஓடுவதில்லை; நாம் அதனை எதிர்கொள்ளுகின்றோம். அது நமக்கு நேரிடாது என்பதாக நாம் பாவனை

செய்வதில்லை; நாம் அதற்கு ஒரு பதிலைக் கொண்டுள்ளோம் என்று இந்த உலகத்திற்கு அறிவிக்கின்றோம். பவுலின் எழுத்துக்களில் இருந்து பின்வரும் இரு எடுத்துக்காட்டுகளில் இந்தப் புதிய எண்ணப்போக்கு காணப் படுகின்றது:

> *மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங் களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் (ரோமர் 8:38, 39).*

> *அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? (1 கொரி. 15:54, 55).*

மரணம் என்பது வாழ்வின் ஒரு உண்மை நிலையாக உள்ளது. கிறிஸ்தவமானது மரணத்திற்கு ஒரு பதிலைக் கொண்டுள்ளது என்பதற்காக நாம் நன்றி நிறைந்தவர்களாய் இருக்க முடியும். இயேசுவே உயிர்த் தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறார் என்ற அறிவானது, "உண்மை உலகில்" நாம் சமாதானமும் சந்தோஷமும் கொண்டிருக்க நம்மை அனுமதிக்கின்றது. மரணத்தைப் பற்றிய நமது பயத்தை முதலில் எதிர்கொள்வதன் மூலமாகவே நாம் இவ்வாழ்வில் உண்மையான சந்தோஷத்தைக் கொண்டிருக்க முடியும்.

பதினேழாம் நூற்றாண்டின் கவிஞரும் பிரசங்கியாருமான ஜான் டோன்னே என்பவர், வாழ்வு மற்றும் மரணத்தின் மாபெரும் விஷயங்கள் குறித்துத் தமது சிந்தையையும் ஆத்துமாவையும் ஒழுங்கு படுத்திக் கொள்வதற்காக, ஒரு சவப்பெட்டியில் உறங்க நேரம் தேர்ந்து கொண்டார். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நான் கூட இதே வகையான ஒரு அனு பவத்தைப் பெற்றேன். எனது அலுவலகத்தைச் சுற்றிலும் இருந்த நிலையான சப்தம் மற்றும் செயல்களினால் படிப்பதற்கும் ஜெபத்திற்கும் போதிய அளவு நேரம் காண முடியாத நிலையில் இருந்த நான் உள்ளூரில் சவஅடக்க இல்லத்தை நடத்திக் கொண்டிருந்த எனது நல்ல நண்பர் ஒருவரிடம் எனது பிரச்சனையைப் பற்றிக் குறிப்பிட்டேன். மிகக் குறுகிய காலத்திற்குப் பிறகு அவர் எனது இக்கட்டான நிலைமைக்கு ஒரு தீர்வைச் சிந்தித்திருந்ததாகக் கூறினார். சவஅடக்க இல்லத்தின் இரண்டாம் தளத்திற்கு அவர் என்னை அழைத்துச் சென்று, எனக்காக அவர் கட்டியிருந்த படிப்பறை ஒன்றை - அது அவருடைய சவப்பெட்டிகளின் வைப்பறையின் பின் மூலையில் இருந்ததை - எனக்குக் காண்பித்த பொழுது நான் திகைப்படைந்ததை நீங்கள் கற்பனை செய்ய முடியும்! அது நான் பெற்றிருந்தவைகளிலேயே மிகவும் அற்புதமான பரிசுகளில் ஒன்றாக இருந்தது! மற்றும் அந்தப் படிப்பறைதான் படிப்பதற்கும், சிந்திப்பதற்கும் மற்றும் ஜெபிப்பதற்கும்

*நான் மற்ற எல்லாவற்றிலிருந்தும் விலகியிருக்கக் கூடிய ஒரே இடமாக அந்நகரில் இருந்தது! (சவப்பெட்டிகள் வைப்பறையில் உள்ள ஒரு மனிதனைப் பற்றி யார் கவலைப்படப் போகின்றார்!) அந்த வேளை முதலாய் நான், ஒரு சவ அடக்க இல்லத்தில், வாழ்வின் மிகக் கடினமான உண்மை நிலையின் நிழலில் ஒருவேளை எல்லாப் பிரசங்கங்களும் எழுதப்பட்டிருந்தால் எப்படியிருக்கும் என்று வியப்படைவதுண்டு. இறந்த உடலைப் பதனம் செய்யும் அறையைக் கடந்து சென்று, சவப்பெட்டிகள் நிறைந்திருந்த அறையினூடாகச் செல்வது என்பது, மக்கள் மிகவும் சந்தோஷமான வாழ்வு வாழ உதவி செய்தல் என்பது என் ஊழியத்தின் முக்கிய நோக்கமல்ல என்பதை எனக்கு நினைவூட்டுகின்றது; எனது ஊழியமானது மக்கள் உண்மையான வாழ்வைக் கண்டறிவதற்கானதாக உள்ளது: இது அவர்களின் இருதயங்களில் உள்ள எல்லாத் துக்கத்தையும் நீக்கிப் போடுவதற்கானது அல்ல; இது துக்கத்தைக் கடந்து உயிர்த்தெழுதலுக்குச் செல்லும் வழியை அவர்களுக்குக் காண்பிப்பதற்கானதாக உள்ளது. இது உலகத்தின் அழுத்தங்கள் மற்றும் இறுக்கங்களை எதிர் கொள்ள அவர்களுக்கு உதவுவதாய் மட்டுமின்றி, அவர்கள் தங்கள் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படுத்துவதற்கானதுமாக உள்ளது (ஆமோஸ் 4:12).*

## *முடிவுரை*

*நீங்கள் எப்பொழுதாவது உங்களுக்குப் பயமூட்டிய அல்லது உங்களைக் கிளர்ச்சியடையச் செய்த மர்மங்கள் நிறைந்த புத்தகத்தை வாசித்ததோ அல்லது மர்மங்கள் நிறைந்த திரைப்படத்தைப் பார்த்ததோ உண்டா? அதே புத்தகத்தை நீங்கள் மீண்டும் வாசித்ததோ அல்லது அதே திரைப்படத்தை நீங்கள் மீண்டும் பார்த்ததோ உண்டா? இரண்டாவது முறையில் உங்கள் பதில்செயல் என்னவாயிருந்தது? நான் அதைச் செய்யும் பொழுது, இரண்டாம் முறையில்தான் சற்று ஆறுதலாய் இருக்க முடியும், ஏனென்றால் எல்லாம் நலமே முடியும் என்ற என் நம்பிக்கையுடன், கதாநாயகன் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் மற்றும் அபாயங்களை நான் மாறுபட்ட வழியில் கண்ணோக்குவதுண்டு.*

*பெத்தானியாவின் அருகில் இருந்த குகையிலிருந்து லாசரு வெளியே நடந்து வந்த பொழுது, அவர் நமது சொந்த வரலாறுகள் எவ்விதமாய் முடியும் என்று நமக்குக் காண்பித்தார். கர்த்தர் விரைவில் மீண்டும் வராதிருந்தால், நாம் யாவரும் மரணத்தை எதிர்கொள்ளுவோம் என்பது உண்மையானதாக உள்ளது. இருப்பினும் இயேசுவே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருப்பதால், மரணத்தை நாம் மாறுபட்ட வகையில் கண்ணோக்குகின்றோம். ஒரு நாளிலே நமது உடலானது கல்லறைகளில் வைக்கப்பட்டாலும், நாம் அந்தக் கல்லறைகளில் இருந்து இன்னொரு நாளில் உயிர்த்தெழுவோம் என்று அறிந்துள்ளோம்! மரணத்தின் பிரச்சனைக்கு இயேசுவே நமது பதிலாக உள்ளார் என்று நாம் விசுவாசிக்கும் பொழுதுதான், அப்போது மட்டுமே நாம் வாழ்வதற்கு உண்மையாகவே*

தயாராகின்றோம் என்பதே இங்கு எதிர்மறைக் கருத்தாய் உள்ளது.

---

குறிப்பு

[1]மார்த்தாள் குறிப்பிடத்தக்க தனது அறிக்கையினால் புகழ் பெறுவதற்கு மாறாக, பல வேலைகளில் கவனமாய் இருந்தாள் என்பதையே அதிகம் குறிப்பிடுவது எவ்வளவு துரதிருஷ்ட வசமானது என்று மார்த்தாளின் அறிக்கை பற்றிய பக்கக் குறிப்பொன்றை லியோன் மோரிஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார் (*The New International Commentary on the New Testament* [Grand Rapids, Mich.: Baker Book House, 1986], 551).

# "நான் விசுவாசிக்கிறேன்"
# (11:1–57)

*எழுத்தாளரின் குறிப்பு: பின்வரும் பாடமானது நடத்தப்படுவதற்கு முந்திய வாரத்தில், இங்குள்ள சபையின் உறுப்பினரான ஜேமி கோவென் என்ற 23 வயது வாலிபர் ஒருவர், ஹார்டிங் பல்கலைக் கழகத்தின் பென்சன் கலையரங்கின் மேல் பகுதியில் உள்ள ஒடுக்கமான நடைபாதையிலிருந்து கீழே விழுந்து விட்டார். அவர் உயரமான பகுதிக்கு ஏறிக் கொண்டிருக்கை யில் அவரது கைகள் பிடியைத் தவற விட்டன, மற்றும் அவர் மெலிதான கூரை ஓடுகளின் மேல் மோதி, கீழே ஐம்பதடி தொலைவில் இருந்த கடினமான தரையின் மேல் தடுக்கி விழுந்தார். பயங்கரமான இந்த வீழ்தலில் அவர் ஏறக்குறைய எவ்வித சிறு காயமும் இல்லாமல் தப்பினார், மற்றும் மூன்று நாட்கள் மருத்துவமனையில் இருந்த பிறகு வீடு திரும்பினார் என்று நன்றியுடன் நினைவுகூரத் தக்கதாகும். இன்று அவர் பூரண சுகத்துடன் இருக்கின்றார், ஆனால் பயமுறுத்தக் கூடிய வகையில் அவருக்கு ஏற்பட்ட விபத்தானது நான் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் பிரசங்கிக்கும் சபையாரை ஆழமாகப் பாதித்தது. பாதிக்கப்பட்ட இந்த வாரத்திற்குப் பின்பு, ஜேமியின் வாழ்வுக்காக தேவனுக்கு நன்றி கூறவும் மற்றும் அவரது புகழ்ச்சியை விசேஷித்த முறையில் பாடவும் சபைக்கு ஒரு ஆராதனை ஊழிய நேரம் தேவைப்பட்டது. இதன் விளைவாக, தியான முறையிலான இந்தப் பிரசங்கமானது ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்த அற்புதமான வேத பாடப் பகுதியினால் அறிவிக்கப்படும் சத்தியங்களின் கருத்தைக் கொண்டு விசேஷித்த பாடல்கள் குறிப்பிடப்பட்டனவாக உள்ளன.*

---

அன்பு எப்பொழுதுமே மீண்டும் தொடங்குகின்றது! அன்பு என்பது ஒரு குழந்தை தனது தாயின் கரங்களில் பாதுகாப்புடன் இருப்பதாகும் என்று அறிந்துள்ளதாக ஒருவர் நினைக்கலாம். ஒரு இளம் பெண் தனது இளம் வயதில் முதலாவதாகக் காதலில் ஈடுபட்ட போது தான், அன்பைக் கண்டதாக நினைக்கலாம். ஒரு மனிதர் தாம் திருமணம் புரிய விரும்பும் பெண்ணை காணும் பொழுது அன்பின் நிறைவைக் கண்டு பிடித்ததாக உறுதியாய் இருக்கலாம். பெற்றோர் தங்கள் புதிதாகப் பிறந்த பச்சிளம் குழந்தையைத் தங்கள் கரங்களில் ஏந்தியிருக்கும் பொழுது அன்பு பூரணப்பட்டதாகக் காணப் படலாம். யாராவது ஒருவருடன் பயங்கரமான எதிர்ப்பின் மூலம் நாம் துன்புறும் பொழுது அன்பை உண்மை நிலையாக்குவது எது என்று கடைசியில் நாம் கண்டு பிடித்து விட்டதாக

நினைக்கலாம். அன்பு என்பது எப்பொழுதுமே தொடங்குவதாகவே காணப்படுகின்றது.

## விசுவாசம் எப்பொழுதுமே தொடக்கமாய் இருக்கிறது (11:15)

விசுவாசமும் அன்பைப் போன்றே உள்ளது, அதுவும் கூட அது எப்பொழுதும் தொடக்கமாய் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, யோவான் சுவிசேஷத்தில், நாம் அதிகாரம் 11ஐ அடையும் வேளையில் சீஷர்கள் ஏற்கனவே இயேசுவின் மீது விசுவாசம் கொண்டவர்களாய் இருந்தார்கள். அந்திரேயா தாம் யோவான் ஸ்நானனை விட்டு இயேசுவைப் பின்பற்றும் படி வந்த நாளிலே விசுவாசம் உள்ளவரானார் (1:41), பிலிப்பு தம்மை இயேசு அழைத்த நாளில் விசுவாசம் உள்ளவரானார் (1:45), மற்றும் நத்தானியேல் தம்மை அத்தி மரத்தின் கீழே நிற்கக் கண்டதாக இயேசு கூறிய பொழுது விசுவாசமுள்ளவரானார் (1:49). கானாவூர்த் திருமணத்தில் கலந்து கொண்ட சீஷர்கள், இயேசு தண்ணீரைத் திராட்ச ரசமாக்கினதைக் கண்ட பொழுது விசுவாசமுள்ளவர்களானார்கள் (2:11). ஐயாயிரம் பேருக்கு உணவளித்த நிகழ்ச்சியைக் கண்டு, ஜீவ அப்பம் பற்றிய உரையைக் கேட்ட பேதுருவும் மற்ற சீஷர்களும் விசுவாசித்தார்கள் என்று நமக்குக் கூறப்படுகின்றது (6:69). விசுவாசம் பற்றிய இந்தக் கூற்றுக்கள் எல்லா வற்றிற்குப் பிறகும் கூட, இயேசு தம்முடைய சீஷர்களிடம் அவர்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவாய் லாசருவை உயிரோடு எழுப்பும் வாய்ப்பிற்காகத் தாம் சந்தோஷம் அடைவதாகக் கூறினார் (11:15)!

விசுவாசம் அது போலவே - எப்பொழுதும் தொடக்கமாய் - உள்ளது. நம்மில் பலர் ஏற்கனவே ஓரளவிற்காவது விசுவாசிப்பவர்களாய் இருக்கின்றோம். பிறகு, ஒருநாளில் நாம் அதே வகையில் ஒருக்காலும் விசுவாசத்தை நோக்காத அளவுக்கு வாழ்வை மாற்றும் சிலவற்றை எதிர் கொள்ளுகின்றோம். இந்த எதிர்கொள்ளுதல் என்பது ஒரு ஆசீர்வாத மாகவோ அல்லது ஒரு சோதனையாகவோ, ஒரு குழந்தை பிறப்பதாகவோ அல்லது ஐம்பது அடி உயரத்திலிருந்து விழுவதாகவோ இருக்கலாம். திடீரென்று நாம் ஒவ்வொன்றையும் மாறுபட்ட வகையில் கண்ணோக்கு கின்றோம், மற்றும் விசுவாசமானது முற்றிலும் மீண்டும் தொடக்கமாக காணப்படுகின்றது!

இன்றைய நாளில், யோவான் சுவிசேஷமானது விசுவாசிக்கும்படி நம்மை அழைக்கின்றது (20:31). நம்மில் பலர் அந்த அழைப்பைக் கேட்டு, “நான் ஏற்கனவே விசுவாசிக்கிறேனே” என்று நினைக்கலாம். இருப்பினும், நாம் கவனித்து, தேடி, பின்பற்றினால், விசுவாசமானது நம்மில் தொடங்குகின்றது என்பதை மட்டுமே நாம் காணலாம்!

*விசுவாச வளர்ச்சிக்குரிய பாடல், “மேல் நோக்கிச் செல்லும்படி நான் (வற்புறுத்தப்படுகின்றேன்) அவசரமானவனானேன்.”*

## விசுவாசம் என்பது வாக்குத்தத்தத்தால் நிரம்பியுள்ளது (11:25, 26, 40)

பெத்தானியாவுக்கு வெளியே மார்த்தாள் இயேசுவைச் சந்தித்த பொழுது, அவளுடைய சகோதரனைக் கல்லறையில் வைத்து நான்கு நாட்கள் ஆகியிருந்தன. இயேசு மட்டும் அங்கே இருந்திருந்தால், தன் சகோதரன் இறந்திருக்க மாட்டான் என்று அவள் புலம்பி அழுதாள். அவளுடைய புலம்பலுக்குப் பதிலுரையாக, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப் பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக் கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா?" (11:25, 26) என்று கூறினார். இயேசுவின் வார்த்தைகள் விசுவாசிப்பதற்கான வல்லமை நிறைந்த ஊக்குவித்தலை அளிக்கின்றன. விசுவாசம் என்பது கடினமான வேலையாக உள்ளது, சோம்பேறி மனிதர் முயற்சி செய்யாமலேயே இருந்து விடுவார். நாம் விசுவாசிக்க விரும்புவதினால் நாம் விசுவாசிக்கிறதில்லை ஆனால் விசுவாசிக்க விரும்பாதிருந்தால் ஒருக்காலும் நாம் விசுவாசிக்க மாட்டோம். விசுவாசம் என்பது அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல், தியாகம் மற்றும் பல வேளைகளில் கண்ணீர் ஆகியவற்றைக் கொண்டதாக உள்ளது. இருப்பினும் விசுவாசிக்கும் யாவருக்கும் வளமான வாக்குத்தத்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வகையில், விசுவாசம் என்பது கல்லூரியில் செய்யும் கடினமான பணியைப் போன்றதாக உள்ளது; சம்பளம் கிடைக்கக் கூடிய நல்ல வேலையொன்றைப் பெற முடியும் என்ற வாக்குறுதியின் காரணத்தினால் மாணவர்கள் இந்தக் கடினமான பணியை (படித்தலை) மேற்கொள்ளு கின்றனர். ஒருவர் தம் வேலையில் கடினமாய் உழைக்கும் பொழுது அவருக்கு ஊதிய உயர்வும் பணி உயர்வும் கிடைக்கின்றது. இதைப்பற்றி தவறெதுவும் செய்து விடாதீர்கள்: விசுவாசம் என்பது விருது ஒன்றையும் ஈட்டுவதில்லை, ஆனால் விசுவாசத்தின் சாலையில் நீண்ட, கடினமான சில வேளைகளில் சோதனைமிக்க வகையில் தொடர்ந்து செல்ல தேவனுடைய வாக்குத்தத்தங்களே நம்மைத் தூண்டுபவைகளாய் உள்ளன.

*விசுவாசத்தைப் பற்றிய பாடல் "உம்மை கூர்ந்து நோக்கும் என் விசுவாசம்."*

## விசுவாசம் என்பது இயேசுவின் மீது கவனம் செலுத்துகின்றது (11:27, 42)

யோவானின் சுவிசேஷமானது நம்மை இயேசுவின் மேல் விசுவாசம் கொள்ளும்படி நகர்த்துகின்றது. நம் பெற்றோர் மீது விசுவாசமோ, அப்போஸ்தலர்கள் மீது விசுவாசமோ, மற்ற கிறிஸ்தவர்கள் மீது விசுவாசமோ, சபையின் மீது விசுவாசமோ அல்லது விசுவாசத்தின் மீதே கூட விசுவாசமோ நமக்கு அவசியமில்லை. மாறாக இயேசுவின் மீது விசுவாசமே

நமக்கு அவசியமாய் உள்ளது.

விசுவாசம் பற்றிய தனது வல்லமை நிறைந்த கூற்றில் மார்த்தாள், "... நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்" (11:27) என்று இயேசுவிடம் கூறினாள். லாசருவின் கல்லறைக்கு வெளியே இயேசுவும், அவருடைய சீஷர்களும், மார்த்தாளும், மரியாளும் துக்கங் கொண்டாட வந்த கூட்டத்தாரும் கூடியிருந்த பொழுது, இயேசு பிதாவினிடம் ஜெபித்து, "நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன்" (11:42) என்றுரைத்தார். "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" (20:31) என்ற விசுவாசத்தை உண்டாக்கும் நோக்கம் கொண்டதாயுள்ள யோவான் சுவிசேஷத்தின் எஞ்சிய பகுதிக்கு இது சீர் பொருந்தியுள்ளது.

ஆப்பிரிக்காவிற்குச் சென்ற ஒரு ஊழியக்காரரான ஜாண் பேட்டன் அவர்கள் அதிக எண்ணிக்கையிலான மக்களுக்குப் போதித்து அவர்களை ஞானஸ்நானப் படுத்தினார். அவர் போதித்துக் கொண்டிருந்த மக்களின் மொழியில் வேதாகமம் இல்லாத காரணத்தினால், பேட்டன் அவர்கள் வேதாகம மொழிபெயர்ப்பு என்ற நெடிய மற்றும் கடினமான பணியைத் தொடங்கினார். "விசுவாசம்"/"நம்பிக்கை" என்ற வார்த்தையை அவர் மொழிபெயர்க்க முயற்சி செய்யத் தொடங்கும் வரைக்கும் அந்த மொழி பெயர்ப்புப் பணியானது எவ்வித சிரமமும் இன்றி சரளமாய் நடைபெற்றது. இந்த மொழியில் "விசுவாசம்"/"நம்பிக்கை" என்பதற்கான வார்த்தை இல்லாதிருந்தது என்பது வினோதமாய்க் காணப்பட்டது. "விசுவாசம்"/ "நம்பிக்கை" என்ற வார்த்தையின்றி ஒருவர் வேதாகமத்தை மொழி பெயர்ப்பது எவ்விதம் கூடும்?

பிறகு, ஒருநாள் பேட்டன் அவர்கள் இந்த மொழியியல் பிரச்சனையுடன் போராடிக் கொண்டிருக்கையில், அவரைச் சந்திப்பதற்காகக் கிராமத்திலிருந்த ஒரு கிறிஸ்தவர் அங்கு வந்தார். இம்மனிதர் நாள் முழுவதும் வேலை செய்து களைப்படைந்தவராய் இருந்தார். அவர் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்த பொழுது, இளைப்பாறுதலுக்கான களைப்பான பெருமூச்சொன்றை வெளியிட்டு, "முழு உடலின் எடையையும் ஏதாவதொன்றின் மீது சாய்ப்பது மிகவும் நன்றாயுள்ளது" என்று கூறினார். "விசுவாசித்தல்" என்பதற்குப் பேட்டன் ஒரு விளக்கச் சொற்றொடரைக் கண்டு விட்டதாக உணர்ந்தார்: விசுவாசித்தல் என்றால், "உங்கள் முழு பாரத்தையும் இயேசுவின் மீது வைத்தல்"[1] என்பதாக உள்ளது. விசுவாசம் என்பது இயேசுவின் மீது கவனம் செலுத்துவதாக உள்ளது, மற்றபடி அதனை விடக் குறைவானது எதுவும் விசுவாசம் ஆகாது.

*நம்பிக்கை பற்றிய பாடல் "நான் இயேசுவை விசுவாசிக்கின்றேன்."*

## விசுவாசம் என்பது பிரிவினை ஏற்படுத்துவதாய் உள்ளது (11:45, 46)

லாசருவின் கல்லறைக்கு வெளியே நின்றிருந்த மக்கள், அவர் (லாசரு) உயிருடன் வெளியே நடந்து வந்ததைக் காண்கையில், (விசுவாசச்) சாலையில் அவர்கள் முன்பாகத் தவிர்க்க முடியாத கவை (வழிகள்) முன்னிறுத்தப்பட்டது. லாசரு இறந்திருந்ததை, அடக்கத்திற்குத் தயார் செய்யப்பட்டதை, கல்லறையில் வைக்கப்பட்டதை மற்றும் குகையின் வாசலில் ஒரு கல் வைக்கப்பட்டதை அவர்கள் கண்டிருந்தனர். அவர்கள் அந்த நிகழ்ச்சிகளைக் கண்ணால் கண்ட சாட்சிகளாய் இருந்தனர். பிறகு, இயேசுவின் அற்புதத்தின் காரணமாக, இதே மக்கள் லாசரு உயிர்த்தெழுப் பப்பட்டதற்குச் சாட்சியங்களாகியிருந்தார்கள்! அவர்கள் விசுவாசிப்பார் களா? அவர்கள் ஒரு முடிவெடுப்பதைத் தவிர்க்கக் கூடாதிருந்தனர்.

அந்த நாளில் அற்புதத்தைக் கவனித்தவர்களிடையே ஏற்பட்ட பிரிவினையைப் பற்றி யோவான் பின்வருமாறு பதிவு செய்தார்:

> அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவை களைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். அவர்களில் சிலர் பரிசேயரிடத்தில் போய், இயேசு செய்தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள் (யோவா. 11:45, 46).

ஆச்சரியப்படும்படியாக, அதே நிகழ்ச்சிகளைக் கண்டிருந்த எல்லா மக்களும் திகைப்பூட்டும் வகையில் எதிரெதிரான வழி முறைகளில் மறுசெயல் செய்தார்கள். சிலர், தேவனுடைய வல்லமையின் பிரசன்னத்தின் முன்பாகத் தாங்கள் இருந்ததைக் கண்டார்கள், எனவே அவர்கள் அந்த நாளில் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள். மற்றவர்கள் கிசுகிசுப்பின் சாரமான ஒரு பகுதியை மட்டுமே ‘‘கண்டவர்களாய்,’’ இயேசுவினால் உண்டாக்கப்பட்ட கலக்கத்தைப் பற்றி யூதத்தலைவர் களிடம் கூறுவதற்கு எருசலேம் நோக்கி விரைந்தார்கள். அந்த நாளில் மக்களிடையே ஏற்பட்ட இந்தப் பிரிவினையானது இவ்வரலாற்றில் குறிப்பிடத் தக்க பங்கு எதையும் கொண்டிருந்ததில்லை. அதற்கு மாறாக, பிரிவினையானது இயேசுவின் வரலாற்றின் இயல்பாகவே உள்ளது: இயேசுவைப் பற்றி மக்கள் கேள்விப்படும் பொழுது, அவரது உண்மை அடையாளத்துவம் பற்றி ஏதாவது ஒரு முடிவை மேற்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். நடுநிலைமை என்று எதுவும் அங்கு இருப்பதில்லை.

இயேசுவும் மற்றும் அப்போஸ்தலரான யோவானும் ஆகிய இருவருமே, நம்மை ஒரு முடிவை நோக்கித் தயக்கமின்றித் தள்ளுகின்றனர். இயேசு தேவகுமாரனாயிருக்கின்றாரா? அல்லது அவர் ஒரு மோசடிக் காரராயிருந்தாரா? ஒன்று அவர் தெய்வீகமானவராயிருக்க வேண்டும் அல்லது அவர் மரணத்திற்கு ஏற்ற தேவதூஷணம் கூறுபவராய் இருக்க வேண்டும். உங்கள் முடிவு என்ன?

*பொறுப்பை பற்றிய பாடல் "இயேசுவின் பின்னே போக துணிந்தேன்."*

## விசுவாசம் என்பது பயமுறுத்துவதாக உள்ளது *(11:48)*

*லாசரு உயிர்ப்பிக்கப்பட்டதைக் கண்டிருந்தவர்களில் சிலர், நாசரேத்திலிருந்து வந்த அந்தப் போதகர் என்ன செய்திருந்தார் என்பது பற்றி பிரதான ஆசாரியர்களிடத்திலும் பரிசேயர்களிடத்திலும் கூறுவதற்காக எருசலேமுக்குச் சென்றனர். அவர்கள் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பிக்கையில், "நாம் இவனை இப்படி விட்டுவிட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்களே" (11:48) என்று அவர்கள் முறையிட்டனர். இயேசுவின் மீதுள்ள விசுவாசமானது வாழ்வையும், குடும்பங்களையும் மற்றும் ஒரு நாட்டையும் கூட மாற்றும் என்பதை அவர்கள் உணர்ந்தறிந்தனர். அவர்கள் - அநேகமாக இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோரை விட மேன்மையான விதத்தில் - விசுவாசம் என்பது எவ்வளவு "அபாயகரமானதாக" உள்ளது என்பதை உணர்ந்தறிந்தனர். அன்பைப் பற்றிய பழைய பாடல் ஒன்று, "அது உங்களை மேல் நோக்கி உயர்த்தும், ஒருக்காலும் உங்களைக் கீழே தாழ்த்தாது, அது உங்கள் உலகை எடுத்து அதை முற்றிலுமாகத் திருப்பிப் போடும்" என்று கூறுகின்றது. இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தைப் பற்றியும் இவ்வாறே கூறப்பட வேண்டும்.*

*விசுவாசத்தைக் குறித்து மிகவும் கொஞ்சமாய் எதிர்பார்ப்பதுதான் இன்றைய நாட்களின் மனப்பாங்காய் உள்ளது. பல கிறிஸ்தவர்கள் விசுவாசத்தை மிகவும் சுலபமானதாக, மிகவும் மென்மையானதாக, மிகவும் எதையும் கேட்டுக் கொள்ளாததாக ஆக்கியுள்ளனர். இம்மனப்பாங்கு பற்றி வில்பர் ரீஸ் அவர்கள் பின்வரும் சாதுரியமான வரிகளில் விளக்கப் படுத்தினார்:*

> *நான் 50 ரூபாய் மதிப்புக்கு தேவனை வாங்க விரும்புகின்றேன், தயவு செய்து அவர் எனது ஆத்துமாவைக் கலக்கவோ அல்லது எனது தூக்கத்தைக் கலைக்கவோ போதியவராய் இருக்க வேண்டாம், ஆனால் ஒரு கப் நிறைய வெதுவெதுப்பான பாலைப் போலவோ அல்லது சூரிய வெளிச்சத்தில் சிறிதே கண்ணயர்வது போலவோ அவர் எனக்கிருந்தால் போதுமானது. ஒரு கருப்பு மனிதரை நான் அன்பு செய்யும்படியோ அல்லது குடிபெயர்ந்து வந்துள்ள ஒருவருடன் வள்ளிக்கிழங்கைச் சேகரிக்கும்படியோ என்னை மாற்றக் கூடியவராய் அவர் இருப்பதை நான் விரும்பவில்லை, நான் மறுரூபமாவதையல்ல பரவச நிலையைத்தான் விரும்புகின்றேன்; நான் ஒரு புதிய பிறப்பையல்ல, கருப்பையின் வெதுவெதுப்பையே விரும்புகின்றேன். ஒரு காகிதப் பொட்டலத்தில் ஒரு கிலோ எடையளவுக்கு எனக்கு நித்தியம் வேண்டும் என்று விரும்புகின்றேன். நான் 50 ரூபாய் மதிப்புக்குத்தான் தேவனை வாங்க விரும்புவேன், தயவு செய்து*

*எனக்கு உதவுங்களேன்.*[2]

இயேசு நம்மை அழைக்கின்ற விசுவாசமானது நமது முழு வாழ்வையும் மாற்றுவதாக உள்ளது. இயேசுவைப் பின்பற்றுவதற்கு நாம் செலுத்த வேண்டிய சாத்தியமான விலைக்கிரயம் பற்றி நாம் புரிந்து கொண்டோமா என்று நிச்சயப்படுத்திக் கொள்ள யோவான் விரும்பினார். நாம் பாடநுபவிக் கலாம், துன்புறுத்தப்படலாம், மற்றும் நமக்குச் சொந்தமான எல்லாவற்றை யும் நாம் இழந்து போகலாம். விசுவாசத்தின் வளமான வாக்குத்தத்தத்துடன் ஒப்பிடுகையில் இந்தக் கிரயமானது மிகவும் அற்பமானதாகக் காணப் படுகின்றது!

*நீடித்து நிலைத்து நிற்கின்ற விசுவாசத்திற்கான பாடல் "நமது பிதாக்களின் விசுவாசம்."*

குறிப்புகள்

[1]King Duncan, "Faith," *Dynamic Illustrations* (Knoxville, Tenn.: Seven Worlds Press, January/February 1995). [2]Quoted in Charles Swindoll, *Improving Your Serve* (Waco, Tex.: Word Publishing Co., 1981), 29.

# "உம்மில் நான் அன்புகூருகிறேன்" என்று தேவனிடத்தில் நீங்கள் எவ்விதம் கூறுகின்றீர்கள்? [12:1–8]

"நான் உன்னில் அன்புகூருகிறேன்" என்பதை யாராவது ஒருவரிடத்தில் நீங்கள் எவ்விதம் கூறுகின்றீர்கள்? மற்றவர்களின் மீதான நமது அன்பை எவ்விதம் வெளிக்காட்டுவது என்பதில் நாம் அனைவருமே போராடுபவர் களாகவே இருக்கின்றோம். நான் ஐந்து வயதாயிருந்த பொழுது என்னுடன் ஞாயிறு வேதாகமப் பள்ளியில் படித்த கேட்டி என்ற ஒரு சிறுமியின் மீது நான் மிகவும் அன்பாயிருந்தது பற்றி என் பெற்றோர்கள் என்னிடம் கூறியுள்ளனர். ஓரிரவில் நாங்கள் சபையிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கை யில், நான் காரின் முன்னிருக்கைப் பக்கமாய்ச் சாய்ந்து எனது அப்பாவிடம், "அப்பா, நீங்கள் யாரையேனும் நேசிக்கும் போது என்ன செய்வீர்கள்?" என்று கேட்டேன். அவரது பதில் எளிமையாகவும் ஒரு சிறு பையனுக்குக் கருத்துடையதாகவும் இருந்தது. அவர், "மகனே, நீ அந்தச் சிறுமிக்கு ஒரு மோதிரம் வாங்கித் தரலாம் என்று நான் எண்ணுகின்றேன்" என்றார். அவ்வாரத்தின் பிற்பகுதியில் எனது பெற்றோர் என்னை ஒரு கடைக்கு அழைத்துச் சென்றனர், அவர் கூறியதையே நாங்கள் செய்தோம்: நான் கேட்டிக்கு ஒரு பொம்மை மோதிரத்தை வாங்கி, அடுத்த முறை அவளை நான் பார்த்த பொழுது அதை அவளுக்குக் கொடுத்தேன்.

"நான் உன்னில் அன்புகூருகிறேன்" என்பதை யாராவது ஒருவரிடத்தில் நீங்கள் எவ்விதம் கூறுகின்றீர்கள்? புதன் கிழமை இரவுகளில் நான் நடத்தும் வேதபாட வகுப்புகளில் ஒருமுறை கல்லூரி மாணவர்களிடத்தில், அன்பு வெளிப்படுத்தப்பட்டதை அவர்கள் கண்டிருந்தது எவ்விதம் என்று நான் கேட்டேன். அவர்களில் ஒரு ஜோடி முந்திய வாரத்தில்தான் திருமணம் செய்ய நிச்சயித்துக் கொண்டிருந்தனர். அந்த ஆண் தனது மிகச் சிறந்த உடையை அணிந்து கொண்டு, அந்தப் பெண் ஒரு பெரிய பெண்கள் கூட்டத்தில் இருந்தபோது எவ்விதம் தன் "கேள்வியைச் சடாரென்று

கேட்டார்" என்ற தங்கள் வரலாற்றைப் பகிர்ந்து கொண்டார்கள். அங்கு இருந்த எல்லார் முன்பாகவும், அவர் அப்பெண்மணியின் கையைப் பிடித்து, அவளுக்கு முன்பாக மண்டியிட்டு, தன்னை திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டார்! (அவள் "சரி!" என்று சொல்லி விட்டாள்.)

கல்லூரி மாணவர்கள் பலர் அவர்கள் மீது யாரோ ஒருவர் கொண்டுள்ள அன்பைத் தெரியப்படுத்துகின்ற சிறப்பு வாழ்த்து அட்டைகளைப் பெற்றிருந்தனர். ஒரு பெண், தனது தந்தை தம் மனைவி மீது கொண்டுள்ள அன்பைக் காண்பிக்க, அதிலும் விசேஷமாய் அவரது மனைவி சிரமமான வேலைகள் பெற்றிருக்கும் வாரத்தில் அவ்வாறு காண்பிக்க என்ன செய்தார் என்று கண்டிருந்ததை நினைவுகூர்ந்தாள். அவர் ஏதொன்றும் கூறாமல், இரகசியமாய் வீடு முழுவதையும் சுத்தம் செய்து விடுவார், இவ்விதமாய் அவர் தமது மனைவியின் வேலைப் பளுவில் சிலவற்றை எடுத்துப் போடுவார். தனது தாய், மகளின் மதிய உணவுப் பாத்திரத்தில் உள்ள வாழைப்பழங்களின் மீது பாசமிக்க குறிப்புகளை எப்பொழுதும் எழுதி வைப்பதை இன்னொரு மாணவி பகிர்ந்து கொண்டாள். ஒரு இளைஞன், தன்னை ஒரு கோடைகால ஊழியப் பயணத்திற்கு அனுப்புவதற்காக, கை வினைப் பொருட்களைச் செய்து விற்றதைப் பற்றிக் கூறினான், மற்றும் இன்னொரு மாணவி, தனது தந்தை தன் மகளுக்கு ஒரு பருவத்திற்கான கல்லூரிப் புத்தகங்கள் வாங்குவதற்காகத் தனது விலை உயர்ந்த துப்பாக்கியை விற்றதைப் பற்றிக் கூறினாள்.

"நான் உன்னில் அன்புகூருகிறேன்" என்று மக்கள் கூறுவதற்குப் பல மக்கள் இருப்பதால், பல வழிகள் உள்ளன, ஆனால் மிகவும் முக்கியமாக, தேவனிடத்தில் "நான் உம்மில் அன்புகூருகின்றேன்" என்று நீங்கள் எவ்விதம் கூறுகின்றீர்கள்? என்பது அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியாக உள்ளது, இதற்கு நமது வேத பாடப் பகுதியான 12:1-8ல் மரியாளால் பதில் அளிக்கப்பட்டது என்று நான் நம்புகின்றேன்.

## மரியாளின் பரிசு

நாம் படிக்கின்ற இவ்வரலாற்றின் நிகழ்ச்சிகள் யூதர்களின் பண்டிகை யான பஸ்காவுக்கு ஆறு நாட்கள் முன்னதாக நடைபெற்றன. இவ்விதமாக, இந்த நிகழ்ச்சிகள் இயேசுவின் வாழ்வின் கடைசி வாரத்தில் நடந்தவை களாய் இருந்தன. இயேசு கடைசி முறையாக கலிலேயாவில் இருந்து புறப்பட்டு தெற்குமுகமாய் எருசலேம் நோக்கிப் பயணமானார் என்று நான்கு சுவிசேஷங்களும் சுட்டிக்காட்டுகின்றன. இந்தக் குறிப்பிட்ட வேளையில், அவர் ஏற்கனவே எரிகோவைக் கடந்து வந்திருந்தார், அங்கு அவர் சகேயுவை எதிர்கொண்டிருந்தார் (லூக். 19:1-10). இது ஒரு அபாயகரமான பயணம் என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருந்தார்கள் (11:8), இயேசு தாம் மரிப்பதற்காகவே எருசலேம் சென்று கொண்டிருந்ததை அறிந்திருந்தார்.

மரியாள், மார்த்தாள் மற்றும் லாசரு ஆகியோரின் சொந்த ஊரான

பெத்தானியாவுக்கு இயேசு வந்தார். இவ்வேளையில் அவர் தமக்கு மரியாதை செய்விப்பதற்காகத் தரப்பட்ட ஒரு இரவு விருந்தில் கலந்து கொண்டார்.[1] விருந்தினர்களின் மத்தியில் லாசருவும் இருந்தார் என்று நமக்குக் கூறப்படுகின்றது. இந்த இரவு விருந்தில் கலந்து கொண்ட விருந்தினர்களின் பெயரட்டவணையைக் கற்பனை செய்து பாருங்கள். அது, ''மரித்த லாசரு'' மற்றும் ''குஷ்டரோகியாய் இருந்த சீமோன்'' ஆகியோரை உள்ளடக்கியிருந்தது, ஒருவேளை, "பார்வையற்றவராயிருந்த யாக்கோபு" மற்றும் "மூடவராயிருந்த யோசுவா" ஆகியோரும் கூட கலந்து கொண்டிருப்பார்கள். அவ்விருந்தில் இருந்த ஒவ்வொருவருமே, தங்கள் வாழ்வை இயேசு எவ்விதம் மாற்றியிருந்தார் என்பதைக்கூற வரலாறு ஒன்றைக் கொண்டிருந்திருக்கலாம். கடினமாய் உழைப்பவளும், லாசருவின் சகோதரியுமாகிய மார்த்தாள் விருந்தினர்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

இரவு விருந்து வேளையில், மரியாள் இயேசுவிடம் வந்தாள். இவளை நாம், லாசருவின் இரு சகோதரிகளில் அதிகம் உணர்வுக் கிளர்ச்சியுள்ளவளென்றும், தனது சகோதரனின் மரணத்தைத் தொடர்ந்து இயேசு பெத்தானியாவுக்கு வந்த பொழுது, அவரது பாதத்தில் விழுந்து அழுதவள் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். அவளுக்கு இயேசு ஒரு நல்ல நண்பராகவும், ஆச்சரியமான போதகராகவும், அற்புதமான சுகமளிப்பவராகவும் இருந்தார் - அவர் அவளுடைய மிகுந்த ஆழமான வேதனையை அவளது மாபெரும் மகிழ்ச்சியாய் மாற்றிய மனிதராக இருந்தார். அவரைப் பற்றிய அவளது உணர்வானது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாததாக இருந்தது. அவர் அவ்வளவு பெரியவராக, அவ்வளவு பரிசுத்தமானவராக, அவ்வளவு நெருக்கமானவராக இருந்தார் - மற்றும் அவர் மரிப்பதற்காக எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்தார்! மரியாள் இந்தச் சிந்தனைகள் யாவற்றையும் தன் இருதயத்தில் கொண்டவளாய், இரட்சகரை அபிஷேகம் செய்தாள்.

"அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலை மயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது" *(12:3)* என்று யோவான் பதிவு செய்தார். நளதம் அல்லது இலாமிச்சை எனப்படும் இது வட இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மிகவும் விலை உயர்ந்த நறுமணத்தைலம் ஆகும். அது அநேகமாக, அலபாஸ்டர் என்ற மிகத் தெளிவான பளிங்குக் கல்லினால் செய்த ஜாடி ஒன்றில் வைத்து முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும். அந்த நறுமணத் தைலத்தை எடுப்பதற்கு, அந்த ஜாடியின் கழுத்துப் பகுதியை உடைக்க வேண்டும், ஆகவே அதை முற்றிலுமாகப் பயன்படுத்த வேண்டியதாக இருந்தது. மரியாள் இயேசுவின் பாதத்தில் ஊற்றிய தைலம் முன்னூற்று இருபது கிராம் அளவு அந்த ஜாடியில் இருந்ததாக யோவான் பதிவு செய்தார். சாதாரணமாக அது, ஒரு சிறப்பு நிகழ்ச்சியின் போது வரும் விருந்தினர்கள் பலருடைய தலைகளில் அபிஷேகம் செய்யப் பயன்படுத்தப்

*படுவதாயிருந்தது. அதற்குப் பதிலாக, மரியாள் அதை முழுவதும் இயேசுவின் பாதங்களில் ஊற்றி, அவரது பாதங்களைத் தனது கூந்தலினால் துடைக்கலானாள். இயேசுவுக்கு, "நான் உம்மில் அன்புகூருகிறேன்" என்று கூறப் பெருவிருப்பமாய் உள்ள எவராலும் தரக்கூடிய அழகு மிக்க பரிசாக இது இருந்தது.*

*மரியாள் அளித்த இப்பரிசின் பல பண்புகள் அதை மிகச் சிறப்பான தாக்கின. முதலாவது, அது மட்டுமீறிய செலவீனமாய் இருந்தது. அந்தத் தைலத்தை ஒரு சாதாரணத் தொழிலாளியின் ஓராண்டுச் சம்பளத்திற்குச் சமமான பணத்திற்கு விற்க முடியும் என்று குறிப்பிட்டு யூதாஸ் அவளது செயல்களுக்கு மறுப்புத் தெரிவித்தான் (12:4, 5). பணத்தொகைகள் ஒரு காலத்திலிருந்து இன்னொரு காலத்துக்கும், ஒரு கலாச்சாரத்திலிருந்து இன்னொரு கலாச்சாரத்திற்கும் மாற்றப்படுவது என்பது கடினமாய் இருப்பினும், ஓராண்டிற்கான கூலியின் முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும்! யூதாஸைப் போன்ற கடின இருதயம் கொண்டவர்களுக்கு மட்டுமீறிய இப்பரிசானது எவ்வித கருத்தறிவையும் ஏற்படுத்தவில்லை.*

*இரண்டாவது மரியாளின் பரிசானது அவளைப் பற்றிய சிந்தனை யின்றிக் கொடுக்கப்பட்டது. சில வேளைகளில் நாம் பரிசுகள் கொடுக்கை யில் பரிசுகளைப் பெறுபவர்களைப் பற்றி சிந்தனையிலும் அதிகமாய் நம்மைப் பற்றிச் சிந்திப்பவர்களாய் அப்பரிசினைக் கொடுக்கின்றோம். "இது போதுமா?"; "இதை அவர்கள் விரும்புவார்களா?"; "அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?" என்றெல்லாம் நாம் வியப்படைகின்றோம். இருப்பினும் மரியாளைப்பற்றிய ஒவ்வொரு விஷயமும், இந்தக் கேள்விகளில் எதுவும் அவளுடைய சிந்தையில் இருந்ததில்லை என்றே சுட்டிக்காட்டுகின்றது. அவள் இயேசுவைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டவளாயிருந்து, ''போதகருக்காக'' மட்டுமே தனது மாபெரும் அன்பைக் காட்டுபவளாயிருந்தாள். அவள் தனது (தலை) முடியைத் தரையில் அவிழ்த்து விட்டாள் என்பது, மரியாள் தன்னைப் பற்றி மிகவும் கொஞ்சமாக நினைத்துக் கொண்டிருந்தாள் என்பதைக் குறிப்பதாயிருந்தது. அந்தக் காலத்தில் இருந்த எந்த யூதப் பெண்ணும் இப்படிச் செய்ய மாட்டாள், ஆனால், "யார் அதைப் பற்றிக் கவலைப் படுகின்றார்? இயேசு ஒருவரே பொருட்படுத்தப்படக் கூடியவராக இருக்கின்றார்'' என்பதே மரியாளின் எண்ணப்போக்காக இருந்ததாய்க் காணப்படுகின்றது.*

*மூன்றாவது, மரியாளின் பரிசானது தாழ்மையினால் உறையிடப் பட்டதாய் இருநத்து. அவள் இயேசுவின் தலையை அல்ல, ஆனால் அவருடைய கால்களையே அபிஷேகம் செய்வித்தாள், அவருடைய பாதங்களைத் துடைப்பதற்கு அவள் ஒரு துண்டை அல்ல ஆனால் அதற்குப் பதில் தனது (தலை) முடியையே பயன்படுத்தினாள். மரியாளைப் பொறுத்தமட்டில் கௌரவம் என்பது ஒரு பிரச்சனையாய் இருந்ததில்லை. இயேசுவின் மீதுள்ள அன்பை வெளிப்படுத்துவது என்பதே பொருட் படுத்தப் படுவதாய் இருந்தது.*

*கடைசியாக, முன்னூற்றிருபது கிராம் நளதமல்ல ஆனால் மரியாளின்*

சொந்த இருதயமே அவளது பரிசாக இருந்தது. நாம் அன்புகூரும் சிலருக்குச் சிலவேளைகளில் நாம் மலர்கள், மோதிரங்கள், உடைகள் அல்லது பணம் ஆகியவற்றைக் கொடுக்கின்றோம். ஒவ்வொரு நிகழ்விலும், நாம் கொடுக்கும் பொருளானது அப்பரிசைக்காட்டிலும் பெரியதான சிலவற்றை அடையாளப்படுத்துகின்றது; அது நாம் வெளிப்படுத்த முயற்சி செய்யும் அன்பிற்காக நிலைநிற்கின்றது. மரியாளின் நறுமணத்தைலமும் இதே போன்றுதான் இருந்தது. அவள், நாசரேத்திலிருந்து வந்த தனது சிறந்த நண்பரில் அன்புகூர்ந்தாள் என்று இயேசுவுக்கும் மற்றவர்களுக்கும் கூறுவதற்கு அந்தத் தைலமானது நறுமணமிக்கதொரு வழிமுறையாய் இருந்தது.

## நமது பரிசு

மரியாளுடையதைப் போன்ற ஒரு பரிசை இன்றைய நாட்களில் நாம் எவ்விதத்தில் கொடுக்கின்றோம்? "உம்மில் நான் அன்புகூருகிறேன்" என்று நாம் தேவனிடத்தில் எவ்வாறு கூறுகின்றோம்? அப்படிப்பட்ட ஒரு உறவுக்கு எவ்வகையான பரிசு ஏற்புடையதாக உள்ளது? வேத வசனங்களில் ஆச்சரியம் நிறைந்த பரிசுக் கருத்துக்கள் ஏராளமாய் நிறைந்துள்ளன!

தொடங்குவதற்கு, நாம் நம் இருதயங்களை அவருக்குத் தரமுடியும். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" (மத். 22:37) என்பதே இயேசுவைப் பொறுத்தமட்டில் மாபெரும் கட்டளையாக உள்ளது. ஆல்ஷெய்மர் நோயினால் பாதிக்கப்பட்ட மனைவியை உடையவரான இராபர்ட்சன் மெக்குயில்க்கன் அவர்களின் வாழ்வின் உண்மை அனுபவமானது, தேவனுக்கு நமது இருதயங்களைக் கொடுப்பது என்றால் என்ன என்பதன் திசையை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. மெக்குயில்க்கன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> குருமடக் கழகத்தார், நான் தினமும் அலுவலகம் செல்ல இயலும்படியாக, எங்கள் வீட்டில் ஒரு துணையாளர் தங்கியிருக்கும் படி ஏற்பாடு செய்தனர். அந்த இரு ஆண்டுகளில் மியூரியலை வீட்டில் பாதுகாப்பது என்பது மிகவும் கடினமாகிக் கொண்டே வந்தது. நான் கிளம்பிச் சென்றவுடனே, அவளும் என்னைப் பின் தொடர்வது உண்டு. என்னுடன் இருக்கையில் அவள் மன நிறைவடைந்தாள்; நானில்லாமல் இருந்தால் அவள் சலிப்படைந்து, சிலவேளைகளில் பயத்தினால் தாக்கப்பட்டவளாய் இருந்தாள். பள்ளிக்குச் சென்று வரும் மொத்த தூரம் ஒருமைல் ஆகும். அவள் ஒரு நாளில் 10 முறை பள்ளிக்குப் போய் மீண்டும் திரும்பி வருவாள்.
>
> சில வேளைகளில் இரவில், அவள் உடைமாற்ற நான் உதவும் பொழுது, அவளது இரத்தம் தோய்ந்த பாதங்களை நான் காண்பது துண்டு. அதைப் பற்றி நான் எங்கள் குடும்ப மருத்துவரிடம் கூறிய பொழுது, அவர் திணறிப் போனார். "அப்படிப்பட்ட அன்பு" என்று மட்டுமே அவர் கூறினார். பின்பு ஒரு கணம் கழித்து அவர், "ஆண்டுகள் பல ஆகும்போது பண்புகள் (மாற்றம் பெற்று) வளர்ந்தேறி, சில

வேளைகளில் இவ்வாறு நடக்கின்றது என்ற கோட்பாடு உள்ளது" என்றார். தேவனை நான் அவ்விதமாய் - எல்லா வேளைகளிலும் அவரை நெருங்கியிருப்பதில் அதிக ஏக்கம் கொண்டு - அன்புகூர வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.[2]

"உம்மில் நான் அன்புகூருகின்றேன்" என்று தேவனிடத்தில் கூறுவதில் மிகத் தெளிவான வழிகளில் ஒன்று அவரிடத்தில் அதைச் சொல்வது ஆகும். இதை நாம் தனிப்பட்ட ஜெபத்திலும், ஆராதிக்க ஒன்று கூடுகையிலும் செய்கின்றோம். இதை நாம் கர்த்தரிடத்தில் எவ்வாறு வெளிப்படுத்துவது என்று சங்கீதங்கள் நமக்குப் போதிக்கின்றன. நாம் சங்கீதக்காரரைப் போலச் செய்கின்றோம்: "இராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிப்பேன். நாடோறும் உம்மை ஸ்தோத்தரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன்" (சங். 145:1, 2).

அமெரிக்க ஐக்கிய நாடானது ஈராக்கிற்கு எதிராக யுத்தம் செய்யச் சென்ற பொழுது, ஆபரேஷன் டெஸர்ட் ஸ்டார்ம் என்ற அந்த யுத்த நிகழ்வின் காலத்தில், ஸ்காட் ஸ்பெய்ச்சேர் என்ற ஒரு இளம் வான் படைவீரர் அந்தப் போரில் கொல்லப்பட்டார், அவருக்கு ஒரு மனைவியும் இரு சிறு பிள்ளைகளும் இருந்தனர். அவரது மரணத்திற்கு ஒரு சில வாரங்களுக்குப் பின்பு, அவருடைய சொந்தப் பொருட்கள் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டன. அவைகளில், அவர் மரணமடைவதற்கு முந்திய நாள் அவரால் எழுதப்பட்டிருந்த ஒரு கடிதமும் இருந்தது, அதைத் தபாலில் அனுப்புவதற்கு அவருக்கு நேரம் இல்லாது போயிற்று. அதில் அவர் தம் ஒவ்வொரு குழந்தைக்கும் சில விஷயங்களை எழுதியிருந்தார், மற்றும் அக்கடிதத்தை அவர் தம் மனைவிக்கு எழுதிய பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு முடித்திருந்தார்: "நீயே என் வாழ்வின் மையப் பொருளாய் இருக்கின்றாய். உன்னுடன் வாழ்வதில் நான் முழுமையான திருப்தியடைந்தவனாய் இருக்கின்றேன். நான் இறந்துவிட்டால், நீ மீண்டும் நேசிக்கக் கற்றுக் கொள்."[3] சிலவேளைகளில், நமது அன்பைப் பற்றிப் பேசுவது என்பது மாபெரும் பரிசாக இருக்க முடியும்!

மற்றவர்களிடத்தில் அன்புகூருதல் என்பது தேவன் மீதான நமது அன்பைச் செயல் விளக்கப்படுத்துகின்றது. நம்மை நாம் அன்பு செய்வது போல நமது அயலாரையும் அன்புகூர வேண்டும் என்பது பழைய ஏற்பாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு கருத்தாகவும், இரண்டாவது பெரிய கட்டளையாக இயேசுவால் குறிப்பிடப்பட்டதாகவும் உள்ளது.[4] ஒரு கணவர் தம் பிள்ளைகள் மீது அன்புகூர்வதால் தம் மனைவி மீது தாம் கொண்டுள்ள அன்பைத் தெரியப்படுத்துவது போலவே, நாம் நமது சக மனிதரை அன்புகூருவதன் மூலம் தேவன் மீது நமக்குள்ள அன்பைத் தெரியப்படுத்துகின்றோம். நாம் ஒருவரை ஒருவர் அன்புகூருவதன் மூலம் தேவனிடத்தில் "உம்மில் நான் அன்புகூருகிறேன்" என்று சொல்லுகின்றோம்.

நாம் தேவனைப் பற்றி மற்றவர்களிடத்தில் பேசுவதன் மூலமாகவும்

*தேவனிடத்தில் நமக்குள்ள அன்பை நாம் வெளிப்படுத்த முடியும் என்றும் வேத வசனங்கள் அறிவிக்கின்றன. இது ''அறிக்கையிடுதல்'' என்று அழைக்கப்படுகின்றது. இயேசு பின்வருமாறு கூறினார்:*

> *மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் (மத். 10:32, 33).*

*தேவன் மீதான நமது அன்பை நாம் மற்றவர்களிடத்தில் கூறும் பொழுது, அது தேவனுக்கு, ''நான் உம்மில் அன்புகூருகின்றேன்'' என்று கூறும் இன்னொரு வழியாக உள்ளது.*

*தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பதே அநேகமாக நாம் தேவனிடத்தில் "நான் உம்மில் அன்புகூருகின்றேன்" என்று கூறுவதற்கான மிகக் கடினமான வழிமுறையாக - மற்றும் நாம் கர்த்தரை உண்மையிலேயே அன்பு கூரவிரும்பினால், நாம் தவிர்க்க முடியாத ஒரு வழிமுறையாக - உள்ளது. ''நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல'' (1 யோவா. 5:3) என்று யோவான் எழுதினார். சிலவேளைகளில் மக்கள் உண்மையில் இதைக் கேட்க விரும்புவதில்லை, ஆனால் அவரைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.*

*கீழ்ப்படிதலில் நமக்கு உள்ள தெளிவான மற்றும் நடைமுறைக் கடினத்தின்/சிரமத்தின் இயல்பானது ஒரு மனிதர் மற்றும் அவருடைய மனைவி பற்றிய பின்வரும் கதையில் காணப்படுகின்றது. அம்மனிதர் மிகவும் தீவிரமான நோய்வாய்ப்பட்டிருந்தார், எனவே அவரது மனைவி அவரது கணவரின் நிலைமை பற்றிப் பேசுவதற்காக ஒரு மருத்துவரிடம் சென்றாள். அவர்கள் தனிமையில் பேசுகையில், அப்பெண்ணிடம் மருத்துவர், ''உங்கள் கணவர் ஒவ்வொரு நாளும் வீட்டில் சமைத்த ஆரோக்கியமான சத்துணவை மூன்று வேளைகளுக்குச் சாப்பிடாவிட்டால், அவர் இறந்து விடுவார். மேலும் வாழ்வில் அவருக்குள்ள அழுத்தத்தைக் குறைப்பதற்கு நீங்கள் அவரிடம் எப்பொழுதும் மகிழ்ச்சியும் இரக்கமும் அன்பும் காட்ட வேண்டியது அவசியம். கடைசியாக, நோய்க் கிருமிகளை எதிர்க்கும் சக்தி அவரிடம் குறைந்துள்ளதால், வீட்டை எப்பொழுதும் துப்புரவாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்வதும் அவருக்கு இன்றியமையாதது ஆகும்" என்று கூறினார். அந்தப் பெண் வீடு திரும்பிய பொழுது, அவளிடத்தில் மருத்துவர் என்ன கூறியிருந்தார் என்பதை அறிய அவளது கணவர் அதிகம் ஆவல் கொண்டவராய் இருந்தார். அந்த மனைவி அவரிடத்தில், "நீங்கள் சாகப் போகிறீர்கள் என்று மருத்துவர் கூறினார்" என்று அறிக்கை தந்தாள்! தேவனிடத்தில் அன்பு என்பது நாம் தேவன் மீது அன்பு கொண்டுள்ளோம் என்று கூறுவதை விட மேலானது ஆகும்; அது நாம் நமது பெற்றோர், துணைவர், அல்லது பிள்ளைகளை நேசிப்பது என்பது அன்புள்ள வார்த்தைகளைப் பேசுவதைக் காட்டிலும் அதிகமானதாக*

உள்ளது போலவே, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிதல் அடங்கியுள்ளதாகும்.

நாம் தேவனிடத்தில், "நான் உம்மில் அன்பு கூருகின்றேன்" என்று கூற இவை ஒரு சில வழிகளாய் உள்ளன. தேவன் நம்மிடத்தில், "நான் உன்மேல் அன்புகூருகின்றேன்'' என்று எவ்விதம் கூறுகின்றார் என்பதை நீங்கள் அறிவீர்களா?

## தேவனுடைய பரிசு

மரியாள் இயேசுவுக்கு அபிஷேகம் செய்து, அவர் இரவு விருந்தை விட்டுப் புறப்பட்ட பின்னர், இயேசு எருசலேமை நோக்கிப் பயணமானார். அவர் தாம் எங்கு செல்கின்றோம் என்பதையும், தாம் என்ன செய்கின்றோம் என்பதையும் அறிந்திருந்தார். இதுவே தமது கடைசிப் பயணம் என்பதை அவர் அறிந்திருந்தார், மற்றும் யூதத்தலைவர்கள் தம்மைக் கொலை செய்ய நோக்கமாய் இருந்ததையும் அவர் அறிந்திருந்தார். அவரது மரணம் என்பது ஒரு தற்செயலான நிகழ்ச்சியாய் இருக்கப் போவதில்லை. முன்பே அவர் பின்வருமாறு கூறியிருந்தார்:

> நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள மாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன்; அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன் (யோவா. 10:17, 18).

நாம் பெற்றுக் கொண்டுள்ளவைகளிலேயே மாபெரும் பரிசை இவ்வுலகிற்குக் கொடுப்பதற்காக, இயேசு பெத்தானியாவில் இருந்து மனவிருப்பத்துடனேயே கிளம்பினார்! ஓரிரு நாட்களுக்குள்ளாகவே இயேசு இந்த உலகத்தின் பாவங்களுக்காகச் சிலுவையில் மரிப்பார். இயேசுவுக்கு மரியாளின் பரிசு அற்புதமானதாக இருந்தாலும், சிலுவையில் அவர் தம் ஜீவனையே தந்த பேரளவான பரிசின் முன் அவளது பரிசு ஒளி மங்கியே காணப்படுகின்றது!

## முடிவுரை

இயேசுவின் மரணத்தைத் தொடர்ந்து, அவரது உடலானது, ஒரு கல்லறையில் வைக்கப்பட்டது, அங்கிருந்து மூன்று நாட்களுக்குப் பின் அவர் உயிர்த்தெழுந்தார். இயேசு, ''நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்'' (ரோமர் 4:25) என்று பவுல் எழுதிய பொழுது, இந்த நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தைத் தொகுத்துரைத்தார். பல வழிகளில் - ஆனால் சிறப்பாக இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற வகையில் - "நான் உன் மீது அன்புகூருகின்றேன்" என்று நம் தேவன்

ஒவ்வொருவருக்கும் கூறுகின்றார். இதற்கு முன்பு யோவான், “தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவா. 3:16) என்று எழுதிய பொழுது யோவான் சுவிசேஷமானது இத்தொடர்பை முன்னமே ஏற்படுத்தியது.

நீங்கள் தேவன் மேல் அன்பாயிருக்கின்றீர்களா? ஆம் என்றால், இப்பொழுது அந்த அன்பை நீங்கள் எவ்விதத்தில் தெரியப்படுத்திக் கொண்டிருக்கின்றீர்கள்? நீங்கள் பாவத்திலிருந்து திரும்பி கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் உங்களின் அன்பை விளக்கப்படுத்த வேண்டியிருக்கலாம் (அப். 2:38). நீங்கள் ஒருமுறை தேர்ந்து கொண்ட உங்கள் விசுவாசத்திலிருந்து இப்பொழுது விலகியிருந்தால், அந்த விசுவாசத்திற்கு நீங்கள் மீண்டும் திரும்புவதன் மூலம் உங்கள் அன்பை நீங்கள் வெளிப்படுத்த வேண்டியிருக்கலாம். நீங்கள் தேவனிடத்தில் “நான் உம்மில் அன்புகூருகின்றேன்” என்று கூறுவதால் மட்டுமே உங்கள் அன்பை வெளிப்படுத்துவது அவசியமாய் இருக்கலாம். மரியாள் இவ்வழியில் முன் செல்கின்றாள். இன்று நீங்கள் கர்த்தரிடத்தில், “நான் உம்மில் அன்பு கூருகின்றேன்” என்று சொல்வீர்களா?

---

குறிப்புகள்

[1]மத்தேயு 26:6 மற்றும் மாற்கு 14:3 ஆகியவற்றில், இந்நிகழ்ச்சி தொழு நோயாளியாய் இருந்த சீமோனின் வீட்டில் நடைபெற்றதாக உள்ளது. [2]Robertson McQuilken, “Repaying a Four-Year Debt,” *Leadership* (Summer 1993): 43. [3]Jerry D. Twentier, *The Positive Power of Praising People* (Nashville: Thomas Nelson Publishers, 1994), n.p. [4]லேவியராகமம் 19:18; மத்தேயு 22:39.

# சீர்திருத்தும் சிலுவை (12:32)

*எழுத்தாளரின் குறிப்பு: ஏப்ரல் 16, 1995ன் வாரமானது உலகம் முடிவுக்கு வந்து விட்டதோ என்று காணப்பட்ட வேளைகளில் ஒன்றாக இருந்தது. திங்கள் கிழமை காலையில், எனது மிகச் சிறந்த நண்பர்களில் ஒருவர் முந்திய வாரத்தில் தமக்கு ஏற்பட்டிருந்த இருதயப் பிரச்சனையின் காரணமாக உள்ளூர் மருத்துவ மனையொன்றில் பரிசோதனைகள் மேற்கொள்ளச் சென்றார். பரிசோதனைகளுக்கு அவர் பயப்படவில்லை மற்றும் முடிவுகள் பற்றி அவர் நல் விருப்ப எண்ணமே கொண்டிருந்தார். இருப்பினும், மதிய வேளையின் தொடக்கத்திலேயே, அவரது நிலைமை மிகவும் மோசமாய் இருப்பதாக மருத்துவர் கூறியிருந்தார். அவர் உடனடியாக நோயாளி ஊர்தி ஒன்றில் ஏற்றப்பட்டு ஐம்பது மைல் தூரத்தில் இருந்த எங்கள் தலைநகரில் உள்ள பெரிய மருத்துவமனை ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு அடுத்த நாளில் ஒரு பெரிய பக்க வழி அறுவைச் சிகிச்சை செய்வதற்குத் தயாராக்கப்பட்டார். திங்கள் கிழமை மாலையில் எங்களது சபையின் மூப்பர்களில் ஒருவர் சாஃப்ட்பால் என்ற விளையாட்டின் போது வேகமாய் அடிக்கப்பட்ட பந்தினால் கண்ணில் அடிபட்டு, மருத்துவமனை சென்றார், அந்த அடியானது அவரது கண் பார்வைக்கு நிரந்தரமான சேதாரத்தை ஏற்படுத்தி விட்டது. அதே இரவில், அவ்வேளையில் நான் அறிந்திராத ஒரு சம்பவம் நடைபெற்றது. உள்ளூர்ப் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்த கிறிஸ்தவப் பெண்ணொருத்தி கடைவீதியில் இருந்த கார் நிறுத்துமிடத்திலிருந்து கடத்தப்பட்டு விட்டாள். அந்தப் பெண்ணின் நண்பர்களும், பல்கலைக் கழக அலுவலர்களும், மற்றும் உள்ளூர்க் காவலர்களும் தீவிரமாக அவளைத் தேடினார்கள். செவ்வாய்க் கிழமை மாலையில், கிராமப்புறச் சாலையொன்றில் கைவிடப்பட்டிருந்த அவளுடைய காரின் பின்பகுதியில் உள்ள (சாமான் வைப்பறையில்) அவளது உடல் காணப்பட்டது என்ற அதிர்ச்சியளிக்கும் அறிக்கையானது வந்தது. இவ்விதக் குற்றங்கள் பெருநகரங்களில் சாதாரணமானதாக இருக்கலாம், ஆனால் இப்படிப்பட்ட அத்துமீறல் எங்கள் நகரில் நடக்குமா என்பது பற்றி நாங்கள் மிகவும் அரிதாகவே சிந்தித்திருந்தோம். கொல்லப்பட்ட அப்பெண்ணின் நினைவாக அடுத்த நாள் காலையில் பல்கலைக்கழக சிற்றாலயத்தில், ஒரு நினைவு ஆராதனையானது ஏறெடுக்கப்பட்டது. வழக்கமாய் அதிகம் பேசும் மாணவர்கள் அமைதியாய் அந்த அரங்கில் நிரம்பியிருந்து, அரை மணி நேரத்திற்குப் பின்பு உடைந்த இருதயங்களுடன் கண்ணீர்க் கரைபடிந்த முகங்களுடனும் அவ்விடம்*

*விட்டுச் சென்றனர்.*

*சிற்றாலயத்தில் ஆராதனை முடிந்து நான் எனது அலுவலகம் திரும்பி எனது மேசை முன்பு அமர்ந்தவுடன், ஒக்லஹாமா நகரில் உள்ள அரசு அலுவலகத்தில் குண்டு வெடித்ததாகவும், இருநூறுக்கும் மேற்பட்ட மக்கள் இறந்து போயிருக்கலாம் என்று அஞ்சப்படுவதாகவும் தகவல் கூறும்படி ஒருவர் என்னிடத்தில் விரைந்து வந்தார்! ஒரு மூன்று நாள் காலகட்டத்தில் இதைக்காட்டிலும் மோசமான நிகழ்வுகள் வேறு என்ன நடக்க முடியும்? அடுத்து என்ன நடக்கப் போகின்றது?*

*இந்தத் துன்பங்கள் எல்லாவற்றிலும் ஏதேனும் கருத்து இருக்குமா என்று நாங்கள் போராடிக் கொண்டிருந்த வேளையில், நெருங்கிக் கொண்டிருந்த ஞாயிற்றுக் கிழமையைக் குறித்துச் சிந்திக்கும்படி எனது சிந்தை திரும்பத் தொடங்கிற்று. இது போன்ற ஒரு வாரத்திற்குப் பின் என்ன கூறப்படுவது சாத்தியமாகும்? நாங்கள் கடைசியாக ஒன்றுகூடிய பின்பு வந்த கடந்த ஏழு நாட்களில் நாங்கள் கேள்விப்பட்டிருந்த துன்பச் செய்திகளின் கடினமான சுமையளவானது எங்களை சீர்குலையச் செய்திருந்தது. அப்படிப்பட்ட ஒருவேளையில், சபையானது எதைக் கேள்விப்படுவது அவசியமாய் இருந்தது? யோவான் சுவிசேஷத்தில் பாடம் நடத்துவதில் நான் இருபத்தி ஆறு வாரங்கள் கடந்து வந்திருந்தேன். நான் யோவான் சுவிசேஷத்தில் தொடர்ந்து பாடம் நடத்த வேண்டுமா அல்லது அந்த வாரத்தின் பாரமான நிகழ்ச்சிகளை எடுத்துரைக்க வேண்டுமா? அந்த ஞாயிறன்று சபையை கிறிஸ்துவின் சிலுவை நோக்கித் "திரும்பச்" செய்ய வேண்டுமென்று நான் ஜெபத்துடன் முடிவு செய்தேன்.*

---

நாம் ஞாயிற்றுக் கிழமைகளில் பல வகையான உணர்வுகள் மற்றும் சிந்தனைகளுடன் ஒன்றுகூடி வருகின்றோம். சில வேளைகளில் நாம் வர வேண்டுமே என்று நினைத்தவர்களாய் வருகின்றோம். மற்ற வேளைகளில் நாம் ஒன்றுகூடியிருக்க விரும்பியவர்களாய் வருகின்றோம். இந்த ஞாயிறன்று, விசேஷமாகக் கடந்த வாரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் காரணமாக நாம் இங்கு இருப்பது அவசியமாகின்றது. நாம் ஒருவருக் கொருவர் ஆறுதல் கூறி ஊக்கமூட்டுவது அவசியமாகின்றது, மற்றும் இந்த உலகில் எது நிலைத்து நிற்கும் என்பது பற்றி நமக்கு நினைவூட்டப்படுதல் அவசியமாகின்றது. பெரும்பாலான மற்ற ஞாயிற்றுக் கிழமைகளைக் காட்டிலும் இன்று நமக்கு கர்த்தருடைய பந்தி மிகவும் தேவையாகின்றது.

நினைவுகூரும்படி நம்மை அழைக்கும் இராப்போஜனத்தில், சிலுவையினால் சீர்திருத்தல் ஏதோ ஒன்று இருப்பதினால், நமக்கு இராப் போஜனம் தேவையாயிருக்கிறது. கடந்து சென்ற வாரமானது நம்மைத் தட்டாமாலை சுற்றி விளையாடிய பிள்ளைகளைப் போலாக்கியுள்ளது. தலை சுற்றிப் போன பிள்ளைகள் போல் நாம் வெளியே கண்ணோக்கி, முழு உலகமும் நம்மைச் சுற்றிச் சுழலுவதைக் காண்கின்றோம், மற்றும் நமது சமான நிலையை நாம் இழக்கத் தொடங்கினோம். அப்படிப்பட்ட வேளைகளில், பிடித்துக் கொள்ள ஏதாவது கிடைக்குமா என்று நாம்

தேடுகிறோம் - அது திடமானதாகவும் அசையாததாகவும் இருக்கும்படி நாடுகின்றோம். அதைச் சுற்றிலும் நம்முடைய கைகளைப் போட்டுப் பற்றி நமது தலை சுற்றல் நின்று, நாம் மீண்டுமாக நமது சொந்தக் கால்களில் நிற்கும் வரையிலும் அதை இறுகப் பற்றிக் கொள்ளுகின்றோம். கடந்த ஏழு நாட்களில் இதெல்லாம் நடந்து முடிந்து இருக்கின்ற இன்றைய நாளில் நம்மையே நாம் சிலுவையைப் பற்றிக்கொண்டிருப்பவர்களாகக் காண்கின்றோம்.

நான் நோய்வாய்ப்பட்டிருக்கையில், நான் பயிற்சியற்றுப் போனவனாகி, காலத்தின் தடத்தை இழக்கின்றேன். ஒரு சுகவீனத்திலிருந்து பூரண சுகம் அடைவதற்காக பல நாட்கள் வீட்டிலேயே நான் தங்கி யிருந்திருக்க வேண்டிய வேளைகளை நான் நினைவுகூருகின்றேன். நான் சுகமாகியதாக உணரும் பொழுது, “இன்று என்ன நாள்/கிழமை என்று தெரியவில்லையே. நான் மீண்டும் எனது கால அட்டவணைப்படி பணி புரியத் தொடங்குவதற்கு ஒரு ஞாயிற்றுக் கிழமை வரவேண்டும் என்று யூகிக்கிறேன்” என்று வழக்கமாக நான் கூறுவேன். ஒரு குழப்பம் நிறைந்த வாரத்தைத் தொடர்ந்து இன்று நாம் ஒன்று கூடியுள்ளது அதைப் போலவே உள்ளது.

ரஷ்ய எழுத்தாளரான அலெக்சாண்டர் சோல்செனிட்ஸின் என்பவர் ஸ்டாலினின் வேலை முகாம்களில் எட்டு ஆண்டுகளைச் செலவிட்டிருந் தார். அந்தக் கடினமான ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஒரு நாளிலாவது, அவருடைய நம்பிக்கை மாயமாய் மறைந்து போய், அவர் உயிரை விடத் தயாரானார். அவர் வியாதிப்பட்டு, களைப்படைந்து மற்றும் நம்பிக்கை யிழந்து இருந்தார். மண்வெட்டி வேலை செய்து கொண்டிருந்த பொழுது, சோல்செனிட்ஸின் தனது வேலையை விட்டு வெளியேறி, மர இருக்கை ஒன்றை நோக்கி நடந்து சென்று, அதில் உட்கார்ந்து, தாம் செய்திருந்தது என்ன என்பதை ஒரு காவலாள் காண்பதற்குக் காத்திருந்தார். என்ன நடக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார், ஏனென்றால் அவை எல்லா வற்றையும் இதற்கு முன்பு அவர் பலமுறை கண்டிருந்தார். காவலாள் ஒரு மனிதரின் மண்வெட்டியை எடுத்து அவரை மரணம் அடையும் வரை அடித்துப் போடுவார். இருப்பினும், இந்த நாளிலே, காவலாளியை அல்லாமல் இன்னொருவர், சோல்செனிட்ஸின் அங்கு அமர்ந்திருந்ததைக் கண்டார். கூனி நடந்த, உணர்வெதுவுமற்ற முகங்கொண்ட ஒரு முதியவர் அங்கு நடந்து வந்து, அவரருகில் அமர்ந்தார். கையில் ஒரு கோல் வைத்திருந்த அவர், சோல்செனிட்ஸின் பாதங்களின் கீழ் இருந்த மணலில் ஒரு சிலுவையை வரைந்தார். அவருடைய வருத்தம் எடுத்துப் போடப் பட்டது, சத்தியம் அவருடைய ஆத்துமாவிற்குள் பாய்ந்தோடி வந்தது, நம்பிக்கை மீண்டும் திரும்பி வந்தது, மற்றும் உயிர் வாழ்வதற்கான ஒரு காரணமானது அவருடைய இருதயத்தினுள் புத்துயிர்ப்புப் பெற்றது. அவர் எழுந்த நின்று, தனது மண்வெட்டியை எடுத்துக் கொண்டு, வேலைக்குத் திரும்பினார். பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவரது எழுத்துக்கள் பல இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களைக் ஊக்குவிக்கின்றவைகளாய் இருக்கும். மணலில் மீது வரையப்பட்ட ஒரு எளிய சிலுவையானது

சோல்செனிட்ஸின் ஆவியைப் புதியதாக்கி, இவ்விதமாய் அவரது வாழ்வைக் காத்தது. சிலுவையின் இப்படிப்பட்ட சீர்திருத்தும் வல்லமைதான் இன்று நாம் தேடுவதாக உள்ளது.

புதிய ஏற்பாடு முழுவதிலும், வேதவாக்கியங்கள் நம்மைச் சிலுவையை நோக்கித் திரும்பி வரும்படி அழைக்கின்றன. சபையானது ஒரு புதிய அறைகூவலையே, குழப்பமூட்டும் ஒரு விஷயத்தையோ அல்லது பயங்கரமான ஒரு துன்பத்தையோ எதை எதிர்கொண்டிருந்தாலும், ஏவப்பட்ட எழுத்தாளர்கள், ''சிலுவையைப் பாருங்கள்!'' என்றே கூறுவார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்புள்ள சூழ்நிலைகளில் அவர்கள் இதை எவ்விதம் செய்தனர் என்பதைக் காணும் நாம், இன்றைய நாளில் நாம் எதிர்கொள்ளும் எதையும் கடந்து செல்ல அதே சிலுவை நமக்கு உதவுகின்றது என்று நினைவூட்டப்படுகின்றோம்.

## பிரிவினைக்குப் பதில்

கொரிந்தியருக்குப் பவுல் எழுதிய முதல் நிருபத்தில், புயல் வீசும் தண்ணீர்களின் ஊடாகச் சபையை சிலுவையானது எவ்விதத்தில் வழி நடத்துகின்றது என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டு காணப்படுகின்றது. அந்த சபையின் ஆரம்பத்தில் அவர்களுடன் இருந்திருந்த பவுல் அவர்களுக்காக விசேஷித்த ஒரு இளகிய மனம் கொண்டிருந்தார். இருப்பினும் அதே வேளையில், அந்த சபையைப் பிரித்துக் கொண்டிருந்த பல விவாதங்கள் மற்றும் பிரச்சனைகள் பற்றி அவர் மிக ஆழமான வகையில் கலக்கம் அடைந்தார். அவருடைய நிருபத்தின் முன்னுரையில் அவர்கள் ஒன்றாயிருக்க வேண்டுமென்று அவர் வேண்டுகோள் விடுத்தார்:

> சகோதரரே, நீங்கஎளெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். ஏனெனில் என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது (1 கொரி. 1:10, 11).

இப்படிப்பட்ட ஒரு பிரச்சனைக்குத் தீர்வாக உள்ளது எது? அது சிலுவையாகவே இருந்தது என்று பவுல் கூறினார்!

> நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம், ... (1 கொரி. 1:23).

> இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன் (1 கொரி. 2:2).

பவுல் அவர்களிடத்தில், "சிலுவையைக் கண்ணோக்குங்கள், அப்பொழுது

*நீங்கள் பிரிவினையை வெற்றி கொள்ளும் வழியைக் காண்பீர்கள்'' என்று கூறினார்.*

## வேதனைக்குப் பதில்

கடினமான வேளைகளில் சிலுவையானது சபையை எவ்விதம் வழி நடத்துகின்றது என்பதற்கான இரண்டாவது எடுத்துக்காட்டானது 1 பேதுரு நிருபத்தில் உள்ளது. இது, கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்திற்காகத் துயருற்றுக் கொண்டிருந்த துன்புறுத்துதலின் சந்தர்ப்பப் பொருளில் எழுதப்பட்டது. வருத்தம் நிறைந்த வேளைகளில் கிறிஸ்தவர்கள் ஆறுதலும் நம்பிக்கையும் பெறுவதற்கு எங்கு செல்ல முடியும்? சிலுவையினிடம் செல்லும்படிக்குப் பேதுரு கூறினார்!

> இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாய மாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்; நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர், தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1 பேது. 2:21-24).

*"சிலுவையைக் கண்ணோக்குங்கள், அப்பொழுது உங்கள் துன்பங்களைச் சமாளிப்பதற்கான வழியை நீங்கள் கண்டடைவீர்கள்'' என்று பேதுரு கூறினார்.*

## தவறுக்குப் பதில்

வருத்தமூட்டும் குழப்பத்தினூடே சிலுவையானது கிறிஸ்தவர்களை வழிநடத்தும் வகைக்கான மூன்றாவது எடுத்துக்காட்டானது கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் காணப்படுகின்றது. புதிய ஏற்பாடு முழுவதிலும், அநேகமாக மிகவும் தொடக்கத்தில் எழுதப்பட்டிருக்கக் கூடிய இந்நிருபமானது, பவுல் தமது முதல் ஊழியப்பயணத்தில் தொடக்கம் பெற உதவியிருந்த புதிய சபைகளில் பயமுறுத்தலாய் இருந்த சட்டரீதியான கொள்கைகளை எதிர்கொள்ள எழுதப்பட்டது. பவுலின் பிரயாணங்களில் அவரைத் தொடர்ந்து வந்த கள்ளப் போதகர்கள், கிறிஸ்தவர்களுக்கு இரட்சிப்புக் கிடைக்க வேண்டுமென்றால், அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று போதித்தனர். இது சபையின் இருப்பையே பயமுறுத்தக் கூடிய ஒரு பொய்யாக இருந்ததைப் பவுல் கண்டார். கள்ளப் போதகர்கள் மற்றும் அவர்களின் கள்ள போதகங்களைக் கையாண்டு, உதவி பெறுவதற்குக் கிறிஸ்தவர்கள்

*எங்கு செல்ல முடியும்? அவர்கள் சிலுவையிடத்தில் செல்ல வேண்டும் என்று பவுல் கூறினார்!*

> *நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிற தில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தி னாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே; நியாயப் பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனு ஷனே அவைகளால் பிழைப்பான். மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார் (கலா. 3:11-13).*

*கலாத்தியர்களுக்குப் பவுல், “சிலுவையைக் கண்ணோக்குங்கள், எதிர் மறையான மற்றும் குழப்பமூட்டும் கருத்துக்களை எவ்விதம் மதிப்பீடு செய்வதென்று நீங்கள் கண்டறிவீர்கள்” என்று கூறினார்.*

## முடிவுரை

*யோவான் சுவிசேஷத்தில் நமது படிப்பின் இப்பகுதியானது இன்றைய நாளின் ஆய்வுப் பொருளுடன் இடைவெட்டுகின்றது. இயேசு, “நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்” (12:32) என்று அறிவித்தார். சிலுவையானது, நமக்காக மரித்த நமது அற்புதமான இரட்சகரை நோக்கி நமது இருதயங்களை இழுத்து வசீகரிக்கின்றது.*

*எழுத்தாளரான பில் பிரிட்ஜ்வாட்டர் என்பவர் தமது குழந்தைப் பருவத்தில் தம்மை ஒரு வலியவன் எவ்விதம் சித்திரவதை செய்தான் என்பதையும், ஒருநாள் பில்லின் பிறந்த நாளுக்கென்று தரப்பட்டிருந்த விசேஷித்த மோதிரத்தை அவன் கவர்ந்து கொண்டதையும் பற்றிக் கூறினார். ஒவ்வொரு நாளிலும் பில் தனது மோதிரத்தை அவனிடம் கேட்பார், ஒவ்வொரு நாளும் அந்த வலியவன், பில்லின் தோள்பட்டையில் பலம் கொண்ட மட்டும் அடிக்கத் தன்னை அனுமதித்தால் மோதிரத்தைக் கொடுத்து விடுவதாகக் கூறுவான். வேதனைக்குப் பயந்த பில் சிறுமைப்படுத்தப்பட்ட உணர்வுடன் மோதிரம் இன்றியே எப்பொழுதும் நடந்து சென்று விடுவார். பிறகு ஒருநாள், பில்லின் நெருங்கிய நண்பனான லேரி டேவிஸ் அந்த அடியைத் தான் பெற்றுக் கொள்வதாகக் கூறினான். அந்த வலியவன் லேரியை குத்தி விட்டு, பில்லிடத்தில் மோதிரத்தைத் திரும்பக் கொடுத்தான்.*

*அந்தக் குழந்தைப் பருவ நினைவுகளை மீண்டும் எண்ணிப் பார்த்த பிரிட்ஜ்வாட்டர் அவர்கள், ‘‘அந்த மோதிரத்திற்கு என்னவாயிற்று என்பதைப் பற்றி இன்று வரை எனக்கொன்றும் தெரியவில்லை, ஆனால் அந்த நாளில் எனக்காகக் குத்து வாங்கிக் கொண்ட லேரி எனக்காகச் செய்ததை நான் இன்னும் மறவாமல்தான் இருக்கின்றேன்’’ என்று எழுதினார்.*

இன்றைய நாளில் கிறிஸ்துவின் சிலுவையானது, தலை சுற்றல் ஏற்படுத்திய ஒரு வாரத்திற்குப் பிறகு மறுபயிற்சி பெறுவதில் நமக்கு உதவுகின்றது. புதிய மற்றும் வருத்தமூட்டும் அறைகூவல்களை எவ்விதம் எதிர்கொள்வதென்று அது நமக்குக் காட்டுகின்றது. அது நமது இருதயங்களைப் பற்றியிழுத்து தேவனை நோக்கி நம்மை மீண்டும் அழைத்துச் செல்கின்றது.

# "உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" (12:9-50)

மூன்று மரங்களைப் பற்றிய பழைய நாடோடிக் கதையொன்று பல மொழிகளில் கூறப்படுகின்றது. மூன்று மரங்கள் ஒரு மலையின் உச்சியில் வளர்ந்து கொண்டிருந்தன, அவைகள் தாங்கள் வளர்ந்த பிறகு எப்படியிருப்போம் என்று கனவு கண்டன. முதல் மரமானது வைரங்கள் மற்றும் இரத்தினங்களைப் பற்றிக் கனவு கண்டு, விலை உயர்ந்த ஆபரணங்களை வைக்கும் பொக்கிஷப் பெட்டியாக ஒரு நாளில் ஆக வேண்டும் என்று விரும்பியது. இரண்டாவது மரமானது பயணம் மற்றும் உணர்வெழுச்சி பற்றிக் கனவு கண்டு, அரசர்களைக் கடல்களின் குறுக்கே ஏற்றிச் செல்லும் வலிமை நிறைந்த பயணக் கப்பலாக ஒரு நாளில் ஆக வேண்டும் என்று விரும்பியது. மூன்றாவது மரத்துக்கு அம்மலை உச்சியை விட்டுச் செல்லும் எண்ணமே இல்லாதிருந்தது. அதற்குப் பதிலாக, அங்கேயே அது நேராக உயரமாக நின்று கொண்டு மக்களைத் தேவனிடத்திற்கு சுட்டிக்காட்டுவதே அதன் பேராவலாக இருந்தது.

ஆண்டுகள் கடந்தன, அந்த மரங்கள் உயர்ந்து பலத்து வளர்ந்தன. ஒருநாள் மரம் வெட்டுபவர்கள் வெட்டுவதற்கு மரங்களைப் பார்த்துக் கொண்டு அம்மலையின் மீது நடந்தார்கள், ஒரு மரம்வெட்டி முதலாவது மரத்திடம் வந்து, "இதுதான் எனக்குத் தேவையான மரம்" என்று கூறி அதை வெட்டி வீழ்த்தினார். இன்னொரு மரம்வெட்டி இரண்டாவது மரத்திடம் வந்து, அதே போலவே கூறி அதையும் வெட்டி வீழ்த்தினார். மூன்றாவது மரம்வெட்டி, எஞ்சியிருந்த மரத்தை எண்ணமற்ற வகையில் வெட்டுவதற்கு முன்பு எந்தப் பழைய மரமும் எனது நோக்கத்திற்கு ஆனதே என்று முணுமுணுத்தார்.

முதல் மரமானது ஒரு பெட்டியாக வடிவமைக்கப்பட்ட வேளையில், பொக்கிஷப் பெட்டியாகும் தனது கனவு நனவானது என்று அது நினைத்தது. இருப்பினும், அது தான் பண்ணை விலங்குகளுக்குத் தின்பதற்குத் தீவனம், வைக்கோல் வைக்கும் தொட்டியாக, கரடுமுரடான தொட்டியாக மட்டுமே இருந்ததை அது விரைவில் உணர்ந்தது. இரண்டாவது மரமானது வல்லமையுள்ள கப்பலாக வேண்டும் என்ற தன்னுடைய கனவானது, ஒரு ஏரியைத் தவிர வேறு பெரிய நீர்நிலை எதிலும் ஒருக்காலும் பயணம் செய்ய முடியாத ஒரு சிறிய படகாக ஆனது, என்பதை விரைவிலேயே உணர்ந்து

அறிந்தது. மூன்றாவது மரம்தான் அவை யாவற்றிலும் மிகவும் மோசமான அனுபவத்தைப் பெற்றது. அது ஒரு மரத் தூணாக வெட்டப்பட்டு, மற்ற கட்டைகளுடன் அடுக்கி வைக்கப்பட்டு, மறந்து போகப்பட்டது.

காலம் கடந்து செல்லுகையில், மூன்று மரங்களும் மாறுபட்ட அனுபவங்களைப் பெற்றன. பெட்டியாகியிருந்த மரமானது ஓர் இரவில், புதிதாய்ப் பிறந்த குழந்தையைக் கொண்டிருந்து சத்திரத்தில் இடம் கிடையாமற் போன ஒரு இளம் குடியானவத் தம்பதியரால் பயன்படுத்தப் பட்டது. அவர்கள் அப்பெட்டியில் புது வைக்கோலைப் பரப்பி வைத்து அதை ஒரு தொட்டிலாகப் பயன்படுத்தினர். புதிதாய்ப் பிறந்த குழந்தையை அந்த முன்னணை தாங்கியிருந்த வேளையில், அந்த மரமானது தான் உலகத்திலேயே மாபெரும் பொக்கிஷத்தை தாங்கியிருந்ததை உணர்ந் தறிந்தது. படகாக மாறிய மரமானது ஒரு இரவில் ஏரியில் புயல் வீசுகையில் மனிதர்களின் ஒரு குழுவைச் சுமந்து கொண்டு வருத்தமான பிரயாசப் பட்டுக் கொண்டிருந்தது. தான் மூழ்கி விடுவோம் என்றும் தான் சுமந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் மரித்து விடுவார்கள் என்றும் பயந்திருந்த அப்படகானது, தன்னில் தூங்கிக் கொண்டிருந்த பயணி ஒருவர் விழித் தெழுந்து புயலினிடத்தில் “இரையாதே! அமைதலாயிரு!” என்று கூறிய பொழுது திகைப்புற்றது. ஏரியானது உடனடியாக அமைதியான பொழுது, அம்மரமானது தான், இராஜாதி இராஜாவைச் சுமந்து கொண்டிருந்ததை உணர்ந்து அறிந்தது. மூன்றாவது மரமானது ஒரு நாள் மரக்கட்டைகளின் குவியலில் இருந்து வெளியே இழுக்கப்பட்டு, இரத்தம் வழிந்தோடிய ஒரு மனிதரின் முதுகில் சுமத்தப்பட்டது, அம்மனிதர் தெருக்களில் வழியாக நடத்தப்பட்டு, அவரது மரணத்திற்காகக் கூச்சலிட்ட வெறுப்பு நிறைந்த மக்கள் கும்பலால் சூழப்பட்டிருந்தார். நகருக்கு வெளியே வந்தவுடன், அம்மனிதர் மரிக்கும்படியாக அம்மரத்தில் ஆணிகளால் அறையப்பட்டு உயர்த்தப்பட்டார். இது நடந்த பொழுது, அந்த மூன்றாவது மரமானது இதயத்தில் வேதனையடைந்தது, ஏனெனில் இம்மனிதருக்குச் செய்யப் பட்டதைக் காட்டிலும் அவ பக்தியான வேறு எதையும் அம்மரத்தால் சிந்தித்துப் பார்க்கக் கூடாதிருந்தது. மக்களுக்குத் தேவனைச் சுட்டிக் காட்டுவதையே அம்மரம் செய்ய விரும்பியிருந்தது. மூன்று நாட்களுக்குப் பிறகு, உலகமே மாறியது: அம்மனிதர் மரித்தோரில் இருந்து உயிர்த்தார், மற்றும் அந்த மூன்றாவது மரமானது அந்த நாள் தொடங்கி தன்னை மக்கள் நோக்கிப் பார்க்கும் பொழுதெல்லாம் அவர்கள் தேவனைப் பற்றிச் சிந்திப்பார்கள் என்று அறிந்தது! மாறுபட்ட கனவுகள் மற்றும் நம்பிக்கை களுடன் இருந்த மூன்று மரங்கள் ஒவ்வொன்றும் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வந்தன.

நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி, ‘‘மகிமை’’ என்பது யோவான் சுவிசேஷத்தின் முக்கியமான பாடக் கருத்தாக உள்ளது. யோவான், “அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது” என்று (1:14) எழுதிய இடத்தில் நாம் இம்மகிமையை ஏற்கனவே

எதிர்கொண்டிருந்தோம். யோவான் சுவிசேஷத்தில் "மகிமைப்படுத்தும்" என்ற வினைச் சொல் இருபத்தி மூன்று முறைகளும், "மகிமை" என்ற பெயர்ச் சொல் பதினெட்டு முறைகளும் காணப்படுகின்றன. இயேசுவின் வாழ்வு பற்றிய யோவானின் பதிவேடானது மகிமையின் மீதே கவனம் செலுத்துகின்றது என்பது தெளிவு!

## தேவனுடைய மகிமையும் இயேசுவும்

நமது வேதபாடப் பகுதியின் தொடக்கத்தில், பஸ்காப் பண்டிகையைப் பற்றியும், இயேசுவின் வருகை குறித்துக் கூட்டத்தினரின் எதிர்பார்ப்புப் பற்றியும் எருசலேம் முழுவதும் உணர்வெழுச்சியினால் கலக்கப் பட்டிருந்ததை நாம் காண்கின்றோம். அவர் எவ்விதத்தில் வருவார்? அவர் என்ன செய்வார்? இந்த வேளையில் அவர் தம்மை நீண்ட நாட்களாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேசியா என்று அறிவித்து இஸ்ரவேலின் அரசர் ஆவாரா? ஒவ்வொருவரும் இயேசுவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

இயேசு எருசலேமுக்குள் பிரவேசிக்க வேண்டிய நாள் வந்த பொழுது, அவர் நகரை நெருங்கிக் கொண்டிருக்கையில் திரளான கூட்டமொன்று அவரைச் சந்திக்கச் சென்றது. அவர்கள் குருத்தோலைகளைக் கைகளில் ஏந்தி அசைத்துக் கொண்டு, "ஓசன்னா, *கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் இராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர்*" (12:13) என்று சத்தமிட்டு, இயேசுவுக்கு ஒரு அரச வரவேற்பளித்தனர். இயேசு ஒரு இளம் கழுதையின் முதுகில் சவாரி செய்து இவ்விதமாய் சகரியா 9:9ன் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியவராய் எருசலேமுக்குள் நுழைந்தார். இந்தக் காட்சி முழுவதினாலும் குழப்பமுற்ற சீஷர்கள் "இயேசு மகிமைப்படுத்தப்பட்ட" (யோவான் 12:16) வரையிலும் நடந்த நிகழ்வின் தனிச்சிறப்பைப் புரிந்து கொள்ளாதிருந்தனர் என்று யோவான் பதிவு செய்தார். இயேசுவின் வாழ்வின் ஒவ்வொரு தளத்திலும் மகிமை பிரதிபலிக்கப்பட்டது, ஆனால் சிலுவையில் தான் அது மிகவும் பிரகாசமாய் ஒளி வீசியது என்று நாம் மீண்டும் காண்கின்றோம். உலகமானது மகிமை என்பதை எப்பொழுதுமே வல்லமை மற்றும் புகழ் மற்றும் செல்வங்கள் ஆகியவற்றுடன் இணைத்துக் கொண்டிருக்க, தேவனுடைய மகிமையானது அன்பு, தாழ்மை மற்றும் சிலுவையின் தியாகம் ஆகியவற்றில் மிகத் தெளிவாய்க் காணப்படுகின்றது.

பின்பு, கிரேக்கரில்[1] சிலர் பிலிப்புவிடம், "ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்" (12:21) என்றனர். பிலிப்பு அந்திரேயாவிடம் சென்றார், மற்றும் அவ்விருவரும் கிரேக்கர்கள் கூறியதை இயேசுவிடம் சொன்னார்கள். இயேசு, "மனுஷகுமாரன் மகிமைப் படும்படியான வேளை வந்தது" (12:23) என்று பதிலுரைத்தார். மீண்டுமாக, "மகிமை" பற்றிய குறிப்பிடுதலானது சிலுவையைப் பற்றிய ஒரு குறிப்பாக உள்ளது. பின் தொடரும் வசனங்களில் இது தெளிவாகின்றது, அங்கு இயேசு, கோதுமை மணியானது பலன் தருமுன்பு மண்ணில் விழுந்து மடிய வேண்டியது எவ்விதம் என்பதை விவரித்தார். இயேசு தமது சொந்த சிலுவை மரணம்

பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், ஒப்புக் கொடுத்தல் மற்றும் தியாகம் ஆகியவற்றில் தம்முடைய முன்னுதாரணத்தைப் பின்பற்றும்படி தமது சீஷர்களை அழைத்தார். அவ்வாறு அவர்கள் செய்தால், பிதா அவர்களை மகிமைப்படுத்துவார் என்று அவர் (இயேசு) சுட்டிக்காட்டினார்.

முந்தின வசனங்களில் இருந்த உரையாடலானது வசனம் 28ல் தொடங்கி இயேசுவின் ஜெபமாக வழிந்தோடுகிறது: "பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்." அப்பொழுது: "மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன்" என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று (12:28). கூட்டத்திலிருந்த மக்களில் சிலர் தாங்கள் இடி முழக்கத்தைக் கேட்டதாக நினைத்தனர். வேறு சிலர், தாங்கள் தேவதூதர் ஒருவரின் சத்தத்தைக் கேட்டதாகக் கூறினர். இயேசு அவர்களிடம், இந்தச் சத்தத்தை அவர்கள் தங்கள் நிமித்தமாகவே கேட்டனர் என்று கூறினார். பிதாவானவரே பேசியிருந்தார். அவர் குறிப்பிட்டிருந்த மகிமையானது மீண்டும் சிலுவையையே முக்கியமாக்கிற்று. இயேசு தம் வாழ்வில் கூறியிருந்த மற்றும் செய்திருந்த ஒவ்வொன்றினாலும் தம்முடைய பிதாவை மகிமைப்படுத்தியிருந்தார், ஆனால் இன்னும் சில நாட்களில் இயேசு சிலுவையில் அறையப்பட்டு, மரித்தோரில் இருந்து உயிர்த்தெழும்பும் பொழுது மாபெரும் மகிமை காணப்பட வேண்டியதாய் இருந்தது. இயேசு "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் என்னிடத்திற்கு இழுத்துக் கொள்ளுவேன்" (12:32) என்று கூறிய பொழுது தாம் சிலுவையைக் குறிப்பிடுவதாகத் தெளிவு படுத்தினார். யோவான், "தாம் இன்ன விதமான மரணமாய் மரிக்கப் போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்" (12:33) என்று விளக்கம் அளித்தார்.

பிறகு மக்கள் தாங்கள் "வேதத்தில் சொல்லியதைக் கேட்டிருந்தது" (12:34) பற்றி இயேசுவினிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்டனர். நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, சீனாய் மலையில் தேவனுடைய குரலை இஸ்ரவேலர்கள் தங்கள் சொந்தக் காதுகளினால் கேட்டிருந்தனர்.[2] இடி, மின்னல், எக்காள முழக்கம் மற்றும் புகைக் காட்டின் மத்தியில், இஸ்ரவேலர்கள் தேவனுடைய மகிமையில் ஒரு சிறிதளவைக் கண்டிருந்தனர். இப்பொழுது, இந்தப் பிந்திய ஆண்டுகள் எல்லாவற்றிலும் அவர்கள் இயேசுவைக் கவனித்துக் கேட்கையில் தேவனுடைய மகிமையை இன்னும் அதிகமாகவே கண்டு கொண்டிருந்தனர். இயேசு தமது சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பிறகு, அவர்கள் இதற்கு முன் ஒருபோதும் கண்டிராத மாபெரும் மகிமையை வெளிப்படுத்துவார் என்பதை அவர்கள் உணர்ந்து அறியாமல் இருந்தனர்!

இயேசு ஒரு அரச வரவேற்புடன் எருசலேமுக்குள் பிரவேசித்து, இந்த அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வார்த்தைகளை உரைத்த பிறகு, கூட்டத்திலிருந்து விலகி மறைந்து கொண்டார். அவர்களிடத்தில் அவர் சத்தியத்தை உரைத்திருந்ததாலும், தாம் நிகழ்த்தியிருந்த அற்புதங்களின் மூலம் அவர் தம் அடையாளத்துவத்தையும் வல்லமையையும் வெளிப் படுத்தியிருந்ததாலும் மக்கள் தம்மை விசுவாசிக்கத் தவறியதைக் குறித்து இயேசு கலக்கமுற்றார். மக்களின் விசுவாசக் குறைவானது ஏசாயா

*முன்னுரைத்திருந்தபடியாகவே இருந்ததை யோவான் கண்டார்: "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" (ஏசா. 53:1); "இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க, நீ அவர்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு" (ஏசா. 6:10).* யோவான், "ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக் குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான்" *(12:41)* என்று எழுதினார். இவ்விடத்தில், இந்த அதிகாரத்தில் நான்காவது முறையாக "மகிமை" என்பது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறிக்கின்றது.

## தேவனுடைய மகிமையும் நாமும்

இந்த அதிகாரத்தில் இயேசு தம்மைப் பற்றியும் தேவனுடைய மகிமையைப் பற்றியும் கூறியதாகப் பின்னப்பட்டவைகளின் மூலமாக, "மகிமையின்" இந்த விஷயமானது நம் வாழ்வில் எவ்விதம் செயல்விளைவு ஏற்படுத்துகின்றது என்பதற்கான தெளிவான மற்றும் நேரடியான செய்தியை நாம் காண்கின்றோம். இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில், "மனுஷ குமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது" *(12:23)* என்று உரைத்தார். அவர் தமது மரணத்தின் இன்றியமையாமையை விளக்கப் படுத்திய பிறகு *(12:24)* பின்வருமாறு கூறினார்:

> *தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவ காலமாய்க் காத்துக் கொள்ளுவான். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக் கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால், அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார் (12:25, 26).*

இந்தப் பகுதியின் சிந்தனை ஓட்டமானது பின்வருவது போன்றுள்ளது: கிறிஸ்து மகிமைப்படுத்தப்படவிருந்தார். இருப்பினும், அது எதனை அர்த்தப்படுத்துகின்றது என்று ஒருவர் எதிர்பார்க்கின்றதற்கு முரணாக, அவர் மகிமைப்படுத்தப்படுவதற்கு, மரணம் அடைவது அவருக்கு அவசியமாய் இருந்தது. அதே வழிமுறையிலேயே, இயேசுவின் சீஷர்கள், தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக கர்வம், சுயநலம் மற்றும் இவ்வுலகத்தின் மீதான அன்பு ஆகியவற்றை "மரிக்கச்" செய்யும் பொழுது, நித்திய ஜீவனைப் பெற்று தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றனர்.

இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் செய்யும்படியாக 12:25, 26ல் கூறி அழைத்தவற்றுக்கும், இந்த அதிகாரத்தின் பின்பகுதியில் இரகசிய சீஷர்கள் செய்தவைகளுக்கும் இடையில் தெளிவான முரண்பாடு காணப்படுகின்றது:

> ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்காதபடி, பரிசேயர்நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள் (12:42, 43).

ஆங்கில வேதாகமத்தில் இவ்வசனத்தில் (43) வரும் ''மகிமை'' என்ற வார்த்தை "approval" என்றுள்ளது. இவ்வாறு "approval," "அங்கீகாரம்" என்று வசனம் 43ல் இருமுறை மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை *doxa* என்றுள்ளது. இதே வார்த்தையானது இப்பாடத்தில் நாம் ஏற்கனவே விவாதித்துள்ள வசனப் பகுதிகளில் ''மகிமை'' "glory" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கோழைத்தனமான சீஷர்கள், "தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" என்பதால் தங்கள் விசுவாசத்தை இரகசியமாய் வைத்துக் கொண்டனர். மனிதரின் மகிமையானது கர்வம், அதிகாரம், சுயபாதுகாப்பு மற்றும் சுயமேம்பாடு ஆகியவற்றில் காணப்படுகின்றது; தேவனுடைய மகிமையோ, தாழ்மை, தியாகம் மற்றும் சுயமறுப்பு ஆகியவற்றில் காணப்படுகின்றது.

யோவான் தமது சுவிசேஷத்தின் பிற்பகுதியில் இயேசு பேதுருவிடம் கூறிய அசாதாரணமான ஒரு தீர்க்கதரிசனத்தை பதிவு செய்தார்:

> நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது, உன்னை நீயே அரை கட்டிக் கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர் வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டு போவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (21:18).

யோவான், "இன்ன விதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப் படுத்தப் போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார்" (21:19) என்று விளக்கம் அளித்தார். மீண்டுமாக நாம், இந்த சுவிசேஷத்தின் போதனைகளில் மகிமையும் தியாகமும் ஒன்று கூட்டிப் பிணைக்கப் பட்டிருப்பதைக் காண்கின்றோம்!

கிறிஸ்தவர்கள் தேவனுடைய மகிமைக்காக வாழ வேண்டும். நம்மைப் பற்றிய ஒவ்வொன்றும் தேவனுடைய மகிமையைப் பிரதிபலிக்க வேண்டும் (1 கொரி. 10:31). ஆண்டுகளினூடே பலர் தேவனுடைய நாமத்தில் மாபெரும் ஆலயங்கள் அல்லது அரசுகளைக் கட்டியெழுப்பி தேவனுக்கு மகிமை அளிக்க முயற்சி செய்துள்ளனர். யோவான் சுவிசேஷத்தில், தேவனுடைய மகிமையானது எளிமையான, தாழ்மையான செயல்களிலேயே நன்கு காணப்படுகின்றது என்பது இயேசு மீண்டும் மீண்டும் செயல் விளக்கப் படுத்தினார். இன்றைய நாட்களில் தேவனுடைய மகிமையானது உலகத்தால் கவனிக்கப்படவும் கூடாதிருக்கின்ற அன்புகூரும், தியாகம் செய்யும் செயல்களிலேயே நன்கு காணப்படுகின்றது:

குழந்தைக்கான தாயின் அன்பு நிறைந்த பராமரிப்பானது தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றது.

முதர்வயதுப் பெற்றோர் அல்லது அயலகத்தாரைப் பராமரிப்பதானது தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றது.

இடர்ப்பாட்டிலுள்ள நபரைக் கவனித்து ஆறுதல் கூறுதலானது தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றது.

உங்கள் திருமண உறவில் உண்மையுடனும் அன்புடனும் இருத்தலானது தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றது.

தேவையில் உள்ள ஒரு நபருக்கு உதவியளித்தலானது தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றது.

பள்ளியில் எனது ஆசிரியர்களில் ஒருவர், மாபெரும் ஊழியர்களைப் பற்றி ஒருநாள் உரையாற்றிக் கொண்டிருந்தார். அவர், "நீங்கள் முன்னெப் போதும் இருந்திராத இடங்களில் இருக்கும், நீங்கள் முன்னெப்போதும் கேட்டிராத மக்களால் இன்றைய நாட்களில் மாபெரும் பிரசங்கம் பிரசங்கிக்கப் படுகின்றது" என்று கூறினார். அவருடைய வல்லமை நிறைந்த விளக்கமானது யோவான் 12ல் இயேசு போதித்தவற்றுக்கு மிகவும் நெருக்கமாய் உள்ளது என்று நான் நம்புகின்றேன்!

ஆஸ்திரேலியக் கவிஞரான விக்டர் டேலி என்பவர் தமது அந்திம நாட்களில் மருத்துவமனையொன்றில் மென்மையாகப் பராமரிக்கப் பட்டார். மருத்துவத் தாதிகளுக்கு அவர்களின் அன்பான பணிவிடைக்காக நன்றி செலுத்தியது என்பது அவர் தம் மரணத்திற்கு முன் செய்த கடைசி விஷயங்களில் ஒன்றாக இருந்தது. அதற்கு அவர்கள், "எங்களுக்கு நன்றி கூறாதீர்கள். தேவனுடைய கிருபைக்கு நன்றி கூறுங்கள்" என்றனர். அதற்கு டேலி, "ஆனால், நீங்கள் தேவனுடைய கிருபையாய் இருப்பதில்லையா?" என்று பதில் அளித்தார். அவர் சரியாய்க் கூறினார் என்றே நான் நம்புகின்றேன். அதே வழிமுறையில், நீங்களும் நானும் தேவனுடைய மகிமையைக் கண்டிருக்கின்றோம், தேவனுடைய மகிமையைப் பெற்றிருக்கின்றோம், மற்றும் இப்பொழுது, நாம் அவருடைய மகிமையாய் இருக்க வேண்டியுள்ளது. தாழ்மையான, தியாகம் நிறைந்த ஊழியத்தினால் நாம் நமது உலகில் தேவனுடைய காணக்கூடிய மகிமையாய் இருக்க வேண்டும்.

## முடிவுரை

இப்பாடத் தொடக்கத்தில் நாம் கண்ட மூன்று மரங்களும் தாங்கள் தேவனுக்கு என்ன செய்ய முடியும் என்பதில் மாபெரும் கனவுகளைக் கொண்டிருந்தன. அதற்கு நேர் மாறான வகையில், அவைகள் வெட்டி வீழ்த்தப்பட்டு, துண்டுகளாய் அறுக்கப்பட்டு மற்றும் இருளில் விடப்பட்ட தாகக் காணப்பட்ட போது மட்டுமே அவைகள் தேவனுடைய மகிமைக்குப்

*பயன்படுத்தப்பட முடிந்தது. இதே விஷயம் தம்முடைய வாழ்விலும் உண்மையாயிருந்தது என்று இயேசு உரிமைகோரினார் - நமது வாழ்விலும் கூட இதுவே உண்மையாகும்! "கர்த்தரே, இன்று எங்கள் வாழ்வில் நீர் மகிமைப்படுத்தப்படுவீராக!" என்ற எளிய ஜெபத்தை நாம் தினமும் ஜெபிப்போமாக.*

---

குறிப்புகள்

*[1]அநேகமாக, இவர்கள் யூத போதனைகளால் வசீகரிக்கப்பட்ட "தேவபயமுள்ள வர்களாய்," ஆனால் விருத்தசேதனம் செய்து கொண்டு முழுமையாக யூதத்துவத் திற்கு மாற விருப்பமற்றவர்களாய் இருக்கலாம். ஆகையால், அவர்கள் புறஜாதி யாராகவே நிலைத்திருந்தனர், மற்றும் எருசலேம் தேவாலயத்திற்கு அவர்கள் ஆராதிக்க வரும் பொழுது புறஜாதியாரின் முற்றம் வரை மட்டுமே பிரவேசிக்க முடிந்தது. எனவே, இவ்வசனப் பகுதியில் உள்ள "கிரேக்கர்கள்" என்பது கிரேக்க நாட்டிலிருந்து வந்தவர்களையல்ல ஆனால் "தேவபயமுள்ளவர்களை"யே குறிப்பதாய் இருக்கலாம். [2]யாத்திராகமம் 20; உபாகமம் 5:22.*

# இயேசு அவர்களுடைய பாதங்களைக் கழுவினார் (13:1-17)

*1983ம் ஆண்டில் ஆண்களின் தியானம் ஒன்றில் உரை நிகழ்த்துவதற்கு இவ்வசனப் பகுதியான 13:1-17 எனக்குக் குறித்துத் தரப்பட்டிருந்தது. பெரிய உணவறை ஒன்றில் கிராமிய மணம் கமழும் சூழ்நிலையில், கற்களால் ஆன கணல் அடுப்பின் முன்பாக எல்லாரும் அமர்ந்திருந்தனர். பாடத்தைத் தொடங்குவதற்கு, நான் ஒரு பாத்திரத்தையும் துண்டு ஒன்றையும் எடுத்துக் கொண்டு, எனது விளக்கச் செயலுக்கு உதவுவதாக முன்னரே ஒப்புக் கொண்டிருந்த ஒரு உறுப்பினரிடத்தில் நடந்து சென்றேன். (நான் இன்னொருவரிடம் கேட்டிருந்தேன், ஆனால் அது ''அதிகம் சங்கடப்படுத்துவதாய்'' இருக்கும் என்று கூறியிருந்தார்.) நான் அம்மனிதரின் முன்பாக மண்டியிட்டு, அவரது காலுறைகளையும் காலணிகளையும் நீக்கி, அவருடைய பாதங்களைக் கழுவுகையில் முழுமையான அமைதி அந்த அறையில் நிரம்பிற்று, அந்த நிகழ்ச்சியானது ஒவ்வொருவரையும் எவ்வளவு படபடப்புக்குள்ளாக்கும் - அல்லது அது என்னையும் கூட எவ்வளவு படபடப்புக்கு உள்ளாக்கும் - என்பதை நான் முன்னரே எதிர்பார்த்திருக்கவில்லை! இதேசெயலை இயேசு தம்முடைய சீஷர்களுக்குச் செய்திருந்தார் என்பது பற்றி நாம் வாசித்து, கேட்டு மற்றும் பேசியிருந்தாலும் நாம் நேரடியாக அதைச் செய்யும் பொழுது அது அழகற்றதாகவும் பயமுறுத்துவதாகவும் இருந்தது. ஆண்களின் தியானத்தில் அந்த இரவை நான் பின்னோக்கிக் காண்கையில், நவீன காலத்தின் பாதம் கழுவும் அனுபவமானது இயேசு தமது வாழ்வின் முடிவுக்கு அண்மையில் "தம் சீஷர்களுடைய கால்களைக் கழுவத் தொடங்கிய" (13:5) அழகற்ற, பயமூட்டும் மற்றும் சங்கடப்படுத்தும் கணத்திற்கு முழு நிறைவான அறிமுகமாய் இருந்தது என்றே நான் நம்புகின்றேன்.*

பஸ்கா பண்டிகைக்குச் சற்று முன்னதாக (13:1)[1], இயேசு உணவருந்தும்படி தம்முடைய சீஷர்களுடன் ஒன்று கூடினார். அந்த நாளில் பெத்தானியாவிலிருந்து புழுதி நிறைந்த சாலையில் பயணம் செய்ய வேண்டியதாயிற்று மற்றும் உரையாடலானது சொற்போராகியிருந்தது.[2] அந்த மாலை வேளையில் உணவருந்தும்படி மேசையின் மீது அவர்கள் சாய்ந்திருக்கையில், கழுவப்படாத பாதங்களுடன் அவர்கள் அவ்வாறு செய்தனர். மக்கள், ஒரு முழங்கை மீது ஊன்றித் தரையில் சாய்வாக அமர்ந்து

உண்ணும் கலாச்சாரத்தில் உங்களுக்கு அடுத்து இருக்கும் ஒரு நபரின் அழுக்கான பாதங்கள் என்பது ஒரு சங்கடமூட்டும் விஷயமாய் இருந்தது! அந்த அறையில், கழுவுவதற்கென்று ஒரு பாத்திரமும், துண்டும் இருந்தன, ஆனால் அவ்வேலையைச் செய்யும் பணியாள் அங்கு இல்லை. இதன் விளைவாக, அவர்கள் அந்த நாளின் அழுக்கும் தூசியும் தங்கள் பாதங்களில் ஒட்டிக் கிடந்த நிலையிலேயே தங்கள் உணவுகளை உண்ணத் தொடங்கினர். உணவு வேளை நடந்து கொண்டிருக்கையில், இயேசு எழுந்து, ஒரு துண்டைத் தன்னைச் சுற்றிக் கட்டிக் கொண்டு, பாத்திரத்தில் நீர் ஊற்றி, தம் சீஷர்களின் பாதங்களைக் கழுவவும், தம் துண்டினால் அவற்றைத் துடைக்கவும் தொடங்கினார். இயேசு சீஷர்களில் ஒருவரிடமிருந்து இன்னொருவரிடம் கடந்து சென்ற பொழுது, சங்கடப்படுத்தும் அமைதியொன்று நிச்சயமாகவே அந்த அறையை நிரப்பியிருக்க வேண்டும். அந்த அறையில் இருந்த மக்கள் யாவரிலும், இயேசு மற்ற ஒவ்வொருவரின் பாதங்களையும் கழுவியது ஏன்?

இயேசு அந்த இரவில், தம்முடைய செயல்களினால் அழுக்கான பாதங்களைக் கழுவுதல் என்ற செயலைக் காட்டிலும் அதிகமானவற்றைச் செய்து கொண்டிருந்தார். அவர் தம்முடைய சீஷர்களைத் தமது மரணம் மற்றும் அவர்களின் ஊழியம் ஆகியவற்றிற்காகத் தயார் செய்து கொண்டிருந்தார். சீஷர்களின் பாதங்களைக் கழுவுதல் என்பது, விரைவில் அவர் சிலுவையில் ஏற்படுத்தவிருந்த தியாகத்தை முன்னிழலிட்டது, சுத்திகரிப்பானது அப்பொழுது இயேசுவின் இரத்தத்தினால் சாத்தியமாகும், மற்றும் தேவனுடைய இராஜ்யத்தில் முற்றிலும் புதிய மதிப்பீடுகள் உண்டாயிருக்கும். இயேசு தம் சீஷர்களுக்குக் கிறிஸ்தவ ஊழியத்தின் இயல்பைப் போதிப்பதற்கு அவர் பாதங்களைக் கழுவுதல் என்ற உடல்ரீதியான விளக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்.

## ஊழியம் என்பது அன்பின் விளக்கமாக உள்ளது (13:1)

அதிகாரம் 13 என்பது, யோவான் சுவிசேஷத்திற்குள்ளாகவே ஒரு புதிய பகுதியைத் தொடங்குகின்றது. 13 முதல் 17 வரையுள்ள அதிகாரங்கள் இயேசுவின் "பிரியாவிடை உரைகள்" என்று பொதுவாக அழைக்கப்படுகின்றன. அவருடைய முந்திய ஊழியத்தில் கவனம் செலுத்தப்பட்ட வெளியரங்கமான போதனைக்கு நேர் எதிரான வகையில், இந்தப் பகுதியானது இயேசுவுக்கும் பன்னிருவருக்கும் இடையில் நடைபெற்ற தனிப்பட்ட, நெருக்கமான உரையாடல்களை விவரிக்கின்றது. இதற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் இந்தப் பகுதியில் "அன்பு" என்ற வார்த்தை மிகவும் அடிக்கடி காணப்படுவது ஒரு வேறுபாடு ஆகும். 1 முதல் 12 வரையுள்ள அதிகாரங்களில் அன்பைப் பற்றி ஆறு குறிப்புகள் மட்டுமே உள்ளன, ஆனால் 13 முதல் 17 வரையுள்ள அதிகாரங்களில் அன்பைப் பற்றி முப்பத்தி ஒரு முறைகள் குறிப்பிடப்படுகின்றது! அவைகளில் இரு குறிப்புகள் அதிகாரம் 13ன் முதல் வசனத்தில் உள்ளன.

இயேசு தம் சீஷர்களின் பாதங்களைக் கழுவியது ஏன் அல்லது அவர் சிலுவையில் மரித்தது ஏன் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நாம் அவரது அன்பைப் புரிந்து கொள்வதிலிருந்து தொடங்க வேண்டும்: "... இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்" (13:1). இயேசுவின் செயல்கள் புரிந்து கொள்ளப்படுவதற்கு முன்பாக, அந்தச் செயல்களை உண்டாக்கிய இருதயத்தை நாம் முதலில் மதிக்க வேண்டும். இயேசு தம் சீஷர்களின் பாதங்களைக் கழுவுகையில் அவருடைய இருதயம் அன்பினால் நிறைந்திருந்தது. அது கோபத்தினாலோ, ஏமாற்றத்தினாலோ, சலிப்பினாலோ அல்லது வெறுப்பினாலோ நிறைந்திருக்கவில்லை; அது அன்பினாலே நிறைந்திருந்தது. இயேசுவைப் போன்றே நாம் பணிபுரிய விரும்பினால், நாமும் கூட அன்புடன் தொடங்க வேண்டும் என்பது முக்கியமானதாக உள்ளது. இயேசுவைப் போன்றே நாமும் ஊழியம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்ற பலர், இயேசு தொடங்கிய இடமான அன்பான இதயத்துடன் தொடங்க மனதில்லாதவர்களாய் உள்ளனர்.

இதே அதிகாரத்தின் பிற்பகுதியில் இயேசு, அன்பு என்பது தேவனுடைய இராஜ்யத்தின் முக்கிய மதிப்பாக இருப்பது எவ்விதம் என்பதை விவரித்தார்:

> நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார் (13:34, 35).

ஊழியம் என்பது உண்மையான கிறிஸ்தவ ஊழியமாய் இருக்க வேண்டுமென்றால், அது அன்பைக் கொண்டு தொடங்க வேண்டும்.

அன்பானது நாம் செய்யும்படி தூண்டும் செயல்களுக்கு எல்லையே இல்லை. நாம் அன்பான இருதயங்களைக் கொண்டவர்களாய் இருந்தால் செய்யும் ஊழியத்தை விட, குற்ற உணர்வு, பயம் அல்லது மேட்டிமை ஆகியவற்றுடன் செய்யும் ஊழியமானது குறைவானதாகவே இருக்கும். கிறிஸ்தவ மருத்துவ மனை ஒன்றில் நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு மனிதர், அங்கிருந்த மருத்துவத் தாதிகள் நாள் முழுவதும் எவ்வளவு கடினமாய் உழைத்தனர் மற்றும் தான் கண்டவற்றிலேயே மிகக் கடினமான, மிகவும் அழுக்கான சில வேலைகளை அவர்கள் எவ்விதமாய்ச் செய்தனர் என்பதைக் கண்டார். ஒரு நாள் அவர் ஒரு மருத்துவத்தாதியிடம், "பத்து லட்ச ரூபாய் கொடுத்தாலும் கூட அதற்காக நான் நீங்கள் செய்கின்ற வேலையைச் செய்ய மாட்டேன்!" என்று விமர்சித்தார். அந்தக் கிறிஸ்தவத் தாதி அவளது பணியிலிருந்து சற்றுத் திரும்பி, அம்மனிதரைப் பார்த்துப் புன்னகைத்து, "நானும் கூட அதற்காகச் செய்ய மாட்டேன்!" என்று கூறினாள். வேறு எதனைக் காட்டிலும், அன்பானது ஊழியத்தில் நம்மையே

நாம் ஒப்புவிக்கும்படி தூண்டுகின்றது.

## நம்பிக்கையிலிருந்து ஊழியம் ஊற்றெடுக்கின்றது (13:2-4)

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் ஆப்பிரிக்காவில் இருந்த பொழுது, எனது சக ஊழியர் ஒருவர் கிறிஸ்தவ ஊழியத்தின் கருத்தை உள்ளூர் மொழியில் மொழிபெயர்ப்பதற்குத் தம் மொழி உதவியாளருடன் சேர்ந்து முயற்சித்துக் கொண்டிருந்தார். அவர் தம் பிரசங்கத்தில், ''எல்லாக் கிறிஸ்தவர்களும் ஊழியக்காரர்களாக வேண்டும்" என்று கூறும் இடத்திற்கு வந்த பொழுது, அவரது உதவியாளர், "இல்லை! நீங்கள் இதைக் கூறக் கூடாது!" என்றார். இம்மனிதர் இயேசுவைப் பற்றிப் பல ஆண்டுகளாகக் கேள்விப்பட்டிருந்தும் கூட, ஒரு பிரசங்கியார் கிறிஸ்தவர்களை ஒரு ஊழியராகத் தாழ்த்துங்கள் என்று கேட்டுக் கொள்ள முடியும் என்பதை நம்பாதிருந்தார்.

''ஊழியம் செய்யுங்கள்,'' ''ஊழியக்காரர்,'' ''ஊழியம்'' - என்ற இவ்வார்த்தைகள் யாவும் ''பலவீனமான'' சொற்பதங்கள் போல இவ்வுலகத்திற்கு ஒலிக்கின்றன. அவர்கள் இப்பணிப் பொறுப்புக்களை கல்வியற்ற, ஏழ்மையான, வல்லமைகுன்றிய நிலையில் இருப்பவர்கள் செய்யலாம் என்று யோசனை தெரிவிக்கின்றனர். ஊழியம் என்பது அதை விட்டு மேலே எழக் கூடாமல் இருக்கின்றவர்களுக்கானது என்று பொதுவாக நினைக்கப்படுகின்றது. ஒருவர், தாம் நிர்ப்பந்திக்கப் படுவதினாலேயே ஊழியம் செய்கின்றார்.

இருப்பினும் இயேசு, அவை எல்லாவற்றையும் திருப்பிப் போட்டார். சீஷர்களின் பாதங்களைக் கழுவிய இரவில், அவர் பலவீனராகவோ, தாழ்ந்தவராகவோ அல்லது பன்னிருவரால் எந்த வகையிலாவது பயமுறுத்தப்பட்டவராகவோ இருந்ததில்லை. யோவான் பின்வருமாறு பதிவு செய்தார்:

> *தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து, போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக் கொண்டு (13:3, 4).*

இயேசு தாம் செய்த செயலை, நம்பிக்கை மற்றும் வல்லமை கொண்டவராகச் செய்தார். ஊழியம் என்பது பலவீனத்தில் வேர் கொண்டிருப்பதில்லை ஆனால் பலத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது என்பதை அவர் செயல் விளக்கப்படுத்தினார். ஒரு கிறிஸ்தவர், தேவனுடைய கண்களில் தாம் எவ்விதமாய் அன்புகூரப்பட்டு, பொக்கிஷமாய்க் காக்கப்பட்டுள்ளோம் என்பதை உண்மையாகப் புரிந்து கொள்கின்ற பொழுது, அவர் ஊழியம் செய்யும் தைரியத்தைப் பெறுகின்றார். இயேசு

தம் சீஷர்களின் பாதங்களைக் கழுவிய பொழுது, இதையே மாதிரிப் படுத்தினார்.

## ஊழியம் என்பது தேவனை மையமாய் கொண்டுள்ளது (13:1-5)

அதிகாரம் 13ல் மிக முக்கியமாகச் சித்தரிக்கப்படுபவர்கள் யூதாஸ் (வ. 2, 18-30) மற்றும் பேதுரு (வ. 31-38) என்ற இரு அப்போஸ்தலர்கள் ஆவார்கள். இவ்விரு மனிதர்களின் பாதங்களும் இயேசுவால் கழுவப்பட்டன, மற்றும் இவ்விருவருமே அடுத்த சில மணிகளில் அவருக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்தனர்; யூதாஸ் அவரைக் காட்டிக் கொடுத்தார், மற்றும் பேதுரு அவரை மறுதலித்தார். இந்த “விபரமானது” உண்மையில் ஊழியத்தின் இயல்பைப் பற்றிய அற்புதமான சுயாதீனமுள்ள வெளிப் படுத்துதலாக உள்ளது. நமது ஊழியத்தை சிறக்கச் செய்வது மற்றவர்களின் பதில்செயலல்ல. நாம் ஊழியம் செய்து, விளைவுகளை தேவன் தீர்மானிக்கும்படி அனுமதிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

நான் அங்கம் வகிக்கும் பிராந்திய சபையானது “அவருடைய வீடு” என்று அழைக்கப்படுகின்ற உபகார உதவி செய்யும் ஊழியம் ஒன்றைக் கொண்டுள்ளது. இதிலிருந்து தேவையில் இருப்பவர்களுக்கு உணவு மற்றும் உடை போன்றவை வழங்கப்படுகின்றது. சில வேளைகளில் மக்கள் பொய் கூறி எங்கள் பெருந்தன்மையைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டதை நாங்கள் கண்டறிகின்றோம். இது நமது ஊழியத்தின் மதிப்பைக் குறைக்கின்றதா? இல்லவே இல்லை! நாம் ஞானமுள்ளவர்களாய் இருக்க விரும்புகின்றோம், மற்றும் நாம் நமது கொடைகளைப் போதைப் பொருட்களையும், மதுபானத்தையும் வாங்கப் பயன்படுத்தும் மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நம்புவதில்லை. இருப்பினும், நாம் தவறு செய்தால், அவ்வாறு செய்வதை நமது நம்பிக்கை மற்றும் பெருந்தன்மை ஆகியவற்றினாலேயே தேர்ந்து கொள்பவர்களாய் இருக்கின்றோம். சிலர் நம்மைத் தங்களுக்கு அனுகூலமாய்ப் பயன்படுத்திக் கொண்டாலும், நாம் தொடர்ந்து இவ்விதமாய் ஊழியம் செய்ய வேண்டும் என்பது இன்னமும் முக்கியமானதாகவே உள்ளது. அந்த இரவில் இயேசு, யூதாஸ் மற்றும் பேதுரு ஆகியோரின் பாதங்களைக் கழுவிய காரணத்தினால், மக்கள் சில வேளைகளில் நமது கொடைகளைத் தவறாகப் பயன்படுத்தினாலும் நாம் நமது சக மனிதர்களுக்கு ஊழியம் செய்யத் தொடரும்படி உற்சாகப் படுத்தப் படுகின்றோம். ஊழியம் என்பது கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில் விளைவுகளைக் கண்ணோக்கும் அடிப்படையில் அமைந்திருப்ப தில்லை; அது இயேசுவைக் கண்ணோக்குதல் பற்றியதாக உள்ளது.

இந்தக் கொள்கைக்கு ஊழியர்கள் இன்னொரு எடுத்துக்காட்டாக உள்ளனர். அவர்கள் சுவிசேஷத்தைப் பரப்புவதற்காக ஏதேனும் சில இடங்களுக்குச் செல்லும் முன்பே, சில மக்கள் தங்களைப் புறக்கணிப் பார்கள், மற்றவர்கள் தங்களைப் பயன்படுத்திக் கொள்வார்கள், மற்றும் சிலர் தங்களைச் சபிக்கவும் செய்வார்கள் என்பதைப் புரிந்து கொள்கின்ற

னர். அவர்கள் செல்லுதல் என்பது விளைவுகளைச் சார்ந்திருப்பதில்லை. அவர்கள் செல்வது - விளைவுகள் எதுவாக இருந்தாலும் - சரியானதே என்ற காரணத்தினாலேயே செல்கின்றனர்.

## ஊழியம் கொள்ளப்படுவதற்கு முதலில் ஊழியம் செய்தல் தேவைப்படுகின்றது (13:6-10)

இயேசு பேதுருவிடம் வந்து அவரது பாதங்களைக் கழுவத் தொடங்கிய பொழுது, "ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா?" (13:6) என்று கேட்டுப் பேதுரு மறுப்புத் தெரிவித்தார். இயேசு தாம் செய்வதை அந்த வேளையில், பேதுருவால் புரிந்து கொள்ள முடியாது, ஆனால் கடைசியாகப் புரிந்து கொள்வார் என்று பேதுருவிடம் கூறினார். அப்பொழுதும் கூடப் பேதுரு மறுப்புத் தெரிவித்து, இயேசு ஒருக்காலும் தமது பாதங்களைக் கழுவக் கூடாது என்று வலியுறுத்தினார். பிறகு இயேசு, "நான் உன்னைக் கழுவா விட்டால், என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" (13:8) என்று கூறிய பொழுது, அது பேதுருவை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்க வேண்டும். இயேசுவுக்கு இது முக்கியமாய் இருந்தது ஏன் என்பதைப் பேதுரு புரிந்து கொள்ளாது இருக்கையில், அது முக்கியமானதாக இருந்தது என்பதை அவர் புரிந்து கொண்டார். எப்பொழுதுமே திடீர் மன எழுச்சியுடையவராய் இருந்த பேதுரு, அதன் பிறகு தம் உடல் முழுவதையும் கழுவும்படி இயேசுவைக் கேட்டுக் கொண்டார்!

பேதுருவுக்கு இயேசுவின் வார்த்தைகள், தேவனுடனான நமது உறவில் ஆவிக்குரிய சுயசார்புத் தன்மையானது எவ்வளவு அழிவுக்குரியவைகளாய் இருக்க முடியும் என்பதை வெளிப்படுத்துகின்றன. நமது இரட்சிப்பை நாம் ஈட்டிக் கொண்டுள்ளோம் என்று நினைக்கின்ற வரையிலும் நாம் தேவனிடத்தில் நன்றியுணர்வு மற்றும் தாழ்மை ஆகியவற்றினால் நிறைந்திருக்க மாட்டோம். இதன் விளைவாக, நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய விருப்பமோ அல்லது ஊக்குவித்தலின் நோக்கமோ கொண்டிருக்க மாட்டோம். அப்படிப்பட்ட வகையில் நாம் நமது செயல்களையே சிறந்ததாகக் கருதுபவர்களாய் இருப்போம்! இதற்கு மாறாக, நாம் தேவனுடைய அற்புதமான கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்தறியும் பொழுது, நாம் நன்றியுணர்வு நிறைந்தவர்களாகவும், தாழ்மையுள்ளவர்களாகவும், மற்றும் நமது இரட்சகரின் முன்னுதாரணத்தைப் பின்பற்றத் தயாராயிருப்பவர்களாகவும் ஆகின்றோம். அக்கறையற்ற சபையொன்றை மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்படி நாம் தூண்டுவது எவ்விதம்? திட்டுவதினாலேயோ அல்லது சங்கடப்படுத்துவதினாலேயோ அல்ல, ஆனால் சிலுவையில் இயேசு "அவர்களின் பாதங்களைக் கழுவினார்" என்று அவர்களுக்கு நினைவூட்டுவதினாலேயே நாம் அவர்களை ஊழியம் செய்யும்படித் தூண்ட முடியும்! இயேசுவின் தியாகத்தினால் ஊழியம் கொள்ளப்படுதல் என்பது உண்மைக் கிறிஸ்தவ ஊழியத்தை நோக்கிய முதல் அடிவைப்பாக உள்ளது.

யோவான் சுவிசேஷத்தில், இயேசு ஈடுபட்ட உரையாடல்களில் ஒரே

வேளையில் மாறுபட்ட அர்த்தங்கள் பல அடிக்கடி காணப்படுகின்றன. 13:1-17ல் இது நடைபெற்றுக் கொண்டிருந்தது. முதலாவது சீஷர்களின் பாதங்களைக் கழுவுதல் என்பது அழுக்கடைந்த பாதங்களை ஒருவர் மற்றவருக்கெதிராக நீட்டிக் கொண்டு சாய்ந்திருக்கையில் உண்டு கொண்டிருந்த மனிதர்களின் குழு ஒன்றுக்கு வழங்கப்பட்ட இரக்கம் மற்றும் உபசரிப்பு நிறைந்த செயலாக இருந்தது. இயேசு தாம் ஒரு ஊழியராயிருந்ததையும், தம்மைப் பின்பற்ற விரும்புவர்களும் ஊழியம் செய்ய விருப்பமாய் இருக்க வேண்டும் என்பதையும் தம் சீஷர்களுக்கு (மீண்டும்) போதிக்க அந்த நிகழ்ச்சியை ஒரு ஆழமான அளவில் பயன்படுத்திக் கொண்டிருந்தார். உரையாடலில், யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுப்பான் (13:10, 11) என்ற இன்னொரு சுட்டிக்காட்டுதலும் பின்னப்பட்டிருந்தது.

## ஊழியம் என்பது மாதிரியைப் பின்பற்றும் செயலாக உள்ளது (13:12-16)

சங்கட முற்றிருந்த சீஷர்களின் பாதங்களைக் கழுவிய பிறகு, இயேசு உணவு மேசையில் மீண்டும் தம்முடைய இடத்தில் வந்து அமர்ந்தார். இயேசு சிலவற்றைக் கூறுவதற்காகப் பன்னிருவரும் தொடர்ந்து காத்திருந்த பொழுது, அநேகமாய் அழகற்ற அமைதி நிலவியிருக்க வேண்டும். கடைசியாக, அவர் “நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?” (13:12) என்று அவர்களிடத்தில் கேட்டார். அவருடைய அடுத்த வார்த்தைகள் இரவு உணவின் அந்தச் சூழ்நிலைக்கு மட்டுமல்ல ஆனால் இன்றைய நாளில் நமக்கும் பேசப்பட்டவைகளாய் உள்ளன:

> நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல (13:13-16).

இயேசு ஊழியம் செய்தார்! அவர் நமது எஜமானராக உள்ளார். ஆகையால், நாம் அவரைப் போல் இருக்க வேண்டுமென்றால், மற்றவர்களுக்கு நாம் ஊழியம் செய்ய வேண்டும்!

இந்தப்பாடத்தில் நான், இயேசுவின் நாமத்தில் ஊழியம் செய்துள்ளவர்களின் “கதாநாயக” எடுத்துக்காட்டுகளைத் தவிர்த்திருக்கின்றேன். மிக மேலான வீரமும், அதிகமான வரமும், அல்லது விசேஷமான கடின சூழ்நிலைகளில் தங்களை முன்னிருத்திக் கொள்ளும் நிலையும் உடையவர்கள் மட்டுமே இயேசுவுக்கு ஊழியம் செய்யக் கூடும் என்ற கருத்தைப் பதிய

*வைப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. இயேசு நம் எல்லாரையும் (மற்றும் சாதாரண வாழ்வு வாழ்கின்ற பெரும்பாலானோரையும்) நமது இல்லங் களில், சபைகளில், நமது பணிகளில் அல்லது மற்றவர்களின் "பாதங்களைக் கழுவக் கூடிய" வாய்ப்புள்ள மற்ற எந்தச் சூழ்நிலைகளிலும் மக்களுக்கு ஊழியம் செய்வதினால் அவரைப் பின்பற்றும்படியாக அழைக்கின்றார். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் இவ்விதம் செய்தல் என்பது நமக்கு அந்நியமானது அல்ல; அது இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றும் விஷயமாகவே உள்ளது.*

## ஊழியம் என்பது செயல்படுவதைப் பற்றியதாக உள்ளது *(13:17)*

*இருபது ஆண்டுகளுக்கு முன்பு நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்த பொழுது, ஊழியத்தைப் பற்றி நானும் எனது கிறிஸ்தவ நண்பர்களும் ஏராளமாகப் பேசினோம். உண்மையில், சீஷர்களின் பாதங்களை இயேசு கழுவியது பற்றிய வரலாறானது நாங்கள் கலந்துரையாட மிகவும் விரும்பிய வேத வசனப் பகுதிகளில் ஒன்றாக இருந்தது. எங்களது இளமை நிறைந்த முரட்டுத்தனத்தில் நாங்கள், நீண்ட காலமாக மறக்கப்பட்டிருந்த இயேசுவின் போதனையொன்றைக் "கண்டு பிடித்ததாக" நினைத்தோம். பல ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பொழுது ஊழியம் செய்தல் பற்றிப் பேசுவது என்பது ஊழியம் செய்வதை விட மிகவும் சுலபமானது என்று நானும் என் நண்பர்களும் கண்டுள்ளோம். ஊழியம் செய்வதைப் பற்றிக் கலந்துரையாடுவதலைக் காண்பது என்பது அதனை நடைமுறைப் படுத்துவதைக் காண்பதை விட வெகு சாதாரணமானதாக உள்ளது. ஊழியம் பற்றிப் "பேசுதலைப் பேசுதல்" என்பதை விட அதிகமானவற்றை நாம் செய்யும்படி இயேசு விரும்பு கின்றார்; நம்மை அவர் "நடையை நடக்கும்படியாக" அழைக்கின்றார்! மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் அவரைப் போல் இருக்க வேண்டும் என்று தம்முடைய சீஷர்களுக்குக் கூறிய பிறகு, இயேசு "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான் களாயிருப்பீர்கள்'' (13:17) என்று உரைத்தார். இதே போதனையைப் பிற்பாடு யாக்கோபு மீண்டும் எடுத்துரைப்பவராய் இருந்தார்: "அல்லாம லும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர் களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்'' (யாக். 1:22).*

*தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த பதினோரு வயதுச் சிறுமியைப் பற்றிய பின்வரும் கதையில் ஊழியத்தின் நடைமுறைப்பகுதியானது விவரிக்கப் படுகின்றது. அவள் ஒரு எளிய விவசாயியின் மகளாவாள், மற்றும் அச்சிறுமியின் பதினோறாம் வயதிலேயே அவளது தாய் இறந்து போனாள். அவள் அக்குடும்பத்தின் மூத்த குழந்தையாக இருந்ததாலும், அக்குடும்பத் தில் மேலும் இரண்டு இளைய பிள்ளைகள் இருந்ததாலும், அவள் அந்த மற்ற குழந்தைகளுக்கு விரைவிலேயே "தாயாக" ஆனாள். அவள் மூழ்கடிக்கும்*

தனது பொறுப்புக்களில் மிகக் கடினமாய் உழைத்ததினால், உடல் நலம் குன்றிப் போய், சிகிச்சைக்காக அங்குள்ள கிறிஸ்தவ மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். அவள் அந்த மருத்துவமனையில் இருந்த பொழுது, அவளைக் காண வந்த கிறிஸ்தவச் சீமாட்டி ஒருத்தி அவளிடத்தில், "நீ சபைக்குச் செல்வதுண்டா?" என்று கேட்டாள். அதற்கு அவள், "இல்லை, சீமாட்டி" என்று பதில் அளித்தாள். அந்தச் சீமாட்டி, "எப்பொழுதாவது நீ ஞாயிறு வேத பாடசாலைக்குச் சென்றிருக்கின்றாயா?" என்று கேட்டாள். மீண்டும் அந்தச் சிறுமி "இல்லை, சீமாட்டி" என்றுதான் பதில் அளிக்க முடிந்தது. அந்தச் சீமாட்டி, "அப்படியானால் நீ இறக்கும் போது தேவனிடத்தில் என்ன கூறுவாய்?" என்று கேட்டாள். அந்தச் சிறுமி தூயவெள்ளைப் போர்வைக்கடியில் இருந்து தன் கைகளைப் பலவீனமாக வெளியே இழுத்து, "சீமாட்டி, நான் எனது கைகளை அவரிடத்தில் காண்பிப்பேன்" என்று கூறினாள். நிச்சயமாகவே, அவள் ஊழியக்காரியாகத் தான் இருந்தாள். அவளது வாழ்வும் வார்த்தைகளும், ஊழியத்தைப் பற்றிப் பேசுவது மட்டுமல்ல, ஊழியம் செய்வது என்பது எவ்வளவு முக்கியமானது என்று நமக்கு நினைவூட்டுகின்றன.

## முடிவுரை

இயேசு தம்முடைய சீஷர்களின் பாதங்களைக் கழுவி முடித்த பிறகு, மேல் துண்டை எடுத்துப் போட்டார், ஆனால் அவர் ஊழியம் செய்வதை ஒருபோதும் நிறுத்தவில்லை. அடுத்த நாளில் அவர் ரோமாபுரியின் கரடுமுரடான சிலுவை ஒன்றைத் தூக்கிக் கொண்டு விருப்பத்துடனே நமக்காக மரித்தார். மேல் துண்டும் மற்றும் சிலுவையும் இயேசுவின் வாழ்விற்குப் பொருத்தமான அடையாளங்களாய் உள்ளன. இவை யிரண்டுமே தியாகத்தின் அடையாளங்களாக உள்ளன, இவையிரண்டுமே, அழுக்கான எதுவும் சுத்திகரிக்கப்பட முடியும் என்பதை நமக்கு நினைவூட்டு கின்றன, இவையிரண்டுமே, இயேசு தம்முடைய அன்பை நமக்குச் செயல்விளக்கப்படுத்தப் பயன்பட்டன, மற்றும் இவையிரண்டுமே, நமது கர்த்தராகிய இயேசுவைப் பார்த்துப் பின்பற்றும்படி நம்மை அழைக் கின்றன. நீங்கள் உங்கள் மேல் துண்டையும், சிலுவையையும் எடுத்துக் கொண்டு (மாற்கு 8:43) இன்றே இயேசுவைப் பின்பற்றுவீர்களா?

---

குறிப்புகள்

[1]12:1ஐக் காணவும். [2]மத். 20:20-28 மற்றும் மாற்கு 10:35-45 ஆகிய வசனப் பகுதிகள், இயேசுவும் அவரைப் பின்பற்றியவர்களும் எருசலேமுக்குப் பயணம் சென்று கொண்டிருந்த போது, யார் "பெரியவர்" என்பது பற்றிய விவாதம் சீஷர்களின் மத்தியில் நடந்து கொண்டிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

# "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" (14:1–31)

எல்லா மக்களுக்கும் ஆறுதல் பெறுதல் என்பது அவசியமானதாக உள்ளது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர், ஓட்டிஸ் மற்றும் ஐரீன் கேட்வுட் என்ற நீண்ட கால ஊழியக்காரார்கள் எங்களது இல்லத்தில் ஒரு சில இரவுகள் தங்கியிருந்தனர். அவர்கள் தங்களுடன் மிகச் சிறிதளவே ஆங்கிலம் பேசுகின்ற ஒரு ஜெர்மானியப் பெண்மணியை அழைத்து வந்திருந்தனர். அந்தப் பெண்மணி உறங்க வேண்டிய படுக்கையறைக்கு நாங்கள் அவரை அழைத்துச் சென்ற பொழுது, அவர் ஜன்னல் திரைகளை விலக்கி வைக்கும்படி எங்களிடம் கூறினார். பிறகு நாங்கள் ஜன்னலையும் திறந்து வைக்க வேண்டும் என்று அவர் கூறினார். வெளியில் மிகவும் குளிராயிருந்ததால், அது மிகவும் வினோதமானதென்று நாங்கள் நினைத்தோம், ஆனால் அப்பெண்மணி விரும்பியதை நாங்கள் மகிழ்வுடன் செய்தோம். அந்தப் பெண்மணி வழக்கத்திற்கு மாறாக அவ்வித வேண்டுகோள் விடுத்திருந்தது ஏன் என்பதை அடுத்த நாளில் கேட்வுட்(ஸ்) அவர்கள் கூறினார். ஜெர்மனியில் இரண்டாம் உலகப் போரின் முடிவின் போது, அப்பெண்மணி வாழ்ந்த பகுதியில் ஜெர்மன் மற்றும் ரஷ்யப் படைகள் ஒரு தீவிரமான யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. அப்பெண்மணி தனக்குப் புதிதாய்ப் பிறந்த குழந்தையைப் பராமரித்துக் கொண்டு இருள் நிறைந்த, ஜன்னலற்ற அடித்தளத்தில் தங்கியிருக்க, அவ்வீட்டின் மேலாகச் செல்லும்படியாக படையினர் ஒருவர் மீது மற்றொருவர் ஒரு மாதமளவும் பீரங்கிக் குண்டுகளை வீசித் தாக்கிக் கொண்டிருந்தனர். அது ஒரு பயங்கரமான காலமாய் இருந்தது, மற்றும் அந்தப் பெண்மணியும் அவரது குழந்தையுமாகிய இருவருமே ஏறக்குறைய மரணத்திற்கு ஏதுவான வகையில் பட்டினியாய்க் கிடந்தனர். கடைசியில் போர் முடிந்தது, மற்றும் அந்தப் பெண்மணி நிலத்தின் அடியில் இருந்த ஒளிப்பிடத்தில் இருந்து தப்பிக்க முடிந்தது. அந்த நாளில் இருந்து, அப்பெண்மணி இருளான, காற்றோட்டமற்ற, ஜன்னல் இல்லாத அறையில் அகப்பட்டுக் கொள்வதை ஒருக்காலும் விரும்புவதில்லை! அவர் தம் குழந்தையை ஆறுதல் படுத்துவதில் கடினம் நிறைந்த ஒரு மாதத்தைச் செலவிட்டார், மற்றும் அவர் தம்மையே ஆறுதல் படுத்திக் கொள்வதும் அவசியமாயிற்று. நாம் யாவருமே ஆறுதல் படுத்தப்பட வேண்டியது அவசியமானவர்களாயிருக்கிறோம்.

*யோவான் 14ல் இயேசு தம் சீஷர்களுக்கு உரைத்த செய்தியானது, ''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக'' (வ.1அ) என்ற ஆறுதலான வார்த்தைகளுடன் தொடங்கியது. அதிகாரம் 13ன் நிகழச்சிகள் மற்றும் தீர்க்கதரிசினங்கள் ஆகியவற்றிற்குப் பிறகு இந்தச் செய்தி அவசியமான தாயிருந்தது. இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்காக யூதாஸ் கிளம்பிச் சென்றிருந்தான், அதே இரவில் பேதுரு இயேசுவை மறுதலிப்பராய் இருந்தார், மற்றும் சிலுவையானது விரைவில் நெருங்கிக் கொண்டிருந்தது. மனிதத்துவக் கண்ணோக்கில், ஒவ்வொன்றும் "ஒட்டுதலற்றதாய் ஆகிக்" கொண்டிருந்தது. அதிகாரம் 14ன் முடிவுப் பகுதிக்கு அண்மையில் இயேசு, "உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (வ. 27) என்று மீண்டும் இவ்வார்த்தைகளைக் கூறியபோது ''பயப்படாமலும் இருப்பதாக'' என்பதையும் சேர்த்துக் கூறினார். இவ்விரு ''புத்தகத்தை நிறுத்தி வைக்கும் இரு தடைகளுக்கு'' இடையிலுள்ள வசனங்கள், இயேசுவுடன் அவருடைய சீஷர்களும் ஒன்றாய் இணைந்து தங்கள் வாழ்வின் மிகக் கடினமான வேளைகளை எதிர்கொண்டிருந்த நேரத்தில் இயேசுவின் ஆறுதல் தரும் போதனைகளைக் கொண்டுள்ளன. இந்தப் போதனைகள், அப்போஸ்தலர்களின் "விசுவாசப் பயணத்தில்" அவர்கள் முன்னோக்கிச் செல்வதற்கு உதவின, மற்றும் அவை இன்றைய நாட்களில் நமது பயணத்திலும் நமக்கு உதவ முடியும்.*

*"கலங்காதிருப்பதாக" என்ற வார்த்தையை இயேசு பயன்படுத்துகின்ற ஆறுதல் படுத்தும் வழிமுறையானது சிறப்பாகக் கவனிக்கத் தக்கதாக உள்ளது. யோவான் சுவிசேஷத்தில் மற்ற மூன்று இடங்களில், "கலங்குதல்" என்பது இயேசுவை விவரிக்கின்றது:*

> *அவள் [மரியாள்] அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்ட போது, ஆவியிலே கலங்கித் துயரமடைந்து (11:33).*
>
> *இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ? ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன் (12:27).*
>
> *இயேசு இவைகளைச் சொன்ன பின்பு, ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார் (13:21).*

*மனத்துயரான சூழ்நிலையில் கலங்குதல் என்பது இயல்பான மற்றும் எதிர்பார்க்கப்படும் பதில்செயலாக உள்ளது. நமது வாழ்வில் விஷயங்கள் தவறாகின்ற பொழுது நாம் கலக்கம் அடைகின்றோம். கலக்கமுற்ற நாள் என்று ஒன்றிருக்குமென்றால், அது இயேசு சிலுவையில் அறையப்பட்ட நாளாய்த்தான் இருக்கும். இயேசு தம் மீது தமது சீஷர்கள் நம்பிக்கை*

வைக்கும்படி அழைத்தும் (14:1), மற்றும் அவர்களுக்குச் சில சிறப்பான ஆதார மூலங்களை விட்டு வைத்தும் அவர்களை இந்த நிகழ்ச்சிக்கு ஆயத்தப்படுத்தினார்.

## தரிசனத்திற்கு ஒரு இல்லம் (14:2, 3)

இயேசு இந்த வார்த்தைகளைக் கூறிய சற்று நேரத்திற்குப் பிறகு, அவரைக் கைது செய்வதற்காக அனுப்பப்பட்டிருந்த படை வீரர்களால் சீஷர்களிடமிருந்து அப்புறப்படுத்தப்பட்டார் (8:1-12). இது நடந்த பொழுது, சீஷர்கள் தனித்து விடப்பட்டனர். இதனால் அவர்கள் மனநிலை குலைந்தார்கள். கைவிடப்படுதல் என்பது நமது சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே, நமது மாபெரும் பயங்களில் ஒன்றாக உள்ளது. இந்த பயத்தை விட்டு நாம் ஒருபொழுதும் மீளவில்லை என்பது வினோத மானதாகவே உள்ளது.

முனைவர் ஜேம்ஸ் டாப்ஸன் அவர்கள், "குடும்பத்தின் மீது கவனம் செலுத்துதல்" என்ற தனது வானொலி நிகழ்ச்சியில் ஒருமுறை தோன்றிய ஒரு சிறப்பு விருந்தினர் பற்றிக் கூறினார். அந்த விருந்தினர், இரண்டாம் உலகப் போரின் போது நாஜிகளின் கொலை முகாம் ஒன்றில் ஆண்டுகளைக் கழித்த ஒரு இரஷ்யப் பெண்மணியாவார். டாப்ஸனின் (வானொலி) நிகழ்ச்சியில் அப்பெண்மணி பங்கேற்ற பொழுது, திரளான மக்கள் ஒரு சேரக் கொல்லப்பட்டதைத் தான் எவ்விதத்தில் கண்டேன் என்றும் அந்த ஆண்டுகளில் தான் கொண்டிருந்த நம்பிக்கை யாவற்றையும் இழந்த நிலையை அனுபவித்திருந்தது பற்றியும் அவர் கூறினார். பின்பு அந்தப் பெண்மணி, யுத்தத்திற்குப் பிறகு, தான் அமெரிக்க நாட்டிற்கு வந்து சேர்ந்த விதம் பற்றியும், அங்கு திருமணம் முடித்துக் கொண்டது பற்றியும் கூறினார். ஆனால் பரிதாபகரமாக அப்பெண்மணியின் கணவர் அவரிடத்தில் உண்மையற்றவராய் இருந்து, பிற்பாடு அப்பெண்மணியை அவர் கை விட்டு விட்டார். டாப்ஸன் அப்பெண்மணியுடன் உரையாடிக் கொண்டிருக்கை யில், அப்பெண்மணி, தனது திருமண வாழ்வில் தான் புறக்கணிக்கப்பட்டு கைவிடப்பட்டது, ஜெர்மனியின் மரண முகாமில் தான் இருந்த ஆண்டுகளைக் காட்டிலும் மிகவும் அதிக வேதனை நிறைந்ததாக இருப்பதாகக் கூறினார்.

தனிமையில் விடப்படுதல் என்பது எவ்வளவு பயங்கரமானது என்று அறிந்த இயேசு, அருகில் நெருங்கிக் கொண்டிருந்த, தாம் இல்லாத சூழ்நிலை குறித்துச் சிந்திக்கப் புதிய வழியொன்றைத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார். அதைக் கைவிடப்பட்டிருத்தல் என்று கண்ணோக்குவதற்கு மாறாக, இயேசு தம்முடைய பிதாவின் இல்லத்தில் அவர்களுக்கு ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணும்படியாக அவர்களை விட்டுச் செல்லும் வேளையென்பதாக அதைக் காண வேண்டும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது (14:2, 3). உடல் ரீதியாக இயேசு இல்லாதது பற்றிச் சிந்திப்பதற்கு இது எவ்வளவு உன்னதமான வழிமுறையாக உள்ளது!

இன்றைய நாட்களின் பிரச்சனைகள், நாம் தேவனால் கைவிடப்பட்டு

புறக்கணிக்கப்பட்டோம் என்று நம்புவதற்கு காரணமாகின்ற பொழுது, நாம் இயேசுவின் சீஷர்கள் அவர் சிலுவையில் அறையப்பட்ட போது, தாங்கள் கைவிடப்பட்டதாக உணர்ந்த வேளையில் அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தது என்ன என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு நாளிலே நாம் தேவனுடன் என்றென்றைக்கும் அவருடைய இல்லத்தில் இருக்கும்படியாக இயேசு ஒரிடத்தை நமக்காக ஆயத்தம் செய்து கொண்டுள்ளார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

## ஏற்றுக் கொள்வதற்கு ஒரு வழிகாட்டுதல் *(14:4-11)*

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஒரு இடத்தை ஆயத்தம் செய்யச் செல்வதாகக் கூறிய பிறகு, தோமா, "ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம்?" (14:5) என்று கூறினார். அதற்கு இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான்" (14:6) என்று பதில் அளித்தார். இன்னொரு சீஷரான பிலிப்பு, "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும்'' (14:8) என்று கூறினார். இயேசு, அநேகமாக தமது இருதயத்தில் ஒரு பெருமூச்சுடன், ''என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; …'' (14:9ஆ) என்று பதிலுரைத்தார். அவர்களிடத்தில் குழப்பம் நிலவினாலும், இயேசு தம்முடன் அவர்கள் சிலுவையை எதிர்கொள்ளத் தயாராகுகையில் தங்களின் கவனம் முழுவதையும் தம் மீதே வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாம் தேவனிடத்தில் நெருங்க விரும்புகின்றோமா? நாம் அவரிடத்தில் நெருங்கியிருக்க விரும்புகின்றோமா? நாம் அவரிடத்தில் எவ்விதம் வர முடியும்? இயேசு தாம் ஒருவரே "பிதாவினிடத்திற்குச் சென்று சேரும் வழியாக'' இருப்பதாக உரைத்தார். சிலுவைக்கு முந்திய இரவில் அது உண்மையாய் இருந்தது, இன்றும் கூட அதுவே உண்மையாக இருக்கின்றது.

மேக்ஸ் லுக்கேடோ அவர்கள், குழந்தைகளுக்கான தமது புத்தக மொன்றில்,[1] தனது மகளைத் திருமணம் செய்து கொண்டு அடுத்து அரசராவது யார் என்பதைத் தீர்மானிக்க ஒரு போட்டியை நடத்திய ஒரு அரசரைப் பற்றிய உற்சாகமிக்க சிறுகதையொன்றைக் கூறினார். போட்டியாளர்கள் மூன்று பேர் வீரர்களாய் இருந்தார்கள்: கோர்லிஸில், இவர் பலம் வாய்ந்தவர்; ஆலோன், இவர் துடிப்பு மிக்கவர்; மற்றும் கேஸ்ஸிடோன், இவர் ஞானம் மிக்கவர். இவர்கள் ஹோப்நாட்ஸ் என்ற தொல்லை கொடுக்கும் மக்கள் குடியிருந்த, நஞ்சுச் செடிகள் நிறைந்த காட்டுப் பகுதியொன்றைக் கடந்து வர வேண்டும் என்பதே அவர்களுக்கு விதிக்கப்பட்ட பந்தயமாக இருந்தது. அந்தக் காட்டின் மறுபுறத்தில் இருந்த கோட்டை ஒன்றிற்கு முதலில் வந்து சேரும் வீரன்தான் இளவரசியைத் திருமணம் செய்து கொள்வார் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டதாயிருந்தது. கோட்டைச் சுவர்களில் இருந்து ஒவ்வொரு நாளிலும் மூன்று முறை அரசர்

தனது புல்லாங்குழலில் ஒரு தனிப்பட்ட ராகத்தை இசைப்பதன் மூலம் போட்டியாளர்களை வழி நடத்துவார். இருப்பினும், வீரர்களின் வழியில் அவர்களை வழி நடத்துவதற்காக அரசர் அப்பாடலை இசைக்கையில், பயணிகளைத் தவறாக வழிநடத்துவதற்காக ஹோப்நாட்ஸ்கள், அரசரின் பாடலைப் போன்றே தாங்களும் இசைப்பார்கள். ஒவ்வொரு வீரரும் தனது வழியில் தனக்கு உதவுவதற்காக, அவருடன் காட்டினூடாகச் செல்வதற்கு ஒரு துணையாளரை அழைத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

நஞ்சுச் செடிகள் நிறைந்த அந்தக் காட்டில் தைரியமான மூன்று வீரர்களும் நுழைந்து, கோட்டையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந் தனர். கடைசியில், உற்றுக் கவனிப்பவரான கேஸ்ஸிடோன் என்பவர் முதன்முதலாக அரசரிடம் செல்லும் வழியைக் கண்டடைந்தார். அதை அவர் எவ்வாறு செய்தார்? அவர் தனது பயணத் துணையாளராக அரசரின் மகனான இளவரசரைத் தேர்ந்து கொண்டார். மகனுக்குத் தனது தந்தையின் பாடல் நன்கு தெரியும், மற்றும் அதை அவர் தாமே மிகச் சரியாக இசைக்கக் கூடியவராகவும் இருந்தார். அவர்கள் பயணம் செல்லுகையில், கேஸ்ஸி டோன் மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்தார். தாம் கேட்ட எல்லா வற்றையும், இளவரசனின் பாடலுடன் ஒப்பிட்டுப் பார்த்ததின் மூலம் அவரால் ஹோப்நாட்ஸ்களின் போலி இசைகளையும் மற்றும் அரசரின் உண்மையான பாடலையும் பிரித்துணர முடிந்தது.

தமது சீஷர்களை விட்டு, தாம் எடுக்கப்படும் பொழுது அவர்கள் குழப்பமடைவார்கள், பழக்கமற்றுப் போவார்கள் மற்றும் உற்சாகமிழந்து போவார்கள் என்பதை அறிந்த இயேசு, அவர்களின் சோதனை வேளையில் கண்ணோக்குவதற்கு ஒரு வழிகாட்டுதலைக் கொடுத்தார். அவர்கள் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க வேண்டும், ஏனென்றால் பிதாவினிடத்தில் அவர்களை வழிநடத்திச் செல்லுவதற்கு அவர் ஒருவரே நம்பத் தக்க ஒரே வழிகாட்டியாக இருந்தார். இன்றைய நாட்களில் இயேசுவின் செய்தியும் இதே போன்றுதான் நமக்குள்ளது. நாம் அவரைக் கண்ணோக்கும்படியாகவும், நமது துன்ப வேளைகளில் அவருக்குப் பின் செல்லும்படியாகவும் அவர் நம்மை அழைக்கின்றார். அவர், "என்னைப் பின்பற்றுங்கள்! புயலினூடாகவும், உங்களால் காண முடியாத போதும், கருத்தறிவுள்ளதாக இல்லாதிருந்த போதும், நீங்கள் ஆழமான சந்தேகம் கொண்டிருக்கும் போதும் - உங்கள் இருள் மிகுந்த வேளைகளிலும் கூட - என்னைப் பின்பற்றுங்கள். அப்பொழுது நீங்கள் பிதாவினிடம் வந்து சேர்ந்துள்ளதைக் காண்பீர்கள்!" என்றே சாராம்சமாகக் கூறுகின்றார்.

## அனுபவிப்பதற்கு ஒரு பிரசன்னம் (14:12-14)

நள்ளிரவு வேளையில் தனிமையில் உறங்கப் பயந்த காரணத்தினால் தங்கள் பெற்றோரிடம் வந்த குழந்தைகளைப் பற்றிய கதைகள் எனக்கு மிகவும் விருப்பமானவைகளாகும். தேவன் அவளைக் கவனித்துக் கொண்டிருப்பதால் படுக்கைக்குத் திரும்பிச் சென்று அமைதியாய்த் தூங்கும்படி ஒரு சிறுமியிடத்தில் அவளது பெற்றோரால் கூறப்பட்டது.

ஆறுதலின் அந்த வார்த்தைகளினால் ஈர்க்கப்படாத அச்சிறுமி, ‘‘அது உண்மையாய் இருக்கலாம், ஆனால் இன்றிரவு என்னை அணைத்துக் கொள்ள யாராவது எனக்குத் தேவை!’’ என்று பதில் அளித்தாள். இன்னொரு சிறுவன் தான் பயம் அடைந்ததாகக் கூறிக் கொண்டு தன் பெற்றோரிடத்தில் வந்தான். அவனது அறையில் தேவன் இருப்பதால் அவன் பயமடையத் தேவையில்லை என்று கூறி அவனைச் சமாதானப்படுத்த அவனது தந்தை முயற்சி செய்தார். இந்தக் குழந்தைக்குக் கூட அதிகமான விளக்கம் தேவைப்பட்டது. அவன் தன் தந்தையிடம், “அப்படியானால் நீங்கள் ஏன் தேவனுடன் தூங்கச் சென்று, என்னை என் அம்மாவுடன் படுத்துக் கொள்ள அனுமதிக்கக் கூடாது?” என்று ஆலோசனை தெரிவித்தான்.

கலக்கமடைந்த தம் சீஷர்களுக்கு, அவர்களை ஆறுதல் படுத்துவதற்காக அவர்களின் வாழ்நாள் முழுவதிலும் தொடர்ந்து அவர்களிடம் பிரசன்னமாயிருப்பதாக அளித்த வாக்குறுதியே இயேசுவின் அளிப்பாகிய மூன்றாவது ஆதார மூலமாக உள்ளது. தம்முடைய நாமத்தில் கேட்கின்ற எதையும் அவர்களுக்கு அவர் செய்வாரென்றும் ஒரு நாளில் அவர்கள் தாம் செய்யக் கண்டிருந்தவற்றைக் காட்டிலும் பெரிய செயல்களைச் செய்வார்கள் என்றும் அவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் செய்தார் (14:12-14)! உடல்ரீதியாக அவர்களுடன் அவர் இல்லாமை என்பது அவர்களை ஆறுதல் படுத்தவும் அவர்களுக்கு உதவுவதற்குமான அவருடைய வல்லமையைக் குறைத்து விடாது. அவருடைய வாக்குத் தத்தமானது அவர்கள் தங்களின் காரிருளான வேளைகளிலும் நம்பிக்கை வைக்கக் கூடியதாய் இருந்தது.

## எதிர்பார்ப்பதற்கு ஒரு தேற்றரவாளர் (14:16-18, 25, 26)

இயேசு தம் சீஷர்களிடமிருந்து கொஞ்சக் காலத்திற்குப் “போய் விடப் போவதாக’’ அவர்களிடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேளைகளில் விளக்கப்படுத்தினார்.[2] இருப்பினும், அவரது கிளம்புதலானது அவர்களைத் திக்கற்றவர்களாய் விடாது என்று அவர்களுக்கு அவர் அறிவித்தார் (14:18). அவரது இடத்தில் இருப்பதற்கு அவர் ஒரு “தேற்றரவாளனை” அவர்களிடத் திற்கு அனுப்புவார் (14:16, 26).[3] “தேற்றரவாளன்” என்பதற்கான கிரேக்க வார்த்தையானது “கூட வருகின்ற ஒருவர்” என்று அர்த்தப்படுகின்றது. நீதிமன்றக் காட்சியில், இது ஒருவருக்காகப் பேசுகின்ற வழக்கறிஞரைக் குறிக்கின்றது. மற்ற காட்சிகளில், இது தேவையின் காலத்தில் உதவுகின்ற எவரொருவரையும் அர்த்தப்படுத்துகின்றது. இவை யாவும், இயேசு தாம் சென்று, பரிசுத்த ஆவியானவரைத் (14:26) தம்முடைய பின்பற்றாளர் களிடத்திற்கு அனுப்பியதை விவரிக்கின்றன.

இயேசுவைப் போன்றே பரிசுத்த ஆவியானவரும் தெய்வீகமானவராக இருக்கின்றார், மற்றும் அவரைப் பற்றி “அது” என்றல்ல, மாறாக, “அவர்” என்றே பேசப்பட வேண்டும். அவர் இன்று சபையிலும் (1 கொரி. 3:16) மற்றும் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் (1 கொரி. 6:19)

வாழ்கின்றார். அவரே நம்மைக் கிறிஸ்துவின் சாயலில் அதிகம் அதிகமாய் மாற்றுகின்ற (2 கொரி. 3:18) மற்றும் நமது வாழ்வில் தேவனுக்கென்று கனி கொடுக்கின்ற (கலா. 5:22, 23) வல்லமையாக இருக்கின்றார். இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்திற்கு உண்மையான வகையில் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மக்களின் வாழ்வில் ஆறுதலின் மாபெரும் ஆதார மூலமாகவும் மற்றும் உதவியாகவும் இருக்கின்றார். ஆவியானவர் நம்முடனே, நம் மத்தியில் மற்றும் நமக்குள் இருக்கின்ற காரணத்தினால், இயேசு இந்த பூமியில் உடல்ரீதியாகப் பிரசன்னமாகியிராத இவ்வேளையிலும் கூட நாம் ஆவிக்குரிய வகையில் "திக்கற்றவர்களாகி" விடுவதில்லை.

செஸ்ட்டர்ட்டன் அவர்களும், ஒரு பத்திரிகை நிருபரும் ஒன்றாக இலண்டனின் தெரு ஒன்றில் நின்று கொண்டிருக்கையில், அவரிடத்தில் நிருபர், "ஐயா, நீங்கள் சமீபத்தில் கிறிஸ்தவரானீர்கள் என்று கேள்விப் பட்டேன். உங்களிடத்தில் நான் ஒரு கேள்வி கேட்கலாமா?" என்றார். செஸ்டர்ட்டன், "நிச்சயமாக" என்று பதில் அளித்தார். அம்மனிதர், "உயிர்த்த கிறிஸ்து திடீரென்று இந்தக் கணத்தில் தோன்றி, உங்கள் பின்னால் நின்றால், நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார். "அவர் அவ்வாறு நின்று கொண்டு தான் இருக்கின்றார்!" என்று செஸ்ட்டர்ன் பதில் அளித்தார்.

இயேசு இன்றைய நாட்களில் பரிசுத்த ஆவியானவர் என்ற நபருக் குள்ளாக நம்முடன் இருக்கின்றார். நாம் தனிமையாய் இருக்கும்படி விட்டு விடப்பட்டிருப்பதில்லை; நாம் ஆவிக்குரிய வகையில் திக்கற்றவர்களல்ல. முதல் சீஷர்களைப் போலவே நமக்கும் இது நமது உலகம் கலங்கி நிற்கும் நிலையில் கூட, மாபெரும் ஆறுதலின் ஆதார மூலமாக உள்ளது.

## கீழ்ப்படிவதற்கு ஒரு கட்டளை
## (14:15, 20, 21, 23, 24, 31)

இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த ஆறுதலின் இன்னொரு ஆதார மூலமாகத் திகழ்வது கட்டளைகளின் ஒரு வரிசையாய் இருந்தது. கட்டளைகள் ஆறுதல் தருபவைகளாய் இருப்பதாக நாம் நினையாதிருப் பினும், அவை தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன என்பதைப் பற்றிய புரிந்து கொள்ளுதலை நமக்குத் தருகின்றன. அதை அறிவது நமக்குத் தைரியம் அளிக்கின்றது.

அதிகாரம் 14ல், இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் தம்முடைய கட்டளைகளைக் காத்துக் கொண்டு, அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கூறினார். இப்படிப்பட்ட மொழிநடையானது அன்பின் எதிர்மறையாக உள்ளது என்று சிலர் நினைக்கின்றனர். இருப்பினும் இயேசு, கீழ்ப்படிதலையும் அன்பையும் ஒன்றிலிருந்து ஒன்று வித்தியாசமானதாக ஒருக்காலும் கண்டதில்லை. அதற்குப் பதிலாக அவர், "என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு, அவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்; ..." (14:21) என்று

கூறினார். தேவனுக்காக அன்பு என்பது அவருக்குக் கீழ்ப்படிதலில் வெளிப்படுத்தப்படுகின்றது.

இயேசுவைப் பொறுத்தமட்டில் கீழ்ப்படிதல் என்பது சிலுவையில் மரித்தல் என்று அர்த்தப்பட்டது (14:31). அதிகாரம் 13 முதல் 19 வரையில் பதியப்பட்டுள்ள நீண்ட மற்றும் சோதனைமிக்க இரவு வேளையைத் தொடர்ந்து, இயேசு கைது செய்யப்பட்டார். அடுத்த நாளில் அவர் உலகின் பாவங்களுக்காகச் சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டார். இதைச் செய்ததில் அவர் தம்முடைய வார்த்தைகளினால் மட்டுமின்றி தமது முன்னு தாரணத்தினாலும், கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தைத் தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தார். கீழ்ப்படிதல் என்பது தேவனுக்கு நமது அன்பை வெளிப்படுத்துகின்ற வழிமுறையாக உள்ளது.

## முடிவுரை

இயேசு தம்முடைய உரையைத் தொடருகையில், "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப் படாமலும் இருப்பதாக" (14:27) என்று கூறினார். இந்த அதிகாரமானது "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்ற அழைப்புடன் தொடங்கி, சமாதானத்தின் வாக்குத்தத்தத்துடன் முடிந்தது. சமாதானம் என்பது நாம் யாவரும் விரும்புகின்றதாகவும், அதை விளக்கப்படுத்துவதில் பெரும்பாலும் இடர்ப்பாடு கொள்ளச் செய்வதாகவும் இருக்கின்றது. மிகவும் அடிக்கடி நாம் சமாதானத்தை எதிர்மறைச் சொற்றொடர்களாலேயே விவரிக்கின் றோம்; சமாதானம் என்பது, யுத்தம், துன்புறுதல், வேதனை மற்றும் இழப்பு ஆகியவை இல்லாமை என்று நாம் நினைக்கின்றோம். இருப்பினும் இயேசு, சமாதானத்தை மிகவும் நேர்மறையான சொற்றொடர்களில் விவரித்தார்; இது தேவனுடைய பிரசன்னமாய் இருக்கின்றது. சமாதானத்தை நீங்கள் எவ்வகையில் நினைக்கின்றீர்கள்?

இயேசு அளிக்கின்ற சமாதானமானது திருடரால் திருடிச் செல்ல முடியாத, கொலையாளியால் கொல்ல முடியாத, அல்லது துன்பமான செய்தியைத் தாங்கி வரும் நள்ளிரவுத் தொலைபேசி அழைப்பொன்றினால் நொறுக்க முடியாத சமாதானமாக உள்ளது. கிறிஸ்துவின் சமாதானம் என்பது தேவனுடைய பிரசன்னமாய் உள்ளது. அவருடைய சமாதானம் என்பது நாம் நீதிமொழிகள் 31:25ன் ''குணசாலியான ஸ்திரீயை''ப் போன்றவர்களாய் இருக்கக் காரணமாகின்றது: "அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது; வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிறாள்." நாமும் கூட, தேவன் நம்முடன் இருக்கின்றார் என்பதை அறிந்து, நிச்சயமற்ற அந்த எதிர்காலத்தைப் பற்றி மகிழ முடியும்.

ஆறுதலின் இவ்வார்த்தைகளை இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அளித்த வேளையில், அவர்கள் அவருடைய மரணத்தைக் குறித்த பெரும் குழப்பமும் ஏக்கமும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தார்கள்.

இன்று நீங்களும் நானும் … எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். நல்லது, நாம் எதை எதிர்கொள்ள வேண்டும் என்று அறியாதிருக்கின்றோம், அல்லவா? வாழ்வின் நிச்சயமற்ற பாதையில் நாம் பயணம் செய்கையில், நாமும் நம்முடைய “விசுவாசப் பயணத்தில்” முன்னேறிச் செல்வோம், இப்படிச் செய்யும் போது, “எதிர்காலத்தைப் பற்றி புன்னகைக்க முடியும்.” இயேசு - தமது முதல் சீஷர்களுக்குச் செய்தது போல - எது வந்தாலும் அதற்கு நம்மை ஆயத்தம் செய்துள்ளார் என்பது அறிந்து, நாமும் கூட நமது “விசுவாசப் பயணத்தை” மேற்கொள்ளக் கடவோம்.

---

குறிப்புகள்

[1]Max Lucado, *Tell Me the Secrets* (Wheaton, Ill.: Crossway Books, 1993), 28-30. [2]*13:33, 36; 14:2* ஆகிய வசனங்களைக் காணவும். [3]NASVயில் இது “Helper” என்றுள்ளது. இது “counselor” (NIV), “comforter” (KJV), அல்லது “advocate” (NRSV) என்றும் கூட மொழிபெயர்க்கப்பட முடியும்.

# “நானே திராட்சச்செடி”
# (15:1–16:4)

நார்மன் ராக்வெல் என்பவரின் சித்திரத்தினுடைய ஒரு அச்சுப் பிரதியானது எனது படிப்பறைச் சுவரில் தொங்குகின்றது. இது, நாம் யாவரும் ஏதாவது ஒரு வழியில் அனுபவித்துள்ள ஒரு கதையைக் கூறுகின்றது: வீட்டை விட்டுச் செல்லுதல் பற்றிய கதை. படத்தில், பழைய, பழுதான குடும்ப வண்டியொன்றில் மகனுக்குப் பக்கத்தில் தந்தை அமர்ந்துள்ளார், அவ்விருவரும் அம்மகனைக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லும் பேருந்து ஒன்றிற்காகக் காத்துள்ளனர். தந்தை விவசாயியின் வேலை நேர உடையை அணிந்துள்ளார், மகன் சூட்டும் டையும் அணிந்துள்ளான். தந்தை வயது முதிர்ந்தவராக, தளர்வுற்றவராக மற்றும் கவலைமிக்கவராகக் காணப்படுகின்றார். மகன் இளமையானவனாக, சக்திமிக்கவனாக, உலகைக் காணத் தயாரானவனாகக் காணப்படுகின்றான். படத்தில் கவலையின் சாயல் ஒன்று உள்ளது; இது ஒரு “பிரிவு - உபசாரம்” என்று அறிந்து, அந்த இளம் மனிதனின் காலில் முறையிடும் வகையில் தலையை வைத்திருந்த குடும்பத்தின் நாய்க்காகவும், தந்தைக்காகவும் இதைக் காணும் ஒருவர் வருத்தம் அடைவார். சில வேளைகளில் நான் இந்தச் சித்திரத்தைக் காணும் பொழுது, என்னை அந்த இளம் மனிதனாய் அடையாளப்படுத்திக் கொள்ளுகின்றேன். இந்த நாட்களிலோ, மிகவும் அடிக்கடி நான் என்னை அந்தத் தந்தையாய் அடையாளப்படுத்திக் கொள்ளுகின்றேன். சில வேளைகளில் நான் என்னை அந்த நாயாகக்கூட அடையாளப்படுத்திக் கொள்ளுகின்றேன்!

ராக்வெல்லின் சித்திரமானது கேட்கும் கேள்விகளில் ஒன்றாகக் காணப்படுவது, “அந்தத் தந்தை என்னத்தைச் சிந்திக்கின்றார்?” என்பதாகும். பேருந்து வருகின்ற பொழுது, இருவரும் எழுந்து நிற்பார்கள், தந்தை, “இப்பொழுது நீ எச்சரிக்கையாய் இருக்க வேண்டும், நீ கேட்கிறாயா?” என்றோ அல்லது “மகனே, உன் அம்மாவுக்கு கடிதம் எழுது. அது அவளுக்கு மிகுந்த ஆறுதலாய் இருக்கும்” என்றோ கூறுவார் என்பதாக நான் கற்பனை செய்கின்றேன். இருப்பினும், அவரது இருதய ஆழத்தில் உள்ள உணர்வுகளின் மீது நான் ஆர்வம் கொள்வதைக்காட்டிலும் அதிகமாக அவருடைய வார்த்தைகளில் நான் ஆர்வம் கொள்வதில்லை. அவர் தம் மகன் முன்பாக வரக் காத்திருந்தது என்ன என்று வியந்திருக்கலாம் என்று நான் கற்பனை செய்கின்றேன். அவன் தயாராக இருக்கின்றானா? அவன் நல்ல நண்பர்களைப் பெறுவானா? இருதய வலியை எவ்விதம் கையாளுவது என்று அவன் அறிவானா? வெற்றியினால் அவன் மாற்றப்படுவானா?

இவ்வுலகத்தில் தேவைப்படும் எல்லாவற்றையும் அவனது தந்தை அவனுக்குக் கற்பித்திருக்கின்றாரா?

பேருந்து நிறுத்தத்தில் தந்தையும் மகனும் இருப்பது போன்ற ராக்வெல்லின் சித்திரத்தில் உள்ள உருவகமானது நாம் நமது பாடத்தைப் படிப்பதற்கும் நம்மை நன்கு தயார் செய்கின்றது. யோவான் 13 முதல் 17 வரையுள்ள அதிகாரங்கள் சிலுவைக்கு முன்பு இயேசுவின் கடைசி நேரங்களில் நடந்தவற்றைப் பதிவு செய்கின்றன. அதிகாரம் 13ல் அவர் சீஷர்களின் பாதங்களைக் கழுவினார், மற்றும் அதிகாரம் 14ல் அவர்களின் பயங்களை அவர் அமைதிப்படுத்தினார். 15:1-16:4 என்ற இந்த வேதப் பாடப் பகுதியில், சீஷர்களை எதிர்கொள்ளவிருந்த கலக்கத்திற்காக அவர்களை அவர் எவ்விதத்தில் தயார்ப்படுத்தினார் என்று நாம் காண்போம். அவர் தாம் இல்லாமல் அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருந்த மூன்று பிரச்சனைகளை முன் அனுமானித்ததன் மூலம் இதைச் செய்தார்.

## பிரச்சனை ஒன்று: மனிதர்களிடமிருந்து துன்புறுத்துதல் (15:18-16:4)

யாரேனும் ஒருவர் உங்கள் மேல் விருப்பமில்லாமை அல்லது வெறுப்புக்கூடக் கொண்டவராக இருப்பதையும் அதற்கான காரணம் என்னவென்று நீங்கள் அறியாமலும் இருந்ததுண்டா? எனது சகோதரிகளில் ஒருத்தி கல்லூரியில் இவ்வித அனுபவத்தைப் பெற்றிருந்தாள். சக மாணவர்களில் ஒருவர் அவளை வெறுப்பது போன்று பார்ப்பதை அவள் கவனிக்கத் தொடங்கினாள், ஆனால் அந்த நபர் யாரென்று கூட அவள் அறிந்ததில்லை. சில வேளைகளில் நடைபாதையில் அவர்கள் ஒருவரை ஒருவர் கடந்து செல்வதுண்டு, அப்பொழுது எனது சகோதரி புன்முறுவல் செய்து அமைதியாக/சாந்தமாக “ஹலோ” என்று கூறுவாள். இருப்பினும், அவர் வெறுப்புடன் நோக்கி விட்டு, சலிப்புடன் தலையைச் சாய்த்துக் கொள்வார். இந்த வினோதமான சூழ்நிலை பற்றி அவள் தன் நண்பர்களிடம் கூறினாள், ஆனால் அது அவளுடைய கற்பனையாய் இருக்கும் என்று அவர்கள் நினைத்தனர்.

ஒரு நாள் இன்னொரு ஜோடியும் அவர்களின் நண்பராய் இருந்த வாலிபர் ஒருவரும் எனது சகோதரியை ஒரு “சாதாரண சந்திப்பிற்காக” அழைத்தனர். அவள் ஒப்புக் கொண்டாள். சந்திப்பின் இரவு வந்த பொழுது, அவளுடன் சந்திக்க விருந்த அந்த இளைஞன் வேறு யாருமல்ல, அவளை வெறுப்புடன் நோக்கிய அந்த இளைஞன் தான் என்பது அறியப்பட்டது! அன்று மாலை அது ஒரு விபத்துப் போன்றிருந்தது! அவன் அவளை வெறுப்பது போன்று தோன்றியது மட்டுமின்றி, அவன் உண்மையில் அதையே செய்தான். அவன் சாந்தமாகவோ அல்லது இரக்கமாகவோ எதையும் பேசவில்லை, மற்றும் அந்த சந்திப்பை மகிழ்வுடன் அனுபவிப்பதற்குக்கூட அவன் எதையும் செய்வதற்கு முயற்சிக்கவில்லை. இவை எல்லாவற்றினாலும் எனது சகோதரி பெரும் திகைப்புக்குள்ளானாள். இந்த நபரை மனம் புண்படும்படியாகத் தான் எதையும் செய்திருந்ததாக அவள்

அறியவில்லை, இருப்பினும் இவன் அவளை தனது மோசமான எதிரியைப் போல நடத்தினான். அந்த இளைஞன் பள்ளிக்குச் செல்லப் புறப்படுமுன் அவனது சொந்த ஊரில் அவனுடைய இருதயத்தை உடையச் செய்த அவனுடைய பழைய பெண் தோழியைப் போன்று என் சகோதரி இருந்ததாக சில காலத்திற்குப்பின் அவள் அறிந்து கொண்டாள்!

நமது வேதபாடப்பகுதியில், இயேசு தம்முடைய சீஷர்களுக்கு எதிர் வர இருந்த கடினமான வேளைகளைப் பற்றி எச்சரிக்கை செய்தார். விரைவிலேயே அவர்கள் எனது சகோதரியைப் போலவே பெரும் திகைப்புக்கு ஆளாக இருந்தனர்! இயேசு அவர்களை இந்த வேதனை நிறைந்த அனுபவத்திற்குப் பல வழிகளில் தயார் செய்தார். முதலாவதாக அவர், உலகம் அவர்களை வெறுக்கும் பொழுது முதலில் அது தம்மை வெறுத்தது என்பதை அவர்கள் நினைவுகூர வேண்டும் என்று கூறினார் (15:18). அவர்கள் தம்முடைய சீஷர்களாய் இருக்கும் காரணத்தினால், அவர் பெற்ற அதே வகையான உபசரணையைத்தான் அவர்களும் எதிர்பார்க்க முடியும் (15:20). உலகம் அவரைக் கவனித்திருந்தால், அவர்களையும் கவனிக்கும். இருப்பினும், உலகமானது பொதுவாக அவரை உபத்திரப் படுத்தியிருந்ததால், அதையே அவர்களுக்கும் செய்யும் என்று அவர்கள் எதிர்பார்க்க முடியும்.

உலகத்தினால் உண்டாகும் உபத்திரவம் “தனிப்பட்டது” அல்ல ஆனால் அவர்கள் இயேசுவின் பின்பற்றாளர்களாய் இருப்பதால் அது அவர்களுக்கு வருவதாயிருக்கும் என்று இயேசு கூறினார் (15:21). அவரையும் அவரது சீஷர்களையும் வெறுத்தவர்கள் பிதாவையும் வெறுத்தார்கள் என்பதைத் தம்முடைய சீஷர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார் (15:23). அணுகிக் கொண்டிருந்த உபத்திரவமானது அறிவுக்கேற்ற கருத்தெதையும் ஏற்படுத்தாது என்பதே அதைப் பற்றிய அதிகம் மனக்கவலைக்குரிய விஷயமாகும் என்று இயேசு அறிந்தார்! அது “காரணம் இல்லாததாக” இருக்கும் என்பதை அவர் முன்னோக்கினார் (15:25). அது வருவதற்கு முன்பாகவே அதைப் பற்றி அறிவது என்பது சீஷர்கள் அதை இன்னும் தாங்கிக் கொள்ளக் கூடியவர்களாக்கும் என்று அவர் நம்பிக்கையாய் இருந்தார்.

சீஷர்கள் ஜெப ஆலயங்களில் இருந்து வெளியேற்றப்படுவதையும் எதிர்பார்க்க முடிந்திருந்தது.[1] இயேசு அவர்களை எச்சரித்தவைகள் யாவற்றிலும், பின்வரும் கூற்றே மிகுந்த வேதனை நிறைந்ததாக இருக்கலாம்: “உங்களைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்” (16:2). இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய மாலையில் அவர்களுக்கு இவ்விதமான பெரும் மனக்கவலை ஏற்படுத்தும் செய்தியை ஏன் கொடுத்தார்? துன்பவேளை வரும்பொழுது அவர்கள் இடறி விழுந்து விடாதபடி அவர்களைத் தயார் செய்வதே அவருடைய நோக்கமாய் இருந்தது(16:1). இப்படிப்பட்ட துன்பங்களைப்பற்றி இயேசு எச்சரித் திருந்தார் என்பதை அவர்கள் நினைவுகூர்ந்தால், அவர்கள் உள்ளம் கலங்க மாட்டார்கள் (16:4). அவர்களை உற்சாகப்படுத்தவும் அறிவுறுத்தவும்

இயேசு அவர்களுடன் இருந்த வேளையில், அவர்களுக்கு இவ்வித எச்சரிக்கைகள் எதுவும் தேவைப்படவில்லை. அவர்களை விட்டுச் செல்ல அவர் தயாரான பொழுது, அவர்களின் ஆவிக்குரிய உயிர் வாழ்வுக்கு இந்த போதனைகள் அவசியமானவைகளாய் இருந்தன.

இன்றைய நாட்களில் இயேசுவைப் பின்பற்றுபவர்கள் என்ற வகையில் நமது சூழ்நிலையானது வித்தியாசப்பட்டதாக இருந்தாலும், நாமும் கூட நாம் எதிர்கொள்ள வேண்டிய இடர்ப்பாடுகள் பற்றிய அவருடைய வசனங்களைக் கேட்பது அவசியமானதாக உள்ளது. உலகின் சில இடங்களில் இன்று கிறிஸ்தவர்களை எதிர்கொள்ளும் எதிர்ப்பு என்பது மிகவும் கடுமையானதாக உள்ளது. அவர்கள் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். அவர்களின் இல்லங்கள் எரியூட்டப்படுகின்றன, அல்லது அவர்கள் சபை கூடி வருதல்கள் தடை செய்யப்படுகின்றன. இந்தக் கிறிஸ்தவர்கள் இவ்வசனப்பகுதியில் இயேசுவின் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடியும். முதலாவது இயேசு தாமே துன்புற்றார் என்பதால், இவர்கள் தங்கள் துன்பம் பற்றி வியப்படையக் கூடாது என்று அறிகின்றனர்!

மற்ற கிறிஸ்தவர்கள் உடல் ரீதியான துன்புறுத்தலை விட அதிகமான சமூக ரீதியான துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர். அவர்கள் அடிக்கப் படாதிருப்பினும், தங்கள் நம்பிக்கைகளுக்காகக் கடிந்து கொள்ளப்பட்டு மற்றும் தங்கள் உறுதிப்பாட்டிற்காக ஏளனம் செய்யப்பட்டிருக்கலாம். திரைப்பட விமர்சகரான மிகயீல் மெட்வெட் என்பவர் 1992ம் ஆண்டில், ஹாலிவுட்டுக்கு எதிராக அமெரிக்கா என்று அழைக்கப்பட்ட ஒரு நூலை வெளியிட்டார், அதில் அவர், திரைப்படம் தயாரிக்கும் தொழிலானது மதத்தையும் மதநம்பிக்கைகளையும் சிறுமைப்படுத்த எவ்விதம் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தியது என்று செயல்விளக்கப்படுத்தினார். பிற்பாடு அவர் ஹாலிவுட்டுக்கு எதிராக மதம் என்று அழைக்கப்பட்ட ஒலி - ஒளிப் பேழை ஒன்றை(வீடியோவை)த் தயாரித்தார். அந்தப் புத்தகம் மற்றும் ஒலி - ஒளிப் பேழை (வீடியோ) ஆகிய இரண்டிலும் அவர், ஹாலிவுட் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தங்களுக்கு ஏகப்பட்ட வருமான இழப்பு ஏற்படக் காரணமாயிருந்தாலும், தேவனை நம்புகிறவர்கள்மேல் தாக்குதல் தொடுக்கவே நோக்கமாய் இருந்தார்கள் என்று எடுத்துரைத்தார்.

சில வேளைகளில் உபத்திரவம் என்பது கிறிஸ்தவரின் சொந்த இல்லத்திற்குள்ளாகவே மிகவும் வலிவானதாக உள்ளது. ஒரு கணவரோ அல்லது மனைவியோ, விசுவாசிக்கின்ற தமது துணையாளரின் விசுவாசத்தை விமர்சித்து சிறுமைப்படுத்தலாம். இவ்வகையானது உபத்திரவமானது தாங்குவதற்கு மிகவும் கடினமானதாகும். முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர் கள், கிறிஸ்தவரல்லாத தங்கள் துணையாளர்களுடன் (கணவருடன் அல்லது மனைவியுடன்) நிலைத்திருக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருப்பினும், கிறிஸ்த வர் ஒருவர் கிறிஸ்தவரல்லாத ஒருவரை திருமணம் செய்து கொள்ளுதல் என்பது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது என்பதற்கு இதுவே நிச்சயமான காரணமாக உள்ளது (1 கொரி. 7:12-16, 39).

பவுல் - தாமே உபத்திரவத்துக்கு அந்நியராய் இராத வகையில் -

ரோமாபுரியில் இருந்த சபைக்கு, “கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்” (ரோமர் 12:18) என்று எழுதினார். இவ்வசனத்தின் முதல் மூன்று வார்த்தைகள், சமாதானத்துடன் வாழ்வது என்பது எல்லா வேளைகளிலுமே நமது சக்திக்குட்பட்டதாக இருப்பதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆவிக்குரிய வகையில் நமது எதிராளிகள் சில வேளைகளில் விஷயத்தைச் சும்மா விட்டு விடமாட்டார்கள், மற்றும் நாம் உபத்திரவத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதைப்பற்றி நாம் திகைப்படையக் கூடாது, நாம் இயேசுவின் பாடுகளையும், அவரைப் பின்பற்றுவதில் நாமும் கூடத் துன்புறுவோம் என்ற அவருடைய எச்சரிக்கையையும் நினைவுகூர வேண்டும். அவருடைய வார்த்தைகளே நாம் இடறி விழாமல் நம்மைப் பாதுகாப்பவைகளாய் உள்ளன!

## பிரச்சனை இரண்டு: இயேசுவிடமிருந்து பிரிதல் (15:1-8)

முடிவில் இருந்து தொடங்குவதன் மூலம் நாம் நமது வேத பாடப் பகுதியை வழக்கத்திற்கு மாறான வகையில் அணுகியுள்ளோம் என்பது தெளிவு. இயேசு முன்பே குறிப்பிட்டிருந்த உறவின் அவசரத்துவம் பற்றி நாம் உணர்ந்தறியும்படியாக இந்தப் பிரச்சனை எடுத்துரைக்கப்பட்டதைக் காண்பதே இதைச் செய்வதற்கான காரணமாக உள்ளது. இல்லையென்றால், இந்தப் பகுதியை நாம் உற்சாகத்திற்குரிய ஒரு ஆவிக்குரிய பாடமாகக் காணத் தலைப்பட்டு, உபத்திரவத்தின் பிரச்சனையிலிருந்து இது விலகியிருப்பதாக நினைக்க முற்படுவோம். இதன் விளைவாகவே, இந்த அதிகாரத்தின் முடிவிலிருந்து நாம் தொடங்கினோம், மற்றும் இப்பொழுது நாம் தொடக்கத்திற்குத் தயாராக உள்ளோம்.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, “நான் மெய்யான திராட்சச் செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்” (15:1) என்று உரைத்தார். யோவான் சுவிசேஷத்தில் “நானே” என்ற வகையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏழு கூற்றுக்களில் இது கடைசியானதாக உள்ளது. திராட்சச் செடி மற்றும் அதன் கிளைகள் என்ற விஷயமானது பிதா குமாரன் மற்றும் குமாரனுடைய சீஷர்கள் ஆகியோரிடைய உள்ள உறவுக்கு ஒரு ஒப்புவமையாகப் பணியாற்றுகின்றது. இயேசு திராட்சச் செடியாக இருக்கின்றார், பிதாவானவர் விவசாயியாக (அல்லது தோட்டக்காரராக, அல்லது திராட்சத் தோட்டக்காரராக) இருக்கின்றார், மற்றும் சீஷர்கள் கிளைகளாக இருக்கின்றனர். இந்தக் கிளைகள் உற்பத்தி செய்கின்ற கனிகளாய் இருக்க வேண்டியவை சீஷர்களின் வாழ்வில் உள்ள தேவபக்திக்கேற்ற நடக்கையாக உள்ளது.

இந்த ஒப்புவமையில், இயேசுவின் செய்தியானது கிளையானது வளருகையில், தான் வளரும் திராட்சச் செடியுடன் நெருக்கமாய் இருப்பது போன்று, அவருடன் நெருக்கமாய்த் தொடர்பு கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கவனப்படுத்துகின்றது. அவ்விதம்

செய்யத் தவறுதல் என்பது விரைவிலேயே மரணத்தைக் கொண்டு வருகின்றது. திராட்சச் செடியில் நிலைத்திருத்தல் ஒன்றே கனி கொடுப்பதற்கான ஒரே வழியாக உள்ளது, மற்றும் கனி கொடுக்கத் தவறுதல் என்பது மரணத்தைக் கொண்டு வரும். கனி தராத கொடிகள் திராட்சத் தோட்டக்காரரால் (வெட்டி) எடுக்கப்பட்டு எரியூட்டப்படுகின்றன என்று இயேசு சுட்டிக் காண்பித்தார் (15:6). மேலும் அவர், கனி தரும் கொடிகளைத் திராட்சத்தோட்டக்காரர் கண்டறிந்து, அவைகள் அதிகக் கனி கொடுக்கும்படியாக அவைகளைச் சுத்தம் பண்ணுகிறார் என்றும் எடுத்துரைத்தார் (15:2). இந்த அதிகாரத்தின் தொடக்க வசனங்களில், சுத்தம் பண்ணுதலைப் பற்றிய கலந்துரையாடலானது, இயேசுவைப் பின்பற்றுதல் என்பது சீஷர்களுக்கு எதிர் காலத்தில் வேதனை நிறைந்ததாய் இருக்கும் என்பதைக் குறிப்பாய் உணர்த்தியது.

இயேசுவில் "நிலைத்திருத்தல்" என்பது சீஷர்களுக்கு முக்கியமான தாயிருந்ததென்று அவர் வலியுறுத்தினார். ஏழு வசனங்களில் (15:1-7) இயேசுவின் வாயிலிருந்து "நிலைத்திருத்தல்" என்ற வார்த்தை ஏழு முறை வெளி வந்ததாகக் காணப்படுகின்றது. அது "தொடர்ந்து" அல்லது "இருந்து" என்று அர்த்தப்படுகின்றது. கிளையானது செடியில் இருந்து தனக்குச் சத்துக்களைப் பெற்றுக் கொள்வது போல, சீஷர்களும் தங்கள் வாழ்வாதாரத்தை இயேசுவிடமிருந்து பெற்றுக் கொண்டனர். அதை அப்படிப்பட்ட இடர்ப்பாடு மிக்க வேளையில் மறந்து விடுதல் என்பது அவர்களுக்குப் பேரழிவாய் இருக்கக் கூடும். அவர்கள் செடியிலிருந்து பிரிந்திருந்தால், மரித்தவர்களாகி திராட்சத் தோட்டத்தைக் கவனித்துக் கொள்கிற ஒருவரால் எரியூட்டப்படுவார்கள்.

அடுத்த இருபத்தி நான்கு மணிகளுக்குள் இயேசுவின் சீஷர்கள் மாபெரும் வேதனையை எதிர்கொள்வார்கள், மற்றும் அவர்கள் பல தெரிவுகளைக் கொண்டிருந்தனர். இயேசுவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில் (அந்த சீஷர்களைப் போலவே) நாமும் உடல்ரீதியான எதிர்ப்பை எதிர்கொள்ளா விட்டாலும், ஆவிக்குரிய எதிர்ப்பை எதிர்கொள்ளுவோம் - மற்றும் நாமும் கூட தெரிவுகளைக் கொண்டிருப்போம்.

இயேசுவினிமித்தம் நாம் வெறுக்கப்படும் பொழுது, நாம் விட்டு விலகி விடக் கூடும்.

இயேசுவினிமித்தம் நாம் வெறுக்கப்படும் பொழுது, நாம் காட்டிக் கொடுக்கப்பட்டதாக உணரக் கூடும்.

இயேசுவினிமித்தம் நாம் வெறுக்கப்படும் பொழுது, நாம் நமது அடையாளங்களை மாற்றக் கூடும்.

இயேசுவினிமித்தம் நாம் வெறுக்கப்படும் பொழுது, நாம் *திராட்சச் செடியிலேயே இணைந்திருக்கக் கூடும்!*

## *பிரச்சனை மூன்று: அன்பின் அவசியம் (15:9-17)*

சீஷர்கள் திராட்சச் செடியில் "நிலைத்திருத்தலோடு" கூட அன்பில்

''நிலைத்திருக்கும்''படியாகவும் அழைக்கப்பட்டனர். அன்பு என்பது இயேசுவைப் பின்பற்றுகின்றவர்களுக்கு மிக முக்கியமானதாக உள்ளது! முன்பு, சீஷர்களின் பாதங்களைக் கழுவியதன் மூலம் இயேசு தம்முடைய போதனையில் அன்பு என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் செயல்விளக்கப்படுத்தினார். அந்த வேளையில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார்:

> நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் (13:34, 35).

''நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்'' என்பதை இயேசு ''எனது கட்டளை'' என்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் குறிப்பிட்டார் (15:12). தேவன் மீதான அன்பு மற்றும் ஒருவரிலொருவர் மீதான அன்பு என்பதே சுவிசேஷச் செய்தியின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது (மத். 22:34-40). யோவான் சுவிசேஷத்தின் இப்பகுதியில் அன்பு வலியுறுத்தப்படுவதாகவும் உள்ளது. முதல் பன்னிரெண்டு அதிகாரங்களில் "அன்பு" என்ற வார்த்தையானது ஆறுமுறை மட்டுமே காணப்படுகையில், அதிகாரங்கள் 13 முதல் 17 வரையிலும் இவ்வார்த்தையானது முப்பத்தியொரு முறை காணப் படுகின்றது என்று C. H. டோட் அவர்கள் கவனித்துள்ளார்![2]

இவ்வசனப் பகுதியில் உள்ள "அன்பு" என்பது உணர்வு வயப்படும் விஷயம் அல்ல. மாறாக, இயேசு சிலுவையில் தமது மரணத்தில் மிகச் சிறந்த வகையில் காணப்படும் அன்பின் வகையைக் குறிப்பிடுவதாகத் தெளிவு படுத்தினார். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (15:13) என்று இயேசு கூறிய பொழுது அவர் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை (அந்த) சீஷர்கள் அநேகமாய்ப் புரிந்து கொள்ளாதிருந்தாலும், அவர் அடுத்த நாளில் நடைபெற இருந்த தமது மரணத்தைப் பற்றியே பேசினார் என்பது நிச்சயம் என்று நீங்களும் நானும் காண முடியும். அன்று போலவே இன்றும் அவருடைய சீஷர்கள் அவரது அன்பின் எடுத்துக்காட்டைப் போலச் செய்ய, இயேசுவைச் சிலுவைக்கு வழிநடத்திய அந்த அன்பைப் போலவே செய்ய இப்பொழுதும் அழைக்கப்படுகின்றனர்.

## முடிவுரை

இயேசுவைப் பின்பற்றத் தைரியமாய் முன் வருபவர்கள் (மற்றவர் களால் தாங்கள்) உபத்திரவத்தை எதிர்பார்க்கும் நிலையில் உள்ளனர் என்று இயேசு எச்சரித்திருக்கின்றார். கிறிஸ்தவர்கள் அனைவருமே நமது விசுவாசத்தினிமித்தமாக ஏதோ ஒரு வகையில் உபத்திரவத்தை எதிர்

கொள்ளுகின்றோம். அது நடைபெறும் பொழுது, நாம் என்ன செய்ய வேண்டும்? "திராட்சச் செடியில் நிலைத்திருங்கள்" மற்றும் "ஒருவரை யொருவர் அன்புகூருங்கள்" என்பதே இயேசு நமக்குக் கொடுக்கும் பதில்களாய் உள்ளன.

இயேசு இந்த அறிவுறுத்தல்களைக் கொடுத்த மறுநாளில், இவ்வுலகம் கண்டவற்றிலேயே அன்பிற்கான மாபெரும் செயல்விளக்கம் ஒன்றைக் காட்ட அவர் சிலுவைக்குச் சென்றார். இருப்பினும், அவர் பதிலுக்கு அன்பு காட்டப்படவில்லை. அதற்குப் பதிலாக, அவர் சபிக்கப்பட்டார், துப்பப்பட்டார், அடிக்கப்பட்டார், சிறுமைப்படுத்தப்பட்டார், மற்றும் கொல்லப்பட்டார். அது இவ்வுலகம் கண்டவற்றிலேயே மிகவும் பகுத்தறி வற்ற வெறுப்புணர்வின் பயங்கரமான காட்சியாக இருந்தது. இப்படிப் பட்ட சித்தங் கலங்கிய வேளையிலும் கூட, இயேசு விசுவாச நிறைவையும் அன்பையும் செயல்விளக்கப்படுத்தினார். அவர் உபத்திரவத்தை எதிர்கொண்டு, அதை மேற்கொள்ளும் வழியை நமக்குக் காண்பித்தார்.

நான் வாழ்கின்ற இடத்தில், வழக்கத்திற்கு மாறான மோசமான நாள் ஒன்றை நாங்கள் எதிர்கொள்ளுகையில் நாங்கள் பயன்படுத்தும் வழக்குச் சொல் ஒன்றுண்டு. நாங்கள், "இது போன்ற நாட்கள் வரும் என்று என் அம்மா எப்பொழுதும் கூறுவதுண்டு" என்று கூறுவோம். கிறிஸ்துவின் நாமத்தை அணிந்துள்ள சிலாக்கியத்திற்காக நாம், கடினமான ஒரு விலைைச் செலுத்தும்படி அழைக்கப்பட்டால், நாமும் கூட அதே வழிமுறையில் "இது போன்ற நாட்கள் வரும் என்று எனது கர்த்தர் கூறினார்" என்று சொல்ல முடியும். உபத்திரவம் வரும் என்று அவர் கூறியது மட்டுமின்றி, அது வருகின்ற பொழுது என்ன செய்ய வேண்டும் என்றும் அவர் நமக்குக் கூறியுள்ளார்: திராட்சச் செடியில் நிலைத்திருங்கள், ஒருவரிலொருவர் அன்புகூருங்கள்!

---

குறிப்புகள்

[1]9:22, 34, 35ஐக் காணவும். ஜெப ஆலயத்தை விட்டு வெளியேற்றப்படுதல் என்பது தொழுகைக் கூடத்திலிருந்து தற்காலிகமாய் வெளியேற்றப்படுதலை விட அதிகமானதாக இருந்தது. ஜெப ஆலயம் என்பது சமுதாயத்தின் சமூக மற்றும் மத மையமாய் இருந்தது. ஒருவர் தம் சொந்தக் குடும்பம் மற்றும் மக்களிடமிருந்து பிரிக்கப்படுதல் என்பது இயேசுவைப் பின்பற்றுவதற்குச் செலுத்தும் வேதனை நிறைந்த விலையாக இருக்கும். [2]C. H. Dodd, *The Interpretation of the Fourth Gospel* (Cambridge: The University Press, 1958), 398.

# “என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்” [16:1–33]

*இந்த வசனப்பகுதியிலிருந்து நான் பிரசங்கிப்பதற்கு முந்திய வாரத்தில், நான் வாழ்கின்ற சமூகமானது இரு பயங்கரமான துன்ப நிகழ்ச்சிகளினால் தாக்கப்பட்டது. அவைகளில் முதலாவது, பேஸ்பால் எனப்படும் விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கையில் ஒரு பதினைந்து வயதுப் பையனுக்கு ஏற்பட்ட மரணம் ஆகும். மாலை நேரத்தில் நடந்த பேஸ்பால் விளையாட்டின் முதல் ஆட்டத்தில் அவன் நன்முறையில் விளையாடி, தனது அணியின் முதல் வெற்றிப் புள்ளியை பெற்றுத் தந்தான். பிறகு, அவன் தன் அணித் தோழர்களிடத்திற்குத் திரும்பி நடந்து வருகையில் கீழே விழுந்து இறந்து போனான். ஒரு நிமிடம் அவன் உடல் நலம் மிக்க சித்தரிப்பாகக் காணப்பட்டான், மற்றும் அடுத்த நிமிடத்தில் அவன் இறந்து போனான். இரண்டாவது துன்பகரமான நிகழ்ச்சி, முப்பத்திஐந்து வயதான கிறிஸ்தவப் பெண்மணி ஒருவர் கொலை செய்யப்பட்டதும், அவரது பதினோறு வயதான மகள் சாவுக்கேதுவாக அடிக்கப்பட்டதும் ஆகும். நமது வாழ்வின் ஆறுதல் தரக்கூடிய மாயத் தோற்றங்களில் இரண்டு ஒரு சில நாட்களுக்குள்ளாகவே தாக்கப்பட்டிருந்தன - இளமையான, உடல்நலமிக்க மக்கள் மரணத்திற்கு எதிர்ப்பு சக்தி கொண்டுள்ளனர் என்பதும் மற்றும் எங்களது சமூகமானது வன்முறைக் குற்றங்களால் பாதிக்கப்படாது என்பதுமான இரு மாயத்தோற்றங்களும் தாக்கப்பட்டன. அவ்வாரத்தின் நிகழ்ச்சிகள் எங்களைக் குழப்பத்திலும் திகைப்பிலும் ஆழ்த்தின என்பதைக் கூறத்தேவையில்லை. யோவான் 16ல் சீஷர்களின் மனநிலையைக் குறிப்பிட்டு விவரிக்க “குழப்பம்” மற்றும் “திகைப்பு” என்பவை மிகச் சிறந்த வார்த்தைகளாய் உள்ளன என்பது வியப்புக்குரியதாக இருக்கின்றது, இது மிகக் கடினமான ஒரு வாரத்திற்கு மிகவும் ஏற்புடைய வசனப் பகுதியாக இருக்கின்றது.*

---

பிரசங்கிக்கத் தயாரித்தல் என்பது பெரும்பாலும், தேவனுடன் யாக்கோபு போராடிய இரவைப் போன்றதாக உள்ளது.[1] யாப்போக்கு நதிக்கரையில் தனித்திருந்த யாக்கோபு, பொழுது விடியும் வரைக்கும் தமது சிந்தனைகள், தமது நினைவுகள், தமது பயங்கள் ஆகியவற்றுடனும்,

தேவனுடைய தூதர் ஒருவருடனும் போராடிக் கொண்டிருந்தார். அடுத்த நாளில் சூரியன் உதிக்கத் தொடங்குகையில், யாக்கோபின் எதிராளி, தம்மைப் போக அனுமதிக்கும்படி யாக்கோபுக்குக் கட்டளையிட்டார். அதற்கு இணங்க மறுத்த யாக்கோபு “நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்'' (ஆதி. 32:26) என்று வலியுறுத்தினார். பிரசங்கித்தல் என்பது பெரும்பாலும் அந்த வழி வகையின்படியானதாகவே உள்ளது: பிரசங்கியார்கள் மிகக் கடினமான வசனப்பகுதிகளுடன் நீண்ட நேரமாகவும் மற்றும் கடினமான முறையிலும் போராடி, சில வேளைகளில் கருத்து எதையும் கண்டறியாத நிலையில் விடப்படுகின்றனர். இருப்பினும், போராட்டமானது நம்மை உற்சாகம் இழக்கச் செய்வதில்லை; அது ஒரு வசனப்பகுதியானது கடைசியில் நம்மை ஆசீர்வதிக்கின்ற வரையிலும் அதைப் ''பற்றிக்கொண்டு'' இருக்கும்படி நம்மைத் தூண்டுகின்றது.

இப்படிப்பட்டதே யோவான் 16ல் எனது அனுபவமாய் இருந்தது. இது வாரம் முழுவதும் இதன் செய்தியை சுருக்கி மற்றும் ஒழுங்கு படுத்தி அமைக்க நான் செய்த ஒவ்வொரு முயற்சியையும் தடை செய்ததாகக் காணப்பட்டது. அதிகமானது நடந்து கொண்டிருந்தது, மற்றும் அதிகமானது கூறப்பட்டிருந்தது. பிறகு, ஒரு நாள் காலையில் நான் பணிக்குச் செல்ல நடந்து சென்ற வழியில், அந்த வேதபாடத்தைப் பற்றி எனக்கு மிகவும் சலிப்பு ஏற்படுத்திய பாத்திரங்களே இன்றைய நாட்களில் நமது சூழ்நிலையில் இவ்வேத வசனத்திற்கு வல்லமையும் ஏற்புடைமையும் தருகின்ற பாத்திரங்களாய் உள்ளன என்ற கருத்து என்னில் உதித்தது. இது எளிமைப்படுத்துதல், குறைத்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகியவற்றிற்கு அறைகூவல் விடுக்கின்றது; ஆனால் பிறகு, வாழ்வின் பெரும்பகுதியும் இவ்வாறே செய்கின்றது! யோவான் 16ன் முறுக்கப்பட்ட, சுழிந்தோடுகின்ற, அவசர செய்தியானது ஒருவேளை, இன்றைய நாட்களில் நமக்கு மிகவும் ஏற்புடைய வேதபாடமாக இருக்கின்றது.

இந்த அதிகாரத்தின் செய்தியை நோக்குவதற்கு முன்பாக, இது இந்த சுவிசேஷத்தில் எவ்விடத்தில் தோன்றுகின்றது என்பதாக நாம் நினைவு கூருதல் அவசியமாகின்றது. அநேகமாக பொதுப்படையான ஊழியங்களின் பன்னிரெண்டு அதிகாரங்களைத் தொடர்ந்து, 13 முதல் 17 வரையுள்ள அதிகாரங்கள் இயேசுவுக்கும் அவருடைய பன்னிரு சீஷர்களுக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்ட நெருக்கமான விஷயங்களினால் நிறைந்துள்ளன. அவரது மரணம் நெருங்கிக் கொண்டிருக்கையில், அவர்களைப் பற்றி அவர் மிகவும் ஆழமான வகையில் கவலைப்பட்டார். இதன் விளைவாக இந்த நான்கு அதிகாரங்களில் உள்ள போதனைகள் பெரும்பாலும் சீஷர்களை அவர் விட்டுப் பிரிதலுக்கு அவர்களை தயாரித்தலுக்கே ஒப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. நமது வேதபாடப் பகுதியின் தொடக்கத்தில், அதிகாரம் 16ல், இயேசு அவர்களின் பாதங்களைக் கழுவியிருந்தார். இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படி யூதாஸ் புறப்பட்டுச் சென்றிருந்தான், இயேசு தாம் “போகப் போவதாக” அவர்களிடத்தில் கூறியிருந்தார், மற்றும் வரப் போகிற உபத்திரவத்தைப்

பற்றி அவர்களை அவர் எச்சரித்திருந்தார்.

## "பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றுங்கள்" (16:5-15)

இயேசு தம்முடைய புறப்படுதலுக்கு சீஷர்களைத் தயார் செய்ததைத் தொடர்ந்து, தாம் புறப்பட்டுச் செல்லுதல் அவர்களுக்கு நன்மையாய் இருக்கும் என்று அவர்களிடம் கூறத் தொடங்கினார் (16:7). அவர் செல்வதினால் மட்டுமே "தேற்றரவாளன்"[2] வர முடியும் என்று அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். இயேசு தொடங்கிய ஊழியத்தை, துணை யாளரான பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து செய்வார். இயேசு பின்வருமாறு கூறினார்:

> இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி. வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார் (16:12-14அ).

பரிசுத்த ஆவியானவர் பற்றி இன்றைய நாட்களில் நடக்கும் கலந்துரை யாடலானது பெரும்பாலும் குழப்பமூட்டுவதாகவும் பிரிவினை உண்டாக்குவதாகவும் உள்ளது. இவ்வசனப் பகுதியானது, பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கூறப்படக் கூடிய ஒவ்வொன்றையும் கூறாதிருப்பினும், இது ஆவியானவரின் ஊழியத்தை விவரிக்கின்றது: இயேசுவின் பின்பற்றாளர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துதல். இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு, சகல சத்தியமானது ஆவியானவர் அப்போஸ்தலர்களை "சகல சத்தியத்திற்குள்ளும்" வழி நடத்திய பொழுது அவர்களுக்கு அவர் வெளிப்படுத்தியவற்றின் வெளிச்சத்திலேயே மதிப்பிடப்பட வேண்டியதாக உள்ளது. ஆவியானவர் தம்மை நோக்கிக் கவனத்தை ஈர்ப்பதையல்ல, ஆனால் குமாரனை மகிமைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளார் என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். ஆவியானவரைப் பற்றி ஒவ்வொரு போதனையும் மேற்சொன்ன இரு சத்தியங்களுக்கும் ஒத்துப் போகின்ற வகையில் இருத்தல் வேண்டும்.

## "சரீர சம்மந்தமான ஒரு உறவுமுறையை எதிர்பார்க்க வேண்டாம்" (16:16-22)

இயேசு கூறியவற்றில் பல விஷயங்கள் இன்று நம்மால் சுலபமாய்ப் புரிந்து கொள்ளப்படுகின்றன, ஆனால் அவற்றை அவர் கூறிய போது அவற்றைக் கேட்ட அவருடைய சீஷர்களுக்கு முற்றிலும் குழப்பத்தை

ஏற்படுத்தின. 16:16-22ன் வசனப் பகுதியும் கூட அப்படிப்பட்டதாகவே உள்ளது. வரப் போகிற நாட்களில் அவர்கள் தம்மைக் காண மாட்டார்கள் என்றும் மறுபடியும் ''கொஞ்சக் காலத்திலே'' அவர்கள் தம்மைக் காண்பார்கள் என்று அவர்களுக்கு அவர் கூறினார் (16:16, 17). கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற கருத்துக்கள் கிறிஸ்தவர்களால் நிலையாகப் பேசப்படுபவனவாகவும், அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையன்றும் கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடிக்கும் போது நினைவுகூர்ந்து, கொண்டாடும் நிகழ்ச்சிகளாகவும் உள்ளன. இருப்பினும், சிலுவைக்கு முன் நாட்களில் இது நினைத்துப் பார்க்க முடியாத கருத்தாக இருந்தது. இயேசு செயல்முறைக்கு சாத்தியமற்ற புதிர்களை கூறுவதாகவே அவருடைய சீஷர்களுக்குக் காணப்பட்டது.

இயேசு தமது புறப்படுதலுக்குச் சீஷர்களைத் தொடர்ந்து தயார் செய்தார்; அந்த இரவிலே சீஷர்கள் எவ்வளவாய்க் குழப்பம் அடைந்திருந்தனர் என்பது ஒரு பொருட்டல்ல என்பதால், அடுத்த நாளில் இயேசு சிலுவையில் அறையப்படும் பொழுது அவர்கள் இன்னும் அதிகமாய்க் குழப்பம் அடைவார்கள் என்று அவர் அறிந்தார். ஆகையால், நடக்கவிருந்தது என்ன என்பது பற்றி அவர் தம் செய்தியில் வலியுறுத்திக் கொண்டிருந்தார். உலகம் அகம் மகிழ்ந்திருக்கும் பொழுது அவர்கள் அழுவார்கள் என்று சீஷர்களுக்கு அவர் கூறினார்; இருப்பினும் ஒரு குறுகிய காலத்தில் சீஷர்கள் அகம் மகிழ்ந்திருக்கையில் உலகமானது அழும் என்று அவர் உரைத்தார் (16:20-22). அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் இதுவே நடந்தது என்பதை நாம் காண முடியும், ஆனாலும் அந்த வேளையில் சீஷர்கள் இந்த முக்கியமான சத்தியத்தைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாய் இருந்தனர்.

## "என்னுடைய நாமத்திலே ஜெபியுங்கள்" (16:23-28)

இயேசு தாம் பிதாவிடம் ஏறிச் சென்றவுடன் சீஷர்களின் சூழ்நிலை உண்மையில் எவ்விதம் மேன்மையடையும் என்று கூறியதன் மூலம் அவர்களைத் தொடர்ந்து ஆறுதல் படுத்தவும் ஆயத்தப்படுத்தவும் செய்தார்: ''அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்க மாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இது வரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்" (16:23, 24). சாத்தியமான வகையில் அது எவ்விதம் உண்மையாயிருக்க முடியும் என்று அவர்கள் புரிந்து கொள்ள முடியாதிருந்தாலும், இயேசு தாம் பரலோகத்திற்குத் திரும்பச் சென்ற பிறகு, வாக்குக்கெட்டாத ஆவியானவருடைய வல்லமையானது உலகத்திற்கு வெளிப்படுத்தப்படும் என்று அவர்களுக்கு உறுதியளித்தார்: உலகத்தின் பாவங்களுக்காகச் சிந்தப்படவிருந்த

அவருடைய இரத்தமும், அவருடைய இடத்தை எடுத்துக் கொள்வதற்கு வரவிருந்த பரிசுத்த ஆவியானவரும் கற்பனைக் கெட்டாத வகைகளில் இந்த உலகத்தை ஆசீர்வதிக்கும் இரு சக்திகளாய் இருந்தன! இயேசு அவர்களிடம் உருவக மொழிநடையில் பேசியிருந்தார், ஏனெனில் அந்த வேளையில் அவர்கள் அதற்கு மட்டும் ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தனர். இருப்பினும், அவர் எதனை அர்த்தப்படுத்தியிருந்தார் என்பதை அவர்கள் விரைவிலேயே "வெளிப்படையாகப்" புரிந்து கொள்வார்கள் (16:25). அவர்கள் தம்முடைய நாமத்தினாலே கேட்கும் பொழுது தங்களின் ஜெபங்களுக்குப் பதில் பெறுவார்கள் என்று அவர்களுக்கு அவர் உறுதிப்படுத்தினார் (16:26-28).

## "என்னில் விசுவாசமாயிருங்கள்" *(16:29-32)*

இயேசுவின் ஆறுதலான வார்த்தைகளுக்கு சீஷர்களின் பதிலானது அவரில் அவர்கள் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிடுதலாய் இருந்தது. அவர்கள், "நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினாவ வேண்டுவதில்லையென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம்; இதினாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம் என்றார்கள்'' (16:30). யோவான் சுவிசேஷத்தில் "விசுவாசித்தல்'' என்ற வார்த்தையின் முக்கியத்துவத்தை நாம் மீண்டும் புரிந்து கொள்கின்றோம். இயேசுவே தேவனுடைய குமாரன் என்று (மக்கள்) விசுவாசித்தலே இந்த சுவிசேஷத்தின் இலக்காக உள்ளது (20:30, 31). "விசுவாசித்தல்" என்ற வார்த்தையை யோவான் பல வழிமுறைகளில் பயன்படுத்தினார் என்று நாம் நினைவூட்டப்படுகின்றோம். சில வசனங்களில் இது ஒரு நபர், ஒரு உரிமைகோருதலை உண்மை என்று ஏற்றுக் கொண்டதை அர்த்தப்படுத்துகின்றது. மற்றவற்றில் இது சிலர், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொண்டதை அர்த்தப்படுத்துகின்றது. சிலவேளைகளில் இது இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்துடன் ஒருவர் "வெளிப்படையாகச் செல்லுதலை" அர்த்தப்படுத்தியிருக்கையில், மற்ற வேளைகளில் இது, ஒருவர் இயேசுவைப் பின்பற்றுவதில் "உறுதியாய் நிலைத்திருப்பதை" அர்த்தப்படுத்துகின்றது. 16:30ல், சீஷர்கள் இயேசுவைப் பற்றிய உரிமைகோருதல்களை உண்மை என்று தாங்கள் ஏற்றுக் கொண்டதாகக் கூறினர்; அவர் "தேவனிடத்திலிருந்து வந்தவர்'' என்று அவர்கள் விசுவாசித்தனர்.

அவர்களின் விசுவாசக் கூற்றிற்கு இயேசு அறைகூவல் விடுத்தார், ஏனெனில் அவர்களின் உறுதிப்பாட்டிற்குத் தியாகம் செய்ய அவர்கள் இன்னும் ஆயத்தமாக்கப்படவில்லை என்பதை அவர் அறிந்தார் (16:32). அவர்கள் எல்லாரும் தம்மைத் தனியே விட்டு விடுவார்கள் என்று அவர்களிடத்தில் அவர் கூறினார். இந்த இடத்தில் நாம், யோவான் சுவிசேஷத்தின் நிகழ்ச்சிகளில் இயேசு புறம்பாகக் கண்ணோக்கி, இன்றைய நாட்களில் அவரை விசுவாசிக்கிறோம் என்று கூறும் நமது உரிமை கோருதல்களுக்கு அறைகூவல் விடுக்கின்றார். நாம் உண்மையாகவே

*விசுவாசிக்கின்றோமா? அவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார் என்று நாம் நம்புவதாகக் கூறுகின்றோம், ஆனால் அவருக்காக நிலைத்திருத்தல் என்பது துன்பத்தைத் தரக் கூடும் என்ற நிலையில் நாம் அவ்வாறு நிலைத்திருப்போமா? யோவான் சுவிசேஷம் என்பது (அன்றிருந்த) சீஷர்களின் விசுவாச வரலாறாக மட்டும் இருப்பதில்லை; நமது விசுவாசத்தின் வரலாறாகவும் உள்ளது!*

## "என்னுடைய சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்" (16:33)

*அதிகாரம் 16ல் இயேசுவின் போதனைகள் ஒரு மையக் கருத்திற்கு ஒன்றுகூடி வர வேண்டுமென்றால், அது வசனம் 33ன் செய்தியாகவே இருக்க வேண்டும். எச்சரிக்கைகள் எல்லாம், முன்னுரைத்தல்கள் எல்லாம், வாக்குத்தத்தங்கள் எல்லாம் சீஷர்களின் வாழ்வில் மிகவும் அமளியான வேளையில் அமைதியைத் தரும் நோக்கத்திற்கானவைகளாய் இருந்தன! சீஷர்களுடைய வாழ்க்கை தொந்தரவு அற்றதாயிருக்கும் என்று இயேசு ஒருக்காலும் வாக்குத்தத்தம் செய்ததில்லை, ஆனால் தொந்தரவின் மத்தியிலும் அவர்களுக்குத் தேவசமாதானம் இருக்கும் என்று அவர் வாக்களித்தார்: "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (16:33). "நான்" என்பது இவ்விடத்தில் வலியுறுத்தப் படுகின்றது. அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் சீஷர்கள், உலகம் வென்றது என்றும் துன்மார்க்கமானது வெற்றி கொண்டது என்றும் நினைக்கப் பல வழிகள் காரணமாக இருந்தன. இயேசு உலகத்தை ஜெயித்ததாக தன்னம்பிக்கையுடன் உறுதிப்படுத்தியதன் மூலம் சீஷர்களை இதற்காகத் தயாரித்தார். "ஜெயித்தேன்" என்பது கிரேக்க மொழியில் முற்று வினையாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. ஆகையால், இது "நான் ஏற்கனவே உலகத்தை வென்றுள்ளேன், மற்றும் எனது வெற்றியின் விளைவு ஏற்கனவே உள்ளது!" என்ற கருத்தினைக் கொண்டுள்ளது. அடுத்த நாள் வரையிலும் சிலுவை மரணம் ஏற்படாததாக இருக்கையில், இயேசு, திட்டமிட்டபடி எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று சீஷர்களுக்குத் தன்னம்பிக்கையுடன் உறுதிப் படுத்தி, விரைவில் நடக்கவிருந்த நிகழ்ச்சிகளினால் அவர்கள் ஆசீர்வதிக்கப் படுவார்கள் என்றும் கூட உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினார்.*

## முடிவுரை

*இந்த அதிகாரத்தில் ஆறுதலின் வார்த்தைகளை முதலில் கேட்ட சீஷர்களின் சூழ்நிலையிலிருந்து நமது சூழ்நிலை மிகவும் விலகியிருப்பதாக முதலில் காணப்பட்டாலும், நமது உலகம் உண்மையில் அவ்வளவு மாறு பட்டதாக உள்ளதா? அவர்களைப் போல, நாமும் எதிர்பாராத*

தொந்தரவுகளை எதிர்கொள்ளுகின்றோம், தேவனில் கொண்டுள்ள நம்பிக்கையை இழந்து போகும்படி சோதிக்கப்படுகின்றோம், நமது விசுவாச அறிக்கையை மறுத்து நம்மை மட்டுமே காண நம்புவதாக உரிமை கோருகின்றோம், மற்றும் பெருமளவில் குழப்பம் நிறைந்த உலகில் சமாதானத்திற்காக நம்பிக்கையற்ற நிலையில் ஏங்குகின்றோம். சீஷர்கள் எதிர்கொள்ளவிருந்த வலிவார்ந்த போராட்டங்களுக்கு அவர்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்று இயேசு விரும்பினார். நாம் நாளை எதிர்கொள்வது எதுவாயிருந்தாலும் நமது வாழ்விலும் அவரது வார்த்தைகள் இதே நோக்கத்திற்காகப் பயன்படுகின்றன என்பது உறுதி. "இடர்ப் பாட்டை எதிர்பார்த்து, தயாராக இருங்கள்" என்பதே கடினமான வேளைகளில் தேவசமாதானத்தைப் பராமரிப்பதற்கு அதிகாரம் 16ல் இயேசுவின் சூத்திரமாக உள்ளது.

அமெரிக்க விமானப்படை விமான ஓட்டுநர்களில் ஒருவரான ஸ்காட் ஃபிரான்சிஸ் ஓகிரேடி என்பவர் போஸ்னியா - ஹெர்செகோவினாவின் மேல் யுத்தம் செய்யும்படி ஜூன் 1995ல் விமானத்தில் செல்லுகையில் சுடப்பட்டார். அவர் பாரசூட்டின் மூலம் பத்திரமாய்த் தரையிறங்க முடிந்தது, ஆனால் தம்மைச் சுட்டவர்கள் தம்மைக் கைதியாக்கத் தேடி வருவார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். விமானப்படையில் பல ஆண்டுகளாகத் தாம் பெற்றிருந்த உயிர் பிழைப்புப் பயிற்சியை நடைமுறைப்படுத்திய ஓகிரேடி கப்பல்காரர்களால் காப்பாற்றப்படும் வரைக்கும் ஆறு நாட்களுக்கு எதிரிகளிடமிருந்து மறைந்திருக்க முடிந்தது. அந்த நாட்களில் அவர் குடிப்பதற்கு மழை நீரைச் சேகரித்தும், வண்டுகளை உண்டும் பிழைத்தார். ஓகிரேடிக்கு ஏற்பட்ட இந்தக் கடும் சோதனை பற்றி அவரிடத்தில் பேட்டி காணப்பட்ட பொழுது, தனது வாழ்வைக் காத்த பெருமை முழுவதும் உயிர் பிழைக்கும் பயிற்சிக்கே உரியது என்று கூறினார். இடர்ப்பாட்டை எதிர்கொள்ள விமானப்படையானது அவருக்குப் பயிற்சியளித்திருந்தது, எனவே அது வரும் பொழுது அவர் தயாராய் இருந்தார்.

இன்றைய நாட்களில் இயேசுவின் சீஷர்கள் வாழ்வின் பயங்கரமான சாத்தியக் கூறுகள் எல்லாவற்றையும் குறித்து கவலைப்படுவதை இயேசு விரும்புவதில்லை (மத். 6:25-34), ஆனால் சீஷரின் வாழ்வில் இடர்ப்பாடு என்பது ஒரு பகுதியாகும் என்று நாம் அறிய வேண்டுமென்று அவர் விரும்புகின்றார். இதை அறிந்து, இடர்ப்பாடு வருகையில் ஆவிக்குரிய வகையில் நாம் அழிந்து விடாமல் ஆயத்தமாய் இருக்க முடியும்.

இந்த வேளையில் நாம் தெரிந்துகொள்ள அவசியமில்லை என்று நாம் நினைக்கும் அநேக காரியங்களை, நாம் அநேக சமயங்களில் கவனித்துக் கேட்க வேண்டும் என்று இந்த அதிகாரம் கருத்து தெரிவிக்கின்றது. வேதாகம வகுப்பு ஒன்றைப் பற்றியோ அல்லது பிரசங்கத்தைப் பற்றியோ சிலவேளைகளில் மக்கள், "எனது தற்போதய நிலைக்கு அவற்றால் ஒரு பயனும் இல்லை" என்று முறையிடுகின்றனர். "நாம் இப்பொழுது எங்கு இல்லை" என்பது பற்றிப் பாடங்கள் கேட்பதே நமது பெரும்பாலான தேவை என்பதே உண்மையாக இருக்கின்றது. அதாவது, நாம் கடைசியில்

எங்கிருப்போம் என்பது பற்றிக் கேள்விப்படுதல் அவசியமாயுள்ளது, அதனால் நாம் வரும் காலத்தில் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளுக்குத் தயாராய் இருக்க முடியும். அதிகாரம் 16ல் இயேசு கூறியவற்றைச் சீஷர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கவில்லை என்பது உறுதி, ஆனால் அவர்கள் அதைக் கேள்விப்படுவது அவசியம் என்று இயேசு அறிந்தார். அதே வகையில், வேத வசனங்களில் முழுச் செய்தியையும் கேள்விப்படுதல் என்பது நமக்கும் அவசியமாகும். பிறகு, பவுல் கூறியது போல, நாம் நமது வழியில் வரும் எதற்காகவும் முழுமையாகத் தயாராயிருப்போம் (2 தீமோ. 3:14-17).

பன்னிரெண்டு மற்றும் பதினான்கு வயதான இரு மகள்கள் எனக்கிருக் கின்றனர். பெற்றோர் என்ற வகையில் நான், இந்த நாட்களில் கடிகாரம் அதிக ஓசையுடன் துடிப்பதைக் கேட்கின்றேன். எனது மகள்களுடனான என் நேரமானது விரைவாய்க் கடந்து செல்கின்றதென்றும், இன்னும் ஒரு சில ஆண்டுகளிலேயே அவர்கள் எனது வீட்டை விட்டுச் சென்று விடுவார்கள் என்றும் நான் அறிகின்றேன். நான் இதை உணர்ந்த நிலையில், அவர்கள் தயாராகியுள்ளார்களா என்று அடிக்கடி ஆச்சரியப்படுகின்றேன். இந்த உலகில் எப்படிப் பிழைத்து செழித்து வளர்வது என்று அவர்கள் அறிவார்களா? தங்களைத் தாங்களே எவ்விதம் கவனித்துக் கொள்வது என்று அவர்கள் அறிவார்களா? அவர்கள் எதிர்கொள்ளக்கூடிய துன்பம் எவற்றினூடாகவும் அவர்கள் கடந்து செல்லும்படியாக இயேசுவின் மீது அவர்கள் உறுதியான விசுவாசம் கொண்டிருப்பார்களா? எதிர்காலம் அவர்களுக்கு வைத்துள்ளது என்ன என்று நான் அறியேன், மற்றும் பெற்றோர் என்ற வகையில் நான், அவர்கள் எதிர்கொள்ளப் போகின்றவை களுக்கு அவர்களைத் தயார் செய்துள்ளேனா என்று வியப்படைகின்றேன்.

நமது வேத பாடப் பகுதியில் இயேசு, இவ்வுலகத்தினுள் தன் பிள்ளை களை அனுப்புதல் பற்றிக் கவலைப்படுகின்ற பெற்றோர் போல் ஒலிக்கின் றார். அவர் தம் பின்பற்றாளர்களுடன் இருப்பதற்கு "துணையாளரை" அனுப்புவதாகக் கூறினார், அந்த சத்தியமானது நமது வாழ்விற்கு நங்கூரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது, அதாவது, இரவைத் தொடர்ந்து பகல் வருவது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாகவே, நம் துயரத்தைத் தொடர்ந்து மகிழ்ச்சி வரும். நமது ஜெபங்கள் நமக்கு மிகச் சிறந்தவற்றைத் தர விரும்பும் ஒரு அன்பான தந்தையால் கேட்கப்படுகின்றன, மற்றும் இயேசு ஏற்கனவே இந்த உலகத்தை ஜெயித்துள்ளார். இதைக்காட்டிலும் அதிகமான எதை நாம் கேள்விப்படுவது தேவையாயிருக்கிறது? நாளை என்பது நம் வாழ்வில் எதைக் கொண்டு வந்தாலும், அது இடர்ப்பாடோ அல்லது அமைதியோ, எதுவாக இருந்தாலும், நாம் சமாதானம் கொண்டிருக்க முடியும். நமது எதிர்காலத்திற்காக இயேசு நம்மைத் தயார் செய்துள்ளார்!

எழுதப்பட்டவற்றிலேயே மிகவும் அழகிய கிறிஸ்தவ கீர்த்தனைகள் ஒன்றில் இந்த அதிகாரத்தின் ஆவியானது பிரதிபலிக்கப்படுகின்றது:

மெய்ச் சமாதானமா துர் உலகில்
ஆம், இயேசு ரத்தம் பாயும் நெஞ்சினில்.

மெய்ச் சமாதானமா பல் தொல்லையில்
    ஆம், இயேசு சித்தத்தை நாம் செய்கையில்

மெய்ச் சமாதானமான சூழ்துக்கத்தில்
    ஆம், இயேசு சீர் அமர்ந்த நெஞ்சத்தில்.

மெய்ச் சமாதானமா உற்றார் நீங்கில்,
    ஆம், இயேசு கரம் நம்மைக் காக்கையில்.

மெய்ச் சமாதானமா சிற்றறிவில்,
    ஆம், இயேசு ராஜன் என்று அறிகில்.

மெய்ச் சமாதானமா சா நிழலில்
    ஆம், இயேசு சாவை வென்றிருக்கையில்.

பூலோகத் துன்பம் ஒழிந்த பின்னர்,
    இயேசு மெய்ச் சமாதானம் அருள்வார்.
        எட்வர்டு H. பிக்கெர்ஸ்டெத்

---

குறிப்புகள்

[1]இவ்வரலாறு ஆதி. 32:22-32ல் காணப்படுகின்றது. [2]*Parakletos* என்ற கிரேக்க வார்த்தையானது "உதவியாளர்," "ஆலோசனையாளர்," "தேற்றரவாளர்," "பரிந்துரைப்பவர்" அல்லது "துணைக்கு உடன் வருபவர்" என்று அர்த்தப்படுகின்றது. இவ்விடத்தில் இது, இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரத்திற்கேறுதலைத் தொடர்ந்து பெந்தெகொஸ்தே நாளன்று (அப். 2) அப்போஸ்தலர்கள் மேல் பொழியப்பட்ட பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கின்றது.

# "பிதாவே, வேளை வந்தது"

# (17:1-26)

*பின்வரும் பாடமானது பாடல்கள் மற்றும் ஜெபங்களைக் கொண்டு இடையில் பிரிக்கப்பட்ட ஐந்து பகுதிகளையுடைய ஒரு பிரசங்கம் பிரசங்கிக்கப்பட்ட ஒரு விசேஷ ஆராதனையாக அமைகின்றது. வேத வசனமே ஜெபமாக உள்ள நிலையில் அதை எடுத்துரைப்பதற்கு இவ்விதமான செய்தி குறிப்பாக ஏற்புடைய வழிமுறையாக உள்ளது.*

---

*செய்தி #1 - நீங்கள் என்ன ஜெபிப்பீர்கள்?*
*வேத வாசிப்பு: யோவான் 17*
*பாடல்:* "Worthy of Praise" - *"துதித்துப் பாடிப் பாத்திரரே"*

*செய்தி #2 - "உமது குமாரனை மகிமைப்படுத்தும்"*
*பாடல்:* "Glorify Thy Name" - *"உமது நாமத்தை மகிமைப்படுத்தும்"*
*ஜெபம்*

*செய்தி #3 - "அவர்களுக்காக நான் ஜெபிக்கிறேன்"*
*பாடல்:* "In the Hour of Trial" - *"தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்"*

*செய்தி #4 - "அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும்"*
*பாடல்:* "Blest Be the Tie" (stanzas 1-4) - *"பிணைக்கும் தூய பந்தமே" (சரணம் 1-4)*
*கர்த்தருடைய பந்தி*
*பாடல்:* "Blest Be the Tie" (stanzas 5, 6) - *"பிணைக்கும் தூய பந்தமே" (சரணம் 5, 6)*
*காணிக்கை*

*செய்தி #5 - "உம்முடைய நாமத்தைத் தெரியப்படுத்தினேன்" (அழைப்பு)*
*பாடல்:* "Yes, for Me He Careth" - *"எனக்காக யாவற்றையும் செய்வார் தேவன்"*
*பாடல்:* "I Stand Amazed" - *"நான் பிரமித்து"*
*முடிவு ஜெபம்.*

---

## நீங்கள் என்ன ஜெபிப்பீர்கள்?

நீங்கள் மாபெரும் மன அழுத்தத்தில் இருந்தால் நீங்கள் என்ன ஜெபிப்பீர்கள்? நீங்கள் நாளைக்கு இறக்கப் போகிறீர்கள் என்று அறிந்தால், என்னவென்று ஜெபிப்பீர்கள்? நீங்கள் ஒரு நெருங்கிய நண்பரால் மனம் புண்படுத்தப்பட்டிருந்தால் என்னவென்று ஜெபிப்பீர்கள்? உங்கள் சொந்தக் குடும்பத்தால் கூட நீங்கள் ஆழமான வகையில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருந்தால் என்னவென்று ஜெபிப்பீர்கள்? நீங்கள் கைது செய்யப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டியிருக்கும் வேளையில் என்னவென்று ஜெபிப்பீர்கள்?

வேதனையும் மன அழுத்தமும் நம்மை சுய மையம் கொண்டவர் களாக்குகின்றன. மனம் புண்படுத்தப்படும் பொழுது அல்லது பயமடையும் பொழுது மற்ற எவரைப் பற்றியும் நினைப்பதென்பது நமக்குக் கடின மாகின்றது. அதுதான் யோவான் 17ல் இயேசுவின் ஜெபத்தைக் குறிப்பிடத் தக்கதாக்குகின்றது! சிலுவையில் அவர் மரிப்பதற்கு முந்திய இரவில், தம் சீஷர்களுடன் கடைசி இராவிருந்தைத் தொடர்ந்து, ஒலிவ மலையில் அவர் கைது செய்யப்படுவதற்கு முன்பு, நம்புதற்கரிய இந்த ஜெபத்தை இயேசு ஜெபித்தார். இன்றைய நாளில் சில மக்கள் இதன் அழகு மற்றும் ஆழம் மற்றும் வல்லமை ஆகியவற்றின் காரணமாக இந்த ஜெபத்தை "கர்த்தரின் ஜெபம்" என்று அழைக்கும்படியாக வலியுறுத்துகின்றனர்.[1] இதை நாம் வாசிக்கும் ஒவ்வொரு முறையும் இது நம்மைப் பெரும் வியப்பில் ஆழ்த்துகின்றது; அவருடைய மனம் அழுத்தம் நிறைந்த வேளையில் இயேசு நமக்காக ஜெபித்தார்!

## "உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" (17:1-5)

இயேசு தம்முடைய ஜெபத்தை, பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தொடங்கினார்: "பிதாவே, வேளை வந்தது" (17:1). இந்த சுவிசேஷம் முழுவதிலும் வேளை என்பது முக்கியமான அக்கறைக்குரியதாக உள்ளது. இயேசு, "எனது வேளை இன்னும் வரவில்லை" என்று தமது தாயிடமும் மற்றும் தமது சீஷர்களிடமும் மறுபடி மறுபடி கூறினார்,[2] ஆனால் இந்த அதிகாரத்தில் விவரிக்கப்படும் மாலை வேளையில், இயேசு, "வேளை வந்தது" என்று உரைத்தார். இது எதனை அர்த்தப்படுத்திற்று என்பது குறித்து சீஷர்கள் பெரும்பாலும் குழப்பம் அடைந்தார்கள், ஆனால் இயேசு சிலுவையில் மரிப்பதற்கான வேளை வந்தது என்று அர்த்தப்படுத்தினார் என்பதை நீங்களும் நானும் காண முடியும்.

பிறகு இயேசு, "உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படி நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" (17:2) என்று ஜெபித்தார். மற்ற அதிகாரங்களில் நாம் கண்டுள்ள பாடங்களின்படி, மகிமை என்பது பொதுவாக இவ்வுலகில் தனிப்பட்ட பேராவல், சாதனை நிறைவேற்றம்,

கனம் மற்றும் புகழ் ஆகியவற்றை விவரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும், இயேசுவின் உதடுகளில் "மகிமை" என்பது "தாழ்மையான ஊழியம்" என்றும் "தியாகம்" என்றும் அர்த்தப்படுகின்றது. பிதாவானவர் தம்மை (இயேசுவை) முழுமையான அளவு பயன்படுத்திக் கொள்வார், அது கல்வாரியில் தமது மரணம் என்பது வரை கூட அர்த்தப்படும் என்றே அவர் ஜெபித்தார். இயேசு, "பிதாவே இப்பொழுது நீர் என்னைச் சிலுவையில் இட நான் தயார்!" என்றே ஜெபித்தார் என்பது இதன் சாராம்சமாகும். இதை அவர் ''பிதாவே, நீர் என்னை மகிமைப்படுத்தும்'' என்ற வகையில் ஜெபித்தார்.

"மகிமை" என்பதைப் பேசும் பொழுது இயேசு தாம் கூறியது என்ன என்பதை அறிந்திருந்தார். "உலகம் உண்டாவதற்கு முன்பு" (17:5) தாம் பிதாவுடன் அனுபவித்திருந்த மகிமையை அவர் நினைவுகூர்ந்தார், மற்றும் தாம் பிதாவிடம் திரும்பி செல்லும் பொழுது அந்த மகிமை மீண்டும் தம்முடையதாகும் என்பதையும் அவர் அறிந்தார். இதன் விளைவாக, "மகனை மகிமைப்படுத்தும்" என்று இயேசு ஜெபித்த போது பரலோகமும் சிலுவையும் அவரது சிந்தையில் இருந்தன.

## "நான் அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்" (17:6-19)

ஜெபத்தின் இந்த இடத்தில் இயேசுவின் கவனம் அவருடைய சீஷர்கள் மீது திரும்பிற்று. உண்மையில் இந்த ஜெபத்தில் வேறெந்தக் கருத்தைக் காட்டிலும் சீஷர்களைப் பற்றி அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த இடத்தில், இயேசு தமது மாபெரும் துன்ப வேளையில் தமது சொந்த இடர்ப்பாடுகளைக் காட்டிலும் மற்றவர்களைப் பற்றி அதிகமாகச் சிந்தித்தார் என்பதற்கான மாபெரும் செயல்விளக்கத்தைக் காண்கின்றோம். தாம் எதிர்கொள்ளப் போவது என்னவென்று அறிந்த நிலையில், அவர் அவர்களுக்காக ஜெபித்தார்.

பிதாவானவர் இயேசுவின் ஊழியத்தில் அவருக்குச் சீஷர்களைக் கொடுத்திருந்தார். இயேசு ஜெபிக்கையில், தாம் அவர்களைப் பிதாவுக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும், பிதாவானவர் அவர்கள் (சீஷர்கள்) அறிய வேண்டுமென விரும்பிய யாவற்றையும் அவர்களுக்குப் போதித்திருப்ப தாகவும் அவர் கூறினார். பிறகு, அவர், "அவர்களுக்காக" (17:9) வேண்டிக் கொண்டார், பிதாவானவர் அவர்களைக் காக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் அல்லது, இயேசுவின் வார்த்தைகளில் ''அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொள்ளும்" (17:11) என்றுரைத்தார். சீஷர்கள் ''ஒன்றாய்'' இருக்க வேண்டும் என்பதே இந்த ஜெபத்தில் இயேசுவின் மையமான அக்கறையாய் இருந்தது. முதலில் இந்த ஒருமைப் பாட்டின் குறிக்கோளானது தெளிவற்றதாக உள்ளது, ஆனால் பிற்பாடு, சீஷர்கள் ஒருவரோடொருவர் ஒருமைப்பட்டிருப்பது ("ஒன்றாய்") மட்டு மின்றி, தம்முடனும் பிதாவுடனும் அவர்கள் ஒருமைப்பட்டிருக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தில் இது தெளிவாகின்றது. "ஒருமைப்

பாடு" என்பது ஒரு அற்புதமான வேதாகமக் கருத்தாகும், இது ஆதாம் ஏவாள் வரலாற்றில் (ஆதி. 2:24) வேர் கொண்டுள்ளது, மற்றும் கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவரும் நமது தேவனுடனும் உறவுபட்டிருக்க வேண்டிய வகையை இது விவரிக்கின்றது.

அடுத்ததாக, இயேசு சீஷர்களுக்காக ஜெபித்தார், ஏனென்றால் அவர்களை அவர் உலகத்தில் விட்டுச் செல்ல வேண்டியதாய் இருந்தது. இந்த ஜெபம் முழுவதிலும் நாம், அவரது சீஷர்களுக்கும் உலகத்திற்கும் இடையில் உள்ள வசீகரிக்கும் ஒரு உறவைக் காண்கின்றோம்.

> *நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு ... (வ. 6).*
>
> *... இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள் ... (வ. 11).*
>
> *... உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன் ... (வ. 13).*
>
> *... நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல ... (வ. 14).*
>
> *நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல் ... (வ. 15).*
>
> *நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல ... (வ. 16).*
>
> *நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் (வ. 18).*

இயேசு தம் சீஷர்களுடன் இனியும் இவ்வுலகத்தில் இராதபோதிலும் அவர்கள் இவ்வுலகத்தில் இருக்க வேண்டியிருந்த காரணத்தினால் இயேசு தம் சீஷர்கள் மீது மாபெரும் அக்கறை கொண்டிருந்தார். அவர்கள் இவ்வுலகத்தில் இருக்கையில் இவ்வுலகத்தின் பாகமாய் இராமல் இருக்க வேண்டியதாயிற்று. அவர்களின் ஊழியத்தின் காரணமாக அவர்கள் உலகத்தினுள் அனுப்பப்பட்டிருந்தனர். இவ்வுலகத்துடன் அவர்களின் உறவு பற்றிய இயேசுவின் ஜெபமானது 1 இரா. 19:4ல் எலியாவின் ஜெபத்தைச் சிந்தனைக்குக் கொண்டு வருகிறது. அவரது ஊழியத்தின் குறிப்பிட்டதொரு உற்சாகமிழக்கக்கூடிய வேளையில் தேவன் தமது ஜீவனை எடுத்துப் போட்டு, தம்மை உலகத்திலிருந்து நீக்க வேண்டும் என்று அவர் ஜெபித்திருந்தார். எலியாவின் வேண்டுகோளைத் தேவன் ஏற்க மறுத்து, விரைவிலேயே அவர் (எலியா) மீண்டும் இவ்வுலகில் தேவனுடைய தீர்க்கதரிசியாக ஊழியம் செய்யும்படி செய்தார்.

இயேசுவின் சீஷர்களுக்காக அவர் ஜெபித்த ஜெபமானது இன்றைய நாளில் உலகத்துடன் நமது உறவுக்காக நமக்கு விவரிக்கப்படுகின்றது. நாம் இவ்வுலகத்தில் இருந்தாலும், நாம் இவ்வுலகத்தாரல்ல. தேவனுடைய ஊழியர்கள் என்ற வகையில் அவருடைய சுவிசேஷத்துடன்

இவ்வுலகினுள் செல்லுவதே நமது ஊழியமாய் இருக்கின்றது. உலகத்துடனான நமது உறவு என்பது எளிய விஷயமாய் இருப்பதில்லை, ஆனால் இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய மாலையில் ஜெபித்த ஜெபமானது இந்தக் கடினமான பிரச்சனையைத் தெளிவாக்கு வதில் அதிகமாக முயலுகின்றது.

இயேசு, தமக்கு நடக்கப் போவது என்ன என்பதை அறிந்தவராக, தம்முடைய பின்பற்றாளர்களுக்காக ஜெபம் செய்தார். அது நமக்கு இயேசுவின் இருதயத்தைப் பற்றிக் கூறுவதென்ன? அது இன்றைய நாளில் நமக்கு இயேசுவின் அக்கறை பற்றிக் கூறுவது என்ன?

## "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்" (17:20-24)

வசனம் 20ன் தொடக்கத்திலிருந்து, இயேசு பன்னிருவர் மீதான (இந்த வேளையில் பதினோரு பேர்!) தமது கவலைகளுக்கும் அப்பால் கடந்து சென்று "இவர்களுடைய வார்த்தையினாலே என்னை விசுவாசிக்கிறவர் களுக்காகவும்'' (17:20) ஜெபித்தார். யோவான் சுவிசேஷத்தில் நாம் "விசுவாசிக்க" என்ற வார்த்தையை விட்டு தொலைவில் திரிபவர்களாய் ஒருக்காலும் காணப்படுவதில்லை. விசுவாசம் என்பது இந்த சுவிசேஷத்தின் நோக்கமாய் உள்ளது (20:30, 31) மற்றும் அது இயேசுவின் வாழ்வு முழுவதிலும் அவரது இருதயத்தில் மாபெரும் அக்கறைக்குரியதாக இருந்தது. சீஷர்களின் வார்த்தையினால் இயேசுவின் மீது விசுவாசம் கொள்பவர்கள் என்பது நம்மையும் உள்ளடக்குகின்றது! இருள் நிறைந்த தமது வேளையில், உங்களுக்காகவும் எனக்காகவும் இயேசு ஜெபித்தார்!

நாம் "ஒன்றாய்" இருக்க வேண்டும் என்பதே நமக்காக இயேசுவின் ஜெபமாய் இருந்தது. இந்த ஜெபத்தில் நாம் "ஒன்றாய்" இருக்க வேண்டும் என்று இயேசு நான்கு முறை ஜெபித்தார். "ஒன்றாயிருத்தல்" என்பது, கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவர் "இணக்கமாயிருந்து" சமாதானத்தை மகிழ்வுடன் அனுபவித்தல் மற்றும் வன்மையான போராட்டங்கள் கொண்டிராதிருத்தல் என்பது மட்டுமே என்று பல வேளைகளில் நினைக்கப் படுகின்றது. இருப்பினும் இயேசு ஜெபித்த ஒருமைப்பாடு என்பது இதற்கு மேலும் அதிகமானதாக உள்ளது. உண்மையான ஒருமைப்பாடு என்பது பிதா மற்றும் குமாரன் ஆகியோரால் செயல்விளக்கப்படுத்தப்படுகிறதாய் இருக்கின்றது (17:21). பிதாவானவர் இயேசுவுடன் ஒன்றாயிருந்தது போல இயேசு நம்முடன் ஒன்றாயிருக்க விரும்பினார் (17:23). குமாரனோடும் பிதா வோடும் ஒருமித்திருக்கும் மற்ற ஒவ்வொருவருடனும் வலிவார்ந்த மற்றும் தியாகம் நிறைந்த வகையில் உறவு கொள்ளும் அளவிற்கு கிறிஸ்தவ ஒருமைப்பாடு என்பது குமாரன் மற்றும் பிதாவுடன் ஒன்றித்திருத்தலில் இருந்து வருகின்றது. இந்த நாட்களில் சிலர் கேள்விப்பட்டுள்ள மொழி நடையைப் பயன்படுத்துவதென்றால், ஒருமைப்பாடு என்பது பிதா, குமாரன், மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவர் ஆகியோர் அடங்கியுள்ள ஆவிக்குரிய "பற்றுடைய குழுவாக" உள்ளது.

இயேசு ஜெபித்த ஒருமைப்பாடு என்பது குடும்ப உறவுகளினால் விவரிக்கப்பட முடியும். வெளிப்படையான போராட்டம் எதையும் அனுபவித்திராத, ஆனால் சிறிதளவே நெருக்கத்தையும் மற்றும் ஏறக்குறைய பேச்சு வார்த்தையே இல்லாமையையும் பகிர்ந்து கொள்ளும் குடும்பம் பற்றி நீங்கள் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? அதற்கு நேர் மாறான வகையில், மாபெரும் அளவில் நெருக்கமான உறவையும் பேச்சு வார்த்தையையும் மகிழ்வுடன் அனுபவித்து, அதே வேளையில் அவ்வப் போது கருத்து வேறுபாடுகளையும் போராட்டங்களையும் கையாளும் குடும்பம் ஒன்றை நீங்கள் எப்பொழுதாவது கண்டதுண்டா? இவற்றில் எந்தக் குடும்பம் அதிகமாய் சபையைப் போன்றுள்ளது? எந்தக் குடும்பம் ஒருமைப்பாட்டின் மாதிரியாக உள்ளது? நிச்சயமாக அது தங்களின் போராட்டங்களுக்கு மத்தியிலும் மாபெரும் நெருக்கமான உறவு கொண்டுள்ள குடும்பம் போன்றதாகவே இருக்கும். இதுவே இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் பெற்றிருக்கும்படியாக இயேசு வேண்டிக்கொண்ட உறவின் வகையாகும் என்று நான் நம்புகின்றேன்.

கர்த்தருடைய பந்தியைச் சுற்றி நாம் ஒன்றுகூடுகையில், கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டுள்ள ஒருமைப்பாட்டை நாம் கொண்டாடுகின்றோம். நமது ஒருமைப்பாடு முழு நிறைவானதில்லை என்பது நிச்சயமே. சில வேளைகளில் நாம், ஒரு நெருங்கிய குடும்பம் அவ்வப்போது செய்கின்றது போல பூசலிடுகின்றோம். இருந்த போதிலும், நாம் ஒருவருக்கொருவர் ஒப்புக் கொடுக்கிறோம், நாம் ஒருவரிலொருவர் அன்புகூருகிறோம், மற்றும் நாம் பிதாவிலும் குமாரனிலும் ஒன்றுபட்டுள்ளோம். கர்த்தருடைய பந்தியில் நாம் சிலுவைக்குத் திரும்புகின்றோம். அங்கு நாம் நம்மையே, இயேசுவுடன் அதிகம் "ஒன்றாகவும்," பிதாவுடன் அதிகம் "ஒன்றாகவும்" மற்றும் சபையில் நமது சகோதர சகோதரிகளுடன் அதிகம் "ஒன்றாகவும்" காண்கின்றோம்.

## "உம்முடைய நாமத்தைத் தெரியப்படுத்தினேன்" (17:25, 26).

இயேசுவின் ஜெபத்தினுடைய முடிவுரையில், அவர் தம் பிதாவை மீண்டும் ஒருமுறை பெயரினால் குறிப்பிட்டார் (17:25). உலகமானது பிதாவை அறியவில்லை, ஆனால் இயேசு அவரை அறிந்திருந்தார் என்ற உண்மையை அவர் எடுத்துரைத்தார். அவருடைய ஊழியத்தின் காரணமாக, பிதாவே குமாரனை அனுப்பியிருந்தார் என்று சீஷர்கள் அறிய வந்ததாக அவர் கூறச் சென்றார் (14:26). பிலிப்புவிடம் இயேசு முன்பே கூறியிருந்தபடி, "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" (14:9). பிறகு, நாம் படித்துக் கொண்டுள்ள இந்த ஜெபத்திற்குச் சற்று முன்னர் இயேசுவிடம் சீஷர்கள், ''நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கின்றோம்" (16:30) என்று கூறியிருந்தனர்.

இவ்விதமாக, பிதாவைப் பற்றிய அறிவானது இயேசுவிடமிருந்து

சீஷர்களுக்குத் தரப்பட்டது. பிதாவின் அன்பும் இயேசுவிடமிருந்து சீஷர்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்பதே இயேசுவின் கடைசி ஜெபமாய் இருந்தது. பிதாவிடமிருந்து குமாரனுக்கும், குமாரனிடமிருந்து சீஷர்களுக்கும் மற்றும், கடைசியாக சீஷர்களிடமிருந்து உலகம் முழுவதற்கும் சுவிசேஷம் பரவ வேண்டும் என்பதே சிலுவைக்கு முந்திய இரவில் இயேசுவின் ஜெபமாக இருந்தது. இது அந்த மாலையில் அவரது இருதயத்தை அதிகமாய்ப் பாரப்படுத்திற்று, மற்றும் இன்றைய நாட்களில் அவ்வாறே செய்கின்றது என்பது உறுதி! பிதாவுடன் "ஒன்றாயிருப்பதன்" மகிழ்ச்சியைக் குமாரன் அறிந்தார், மற்றும் அவர், பிதாவோடும் குமாரனோடும் "ஒன்றாயிருப்பதன்" மகிழ்ச்சியை இவ்வுலகம் அறிய வேண்டுமென்று விரும்புகின்றார்.

---

குறிப்புகள்

[1]மத். 6:9-13ல் காணப்படும் மாதிரி ஜெபமே "கர்த்தருடைய ஜெபம்" என்று மிகவும் சாதாரணமாக அழைக்கப்படுகின்றது. [2]2:4; 7:6, 8, 30. பிற்பாடு அவர் தம் வேளை எப்படி வந்திருந்ததாக உரைக்கத் தொடங்கினார்: 12:23, 27; 13:1; 16:32.

# "நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" [18:1-19:16]

ஒவ்வொரு பாடலுமே அதற்குச் சொந்தமான தனிச்சிறந்த பாங்கினைப் பெற்றுள்ளது. சில கானங்கள் உங்கள் முகத்திற்குப் புன்னகையைக் கொண்டு வருகின்றன, மற்றும் பிற கானங்கள் உங்கள் கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றன. சில கானங்கள் உங்கள் வாழ்வின் மிகச் சிறந்த நாட்களை நினைவு படுத்துகின்றன, மற்றும் சில கானங்கள் இருதயம் புண்பட்ட நிகழ்ச்சிகளை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருகின்றன. இது நாம் அறிந்ததாகவும் மற்றும் பாடல்களில் இருந்து நாம் எதிர்பார்ப்ப தாகவும் உள்ளது, ஆனால் இதை நாம் வேதாகமத்தின் வசனப் பகுதிகளில் இருந்தும் எதிர்பார்க்க வேண்டும். அவைகளும் கூட தங்களின் சொந்தமான, குறிப்பான பாங்குகளைக் கொண்டுள்ளன. இந்தப்பாடத்திற்கான நமது வேத வசனப் பகுதியானது, வேத வாக்கியங்களிலேயே மிகவும் வருத்தத்திற் குரிய, வேதனை நிறைந்த பகுதிகளில் ஒன்றாக உள்ளது.

பதினேழு அதிகாரங்களில் நாம் இயேசுவின் வாழ்வு மற்றும் ஊழியம் பற்றிய வரலாற்றை வாசித்துள்ளோம். இயேசு கூறியவற்றையும் செய்த வற்றையும் பதிவு செய்த யோவான், வாசகர்களின் இருதயங்களில் விசுவாசத்தை உண்டாக்கும் விதத்தில் அவரது வரலாற்றை ஒழுங்கு படுத்தியமைத்தார். 18ம் அதிகாரத்தின் தொடக்கத்தில் இயேசு தமது வாழ்வின் இலக்கு மற்றும் நோக்கமாய் இருந்த சிலுவையை நோக்கித் தீர்மானமாய் முன் சென்றார். உணர்வுப்பூர்வமாக கடினமான இப்பகுதி யானது இயேசு சிலுவையில் அறையப்படு முன்பான வேளைகளில் நடைபெற்ற மூன்று விசாரணைகள் பற்றிக் கூறுகின்றது: இயேசுவிடம் விசாரணைகள், பேதுருவிடம் விசாரணை மற்றும் பிலாத்துவிடம் விசாரணை. இந்த விசாரணைகள் மூன்று முறுக்குக் கயிறு போலப் பின்னப்பட்டு, தேவனுடைய குமாரனைப் பற்றியும் அவரில் கொள்ளும் விசுவாசத்தின் முக்கியத்துவம் பற்றியுமான தேவனுடைய செய்தியை ஒன்று கூட்டி அடக்கியுள்ளன.

## இயேசுவிடம் விசாரணை

இயேசு தம் சீஷர்களுடன் உணவு உண்ணவும் ஜெபிக்கவும் செலவிட்ட

மாலை வேளைக்குப் பிறகு, அவர்களை அவர் நகருக்குப் புறம்பே கெதரோன் என்னும் ஆற்றின் குறுக்கே வழி நடத்திச் சென்றார் (18:1),[1] மற்றும் அவர்களை அவர் தாமும் தமது சீஷர்களும் ஜெபிப்பதற்கென்று அடிக்கடி செல்லும் இடமான ஒரு தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். இயேசு தாம் கைது செய்யப்படுவதைத் தாமே ஒருங்கமைத்தார் என்பது தெளிவு. அவரது எதிரிகள் அவரை கூட்டம் சூழ்ந்து பாதுகாக்காத இரவில் கைது செய்வதன் மூலம் தாங்கள் அவரைச் சிக்க வைத்ததாக நினைத்தார் கள். உண்மையில், இயேசுவே யூதாஸுக்கும் படைவீரர்களுக்கும் தம்மைக் காண்பதற்கு சுலபமான அப்படிப்பட்டதொரு வேளையை அமைத்துத் தந்தார்.

தேடும் குழுவில், பிரதான ஆசாரியர்களிடம் கட்டளை பெற்ற படை வீரர்களும் பரிசேயர்களும் இருந்தனர். அவர்கள் தோட்டத்தை அடைந்த பொழுது, விளக்குகளையும், தீவட்டிகளையும் ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு சென்றனர். இயேசு அவர்களிடம், “யாரைத் தேடுகிறீர்கள்?” (18:4) என்று கேட்டார், அதற்கு அவர்கள் ‘‘நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்” (18:5) என்று பதில் அளித்தார்கள். அவர், “நான் தான்” (18:5) என்று பதில் உரைத்த பொழுது, அவர்கள் பயத்தின் காரணமாகப் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். அவர்கள் யாரைத் தேடுகிறார்கள் என்று இயேசு மீண்டும் கேட்டார், அவர்கள் மீண்டும், “நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்” (18:7) என்று பதில் அளித்தார்கள். அவர்கள் தேடும் மனிதன் தாமே என்று இயேசு மீண்டும் ஒருமுறை அறிவித்தார். கடைசியில், அவர்கள் அவரைக் கைது செய்து, கட்டி, விசாரணைக்காக மறுபடியும் எருசலேமுக்குக் கொண்டு சென்றனர். அவருடைய நடக்கையானது கைது செய்யப்படுதலைத் தவிர்க்கும் மனிதருடைய நடக்கை போல் இருந்ததில்லை; அந்த இரவில் நடக்க வேண்டிய நிகழ்ச்சிகள் எவ்வளவு முக்கியமானவைகள் என்பதை அறிந்த மனிதரின் தைரியமான செயல்களாகவே அது இருந்தது.

பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் மாமனாரும், முன்பு பிரதான ஆசாரியராக இருந்தவருமான அன்னா என்பவரின் அரண்மனையே இயேசுவின் விசாரணைக்கான முதல் இடமாய் இருந்தது. இவரது அரண்மனைக்கு இயேசு முதலாவதாக அழைத்துச் சென்றனர் என்ற உண்மையானது, காய்பா பட்டத்தைக் கொண்டிருப்பினும், அன்னா உண்மையான அதிகாரத்தை இன்னமும் கொண்டிருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. அன்னாவின் அரண்மனையில் இயேசுவின் போதனைகள் பற்றியும், அவர் வசீகரித்திருந்த பின்பற்றாளர்கள் பற்றியும் அவரிடத்தில் கேள்விகள் கேட்கப்பட்டன. அவர் தம்மிடம் இரகசியம் ஒன்றுமில்லையென்றும், தமது போதனையானது வெளியரங்கமான தாகவும், எல்லாரும் கேட்டு மதிப்பிடும்படியானதாகவும் இருந்தது என்று அவர்களிடம் கூறிய பொழுது, அதிகாரிகளில் ஒருவன், இயேசு அன்னாவிடம் “மரியாதைக் குறைவான” வகையில் நடந்து கொண்டார் என்று கூறி இயேசுவின் வாயில் அறைந்தான். அதைத் தொடர்ந்து அன்னா இயேசுவின் கைகள் இன்னும் கட்டப்பட்டிருந்த நிலையிலேயே அவரைக்

காய்பாவிடம் அனுப்பி வைத்தான்.

காய்பாவின் அரண்மனையிலிருந்து இயேசு, “the Praetorium” (18:28)[2] என்று அழைக்கப்பட்ட ரோம ஆளுநரின் அலுவலக உறைவிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து நடந்தவைகள், இயேசுவின் வாழ்வைக் குறித்ததாய் இல்லாதிருந்தால், நகைச்சுவை யானதாகவே இருந்திருக்கும். யூதர்களைப் பொறுத்தமட்டில் Praetorium என்பது ஒரு புறஜாதியாரின் வீடாகக் கருதப்பட்டது. அதற்குள் நுழைவது என்பது யூதர் எவரும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாததாக இருந்தது, மற்றும் பஸ்கா வேளையின் போது அவ்வாறு செய்தல் என்பது இரு மடங்கு எண்ண முடியாததாயிருந்தது![3] இயேசுவைக் கொலை செய்ய வேண்டும் என்று சத்தமிட்டுக் கொண்டிருந்த யூதர்களுடன் பேசுவதற்காக பிலாத்து தனது சொந்த வீட்டை விட்டு வெளியே வர வேண்டியதாயிற்று. அடுத்த சில மணி நேரங்களில், இயேசுவை விடுதலை செய்வதற்கான வழியை வீணாய்த் தேடிக் கொண்டிருந்த பிலாத்து நிகழ்ச்சிகளுக்கான கருத்தை ஏற்படுத்துவதற்காக உள்ளே செல்வதும் வெளியே வருவதுமாய் இருந்தார்.

முதலில் பிலாத்து யூதத்தலைவர்களிடத்தில், “இவனை நீங்களே கொண்டுபோய் உங்கள் நியாயப்பிரமாணத்தின்படியே நியாயந்தீருங்கள்” (18:31) என்று கூறினார். இருப்பினும், அவர்கள் இயேசுவை மரணத்திற்குட் படுத்த விரும்பினார்கள், அதைச் செய்வதற்கு ரோம ஆளுநர் மட்டுமே உரிமை பெற்றிருந்தார். பிலாத்து இயேசுவை உள்ளே கொண்டு வரச் செய்து, அவரைக் கேள்வி கேட்கத் தொடங்கினார். அவர், “நீ யூதருடைய ராஜாவா?” (18:33) என்று கேட்டார். இயேசு அதற்கு நேரடியான பதில் கொடாத பொழுது, பிலாத்து, “நான் யூதனா?” (18:35) என்று வெடித்தார்.[4] பிறகு இயேசு பின்வருமாறு பதில் அளித்தார்:

> என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் இராஜ்யம் இவ்வுலகத் திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் இராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல (18:36).

இயேசுவிடம் நடந்த இந்தச் சலிப்பூட்டும் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பிறகு, பிலாத்து “மறுபடியும் யூதர்களிடத்தில் வெளியே வந்தார்” (18:38) மற்றும் அவர் இயேசுவிடம் தாம் ஒரு குற்றமும் காணவில்லை என்பதாக யூதத்தலைவர்களிடத்தில் கூறினார். (தாம் அதைப் பற்றி எவ்வளவு சரியாகக் கூறினோம் என்று அவர் உணர்ந்தறியவில்லை!)

பிலாத்து தாம் இயேசுவை விசாரணை செய்தது அவரைத் தம்மிடத்தில் நியாயத்தீர்ப்புக்காகக் கொண்டு வந்த கூட்டத்தைத் திருப்திப்படுத்தும் என்று நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. விடுவிப்பதற்கு “மேம்போக்கான” வழியைக் கொடுத்த பொழுது, அதை ஏற்றுக்கொள்ள மறுத்த (யூதத்) தலைவர்கள் அதற்குப் பதிலாக ஒரு கொலைகாரனை விடுதலை செய்யும்படி கேட்டார்கள்,[5] மற்றும் இயேசுவைச் சிலுவையில் அறையும்படி வற்புறுத்தினார்கள். இயேசுவின்

மீது குற்றம் சாட்டியவர்களைத் திருப்திப்படுத்தும் முயற்சியில் சலிப்புற்ற பிலாத்து அவரை (இயேசுவை) வாரினால் அடிப்பிக்கச் செய்து, தனது சேவகர்கள் அவரை அடிக்கவும் இகழவும் அனுமதித்தார். அப்பொழுது அவருக்கு (இரட்சகருக்கு) முள்முடி சூட்டடப்பட்டு, சிவப்பான அங்கியொன்றும் அணிவிக்கப்பட்டது.

சிறுமைப்படுத்தும் அங்கியையும் கிரீடத்தையும் இயேசு அணிந்திருக் கையில், பிலாத்து அவரை வெளியே கொண்டு வந்து, யூதத் தலைவர்களிடம் காண்பித்தார். இது இயேசுவின் மீதான அவர்களின் வெறுப்பைத் திருப்திப்படுத்தும் என்று பிலாத்து நம்பியிருந்தால், அவர் கவலைக்குரிய வகையில் தவறு செய்திருந்தார் என்றாகிற்று. மீண்டும் அவர்கள், "சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" (19:6) என்று சத்தமிட்டார் கள். அவர்களே அதைச் செய்யும்படி பிலாத்து அவர்களுக்குக் கூறினார். இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று உரிமைகோரியதாகப் பிலாத்துவிடம் அவர்கள் அறிவித்தார்கள். இந்தத் தகவலானது, அவரைச் சிலுவையில் அறையும்படி பிலாத்து விரும்பக் காரணமாவதற்குப் பதிலாக இது ஆளுநரைப் பயமுறுத்தியது. யூதர்களின் தேவன்மேல் பிலாத்து நம்பிக்கை கொள்ளாதிருந்தாலும், அவர் எந்தக் கடவுளையும் அவருடைய மகனைக் கொல்லுவித்தல் மூலமாக கோபப்படுத்த விரும்பவில்லை.

இயேசுவை என்ன செய்வது என்ற இடர்ப்படுத்தும் பிரச்சனை யிலிருந்து தப்பித்துக் கொள்ள தீர்வு ஒன்றைக் காண முயற்சி செய்த பிலாத்து, அரைத் திரும்பவும் Praetoriumத்தின் உள்ளே கொண்டு சென்று, மீண்டும் ஒருமுறை அவரிடத்தில் கேள்விக் கேட்கத் தொடங்கினார். இந்த முறை அவரது கேள்விகளுக்கு இயேசு பதில் அளிக்க மறுத்த பொழுது, பிலாத்து "உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலை பண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா?" (19:10) என்று (அநேகமாகச் சத்தமிட்டுக்) கூறினார். இயேசு, "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக் கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு" (19:11) என்று பதில் அளித்தார்.[6] இவ்வேளையில் பிலாத்து இயேசுவை விடுவிக்க ஒரு வழியைக் கண்டறிய இன்னும் கடினமாய் முயற்சி செய்தார்.

இயேசுவை விடுவிப்பதற்கான பிலாத்துவின் கடைசி முயற்சியையும் யூதத்தலைவர்கள் மறுத்த பொழுது, பிலாத்து இனியும் சகிக்கக் கூடாத வரானார். அலுவலக ரீதியான தீர்ப்புகள் தரப்படும் இடமான கபத்தா என்று அழைக்கப்பட்ட ஓரிடத்திற்கு அவர் இயேசுவைக் கொண்டு வரச் செய்தார். அங்கு அவர், "இதோ, உங்கள் இராஜா" (19:14) என்று கூறி அவரைச் சிலுவையில் அறைய ஒப்புக் கொடுத்தார். இயேசுவிடத்தில் விசாரணை முடிவுற்றது.

நியாயத்தின்படி பார்த்தால், அந்த இரவில் நடந்தவை யாவும் அவகீர்த்தியும் துன்பகரமுமானவைகளாய் இருந்தன. யோவானால் எடுத்துரைக்கப்பட்டபடி, இவ்விசாரணையானது இயேசு குற்றமறியா தவராயிருந்தார் என்பதை நிரூபித்தது! அதிகாரமும் அரசியலும் உண்மை

மற்றும் காரண அறிவு ஆகியவற்றை வெற்றி கொண்டன. “தவறான மக்களுக்கு” ஒரு பயமுறுத்தல் ஆகியிருந்தார் என்பதால் மட்டுமே குற்றமறியாத மனிதர் ஒருவர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டார். இருப்பினும், அந்த இரவிலும் அதைத் தொடர்ந்து வந்த காலையிலும் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்து கிறிஸ்தவர்கள் மாறுபட்ட கண்ணோக்குக் கொண்டுள்ளனர். நாம் இதை ஒரு பயங்கரம் நிறைந்த துன்ப நிகழ்ச்சி என்பதாக இன்றி, பெருந்தன்மையான கொடை என்பதாகவே அடிப்படையாகக் காண்கின்றோம். இயேசுவின் உயிர் அவரிடமிருந்து பறிக்கப்படவில்லை, அது அவரால் சுயாதீனமாய்க் கொடுக்கப்பட்டது என்று யோவான் வலியுறுத்தினார்.

## பேதுருவிடம் விசாரணை

பேதுருவிடம் நடந்த தனிப்பட்ட சொந்தமான ஆவிக்குரிய விசாரணையே அந்த இரவில் நடைபெற்ற இரண்டாம் விசாரணையாக இருந்தது. இவரது வரலாற்றை நாம், சீஷர்களின் பாதங்களை இயேசு கழுவிய வேளையிலிருந்து காணப் போகின்றோம். பேதுரு தம் இயல்புக்கு உண்மையான வகையில் முதலில் இயேசு தனது பாதங்களைக் கழுவி விடுவதைத் தடை செய்யக் கட்டுக்கடங்காத வகையில் செயல்பட்டார், பிறகு தனது உடல் முழுவதையும் கழுவி விடும்படி இயேசுவிடம் கேட்டுக் கொண்டார் (13:6-9). பிற்பாடு, இயேசு தம் சீஷர்கள் தம்மைப் பின் தொடர முடியாத இடத்திற்குத் தாம் செல்லப் போவதாகக் கூறிய பொழுது, பேதுரு தனது எஜமானரைத் தாம் பின்பற்றுவதை ஏதொன்றும் தடை செய்ய முடியாது என்று வலியுறுத்தினார். அவர், “ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக் கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்” (13:37) என்று கூறினார். பிறகு இயேசு, “எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ? சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாயென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” (13:38) என்று தீர்க்கதரிசனம் உரைத்தார். பேதுரு தாம் என்ன கூறுவது என்பதையும், அடுத்த சில மணி நேரங்களில் தாம் செய்ய விருந்தது என்ன என்பதையும் கற்பனை செய்ய முடியாதிருந்தார்.

அந்த இரவின் பிற்பகுதியில், தோட்டத்தில் பேதுரு, இயேசுவைக் கைது செய்ய வந்த வீரர்களுடன் போரிடத் தயாரானார் (18:10). அவர் ஒரு பட்டயத்தை எடுத்து, பிரதான ஆசாரியனின் சேவகனான மல்குஸ் என்ற மனிதரின் வலது காதற வெட்டினார். அந்தச் சேவகனின் தலையை வெட்டப் பேதுரு நோக்கம் கொண்டிருந்தாலும், அம்மனிதரின் வலது காதைத் தான் அவரால் வெட்ட முடிந்தது. அந்தப் போர் தொடங்கிய வேகத்திலேயே அது முடிவடைந்தது; இயேசு பேதுருவிடம் பட்டயத்தை உறையில் இடும்படிக் கூறினார். இவ்வரலாற்றின் இப்பகுதியில் பேதுரு சீஷர்களிலேயே மிகவும் தைரியமும் வீரமும் உடையவராகத் தோன்றினார்.

இயேசு பிரதான ஆசாரியரின் அரண்மனைக்குக் கொண்டு செல்லப் பட்ட பொழுது, பேதுருவின் தனிப்பட்ட சொந்தமான விசாரணை

வலுப்பெற்றது. பின்வரும் நிகழ்ச்சிகள் நடந்த பொழுது பேதுரு உண்மையில் அரண்மனை முற்றத்தினுள் இருந்தார் என்று யோவான் விளக்கினார் (18:15, 16). அப்பொழுது வாசல் காக்கிற வேலைக்காரி, பேதுரு உள் நுழைகையில் அவரிடம், "நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா?" (18:17) என்று கேட்டாள். அதற்கு அவர், "நான் அல்ல" என்று பதில் அளித்தார். சற்று நேரத்திற்கு முன்பு இயேசுவைக் கைது செய்ய அனுப்பப்பட்டிருந்த போர்வீரர் குழுவுடன் போரிடத் தயாராய் இருந்த மனிதர், இப்பொழுது ஒரே ஒரு அடிமைப் பெண்ணினால் பயம் அடைந்தார்!

இரவு குளிராயிருந்தது, எனவே அடிமைகளும் வீரர்களும் தங்களைச் சூடேற்றிக் கொள்ள கரிநெருப்புண்டாக்கினார்கள். நெருப்பைச் சுற்றி யிருந்த இம்மனிதர்களுடன் பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்த பொழுது, அவர்களில் ஒருவர் பேதுருவை நோக்கி, "நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா?" (18:25) என்று கேட்டார். "நான் அல்ல" என்று கூறியதன் மூலம் பேதுரு இயேசுவுடன் தமக்கிருந்த தொடர்பை இரண்டாம் முறையாக மறுதலித்தார். பேதுரு தம் இரண்டாம் மறுதலிப் பின் கசப்பை இன்னும் விழுங்கிக் கொண்டிருக்கையில், இன்னொரு அடிமை பேசத் தொடங்கினார், இவர் தோட்டத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் கண்ணால் கண்டவராகவும், பேதுருவால் காது வெட்டப்பட்ட மனிதருக்கு இனத்தாருமாய் இருந்தார். "நான் உன்னை அவனுடனே கூடத் தோட்டத் திலே காணவில்லையா?" (18:26) என்று அம்மனிதர் கேட்டார். "அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவியது" (18:27) என்று யோவான் பதிவு செய்துள்ளார். இயேசு விசாரிக்கப்பட்டுக் குற்றம் அறியாதவர் என்று கண்டறியப்பட்ட போது, பேதுரு விசாரிக்கப் பட்டு, ஒரு கோழை என்று கண்டறியப்பட்டார்.

சுவிசேஷங்கள் எப்பொழுதுமே மூன்று நிலைகளில் வாசிக்கப்பட வேண்டும். இயேசுவின் வாழ்வில் என்ன நடந்தது என்ற கேள்வி முதல் நிலையில் உள்ளது. சுவிசேஷ எழுத்தாளர் வரலாற்றை மறுபடி கூறுவதில் இருந்து ஆதி சபையார் கற்றுக் கொள்ளும்படி அவர் விரும்பியது என்ன என்ற விஷயம் இரண்டாம் நிலையில் உள்ளது. மூன்றாம் நிலையில், இந்த சுவிசேஷம் இன்றைய நாளில் நமக்கு அர்த்தப்படுத்துவது என்ன என்று நம்மை நாமே கேட்க வேண்டும்.

பேதுருவின் விசாரணை குறித்த "முதல் நிலை" வாசிப்பானது பேதுரு இயேசுவை மும்முறை மறுதலித்தார் என்று நமக்குக் கூறுகின்றது. "இரண்டாம் நிலை" வாசிப்பானது, தங்களுக்குக் கொடிய உபத்திரவத்தைக் கொண்டுவரும் என்றாலும் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை வெளியரங்கமாய்ச் செயல்விளக்கப் படுத்த வேண்டும் என்று இந்த சுவிசேஷத்தில் ஏற்கனவே பலமுறைகள்[7] எடுத்துரைக்கப்பட்டிருக்கும் செய்தியை நமக்குக் கொண்டு வருகின்றது. நமது "மூன்றாம் நிலை" வாசிப்பானது, உலகம் நம்மைத் துன்புறுத்தி இகழ்ந்தாலும் இயேசுவில் நமது விசுவாசத்தை அறிக்கை செய்து நாம் தைரியமாய் நிலைத்திருக்க நம்மை அழைக்கின்றது.

எனது நல்ல நண்பர் ஒருவர் 1995ல் ஒரு ஊழிக்காரராக ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். அவர் கர்த்தர்மேல் அன்புகூர்ந்தவராய் மற்றவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதில் மாபெரும் உறுதிப்பாடு கொண்டு விளங்குகிறார். அயல்நாட்டின் ஊழியர் என்ற உண்மை நிலையில் அவர் வைராக்கியமுள்ள கிறிஸ்தவராய் நிலைத்து நிற்கிறார். அவருடைய தொடக்க கால ஊழிய அறிக்கைகள் ஒன்றில் அவர் ஆப்பிரிக்காவுக்குச் சென்ற தமது விமானப் பயணம் பற்றி எழுதினார்:

> ... கடந்த வசந்த காலத்தில் உகாண்டா செல்லும் ஆகாய விமானத்தில் எனக்குப் பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்தவர் கூறிய சில விஷயங்கள் எனக்குள் நிழல் போல நிலைத்துள்ளது. இயேசுவைப் பற்றிப் பிரசங்கிப்பதற்காக நாங்கள் உகாண்டா செல்கிறோம் என்று நான் விளக்கப்படுத்திய பிறகு, அந்த ஐரோப்பிய மனிதர், "என்னைக் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள், ஆனால் ஆப்பிரிக்காவில் அவர்களுக்கு ஏற்கனவே தெய்வங்கள் இல்லையா?" என்று என்னிடம் கேட்டார். அதற்கு எவ்விதம் பதில் அளிப்பது என்று எனக்குத் தெரியவில்லை, எனவே நான் ஒன்றும் கூறவில்லை.

இயேசு கைது செய்யப்பட்ட இரவில் பேதுரு உணர்ந்ததைப் போலவே எனது நண்பரும் உணர்ந்தார் என்பதே அந்த அனுபவத்தைப் பற்றி அவரைக் கவலையுறச் செய்தது என்று நான் நினைக்கின்றேன். பயந்து போய் அமைதியாய் இருப்பது எது போலிருக்கும் என்று நானும் கூட அறிந்துள்ளேன். நமது உலகில் உள்ள சூழ்ச்சிக்கார சக்திகள், "நமது கர்த்தரை மறுதலித்தல்'' என்ற நினைக்க முடியாத செயலை நாம் செய்யக் காரணமாகின்றன என்ற எச்சரிக்கையையே பேதுருவின் விசாரணை பற்றிய யோவான் சுவிசேஷத்தின் வரலாறு நமக்குக் கூறுகின்றது!

## பிலாத்துவிடம் விசாரணை

அந்த இரவைச் சாதாரணமாய்க் கவனிப்பவருக்கு, இயேசு ஒருவர் மட்டுமே விசாரணைக்கு உட்பட்டார் என்று தோன்றும். இருப்பினும், பேதுரு மற்றும் பிலாத்து ஆகிய இருவரும் கூட தங்கள் சொந்த வழிகளில் விசாரிக்கப்பட்டனர் என்று யோவான் சுவிசேஷம் காண்பிக்கின்றது. பேதுருவின் உறுதிப்பாடு சோதிக்கப்பட்டது, மற்றும் பிலாத்து எக்காலத்திலும் மாபெரும் கேள்வியாக இருக்கும் ஒன்றை எதிர்கொண்டார்: "இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?'' இயேசுவுடன் கூட இருந்த மூன்று வருட கால அளவில் அவருடைய சீஷர்கள் கையாண்டிருந்த எல்லாக் கேள்விகளையும், ஒரு சில மணி நேரத்திலேயே பிலாத்து எதிர்கொள்ள வேண்டியதாய் இருந்தது.

இயேசு பிலாத்துவின் முன்பாகக் கொண்டு வரப்பட்ட பொழுது, "இவனை நீங்களே கொண்டு போய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள்" (18:31) என்பதே அந்த ஆளுநரின் முதல் குறிப்புரையாய் இருந்தது. யூதர்களைப் பற்றியோ அவர்களின் நிலையான வாக்குவாதங்கள்

*பற்றியோ பிலாத்து சற்றும் கவலைப்படவில்லை. இருப்பினும் இயேசுவைப் பற்றிய பிரச்சனையானது தீராததாயிருந்தது, எனவே இந்த "யூதத்துவ வாக்குவாதத்திற்கு" அமைதி நிறைந்த தீர்வு ஒன்றைக் காண முயற்சி செய்வதில் பிலாத்து அடுத்த பல மணி நேரங்களைச் செலவிட்டார். இவ்வாறு செய்யும் பொழுது, அவர் இயேசுவைக் குறித்து என்ன செய்வது என்ற கேள்வியுடன் போராட வேண்டியதாயிற்று.*

*நாம் கண்டுள்ளபடி, பிலாத்துவின் முதல் பதில்செயலானது (18:31), அக்கறையின்மையாய் இருந்தது. அவர் இயேசுவைப் பற்றி எவ்வகையிலும் கவலைப்படவில்லை. இயேசு அங்கு இல்லாதொழிய வேண்டும் என்பதே அவருடைய (பிலாத்துவினுடைய) முன்னுரிமையாய் இருந்திருக்கும். இன்றைய நாளில் இயேசுவைக் குறித்து நாம் எதிர்கொள்பவற்றில் அக்கறையின்மை என்பது மிகவும் பொதுவான எண்ணப்போக்காக உள்ளது. பெரும்பாலான மக்கள் அவரைப் பற்றிச் சிந்திக்காமல் இருப்பதையே தேர்ந்து கொள்ளுகின்றனர். இருப்பினும், பிலாத்து இயேசுவைப் பற்றி ஒரு முடிவெடுப்பதைத் தவிர்க்க முடியாததாக இருந்தது, மற்றும் இன்றைய நாளில் நாமும் இதைத் தவிர்க்க முடியாது!*

*இயேசுவுக்குப் பிலாத்துவின் இரண்டாம் பதில்செயல் இகழ்ச்சி* (or) *வெறுத்து ஒதுக்குதல் என்பதாக இருந்தது. இயேசுவை ஆளுநர் முதலில் கேள்வி கேட்ட பொழுது, "நான் யூதனா? உன் ஜனங்களும், பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய்?" (18:35) என்று அவர் கேட்டார். பிலாத்துவைப் பொறுத்த மட்டில் இயேசு, கலகம் செய்யும் இன்னொரு யூதராயிருந்தார். இன்றைய நாட்களிலும் கூட பலர் இயேசுவை இதே விதமாகவே கருதுகின்றனர். அவர்கள் இயேசுவின் மீதும் அவருடைய போதனைகளின் மீதும் வெறுப்பை மட்டுமே காண்பிக்கின்றார்கள்.*

*இயேசுவுக்குப் பிலாத்துவின் அடுத்த பதில்செயல் தவிர்த்து ஒதுக்குதல் என்பதாக இருந்தது. முதல்முறையாக அவரைக் கேள்வி கேட்ட பிறகு, பிலாத்து அந்த நசரேயரைப் பற்றி முடிவெடுக்கும் வழியில் இருந்து ஒதுங்கும் நடவடிக்கை மேற்கொள்ள முயற்சி செய்தார். பஸ்கா பண்டிகையினிமித்தமாக இயேசுவை விடுதலை செய்யலாம் என்ற தீர்வை அவர் (பிலாத்து) முன்மொழிந்த பொழுது (18:38, 39), பிலாத்து இயேசுவைப் பற்றி ஒரு உறுதியான தீர்ப்புக் கூறுவதைத் தவிர்க்க மட்டுமே முயற்சி செய்தார். இன்றைய நாட்களில்கூட இயேசுவுக்கு இதே விதமான பதில்செயலை நீங்கள் கண்டிருக்கின்றீர்களா? மக்கள் இயேசுவைக் குறித்துத் தாங்கள் செய்ய வேண்டிய சிலவற்றைத் தவிர்ப்பதற்கு தங்கள் பணி, பொழுது போக்கு, இசை அல்லது தங்கள் விருந்து ஆகியவற்றில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்!*

*இயேசுவுக்குப் பிலாத்துவின் நான்காவது பதில்செயல் பயம் என்பதாக இருந்தது. இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று உரிமைகோரிக் கொண்டதாகப் பிலாத்து கேள்விப்பட்ட பொழுது, பயம் அடைந்தார் (19:8). யூதர்கள் அனைவரின் வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றின் மீது பிலாத்து அதிகாரம் கொண்டவராயிருந்தாலும், தமக்கு முன்பு கட்டப்பட்டு*

நின்ற இந்த கலிலேயரைக் குறித்து அவர் பயம் அடைந்தார்! நாட்டு எல்லைகளில் உள்நுழைகையில், "எச்சரிக்கை! துப்பாக்கிகளையோ அல்லது வேதாகமங்களையோ கொண்டு செல்லக் கூடாது!" என்ற அறிவிப்புப் பலகைகளைக் கடந்து சென்றுள்ள ஊழியர்கள் பலரை நான் அறிந்துள் ளேன். இன்றைய நாட்களில் மிகவும் வல்லமையுள்ள அரசுகள் கூட இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய வல்லமையின் முன்பாக நடுங்குகின்றன, அவைகள் யுத்தத்தின் ஆயுதங்களைக் கண்டு நடுங்குவதைவிட அதிகமாகவே இதற்கு அஞ்சி நடுங்குகின்றன.

கடைசியாக பிலாத்து இயேசுவுக்கு, யூதத்தலைவர்களின் வலியுறுத்தம் என்ற குழிக்குள் சறுக்கி விழுந்ததின் மூலம் பதில்செயல் செய்தார். இயேசு குற்றம் இல்லாதவர் என்பதைப் பிலாத்து அறிந்திருந்தார், ஆனால் நியாயமானதற்காக எழுந்து நிற்கக் கூடிய தைரியம் அவருக்கு இல்லை. அதற்குப் பதிலாக, அவர் தப்பிக்கச் சுலபமான வழியைத் தேர்ந்து கொண்டு, இயேசுவைச் சிலுவையில் அறைய அனுமதித்தார். இவ்வகையில் பேதுரு மற்றும் பிலாத்து ஆகியோரின் வரலாறுகள் ஒன்றுபோல் உள்ளன.

இயேசுவைக் குறித்து முடிவு ஒன்றெடுப்பதை எவரொருவரும் தவிர்க்க முடியாது என்பதைப் பிலாத்துவின் வரலாறு விவரிக்கின்றது. நாம் அவரைக் கண்டுகொள்ளாதிருக்க முயற்சி செய்ய முடியும், ஆனால் அவர் கண்டுகொள்ளப்படாதவராக இருக்க மாட்டார். ஏதோ ஒரு வேளையில் நாம் அவருக்கு ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்று பதில்கூறும்படி நிர்ப்பந்திக்கப்படுவோம். நாம் யாவரும் அவரை விட்டுத் திரும்பும்படி யாகவோ அல்லது குறைந்தபட்சம் அவரிடத்திலிருந்து விலகியிருக்கும்படி யாகவோ நிர்ப்பந்தத்தை எதிர்கொள்ளுவோம், மற்றும் இன்னும் நாம் யாவரும் இயேசுவைக் குறித்து என்ன செய்வது என்று முடிவெடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

## முடிவுரை

நாம் கவனித்துள்ள மூன்று விசாரணைகளும் சுவிசேஷத்தையும் அதற்கு நமது பதில்செயலையும் விவரிக்கின்றன. இயேசு விசாரிக்கப்பட்டுக் குற்றம் இல்லாதவராய்க் காணப்பட்டார். நீங்களும் நானும் பேதுரு மற்றும் பிலாத்து ஆகியோரைப் போல இப்பொழுது விசாரணையில் இருக்கின் றோம். ''நமக்காக மரித்த ஒருவருக்காக நாம் நிலைத்து நிற்போமா?'' என்பதே நமக்கு முன்பாக இருக்கும் கேள்வியாக உள்ளது. நிர்ப்பந்தம் ஏற்படும் பொழுது, "நான் நசரேயனாகிய இயேசுவின் சீஷன்" என்று கூற நாம் போதிய பலம் உள்ளவர்களாய் இருப்போமா? அவரைக் குறித்து ஒரு முடிவு செய்தலை நாம் தவிர்க்க முடியாது. இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?

குறிப்புகள்

*[1]பலத்த மழையின் போது, கெதரோன் ஆறானது எருசலேமின் கிழக்குப் பகுதியில் உள்ள சமவெளி நிலங்களில் பொங்கிப் பெருகி, நகர மதில்களை ஒலிவ மலையில் இருந்து பிரிக்கும். ஒலிவ மலையின் மீதுதான் இவ்வசனங்களில் குறிப்பிடப்படுகின்ற கெத்செமனே தோட்டம் இருந்தது (மத். 26:36). [2]ரோமாபுரிக் கலாச்சாரத்தை அதிகம் கொண்டிருந்த செசரியாவின் துறைமுகப் பட்டணத்தில் ரோம ஆளுநர் தனிப்பட்ட வகையில் வாழ்ந்தார். இருப்பினும், பஸ்கா பண்டிகையின் விசேஷித்த தனிச்சிறப்பின் காரணமாகவும், அப்படிப்பட்ட வேளையில் ரோமாபுரிக்கு எதிராக யூதர்கள் எப்பொழுதும் கலகம் செய்யும் இடர்ப்பாட்டின் காரணமாகவும், ஆளுநர் தம் அரசியல் மற்றும் படை சார்ந்த பிரசன்னத்தை அவ்வேளையின் போது எருசலேமில் ஏற்படுத்தினார். (பஸ்காப் பண்டிகை என்பது இன்னொரு அடக்கு முறையாளராயிருந்த எகிப்திடமிருந்து யூதர்கள் தப்பி வந்ததை நினைவுகூரும்படியாகவே தொடங்கியதல்லவா!) [3]அப். 10:28; 11:3, 12 ஆகிய வசனங்களைக் காணவும். [4]யூதர்களைச் சிறுமைப்படுத்தி வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் அவர்களைக் குற்றப்படுத்தினார் என்பதாகப் பிலாத்துவை ஒரு கொடுமைக்கார ரோம ஆளுநராய்க் கண்ணோக்கிய பழங்கால வரலாற்றாளர்கள் பெரும்பாலானோரைக் காட்டிலும் வேத வசனங்கள் பிலாத்துவைப் பெருந்தன்மையுடனே நடத்துகின்றன. பிலாத்து இஸ்ரவேலை ஆண்ட பத்தாண்டு காலத்தின் போது, தேவாலயப் பொக்கிஷத்திலிருந்து களவு செய்தல், நகருக்குள் குற்ற உணர்வூட்டும் ரோமானிய “விக்கிரகங்களைக்” கொண்டு வந்ததின் மூலம் ஒரு கலகத்தைத் தொடங்குதல், ஆராதிக்க வந்த கலிலேயக் குழுவினர்களைக் கொன்று (லூக். 13:1) போடுதல் மற்றும் கொரீசிம் மலையின் மீது சமாரியர்கள் பெருந்திரளாய்க் கூடியிருந்த போது அவர்களைக் கொன்று போடுதல் போன்றவற்றைச் செய்திருந்தார். “நான் யூதனா?” என்று இயேசுவிடம் பிலாத்து கேட்ட பொழுது, அவர் (பிலாத்து) இடக்கமானவராயிருந்தார், ஏனெனில் பிலாத்து யூதர்களின் மீது தான் கொண்டிருந்த வெறுப்பை மறைக்க முயற்சி செய்யாதிருந்தார். [5]சமீபத்தில் நடந்திருந்த அரசியல் கலவரம் ஒன்றில் பரபாஸ் கொலை செய்திருந்தான் (லூக். 23:19; அப். 3:14). [6]இயேசு தமது சுயசித்தத்தின்படியே தம் ஜீவனைக் கையளித்தார் என்ற பாடக் கருத்தானது இதற்கு முன்பு, இயேசு நல்ல மேய்ப்பன் என்ற வகையிலான உறவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது (10:17, 18). [7]நிக்கொதேமு (யோவான் 3) மற்றும் பார்வையற்றுப் பிறந்த மனிதர் (யோவான் 9) ஆகியோரின் வரலாறுகள் இந்த ஆய்வுக் கருத்துக்கான முந்திய இரு எடுத்துக் காட்டுகளாக உள்ளன.*

# "அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்" [19:1-42]

எல்லாக் காலத்திலும் மாபெரும் அன்பின் வரலாறாக இருப்பது எது? சிலர், சின்ட்ரெல்லா, தூங்கும் அழகி அல்லது பனி வெண்ணழகி பற்றிய தேவதைக் கதையை நினைத்திருக்கலாம். ஒவ்வொரு கதையும், ஒரு அழகு மிக்க, நல்மனம் கொண்ட பணிப்பெண்ணையும் அவளைக் காப்பாற்றிய அழகு மிக்க, உயர்குடி இளவரசனையும் சித்தரித்து, அவர்கள் "அதன் பிறகு எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருந்தார்கள்" என்று முடிக்கின்றது. ஒருவேளை உங்கள் சிந்தையானது அதிகம் இளமைக் காதல் கதையான *ரோமியோ ஜூலியட்* அல்லது *காற்றுடன் போனது* போன்றவற்றை நோக்கிச் செல்லலாம்.

அன்பின் கதைகள் பற்றி நீங்கள் நினைக்கும் பொழுது, குழந்தையின் மீது பெற்றோரின் அன்பை நீங்கள் நினைக்கின்றீர்கள். கடினமானதொரு குளிர்காலப் பனிப்புயலில் சிக்கிக் கொண்ட குடியானவத் தாய் மற்றும் அவளுக்குப் பிறந்திருந்த பச்சிளம் குழந்தை ஆகியோரைப் பற்றிய கதை கொரியாவில் இருந்து வருகின்றது. தனது சிறு குழந்தையைக் காப்பாற்ற நம்பிக்கையிழந்த வகையில் முயற்சி செய்த அந்தத் தாய் தனது கனத்த துணிகளை எடுத்து தனது குழந்தையை அவைகளால் சுற்றிப் பொதிந்தாள். அடுத்த நாள் காலையில், உறைந்த போயிருந்த அவளுடைய உடல் கண்டு பிடிக்கப்பட்டது, அவளுக்கு அருகில் இருந்த துணிப் பொதியிலிருந்து பாதுகாப்புடனும், கதகதப்புடனும் இருந்த அவளது மகனின் அழுகுரல் கேட்டது. அவன் வளருகையில், அவனது தாயின் அன்பு மற்றும் தியாகம் பற்றி அடிக்கடி அவனுக்குக் கூறப்பட்டது. குளிர்காலத்தில் ஒருநாள், அவன் தனது தாயின் கல்லறையருகில் தன் மேல் கோட்டு அல்லது சட்டை எதுவுமின்றி அவன் காணப்பட்டான். மீண்டும் மீண்டும் அவன், "அம்மா, நீங்கள் எனக்காக அனுபவித்த குளிர் இப்படியிருந்ததா?" என்று கேட்டுக் கொண்டே இருந்தான்.

இது போன்ற கதைகள், அன்பின் மாபெரும் செயல்விளக்கங்கள் என்ற வகையில் நமது இருதயங்களைத் தொடுகின்றன. இருப்பினும், எல்லாக் காலத்திலும் மாபெரும் அன்பின் வரலாறு என்பது நிச்சயமாக யோவான் 19ல் இருந்துதான் வர வேண்டும். இது நமது தேவன் நம்மை எவ்வளவாக அன்புகூருகின்றார் என்பதைப் பற்றிய வரலாறு ஆகும்; இது சிலுவையின் வரலாறாக உள்ளது.

## அன்பின் வரலாறு என்ற வகையில் சிலுவை

அன்பின் வரலாறு என்ற வகையில் சிலுவையைப் பற்றிப் பேசுவது என்பதில் புதுமை எதுவும் இருப்பதில்லை. சிலுவை என்பது தேவனுடைய அன்பின் நிறைவான செயல்விளக்கமாயிருந்ததென்று யோவான் பலமுறை சுட்டிக்காட்டியிருந்தார்:

> தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (3:16).

> பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார் (13:1).

> நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை (15:12, 13).

சிலுவையைக் குறித்துப் பல விளக்கங்கள் தரப்படலாம். சிலுவை என்பது தேவனுடைய அன்பின் நிறைவான செயல்விளக்கமாக இருந்தது என்பது யோவான் சுவிசேஷத்தில் வலியுறுத்தப்படும் விளக்கமாக உள்ளது.

அன்னா, காய்பா மற்றும் பிலாத்து ஆகியோரிடம் விசாரிக்கப் பட்டதைத் தொடர்ந்து, சிலுவையிலறையப்படும்படி இயேசு யூதர்களிடம் ஒப்புவிக்கப்பட்டார். சிலுவை என்பது கிறிஸ்தவ விசுவாசத்தின் மூலைக் கல்லாக இருந்தாலும், அவ்வுண்மை நிகழ்ச்சியானது ஒரு சில வார்த்தைகளில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது.

> அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்து கொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப் போனார். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடே கூட வேறிரண்டு பேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள் (19:17, 18).

உண்மையில், சுவிசேஷ எழுத்தாளர்கள் நான்கு பேரில், எவரும் இயேசு சிலுவையில் அறையப்படுதல் பற்றிய இயல்பான விபரங்கள் பலவற்றைத் தரவில்லை. “அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்” என்பவை மிகப் பேரளவான அர்த்தம் சுமந்த எளிய வார்த்தைகளாக உள்ளன. இயேசு தேவனுடைய குமாரனாக உள்ளார் என்று விசுவாசிக்கின்ற (இதோ, அந்த வார்த்தை மீண்டும் வருகின்றது!) ஒருவர், ஆழமான உணர்வுக்கு

ஆட்படாமல் இவ்வார்த்தைகளை வாசிக்க முடியாது. ‘‘அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்’’ என்ற யோவானின் கூற்றினுடைய வல்லமை அவ்வளவு பெரிதாய் இருக்கின்றது.

அடுத்ததாக யோவான், இயேசுவின் தலைக்கு மேலாக ஒரு மேல் விலாசம் போடும்படி பிலாத்து ஆணையிட்டது எவ்விதம் என்று கூறினார். அதில், ‘‘நசரேயனாகிய இயேசு யூதருடைய இராஜா’’ என்று எழுதப் பட்டிருந்தது (19:19). திகைப்பூட்டும் இக்கூற்றானது எபிரெயு (யூதர்களின் மொழி), இலத்தீன் (ரோமர்களின் மொழி), மற்றும் கிரேக்கு (அந்த நாளில் பொதுவான வர்த்தக மொழி) ஆகியவற்றில் எழுதப்பட்டிருந்தது. இது, இயேசுவின் மரணத்திற்குக் காரணமாயிருந்த பிரதான ஆசாரியர்களுக்குப் பயங்கரமாகக் குற்ற உணர்வூட்டுவதாயிருந்தது. அந்த மேல் விலாசத்தில், “இம்மனிதன் தன்னை யூதருடைய இராஜா என்று கூறிக் கொள்கிறான்” என்று எழுதப்பட்டிருக்கும்படி அவர்கள் விரும்பினார்கள். பிலாத்துவோ, பண்புக்குட்படாத பலத்தினாலோ அல்லது குற்ற உணர்வூட்டும் பண்பினாலோ, “நான் எழுதினது எழுதினதே” (19:22) என்று கூறினார்.

சிலுவையின் மீது பதிக்கப்பட்ட மேல் விலாசமானது யோவான் சுவிசேஷத்தில் ஒருவர் தாம் அறிந்திருந்தவைகளுக்கும் அதிகமானதைக் கூறியதற்கான இன்னொரு எடுத்துக்காட்டாக உள்ளது. முன்பு நாம் இதனை, யூத ஆலோசனைச் சங்கத்தாரிடம் காய்பா, “உங்களுக்கு ஒன்றுந் தெரியாது; ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள்” (11:49, 50) என்று கூறியிருந்ததில் காண்கின்றோம். அதைத் தொடர்ந்து யோவான் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்:

> இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூத ஜனங்களுக்காக மரிக்கப் போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறி யிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப் போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான் (11:51, 52).

இதே வகையிலேயே, பிலாத்து சிலுவையில் இயேசுவின் தலைக்கு மேல் வைக்கும்படியான மேல் விலாசத்திற்குக் கட்டளையிட்ட பொழுது அவர் உணர்ந்தறிந்திருந்ததை விட அதிக ஆழமான சத்தியம் ஒன்றை பேசினார்.

இயேசுவைச் சிலுவையில் அறையும்படி கட்டளை பெற்ற வீரர்கள் பயங்கரமானதாயிருந்தாலும், சலிப்பூட்டக் கூடியதாகவும் இருந்த பணியை நிகழ்த்த வேண்டியிருந்தது. ஒரு நபரைச் சிலுவையில் அறைந்து, அந்தச் சிலுவையை உயர்த்திய பிறகு, அந்நபர் இறந்து போவதற்காகக் காத்திருப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கு இல்லாதிருந்தது. நேரத்தைக் கழிப்பதற்காகவும், சற்றுக் கூடுதலாய்ப் பணம் ஈட்டுவதற் காகவும், அவர்கள் சிலுவையில் அறைந்த நபருடைய உடைகளைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டார்கள். இயேசுவின் உடைகளை அவர்கள் நான்கு பங்குகளாகத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர், மற்றும் அவர்

அணிந்திருந்த தையல் இல்லாத அங்கி யாருக்குக் கிடைக்கும் என்பதற்காக அதைக் குறித்துச் சீட்டுப் போட்டார்கள்.

சிலுவையில் அறைதல் என்பது தண்டனை நிறைவேற்றத்தின் வழி முறையாக மட்டும் இருந்ததில்லை; அது முற்றிலும் சிறுமைப்படுத்தி வெட்கக் கேட்டிற்குள்ளாக்கும் வழிமுறையாகவும் இருந்தது. அது பெரும்பாலும் ஒரு பொதுவான இடத்தில், அந்த அவமானமான காட்சியை அவ்வழியே கடந்து செல்வோர் யாவரும் காணும் வகையில்தான் எப்பொழுதும் நடத்தப்பட்டது. இவ்விதமாய் இறக்கும் நபரையும் அவன் பிரதிநிதித்துவப்படுத்தும் காரணம் அல்லது குற்றத்தையும் சிறுமைப் படுத்துதல் என்பதே இதைச் செய்த ரோமர்களின் நோக்கமாய் இருந்தது. ரோமக் குடிமகன்களை அவர்கள் சிலுவையில் அறைந்ததில்லை; இவ்வகையான தண்டனையானது அடிமைகள், அயல் நாட்டினர், மற்றும் கீழ்த்தட்டு வர்க்க மக்கள் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டதாயிருந்தது. அவர்கள் பெரும்பாலும் நிர்வாணமாகச் சிலுவையில் அறையப்பட்டனர், அவர்களின் உடல்கள் அழுகிப் போகும்படி வாரக் கணக்கில் சிலுவைகளி லேயே விடப்பட்டு, இவ்விதமாக அக்காட்சியானது மிகவும் வெறுப்பும் அருவருப்பும் தரும் வகையில் இருக்கும். போர் வீரர்கள் இயேசுவின் உடைகளைப் பங்கிட்டுக் கொண்டனர் என்று யோவான் பதிவு செய்த பொழுது, சிலுவையினால் நோக்கப்படுத்தப்பட்ட அவமானம் நிறைந்த ஒரு சிறுமைப்படுத்துதலை - நம் எல்லாருக்காகவும் இயேசு சுமந்த சிறுமைப் படுத்துதலை - நமக்கு அவர் நினைவூட்டினார்!

யோவானின் குறிப்பு அடுத்தபடியாக, சிலுவையின் அடியில் நின்று கொண்டிருந்த பெண்களின் பக்கம் திரும்புகின்றது. இயேசுவின் தாயான மரியாளும் அவர்களில் ஒருவராய் இருந்தார். இப்படிப்பட்ட மரணத்தை அடையும் தனது மகனைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு தாயின் இருதயத்தில் உள்ள வேதனையைக் கற்பனை செய்து பார்ப்பது கூடக் கடினமானதாக உள்ளது. இருப்பினும் இயேசு தமது பாடுகளிலும் கூடத் தம்முடைய தாயின் தேவைகளைக் கவனித்து அவற்றிற்கு ஊழியம் செய்யக் கூடியவராய் இருந்தார். இயேசுவின் இளமைப் பருவத்திலேயே யோசேப்பு இறந்திருந்தார் என்பதால், இயேசு தாம் மரித்த பிறகு மரியாள் தன்னைத் தானே கவனித்துக் கொள்வதில் சிரமப்படுவார்கள் என்பதை அறிந்தார். இயேசு சிலுவையில் இருந்து கீழ் நோக்கிக் காண்கையில், ''தமக்கு அன்பாயிருந்த சீஷனை'' (அநேகமாக யோவானை) அங்கு கண்டு, தம்முடைய தாயிடத்தில் “ஸ்திரீயே, அதோ, உன் மகன்” (19:26) என்றார். பிறகு அவர் யோவானிடத்தில், “அதோ, உன் தாய்” (19:27) என்றார். அவ்விருவரும், அவர் எதனை அர்த்தப்படுத்தினார் என்று அறிந்தனர்; மரியாளை யோவான் தன் சொந்தத் தாய் போல் ஏற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்பில் இருந்தார், மற்றும் அந்நாளில் இருந்து மரியாள் யோவானு டைய வீட்டில் வசிக்கும்படி சென்றார்.

மரியாள் மற்றும் யோவானிடம் இயேசுவின் வார்த்தைகளே கூட இயேசுவின் அன்பினுடைய வல்லமையையும் தூய்மையையும் சுட்டிக் காட்டுகின்றன. துன்புறுதல் என்பது நம்மை சுயமையமுள்ளவர்களாக்கிக்

கொள்ளும்படியாகச் சாய்க்கின்றது. நாம் வேதனையை உணருகின்ற பொழுது, எவரொருவரையும் அல்லது வேறு எதைப் பற்றியும் நினைப்பது என்பது கடினமானதாக உள்ளது. இந்த உண்மையானது இயேசு சிலுவையில் மரித்த வேளையில் தம்முடைய தாயின் தேவைகளைக் குறித்து நினைத்துச் செயல்பட்டதை மிகவும் குறிப்பிடத் தக்கதாக்குகின்றது.

இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, சிலுவையின் வரலாறு மிக விரைவாக ஒரு முடிவுக்கு வந்தது. இயேசு தம்முடைய பணிப் பொறுப்பை முடித்திருந்ததை அறிந்தார். பிறகு அவர், "தாகமாயிருக்கிறேன்" (19:28) என்று உரைத்தார், மற்றும் சிலர் அவருக்குக் கடற்காளானில் தோய்க்கப் பட்ட காடியைக் கொடுத்தார்கள். இந்த சுவிசேஷத்தில் நாம் அடிக்கடி கண்டுள்ளபடி, மீண்டும் ஒருமுறை இயேசுவின் மனிதத்துவம் வலியுறுத்தப் படுகின்றது. பசியாகவும் களைப்பாகவும் இருத்தல் (4:6) மற்றும் ஆவியில் ஆழமான கவலையுற்றிருத்தல் (11:33) என்பது எப்படியிருந்தது என்று அவர் அறிந்திருந்தார். இயேசு நமது மனிதத்துவத்தை முற்றிலும் புரிந்துள்ளார், மற்றும் அதை அவர் மரிப்பதற்குச் சற்று முன் "தாகமாயிருக்கிறேன்" என்று கூறிய பொழுது விவரித்தார்.

பிறகு இயேசு சிலுவையிலிருந்து தம்முடைய கடைசி வார்த்தையை உரைத்தார்: "முடிந்தது!" (19:30). அத்துடன் "அவர் தலை சாய்த்துத் தம் ஆவியை ஒப்புக் கொடுத்தார்." அவர் தம் வாழ்க்கைக்கான ஒரு திட்டத் தைப் பின்பற்றினார், மற்றும் கடைசியில் அவர் அதனை நிறைவேற்றினார். அவரது மரணம் தற்செயலானதல்ல மற்றும் எவரொருவரும் அவருடைய ஆவியை அவரிடமிருந்து பறிக்கவில்லை. அவர் நமது பாவமன்னிப்புக்காகத் தேவனுடைய திட்டப்படி தம்முடைய ஜீவனைக் கையளித்தார்!

## முடிவெடுக்க ஒரு அழைப்பாகச் சிலுவை

சிலுவையில் இயேசுவின் மரணம் பற்றிய வரலாறு குறித்து நாம் என்ன செய்ய வேண்டும்? அதைக் குறித்து நாம் மோசமாக உணர வேண்டுமா? நாம் அகம் மகிழ வேண்டுமா? நாம் வேறு ஏதேனும் செய்வது அவசியமா?

யோவான் சுவிசேஷம் முழுவதிலும் மக்கள் அவ்வரலாறுகளைக் கவனித்து, கேள்விப்பட்டு மற்றும் இயேசுவுடன் உரையாடியது போலவே நாமும் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கின்றோம். இவைகள் அவர்களின் வரலாறுகளாக மட்டும் இருக்கும்படி நோக்கம் கொண்டவையல்ல; அவைகள் *நமது* வரலாறுகளாகவும் இருக்கின்றன. இந்த சுவிசேஷமானது இயேசுவில் *அவர்கள்* கொண்ட விசுவாசத்தைப் பற்றியது மட்டும் அல்ல; இது *நமது* விசுவாசத்தைப் பற்றியதுமாக உள்ளது. யோவான் இதை, இயேசுவின் மரணம் பற்றிய தமது விபரத்தைத் தொடர்ந்து நமக்கு நினைவூட்டினார்: "அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான், அவனு டைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான்" (19:35). மீண்டும் நாம் ''விசுவாசம்'' பற்றிய கேள்வியைக் காண்கின்றோம். நெருக்கம் வரும்போது நிலைநிற்க முடியாதிருந்தவர்கள் என்ற வகையில் பேதுரு

மற்றும் பிலாத்து ஆகியோரின் எடுத்துக்காட்டுகளைப் பற்றிய விபரங்களை யோவான் நமக்குத் தந்தார். இதற்கு நேர் மாறான வகையில், இயேசுவின் மரணத்தைத் தொடர்ந்து அவர் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடத் தைரியம் கொண்டிருந்தவர்களின் இரு எடுத்துக்காட்டு களையும் அளித்தார்.

அரிமத்தியா ஊர் யோசேப்பு என்பவர் இயேசுவின் சீஷராயிருந்தார், ஆனால் அவர் யூதத் தலைவர்களுக்குப் பயந்ததினால் இரகசிய சீஷராய் இருந்தார். இயேசு இறந்த பொழுது, அவருடைய சரீரத்தைப் புதைக்கும்படி எடுத்துக் கொள்ள பிலாத்துவிடம் சென்று அவர் அனுமதி கேட்டார். இது இயேசுவைப் பின்பற்றுபவர் என்று அடையாளப்படுத்திக் கொள்வதில் பயமடைந்த ஒருவரின் “இரகசியமான” செயலல்ல என்பது உறுதி![1]

இயேசுவின் உடலைப் புதைத்தல் என்ற பயமற்ற செயலில் யோசேப்பின் கூட்டாளியாக இருந்தவர் நிக்கொதேமு என்பவரைத் தவிர வேறு எவரும் இல்லை, இவர் (நிக்கொதேமு) ‘‘ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்தவர்” (19:39) ஆவார். இவரை நாம் அதிகாரம் 3ல் புதுப்பிறப்பைப் பற்றி இயேசு இவரிடம் கூறிய வேளையில் கண்டோம். மீண்டும் நாம் இவரை 7:50-52ல் தமது விசுவாசம் பற்றி அப்பொழுதும் “வெளிப்படையாய்” இல்லாத பொழுது கண்டோம். இருப்பினும், இந்த வேளையில், மனித வரலாற்றிலேயே இருள் மிக்க வேளையில், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட வேளையில் நாம் இவரைக் காண்கின்றோம். இங்கே, ஒரு தைரியமான, நிச்சயமான மற்றும் துணிவான விசுவாசத்தை அவர் செயல்விளக்கப்படுத்தினார். யோசேப்பும், நிக்கொதேமுவும் ஒன்றுகூடி இயேசுவின் உடலை அடக்கம் செய்யத் தயாரித்து, அதைக் கல்லறையில் வைத்தனர்.

## முடிவுரை

செயலற்ற பொழுதுபோக்கை அளிப்பதற்காக இயேசுவின் வரலாறு கூறப்படுவதில்லை. இது, இதனைக் கேட்பவர்களின் இருதயங்களில் வாழ்கின்ற, வாழ்வை மாற்றுகின்ற விசுவாசத்தை உண்டாக்குவதற்காகவே கூறப்படுகின்றது. சிலுவை என்பது நாம் கேட்டு பிறகு மறந்து விடக் கூடியது அல்ல. இதற்கு ஒரு பதில்செயல் தேவைப்படுகின்றது. யோவானுடைய கேள்வி தப்பித்துக்கொள்ள முடியாததாக உள்ளது; நீங்கள் விசுவாசத் தினுள் அடியெடுத்து வைத்து, உங்களுக்காக இறந்தவருடன் உங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்களாய் இருப்பீர்களா? இயேசு உங்களுக்காக மரித்தார். அதைக் குறித்து நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?

குறிப்பு

[1]யோசேப்பு என்பவர் செல்வந்தராய், யூத ஆலோசனை சங்கத்தின் அங்கத்தினராயிருந்து, ''மிகவும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு'' பிலாத்துவினிடத்தில் துணிந்து போய் இயேசுவின் உடலைக் கேட்டதாக மாற். 15:43 சுட்டிக்காட்டுகின்றது.

## யூதர்களின் வருடாந்தரப் பண்டிகைகள்

தோராயமான ரோம மாதங்கள்

| ஜன. | பெப்/மார்ச். | ஏப்ரல் | மே/ஜூன் | ஜூலை | ஆக. | செப்./அக். | நவ. | டிச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *(1)*<br>*பூரிம்*<br>*பண்டிகை*<br>*[2 நாட்கள்]* | *(2)*<br>*பஸ்கா*<br>*[1 நாள்]*<br>*மற்றும்*<br>*புளிப்பில்லாத*<br>*அப்பப்*<br>*பண்டிகை*<br>*[1 வாரம்]* | *(3)*<br>*பெந்தெகொஸ்தே*<br>*(அல்லது*<br>*வாரங்களின்*<br>*பண்டிகை*<br>*அல்லது*<br>*முதற்*<br>*பலன்களின்*<br>*பண்டிகை)*<br>*[1 நாள்]* | | | *(4)*<br>*கூடாரங்களின்*<br>*(அல்லது*<br>*உள்கூடுகையின்)*<br>*பண்டிகை*<br>*[1 வாரம்]*<br><br>*(5)*<br>*எக்காளங்களின்*<br>*பண்டிகை*<br>*[1 நாள்]* | | *(6)*<br>*அர்ப்பணிப்பின்*<br>*(அல்லது*<br>*ஒளியின்)*<br>*பண்டிகை*<br>*[8 நாட்கள்]* |

*ஒவ்வொன்றும் எதை நினைவுகூர்ந்தது: (1) எஸ்தர் இராஜாத்தி யூதர்களைக் காப்பாற்றியது; (2) மரணம் கடந்து செல்லுதல் மற்றும் இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்படுதல்; (3) சீனாய் மலையில் மோசேயிடம் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுதல்; (4) வனாந்தர வாழ்வு; (5) புத்தாண்டு தினம்; (6) புற இனத்தாரிடமிருந்து தேவாலயத்தை மீண்டும் கைப்பற்றிய பிறகு அதை அர்ப்பணித்தல்.*

*இவைகளில் மூன்று பண்டிகைகள் - பஸ்கா, கூடாரப் பண்டிகை மற்றும் அர்ப்பணிப்பின் பண்டிகை ஆகியவை - யோவான் சுவிசேஷத்தில் காணப்படுகின்றன.*

# "நான் கர்த்தரைக் கண்டேன்" (20:1-31)

நான் கல்லூரியில் இருந்த பொழுது, இன்னொரு மாநிலத்தில் நடைபெற்ற இளைஞர் கூட்டம் ஒன்றில் ஊழியம் செய்வதற்காக மாணவர்களின் குழு ஒன்றுடன் ஒருமுறை நான் பயணம் சென்றிருந்தேன். எங்கள் அடைவிடத்தை நோக்கி இரவில் நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கையில், எங்களுடைய சொந்த விசுவாசப் பயணங்களைப் பற்றி ஒருவர் மாற்றி ஒருவர் கூறிக் கொண்டதன் மூலம் பயணத்தின் நீண்ட நேரத்தைக் கடத்தினோம். காரில் இருந்த சிலர் கிறிஸ்தவக் குடும்பங்களில் வளர்ந்தவர்களாய் இருக்கையில், சிலர் தங்கள் குடும்பங்களில் தாங்கள் மட்டுமே கிறிஸ்தவர்களாய் இருந்தனர். சிலர் சந்தேகத்துடன் நீண்ட நாள் போராடியிருந்தனர், சிலர் அவ்வாறு இருந்திருக்கவில்லை. சிலர் தங்கள் வாழ்வில் இயேசுவை ஏற்றுக் கொள்ளும் உறுதிப்பாட்டைச் சமீபத்தில்தான் செய்திருந்தனர், மற்றும் பிறர் பத்தாண்டுகளுக்கும் மேலாகக் கிறிஸ்தவர் களாய் இருந்தனர்.

எங்கள் வரலாறுகளை நாங்கள் பகிர்ந்து கொள்ளுகையில், உயர்நிலைப் பள்ளியின் உயிரியல் வகுப்பில் தனது விசுவாசத்தை இழந்து போயிருந்த ஒரு பெண்ணினால் ஏற்படுத்தப்பட்ட கூற்று ஒன்று எனது மனதில் மிக ஆழமாய்ப் பதிந்தது. தேவன் மீது அவள் கொண்டிருந்த விசுவாசத்திற்காக அவளைக் கடிந்து கொண்ட ஒரு ஆசிரியரால் பயமுறுத்தப்பட்ட அவள் விசுவாசத்திற்கு இன்னும் ஒரு வாய்ப்புத் தருவதற்காகச் சுவிசேஷங்களை மீண்டும் வாசிக்க முடிவு செய்தாள். அவள், "இது உண்மையானதா அல்லது இட்டுக் கட்டப்பட்ட ஒரு கதை மட்டும்தானா? இயேசு என்ற பெயருடைய ஒரு மனிதர் எப்பொழுதாவது வாழ்ந்தாரா? அப்படியானால், அவர் உண்மையாகவே தேவனுடைய குமாரனா?" என்றெல்லாம் அவள் வியப்புற்றாள். அவள் பல மாதங்களாக இந்தக் கேள்விகளுடன் போராடிக் கொண்டிருந்தாள். கடைசியாக, அவள் மிக எளிய ஆனால் ஆழ்ந்தறிவுள்ள ஒரு முடிவை அடைந்தாள். சுவிசேஷ செய்தியின் மதிப்பானது உயிர்த் தெழுதலில் தான் ஊசலாடுகின்றது என்று அவள் உணர்ந்தறிந்தாள். இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்திருந்தார் என்றால், இது யாவும் உண்மையாய் இருக்கின்றது: அவர் அற்புதங்கள் நிகழ்த்தினார் மற்றும் அவர் தேவனுடைய மகனாகவே இருக்கின்றார். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழவில்லை என்றால், இது யாவும் ஒரு கற்பனைக் கதையாகவோ அல்லது பயங்கரமான பொய்யாகவோ இருக்கும்.

எனது தோழி சரியான வகையிலேயே முடிவெடுத்தாள்.

சுவிசேஷங்களின் (நமது பாடத்தில் யோவான் சுவிசேஷத்தின்) உரிமைகோருதல்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலினுடைய சத்தியத்தின் அடிப்படையிலேயே நிற்கின்றன அல்லது விழுகின்றன. இதனைப் பின்வருமாறு பவுல் கூறினார்:

> இயேசு கிறிஸ்துவைக்குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம்பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார் (ரோமர் 1:4, 5).

இப்பொழுது, நாம் யோவான் சுவிசேஷத்தின் - விசுவாசத்தின் இந்த சுவிசேஷத்தின் - உச்சக் காட்சிக்கு வருகையில், இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிய வரலாற்றை எதிர்கொள்ளுகின்றோம். ஒவ்வொரு விஷயமும் இதில் கட்டப்பட்டுள்ளதால், இது (உயிர்த்தெழுதல் என்பது) சிறிய விஷயமல்ல!

யோவான் சுவிசேஷத்தில் உயிர்த்தெழுதல் பற்றிய எடுத்துரைப்பானது நேரானதாக உள்ளது மற்றும் இது உயிர்த்தெழுந்த கர்த்தரின் நான்கு வித்தியாசமான தரிசனங்களைச் சுற்றி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தரிசனமும் இந்தச் சித்தரிப்பில் புதிய சில விஷயங்களை அறிமுகப்படுத்துகின்றது. அதிகாரம் 20ன் தொடக்கத்தில் உயிர்த் தெழுதலைப் பற்றிய கேள்விகளைக் கையாண்டு கொண்டிருந்த மற்றவர்களை கவனிக்கும் பார்வையாளர்களாக நம்மை நாமே நினைத்துக் கொண்டிருக்கலாம். இருப்பினும், இந்த அதிகாரத்தின் முடிவில், நம்மை நாம் இந்தச் சித்தரிப்பின் மையத்தில் இருப்பவர்களாக, இயேசுவைக் குறித்து நாம் என்ன செய்வோம் என்று முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கக் காண்போம்!

## உயிர்த்தெழுதலும் மகதலேனா மரியாளும் (20:1-18)

இயேசு சிலுவையில் அறையப்பட்டதைத் தொடர்ந்து வந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில், மகதலேனா மரியாள் (அவருடைய) கல்லறைக்கு வந்த பொழுது, இன்னும் இருட்டாய் இருந்தது. கல்லறையை அடைத் திருந்த கல் அங்கு இல்லாததைக் கண்ட அவள், பேதுரு மற்றும் யோவான் ("இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்") ஆகியோரிடம் ஓடிச் சென்று, "கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை" (20:2) என்று அவர்களிடம் கூறினாள். மரியாள் இயேசுவைப் பின்பற்றத் தன்னை ஒப்புக் கொடுத்து, அவருடைய போதனைகளை ஆவலுடன் கவனித்தவளா யிருந்தாலும் கூட, உயிர்த்தெழுதலின் கருத்தானது அந்தக் காலை வேளையில் அவளது சிந்தையில் கடந்து வரவில்லை. யாரோ ஒருவர்

இயேசுவின் உடலைத் திருடிச் சென்று விட்டார் என்பதே வெறுமையான கல்லறைக்கு அவள் தர முடிந்த சாத்தியமான ஒரே ஒரு விளக்கமாய் இருந்தது.

மரியாளின் அறிக்கையைக் கேட்ட பேதுருவும் யோவானும் கல்லறையிடத்திற்கு ஓடினார்கள். அவ்விருவரில் விரைவாய் ஓடிய யோவான் கல்லறை வாசலை முதலில் சென்றடைந்து அங்கு நின்றார். அவருடன் பேதுரு வந்து சேர்ந்த பொழுது, பேதுரு உள்ளே குனிந்து பார்த்தார் (இது பேதுருவுக்கே உரிய செயலல்லவா?). சவத்தைச் சுற்றும் துணிகள் அங்கிருந்ததையும், தலையைச் சுற்றியிருந்த துணி தனியே ஓரிடத்தில் சுருட்டி வைக்கப்பட்டிருந்ததையும் இருவருமே கண்டனர். அந்த வேளையில், யோவானும் கல்லறைக்குள் நுழைந்து பார்த்து, விசுவாசித்தார். இருப்பினும், மேசியா மரித்தோரிலிருந்து எவ்விதம் உயிர்த்தெழுவார் என்று வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் போதிக்கப் பட்டிருந்தவற்றை இந்த சீஷர்கள் இன்னும் புரிந்து கொள்ளாமல் இருந்தனர். பேதுரு மற்றும் யோவான் ஆகியோருக்கு இது உய்த்துணரக் கடினமாயிருந்தது.

இவ்விரு சீஷர்களும் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிய பிறகு, மரியாள் கல்லறையின் அருகே அழுது கொண்டு நின்றாள். அவள் இயேசுவின் மீது ஆழமான அன்புகூர்ந்திருந்தாள், அவளைப் பொறுத்த மட்டில் அவளது (மனக்) காயத்திற்கு கல்லறைத் திருடர்கள் அவமானத் தைக் கூட்டியிருந்ததாகவே காணப்பட்டது. அவளால் தன் வாழ்வில் இதை விட அதிகம் பயங்கரமான சூழ்நிலையைக் கற்பனை செய்து பார்க்க முடியாதிருந்தது. அவள் அழுது கொண்டு இருக்கையிலேயே, குனிந்து கல்லறைக்குள் பார்த்தாள். அங்கு இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்தில் முன்பு அவருடைய கால்களும் தலையும் இருந்த இடங்களில் காவலர்களைப் போல் இரு தூதர்கள் அமர்ந்திருக்கக் கண்டாள். அவள் அழுவது ஏன் என்று அவர்கள் கேட்ட பொழுது, அவள், “என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை” (20:13) என்று கூறினாள்.

இவ்வரலாற்றில் இவ்விடத்தில் இயேசுவின் உடல் காணாமல் போய் விட்டது என்பதே வலியுறுத்தம் பெற்றுள்ளது என்பதைக் கவனியுங்கள். இது ஒரு மிகச் சிறிய விபரம் அல்ல! இது எதிர்கால சந்ததியினரின் விசுவாசத்திற்கான முக்கியமான ஆதாரமாக உள்ளது. யோவான் 20ம் அதிகாரமானது அப்போஸ்தலருடைய நடபடிகளின் தொடக்க அதிகாரங்களுடன் இணையாக வாசிக்கப்படுகையில், தொடக்க கால சபையாரின் எதிராளிகள் கிறிஸ்தவம் பரவுவதை எவ்வளவு சுலபமாய் நிறுத்தியிருக்க முடியும் என்பதை நாம் உணருகின்றோம்: அவர்கள் செய்திருக்க வேண்டியதெல்லாம், இயேசுவின் உடலைக் கொண்டு வருதல் என்பதே ஆகும். அது கிறிஸ்தவம் பரவுதலை உடனடியாக நிறுத்தியிருக்கும். இதைச் செய்ய அவர்களால் முடியாதிருந்தது என்பது தெளிவு, முடிந்திருந்தால் அதைச் செய்திருப்பார்களே. காணாமற் போன உடலானது இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு முக்கியமான ஆதாரமாக உள்ளது!

பிறகு மரியாள் திரும்பி, இயேசுவைக் கண்டாள். ஏதோ சில காரணங்களினால், ஒருவேளை அதிகாலையின் இருட்டினாலோ, அவர் அணிந்திருந்த ஆடையினாலோ, அல்லது அவளது விழிகளில் திரையிட்ட கண்ணீரினாலோ, மரியாள் தான் இயேசுவைச் சந்தித்ததை உணராதிருந்தாள். அவரைக் கல்லறை இருந்த இடத்தின் தோட்டக்காரர் என்று நினைத்த மரியாள், அவரிடத்தில் "ஐயா, நீர் அவரை எடுத்துக் கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன்" (20:15) என்று கெஞ்சினாள். பிறகு இயேசு அவளை, "மரியாளே!" என்று பெயர் சொல்லி அழைத்தார். அந்த வேளையில்தான் அவள், உயிர்த்தெழுந்த கர்த்தருடன் தான் பேசிக் கொண்டிருந்ததை முதன்முறையாக உணர்ந்தாள்.

மரியாள் தனது பெயரை இயேசுவின் உதடுகளில் இருந்து கேட்ட பொழுது, அவரை "ரபூனி" என்று அழைத்ததின் மூலம் அவருக்குப் பதில் கொடுத்தாள், இந்த எபிரெயச் சொல்லானது போதகர் என்பதைக் குறிக்கும். இயேசு, தாம் இன்னும் பிதாவிடம் ஏறிச் செல்லாதிருந்ததால் தன்னை அவள் தொட வேண்டாம் (உடல் ரீதியான விஷயத்தைக் காட்டிலும் அநேகமாக இது உணர்வு நிறைந்ததாக இருக்கும்) என்று கூறினார் (20:17). அவள் தோட்டத்தை விட்டு விரைந்து சீஷர்களிடம் சென்று, "நான் கர்த்தரைக் கண்டேன்" என்று அவர்களிடம் கூறினாள் (20:18). மாபெரும் போதகர்மேல் மரியாள் கொண்டிருந்த விசுவாசமானது உயிர்த்தெழுந்த கர்த்தர்மேல் உள்ள விசுவாசமாயிற்று!

## உயிர்த்தெழுதலும் மேல் வீட்டில் இருந்த சீஷர்களும் (20:19-24)

உயிர்த்தெழுதலின் ஞாயிற்றுக் கிழமையானது சீஷர்களுக்கு ஒரு நீண்ட, குழப்பமான நாளாய் இருந்தது. அன்று மாலையில் அவர்கள், இயேசுவை மரணத்திற்கு உட்படுத்திய யூதர்களுக்குப் பயந்துகொண்டு பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் மறைந்திருந்தனர். மகதலேனா மரியாளின் அறிக்கையானது இன்னமும் கூட, உணர்வு ரீதியான அழுத்தம் கொண்டிருந்த ஒரு நபரின் மதியீனமான உரிமைகோருதலாகவே காணப்பட்டது. அவருடைய உடல் எங்கிருந்தது என்பதை அவர்கள் அறியாதிருந்தனர், ஆனால் அவர்களின் இருதயங்களில் இயேசு மரித்தவராய் இருந்தார். பயம் என்பது தங்கள் எஜமானர் மரித்திருந்த நிலையில் அவரது சீஷர்களுக்கு இருந்த இயல்பான ஒரு நிலைமையாகும் என்பதை நாம் இவ்விடத்தில் கவனிக்க வேண்டும். இன்றைய நாட்களிலும் கூட கிறிஸ்தவர்கள் பயத்தில் வாழ்கின்ற போது, தங்கள் எஜமானர் கல்லறைக்குள்ளேயே இருக்கின்றார் என்பது போலத் தான் வாழ்கின்றனர்.

பூட்டியிருந்த கதவுகளுக்குப் பின்னால் சீஷர்கள் கூடியிருக்கையில், இயேசு திடீரென்று அந்த அறைக்குள் தோன்றினார். அவர், "உங்களுக்குச் சமாதானம்" (20:19) என்ற வார்த்தைகளினால் அவர்களை வாழ்த்தினார் மற்றும் தமது கைகளிலும் கால்களிலும் ஆணி துளைத்த இடங்களை

அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் திகைப்புற்று, “கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்” (20:20). விசுவாசத்தின் சந்தர்ப்பப் பொருளில் “சமாதானம்,” “சந்தோஷம்” மற்றும் “பயம்” என்ற வார்த்தைகள், இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் தீர்க்கதரிசனமாய்க் கூறியிருந்த யோவான் சுவிசேஷத்தின் முந்திய பகுதி ஒன்றை நினைவுக்குக் கொண்டு வருகின்றது:

> சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை, உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார். இது நடக்கும் போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்கு முன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன் (14:27-29).

உயிர்த்தெழுதலின் மாலை வேளையில், பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் சீஷர்களுக்கு இயேசு தரிசனமான பொழுது, கடைசியில் அவர்கள், இயேசு ஒரு ஆச்சரியமான போதகர் அல்லது ஒரு மாபெரும் தீர்க்கதரிசி என்பதை விட அதிகமானவராய் இருந்தார் என்று அவர்கள் உணர்ந்தறிந்தனர்; அவர் உயிர்த்தெழுந்த மேசியாவாக, தேவனுடைய குமாரனாக இருந்தார்! அவர்களின் பயம் மறையத் தொடங்கிற்று, அவர்களின் மகிழ்ச்சி திரும்பிற்று, மற்றும் அவர்கள் தேவனுடைய ஆச்சரியம் நிறைந்த சமாதானத்தை அனுபவிக்கத் தொடங்கினர்.

## உயிர்த்தெழுதலும் தோமாவும் *(20:24-29)*

இயேசு மற்ற பத்து சீஷர்களுக்குத் தரிசனமான பொழுது தோமா அவர்களுடன் இருக்கவில்லை. அவர் திரும்பி வந்த பொழுது, சீஷர்களிடம் மரியாள் முன்பு கூறியிருந்ததை அவர்கள் அவரிடத்தில் கூறினர்: “கர்த்தரைக் கண்டோம்!” (20:25). தோமா முன்பே இயேசுவின் மீது பலத்த விசுவாசம் கொண்டிருந்தாலும்,[1] வரலாற்றின் இவ்விடத்தில் அவருடைய இருதயம் கடினப்பட்டு, நம்பிக்கையற்றதாக ஆயிற்று. (முன்பு) ஒரு சமயத்தில் அவர், இயேசுவின் பரலோகக் கண்ணோட்டம் என்ற உண்மைத் தன்மையைப் பகிர்ந்து கொள்ளத் துணிந்தவராய் இருந்தார், ஆனால் ஏமாற்றங்களும் ஆழமான மனப் புண்களும் அவரை உலகின் பூமிக்குரிய கண்ணோட்டத்திற்குத் திருப்பி அனுப்பியிருந்தன. தோமா, “அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய

விசுவாசிக்க மாட்டேன்" என்று வலியுறுத்தினார் (20:25).

தோமாவின் நம்பிக்கையின்மைக்காக அவரை விமர்சனம் செய்வது மிக மிக சுலபமானதாக உள்ளது. அவர் வெளிப்படுத்திய உணர்வுகள் நம் யாவருக்கும் பழக்கமானது என்பதே உண்மையாக இருக்கின்றது. விசுவாசிப்பதற்கு நமது முடிவின் மீது அதிகமாய்ச் சார்ந்திருத்தல் என்பது அந்த முடிவை நாம் இலேசானதாக எடுத்துக் கொள்ளும்படி செய்கின்றது. உயிர்த்தெழுந்த இயேசுவை நாம் கண்டு, தொட்டுப் பார்க்க வேண்டும் என்று விரும்புகின்றோம். தோமா, நமது சொந்த சந்தேகங்களை எதிர்கொள்ள நமக்கு உதவி செய்து, பிறகு அவற்றிற்கு அப்பால் நாம் கடந்து செல்லவும் அவர் நமக்கு உதவுகின்றார்.

எட்டு நாளளவாகத் தோமா தம் நம்பிக்கையின்மையை மறுபடியும் மறுபடியும் வெளிப்படுத்திய பிறகு சீஷர்கள் பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் மீண்டும் கூடியிருந்தனர். இந்த வேளையில் இயேசு தாம் முன்பு தரிசனமானது போலவே மீண்டும் தரிசனமான பொழுது தோமா அவர்களுடன் இருந்தார். தோமாவின் சந்தேகங்களை எதிர்கொண்ட இயேசு, தமது கைகளைப் பார்க்கும்படியும், தமது தழும்புகளைத் தொடும்படியும், மற்றும் தமது விலாவில் கூடக் கையிடும்படியும் தோமாவிடம் கூறினார். பிறகு தோமா, "என் ஆண்டவரே என் தேவனே!" (20:28) என்று அறிக்கையிட்டார். யோவான் சுவிசேஷம் முழுவதிலும் இதுவே இயேசுவைக் கர்த்தரென்று கூறும் மாபெரும் ஒரே அறிக்கையாக உள்ளது, மற்றும் இது முன்பு ஆழ்ந்த ஏமாற்றத்திற்குள்ளாக ஐயப் பாட்டாளர் ஒருவருடைய கடினமான இருதயத்தில் இருந்து வந்ததாக உள்ளது.

தோமாவின் அறிக்கையைத் தொடர்ந்து, இயேசு அவரிடத்தில், இன்றைய நாட்களில் நமது சூழ்நிலையை விவரிக்கும் சிலவற்றைக் கூறினார். தோமாவிடம் அவர், "தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" (20:29) என்றுரைத்தார். தோமா பெற்ற நிரூபணத்தை நாம் யாவரும் பெற்றிருக்க விரும்புவோம், ஆனால் இன்றைய நாளில் அது சாத்திய மற்றதாக உள்ளது, ஏனெனில் இயேசு பிதாவிடம் இருக்கும்படி மேலேறிச் சென்றுள்ளார். நமக்கு விசுவாசம் என்பது வேறு சிலவற்றின் அடிப் படையில் அமைந்ததாய் இருக்க வேண்டும். தோமாவுக்கும் மற்ற சீஷர்களுக்கும் (இயேசுவின் உடலில்) ஆணி துளைத்த காயங்கள் என்னவாயிருந்ததோ, அது போலவே இன்றைய நாளில் யோவான் சுவிசேஷம் நமக்குள்ளது: உயிர்த்தெழுந்த கர்த்தரைச் சந்திக்கும் ஒரு வழி வகை. அவரை நாம் முகம் முகமாய்க் காணாவிட்டாலும், அவருடைய சாட்சியங்கள், அவருடைய உரிமைகோருதல்கள், அவருடைய போதனை கள் மற்றும் எழுதப்பட்ட தேவ வசனத்தின் வல்லமை ஆகியவற்றின் மூலமாக நாம் அவரை எதிர்கொள்ளுகின்றோம்.

## உயிர்த்தெழுதலும் நாமும்
## *(20:30, 31)*

*யோவான் சுவிசேஷத்தினுடைய முழுமையான நோக்கக் கூற்றை நாம் 20:30, 31ல் அடைகின்றோம்:*

> *இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து, அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.*

*இயேசு தமது சீஷருக்கு முன்பாக வேறு பல “அற்புதங்களை”யும் செய்ததாக யோவான் தெளிவாகக் கூறினார், ஆனால் இந்த சுவிசேஷத்தில் “எழுதப் பட்டு நிலைத்திருக்கும்” ஏழு அற்புதங்கள்[2] எதிர்காலத் தலைமுறை யினரிடத்தில் விசுவாசத்தை உண்டாக்கும் நோக்கத்திற்காக உள்ளடக் கப்பட்டன. இந்த சுவிசேஷத்தின் மூலமாக இயேசுவின் வரலாற்றை எதிர்கொள்ளுபவர்கள் இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசிக்க முடியும் மற்றும் அவ்வாறு விசுவாசிப்பதினால் அவருடைய நாமத்தில் ஜீவனைப் பெறவும் முடியும். யோவான் சுவிசேஷமானது முக்கியமான ஒரு நோக்கத்திற்கான செயல்முறைப் புத்தகமாக உள்ளது.*

*நான்கு சுவிசேஷங்களிலும் உள்ள உயிர்த்தெழுதல் பற்றிய விவரங்கள் எவற்றிலும் இயேசு கல்லறையில் இருந்து வெளிவந்ததை எவரொருவரும் உண்மையிலேயே கண்டதாகக் கருத்துத் தெரிவிக்கும் பதிவு எதுவுமில்லை. அவர் கொல்லப்பட்டதைப் பலர் கண்டனர், மற்றும் அவரது உயிர்த் தெழுதலைத் தொடர்ந்து அவரைப் பலர் கண்டனர், ஆனால் அவர் கல்லறையில் இருந்து வெளி வந்ததை எவரொருவரும் காணவில்லை. தொடக்கக் காலச் சீஷர்களைப் போலவே நாமும் கூட நமது சொந்த முடிவுகளை அடையும்படி விடப்பட்டுள்ளோம். எனது கல்லூரித் தோழர் ஒருவர் என்னிடம் ஒருமுறை கூறியது போல, “உயிர்த்தெழுதலின் மீதே மற்ற ஒவ்வொன்றும் நிலைநிற்கின்றது. அது உண்மையென்றால், மற்ற யாவும் உண்மையே. அது பொய்யென்றால், மற்ற எதுவும் ஒரு பொருட்டல்ல.”*

## முடிவுரை

*முன்பு ஒருக்காலும் விசுவாசியாதிருப்பவர்களுக்காகவா அல்லது விசுவாசத்தில் பலவீனமடைந்து கொண்டிருப்பவர்களுடைய விசுவாசத் தைப் பலப்படுத்துவதற்காகவா, யாருக்கு விசுவாசத்தை உண்டாக்குவதற் காக யோவான் தமது சுவிசேஷத்தை எழுதினார் என்பது பற்றிக் கல்வியாளர்கள் நீண்ட விவாதங்கள் செய்துள்ளனர். “நீங்கள் விசுவாசிக்கும் படியாக” என்பது “நீங்கள் விசுவாசிக்கத் தொடங்கும்படியாக” என்று*

அர்த்தப்படுத்துகின்றதா? அல்லது “நீங்கள் தொடர்ந்து விசுவாசிக்கும் படியாக” என்று அர்த்தப்படுத்துகின்றதா? யோவான் சுவிசேஷத்தில் இதுவா அல்லது அதுவா என்ற கேள்வி வருகின்ற பொழுது ‘‘இரண்டுமே’’ என்பதுதான் மிகச் சிறந்த பதிலாகப் பெரும்பாலும் உள்ளது. முன்பு ஒருக்காலும் விசுவாசம் இருந்திராதவர்களிடம் விசுவாசத்தை உண்டாக்க யோவான் எழுதினார் என்பது நிச்சயம். அதே வேளையில், இந்த சுவிசேஷத்தின் பெரும்பகுதியில் கிறிஸ்தவ சமுதாயத்தில் உள்ள களைப்புற்ற, போராடுகின்ற, பலவீனமான அல்லது கோழைத்தனமான விசுவாசத்தின் பிரச்சனைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

பெற்றோரிடத்தில் தன்னையும், புதிதாய்ப் பிறந்த தனது சகோதரனை யும் தனித்திருக்க விடும்படி கேட்டுக் கொண்ட நான்கு வயதுச் சிறுமியான ஸ்கியா என்பவளின் வரலாற்றைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தால், அதை யோவான் விரும்பியிருப்பார் என்று நான் நினைக்கின்றேன். அவ்வாறு செய்ய முதலில் அவளது பெற்றோர் தயங்கினர், ஆனால் அவள் தனது தம்பியிடம் எவ்வளவு மென்மையாகவும் இரக்கத்துடனும் இருந்தாள் என்பதை அவர்கள் கண்ட பொழுது, அவ்வாறு செய்ய அவர்கள் ஒத்துக் கொண்டனர். கதவின் சிறு இடுக்கின் வழியே அவர்கள் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருக்கையில், ஸ்கியா தொட்டிலின் அருகே சென்று மென்மையாக, ‘‘தம்பி, தேவன் எப்படி இருப்பார் என்று எனக்குச் சொல்லுப்பா. நான் அதை மறக்கத் தொடங்கி விட்டேனே’’ என்று கூறுவதைக் கண்டனர்.

இப்பாடத்தை வாசிக்கும் சிலருக்கு விசுவாசம் என்பது தொடக்க நிலையிலேயே உள்ளது. அதே வேளையில், மேம்படுகின்ற இந்த விசுவாசமானது திகிலூட்டுவதாகவும் மெய்சிலிர்க்கச் செய்வதாகவும் இருக்கலாம். மற்றவர்களுக்கு, விசுவாசம் என்பது கடந்த காலத்தியதாக உள்ளது - ஒரு காலத்தில் உயிருள்ளதாயிருந்து, இப்பொழுது ஏறக்குறைய இறந்து போன நிலையில் உள்ளது. *யோவான் சுவிசேஷமானது, ஒருக்காலும் விசுவாசத்தை அறிந்திராதவர்களுக்கும், விசுவாசத்தை ‘‘மறக்கத் தொடங்கியவர்களுக்கும்’’ ஆனதாக உள்ளது.*

இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றி உங்கள் முடிவு என்ன? நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிப்பீர்களா? நீங்கள் உங்கள் விசுவாசத்தைப் புதுப்பித்துக் கொள்வீர்களா? *ஒவ்வொரு விஷயமும் இந்த முடிவையே சார்ந்துள்ளது!*

---

குறிப்புகள்

[1]இயேசுவின் மேல் முன்பு தோமாவுக்கு இருந்த பக்திக்கு யோவா. 11:16 ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். [2]யோவான் சுவிசேஷத்திலுள்ள ஏழு அற்புதங்கள் பின்வருமாறு: தண்ணீரைத் திராட்ச இரசமாக்குதல் (அதி. 2); இராஜாவின் வீட்டு மனிதனுடைய மகனைக் குணமாக்குதல் (4); பெதஸ்தா குளத்தருகில் முடவன் ஒருவனைக் குணமாக்குதல் (5); ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் (6); தண்ணீரின்

*மேல் நடத்தல் (6); பார்வையற்றவராய்ப் பிறந்தவரைக் குணமாக்குதல் (9); மற்றும் லாசருவை மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கச் செய்தல் (11). ஒருவேளை யோவான் சுவிசேஷத்தை "ஏழு அற்புதங்கள் மற்றும் (உயிர்த்தெழுதல் என்ற) மாபெரும் அற்புதம்" ஆகியவற்றின் சுவிசேஷம் என்று கூறுவது மிகச் சரியானதாக உள்ளது எனலாம்.*

---

## யோவான் சுவிசேஷத்தில் அறிக்கைகள்

*யோவான் சுவிசேஷத்தில் இயேசுவைக் குறித்த அறிக்கையிடுதல்களில் பின்வருபவைகள் உள்ளடங்குகின்றன:*

*நாத்தான்வேல்: "ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் இராஜா" (1:49).*

*நிக்கொதேமு: "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்" (3:2).*

*மார்த்தாள்: "நீர், உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்" (11:27).*

*இந்த அறிக்கைகள் யாவும் குறிப்பிடத் தக்கவை, மற்றும் இவை யாவும் விசுவாசச் சாலையில் அடிவைப்புகளாக இருப்பவையாகும். இருப்பினும், உயிர்த்தெழுதலின் அடிப்படையில் தோமா இயேசுவை "என் ஆண்டவரே, என் தேவனே!" (20:28) என்று அழைத்தபொழுது மிகவும் முழுமையான ஒரு அறிக்கையை அளித்தார்.*

# "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" (21:1-25)

*நீர்மத்தாள் என்பது ஏறக்குறைய அமெரிக்க நாட்டின் (அரசுச்) செயலாளர்கள் ஒவ்வொருவருடைய மேஜையிலும் இருக்கக் கூடிய அற்புதமான ஒரு பொருளாகும். இது ஒரு சிறிய பாட்டிலில் நீர் வடிவில் உள்ளது, மற்றும் இதனுடன் ஒரு சிறு தூரிகையும் தரப்படும், இது தவறுகளை மூடி மறைப்பதற்குப் பயன்படுகின்றது. தவறாக எழுதப்பட்ட ஒரு வார்த்தையோ அல்லது ஒரு கறையோ தாள் ஒன்றில் இருக்குமென்றால், அதன் மீது இந்த நீர்மத்தாளைப் பூசும் பொழுது பிரச்சனை மறைந்து போகின்றது. நமது வாழ்வின் தவறுகளுக்கான ஆதாரங்களை நீக்கக் கூடிய நீர்மத்தாள் ஏதேனும் இருந்தால், அது அற்புதமானதாயிருக்குமல்லவா? நம் யாவருக்கும் அது தேவைப்படுகின்றது என்பது கவலைக்குரிய உண்மையாக உள்ளது! யோவான் சுவிசேஷத்தின் கடைசி அதிகாரமானது, நாம் தவறிவிடுகையில் மற்றும் நமது வாழ்வில் "ஆவிக்குரிய நீர்மத்தாள்" தேவைப்படுகையில், நாம் ஒரு புதிய தொடக்கத்தை அனுபவிக்கக் கூடிய வழிமுறையைப் பற்றி விவரிக்கின்றது.*

## *காட்சி அமைப்பு (21:1-14)*

*இயேசு உயிர்த்தெழுந்த பிறகு, மற்றும் அவர் பரத்துக்கேறுவதற்கு முன்பு, தம்முடைய சீஷர்களில் சிலருக்கு மறுபடியும் காட்சியளித்தார். அவர்களில் ஏழு பேர் கலிலேயா(திபேரியா)க் கடலைச் சுற்றியுள்ள தங்கள் இல்லங்களுக்குத் திரும்பியிருந்தனர். இயேசுவின் விசாரணை நடந்த இரவில் மூன்றுமுறை அவரை மறுதலித்ததை நினைத்து இன்னமும் வருத்தப்பட்ட பேதுரு, "மீன் பிடிக்கப் போகிறேன்" (21:3) என்று கூறினார். மற்றவர்களும் அவருடன் கூடச் சென்றனர், மற்றும் இரவு முழுவதும் ஏரியில் அவர்கள் ஒரு மீனைக் கூடப் பிடிக்கவில்லை. அடுத்த நாள் காலையில் பொழுது விடிகையில், கரையில் தோன்றிய நிழல் போன்ற உருவமொன்று, "பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா?" (21:5) என்று கேட்டது. அது இயேசு என்பதை உணர்ந்திராத சீஷர்கள், "ஒன்றுமில்லை" (21:5) என்றார்கள். அந்த அந்நியர் (இயேசு) அவர்களைப் படகின் வலது புறமாக வலையைப் போடும்படியும்*

அப்பொழுது அவர்கள் சில மீன்களைப் பிடிக்கலாம் என்றும் கூறினார். அந்த அந்நியரின் (இயேசுவின்) ஆலோசனைப்படியே அவர்கள் செய்தனர்.

அவர்கள் வலையைத் திரும்ப இழுக்க முயற்சி செய்த பொழுது அவர்களால் முடியாதிருந்தது, ஏனென்றால் வலை முழுவதும் மீன்களால் நிறைந்திருந்தது. அந்தக் கணத்தில் யோவான், கரையிலிருந்த அந்நியர் யார் என்று உணர்ந்தறிந்து, பேதுருவிடம், "அவர் கர்த்தர்" (21:7) என்று கூறினார். எப்பொழுதுமே கட்டுக்கு அடங்காதவராயிருந்த பேதுரு, விரைவாகத் தமது மேல் சட்டையைப் போட்டுக் கொண்டு, கடலிலே குதித்தார், மற்றும் கரையை நோக்கி நூறு கெஜ தூரம் நீந்தியே கடந்து சென்றார். மற்ற சீஷர்கள் தங்களின் மீன் சுமையுடன் கரை சேர்ந்த பொழுது, இயேசு கரிநெருப்பு மூட்டியிருந்து, அவர்களின் காலை உணவுக்காக அப்பமும் மீன்களும் சமைத்துத் தயாரித்து வைத்திருந்ததைக் கண்டனர். அடுத்து நடந்தவற்றின் வெளிச்சத்தில் இது ஒருவேளை குறிப்பிடத்தக்கதா யிருக்கலாம், யோவான் சுவிசேஷத்தில் கரிநெருப்பு பற்றிய இன்னும் ஒரே குறிப்பிடுதலானது பேதுரு குளிர் காய்ந்து கொண்டிருந்த இரவில் இயேசுவை மறுதலித்த இடமாகத்தான் உள்ளது (18:18).

சீஷர்கள் வந்து உணவருந்தும்படி, இயேசு அவர்களை அழைத்தார், அவர்கள் யாவரும் உணவருந்தினர். உணவு அநேகமாகக் கவனிக்கப் படாமல் அருந்தப்பட்டிருக்க வேண்டும், மற்றும் அவர்கள் உண்ணுகையில் சங்கடமான அமைதியை அனுபவித்தனர். மரித்து ஆனால் மீண்டும் உயிர்பெற்ற ஒருவரிடத்தில் நீங்கள் என்ன கூறுவீர்கள்? தேவகுமாரன் உங்களுக்குக் காலை உணவை ஊட்டுகையில் பேசுவதற்கு முக்கியமானது வேறு என்ன தான் இருக்கப் போகின்றது?

## எதிர்கொள்ளப்படுதல் (21:15)

சீஷர்கள் தங்கள் உணவை உண்டு முடிக்கையில், இயேசு பேதுருவின் பக்கம் திரும்பி, பேதுருவுக்கு மிகவும் பயம் உள்ள, ஆனால் அவர் கேட்க மிகவும் அவசியமான கேள்வியைக் கேட்டார்: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக் கிறாயா?" (21:15). அந்த எளிய கேள்வியினால் இயேசு பேதுருவின் பாவத்தை வெளிப்படுத்தி, பேதுருவின் ஆத்துமாவைக் கொல்வதாகப் பயமுறுத்திக் கொண்டிருந்த ஆவிக்குரிய காயத்தைக் கிழித்துத் திறந்தார். பேதுருவின் பாவமானது நேரடியாய் இவ்விதம் எதிர்கொள்ளப்படாமல், மனந்திருப்பப்படாமல் மற்றும் மன்னிக்கப்படாமல் இருந்திருந்தால், மாபெரும் அப்போஸ்தலரான பேதுரு தம் வாழ்வின் எஞ்சிய பகுதியை கசப்புள்ளதாகவும் மனம் முறிந்து போனதாகவும் - கலிலேயாவின் இன்னொரு மீனவராக மட்டுமே - செலவிட்டிருப்பார். அது நடக்கும்படி அனுமதிக்காத அளவுக்கு இயேசு பேதுருவின் மீது அதிகமாய் அன்பு கூர்ந்தார்.

நமது பாவத்தை மறைக்கவும் நமது குற்றத்தை மறுக்கவும் நாம் எவ்வளவாய் முயற்சி செய்கின்றோம் என்பது வினோதமாக உள்ளது.

மக்கள் எப்பொழுதுமே அதைச் செய்துள்ளனர், இருந்தாலும் அது ஒருவருக்கும் ஒருக்காலும் நன்மை எதையும் செய்ததில்லை. பாவத்திலிருந்து தப்பிப்பதற்கு மாறாக, பாவம் என்பதே இல்லை என்று நாம் பாசாங்கு செய்யும் போது, உண்மையிலேயே பாவம் நம்மேல் அதிக வல்லமையைச் செலுத்தும்படி கொடுத்து விடுகிறோம்.

*The Lion King* (சிங்க இராஜா) என்ற வால்ட் டிஸ்னியின் திரைப் படமானது குற்ற உணர்வு மற்றும் வெட்கக் கேடு ஆகியவற்றின் வல்லமை பற்றிய ஒரு பாடமாக உள்ளது. இது வன விலங்குகளின் திடீர்ப் பாய்ச்சலால் கொல்லப்பட்ட ஒரு சிங்கத்திற்கு குட்டியாய் இருந்த சிம்பா என்ற இளம் சிங்கத்தின் கதையாகும். சிம்பாவின் பொல்லாத மாமாவான ஸ்கேர் என்ற பெயருடைய கோழை(ச் சிங்கம்) ஒன்று மேட்டிமையால் அடுத்த இராஜாவாகத் தான் ஆக வேண்டும் என்று விரும்பியது, ஆனால் இளம் சிங்கமான சிம்பா இல்லாது ஒழிந்தால்தான் இது நடக்கும் என்பதை அறிந்திருந்தது. மறைவான பாவத்தின் வல்லமையை அறிந்திருந்த ஸ்கேர், தனது மைத்துனனின் (சிம்பாவின்) தந்தையினுடைய மரணத்திற்குச் சிம்பா தான் பொறுப்பாளியாய் உள்ளது என்று மறைமுகமாய் உணர்ந்தும் வகையில் சிம்பாவிடம் "நீ என்ன செய்துள்ளாய்? உன் தாய் உன்னைப் பற்றி என்ன நினைப்பாள்?" என்று கேட்டது. பிறகு சிம்பா, தான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட பொழுது, ஸ்கேர் "இங்கிருந்து ஓடி விடு!" என்றது, சிம்பாவும் அவ்வாறே செய்தது.

சிம்பா தனது குற்றத்திலிருந்து ஓடிய பின் பல வருடங்கள் கழித்து வீடு திரும்பி தனது கடந்த காலத்தை எதிர்கொள்ளும் தைரியம் கொண்டது. அங்கு அது தனது குடும்பத்தை மீட்டுக் கொள்ளவும், தனது தந்தையின் அரசில் நீதியை மீண்டும் கொண்டு வரவும் வல்லமையுடையதாய் இருந்தது.

இளம் சிம்பாவைக் குற்ற உணர்வினால் ஓடிக்கொண்டிருக்கச் செய்த வரையிலும் அதன் மேல் ஸ்கேர் கட்டுப்பாடு செலுத்த முடிந்திருந்தது. சிம்பா உண்மையை எதிர்கொண்ட போது மட்டுமே விடுதலையைக் காண முடிந்தது (8:32).

மறைவான பாவத்தின் வல்லமை என்பது நத்தானியேல் ஹாவ்தோர்னின் *The Scarlet Letter* என்ற நாவலின் கருப்பொளாகவும் உள்ளது. சீர்திருத்தக் காலத்தின் புதிய இங்கிலாந்தில் காட்சியமைக்கப்பட்ட அக்கதையானது கணவன் இல்லாத போது கர்ப்பம் தரித்த ஹெஸ்ட்டெர் பிரைன் என்ற பெண்ணைப் பற்றியதாகும். அவளது அவகீர்த்தியைப் பற்றி விவாதிக்கவும், அவளுக்குத் தண்டனை கூறவும் சமூகத்தில் பொது விசாரணையொன்று நடத்தப்பட்டது. குழந்தைக்குத் தகப்பன் யாரென்று கூறும்படி ஹெஸ்ட்டரை அந்தக் கிராமத்தின் முதியவர்கள் நிர்ப்பந்தம் செய்தாலும், அவள் பிடிவாதமாக மறுத்து விடுகிறாள். அவளது உடையின் முன்புறத்தில் "வி" ("விபச்சாரம்" என்று குறிக்க) என்ற எழுத்தை பளிச்சிடும் சிவப்பு வண்ணத்தில் தையல் வேலை செய்து அதை வெளியிடத்திற்கு அவள் செல்லும் ஒவ்வொரு முறையும் அணிந்து செல்ல வேண்டும் என்பதே அவளுக்குத் தரப்பட்ட தண்டனையாய் இருந்தது. முதல் முறையாக அவள் அதை அணிகின்ற பொழுது நகரின் மத்தியில் இருந்த பொது மேடை

ஒன்றில் பல மணி நேரம் நிற்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டாள். இது அவளுக்கு மிகவும் பயங்கரமான தண்டனையாக உள்ளது, ஆனால் அவள் தனது தண்டனையை ஏற்றுக் கொண்டு வாழத் தொடங்கினாள்.

இந்தக் கதையில் வரும் இன்னொரு கதாபாத்திரம் ஊழியக்காரரான ரோஜர் டிம்மெஸ்டேல் என்பதாகும். ஒவ்வொருவராலும் அன்பு செய்யப்பட்டு மதிக்கப்பட்டிருந்த இவர் தன்னில் ஒரு வேதனை நிறைந்த இரகசியத்தைச் சுமந்திருந்தார்: இவர்தான் ஹெஸ்ட்டரின் குழந்தைக்குத் தந்தையாக இருக்கின்றார். கதையின் போக்கில், டிம்மெஸ்டேல் தனது பாவத்தின் குற்றத்தை மறைக்கப் பல வழிகளில் முயற்சி செய்கின்றார். அவர் தொடர்ந்து (வேதாகமத்தைப்) படித்து ஜெபிக்கின்றார் மற்றும் சில வேளைகளில் அவர் தனது பாவத்திற்காகத் தன்னைச் சவுக்கினால் அடித்துக் கொள்ளுகின்றார். இருப்பினும் இவை எதுவும் அவருக்கு நன்மை செய்யவில்லை, மற்றும் அவரது உடல் நலம் படிப்படியாகக் குன்றத் தொடங்குகின்றது. இவ்விரு மக்களின் கதையில், ஹெஸ்ட்டர் (மனம்) முறிந்து போன ஒரு பெண்ணாகத் தொடங்குகின்றாள், ஆனாலும் அவள் பலமாய் வளருகின்றாள்; டிம்மெஸ்டேல் அந்த நகரின் மிக மதிப்பு வாய்ந்த மனிதராகத் தொடங்கி, அவரது ஆத்துமாவை ஆவிக்குரிய புற்று நோய் ஏதோ தாக்கியது போல மெதுவாக பலவீனராகின்றார்.

ஹாவ்த்தோர்னின் இந்தக் கதையில் வருகின்ற வினோதமான ஒரு கதாபாத்திரம் ரோஜர் சில்லிங்வொர்த் என்ற நபர் ஆகும். இவர் ஹெஸ்டரை விட்டுப் பிரிந்து சென்ற கணவராவார், இதை அந்த நகர மக்கள் அறிந்திருக்கவில்லை. விபசாரத்தில் ஹெஸ்ட்டரின் கூட்டாளிக்குத் தண்டனை தருவதை இவர் தனது தனிப்பட்ட சொந்தப் பணியாகக் கொண்டு முயற்சி செய்கின்றார். குற்றம் செய்த அந்த நபர் ஊழியக்காரர் தான் என்பதை விரைவிலேயே உணர்ந்த சில்லிங்வொர்த், அவருடன் (ஊழியக்காரருடன்) "நட்புக் கொண்டு" அவருடைய இரகசியத்தை மறைத்து வைத்துக் கொள்வதற்கு அவரைத் தந்திரமான பல வழிகளில் உற்சாகப்படுத்துகின்றார்.

கடைசியாக, புத்தகத்தின் உட்சக் காட்சியான கடைசிக் காட்சியில், டிம்மெஸ்டேல் தனது வாழ்வின் மிகவும் வல்லமை நிறைந்த ஒரு பிரசங் கத்தைப் பிரசங்கிக்கின்றார். சபையில் இருந்தவர்கள் சபைக் கட்டிடத்தை விட்டு வெளியேறி, நகரத் தெருக்களில் ஒன்று கூடி நடக்கையில், ஹெஸ்ட்டர் தனது உடையில் "வி" என்ற எழுத்தைப் புதிதாய்த் தைத்துக் கொண்டு பல ஆண்டுகளுக்கு முன்பு நின்றிருந்த மேடையை அவர்கள் கடந்து செல்கின்றனர். ஒவ்வொருவரும் திகைப்படையும் வகையில், டிம்மெஸ்டேல் வெட்கத்திற்குரிய அவ்விடத்தில் நின்று, தமது சுகவீனமான உடலில் எஞ்சியிருந்த தைரியத்தையும் பலத்தையும் திரட்டிக் கொண்டு, ஹெஸ்ட்டரையும் அவளுடைய பிள்ளையையும் தம்மிடம் வரும்படி அழைக்கின்றார். அவருடைய இரகசியமானது இன்னமும் பாதுகாக்கப்பட முடியும் என்று உறுதியளித்து, அவருடைய செயலை நிறுத்தும்படி சில்லிங்வொர்த் கெஞ்சுகின்றார்.

இருப்பினும், இப்பொழுது சில்லிங்வொர்த் சாத்தானுடைய

ஊழியக்காரனாயிருப்பதை டிம்மெஸ்டேல் உணர்ந்தறிகின்றார், எனவே அவர் அவனைப் புறம்பே தள்ளி விடுகின்றார். பிறகு அவரும், ஹெஸ்ட்டரும் மற்றும் அவர்களின் பிள்ளையும் மேடை மீது ஏறினார்கள், மற்றும் ஊழியக்காரர் கடைசியில் தனது பாவத்தைக் குறித்து நேர்மையான வராகின்றார். தாம் தோல்வியடையச் செய்ததை உணர்ந்த சில்லிங்வொர்த், டிம்மெஸ்டேலிடம் அவர் உலகம் முழுவதிலும் பயணம் செய்திருந்தாலும் தமது பிடியிலிருந்து தப்பித்திருக்கக் கூடிய ஒரே இடம் அறிக்கையிட்டு மனந்திரும்புதலுக்கான அந்த மேடையாய்த் தான் இருந்தது என்று கூறுகின்றார்.

டிம்மெஸ்டேல் தமது பாவம் வெளியாகுதல் என்பதற்குத்தான் நீண்ட காலமாகப் பயந்து கொண்டிருந்தார். இதற்கு நேர்முரணான வகையில், அவர் தமது பாவத்தை அறிக்கையிடுவதலில்தான் கடைசியில் விடுதலையைக் கண்டார்.

பாவத்தை எதிர்கொள்ளுதல் மற்றும் ஆத்துமாவை ஊனப்படுத்தும் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலையைக் காணுதல் ஆகியவைகளுக்கு இடையே உள்ள இதே விதமான உறவுமுறை பற்றி சங்கீதம் 32 பேசுகின்றது:

> நான் அடக்கி வைத்த மட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று.
> இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சி போல வறண்டு போயிற்று
> நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர் (வ. 3-5).

பேதுரு தம்மை (இயேசுவை) அன்புகூருகின்றாரா என்று இயேசு கேட்ட பொழுது, இயேசுவைக் கைது செய்வதற்கு முன்பு பேதுரு தம்மை உயர்த்திப் பேசியதையும் கர்த்தருடைய விசாரணையின் போது அவரைப் பயங்கரமாக மறுதலித்ததையும் பற்றிய வேதனை நிறைந்த கருத்தை இயேசு கொண்டு வந்தார். இந்தக் கடினமான விஷயத்தைத் தவிர்த்தல் என்பது சுலபமாயிருந்திருக்கும், ஆனால் அவ்வாறு செய்வது என்பது பேதுருவின் மீது மிகச் சிறந்த வகையில் ஆர்வம் காட்டுதலாய் இருந்திராது. இரகசியமான பாவம் என்பது அழிக்கக் கூடியதாகும், எனவே இயேசு, பேதுருவின் பாவத்தை வெளிக் கொணர்ந்து அதை நேரடியாகக் கையாள வேண்டியதாயிற்று.

## பழைய நிலைக்கு கொணர்தல் (21:15-17)

பேதுரு தம்மீது (இயேசுவின் மீது) அன்பாயிருக்கின்றாரா என்று இயேசு மும்முறை கேட்டார். ஒருவேளை இது முன்பு அவர் கர்த்தரை மறுதலித்திருந்த முறைகளின் அதே எண்ணிக்கைக்குச் சமமாக அவர் (பேதுரு) தமது விசுவாசத்தை அறிக்கையிட ஒரு வாய்ப்புக் கொடுப்

*பதற்காக இருந்திருக்கலாம். இயேசு இந்தக் கேள்வியைக் கேட்ட முதல் இரு முறைகளில் அவர் "தேவனுடைய அன்பு" என்று அர்த்தப்படும் agape என்ற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார்.[1] இவ்விரு முறையும் பேதுரு "நட்புறவு அன்பு" என்று அர்த்தப்படும் phileo என்ற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார். இயேசுவின் கடைசிக் கேள்வியில் phileo என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது, மற்றும் பேதுரு அதே வார்த்தையைப் பயன்படுத்திப் பதில் அளித்தார். Agapeஎன்பது உயர் வகையிலான அன்பாக உள்ளது, ஆனால் தேவன், அந்த வேளையில் பேதுருவால் அளிக்க முடிந்த phileo அன்பை ஏற்றுக் கொள்ள முடிந்தது என்று இயேசு கூறினார் (ஒருவேளை பேதுரு தம்மில் சிறிதளவே தன்னம்பிக்கையுடையவராய் இருந்திருக்கலாம்).*

*பாவத்திலிருந்து பழைய நிலைக்கு கொண்டு செல்லும் சாலையைப் புரிந்து கொள்வதில், இயேசு கேட்ட பின்வரும் கேள்வியை நாம் கவனிக்க வேண்டும்: ''என்னில் நீ அன்பாயிருக்கின்றாயா?'' நாம் பாவத்தில் விழுந்திருக்கும் பொழுது, உண்மைக் கேள்வியிலிருந்து வழி விலகச் செய்யும் பல கேள்விகளினால் நாம் சோதிக்கப்படுகின்றோம். "இது எனது தவறா?"; "மற்றவர்களின் பாவங்களை விட எனது பாவம் மோசமானதா?"; "என்னுடைய பாவத்தினால் என்ன நஷ்டம் ஏற்பட்டது?"; "மற்றவர்கள் என்னைத் திரும்பவும் ஏற்றுக் கொள்வார்களா?"; "எது என்னை இவ்வாறு செய்ய வைத்தது?'' என்றெல்லாம் நாம் கேட்கின்றோம். கேள்விகளின் மேல் கேள்விகள் தொடருகின்றன. பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு பேதுருவை வழி நடத்தியதில் இயேசு, (நாம்) தேவனிடத்தில் திரும்பும் விஷயத்தில் "என்னில் நீ அன்பாய் இருக்கின்றாயா?" என்பதே முக்கியமான விஷயமாய் உள்ளது என்பதைச் செயல் விளக்கப்படுத்தினார்.*

*இயேசுவின் கேள்விக்குப் பேதுரு பதில் அளித்த ஒவ்வொரு முறையும் அவருக்கு இயேசு ஒரு ஊழியத்தைக் கொடுத்தார். அவர், "என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக" (21:15), "என் ஆடுகளை மேய்ப்பாயாக" (21:16) மற்றும் "என் ஆடுகளை மேய்ப்பாயாக" (21:17) என்று கூறினார்; பேதுருவை அவர் மன்னித்தல் என்பது பட்சபாதமுள்ளது அல்ல; பேதுரு மீண்டும் ஒருமுறை தமது பாவத்திலிருந்து நீங்கிச் சென்று இயேசுவின் அப்போஸ்தலர் என்ற வகையிலான தமது இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதாயிருந்தது. இன்றைய நாளில் நாம் நமது பாவங்களிலிருந்து திரும்பும் பொழுது, நாம் அதையே செய்ய வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார் - அவரது இராஜ்யத்தில் ஊழியம் செய்யத் திரும்புதல்!*

## *அழைப்பு (21:19)*

*இயேசுவினால் பேதுரு பழைய நிலைக்கு கொண்டு வருவதில் கடைசி நிலையானது "என்னைப் பின்பற்றி வா!" (21:19) என்ற வார்த்தைகளுடன் வந்தது. இந்த வார்த்தைகளை இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் தொடக்கத்தில், தமது சீஷர்களை அழைப்பதற்கு பயன்படுத்தினார், மற்றும் அவர் அந்தக் காலை வேளையில் கடற்கரையில் பேதுருவுடனான தமது*

சந்திப்பின் முடிவிலும் அதே வார்த்தைகளைப் பயன்படுத்தினார். "என்னைப் பின்பற்றி வா!" என்பது நாம் உட்பட, இயேசு தமது சீஷர்கள் யாவரும் செய்யும்படி அழைக்கின்ற செயலின் முக்கிய அம்சமாய் விளங்கு கின்றது. "என்னைப் பின்பற்றி வா!" என்பது வளர்ச்சி நிலையொன்றை விவரிப்பதில்லை; அது ஒரு இலக்கைச் சுட்டிக்காட்டுகின்றது. இது நமது கடந்த காலத்தைப் பற்றிச் செய்வதற்கு ஒன்றுமற்றதாகவும், மற்ற சீஷர்களுடன் ஒப்பீடு செய்வதற்கு ஒன்றுமற்றதாகவும் உள்ளது. இது பலவீனமான, இளைய அல்லது பக்குமற்ற நபர்களைத் தவிர்த்து விலக்கி வைப்பது இல்லை. இது, ஒருவர் அல்லது ஒருத்தி இருக்கின்ற நிலையிலிருந்து தொடங்கி இயேசுவின் திசையில் நடக்கத் தொடங்கும்படி ஒவ்வொருவரை யும் அழைக்கின்றது. பேதுரு நீண்ட தூரம் வந்திருந்தார், ஆனால் அவர் ஒரு மாபெரும் தூரத்தில் வீழ்ந்திருந்தார். பேதுருவின் வெற்றியிலும், துன்பத்திலும் இயேசுவிடமிருந்து அவருக்கு வந்த அழைப்பானது ஒரே விதமாகவே இருந்தது: "என்னைப் பின்பற்றி வா!" இந்த நேரடியான கட்டளையே இன்றைய நாட்களில் நமக்கு இயேசுவின் அழைப்பாக உள்ளது.

## முடிவுரை

நீங்கள் இன்னும் ஒரு கிறிஸ்தவராகாதிருந்தால், அதற்கான வழி வகையானது எளியதாகவும் தெளிவானதாகவும் உள்ளது. இது, "விசுவாசம்" அல்லது "நம்பிக்கை" என்று வேதாகமம் அழைக்கின்ற ஒன்றைக் கொண்டு தொடங்குகின்றது.[2] விசுவாசம் என்பது நமது பற்றுறுதியை இயேசுவின் மீது வைத்து அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்பதை உள்ளடக்கு கின்றது. விசுவாசம் தன்னையே, மனந்திரும்புதலிலும் (பாவத்திலிருந்து விலகி தேவனிடத்தில் திரும்ப முடிவு செய்தல்)[3] மற்றும் இயேசுவைக் ''கர்த்தர்'' என்று அறிக்கை செய்வதிலும் வெளிப்படுத்துகின்றது.[4] இயேசுவைப் பின்பற்றுதல் என்ற நினைவுகூரத்தக்க இந்த முடிவானது பிறகு, ஞானஸ்நானம் என்ற அழகுமிக்க செயல்பாட்டில் முத்திரை யிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றது.[5]

இந்த சுவிசேஷமானது நமது இருதயங்களில் விசுவாசத்தை உண்டாக்குவதற்காக யோவான் எழுதினார் (20:30, 31). இது தன் நோக்கத்திற்குரிய விளைவை உங்கள் வாழ்வில் பெற்றுள்ளதா? நீங்கள் இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளீர்களா? நீங்கள் கிறிஸ்தவர்களாகி யுள்ளீர்களா? இந்தப் பயணத்தினால் உங்கள் விசுவாசம் பலப்படுத்தப் பட்டுள்ளதா? அப்படியிருந்தால், இயேசு, "அவருடைய நாமத்தினாலே நாம் நித்திய ஜீவனை" பெற்றுள்ளதற்காக அகம் மகிழ்கின்றார் என்பது உறுதி.

குறிப்புகள்

[1]*1 கொரி. 13:4-7 வசனப் பகுதியானது agape என்பதற்கு உன்னதமான விவரிப்பாக உள்ளது.* [2]*யோவான் 3:16; மாற். 16:16; அப். 16:31-34.* [3]*மத். 4:17; லூக். 13:3; அப். 2:38; 17:30.* [4]*யோவா. 20:28; மத். 10:32; ரோம. 10:9, 10.* [5]*யோவா. 4:1; அப். 2:38; 8:38; ரோமர் 6:4-6; கலா. 3:27; கொலோ. 2:12.*

# "நான் கிறிஸ்துவின் சபையில் ஒரு உறுப்பினராவது எப்படி?"

கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டுள்ள மக்களே கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்துவின் சபையின் உறுப்பினர்களாக உள்ளனர். ஆகையால் சபையானது - தங்கள் பாவங்களில் இழந்து போன நிலையில் இருந்து - தேவனுடைய கிருபையினால் தகுதிப்படுத்தப்பட்ட பாவிகளைக் கொண்டதாகவே உள்ளது. சபை என்பது குழந்தைகளுக்காக வடிவமைக்கப் பட்டதல்ல. குழந்தைகள் "பாதுகாப்பான" நிலையில் உள்ளனர், அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை (மத். 18:3). பாவம் என்பது தேவனுக்கு எதிரான கலகம் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு நாம் வயது முதிர்ந்தவர்களாகிறோம்; பிறகுதான் நாம் பாவம் செய்கிறோம். நாம் யாவரும் பாவம் செய்திருப்பதால் (ரோமர் 3:23), நம் யாவருக்கும் இரட்சிப்பு அவசியமாகின்றது.

நம் பாவங்களில் இருந்து நம்மை இரட்சிப்பதற்காகக் கிறிஸ்து மரித்தார் (1 கொரி. 15:3). அவருடைய கிருபையின் ஈவைத் தகுதியாக்கிக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

முதலாவது, நாம் கிறிஸ்துவைப் பற்றிக் கற்றுக் கொள்வது, மகிமை யுள்ள சுவிசேஷ சத்தியங்களில் போதிக்கப்படுவது அவசியமாகின்றது (மத். 28:18-20; யோவா. 6:45). இது மற்றவர்களுக்கு முன்னால், இயேசு தேவனுடைய குமாரன் என்று நம்மை அறிக்கையிடச் செய்வதற்குக் (ரோமர் 10:9, 10) காரணமாக உள்ள விசுவாசத்தை நம்மில் உண்டாக்க வேண்டும் (ரோமர் 10:17). நமது விசுவாசம் நம்மை நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பும்படி வழி நடத்துவதாகவும் இருக்க வேண்டும் (அப். 2:37, 38), அதாவது நாம் நமது பாவங்களைப் பற்றிய எண்ணப்போக்கில் மாற்றம் கொள்ள வேண்டும் (2 கொரி. 7:10). கடைசியாக, நமது விசுவாசம் நம்மை ஞானஸ்நானம் பெறும்படி வழி நடத்த வேண்டும் (மாற். 16:16). ஞானஸ்நானம் என்பது பாவங்களின் மன்னிப்புக்காகத் தண்ணீருக்குள் (அப். 10:47) அடக்கம் பண்ணப்படுதலாக (ரோமர் 6:3, 4) உள்ளது.

சபை நிலைநாட்டப்பட்ட அன்று ஏறக்குறைய 3000 பேர் இந்தத் திட்டத்தைப் பின் தொடர்ந்தார்கள். பின்பு மற்றவர்கள் கர்த்தரால் அவருடைய சபைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (அப். 2:38, 41, 47). அவர்கள் கிறிஸ்தவர்களான காலம் தொடங்கி, அவர்களின் வாழ்வு மாறுபட்டதாக இருந்தது: "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத் திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுத லிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2:42).

ஆவியானவருடைய போதனைகளினால் வழி நடத்தப்பட்டவர்கள் சபை (கொலோ. 1:18) என்ற "ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானப் படுத்தப்படுகின்றனர்" என்று பவுல் 1 கொரி. 12:13ல் வலியுறுத்தினார். சபை

என்பது இரட்சிக்கப்பட்டவர்களின் அமைப்பாக உள்ளதால், நம்மைச் சபையின் உறுப்பினர்களாக்குகின்ற அதுவே நம்மை இரட்சிக்கின்றது, நம்மை இரட்சிக்கின்ற அதுவே நம்மைச் சபையின் உறுப்பினர் களாக்குகின்றது.